உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

முத்தரசி — கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,
மதுரை - 625016, தமிழ்நாடு, இந்தியா

அஞ்சிறைத் தும்பி இலக்கிய வட்டம், விருதுநகர்
மருதம் கலை இலக்கிய ஆய்வு மையம், கும்பகோணம்

தமிழ், தமிழர் - படைப்பும் ஆளுமையும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

தொகுதி - 2

வெளியீடு
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

தமிழ், தமிழர் - படைப்பும் ஆளுமையும்

E-ISSN : 2584-1238

மார்ச் 2025

உலகத் தமிழ்ச் சங்கம்,
மருத்துவர் தங்கராசு சாலை,
மதுரை,தமிழ்நாடு, இந்தியா.

E-ISSN : 2584-1238

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

அஞ்சிறைத் தும்பி இலக்கிய வட்டம், விருதுநகர்
மருதம் கலை இலக்கிய ஆய்வு மையம், கும்பகோணம்

மற்றும்

முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

E-ISSN: 2584-1238

தமிழ், தமிழர் - படைப்பும் ஆளுமையும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

தொகுதி – 2

பதிப்பு

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

<u>கருத்தரங்கத் தலைவர்</u>

முனைவர். ஔவை ந. அருள்
இயக்குநர் (பொ), உலகத் தமிழ்ச்சங்கம், மதுரை

<u>பதிப்புக்குழு</u>

முனைவர்.சு.தங்கமாரி,
முதன்மை ஆசிரியர்,
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,
மதுரை

முனைவர் ஜ.ஜான்சிராணி,
ஆய்வு வளமையர்,
உலகத் தமிழ்ச் சங்கம்,
மதுரை

முனைவர் க.சோமசுந்தரி
ஆய்வறிஞர்,
உலகத் தமிழ்ச் சங்கம்,
மதுரை

முனைவர் செ.கணேசமூர்த்தி
நிறுவனர்,
மருதம் கலை இலக்கிய ஆய்வு மையம்,
கும்பகோணம்

முனைவர் சு.வினோத்
செயலர், அஞ்சிறைத்தும்பி இலக்கிய வட்டம்,
விருதுநகர்

<u>MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal</u>

E-ISSN: 2584-1238

நூல் விவரம்

நூல் தலைப்பு	:	தமிழ், தமிழர் – படைப்பும் ஆளுமையும்
முதற்பதிப்பு	:	மார்ச், 2025
பதிப்புரிமை	:	தங்கமாரி சுடலை, 12/6, மேலப்பொன்னகரம் 8வது தெரு, 4வது குறுக்கு, ஆரப்பாளையம், மதுரை – 625016.
வெளியீடு	:	உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
மின்னஞ்சல் முகவரி	:	laks@muththarasi.org
வலைதளம்	:	https://muththarasi.org/
E.ISSN No	:	2584 – 1238
புத்தக அளவு	:	A4
பக்கங்கள்	:	258
விலை	:	270/-
அச்சிட்டோர்	:	லேசர் பாயிண்ட், வசந்த நகர் முதன்மைச் சாலை, மதுரை – 625 003

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை

மருத்துவர் தங்கராசு சாலை, சட்டக் கல்லூரி அருகில், மதுரை – 625020.
தொலைபேசி எண்: 0452 – 2530766; நிகரி: 0452 – 2530799; மின்னஞ்சல் முகவரி: utsmdu1@gmail.com;
வலைத்தளம்: www.utsmdu.org

ஔவை அருள் நாள்: 24.03.2025
இயக்குநர் (மு.கூ.பொ)

'நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு' என்ற அய்யன் திருவள்ளுவரின் அருங்குறளின் வழியில் முத்தரசி கலை, இலக்கியப் பண்பாட்டு ஆய்விதழும், மருதம் கலை இலக்கிய ஆய்வு மையமும் அஞ்சிறைத்தும்பி இலக்கிய வட்டமும் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்துடன் "தமிழ் தமிழர் படைப்பும் ஆளுமையும்" என்ற பன்னாட்டுக் கருத்தரங்கத்தினை இணையற்ற முறையில் இணைந்து நடத்துவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

இக்கருத்தரங்கில் எழுச்சி வாய்ந்த எழுபது கட்டுரைகளை வழங்கியதை பாராட்டுகிறேன்.

நல்லாவின் பால் முழுதும் கன்றுக்கில்லை;
நறும்பூவின் மணமுழுதும் சோலைக்கில்லை;
நெல்லாகும் கதிர் முழுதும் நிலத்துக்கில்லை;
நிறைகின்ற நீர் முழுதும் குளத்துக்கில்லை;
பல்லாரும் கனி முழுதும் மரத்துக்கில்லை;
பண்ணரம்பின் இசை முழுதும் யாழுக்கில்லை;
எல்லாமே பிறர்க்குழைக்கக் காணுகின்றேன்;
என் வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும் வேண்டும்!!"

என்ற மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனாரின் தொடருக்கு ஏற்ப கருத்தரங்கங்கள், அறிஞர்கள் வாயிலாக அறிவுச் செல்வத்தை பிறருக்கு வழங்கி செழிக்க வேண்டுகிறேன்.

(ந.அருள்)

வாழ்த்துரை

தமிழ் மொழியையும் அதன் இலக்கிய செழுமையையும் உலக அளவில் முன்நிறுத்துவது என்பது ஆய்வாளர்களுக்கு முன் உள்ள முதன்மையான கடமை ஆகும். அவ்வகையில் தமிழை வாழ்வாகக் கொண்ட தமிழர்களை இலக்கியமாக்கிய படைப்பாளர்களின் ஆளுமையை நெருங்கி அறிவதற்கும் உலகிற்கு அறிவிப்பதற்கும் இக்கருத்தரங்கம் உகந்ததாக உள்ளது. ஆண்டு தோறும் மலர்ந்து மணம் வீசும் ஆய்விதழாக முத்தரசி திகழ்கிறது.

முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ் “தமிழ் தமிழர் - படைப்பு ஆளுமை” என்ற பொருண்மையிலான பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கை மதுரை உலகத் தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து நடத்திட திட்டமிட்டது பொருத்தமானது. மேலும், மருதம் கலை இலக்கிய ஆய்வு மையத்தையும் எங்கள் அஞ்சிறைத்தும்பி இலக்கிய அமைப்பையும் உடன் இணைத்துக் கொண்டு இக்கருத்தரங்கை நிகழ்த்துவது நெகிழ்வும் நிறைவும் அளிக்கிறது. இக்கருத்தரங்கில் கட்டுரை வழங்கி சிறப்பித்த சான்றோர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துகளுடன்

முனைவர் சு.வினோத்

செயலாளர், அஞ்சிறைத் தும்பி இலக்கிய வட்டம், விருதுநகர்

வாழ்த்துரை

உலக மொழிகளுள் தொன்மையானது தமிழ். அது பழமையான வரலாற்றையும், இலக்கண இலக்கிய வளத்தையும் கொண்டது. தமிழ் இலக்கியங்கள் காலம் தோறும் பல்வேறு வடிவங்களைப் பெற்று வந்துள்ளது அவ்விலக்கியங்கள் தமிழரின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. பண்பாட்டின் அடையாளமாகவும் திகழ்கின்றன. இன்றைய மனித சமுதாயம் வளம் பெற நல்ல வழிகாட்டியாகவும் திகழ்கின்றன. அவற்றை வெளிக்கொணரும் வகையில், மதுரை, உலக தமிழ் சங்கமும், முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழும், விருதுநகர், அஞ்சிறைத்தும்பி இலக்கிய வட்டமும், கும்பகோணம், மருதம் கலை இலக்கிய ஆய்வு மையமும் இணைந்து '**தமிழ், தமிழர் - படைப்பும் ஆளுமையும்**' என்ற பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருப்பது வரவேற்கத்தக்கது. கருத்தரங்கிற்குக் கட்டுரையாளர்களிடமிருந்து தரமான கட்டுரைகளைப் பெற்று முத்தரசி-கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழில் சிறப்பு மலராக வெளியிட்டு ஆவணப்படுத்தியிருக்கின்ற ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். இப்பணி எதிர்கால இளைய சமுதாயத்திற்கு வழிகாட்டியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. இந்நூல் ஆய்வு உலகத்திற்குச் சிறந்த வரவாகும். தரமான கட்டுரைகளை வழங்கி இருக்கின்ற பேராசிரியர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் வாழ்த்துக்கள்.

வாழ்த்துகளுடன்



முனைவர் செ.கணேசமூர்த்தி,

நிறுவனர்,

மருதம் கலை இலக்கிய ஆய்வு மையம், கும்பகோணம்

பதிப்புரை

“எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு.”

உலகின் மூத்தக் குடிகளுள் ஒன்றாய்த் திகழ்கின்ற தமிழ்க்குடியின் பெருமையானது பன்னெடுங்காலமாகப் பெரியோர்களாலும் சான்றோர்களாலும் தொடர்ந்து எடுத்தியம்பப்பட்டு வருகின்றது. இனித்த நறும் பாட்டும்தொகையும், எந்நாளும் பொய்யாத் திருக்குறளும் அறநூல்களும், படித்தவேளை கண்பனிக்கும் காப்பியக் கூட்டமுதும், மெய்சிலிர்க்கும் பாசுரமும் திருமுறையும் எனத் தொடர்ந்து குன்றாப் பெரும்புகழினைப் பரப்பி நிற்கும் தமிழன்னையின் தொடர் பயணம் இன்றும் தொடர்வதில் வியப்பில்லை.

அந்தப் பன்னெடுங்கணக்கில், இப்பொழுது மதுரை, **உலகத் தமிழ்ச் சங்கம்** முன்னெடுத்துள்ள பணிகள் ஏராளம். அதில் சிறுதுளிப் பணியாக, **முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழாய்விதழ்** - கும்பகோணம், **மருதம் கலை இலக்கிய ஆய்வு மையம்** - விருதுநகர், **அஞ்சிறைத்தும்பி இலக்கிய வட்டம்** ஆகிய மும்மணிகளை இணைத்து நால்வர் நான்மணி மாலையாக, “**தமிழ், தமிழர் - படைப்பும் ஆளுமையும்**” என்ற சிறப்பிதழ் இன்று மலர்கின்றது. குழந்தையின் தவழும் முயற்சியாகத் தொடங்கிய இந்தப் பணியில் 82 தமிழாய்ந்த சான்றோர்களின் கைமணம் வீசுகின்றது. தொல்லியல் ஆய்வறிஞர்கள் தற்பொழுது இரும்பின் காலம் கண்டு தமிழரின் வரலாற்று எல்லைப் பரப்பினை 3,500 ஆண்டுகள் நீட்டித்ததைப் போல, பரந்து கிடக்கின்ற தமிழ்க்கடலில் தங்களுக்கு எட்டிய இன்முத்துக்களை எடுத்து எங்களிடம் தந்துள்ளனர். அதனைக் கோர்த்த பணி மட்டுமே எங்களுடையது.

இந்தக் கருத்தரங்க முயற்சிக்குத் தன் இடையறாத பணியிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த **மதுரை, உலகத் தமிழ்ச் சங்க**த்தின் இயக்குநர்(பொ) **முனைவர் ஔவை ந.அருள்** அய்யாவிற்கும், சங்கத்தின் ஆய்வறிஞர் மற்றும் ஆய்வு வளமையருக்கும் நன்றிகள் பல. உறுதுணையாய் நின்ற **முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழாய்விதழின் ஆசிரியர்க்குழு**விற்கும், **கும்பகோணம், மருதம் கலை இலக்கிய ஆய்வு மையத்தின் நிறுவன**ருக்கும், விருதுநகர், **அஞ்சிறைத்தும்பி இலக்கிய வட்டத்தின் பொறுப்பாளர்**களுக்கும் இச்சிறப்பிதழ்ப் பதிப்புக் குழுவின் சார்பாக நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கின்றோம். ஆன்றவிந்த சான்றோர் பெருமக்களாகிய தமிழர்களின் கையில் இவ்வாய்வுக்கோவை சிறப்பு செய்யும் என்று நம்புகின்றோம்.

நன்றி,

பதிப்புக்குழு

பொருளடக்கம்

எண்	கட்டுரைத் தலைப்பு & கட்டுரையாளர்கள்	பக்கம்
01	பழந்தமிழர் போர் மரபும் பண்பாடும் முனைவர் தே.தேன்மொழி	1
02	இலக்கியங்களில் மக்கள் வாழ்வியல் பதிவுகள் க.ராஜலட்சுமி முனைவர் பா. திருஞானசம்பந்தம்	10
03	நற்றிணையில் பழந்தமிழரின் நிலமும் வரலாwertறும் திருமதி இரா.சுகுணாதேவி எம்.ஏ.,பி.எல்.,	15
04	மழைமான் சிறுகதையில் ஆங்கிலத்தின் இடையூறுகள் கார்த்திக்.க ஜெயகிருஷ்ணன்.ப,	21
05	சமூக அசைவுகளும் வரலாறும் சு ப. பவ்யா, முனைவர் ஜா. ஜான் ரெஜி மோள்	28
06	தமிழர் பண்பாடும் கலாச்சாரமும் முனைவர் ஜா. ஜான் ரெஜி மோள்	33
07	பண்டைய தொழில்களும் மக்களும் முனைவர் மு.சத்தியமூர்த்தி,	39
08	பழந்தமிழரின் நிலமும் வரலாறும் ச. லித்திக்கா, பேரா.ச.பூபாலன்	45
09	பழந்தமிழரின் வாழ்விடமும் குலக்குறியும் முனைவர் ஏ. ராஜ்மோகன்	49
10	பூமணியின் படைப்பாளுமை (அஞ்ஞாடி நாவல்) முனைவர் பே.சிவசக்தி	55
11	பெரும்பாணாற்றுப்படையில் விருந்தோம்பல் பண்பு இரா.நிரோஷா முனைவர் த.மரகதம்	61
12	முதுமொழிக்காஞ்சி காட்டும் வாழ்வியல் சிந்தனைகள் திருமதி பத்மபிரியா.கூ,	66
13	வரலாற்றுப் பதிவுகளும் இலக்கியங்களும் பேரா.ச.பூபாலன்	71
14	வரலாற்றுப் பார்வையில் தமிழர் நிலமும் மொழியும் பா. மஞ்சுஸ்ரீ பேரா.ச.பூபாலன்	76

எண்	கட்டுரைத் தலைப்பு & கட்டுரையாளர்கள்	பக்கம்
15	சமூகவியல் பார்வையில் சாதியம் முனைவர் செ.மார்கண்டன்	81
16	பண்டைத் தமிழ்க்குடியும் மணிமுடியும் முனைவர் கா.ஸ்ரீதர்	86
17	அறத்தைப் பேண மறந்த இளைஞர்கள் முனைவர் ப.சக்திவேல்	92
18	எஸ்.ராமகிருஷ்ணனின் சிரிக்கும் வகுப்பறை புதினம் சுட்டும் கல்விச்சிந்தனை முனைவர் ப.கீதா	98
19	மானிடவியல் நோக்கில் பொருநர் வாழ்வியல் முனைவர் கி மலர்விழி	103
20	பண்டையக் காலத் தமிழ்ச் சமுகத்தில் பண்பாட்டு நோக்கில் பட்டங்கள் முனைவர் கசெந்த ில்குமார்,	108
21	இயற்கை வேளாண்மை போராளி, தமிழ் மண்ணின் அடையாளம்: கோ. நம்மாழ்வார் முனைவர் பி.பாரதி முனைவர் ப.விஜி	113
22	பழந்தமிழரின் மரபுகள் முனைவர் ரா. ராஜேஸ்வரி	119
23	வள்ளலாரும் பெண்மையும் முனைவர் சீதாலட்சுமி	125
24	‘தமிழ்மாமணி’ க.வெள்ளைவாரணனார் முனைவர் தி.மல்லிகா	139
25	ஆற்றுப்படையும் பாணர்களின் பண்பாடும் டாக்டர் மு.சற்குணவதி	143
26	பெண்ணிய வாசிப்பில் மணிமேகலை முனைவர் பெ.ஆனந்தி,	150
27	பண்டைய மகளிர் தொழில்கள் முனைவர் ச.தனலெட்சுமி	160
28	பண்பாட்டு நிலவியல் நோக்கில் சங்கஇலக்கியம் முனைவர் மா.பத்மபிரியா	167
29	தமிழ் எழுத்து வரலாற்றில் மக்கட் பெயரும் ஊர்ப் பெயரும் முனைவர். அ. கலையரசி	174

எண்	கட்டுரைத் தலைப்பு & கட்டுரையாளர்கள்	பக்கம்
30	சிலப்பதிகாரத்தில் இயற்கை நுண்ணறிவூட்டலும் புறந்தள்ளும் கதைப்பின்னலும் முனைவர் ப.வித்தியாவதி	182
31	திருமுருகாற்றுப்படையில் குறிப்பு உரிச்சொற்கள் திருமதி மு.பூங்கோதை	186
32	தமிழச்சி தங்கப்பாண்டியனின் படைப்பும் படைப்பாளுமையும் திருமதி சி.கீர்த்தனா முனைவர் ச.தனலெட்சுமி	196
33	விருதுநகர் மாவட்ட நாட்டார் வழிபாட்டு மரபுகள் திருமதி க.பொற்கொடி முனைவர் மா.பத்மபிரியா	203
34	வெ.முனீஷ் அவர்களின் கவிதைகளில் திருநங்கைகள் பேரா.அ.பார்த்திபன்	210
35	கூத்தும் நாடகமும் - வகைமையும் வளர்ந்தமையும் முனைவர் F.மலர்விழி	215
36	சங்க இலக்கியத்தில் தொழில்கள் முனைவர் கு. பத்ம பிரியா	220
37	புறநானூற்றுப் பாடல்களில் நிலவியல் வரைபட உருவாக்கம் முனைவர் சு.வினோத்	227
38	சங்க இலக்கியம் காட்டும் முருகவழிபாட்டின் தொல் மரபுகள் சி.வசந்தி	231
39	மூதின் முல்லையும் பண்டைய மகளிர் செயலும் - ஓர் அறப் பார்வை அ.ரூபாதேவி	236
40	கலித்தொகையும் தமிழர் பண்பாடும் வி.மோனிகா யாழினி	240
41	கவிஞர் நந்தன் கனகராஜின் “மலைச்சி” புலப்படுத்தும் மரபு நீட்சி முனைவர் ப. கணேஷ்வரி	245

01. பழந்தமிழர் போர் மரபும் பண்பாடும்

முனைவர் தே.தேன்மொழி
உதவிப்பேராசிரியர்,வேல்ஸ் பல்கலைக்கழகம்
பல்லாவரம், சென்னை -117. - செல் : 8610928727

DOI 10.5281/zenodo.15069821.

Abstract :

During the Sangam period, the Tamil war traditions were based on the method of righteous warfare. They divided life into two parts, Agam and Puram, and also developed a grammar for the methods of warfare called Puram. Their war system was honest. At sunrise, they would start the war by shouting. The war lasted only until the sun set. Then they would stop the war by shouting. No matter how many days they fought, they had a moral code of not attacking the enemy even if they lost their weapons or were defeated in battle. They fought the next day to give them a fair chance. They had the courage to wait until they came and fight without killing the fleeing enemies. They had the quality of showing mercy to the dead. This article is about the war tradition and culture of such ancient Tamils.

Key Words ; Sangam Periods - Traditions - Cultural

முன்னுரை

சங்க காலத்தில் தமிழர் போர் மரபுகள் அறப்போர் முறையைச் சார்ந்தது ஆகும்.அகம், புறம் என வாழ்வை இரண்டாகப் பகுத்து, புறம் என்று போர்முறைகளுக்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்தனர்.அவர்களது போர்முறை நேர்மையாக இருந்தது.காலை சூரிய உதயத்தின் போது, முரசறைந்து போர் தொடங்குவர்.சூரியன் மறையும் வரை மட்டுமே போர் நடைபெற்றது.பின் முரசறைந்து போரை நிறுத்துவர்.எத்தனை நாட்கள் போராயினும், பகைவர் ஆயுதத்தை இழந்த போதும், போரில் தோற்றோடும் போதும் அவர் மேல் படை செலுத்தாத அறநெறி இருந்தது.அவர்களுக்குத் தகுந்த வாய்ப்பளிக்க மறுநாள் போர் செய்தனர்.ஓடி ஒளிந்தாரைக் கொல்லாமல், அவர்கள் வரும் வரை காத்திருந்து போர் புரியும் வீரம் இருந்தது.இறந்தோருக்கு இரங்கும் குணம் இருந்தது.இத்தகைய பழந்தமிழரின் போர் மரபும் பண்பாடும் குறித்து இக்கட்டுரை அமைகிறது.

போர்

போர் என்றாலே நம் நினைவிற்கு வருவது போரினால் ஏற்பட்ட அழிவும் துன்பமுந்தான்.இந்த கொடிய விளைவை ஏற்படுத்தும் போர் என்பதற்கு அகராதிகள் பல விளக்கங்களைத் தந்துள்ளன. **"போர் என்பதற்கு போர்- சதயநாள், நெற்போர் பொந்து போரென்னேவல் யுத்தம்"** என்று கழகத்தமிழ் அகராதி பொருள் தருகின்றது. இவ்விளக்கத்தையே தமிழ் மொழி அகராதியும் தந்துள்ளது.

இதன் மூலம் போர் என்பது மாறுபாடு கொண்ட இருமனிதர்களுக்கிடையேஇரு ஊர்களுக்கிடையே இருநாடுகளுக்கிடையே படைகளின் துணையோடு பெருமளவில் நடைபெறுவது தான் போர் எனக் கருதமுடிகிறது.போர் என்பது பகைமைக் காரணமாக உயிரின் மதிப்பு அறியாது ஒரு குழு மற்றொரு குழுவுடன் சண்டையிட்டு மடிவதே போர் எனபதை அறியமுடிகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

இயற்கையின் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்றவாறே ஒவ்வொரு நிலத்துள் வாழும் உயிரினங்களின் செயல்கள் யாவும் அமைகின்றன. அது மட்டுமின்றி, புற உலகினில் தம்மைத் தகவமைத்துக் கொண்டு வாழும் உயிரினங்கள் பிற உயிரினங்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சூழலையும் முதன்மை அம்சமாய் கொண்டு உயிர்களின் வாழ்வு அமைகின்றது. இவ்வுயிரினங்களிலேயே மனிதன் தனித்த வளர்ச்சியை எய்தினான். மனிதனை பொறுத்தமட்டில் வேட்டையாடுதலில் தொடங்கிய பயணம் கால்நடை வளர்ப்பு, சிறு சாகுபடியென புத்துயிர் பெற்று, உற்பத்திக் கருவிகளை உருவாக்கி, நிலையானதொரு வாழ்வைத் தொடங்கினான் எனலாம்.

இனக்குழு வாழ்வில் வேட்டையில் கவனம் செலுத்தியவன், உணவுக்கான பெரும் போராட்டத்தை சந்திக்க வேண்டியிருந்தது.உணவு பற்றாக்குறையே அதன் முதன்மை காரணி என்பர் சமூகவியலாளர்.அதன் பின்னர் தனிநபருக்குரிய சொத்தாய் மாற்றம் பெற்ற காலம் தான் போராட்டத்தின் விளைவுகளை எல்லையில்லாது தோற்றுவித்தது. ஒரு குழு பிற குழுவை அடிமைப்படுத்துவதும், ஓர் குழுவிலுள்ளோரையே அக்குழுவிலுள்ள சிலர் அடிமைப்படுத்தியும், உற்பத்தி செய்யவும், ஏவல் தொழில் செய்யவும் நிர்பந்தப்படுத்தியும் போரிட்டு வெற்றி பெற்று வரவும் என பலவகையில் நிர்பந்திக்கப்பட்டனர். குறிப்பாக அடிமைச் சமூகம், மன்னர் சமூகத்தில் மேற்கூறிய காரணங்களே முதன்மை காரணியாய் இருந்தன. போர்கள் அடிப்படையில் செல்வப் பெருக்கம், எல்லையை விரிவுபடுத்துதல், மண்ணாசை, வலிமை கருதுதல், யார் பெரியவன் எனும் போக்கு, ஓர் குடும்பத்திற்குள்ளான முரண் ஆகியன அடிப்படைக் காரணியாய் அமைந்திருக்கின்றன என்பர்.

தொல்காப்பியம் காட்டும் பண்டைய போர்மரபுகள்

தமிழுலகில் முதலிலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் பண்டைப் போர் பற்றி பல கருத்துக்கள் காணப்படுகிறது.ஒவ்வொரு நிலப்பகுதிக்கு ஏற்பவே போர்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பதை 'புறத்திணையியல்' எனும் இயலின் வழியாக புரிந்துகொள்ள முடிகின்றது.உதாரணமாக, 1.மலையும், மலை சார்ந்த பகுதிகளிலும் (குறிஞ்சி) ஆநிரைகளை கவர்தல், அதனை மீட்டலுக்குமான போர்கள். 2. காடும், காட்டைச் சார்ந்த பகுதிகளிலும் (முல்லை) தன்மை மதியாத வேந்தனை எதிர்த்தும், காட்டு வளம் மீது கொண்ட ஆசையின் பொருளாலும் நிகழ்ந்த போர்கள். 3. வயலும், வயலைச் சார்ந்த பகுதிகளிலும் (மருதம்) எயிலை முற்றுகையிட்டு நாட்டைக் கைப்பற்றுதலும், எயிலை காத்து தம் நாட்டை பாதுகாத்தலுக்குமான போர்கள். 4. கடல், கடல்சார்ந்த மணற்பகுதிகளில் (நெய்தல்) வலிமை குறித்தப் போர்கள் - என நான்கு வகைப் போர்கள் நிகழ்ந்ததாக தொல்காப்பியத்தின் புறத்திணையியலில் மிக தெளிவாக தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளார்.

இத்தகைய தொல்காப்பிய இலக்கணம் பதிவு செய்த இப்போர் முறையின் அடிப்படையிலேயே சங்க இலக்கியத்துள் பல பாடல்கள் காணப்படுகின்றன. பண்டைய சமூகச் சூழலையும், போர் பற்றியும், தமிழகத்தை ஆண்ட மன்னர் பற்றியும், வரலாற்று கருவூலமாம்; புறநானூறு, பதிற்றுப்பத்து மற்றும் அகப்பாடல்கள் வழியாகவும், தொல்பொருள் ஆராய்ச்சிகள், செப்பேடுகள், கல்வெட்டுக்கள், மெய்கீர்த்திகள், நாணயங்கள்,

http://Creativecommons.org//license/by/4.0/.

பயண குறிப்புகள், ஆவணங்கள் என இன்ன பலவற்றிலும் பண்டைய சமூகத்தில் போர், அதன் முறைகளை பலவற்றையும் காண முடியும்.

சங்ககாலம் (சுமார் கி.மு. 500 - கி.பி. 200)

மனிதகுலம் கற்களும், கம்புகளையுமே முதன்மை ஆயுதமாய் பயன்படுத்திய காலம் மாறி இரும்பால் பல உற்பத்தி கருவிகளையும், ஆயுதங்களையும் பயன்படுத்திய காலம் வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது. சங்க நூல்களை ஆராய்ந்து, பல்வகைப்பட்ட ஆயுதங்களை பண்டைய காலத்தில் மக்கள் பயன்படுத்தியிருக்கின்றனர். குறிப்பாக, "**அடார், அம்பறாத்துணி, அம்பு, அரம், அரிவாள், ஆயுதக்காம்பு, எஃகு, கண்ணாடி தைத்த கேடகம், கணிச்சிப்படை, கலப்பை, கழிப்பிணிப் பலகை, காழெஃகம், கிளகடி கருவி (தட்டை), குந்தாலி, குறடு, கேடகம், கோடாலி, சக்கரம், சிறியிலை யெஃகம், சேறுகுத்தி, தறிகை, துடுப்பு, நவியம், படைவாள், பூண்கட்டிய தண்டு, மழு, வாள், வில், வேல், வேலுறை**" (பக்.82- புறநானூறு, கழகம் உரை) போன்றவை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

பண்டைய போர் மரபுகள்

பண்டைக் காலத்தில் சில வரையறைகளோடு போர்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக போருக்குச் செல்வோர், குறிப்பிட்ட பூக்களைச் சூடுதல் மரபாக இருந்துள்ளது. ஒவ்வொரு மன்னனும் ஒரு குறிப்பிட்ட பூவை சூடி போர்புரிவது மரபு.பூக்களைச் சூடி போரிடும் மரபைக் கொண்டிருந்தனர்.அதனால் போருக்குச் செல்லும் முன்பு பூச்சூட வருமாறு வீரர்களுக்கு அழைப்பு விடுத்தனர். கழாத்தலையாரின் புறப்பாடல் ஒன்றில்,

"மூதிலாள ருள்ளும் காதலின்
தனக்கு முகந் தேந்திய பசுயென் மண்டை
இவற்கீ கென்னு மதுவுமன் றிசினே
கேட்டியோ வாழி பாண பாசறைப்
பூக்கோ ளின்றென் றையும்
மழவாய் தண்ணுமை யழிசினன் குரலே" (புறம். பா. 289 : 5-10)

என்று வெட்சிப் போர் புரிய வேண்டி (ஆநிரை கவர்தல்;) போர் பறையை அறிவிக்க, மறவர் பலரும் திரண்டனர். அப்போது மன்னன் அவர்களோடு விருந்துண்ணுகின்றான். அங்கு மறவர்கள் அனைவருக்கும் 'கள்' வழங்கப்படுகிறது. பாசறையில் இனி நிகழ்தற்குரிய போர்க்குரிய பூவை பெறுமாறு சான்றோர் ஒருவர் கூறுகின்றார். புலையன் போர் தொடங்குதற்குரிய தண்ணுமை எனும் போர் இசையை இசைப்பான் அதை கேட்பாய் என பாணனிடத்து கூறும் பாடல் காணப்படுகிறது.

"**உண்டாட்டு நிகழ்த்துதல் வேந்தன் மரபு**" (பக்.180-181 புறம்) படைக்களன்கள் தருவதும், வேற்றுப்படை வரவை முரசறைந்து தெரிவிக்க, தன் படைகளுக்கும் அறிவித்த செய்திகளை காணலாம். "**முரசுக்குத் தோலை மயிர் சீவாது போர்த்தல் மரபு**" (பக்.177,புறம்) பண்டைய காலத்தில் அரசனே 'நாட்டைப் பாதுகாக்கும்' தகுதியுடையவனாக கருதப்பட்டுள்ளான். மேலும், அரசனே படைப் பொருட்களை சிலரிடம் கொடுத்த செய்திகளை தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது.

http://Creativecommons.org//license/by/4.0/.

போரின் பழமை

எல்லாக் காலங்களிலும் உலகின் எங்கேயோ ஒரு மூலையில் போர் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது.போரில்லாத உலகம் இல்லை.போர்ப் பண்பு உயிரிகளின் குணமாக உள்ளது. போராட்டம் என்பது உயிரிகளின் இயற்கையான ஒரு பகுதி போர் புரிவதை உலகத்தின் இயற்கையாகவே சங்கப் புலவர்களும் கருதியுள்ளனர் என்பதனை,

"ஒருவனை ஒருவன் அடுத்தலும் தொலைத்தலும்
புதுவது அன்று இவ்வுலகத்து இயற்கை"(புறம் -76)

என்ற இடைக்குன்றூர் கிழாரின் புறநானூற்றுப் பாடல் மெய்ப்பிக்கின்றது.இவற்றால் பண்டைக் காலம் முதல் இன்று வரை போர் மனித இனத்தின் முக்கியப் பிரச்சனையாக இருந்து வந்திருக்கிறது என்பது தெளிவாக புலனாகிறது.

போரின் தொடக்கம்

வாழ்வில் பயன் காணாத மக்கள் வளமான செல்வம் உடைய மக்களைக் கணூந்தோறம் காழ்ப்புணர்ந்து அப்பெருவாழ்வு தங்களுக்கும் வரவேண்டும் என்று ஆசை கொண்டனர்.அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ள எதற்கும் துணிந்து நின்றனர்.செல்வர் தாம் பெற்ற இன்ப வாழ்வை வறியவர்க்குப் பகிர்ந்து அளிக்கும் விரிந்த உள்ளம் பெறாத நிலையில் அவ்விரு சாராருக்கும் இடையே மன வேறுபாடு ஏற்பட்டது.இவ்வாறு தொடக்கத்தில் ஏற்பட்ட மன வேறுபாடு பின்னர் பகையாகவும் அதன் விளைவாகப் போராகவும் மாறியது, அமைதி கெட்டது.மனிதன் நாகரீகம் அடைந்த காலத்தில் குறுங்காடுகளை அழித்துப் புன்செய் நிலமாக்கி வேளாண்மை செய்தான். பின்பு அதே மனிதன் ஆடு, மாடு, எருமை போன்ற விலங்குகளைப் பேணி வளர்த்துச் செல்வத்தைப் பெருக்கினான். இதன்மூலம் படிப்படியாகத் தனியுடைமை நிலைபெறத் தொடங்கிய போது வர்க்கப் போராட்டமும் ஆநிரைகளைப் பகைவர் கொள்ளையிட்டு செல்வதும் அவற்றை விற்பதும் சங்கிலித் தொடர் போல போர் நிகழ்ச்சிகள் தோன்றியிருக்க வேண்டும்.

சங்க காலப் போர்

உணவு, உடை, உறையுள் என்பன மனிதனின் அடிப்படைத் தேவைகள். ஒரு மனிதன் தன்னுடைய தேவைகளை தானே நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். அவனால் முடியாத போது அவன் சார்ந்துள்ள சமூகமோ அரசோ அத்தேவைகளை நிறைவு செய்ய வேண்டும.; ஒரு மன்னர் தன் நாட்டுத் தேவைகளை நிறைவு செய்ய இயலாத நிலையில் நட்பு நாடுகளின் உதவியை நாடுகிறான். அது கிட்டாத நிலையில் ஓர் அரசன் பிற நாடுகளுடன் போரிட்டு அவற்றின் வளம் பறித்துத் தன் நாட்டு மக்களின் தேவைகளை நிறைவு செய்கிறான். இதனையே பொதுமக்கள் நலங்கருதி போர்முறை எனக் கொள்ளலாம்.

நினஞ்சுடுதல், "கள்ளுண்பார் இடையிடையே கலந்துக் கொள்ளற்கு; கட்குடம் வைக்கும் கோக்காலிக்கும் ஏணி என்ற பெயரை இட்டு அழைத்தனர் என்பது பெறப்படுகிறது. "மது நுகர்தற் காலத்து இடையிடைக் கறித்து இன்புறுவதற்கு இஞ்சியும்; மோந்து இன்புறுவதற்குப் பூவும் பயன்பட்டன.சாந்து - சந்தன சேறு; இதனை புறத்தே பூசுதல் நறுமணத்திற்கும் பானைக் கசிவைத் தடுத்தற்கும் ஆம்" (பக். 142, பதிற்றுப்பத்து, புலியூர்கேசிகன் உரை) என்று பண்டையோர் எண்ணினர்.அவர் அதனை தடுக்க எண்ணினால்

http://Creativecommons.org//license/by/4.0/.

போர் நிகழ்த்த வேண்டும்.அல்லது பணிந்து போக வேண்டும்.இரண்டுமன்றி ஓடி மறைபவர் மறப்பண்பினர் ஆகார். இதனை,

"கடிமரத்தால் களிறு அணைத்து
நெடுநீர துறை கலங்க
மூழ்த்து இறுத்த வியன் தானையொடு" (பதிற்றுப்பத்து பா. 33 : 3-5)

என்ற பாடல் விளக்கி உரைக்கும்.

போர் அறிவிப்பு

ஒருமன்னன் பகைவரோடு போரிடக் கருதுவானாயின், கருதியவுடன் படை எடுக்க மாட்டான்.தனது கருத்தைப் பகைவரது நாட்டார்க்குப் பறையறைந்து தெரியப் படுத்துவான். அப்போது

"ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் தென்புலம்
வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும் பொன்போற் புதல்வரைப்
பெறாதீரும் எம் அம்பு கடி விடுதும் நும்மரண் சேரும்"(புறம் -26)

என்று அறிவிக்கப்படும்.இதனால் தமிழர் போர் தொடங்கும் போது அற நெறியுடன் தொடங்கினர் என அறியலாம்.

"பலிபெறு நன்னகரும் பள்ளியிடனும்
ஒலிகெழு நான்மறையோர் இல்லும்-
நலிவொரீஇப் புல்லா; இரியப்
பொருநர் முனை கெடுத்த வில்லார்க்கு
அருள் சுரந்தான் வேந்து"(புறப்பொருள் வெண்பாமாலை.துறை-பேராண் வஞ்சி)

போர் நடக்கும் நாட்டில் மறவர்கள், பலியிடப்படும் கோவில்களுக்கும், துறவிகள் வாழும் பள்ளிகளுக்கும், வேதவொலி மிக்க அந்தணர்களின் இல்லங்களுக்கும் எந்த நலிவையும் செய்யவில்லை இவை போன்ற தக்கார் உறையும் இடங்களை நீக்கிப் பிற இடங்களில் போரிட்டுப் பகைவரை வென்றுள்ளனர். **"கூதிர் வேனில் என்றிரு பாசறை"** (தொல். நூ. 1022) என்ற வழியும், **"இடைப்புலம், இடைச்சுரம், நாட்பு"** - போர் நிகழும் இடம் (பக். 177, புறம் - சைவ நூற்கழகம்) என்ற வழியும், கூதிர் காலம், வேனிற் காலத்தில் பாசறை அமைத்து போர் புரிந்துள்ளனர். மழைகாலத்தில் போர்கள் நிகழ்ந்த குறிப்புகளில்லை.காலத்தை ஆராய்ந்து போர்க்காலங்களை தேர்ந்தெடுத்தனர் என்பதும் புலனாகிறது.

போர்மரபில் பண்பாடு

பழந்தமிழர்கள் போரில் கையாண்ட மரபுகளை நான்கு நிலைகளாகப் பிரித்து அறிய முடிகிறது அவை, போருக்கு முன்னுள்ள மரபுகள், போர் நிகழும் போது மேற்கொள்ளப்படும் மரபுகள், போருக்குப் பின்னுள்ள மரபுகள், பொதுவான மரபுகள். போருக்கு முன்னுள்ள மரபுகள் பண்டைக் காலத்தில் போர் என்றால் உடனே சென்று தாக்குவது இல்லை.போருக்குப் போவதற்கு முன்பே முரசு அறிவிக்கப்பட்டு, வீரர்கள் திரட்டப்பட்டு, அவ்வீரர்கள்நீராடி.போர்க்கோலம் கொள்வர். அரசன் அவர்களுக்கான அடையாளம் பூக்களும், படைக்கலன்களும் வழங்குவான்.

http://Creativecommons.org//license/by/4.0/.

போருக்கு செல்கிறோம் என்ற அச்சவுணர்வு இல்லாமல் மகிழ்ச்சியோடும் விருப்பத்தோடும் போர்க்களம் சென்றுள்ளனர்.இவ்வாறு போருக்குச் செல்லும் முன்பு சில மரபுகளைக் கையாண்டுள்ளனர்.அமைச்சருடன் ஆலோசனை, ஒற்று ஆராய்தல், முரசு முழக்கி வீரர்களைத் திரட்டுதல், நிமித்தம் பார்த்தல், வாள்(ம) நடை மங்கலம் செய்தல், ஊர்க்கயத்தில் நீராடுதல், அடையாளப் பூச்சூடல், வஞ்சினம் உரைத்து நெடுமொழி சவறல், மொழிப்பாட்டுன் விடைபெறுதல் போன்ற பலவற்றை மரபாகக் கையாண்டுள்ளனர் என்பதை சங்கப் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

மன்னன் போர் பற்றிய நிகழ்வுகளைத் தன் அமைச்சர் முதலியவர்களுடன் கலந்து ஆலோசனை மேற்கொண்டுள்ளனர். இதனை, "**திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கு** " என்னும் புறநானூறு(2) பாடலில் மாறாத அரசியல் மாற்றம் என்பதில் அமைச்சர் களம் இருந்தனர் என அறிய முடிகிறது. போருக்குப் புறப்படும் மன்னர்கள் போர்க்களத்திலே வீரர்கள் எந்த சாரரின் வீரர்கள் என்பதை அறிய அடையாளப் பூக்களை சூடியுள்ளனர் என்பதை, கோப்பெருநற்கிள்ளிப் போரில் ஈடுபட்டபோது அத்திப்பூ மாலை சூடியதை,

"ஊர்கொள வந்த பொருநனொடு
ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே"(புறம் -82)

என்னும் பாடலில் சாத்தந்தையார் பாடியுள்ளதை அறியமுடிகிறது.

போரில் மரபுகள்

போர்க்கோலம் கொண்டு, இறைவனை வணங்கி வழிபட்டு போர்க்களம் செல்வதற்கு சில மரபுகளை கையாண்டார்களோ அதேபோல பகைவரோடு போரிட வந்தவர்கள் போரிலும், போர்க்களத்திலும் சில மரபுகளைக் கடைபிடித்துள்ளனர். அவைகள், களம் நிறுவிப் போர், பகலில் மட்டும் போர், ஆநிரைகளைக் கவர்தல், ஆநிரைகளை மீட்டல், காவல்மரம் கடிதல், முரசும் சங்கும் முழுங்கப்படல், போர்க்கள ஒற்று ஆராய்தல், பூச்சூட அழைத்தலும் பூச்சூடலும், பாசறையில் தங்குதல், துணைப்படை நாடல் போன்ற அனைத்தையும் போர் நிகழும் மரபுகளாக கையாண்டுள்ளதை சங்கப் பாடல்கள் புலப்படுத்துகின்றன.பகற்பொழுது சிறியதாக இருந்தாலும் தன்னை எதிர்த்து வந்தவர் அனைவரையும், பகற்பொழுதிலே வென்றவன் பாண்டியன் நெடுஞ்செழியன் என்பதை,

"மூதூர் வாயில் பனிக்கயம் மண்ணி
வம்ப மள்ளரே பலரே
எஞ்சுவர் கொல்லோஇ பகல் தவச்சிறிதே? " (புறம் - 79)

என்ற இடைக்குன்றூர் கிழாரின் பாடலால் பகலில் மட்டுமே போர் செய்தனர் என்ற குறிப்பு காணப்படுகின்றது. போருக்குப் பின்னுள்ள மரபுகள் தாம் மேற்கொண்ட போரில் வெற்றி யாருக்கு என்று முடிவானவுடன் வெற்றி பெற்ற மன்னன் பகைப்புலத்தில் தன் உரிமையை நிலைநாட்டுவான். இதன் காரணமாக பகை மன்னனையும், பகை நாட்டு வீரர்களையும் சிறைப்பிடிப்பான். அதன்பின் அவன் கையாண்ட மரபுகளாக, பகைவர்களைச் சிறைப்பிடித்தல், கள்ளுண்டு மகிழ்தல், களவேள்வி செய்தல், நடுகல் நாட்டல், மங்கல நீராட்டி பகை நாட்டு மன்னனாக முடிசூடல் போன்ற செயல்களைச் சங்கப் பாடல்களால்

http://Creativecommons.org//license/by/4.0/.

உணரமுடிகிறது.போரில் தோற்ற மன்னனின் மணிமுடியைக் கவர்ந்து தன் காலுக்கு வீரக்கழலாக அணிந்தான் என்பதை,

"நீயே பிறர் ஓம்பறு மறமன்
எயில் அடிபொலியக் கழல்
தைஇய வல்லாளனை; வய வேந்தே" {புறம்-40)

என்ற ஆவூர் மூலங்கிழார் பாடலில் பதிவு செய்துள்ளத்தைக் காணமுடிகிறது. பாண்டியன் நெடுஞ்செழியன் தன் போர் வெற்றிக்குப்பின் பகைவர்களின் உடலைச் சமைத்து, பேய்களுக்கு உணவளித்தான் என்பதை புறநானூறு (372:5-12) பாடல் மூலமும் தெரிந்து கொள்ள முடிகின்றது. போரில் பகைவீரர்களால் விழுப்புண்பட்டு வீரமரணம் எய்திய வீரர்களுக்கு நடுகல் நடும் பழக்கம் இருந்ததை,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல்" (புறத்திணையியல் - 5)

என்ற பாடல் மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது.

போர் நிகழ்ச்சிகள்

மண்ணாசைக் காரணமாக தன்நாட்டின் எல்லையை விரிவுபடுத்த வேண்டி பல போர்கள் நடைபெற்றன என்பதை புறநானூற்றில் காண முடிகின்றது. போர்க்கு அடிப்படைக் காரணமாக துரை அரங்சாமி கூறுவது "அக வாழ்க்கையிலும் புறவாழ்க்கையிலும் அன்பு நெறியையே பின்பற்றி வாழ்ந்தவர் நிலைபெற்றிருந்த தமிழ்நாட்டில் போர் தோன்றக் காரணம் " மண் நசை எஞ்சாமன் நசை " தனக்குள்ளது போதாது என்ற காரணத்தால் ஒரு நாட்டு வேந்தன் மற்றொரு நாட்டு வேந்தன் மீது போர் குறித்து எழுவான் எனவே மண் நசையே போர்க் காரணமாகும், என்று அழுத்தமாகக் கூறியுள்ளார்.தன் நாட்டு மக்கள் வளமாக வாழ்வதற்கு இடம் போதாது எனக் கருதி சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் போர் செய்தான் என்பதை,

"போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறாஅது
இடஞ்சிறிது என்னும் ஊக்கம் துரப்ப" (புறம் -8)

என்று கபிலர் பாடியுள்ளார். பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுப் பெருவழுதி வடக்கே இமயமலையும் தெற்கே குமரியும் கிழக்கே நீலக்கடல் வேலியும் மேற்கே ஆழ்கடலும் கொண்ட நிலப்பகுதியை ஆட்சி செய்தான் என்பதை,

"வடா அது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனா அது உருகெழு குமரியின் தெற்கும்" (புறம் -6)

என்று காரிக்கிழார் என்ற புலவர் நான்கு திசைகளிலும் ஆட்சி செலுத்தினான் என்பதைப் பாடியுள்ளார். தமது நாட்டின் எல்லையை விரிவுபடுத்த வேண்டி போர் செய்தல் வேந்தர்க்கு அறம் என்பதை, **"பிறனாளும் நாடுக்கல் மன்னர் தொழில் நலம்"** மண்ணாசையால்போர் நிகழ்ச்சிகளில் பல அழிவுகள் நடைபெற்றதையும் சங்கப்
பாடல்களால் உணரமுடிகிறது.

போர்க் காலத்தில் மறவர்க்கு ஊன்சோறு தருவதும் வழக்கமாக இருந்துள்ளது. அரசன், மறவனென இருவருக்கும் ஒரே வகையான சோறு இடுதல் மரபாக

http://Creativecommons.org//license/by/4.0/.

இருந்துள்ளது.“**ஊன் துடி அடிசில் - ஊனும் அரிசியும் குலைய சமைத்த புலவு”** (பக்.155, பதிற்றுப்பத்து, புலியூர்கேசிகன் உரை) என்று குறிப்பிடுவதைக் காணலாம்.அதே 'கள்' வழங்கும் பழக்கம் இருந்துள்ளது.இதனை தொல்காப்பியர் 'உண்டாட்டு' என்கிறார். அதாவது வெட்சித்திணையில் போர் முடிவுற்ற காலத்தில் ஆநிரைகளைக் கவர்ந்து வந்தோர் பங்கிட்டுக் கொண்டு உண்டாட்டு (அதாவது மது குடித்தல்) நிகழ்த்துதல் மரபாக இருந்துள்ளது.

பூப்புனைதல்

மறவர் போர் தொடங்கும் போது நிகழ்வுக்கேற்ற அடையாளப் பூவைச் சூடுதல் வழக்கம். ஆநிரை கவரச் செல்வோர் வெட்சிப் பூவையும், ஆநிரையை மீட்கப் போவோர் கரந்தைப் பூவையும், பகைவர் நாட்டின் மீது படை எடுப்போர் வஞ்சிப் பூவையும், அரணைக் காப்போர் நொச்சிப் பூவையும், அரணத்தை முற்றுகை இடுவோர் உழிஞைப் பூவையும், ஒரு களத்தில் புக்குப் போரிடுவோர் இரு திறத்தாரும் தும்பைப் பூவையும், போரில் வெற்றி எய்தியோர் வாகைப் பூவையும் சூடுவர். இவ்வாறு பூச்சூடுங்கால் உண்மைப் பூவைச் சூடுவதோடு பொற்பூவைப் புனைதலும் உண்டு.அரசர் மறவர்க்கு பொற்பூ வழங்கிச் சிறப்பித்தலும் உண்டு.முருகன் கிரவுஞ்ச மலையை வெல்லுங்கால் காந்தட் பூச் சூடினான் என்றும், சிவபெருமான் முப்புரத்தை எரித்த காலத்தில் உழிஞைப் பூச்சூடினான் என்றும் கூறுவர்.

நடுகல்

போரில் விழுப்புண்ணோடு இறப்பதே பெருமையென எண்ணினர். அதனால் இறந்தே குழந்தை பிறந்தால் கூட வாளால் கீறியே புதைப்பதை வழக்கமாகக் கொண்டதை, “**குழவர் இறப்பினும் ஊன் தடி பிறப்பினும் ஆள் அன்று என்று வாளில் தப்பார்**”(புறம். பா. 74) என்று குறிப்பிடப்பட்டதும், போரிடாதோரை இழிவாகக் கருதியதையும், அவர்களையும் மார்பில் கீறி புதைத்ததையும்,

> **“நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇ**
> **காதல் மறந்து அவர்தீது மருங்கு அறுமார்** …
> **மறம் கந்தாக நல்வுமர் வீழ்ந்த**
> **நீள்கமழ் மறவர் செல்வழிச் செல்க என**
> **வாள்போந்து அடக்கலும் உய்த்தனர்**” (புறம்.பா.93)

என்று புறப்பாடல் எடுத்துரைக்கிறது.போரில் இறந்தவர்களுக்கு 'நடுகல்' நட்டு வழிபடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.“காட்சி, கால்கோள், நீர்படை, நடுகல்” (தொல். பொருள் நூ. 63) குறிப்பிடுகிறது.

நடுகல் வடிவில் அமைந்த கல்வெட்டுக்களைப் பற்றி சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. போர்க்களத்தில் இறந்த வீரனின் பெயரும், பெருமையும் நடுகல்லில் எழுதும் வழக்காறு பற்றி தொல்காப்பியம் (புறத்திணை - 5) புறநானூறு (பாடல்கள் 221, 223, 232, 260, 261, 263, 264, 265, 282, 287, 314, 328, 329, 335) அகநானூறு (131) மலைபடுகடாம் (வரி 386 - 389) பட்டினப்பாலை (வரி : 78 - 79) புறப்பொருள் வெண்பாமாலை (பொதுவியல் - 8) ஆகிய நூல்கள் காட்டுகின்றன” (பக். 10, தமிழக வரலாறும் பண்பாடும்) அவற்றுள் பெரும்பகுதி

http://Creativecommons.org//license/by/4.0/.

குறிஞ்சிப் பாடல்களிலே காணப்படுகிறது. ஆகவே, மலை, மலைசார்ந்த பகுதிகளிலே இப்பழக்கம் ஏற்பட்டிருக்கிறது என கருதலாம்.

முடிவுரை

இத்தகைய, தமிழரின்போர் மரபை இளைய தலைமுறையினர்க்கும் எடுத்துச் செல்வதும், மரபைக் காக்கவேண்டியதன் தேவையை அவர்களுக்கு உணர்த்துவதும் நம் கடமை.இன்னும் சொல்லப்போனால் இன்றைக்கும் ஏற்புடையதாக விளங்கும் தமிழர் மரபு மற்றும் பண்பாடுகளை மீட்டுறுவாக்கம் செய்து பயன்கொள்வதும் இன்றைய தேவையாகும்.

துணைமை நின்றவை :

1. **சங்க இலக்கியம் முழுவதும், வர்த்தமானன் பதிப்பகம் தியாகராய நகர், சென்னை.** முதற் பதிப்பு, 2003.
2. **கைலாசபதி, சு., பண்டைத் தமிழரின் வாழ்வும் வழிபாடும்,பாரி நிலையம், சென்னை,** மூன்றாம் பதிப்பு, 1966.
3. **தமிழண்ணல், தொல்காப்பியர் பொருளதிகாரம் (தொகுதி 1,2), மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, முதற்பதிப்பு,**2010.

http://Creativecommons.org//license/by/4.0/.

02. இலக்கியங்களில் மக்கள் வாழ்வியல் பதிவுகள்

ஆய்வாளர்
கராஜலட்சுமி.,
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம்,
மன்னர் திருமலை நாயக்கர்
கல்லூரி(தன்னாட்சி(, மதுரை.
9710952685. rajalakshmi0579@gmail.com

நெறியாளர்
முதுமுனைவர் பாதிருஞானசம்பந்தம் .,
தமிழ் உயர் ஆய்வு மையம்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி ,
(தன்னாட்சி(,மதுரை - 625504.

DOI 10.5281/zenodo.15069853.

Abstract :

In this article, which considers the life of people in literature, we were able to learn about some of the records that can be said to be followed by every human being in life. We were able to learn about all the concepts necessary to live a virtuous life, which is considered important in cultures. Although there are many historical records about men who excelled in charity and bravery, women who excelled in life, hospitality, and the arts, and about educational systems for men and educational systems for women, only a few specific records have been mentioned in this article.

Key Words : Tamil Literature - Life of people - Women.

முன்னுரை:

தமிழ் இலக்கியங்களில் தொன்றுதொட்டு அறம், அறிவு, ஆற்றல், ஒழுக்கம், வீரம், கல்வி, கொடை, விருந்தோம்பல் என அனைத்திலும் சிறந்து விளங்க கூடியவர்களாக மக்கள் திகழ்ந்ததை பல சான்றுகளின் வழியும் , பல இலக்கிய நூல்களின் வழியும் அறிய முடிகிறதுஇதில் சங்க காலம் ., சங்க மருவிய காலம், நாயக்கர் காலம் என அந்தந்த காலகட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் நிகழ்வுகள் மற்றும் பெண்களின் கலை, வீரம், விருந்தோம்பல் போன்ற பண்புகள் குறித்து இக்கட்டுரையில் விரிவாக காண்போம்.

பழங்கால மக்களினம்:

தமிழர்களின் வாழ்க்கையானது முதன் முதலில் மலைச்சாரலில் தொடங்கி அதன் பின்பு அவர்கள் உணவிற்காக வேட்டையாடி, காய், கனிகளை பயிரிடவும்,பயிரிடுவதற்கு தேவையான அனைத்து கருவிகளையும் தாங்களே செய்யவும் கற்றுக் கொண்டனர் . முதலில் தங்களின் உணவினை தயார் செய்த மனிதன் அடுத்ததாக உறைவிடத்தை தயார் தங்களுக்கு தேவையான உறைவிடத்தை புல் .செய்யத் தொடங்கினான், பூண்டுகள், இலை, தழைகளால் வேயப்பட்ட குடிசைகளாக தயார் செய்து அதில் வாழத் தொடங்கினான் . இவ்வாறு தங்களது உணவு, உறைவிடத்தை தயார் செய்த மனிதன் இயற்கை வழிபாட்டினை மேற்கொண்டான்இவ்வாறு படிப்படியாக தங்களின் வாழ்வில் மாற்றத்தை . ஏற்படுத்திய மனிதன் திருமண முறை, பொழுதுபோக்குகள், வணிக முறை என்று படிப்படியாக வளரத் தொடங்கினான் என்பதை பல சான்றுகளின் வாயிலாக அறிய முடிகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

தொல்காப்பியம் காட்டும் வாழ்வியல்

ஆண்மகன் ஒருவன் தான் வாழ்ந்த காலகட்டங்களை பிறர் நினைவுபடுத்துமாறு வாழ வேண்டுமாயின் அவன் பண்பில் சிறந்தவனாகவும், ஒழுக்கத்தில் மேன்மை உடையவனாகவும் சிறந்து விளங்கியிருத்தல் வேண்டும்அதுவே பெண்ணின் பெருமை . சிறக்க வேண்டுமாயின் அவள் இல்வாழ்க்கையில் சிறந்தவளாகவும், விருந்தோம்பலில் சிறந்தவளாகவும் திகழ வேண்டும் .

உலகில் உள்ள மக்கள் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று தொல்காப்பியர் கூறவில்லைஆடவரும் ., பெண்டிரும் அக வாழ்க்கையில் சிறப்புற்று விளங்க வேண்டும் என்பதனை தொல்காப்பியர் பொருள் அதிகாரத்தில்களவியல் என்ற இயலில், தலைவனும், தலைவியும் ஈடுபடும் போது நிகழும் இன்னல்கள் குறித்தும், கற்பு வாழ்க்கையில் ஈடுபடும் போது ஏற்படும் நன்மைகள் குறித்தும் தெளிவாக விளக்கியுள்ளார் .

"தலைவன் தலைவியை நோக்குதல், ஐயுற்று தெளிதல், இயற்கை புணர்ச்சிக்கு உடன்படுத்துதல், வரைவிடை குறித்து சூழுரைத்தல் எனக் கூறி குறித்த காலம் சென்றும் தலைவன் வரையாது எண்ணி தலைவி வருந்துதல் போன்ற களவு வாழ்க்கை குறித்த பதிவுகளை

வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரையெனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்
தானே கூறுங் காலமும் உளவே." - (தொல் -பக்-பொ-207, பா-110)

என்பதன் வழி அறிய முடிகிறதுகளவு வாழ்க்கையினை கூறிய தொல்காப்பியர் கற்பு . .வாழ்க்கையை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்

சங்ககாலப் பெண்களின் விருந்தோம்பல் பண்புகள்:

சங்ககால நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற நூல்களில் மக்களின் வாழ்வியல் குறித்த பதிவுகளை சங்கப் பாடல்களின் வழி அறிய முடிகின்றதுசங்ககால . தமிழ் இலக்கியங்களில் விருந்தோம்பல் என்பது இல்லறத்திற்குரிய முக்கிய அறமாக வைத்து போற்றப்படுகின்றதுபழந்தமிழர்கள் விருந்தோம்பலை உயிர்நாடியாக கொண்டு . .வாழ்ந்து வந்தனர் என்பதனை அறிய முடிகின்றது'

அதனால் தான் விருந்தோம்பலின் சிறப்பினை குறித்து வள்ளுவர் பெருந்தகையார் விருந்தோம்பலுக்கென்று தனி அதிகாரத்தை படைத்து அதில் விருந்து குறித்தும் விருந்தினர் குறித்தும் கூறியுள்ளதை பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்ற குறளின் வழி அறிய முடிகின்றதுசங்க கால பெண்கள் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர் . தலைவனும் .என்பதனை சில சங்கப் பாடல்களின் வழி அறிய முடிகின்றது, தலைவியும் இணைந்து இல்லறம் நடத்துதல், வீட்டிற்கு வரும் விருந்தினரை உபசரித்தல் என்பதனை விளக்கும் விதமாக, மனையறம் புரிதலை மகளிரும், வினையறம் புரிதலை ஆடவரும் மேற்கொண்டதால் இல்லறம் சிறந்து விளங்கியது என்பதனை குறுந்தொகை பாடலின் வழி அறிய முடிகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

பத்துப்பாட்டு நூல்களில்பரணர், கூத்தர், விறலியர் போன்ற பசியால் வாடி அரசர்களை நாடிச் செல்லும்போது அவர்களின் பசியினைப் போக்க வேண்டும்பரிசுப் பொருட்களை பரிசாக அளிக்கும் வழக்கம் இருந்ததனை ஆற்றுப்படை நூல்களின் வாயிலாக அறிய முடிகின்றதுஅடுத்ததாக எட்டுத்தொகைநூல்களான நற்றிணை மற்றும் . குறுந்தொகையிலும் விருந்தோம்பல் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளதை அறிய முடிகின்றதுஉணவு என்பது வெறும் தேவை அல்ல மாறாக இது ஒரு சமுதாயத்தின் . அடையாளமாகவும், விருந்தோம்பலின் முக்கிய அங்கமாகவும் காட்டப்பட்டுள்ளது.

பெண்கள் விருந்தோம்பலில் மட்டும் சிறந்து விளங்காது ஆடல் கலைகளிலும், பாடல் பாடுவதிலும் சிறந்து விளங்கினர் என்பதனை அறிய முடிகின்றதுசங்க கால . பெண்கள் இயல், இசை, கூத்து என்னும் முத்துறையிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினர்மகளிர் உள்ளத்தில் தோன்றும் கருத்துக்களை உடலின் உறுப்புகளின் மூலம் . வெளிக்காட்டுவதில் நன்கு புலமை பெற்றிருந்தனர்இவர்களின் ஆடலின் வகைகளை . பொறுத்து துணங்கை கூத்து என்றும், விரல் பட ஆடும் பெண்களை விறலியர் என்றும், யாழ் போன்ற இசைக்கருவிக்கு ஏற்ப ஆடும் திறம் படைத்தவர்களாகவும் பெண்கள் விளங்கினர்அதுமட்டுமின்றி பெண்கள் பாடும் திறன் மிக்கவர்கள் என்பதற்கு ஔவையார் ., ஆதிமந்தியார், காக்கை பாடினியார், பொன்முடியார், ஒக்கூர் மாசாத்தியார், நப்பசலையார், நன்முல்லையார் போன்றோர் பாடல் பாடுவதில் புலமை பெற்றவர்களாக இருந்ததை அறிய முடிகின்றது.

சங்ககால கல்வி முறையினை பார்க்கும் போது ஆடவர்க்குரிய கல்வி வேறாகவும், மகளிருக்குரிய கல்வி முறை வேறாகவும் அமைந்திருந்ததுஆடவர்கள் போர் ., தூது, காவல், பொருளீட்டல் போன்றவர்களுக்கு தேவையான கல்வியையும், மகளிர் தன் குடும்பத்திற்கு துணை செய்யும் கல்வியினையும் கற்றவர்களாக இருந்தனர்.

இலக்கியங்களின் வரிசையில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து சிற்றிலக்கியங்களில் பள்ளு இலக்கியங்களின் வழி மக்களின் வாழ்வியல் முறைகள் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகின்றதுஇதை முக்கூடற்பள்ளு . என்னும் நூலில் பள்ளர்களின் வாழ்வியல் முறைகளையும், உழவர்களின் வாழ்க்கை முறைகள், அவர்களின் சடங்குகள் நம்பிக்கைகள் போன்றவைகள் சித்தரிக்கப்படுகின்றன . மேலும் முக்கூடற்பள்ளில் திருமலை கொழுந்து மன்னன் உடைய கொடைத்தன்மையை அதேபோல் தூது இலக்கியத்தில் .சிறப்பித்து பாடப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடததிற்கு செய்தியை கொண்டு சேர்க்க எவ்வகையான தூது பொருட்கள் கையாளப்பட்டுள்ளன என்பதை பற்றி பல நூல்களின் வழியும், பல பாடல்களின் வழியும் அறிய முடிகின்றது .

அதேபோல் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் வழி குழந்தையின் பிறப்பு முதல் அதன் ஒவ்வொரு வளர்ச்சியை பற்றியும் அறிய முடிகின்றதுஇந்தப் பிள்ளைத்தமிழில் . ஆண்களுக்கான பருவம், பெண்களுக்கான பருவம் அந்தந்த பருவத்தில் அவர்கள் விளையாடக்கூடிய விளையாட்டுகள் என அனைத்தையும் பல நூல்களின் மூலம் அறிய முடிகின்றதுமேலும் குறவஞ்சி இலக்கியத்தில் குறிஞ்சி நில மக்கள் ., குறவன், குறத்தி

http://Creativecommons.org//license/by/4.0/.

அவர்களின் வாழ்க்கை முறை, இவர்கள் குறி கூறும் பாங்கு, வழிபாட்டுமுறை போன்றவை பற்றியும் அறிய முடிகின்றதுசிற்றிலக்கியங்களில் இவையன்றி இன்னும் பல நூல்களின் . வழியும் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை, வழிபாட்டு முறை போன்றவைகளை பற்றி அறிய முடிகின்றது.

வீரக்குல பெண்கள்

அடுத்ததாக பெண்களின் வீரத்தினை பார்க்கும்போது மறக்குடி மகளிர் வீரம் மிகுந்தவர்களாக திகழ்ந்தனர் என்பதனை சில நூல்களின் வழி அறிய முடிகிறது போருக்கு . சென்ற தலைவனோ அல்லது மகனோ புறமுதுகிட்டு ஓடி சாவதை மறக்குடி பெண்கள் மார்பிலே விழுப்புண்பட்டு இறப்பதைக் கண்டு பெருமிதம் .விரும்ப மாட்டார்கள் கொள்வதுண்டு இவளின் வீரத்தை விவரிக்கும் விதமாக கண்டோர் சிலர் உன் மகன் . பகைவரின் படைக்கு அஞ்சி புறமுதுகிட்டு மாண்டான் என்று கூற கேட்ட தாயானவள் போர்க்களத்திற்கு சென்று அங்கே குவிந்து கிடக்கும் பிணங்களை ஒவ்வொன்றாக தன் கையில் வைத்திருக்கும் வாள் கொண்டு பிணங்களை திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டே வரும்போது அவளது மகனின் மார்பில் புண்பட்டு உடல் துண்டாக சிதைந்து கிடப்பதை கண்ட தாய் அவனைப் பெற்ற நாளில் இருந்த மகிழ்ச்சியை விட பெரிதும் மகிழ்ந்தால் என்பதனை விளக்கும் விதமாக

“கொண்ட வாளொடு படுப்பிணம் பெயராக்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே”(புற -பக்-உரை.மூ-639,பா-278)

என்ற இப்பாடலின் வழி அத்தாயின் வீரத்தை உணர முடிகிறது.

முடிவுரை:

ஆரம்ப காலகட்டத்தில் தமிழர்களின் வாழ்க்கை முறையானது எவ்வாறு தொடங்கி தனக்குத் தேவையானவற்றை படிப்படியாக எவ்வாறு உருவாக்கிக் கொண்டான் என்பதை பற்றியும், தனக்கு அடுத்ததாக வரும் மனிதர்களுக்கு தான் வாழ்ந்த காலகட்டத்தில் தேவையான கருத்துக்களை பதிவு செய்யும் விதத்தில் பல நூல்களின் வழியும், பல பாடல்களின் வழியும் மக்களுக்கு தேவையான கருத்துக்களை பல அறிஞர்கள் பதிவு செய்து சென்று விட்டனர்அவற்றின் வழி தொல்காப்பியர் காலத்தில் அகவாழ்க்கை . பற்றியும், களவு வாழ்க்கை பற்றியும், கற்பு வாழ்க்கை பற்றியும் எடுத்தியம்பியுள்ளார் . அடுத்ததாக சங்க கால நூல்களான பத்துப்பாட்டு மற்றும் எட்டுத்தொகை நூல்களின் வழியும்மக்களின் காதல், கொடை, விரும், விருந்தோம்பல் போன்ற பண்புகள் விளக்கப்பட்டுள்ளன என்பதன் மூலம் நம் தமிழர்கள் கொடையிலும், வீரத்திலும் எவ்வாறு திகழ்ந்து இருந்தனர் என்பதை உணர முடிகிறது .

அடுத்ததாக, திருவள்ளுவர் மக்களுக்குத் தேவையான அனைத்து அறக் கருத்துக்களையும் தம் குறளின் வழி விளக்கியுள்ளார்வள்ளுவரின் குறளினை பின்பற்றி வாழ்கின்றானோ . அவன் இச்சமூகத்தில் சிறந்த மனிதனாக வாழ்வான் என்பதில் எந்த ஐயமும் இல்;;லை . சங்க கால பெண்கள் பாடல் பாடுவதில் எவ்வாறு சிறந்திருந்தனர் என்பதனை புறநானூறு

http://Creativecommons.org//license/by/4.0/.

போன்ற நூல்களின் வழி அறிய முடிகின்றதுசங்க கால பெண்கள் ஆண்களுக்கு நிகராக . இது போன்ற பல பதிவுகளை வாயிலாக மக்கள் எவ்வாறு .வீரத்தில் சிறந்திருந்தனர் .வாழ்ந்திருந்தனர் என்பதனைப் பற்றி அறிய முடிகின்றது

அடிக்குறிப்பு

1. முசண்முகம் பிள்ளை . - சங்கத் தமிழர் வாழ்வியல்,உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,சென்னை - 600113.
2. நாவானமாமலை . -தமிழர் வரலாறு பண்பாடும்,நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,சென்னை - 600098.
3. இளம்பூரணார் -தொல்காப்பியம் பொருளதிகாரம் -,சாரதா பதிப்பகம்,சென்னை - 600014.
4. ஔவை துரைசாமி பிள்ளை -புறநானூறு மூலமும் சாரதா - உரையும் - பதிப்பகம்,சென்னை
5. .சிபாலசுப்பிரமணியன் . -சங்ககால மகளிர்,பாரி நிலையம்,சென்னை - 600108.

http://Creativecommons.org//license/by/4.0/.

03. நற்றிணையில் பழந்தமிழரின் நிலமும் வரலாறும்

திருமதி இரா.சுகுணாதேவி எம்.ஏ.,பி.எல்.,
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் முதுகலை மற்றும் உயராய்வுத்துறை,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த), மதுரை - 625002
sugunadeviadv@gmail.com - கைப்பேசி எண்: 9843172666
DOI 10.5281/zenodo.15069863.

Abstract:

Although there are many elements necessary for people to live in the world, the most essential among them is land. Land is not only a place to live or a place to rule. It is a container that holds the history and cultural traditions of human life. Geographical boundaries and cultural boundaries are interdependent. Furthermore, the definition of land includes forests, mountains, seas, rivers, plains, and valleys. The purpose of this article is to study and explain the history of how the lifestyles of the people living in such lands were established in accordance with the virtues of their respective lands. Furthermore, this article examines how this is stated in one of the Sangam literatures, the Natrinai.

Key Words : Sangam Literature - Natrinai - Land - History

முன்னுரை:

பண்டைத்தமிழர்களின் வரலாற்றை நாம் ஆய்வுசெய்ய எடுக்கையில் முதலாவதாக வந்து நிற்பது அக்காலத்தே இருந்த நிலமும் அந்த நிலம் சார்ந்த மக்களின் வாழ்க்கைமுறையுமே ஆகும். அவற்றை அறிய நமக்குப் பெரும்பாலும் துணை நிற்பவை நமது சங்க இலக்கியங்களே என்பது தெளிவு. அவையனைத்திலும் மக்களின் பண்பாடுகள் சார்ந்த வாழ்வியலைப் பறைசாற்றும் வண்ணம் பல்வகையான கூறுகளும், விழுமியங்களும் காலத்தால் அழிக்க முடியாதவையாகக் காணக் கிடைக்கின்றன. பழந்தமிழர் பெருமை பற்றிக் கூறுகையில் “திராவிடஇன மக்களுக்குள்ளே மிகப்பழைய இலக்கியச் செல்வம் உடையோர் தமிழரே”[1] என்று அறிஞர் பெருமக்கள் கூறுகின்றனர்.

உலகில் மக்கள் வாழத் தேவையான கூறுகள் பல இருந்தாலும், அவற்றுள், மிகவும் இன்றியமையாத இடம் வகிப்பது நிலம் என்பதேயாகும். நிலம் என்பது வாழும் இடமோ அல்லது ஆளும் இடமோ மட்டுமல்ல. மனித வாழ்வியலில் தாம் கொண்ட வரலாற்றினையும் வழ்வியற் பண்பாடுகளையும் ஏந்தி நிற்கும் ஒரு பெட்டகமாகும். நிலவியல் எல்லை என்பதும் பண்பாட்டு எல்லை என்பதும் ஒன்றோடொன்று சார்ந்து நிற்பதாகும். மேலும் நிலம் என்னும் வரையறையில் காடு, மலை, கடல், நதி, ஆறு, சமவெளி, பள்ளத்தாக்கு என அனைத்தும் பங்குவகிக்கின்றன. அத்தகு நிலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறைகள் எவ்வாறு அந்தந்த நிலத்திற்கேற்ப அறத்துடன் நிலை பெற்றிருந்தன எனும் வரலாற்றை ஆய்ந்தறிந்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மேலும், அவ்வரலாறு சங்க இலக்கியங்களில் ஒன்றான நற்றிணையில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது என்பது இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

http://Creativecommons.org//license/by/4.0/.

நற்றிணையின் உள்ளடக்கம்:

நல்ல ஒழுகலாறினைக் கொண்டுள்ள நற்றிணையானது, ஐந்திணைகளால் மக்களின் வாழ்வியலை அகச்சிந்தனையுடன் பலவாறாகவும் பாடியிருக்கின்றது. அதில் தலைவன், அவனின் வினைப்பாடு, காடு பற்றிய வர்ணிப்பு, தலைவி, செவிலி பற்றியும், ஊர், குடி, கானல் போன்ற பொருண்மைகளோடு பருவ காலங்கள் பற்றியும் பாடப்பட்டிருக்கின்றது. அதில் ஐம்பூதங்களுக் கேற்றவாறு நிலமும் பொழுதும் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கேற்றவாறு பழந்தமிழரின் வாழ்க்கைமுறை எவ்வாறு அமைந்திருந்தன என்பதைப் பல இடங்களிலும் நிறுவியிருக்கின்றது. அதன்வழி, ஆதித்தமிழர் தம் அறிவுக்கு எட்டியவரையில் அவற்றை இனம்கண்டு ஒவ்வொன்றுக்கும் எவ்வாறு பல்வேறுவகையான பெயர்களை இட்டிருக்கின்றனர் என்பதும் அறியவருகின்றது. பண்டைத்தமிழர் வாழ்வில் "**முதற்பொருள்**" என்பது நிலமும் பொழுதும் என்றும், கருப்பொருளுக்கு தெய்வம், உணவு, தொழில், தாவரங்கள் மற்றும் விலங்குகள் உள்ளிட்ட ஏனைய உயிரினங்கள் என்றும், உரிப்பொருளுக்கு, புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல், சூழல் என்றும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இவையனைத்தும் பழந்தமிழர் மரபு பற்றி விளக்கிநிற்கின்றன. மேலும் இன்றைய மண்ணியல் எனும் அறிவியல் ஆய்விற்கும் முன்பே, நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்தாகப் பிரித்திருந்தனரென்பதும் நன்கு புலனாகின்றது.

நிலப்பரப்பின் வாழ்வியல்:

நற்றிணை, மாந்தர்களது நிலப்பரப்பின் வாழ்வியல் பற்றிக் கூறுகையில், அவர்களின் ஒருமித்த அன்பு பற்றி,

“**நின்றசொல்லர் நீடுதோன்றினியர்**
………சிறுமை யுறுபவோ? செய்பு அறியலரே” -

(நற் - பாடல் எண்1. பக்: 2-3, வேங்கடராமன். (மூ.ப) 2013)

மேலும் இல்லறம் பற்றி விவரிக்கையில்,

“**வெறியுற விரிந்த அறிவை மெல்லெனப்**
புனிறுநாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச…” (நற் - 40)
“**நெய்யோடு இமைக்கும் ஐயவித் திரள்கழ்**
…..புதல்வன் ஈன்றெனப் பேர் பெயர்த்து” (நற் - 370)

எனும் வரிகளில், நாம் பெறும் பேறுகளில் தலையாயது மக்கட்பேறு, அத்தகு மக்கட்பேற்றைப் பெற்ற மகளிர்க்கு எத்தீங்கும் நேரா வண்ணம் சிறுவெண்கடுகு எண்ணெயைப்பூசும் வழக்கம் இருந்ததென்பது தெளிவாகின்றது.

மேலும் மக்களின் இல்லறக் கடமைகளாக, விருந்தோம்பல், வினைப்பயன், நிலையாமை, அறம் செய்தல், கடவுவழிபாடு போன்றவையும் பாடப்பட்டிருக்கின்றன. அவற்றில், பொருளீட்டல்பற்றி,

“**இசையும் இன்பமும், உதவும் மூன்றும்**
அசையுநர் இருந்தோர் கங்கு அரும்புணர்வு இன்பமென
வினைவயின்பிரிந்தவேறுபடு கொள்கை” எனும் பாடலும்,

http://Creativecommons.org//license/by/4.0/.

விருந்தோம்பல் பற்றி,

"**விருந்து புறந்தருதலும்சுற்றம் ஓம்பலும்**
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்" எனும் பாடலும்,
ஈதல் பற்றி,
"**…………………தம்வயின்**
இரந்தோ மாற்றல் ஆற்றா
கல்லின் வாழ்க்கை வல்லாதோரே" எனும் பாடலும்,

நிலையாமை பற்றி,

"**இன்பமும் இளமையும்**
எய்கணை நிழலிற் கழியும்" எனும் பாடலும்,

வினைப்பயன்பற்றி,

"**நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்**
செல்வம் அன்று தன்வினைப்பயனே" என்றும்,

அறம் செய்தல் பற்றி,

"**அறுமீன் கெழீஇய அறம்செய் திங்கட்**
செல் சுடர் நெடுங்கொடி போல" எனும் பாடலும் எடுத்துரைக்கின்றன.

தமிழ் இனக்குடிகள்:

பொதுவாக அக்காலத்தில் தொழில்சார்ந்து அதனடிப்படையிலேயே மக்களைப் பல இனங்களாகப் பிரித்துள்ளனர். நற்றிணையில், பொன்செய் கம்மியர்,செம்புசெய் கம்மியர், குயவர், புலையர்,கணியன் எனப்பலவாறான இனக்குடிகள்பற்றிப் பாடப்பட்டிருக்கிறது. அஃதோடு அவர்தம் வாழ்விடங்களைக் குறிக்கையில், இல், மனை, முற்றம், முன்றில், மாடம், குரம்பை, வரைப்பு, குடில், கூரை, நகர் எனப் பலவாறாகவும் பாடல்கள் எடுத்தியம்பியிருக்கின்றன.

மேலும் பழந்தமிழரின் வாழிடங்களில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்துகொண்டிருக்கும் தாவரங்கள், காட்டுவிலங்குகள், பிராணிகள் மற்றும் பறவைகள், நீர்வாழ், நிலவாழ் உயிரினங்கள் போன்றவை மக்களோடு இயல்பாகவே இரண்டறக்கலந்திருக்கின்றன என்பதையும் நற்றிணை எடுத்தியம்புகிறது. தமிழர்கள் பண்டைக்காலம்தொட்டே இயற்கையுடன் இயைந்து வாழ்ந்துவரும் சிறப்பிற்குரியவர்கள் என்பதை, அவர்களது அன்றாட வாழ்வில் புல், பூண்டு, செடி, கொடி, மரம் ஆகியவற்றுக்குக் கொடுத்துவரும் முக்கியத்துவத்தின் மூலமும், இன்னபிற பல தொடர்புகளின் மூலமும் அறியலாம். ஆழ்ந்துநோக்கின், அவர்தம் சமூக, பண்பாட்டு நிகழ்வுகளில் பிறப்புமுதல் இறப்புவரை தாவரங்களின் பங்களிப்பு தவிர்க்க இயலாததாகவே இருந்திருக்கின்றது. பச்சிளம்குழந்தை பிறந்ததும் தாய்க்குக் கேழ்வரகு, குழந்தையின் நாவுக்குக் கொம்புத்தேன், பல்முளைக்கப் பச்சைநெல்லில் ஈறுகீறல், சொல்வளர அன்னம் ஊட்டல், பூப்பெய்தினால் பச்சைத் தென்னையோலைக்குடில், மணம்புரிய மலர்மாலை, பாலைக்கோல், புதுமனைக்கு நவதானியம், குடிபுக மாவிலை, பச்சைமஞ்சள், நோய்கண்டால் வேப்பிலை, இறுதியாத்திரைக்குப் பச்சைமூங்கில் பாடை, அதில் பலவண்ண மலர்கள் என எங்கும்

http://Creativecommons.org//license/by/4.0/.

எதிலும் தாவரங்களே தொன்தமிழரின் வாழ்வியலாயிற்று எனலாம். மேலும் "**தாவரவியல்**" எனப்படும் அறிவியலில், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் தெளிவு பெற்றவர்களாக இருந்திருக்கிறார்களெனும் விவரங்கள் நமக்கு எண்ணிலடங்காப் பொருண்மைகளையும், கருதுகோள்களையும் தருகின்றன.

மேலும் தொல்காப்பியர் தமது தொல்காப்பியத்தில், தமிழர் வாழ்வியல் மரபுகளைக் கூறுகின்ற "மரபியல்" பகுதியில், ஓரறிவு முதல் ஆறறிவு உடைய உயிரினங்களை வகைப்படுத்துகிறார். அதில் தாவரங்களுக்கு உயிர் உண்டு என்பதைப் பொருளதிகாரத்தில்,

' '**ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே...**"

எனத்தொடங்கும் நூற்பாவில் - (தொல். பொருளதிகாரம், 1526)

உலகில் தோன்றிய உயிரினங்களை ஆறு பிரிவுகளாகப் பிரித்து, அவற்றின் அறிவு நிலையினையும் ஆறாகவே வகைப்படுத்தியிருக்கிறார். "**கருப்பொருள்**" என்பதைத் தொல்காப்பியம்,

"**தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை,செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ அவ்வகை பிறவும் கரு என மொழிப**" - (தொல் பொ - 964) என்றும் கூறுவதில் 'மரம்' என்ற தாவர இனம் குறிப்பிடப்படுகின்றது. மேலும் அக்காலத் தமிழகத்தை ஆண்ட அரசர்களான, சேர, சோழ, பாண்டியருக்கு, போந்தை எனும் பனம்பூ, ஆர் எனும் ஆத்திப்பூ, வேம்பு எனும் வேப்பம்பூ ஆகியவை மூவேந்தரின் அடையாளப் பூக்களாக விளங்கின. மூவேந்தர்களும் நீண்டகால ஆட்சியிலிருந்தாலும் நிலப்பரப்புகளும் எல்லைகளும் நிரந்தரமாக இருந்ததில்லை.மேலும் பழந்தமிழர்கள் ஐந்து நாடுகளாக இருந்ததாக வரலாற்றாசிரியர்கள் உரைக்கின்றனர்.

நற்றிணையில் தாவரங்களை வணங்கும் மரபு:

சங்க இலக்கியங்களில் கடவுள்தன்மையுடன் சிலமரங்கள் காட்டப்படுகின்றன. நெடுங்காலமாக, அடிமரத்தை உடைய "பெண்ணை" மரத்தில் கடவுள் உறைந்து வருவதாகவும், அம்மரத்தடியில் பொது மக்கள் கூடும் இடம் "**மன்றம்**" என்பதாக,

"**மன்றம் போழும் புன்கண் மாலை**
தம்மொடும் அஞ்சும் நம் இவர் ஒழிய" (நற் - 73)

நற்றிணை குறிப்பிடுகிறது. மேலும், ஆலமரத்தைக் கடவுள் மரம் என்று அகநானூறும், கடவுள் ஆலம் என்று புறநானூறும் கூறுகின்றன. சிவபெருமான் ஆலமரத்தின் கீழ் அமர்ந்துள்ளதை "**ஆலமர் செல்வர்**" எனக் கலித்தொகை கூறுகிறது. கடம்ப மரத்துக் கடவுளை வழிபட்டால் அக்கடவுள் கொடியோரை விரட்டி விலக்கும் என்பது பழந்தமிழரின் நம்பிக்கை. அத்தகு கடவுள் நிலை பெற்ற கடம்பமரம் மன்றத்தில் இருந்தது என்பதை,

"**மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்**
கொடியோர்த் தெறூஉம் என்ப" (குறுந் - 87 - கபிலர்)

என வரும் குறுந்தொகைப் பாடல் மூலம் நாம் அறியலாம். வேங்கைமரத்தையும், வேங்கைமரக் கடவுளையும் வணங்கினால், வயல்கள் விளையும், அவை காக்கப்பெறும் என்பதை,

http://Creativecommons.org//license/by/4.0/.

"எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் கழனி" - (நற் - 216 - மருதன் இளநாகனார்)

எனும் நற்றிணை வரிகள்மூலம் அறியலாம்.

இவ்வாறு பண்டைத்தமிழர் மரபுவழிப் பண்பாடுகளில், மரங்கள் கலந்திருந்ததாலேயே ஐவகை நிலங்களுக்கும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பூக்களின் பெயர்களைச் சூட்டி, ஒவ்வொரு நிலத்திற்கும் மரங்களின் பெயரை வைத்து வணங்கி வந்திருக்கின்றனரென்பது நன்கு புலனாகின்றது.

கோயில்களில் தல விருட்சமாக ஒவ்வொரு வகையான மரத்தையும் வளர்த்தும் பாதுகாத்தும் வந்திருக்கின்றனரென்பதும், தமிழ் மண்ணின் மரங்களான மருதம், இலுப்பை, வன்னி, வேங்கை, கடம்பம், வில்வம், ஆலம், அரசு, வாகை எனும் மரங்கள் போற்றிப் பாதுகாக்கப்பட்டனவென்பதும், மரங்களின் பெயர்களைக் கொண்டு பல ஊர்களும் அழைக்கப்பட்டன என்பதும் அறியவருகின்றன. அரசமரம், பூவரசு மரம், புங்கமரம், வேம்பு போன்றவை நாம் உயிர் வாழ்வதற்குத் தேவையான உயிர்வளியை (பிராணவாயு) அதிக அளவில் வெளியேற்றுகின்றன. மேலும் அரசு, ஆலம் போன்ற மரங்கள் மழை மேகங்களை அதிகம் ஈர்க்கக்கூடியவையாகவும், வேம்பு, புங்க மரங்கள் அதிக அளவில் குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியவையாகவும் இருப்பதால் அவற்றை அதிகமாக வளர்த்து வந்ததும் தெரியவருகின்றது. வேப்பமரம் மக்களின் தெய்வமாகவும், மரத்தின் அடி முதல் நுனி வரை அனைத்தும் பலவித மருத்துவப் பயன்பாட்டிற்கு உரியதாகவும் அக்காலத்திலேயே இனம் காணப்பட்டிருக்கின்றன.

தொகுப்புரை:

இவ்வாறு நம் பழந்தமிழரின் வாழ்வு, தொல்காப்பியர்காலம் முதல் இன்றுவரை காதலும் வீரமும் ஒருங்கே பெற்று, நிலமும் நிலம்சார்ந்த இடமுமாகவே முக்காலத்தும் பொருந்தும் வண்ணம் தொன்மையான வரலாற்றைக் கொண்டதாகக் காணக்கிடைக்கின்றது. மனிதர்களின் இனம் தொடங்கி, கலை, பண்பாடு, குலம், தொழில், கல்வி, சடங்கு, நாட்டின் வளமை போன்றவையும் பாடப்பட்டுள்ளன. இவ்வாறு சங்க இலக்கியமான நற்றிணை மூலமாக, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நிலம் சார்ந்த மண்ணியல் நோக்கிலும், வாழ்வு சார்ந்த சமூகவியல் நோக்கிலும் தமிழர் தெளிவு பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதும், சூழலியலில், உயிருக்கு ஆதாரமாக இருக்கும் இயற்கைவளங்கள் பற்றிய அறிவுடையவர்களாக இருந்திருக்கிறார்களென்பதும் அறியவருகின்றன. இலக்கியவழி, இயற்கைவளத்தைக் காக்கும் அறநெறியைப் பதிவுசெய்த நம் தமிழர் மரபு மிகவும் போற்றத்தக்கது. இதுகாறும் பழந்தமிழர்வழி காக்கப்பட்டுவரும் பழந்தாவரங்கள், இறைவழிபாட்டுக்கு உகந்ததாகவும், உண்ண உணவாகவும், உடுக்க உடையாகவும், பல்லுயிர் வாழுமிடமாகவும், பிணிக்கு மருந்தாகவும், மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்தரு பொருளாகவும், சுற்றுச்சூழலுக்கு நலம் பயப்பவையாகவும் தமிழர்மரபில் இரண்டறக் கலந்து ஒரு மாபெரும் வரலாறாக மிளிர்கின்றது. நாமும் காடுகளை அழிக்காமலும், நீர்நிலைகளில் இரசாயனப் பொருள்களைக் கலக்காமலும்,

http://Creativecommons.org//license/by/4.0/.

பல்லுயிர்களை அழிக்காமலும் பல்விதத் தாவரங்களை வளர்த்து நிலத்தை வளமுடன் வைத்துச் சுற்றுச்சூழலைப் பேணிக்காப்போமென உறுதிகொள்வோமாக.!

அடிக்குறிப்புகள்:

ஆ.வேலுப்பிள்ளை - (ம.ப.) 2004 - தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் - பல.23

துணை நூற்பட்டியல்:

1. எச்.வேங்கடராமன் - 2019 - நற்றிணை மூலமும் உரையும் - டாக்டர் உ.வே.சா.நூல்நிலையம் - சென்னை
2. தொல்காப்பியம் - (தொல்காப்பியர் - பதிப்பு - 2007 - தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம்)
3. புறநானூறு - (பதிப்பு - 2010 - சாரதா பதிப்பகம்)
4. நற்றிணை - ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை - (பதிப்பு - 2003, கௌரா பதிப்பகம்)
5. நற்றிணை - மூலமும் உரையும் - புலியூர் கேசிகன் (1967, 1980)
6. குறுந்தொகை - மூலமும் உரையும் - (பதிப்பு - 2019 - உ.வே.சா.பதிப்பகம்)

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – IV VOLUME - 1
மார்ச்சு-2025 E-ISSN : 2584 - 1238

04. மழைமான் சிறுகதையில் ஆங்கிலத்தின் இடையூறுகள்

கார்த்திக்.க
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த் துறை கேரளப் பல்கலைக்கழகம்,
திருவனந்தபுரம்
karthickk@keralauniversity.ac.in

நெறியாளர்
ஜெயகிருஷ்ணன்.ப,
பேராசிரியர்,தமிழ்த் துறை,
கேரளப் பல்கலைக்கழகம்,திருவனந்தபுரம்

DOI 10.5281/zenodo.15069894.

Abstract :

Tamil is one of the classical languages, which exists in both spoken and written form. Short stories have been unique to Tamil since the time they began to appear. The way in which contemporary writers have approached a new storyline based on the Western tradition with modern ideas is considered to be an important role in the economy of the storytellers, social ups and downs and the influence of Western language. Furthermore, the purpose of this research article is to point out the obstacles of English language words.

Key Words : Short Story - mazhaiyamaan - English Language

முன்னுரை:

சமுதாயத்தில் தகவல் பரிமாற்றத்தின் முக்கியத் தூணாகக்காலத்திற்கு ஏற்றவாறு வெவ்வேறு கட்டங்களாக மொழிமுன்னேற்றமடைந்து வந்திருப்பதை உணரலாம். தமிழின் வளர்ச்சி இலக்கியத்தோடு நின்று விடாமல் நவீன மாற்றம்மேற்கத்தியக் கலாச்சாரத் தழுவலோடமைந்த சிறுகதைகள்,நாவல்கள் மீதான வாசிப்பு நாட்டத்தினை மக்கள் மத்தியில் உணர முடிகிறது.எஸ்.ராமகிருஷ்ணனின் மழைமான் தொகுப்பிலிருந்து மூன்று சிறுகதைகள் தேர்ந்தெடுத்து அவற்றின் ஆங்கிலச் சொற்களின் இடையூறுகளைக் கதையின்வாயிலாக இக்கட்டுரை விளக்குகிறது.

தமிழ் மொழி:

சங்ககாலத்தில் மக்கள் வாழுமிடங்களை நிலத்தின் தன்மைக்கேற்ப ஐந்து வகைகளாகப் பிரித்துள்ளனர், அவை குறிஞ்சி,முல்லை,மருதம், நெய்தல், பாலை என்பனஒவ்வொரு நிலத்திற்கேற்ப அந்நிலத்தில் வாழ்ந்த மக்களின் மொழி, தொழில், உணவு முறைகள் பொருளாதார நிலை அமைந்திருந்தது. செவ்வியல் தமிழ், மணிப் பிரவாளம், தற்காலத் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ், அறிவியல் தமிழ், கணினித் தமிழ், இணையத் தமிழ் என்னும் வடிவங்களும் அவை சார்ந்த மொழி அரசியலறிவும் சமூக விஞ்ஞானத்தின் தவிர்க்க முடியாத தேவைகளாகிவிட்டது. தொல் தமிழர்களின் நிலம்ஆட்சிக்கு உட்பட்ட எல்லைகள் பரந்திருந்தன. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்திற்குப் பின் பாமர மனிதனின் தேவைகளை நிறைவு செய்கின்ற இலக்கியங்கள் தோன்றி வளர்ந்திருந்தன.

காலப் போக்கில் ஆட்சி மாற்றத்தினால் அதிகாரத்தின் கீழ் இயங்கும் நவீன மொழிக் கொள்கையில் மாற்றங்கள் மொழி கலப்பு ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இரண்டு மொழிகள் கலக்கும் போது அவற்றில் ஒன்று வெற்றியடைகிறது மற்றொரு மொழி இறந்து விடுகிறது. எனவே மொழிக்கலப்பானது ஒரு புதிய மூன்றாவது மொழியினை உருவாக்குவதில்லைமாறாகஅவற்றில் ஒரு மொழியே பாதுகாக்கிறது. மேலும் காலனிய

http://Creativecommons.org//license/by/4.0/.

மொழியான ஆங்கிலத்தால் விளைந்த மொழிக் கலப்பு வலுவான மொழித்தூய்மை இயக்கத்துக்குத் தமிழர்களை நெறிப்படுத்தியது.

சிறுகதை ஆசிரியர் எஸ்.ராமகிருஷ்ணன்:

எஸ்.ராமகிருஷ்ணன் இருபத்தைந்தாண்டு காலங்களாக எழுத்துலகில் பயணம் செய்து வருகிறார். எழுத்தாளரினைத் அறியாத தமிழ் ஆர்வலர்களே இருக்க முடியாது பல்வேறு விதமான இலக்கிய படைப்புக்களால் உலகளவில் புகழ் பெற்று அங்கீகாரம் பெற்றவர். ஆங்கிலத்தில் இலக்கியம் பயின்று அதில் முனைவர் பட்ட ஆய்வும் மேற்கொண்டவர். சிறுகதைகள், நாவல்கள், குழந்தைப் படைப்புகள், மொழிப் பெயர்ப்பு நூல்கள்எழுதி வெளியிட்டுள்ளார்.இவரின் இரண்டு வீட்டாரும் தமிழ் இலக்கியங்கள் மற்றும் சமூகச் சிந்தனைகள் குறித்த தீவிர ஈடுபாடும் அக்கறையும் இருந்ததால் படிப்பதற்கும் அதைப் பற்றி விவாதிப்பதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தனர். அடுத்த தலைமுறையினருக்குச் சிந்தனைகளை விதைத்துச் சென்றுள்ளதை எஸ்.ராமகிருஷ்ணன் எழுத்துக்களில் தமிழோடு ஆங்கிலத்தின் ஆதிக்கஊடுறவலை மிகுதியாக வெளிப்படுத்தியுள்ளார். திரைத்துறையில்கதை அமைத்தும் உயர்குடி மக்களைஉயர்த்தி பேசும் வகையில் மேல் குடி மக்களுக்கு கீழ் தான் மற்ற வகுப்பினர் என்னும் முற்போக்கான வசனங்களை தமிழ்த் திரைப்படங்களில் காட்சிகளாக இடம் பெற்றுள்ளது.

கதைச் சுருக்கம்:

கதைச் சொல்லும் மரபு தொன்றுத் தொட்டுவந்த வழக்கம் என்பதைத் தொல்காப்பியர் பின்வருமாறு.

"பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளோடு புணர்ந்த நகைமொழியானும்" என்று உரைப்பார்.

(தொல்:பொ:செய்:173)

எனக் கூறுகிறார். மழைமானில் முதல் கதையாகப் புலப்படாதப்பறவை. கண்ணுக்குத் புலப்படாதப் பறவையினைத் தேடிக் கண்டறிந்து புகைப்படம் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு கலைஞர்கள் வருகின்றனர். மேல் அதிகாரிகளுக்கிடையில் காண்கின்ற இழிநிலை, கிராமப்புற மக்கள் வாழ்க்கையின் ஆதிக்க மனப்பான்மை மற்றும் கிராம பெண்களின் சுதந்திரம், வாழ்வதற்கான சில கட்டுப்பாடுகள், பிற்போக்கான சிந்தனைகள், தனிப்பட்ட வாழ்க்கை நிலையினைக் கூறுகிறார். இரண்டாவதாக உயர்மக்களுக்கிடையே காணப்படும் ஆணாதிக்க மனப்பான்மை, அடிமைத் தனத்தினை விரும்பிக் கேட்டவள் வாயிலாகக் காணமுடிகிறது. மூன்றாவது கதைமழைமான்தேவபிரகாஷத்தினை அலுவலக ஊழியராக அறிமுகப்படுத்தி அவனின் முந்தையக் கால நிகழ்வுகள் மற்றும் நினைவுகள் மகிழ்ச்சியானத் தருணமாக மாற்றியமைக்க முயற்சிக்கிறான் தேவபிரகாஷம். மேலும் கவர்னர் மாளிகைக்குள் சென்று மானினைப் பார்க்கச் சில புரைகளைக் கூறித் தன்னுடைய ஆசையினை நிறைவேற்றி மகிழ்ச்சியடைகிறான். அந்த மானைக் கண்ட தேவபிரகாஷத்தின் முகம் வாடின, மானானது காகிதத்தை உணவாக எடுத்துக் கொண்டதையும் மழைக்காகக் காத்திருப்பதைமானின் உடல் தோற்றம் காட்டிக்கொடுத்தன. அக்காட்சினைப் பார்த்தவன் வருத்தத்துடன் வெளியேறினான். மேலும் பேருந்தில் பயணம் செய்தவன் அருகில்

http://Creativecommons.org//license/by/4.0/.

அமர்ந்திருந்த சிறுவனிடம்நான் மானைக் கண்டேன் அதுவும் நீல நிறத்தில் மிக அழகாக இருந்தது என்பதனை உரையாடல் மூலம் கதையினைஎடுத்துரைக்கிறார்.

சிறுகதை அமைப்பு:

மழைமான் சிறுகதை பத்து கதைகள் ஒவ்வொரு கதைக்கும் தனித் தனி பின்னனியில் விளக்கியுள்ளார் ஆசிரியர்.1.***புலப்படாதப் பறவை***:மேற்குத் தொடர்ச்சிமலை அடுக்குகளில் அமைந்திருக்கும் இந்தியாவின் வர்த்தக நகரமென்று அழைக்கப்படும் மும்பையில் தொடங்கி கிழக்கே ஆந்திராவின் சிறு கிராமத்தில் முடிக்கிறார். வட மேற்குப் பிரதேசமானபம்பாய் நகரத்தில் குறிப்பிட்ட புகைப்படக் கலைஞர்களிடம் தபால் கிடைக்கிறது. அச்செய்தினை அறிந்த படப் பிடிப்பவர்கள் இதுவரை கண்டிராத அறிய வகை தகவல் வந்துள்ளதுவிரைந்து வடகிழக்குப்பிரதேசத்திற்குப்பயணம் செய்கின்றனர்.

உலகப் புகழ்பெற்ற கலைஞர்களின் கண்ணில் புலப்படாத அறிய வகை இரட்டை வரிக் காடையினைத் தேடிச் சென்றடைந்தும் காண்பதற்குப் புண்ணியம் கிடைக்கவில்லை. அவர்களால் இறந்த குருவியினைத் தான்பார்க்க முடிந்தது. அக்காடையின் தன்மையைப் பற்றி அறியாத நபருக்கு ஒரு இரவுப் பொழுதில் இருசக்கர வாகனப் பயணத்திற்கிடையில் சாலையின் ஓரமாக நிற்பதை கவனித்தவர் அப்பறவையைத்அலைபேசியில்படப் பிடித்து முகநூலில் வெளியிட்டு பிரபலமடைந்தார்.மேலும் புகைப்படம் மூலம் அறிய வகை இரட்டை வரிக் குருவியினம் உயிரோடு இருக்கின்றசெய்தியினைக்கலைஞர்கள் தெரிந்து கொண்டனர்.கதையில் வரும் வடகிழக்குப் பகுதிதற்போதைய ஆந்திர மாநிலமாகும், நாடு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கையில் கிராம மக்களின் வாழ்க்கை மற்றும் பொருளாதாரம்இன்றளவும்முன்னேற்றம் பெறவில்லை என்பதைப் பூர்வகுடிகளின் வாழ்வாதாரக்காட்சிகளின் வாயிலாக அறியலாம்.நீண்ட காலமாக தேடி வரும் பறவையினத்தை ஒலிக் கருவிகள் மூலம் காணப்படும் சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது.

2.***விரும்பி கேட்டவள்***: நகரத்தில் வசித்து வரும் அக்கா மகனிடமிருந்து விரும்பிக் கேட்டவள் கதை தொடங்கிப் புகழ்பெற்ற பாடகரின் குரலுக்குப் பெண் அடிமையாகிறாள்.அவரைச் சந்திக்க மனம் ஏங்குகிறது. ஆனால்வீட்டுத் தடையினால் சந்திக்கமுடியாத சூழலில் பாடல் பாடி மனதினை மெருகேற்றி மகிழ்ச்சியடைகிறாள்.

"இன்நிழல் இன்மையான் வருந்திய மப்பிணைக்குத்
தன் நிழலைக் கொடுத்தளிக்கும் கலை"எனவும் கலித்தொகை பாடல் தனிமை வலியினை கூறுகிறது. வசந்தி பார்க்கத் துடித்த பாடகர் சீனிவாசன்.மேலும் தனது அக்கா மகன் சுப்பிரமணியிடம் குரலினைப்பற்றி பேசியும்மற்றும் பாடல் பாடி ஆறுதலடைகிறாள். நீண்ட நாளுக்குப் பின் வசந்திக்கு ஆசிரியர் வேலை கிடைத்தப் பிறகு நகரத்திலிருந்து கிராமத்தில் வீடு பார்த்துதனிமைவாழ்க்கையினைபழக்கப்படுத்தியும் அவளுக்கு துணையாக ஒரு ஒலிநாடாவில் அவளது குரலினைப் பாடிப் பதிய வைத்துச் சிறிது காலம் மகிழ்ச்சியுடன்ஆசிரியர் வேலையினைச் செய்து வருகிறாள்.திடீரென்றுஒரு நாள் மருத்துவரின் தவறானச் சிகிச்சையின் காரணமாகஉடல் நலிவுற்று படுத்தப் படுக்கையாக வாழ்க்கைமாறுகிறது.குறைந்தப்பட்ச மகிழ்ச்சியுடன்அதிக கவலையுடன் அவளது வாழ்க்கை நகர்கிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

இறுதிக் காலம் வரை ஒலி நாடாவினை விட்டு விடவில்லைசீனிவாசனின் பாடலைக் கேட்டு அவள் ஆறுதல் அடைகிறாள்.வசந்தியின் அக்கா மகன் சுப்பிரமணியின்மனைவி மற்றும் குழந்தைகளுடன்இரண்டு முறை சந்தித்துச் செல்கிறான். உறவுகளிடமிருந்து பெண் தனிமையாக வாழ்ந்து வருவதை இன்றைய காலத்துப் பெண்கள் விரும்புகின்றனர். அவளது வாழ்க்கையில் ஏற்படும் விளைவுகளால் இன்ப துன்பங்களை அனுபவித்தும் பின் அவர்களுக்குத் கைத்தாங்களாக யாருமில்லை என்பதனையும் உணர்த்துகிறது. மேலும் இக்கதையானது சோகத்தோடு முடிவுப் பெறுவதை விரும்பி கேட்டவள் வாயிலாகக் காணமுடிகிறது.

3.மழைமான்: மனிதனின் தனிப்பட்ட சுய சிந்தனையில் எழக்கூடிய அற்பக் கனவுகளை மகிழ்ச்சியின் தருணமாக மாற்றி அமைத்துக்கதையின் ஒவ்வொரு நிகழ்விலும் கடந்து செல்கிறார் தேவபிரகாஷம்.பள்ளிப்பருவக் காலத்தில் கரிக்கோலினைச் சீவி விளையாடிக் கொண்டதை நினைவுப்படுத்தி அலுவலகத்தில் நிகழ்வு தொடர்கிறது.

அ.மேலாளர்: தேவபிரகாஷம், பியூன் பழனியை வரவழைத்து ரத்னா பென்சில் ஒன்றை வாங்கிக் கொண்டு வரும்படியாக சொன்னார்.

பணியாளார்: பழனி, சார் அதெல்லாம் இப்போ கிடையாது நட்ராஜ் பென்சில் இருக்கும் வாங்கிட்டு வரவா?

அ.மேலாளர்: அப்படியே பிளேடு ஒன்றும் வேண்டும் என்று சொல்லி இருபது ரூபாயை நீட்டினார்.உயர் அதிகாரிகள் கட்டளையிடும் பணிகளைச் செய்து கொடுப்பதுதான் அலுவலக ஊழியரின் கடமை அதனை மீறி ஏதேனும் கூறினால் எல்லாம் எனக்குத் தெரியும். நான் சொன்ன வேலையை முடித்துவிட்டு வா என குரலினை ஓங்கி பேசுவார்.

பணியாளர்: நான் சீவிக் கொண்டுவரேன் சார்.

அ.மேலாளர்: வேணாம் பழனி, சீவிக்கிடுவேன் நீ பென்சில் பிளேடு மட்டும் வாங்கிட்டு வா" என்றார்.

ஆசிரியர் தமிழ் மொழியுடன் இணைத்து ஆங்கிலச் சொற்களை ஏன் தேர்ந்தெடுத்து எழுதினார். தேவபிரகாஷத்திற்கும் பழனிக்கும் இடையே உள்ள அலுவலகப் பணி வேறுபாடுஇருவரின் உரையாடல்களில் ஆங்கிலத்தின் இடையூறுகள் உள்ளதை சிறுகதை ஆசிரியரின் மொழிப் பற்றினை வெளிப்படுத்துகிறது இவ்வாறு கதையாடல் செல்கிறது.

மேலும் மேற்கு தொடர்ச்சி மலையில்அமைந்துள்ள தேக்கடிக்குக் குடும்பத்தோடு சுற்றுலா சென்று மானைக் கண்டு மகளிடம் உரையாடல் நடைபெற்றது. மானைக் கண்டதும் நம் வீட்டிற்கு அழைத்துச் செல்லாமா?என மகள் கேட்டபோது தேவபிரகாஷம் கொண்டு செல்ல முடியாது அதற்கான சட்டம் இல்லையென வீடு திரும்புகின்றனர். அலுவலகப் பணியில் அமர்ந்திருப்பவனுக்கு மானைப் பற்றியான எண்ணம் எழுந்து எங்கு? எப்படி? பார்க்க முடியுமென சிந்தித்துக் கொண்டிருக்கிறான். அலுவலகத்தில் இருந்த பெரிய டெலிபோன் டைரக்டரியைத் எடுத்து இருபத்திநான்கு மணிநேர இலவச சேவையான ஹலோ சிட்டி எண்ணிற்கு போன் செய்து தகவல்களை சேகரித்தப்பின் மான் இருக்கும் இடத்தினை தெரிந்துகொண்டு அலுவலகத்திலிருந்து விடை பெறுகிறான்.சிறு பிள்ளைகள்

http://Creativecommons.org//license/by/4.0/.

ஏதாவது பொருளைக் கேட்டு அடம்பிடிப்பது போன்றுஅவனது நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

மேலும் அரசு ஊழியர்கள், அரசியல்வாதிகள் இருவருக்கும் ஒரே கொள்கையினைக் கடைபிடிப்பதை உணரலாம்.அறிவுரை வழங்கக்கூடிய கவர்னர்மாளிகைக்குள்ளேசாதாரண மக்கள் நுழைவதற்கு கடும் கட்டுப்பாட்டுடன்நீண்ட நாட்கள் காத்திருக்கின்றனர். அதிகாரிகளுக்கு அனுமதி தேவையில்லை ஏதாவது ஒரு புரைகூறினால் அனுமதி கிடைத்துவிடும்என்ற நோக்கத்தோடு தேவபிரகாஷம்மானைப் பார்க்கச் செல்கிறான்.

"நல் மான்உழையின் வேறுபடத் தோன்றி" என்ற நற்றிணைப் பாடல் மானின் சிறப்பினை உணர்த்துகிறது.இயற்கையின் உறவுகளுடன் விளையாடத் துடிக்கும் விலங்கினை நகரத்தின் மையப் பகுதியில் வைத்து அழகு பார்ப்பது மனிதனின் அற்ப குணத்தைக் காட்டுகிறது. தேவபிரகாஷத்தின் உள் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் எண்ணங்களைச் சிறு சிறு நிகழ்வுகளாக எஸ்.ராமகிருஷ்ணன் எடுத்துச் செல்கிறார்.அரசு அலுவலகத்தின் ஊடாக ஒரு மரம் இருப்பது துரதிஷ்டமானதுஎன்ற மூடநம்பிக்கைச் சிந்தனைகள் நவீனக் காலத்திலும் மக்கள் கடைபிடித்து வருவதைப் பதிவு செய்துள்ளார்.

பொதுவான சொற்கள்

மழை மானில்காணப்படும் ஆங்கிலச் சொற்கள் சுமார் இருநூற்று எழுபத்தைந்து சொற்கள் கதைத் தொகுப்பில் கிடைக்கிறது.தமிழ் உருவமைப்புப் பெற்று ஒலியன் அடிப்படையில் ஆங்கில உச்சரிப்பைப் பெற்றுள்ளது. இத்தகையச் சொற்கள் மக்களிடையே இயல்பாகத் தமிழ் பேசுவது போன்று ஆங்கிலத்தினைத் தூய தமிழென நினைத்துப் பேசி வருவதைக் காணலாம். எல்லாச் சொற்களும் இங்கு தரப்படவில்லை. ஆங்கில மொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்கள் தவிர்க்கப்பட்டு தமிழ் எழுத்தால் மாற்றி அமைக்கப்படும்.

ஆங்கிலச் சொற்கள்		தமிழ் சொற்கள்
டாக்ஸி	-	வாடகை வாகனம்
சர்க்கிள்	-	வட்டம்
பர்ஸ்	-	பணப்பை
ஸ்டேஷன் மாஸ்டர்	-	நிலைய அதிகாரி
டுடோரியல்	-	பயிற்சி நிலையம்
சிட்பண்ட்ஸ்	-	சிறு நிதி நிறுவனம்
ஆபீஸ்	-	அலுவலகம்
டிபன்	-	சிற்றுண்டி
பீலிங்	-	உணர்வு
நியூஸ் பேப்பர்	-	செய்தித்தாள்
மார்க்கெட்	-	சந்தை
பென்	-	எழுதுகோல்
ஜெம் கிளிப்	-	இரத்தினத் துண்டு
பியூன்	-	பணியாள்
ரெவின்யூ ஸ்டாம்ப்	-	வருவாய் முத்திரை

http://Creativecommons.org//license/by/4.0/.

வாஷிங்மிஷன்	-	சலவை இயந்திரம்
கரண்ட	-	நடைமுறையில் / தற்போதைய
எம்டி பாட்டில்	-	பொருளற்ற குப்பி
பவுடர்	-	தூள்
ரோட்டை கிராஸ்	-	சாலையைக் கடக்கவும்
ஐஸ்	-	உறை நீர்
ரிங்	-	மோதிரம்
சிக்னல்	-	முன் அறிகுறி
சினிமா போஸ்டர்	-	விளம்பரத் தட்டி

முடிவுரை

இக்கட்டுரையில் இடையிலுள்ள மொழி வேறுபாடுகளெல்லாம் கால வேறுபாட்டின் காரணமாகமாறிய வழக்காறுகள், பொருளாதாரச் சூழல் அடிப்படையில் அமைகின்றன. இக்காலக் கட்டத்தில்ஏற்பட்டுள்ள மொழி மாறுதல்களை இன்றைய எழுத்தாளர்கள் உணர்ந்தாலும், மாறுதல் பெற எந்தவித முயற்சியும் முன்னெடுக்கவில்லை. நவீனச் சூழலை கடைப்பிடித்து எழுதி வருவதைஎஸ்.ராமகிருஷ்ணன் மழைமான் சிறுகதைத் தொகுப்பின் வாயிலாக அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்:

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை பா.173
2. நற்றிணை, பா. 19
3. கலித்தொகை, பா. 10:16:17
4. தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், தமிழ் மொழி வரலாறு, ப.42
5. ஜே.வி.ஸ்டாலின், தமிழ் தொகுப்பு. மகாராசன்: மார்க்சியமும் மொழியியல் தேசியப் இனப் பிரச்சனைகளும், ப.77
6. சு.இராசாராம், தமிழ் நவீனமயமாக்கம், ப.64

துணை நின்ற நூல்கள்:

1. எஸ். ராமகிருஷ்ணன் : ***எழுத்தே வாழ்க்கை***
தேசாந்திரி பதிப்பகம்
சென்னை - 600093
இரண்டாம் பதிப்பு - 2018

2. சு. இராசாராம் : ***தமிழ் நவீனமயமாக்கம்***
காலச்சுவடு பதிப்பகம்
நாகர்கோவில் - 629001
முதல் பதிப்பு - 2014

3. எஸ்.ராமகிருஷ்ணன் : ***மழை மான் சிறுகதைத் தொகுப்பு***
உயிர்மை பதிப்பகம்
சென்னை - 600 018
இரண்டாம் பதிப்பு - 2012

http://Creativecommons.org//license/by/4.0/.

4. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் : ***தமிழ் மொழி வரலாறு***
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
சென்னை - 600 050
மூன்றாம் பதிப்பு - 2020

5. அரவிந்த் : ***உலகமயமாக்கல் அடிமைத்தளையில் இந்தியா***
விடியல் பதிப்பகம்
கோயம்புத்தூர் - 641 015
மூன்றாம் பதிப்பு - 2014

6. தமிழ் பேரகராதி : மெட்ராஸ் பல்கலைக்கழகம்

http://Creativecommons.org//license/by/4.0/.

05. சமூக அசைவுகளும் வரலாறும்

சு ப. பவ்யா,
முதலாம் ஆண்டு வரலாறு, வரலாற்றுத் துறை,
கொன்சாகா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, காத்தாம்பள்ளம்,
கிருஷ்ணகிரி

முனைவர் ஜா. ஜான் ரெஜி மோள்,
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை,
கொன்சாகா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, காத்தாம்பள்ளம்,
கிருஷ்ணகிரி.

DOI 10.5281/zenodo.15069914.

Abstract :

Social movements are collective actions that seek to bring about change in society. They arise for various reasons such as social problems, political demands, economic ups and downs. The history of social movements is an important part of human civilization. These movements play a vital role in shaping social changes and creating history. This research paper examines the history of social movements and their social impacts. It covers the different types of social movements, their causes, effects and historical significance. This research paper will provide an in-depth understanding of the history of social movements and their social impacts.

Key Words : Social Movement - Economics - History

முன்னுரை

சமூக அசைவுகள் என்பவை சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முயலும் கூட்டு நடவடிக்கைகள் ஆகும் .இவை சமூக பிரச்சனைகள், அரசியல் கோரிக்கைகள், பொருளாதார ஏற்ற தாழ்வுகள் போன்று பல்வேறு காரணங்களுக்காக எழுகின்றன சமூக அசைவுகளின் வரலாறு என்பது மனித நாகரீகத்தின் ஒரு முக்கிய பகுதியாகும் இந்த அசைவுகள் சமூக மாற்றங்களை வடிவமைப்பதிலும் வரலாற்றை உருவாக்கவும் முக்கிய பங்கு வகிக்கின்றன .இந்த ஆய்வு கட்டுரை சமூக அசைவுகள் வரலாறு மற்றும் அவற்றின் சமூக தாக்கங்கள் குறித்து ஆராய்கிறது இது சமூக அசைவுகளின் பல்வேறு வகைகள் அவற்றின் காரணங்கள், விளைவுகள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்த ஆய்வு கட்டுரை சமூக ஆசிரியர்களின் வரலாறு மற்றும் அவற்றின் சமூக தாக்கங்கள் குறித்து ஆழமான புரிதலை வழங்கும்.

சமூக அசைவுகளின் முக்கியத்துவம்

அடிமைத்தனம் சாதி விவகாரம் பாலின சமத்துவம் அரசியல் சுதந்திரம் தொழிலாளர் உரிமைகள் போன்ற பிரச்சினைகளை தீர்க்க உதவுகின்றன.அரசியல் மற்றும் சட்ட மாற்றங்களுக்கு வழிவகுக்கும். மக்கள் விழிப்புணர்வை அதிகரித்து சமத்துவத்தை உறுதி செய்ய உதவுகின்றன .

சமூக அசைவுகளின் வகைகள்

மறுப்பு (Reform) அசைவுகள்

இவை சமூகத்தின் சிறு மாற்றங்களை கொண்டு வர விரும்பும் அமைதியான இயக்கங்கள் பெண்கள் உரிமை இயக்கம் ,சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் .

http://Creativecommons.org//license/by/4.0/.

புரட்சிகர (Revolutionary) அசைவுகள்

மழுமையான மாற்றத்தைக் கொண்டு வர விரும்பும் இயக்கங்கள் இந்திய விடுதலை இயக்கம் ,பகுத்தறிவு கழகம் மற்றும் நீதி சபை இயக்கம்.

எதிர்ப்பு (Resistance) அசைவுகள்

புதிய மாற்றங்களை எடுத்து உருவாகும் இயக்கங்கள் பாரம்பரிய சமூக கட்டமைப்புகளை பாதுகாக்கும் இயக்கங்கள்.

உலகளாவிய சமூக அசைவுகள்

அமெரிக்க சிவிஸ் உரிமை இயக்கம்

- ❖ மார்ட்டின் லூதர் கிங் தலைமையில் நிறவெறியை எதிர்த்து நடந்த போராட்டம்.
- ❖ பெண்கள் வாக்குரிமை இயக்கம்
- ❖ 19ம் நூற்றாண்டில் பெண்கள் அரசியல் உரிமைக்காக செய்த போராட்டம்.
- ❖ சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம்.
- ❖ புவி வெப்பமாதல் ,காடழிப்பு போன்றவற்றை எதிர்த்து நடக்கும் போராட்டங்கள்.
- ❖ சமூக மதிப்புகளில் மாற்றங்களை மாற்றங்களை உருவாக்கும் காரணிகள்
- ❖ கல்வி வளர்ச்சி புதிய சிந்தனைகள் மற்றும் அறிவு பரவல்.
- ❖ தொழில்நுட்ப வளர்ச்சி சமூக ஊடகங்கள் தகவல் பரிமாற்றம்.
- ❖ பெண்கள் முன்னேற்றம் கல்வி வேலைவாய்ப்பு சம உரிமை.
- ❖ உலகமயமாக்கல் கலாச்சார பரிமாற்றம்.
- ❖ அரசியல் சட்ட மாற்றங்கள் மனித உரிமை சமத்துவம்.
- ❖ சமூக இயக்கங்கள் மறுமலர்ச்சி சமத்துவ இயக்கங்கள்.

சமூக மாற்றங்களால் ஏற்படும் விளைவுகள்

- ❖ குடும்ப அமைப்பில் மாற்றங்கள் (கூட்டுக்குடும்பம் முதல் அணுக்கமான குடும்பம் வரை)
- ❖ பாலின சமத்துவம் மற்றும் வேலைவாய்ப்பு மாற்றம் .
- ❖ கலாச்சாரம் மற்றும் மத சகிப்புத்தன்மை.
- ❖ சமூக ஒற்றுமை மற்றும் இன மோதல்கள்.

சமூக மாற்றங்களுக்கு ஏற்ப சட்ட மாற்றங்கள்

- ❖ மகளிர் உரிமை ,கல்வி தொழிலாளர் உரிமைகள்.
- ❖ இன ,மத பாலின சமத்துவம் தொடர்பான சட்டங்கள்.
- ❖ இணைய பாதுகாப்பு தகவல் உரிமை போன்ற புதிய சட்டங்கள்.

அரசியல் மற்றும் பொருளாதார கொள்கை மாற்றங்கள்

- ❖ வர்த்தகவரி, பணவீக்க கொள்கைகள்.
- ❖ அரசு நலத்திட்டங்கள் மற்றும் சமூக நலக் கொள்கைகள்.
- ❖ சுற்றுச்சூழல் பாதுகாப்பு ,தொழில் துறை வளர்ச்சி தொடர்பான கொள்கைகள்.

சமூக பாகுபாட்டில் காரணங்கள் மற்றும் வகைகள்

- ❖ சாதி ,மதம், இனம் ,பாலின பொருளாதாரம் அடிப்படையில் ஆன பாகுபாடு.
- ❖ கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளில் உள்ள இடைவெளிகள் .

http://Creativecommons.org//license/by/4.0/.

- சமூக பாகுபாடு உருவாகும் அரசியல் மற்றும் கலாச்சார காரணிகள்.

தமிழக சமூக அசைவுகள்

- நீதி சபை இயக்கம்சமத்துவத்தை வலியுறுத்தி நடந்த போராட்டம் .
- தமிழ் மொழி பாதுகாப்பு இயக்கம் தமிழ் பண்பாடு மொழியை பாதுகாக்க நடந்த போராட்டங்கள் .
- விவசாயின் போராட்டம் நீர் மேலாண்மை விவசாய கடன் ரத்து போன்ற கோரிக்கைகளுக்காக நடக்கும் போராட்டங்கள் .

சமூக அசைவுகளின் எதிர்காலம்

- சமூக ஊடகங்கள் சமூக அசைவுகளை முன்னோக்கி செல்ல முக்கிய காரணிகளாக இருக்கும்.
- மக்கள் ஆர்வம் அதிகரித்து எதிர்காலத்தில் இன்னும் பல சமூக மாற்றங்கள் ஏற்படும்.
- அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புகள் சமூக அசைவுகளின் விளைவாக மாறும்.

இந்தியாவின் சமூக அசைவுகள்

வங்காள மறுமலர்ச்சி

19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. ராஜா ராமோகன் ராய் போன்றவர்களின் பங்களிப்பால் சதீ போன்ற பழக்கங்களை நீக்கும் முயற்சிகள் நடந்தன.

தொழிலாளர் இயக்கம்

தொழிலாளர்களின் வேலை நிலைகள் ,சம்பளம் ,வேலை நேரம் போன்றவற்ற சிறப்பாக்கும் தொழிற்சாலைகளில் உள்ள கொடுங்கோலத்திற்கு எதிராகவும் பல்வேறு போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன .

மகாத்மா காந்தியின் அசைவுகள்

அகிம்சை மற்றும் சத்தியாகிரகத்தின் வழியாக இந்திய சுதந்திர இயக்கம் மிகப்பெரிய சமூக மாற்றத்தை கொண்டு வந்தது.

தலித் விடுதலை இயக்கம்

பாபா சாகேப் அம்பேத்கர் முன்னிலை வகித்த தலித் உரிமை இயக்கம் சமூக சமத்துவத்திற்காக குரல் கொடுத்தது.

உலகளாவிய சமூக அசைவுகள்

கறுப்பின அழிவுக்கு எதிரான இயக்கம்

அமெரிக்காவில் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் தலைமையில் 1960களில் நடந்த இது வன்முறையற்ற முறையில் கறுப்பின மக்களின் உரிமைகள் மேம்படுத்த முயன்றது.

பெண்கள் விடுதலை இயக்கம்

உலகம் முழுவதும் பெண்களின் கல்வி, வேலை வாய்ப்பு ,வாக்குரிமை உள்ளிட்ட உரிமைகளும் மேம்படுத்த இந்த இயக்கம் துணை நின்றது .

http://Creativecommons.org//license/by/4.0/.

சமூக அசைவுகள் மற்றும் மனக்கட்டுப்பாடு

- என் சிலர் சமூக மாற்றங்களை ஏற்காமல் எதிர்க்கிறார்கள் ?
- மனவியல் ரீதியாக மக்கள் ஏன் ஒரு இயக்கத்துக்குள் ஈடுபடுகிறார்கள்?

பழங்கால சமூக மாற்றங்கள் வரலாற்று ஆதாரங்களின் மூலம் அலசல்

- ரோமபுரம் ஆட்சியில் மக்கள் எழுச்சி .
- சங்க கால தமிழ் சமூக மாற்றங்கள்
- எகிப்திய குடிமக்கள் போராட்டங்கள்.

புதிய குரல்கள் ஒடுக்கப்பட்ட சமூகங்களின் தற்போதைய போராட்டங்கள்

- கடலோர மக்கள் உரிமை
- இடம்பெயர்ந்தவர்களின் உரிமை
- பழங்குடியினர் சமூக பாதுகாப்பு போராட்டங்கள் .

சமூக அசைவுகளையும் எதிர்ப்பும் அதன் அரசியல் விளைவுகளும்

- எந்த அரசியல் அமைப்புகள் சமூக மாற்றங்களை ஆதரிக்கின்றன, எவை எதிர்க்கின்றன?
- மக்கள் எழுச்சிகள் எவ்வாறு ஒடுக்குகிறது?

சமூக அரசியல்களுக்கான நீதிமன்றங்களின் பங்கு

- நீதிமன்றங்கள் சமூக மாற்றங்களை எவ்வாறு உதவி செய்கின்றன.
- மக்கள் நீதிமன்றங்கள் சமூக நீதிகளாக எவ்வாறு செயல்படுகின்றன.
- நீதிமன்றங்கள் சமூக அசைவுகளில் முக்கிய பங்கை வகிக்கின்றன .அவை சட்டங்களை பயன்படுத்தி சமூக மாற்றங்களை ஏற்படுத்துகின்றன .

உதாரணமாக, சமூக வானொலிகள் தேவையை சிவிஸ் சமூகக் குழுக்கள் வலியுறுத்திய போது நீதிமன்றங்கள் தகவல் பெறும் உரிமை அங்கீகரித்ததும் சமூக வானொலிகளையும் வளர்ச்சிக்கு வழிவகுத்தன. மேலும் சமூக அமைப்புகளை மாற்ற முயற்சிக்கும் இயக்கங்களுக்கு நீதிமன்றங்கள் சட்டப் பூர்வ அங்கீகாரம் வழங்குகின்றன.

சமீப கால சமூக அசைவுகள்

- பெண்கள் பாதுகாப்பு மற்றும் பாலியல் தொல்லை எதிர்ப்பு.
- இன அரிப்புக்கு எதிரான இயக்கம் .
- உரிமைகள் போராட்டம் .
- காலநிலை மாற்ற எதிர்ப்பு.

முடிவுரை

சமூக மாற்றத்திற்கான சக்தி வாய்ந்த கருவிகளாக சமூக அசைவுகளும் உள்ளன இவை சமூகத்தில் உள்ள பிரச்சனைகளை வெளிப்படுத்துகின்றன மற்றும் மாற்றத்திற்கான வழிகளை உருவாக்குகின்றன .சமூக அசைவுகளையும் வரலாறு என்பது மனித நாகரீகத்தின் ஒரு முக்கிய பகுதி ஆகும் .மேலும் , இந்த அசைவுகள் எதிர்காலத்திலும் சமூக மாற்றங்களை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கும். சமூக அசைவுகள் சமூகத்தில் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அவை சட்டங்கள் ,கொள்கைகள் மற்றும் சமூக மதிப்புகளை மாற்றலாம் .சில நேரங்களில் அவை புரட்சிகள் மற்றும் சமூக

http://Creativecommons.org//license/by/4.0/.

மாற்றங்களுக்கு வடிவமைப்பதிலும் வரலாற்று உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகித்துள்ளன .சமூக அசைவுகள் சமூக மாற்றத்தின் ஒரு முக்கியமான அங்கமாகும். அவை சமூகத்தில் உள்ள பிரச்சனைகளை வெளிப்படுத்துகின்றன .வழிகளை உருவாக்குகின்றன .சமூக அசைவுகளை பற்றி மேலும் அறிந்து கொள்வது , சமூக மாற்றத்தை செயல்முறையை புரிந்து கொள்ளவும் சமூகத்தின் நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்தவும் உதவும். "இத்தகையான மாற்றங்கள் மக்கள் எழுச்சி, அரசியல் சூழல் போன்ற அசைவுகளால் நாளடைவில் வரலாறு ஆகின்றன".

சான்றுகள்:

1. பண்பாட்டு அசைவுகள் - தொ.பரமசிவன். Publisher: காலச்சுவடு பதிப்பகம் நாகர்கோவில்.
2. அறியப்படாத தமிழகம் - தொ . பரமசிவன். Publisher: காலச்சுவடு பதிப்பகம் நாகர்கோவில்.
3. சமூக அசைவியமும் சமூக கல்வியும் - திருநாவுக்கரசு கமல்நாதன். http://libcat.lib.jfn.ac.lk/cgi-bin/koha/opac-detail.pl?biblionumber=100159&shelfbrowse_itemnumber=159712
4. தமிழ்நாட்டு வரலாறு - தமிழ் இணைய நூலகம்., https://www.tamildigitallibrary.in/book-list-view-book?cid=20&id=jZY9lup2kZl6TuXGlZQdjZM1l8yy&tag=%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AF%81+%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%B1%E0%AF%81
5. சமூக வகுப்பு மற்றும் சமூக அசைவு - கலாநிதி. http://libcat.lib.jfn.ac.lk/cgi-bin/koha/opac-detail.pl?biblionumber=100159&shelfbrowse_itemnumber=159712

http://Creativecommons.org//license/by/4.0/.

06. தமிழர் பண்பாடும் கலாச்சாரமும்

முனைவர் ஜா. ஜான் ரெஜி மோள்
உதவிப் பேராசிரியர் வரலாற்றுத் துறை
கொன்சாகா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
காத்தாம்பள்ளம், கிருஷ்ணகிரி.

DOI 10.5281/zenodo.15069916.

: Abstract

All the cultures of Tamils are very special. If we talk about the special features of Tamils, they are innumerable. Tamils are respected and respected everywhere even today. Tamil culture has always had a special welcome all over the world. Tamil culture, language, music, dance, philosophy of treating guests well, costumes, etc. are the unchanging culture of Tamil Nadu. To study the culture of Tamils in Tamil Nadu, the temples in Tamil Nadu are the first. Tamils have left their own culture, paintings, architecture, dance, music, literary art, etc., with their own unique characteristics.

Key Words : Cultures - Dance - Philosophy

முன்னுரை

"தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு" என்று தமிழரை அடையாளப்படுத்தினார் நாமக்கல் கவிஞர். வேறு எந்த இனத்திற்கும் மொழிக்கும் இல்லாத பெருமை தமிழுக்கும்,தமிழருக்கும் உண்டு. மனித இனம் எப்படி வாழவேண்டும் என்ற வாழ்வியலை கற்றுக்கொடுத்தது தமிழரின் பண்பாடு மற்றும் கலாச்சாரம் ஆகும்.

தமிழர் பண்பாடு

"யாதும் ஊரே யாவரும் கேளிர்,தீதும் நன்றும் பிறர்தர வாரா;"

என்ற கணியன் பூங்குன்றனாரின் வரிகள் தமிழரின் பண்பாட்டை உணர்த்துகிறது. பண்பாடு எனப்படுவது பயிர் விளைகின்ற நிலத்தை உழுது பண்படுத்துவது போல மக்கள் தம் வாழ்க்கையினை நெறிப்படுத்துவது ஆகும்.

**"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்."**

இந்த குறளில்,தமிழ் பண்பாடு அறம் சார்ந்தது என வள்ளுவர் உலகுக்கே எடுத்து கூறுகிறார். தமிழர் பண்பாடு மற்றும் கலாச்சாரம் உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் கருதப்படுகிறது. தொன்மையான வரலாற்றைக் கொண்ட தமிழர்கள், பல்வேறு காலக்கட்டங்களில் தமது தனித்துவமான பண்பாட்டினை நிலைநாட்டியுள்ளனர். மொழி, இலக்கியம், கலை, இசை, நடனம், கட்டிடக்கலை, சமூக மரபுகள், மதச்சார்பு வழிபாடு, உணவு பழக்கவழக்கங்கள் ஆகியவை தமிழர் பண்பாட்டின் அடையாளங்களாக உள்ளன.

தமிழர் மொழியும்இலக்கியமும்

தமிழ் மொழி உலகின் பழமையான மொழிகளில் ஒன்றாகும். இது சங்க காலம் முதல் வளர்ச்சியடைந்து,இலக்கியத்திலும் தொல்லியல் ஆதாரங்களிலும் சிறப்பாக வெளிப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள்

http://Creativecommons.org//license/by/4.0/.

போன்றவை தமிழர் பண்பாட்டின் சிறந்த முன்னோடிகள். தமிழ் மொழி ஒரு திராவிட மொழியாகும். இது உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்றாகும். **தமிழ் சங்க காலம் முதல் தொடங்கி, இன்று வரை வெவ்வேறு காலச்சூழல்களில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது**. தமிழுக்கு தனித்துவமான இலக்கண அமைப்பு, செறிவு வாய்ந்த சொற்கள், வளமான சொல்லாக்கங்கள் ஆகியவை உள்ளன.தமிழ் மொழி **சிலம்புச் செம்மொழி** என்ற சிறப்புப் பட்டத்தைக் பெற்றது. இது ஒரே நேரத்தில் இலக்கிய, மொழிவியல், புவியியல், கலை, கட்டிடக்கலை, சமூகவியல் போன்ற பல்வேறு துறைகளில் தன்னிகரற்ற முத்திரையைக் பதித்துள்ளது.

அற இலக்கியம்

சமூக நன்மை,ஒழுக்கம்,மனித வாழ்க்கையின் உயர்வுக்கான வழிகள் ஆகியவற்றை வலியுறுத்தும் நூல்களை அற இலக்கியம் என்போம். **திருக்குறள்**, **நாலடியார்**, **ஆத்திச்சூடி**, **கொன்றைவேந்தன்** போன்ற நூல்கள் அற இலக்கியத்தின் முக்கியமான பாகங்களாக உள்ளன

தமிழர்கலை, இசை மற்றும் நடனம்

தமிழர் கலையின் முக்கிய கூறுகளில் சிற்பம், ஓவியம், இசை மற்றும் நடனம் அடங்கும். பாரம்பரிய தமிழ் இசை, கர்நாடக இசையோடு வளர்ச்சியடைந்துள்ளது. பரதநாட்டியம் தமிழர்களின் முக்கிய பாரம்பரிய நடனமாகக் காணப்படுகிறது.

தமிழர் கலை

தமிழர் கலை என்பது தொன்மையான வரலாற்றை கொண்டிருக்கும் ஒரேதொரு கலையாகும். தமிழர்களின் கலை மற்றும் கலாச்சாரம் உலகப்புகழ் பெற்றது. தமிழர் கலை பரவலாக சிற்பம், ஓவியம், நடனம், இசை, நாடகம், பொம்மலாட்டம், கைவினைப் பொருட்கள் ஆகிய பல்வேறு வகைகளில் காணப்படுகிறது.

சிற்பக்கலை

தமிழர் சிற்பக்கலை அருங்கலையாகும். பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், விஜயநகரர் போன்ற அரசரின் காலத்தில் சிற்பக்கலை அபரிமிதமான வளர்ச்சி பெற்றது. மாமல்லபுரம், பிரகதீஸ்வரர் கோயில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் போன்றவை தமிழர் சிற்பக்கலையின் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

ஓவியக்கலை

தமிழர் ஓவியக்கலையும் புகழ்பெற்றது. பழனி கோயில், சிதம்பரம் கோயில், அஜந்தா குகைகள் ஆகிய இடங்களில் தமிழர் ஓவியக்கலையின் புகழ் புலப்படும். சங்க காலத்திலிருந்து நாடகங்களுக்காகவும், கோயில்களை அலங்கரிக்கவும் ஓவியங்கள் வரையப்பட்டன.

நடனக்கலை

தமிழர் பாரம்பரிய நடனங்களில் பரதநாட்டியம் மிகவும் முக்கியமானது. இது தஞ்சை மாவட்டத்தில் மிகுந்த வளர்ச்சி பெற்றது. நட்டுவங்கம், அபினயம், கரணங்கள் போன்றவை பரதநாட்டியத்தின் அடிப்படை அம்சங்கள்.

http://Creativecommons.org//license/by/4.0/.

இசைக் கலை

தமிழர் இசைக்கலை குறையாது வளர்ந்து வந்துள்ளது. சங்க காலத்தில் யாழ், பறை, கொம்பு, குடம் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. தமிழிசை மிகவும் வளமானது, இது தென்னிந்திய கருநாடக இசையின் அடிப்படையாக விளங்குகிறது.

தமிழர்கட்டிடக்கலை

தமிழர் கட்டிடக்கலையின் சிறப்பை கோயில்கள் மூலம் காணலாம். தஞ்சை பெரியகோயில் பிரகதீஸ்வரர் கோயில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், ராமேஸ்வரம் கோயில் ஆகியவை தமிழர் கட்டிடக்கலையின் சிறப்புமிக்க உதாரணங்களாகும்.

தமிழர் கோயில்கள்

தமிழர் கட்டிடக்கலையின் முக்கிய பகுதி கோயில்கள் ஆகும். தமிழ்நாட்டில் உள்ள கோயில்கள் புகழ்பெற்றவை. இதில் பிரதானமாக **திருக்கோயில் கட்டிடக்கலை** குறிப்பிடத்தக்கது.

- பல்லவர் கால கட்டிடக்கலையில் மாமல்லபுரம் பாறை கோயில்கள் மற்றும் கஞ்சீபுரம் கோயில்கள் முக்கியமானவை.
- சோழர்கள் கட்டிய பிரகதீஸ்வரர் கோயில் (பெரிய கோயில்), திருவானைக்கா கோயில் போன்றவை உலக பாரம்பரியமாகும்.
- மதுரை மீனாட்சி அம்மன் கோயில், இராமேஸ்வரம் கோயில், திருவண்ணாமலை கோயில் போன்றவை

கோட்டைகள் மற்றும் அரண்மனைகள்

தமிழகத்தில் பல கோட்டைகள் மற்றும் அரண்மனைகள் கட்டப்பட்டுள்ளன.

- சிவகங்கை, செங்க, ராணிப்பேட்டை, செஞ்சிக் கோட்டை ஆகியவை பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டன.
- தஞ்சை அரண்மனை, சிவகங்கைத் தேவர்களின் அரண்மனை, மதுரை நாயக்கர் அரண்மனை ஆகியவை சிறந்த கட்டிடக்கலைக்கு உதாரணமாகும்.

நீர்நிலைகள் மற்றும் அணைகள்

தமிழர் நீர்வள மேலாண்மையில் சிறந்து விளங்கினர்.

- கரிகால சோழன் கட்டிய **கல்லணை** உலகின் பழமையான அணைகளில் ஒன்றாகும்.
- பாண்டியர்கள் மற்றும் நாயக்கர்கள் சிறப்பு வாய்ந்த ஏரிகளை, கால்வாய்களை உருவாக்கினர்.

மாளிகைகள் மற்றும் மடங்கள்

தமிழகத்தில் பல மடங்கள் மற்றும் மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன.

- காஞ்சீபுரம், மதுரை, திருவாரூர் போன்ற இடங்களில் பழமை வாய்ந்த மடங்கள் காணப்படுகின்றன.
- சிவபெருமான், முருகன், விஷ்ணு கோயில்களுக்கு இணையாக ஜைன மற்றும் புத்த மடங்கள் தமிழர் கட்டிடக்கலையின் சிறப்புகளை காட்டுகின்றன.

http://Creativecommons.org//license/by/4.0/.

கட்டிடக்கலையின் அம்சங்கள்

தமிழர் கட்டிடக்கலையில் சிறப்பான சில அம்சங்கள் காணப்படுகின்றன.

- **கோபுரம்:** கோயிலின் முக்கியப்பகுதியாக விளங்கும்.
- **விமானம்:** கருவறைக்கு மேல் அமைந்த உயரமான பகுதி.
- **மண்டபம்:** வழிபாட்டு பகுதி.
- **தீர்த்தக் குளம்:** கோயில் வளாகத்திற்குள் உள்ள நீர்நிலைகள்.
- **வேலைப்பாடுகள்:** சிற்பங்கள், தூண்கள், ஓவியங்கள்.

தமிழர் சமூகம் மற்றும் வாழ்க்கை முறைகள்

தமிழர் சமூகம் ஆண்மை,சமத்துவம்,கல்வி மற்றும் பண்பாட்டு விழுமியங்களை மதிப்பளிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. அவர்கள் பரம்பரிய வேளாண்மையில் சிறந்து விளங்கினர். தமிழ் மரபுகள் மற்றும் உறவுப்பழக்கம் அவர்கள் சமூக ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றன.

குடும்ப அமைப்பு

தமிழர் சமூகம் குடும்பமையத் தன்மையைக் கொண்டது.

- பாரம்பரியமாக **கூட்டுக்குடும்பம்** அதிகளவில் இருந்தது. ஆனால் தற்போது அண்மைக் குடும்பங்கள் அதிகரித்துள்ளன.
- குடும்பத்தில் பெரியவர்கள் மதிப்பு அடைந்துள்ளனர்,அவர்களின் ஆலோசனை முக்கியமானதாக கருதப்படுகிறது.
- திருமணம் ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்பட்டு பல மரபுகள் அனுசரிக்கப்படுகின்றன.

தொழில்கள்

தமிழர் வாழ்க்கை முறையில் தொழில் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது.

- **விவசாயம்** தமிழர் சமுதாயத்தின் முதன்மைத் தொழிலாக இருந்தது. நெல், பருத்தி, கதிர் வரகு போன்ற பயிர்கள் முக்கியமானவை.
- **கைவினைத் தொழில்கள்** - பட்டுப் துணிகள், உலோக வேலைப்பாடுகள், சிற்பக்கலை, மண்பாண்டங்கள் ஆகியவை பெருமை வாய்ந்தவை.
- **தொழில்கள்:** கடலோர பகுதி மக்கள் மீன் பிடித்தல்,உப்பு தயாரித்தல் போன்றவற்றில் ஈடுபட்டனர்.
- **வர்த்தகம்:** தமிழர்கள் சங்க காலத்திலேயே கடல் மூலமான வர்த்தகத்தில் ஈடுபட்டு இருந்தனர். பண்டைய சங்க காலத்திலிருந்து ரோமாபுரி, சீனாஅரேபியா போன்ற , நாடுகளுடன் வாணிபம் செய்துள்ளனர்.

உணவு கலாசாரம்

தமிழர் உணவு கலாசாரம் அதிகளவில் பசுமை உணவுகளை அடிப்படையாகக் கொண்டது.

- **அரிசி** முக்கிய உணவுப் பொருளாகும். சாதம், இட்லி, தோசை, அப்பம் போன்ற உணவுகள் பிரபலமானவை.
- பருப்பு, காய்கறிகள், பழங்கள் உணவின் முக்கிய அங்கங்களாக இருந்துள்ளன.

http://Creativecommons.org//license/by/4.0/.

- தமிழர் பண்டிகைகளில் சிறப்பு உணவுகள் தயாரிக்கப்படும்.
- கடல் பகுதியில் மீன் மற்றும் மற்ற மாமிச உணவுகள் பயன்பட்டன.

சமூக மரபுகள் மற்றும் நம்பிக்கைகள்

தமிழர் சமூக வாழ்க்கையில் பல மரபுகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

- **பண்டிகைகள்:** பொங்கல், தீபாவளி, தமிழ்புத்தாண்டு, கார்த்திகை தீபம் போன்றவை பெரும் உற்சாகத்துடன் கொண்டாடப்படும்.
- **மதச்சார்பு:** தமிழர் சமூகம் பல்வேறு மதங்களை ஒப்புக் கொள்ளும் தன்மையை கொண்டது. முதன்மையாக ர்வம்சம், வைணவம், பௌத்தம், சமணம் போன்றவை இருந்தன.
- **நம்பிக்கைகள்** தமிழர்கள் பாரம்பரிய நம்பிக்கைகளை பின்பற்றினர்.

உடை மற்றும் ஆடை அலங்காரம்

தமிழர் உடை அலங்காரத்திலும் தனித்தன்மை கொண்டவர்கள்.

- ஆண்கள் வேஷ்டி,அங்கவஸ்திரம் அணிந்து வந்தனர்.
- பெண்கள் சேலை அணிந்து,புடவை கட்டும் முறையில் பல்வேறு மாறுபாடுகள் இருந்தன.
- நகைகள் அணிவது பாரம்பரிய மரபாகும். பெண்கள் தொங்கல், தோடுகள், காப்பு போன்றவற்றை அணிந்தனர்.

கல்வி மற்றும் இலக்கியம்

தமிழர் கல்வி மற்றும் அறிவு வளர்ச்சியில் முன்னணி வகித்தனர்.

- சங்க காலத்தில் பாடசாலைகள்; கற்பித்தல் முறைகள் நிலவின.
- புகழ்பெற்ற நூல்கள்: **தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை** போன்றவை.
- கல்வி துறையில் மடங்கள்,பள்ளிகள்,கல்லூரிகள் பெரும் பங்கு வகித்தன.

கலாசாரம் மற்றும் பொழுதுபோக்கு

தமிழர்கள் பொழுதுபோக்குக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர்.

- **நடனம்:** பரதநாட்டியம் மிகவும் பிரபலமானது.
- **இசை:** யாழ், பறை, முரசு போன்ற பழங்கால இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன.
- **நாடகம்:** தெருக்கூத்து, கதை சொல்லல்கட்டபஞ்சாயத்து போன்றவை மக்கள் , பொழுதுபோக்காக இருந்தன.
- **விளையாட்டுகள்:** ஜல்லிக்கட்டு, சிலம்பம், கபடிமல்லுக்கட்டு போன்ற , பாரம்பரிய விளையாட்டுகள் இருந்தன.

தமிழர்மதச்சார்புவழிபாடுமற்றும்பண்டிகைகள்

தமிழர்கள் பல்வேறு மதங்களை ஏற்றுக் கொண்டு வாழ்ந்தாலும், பெரும்பான்மையானோர் வைணவம், முருக வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். தமிழர் பண்டிகைகளில் பொங்கல், தீபாவளி, தமிழ்ப்புத்தாண்டு, கார் திருவிழா போன்றவை முக்கியமானவை.

http://Creativecommons.org//license/by/4.0/.

முடிவுரை

தமிழர் பண்பாடும் கலாச்சாரமும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து,சிறந்து விளங்கிய பண்பாட்டு வடிவமாகத் திகழ்கிறது. இதன் சிறப்பு கூறுகள் உலகெங்கும் பரவியுள்ளது. உலக பண்பாட்டில் தமிழர் கலாச்சாரம் தனி இடத்தைப் பெற்றுள்ளது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இதனைப் பாதுகாக்கவும்,பரப்பவும் புதிய தலைமுறையினர் உறுதியாக செயல்பட வேண்டும்.

சான்றுகள்:

1. கா.வெங்கடேசன், முற்கால தமிழ்நாட்டு வரலாறு, ராஜபாளையம், 2013.
2. கே.கே.பிள்ளை,தென்னிந்திய வரலாறு, சென்னை 2006.
3. கே.என். நீலகண்ட, சாஸ்திரி, தென்னிந்திய வரலாறுசென்னை,1953.
4. ஆ. தட்சிணாமூர்த்திதமிழர் நாகரிகமும் பண்பாடும் ,,சென்னை 2008.
5. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணி, முற்கால சோழர் கலையும் கட்டிடக்கலையும், சென்னை, 1966.
6. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், சென்னை,1975.

http://Creativecommons.org//license/by/4.0/.

07. பண்டைய தொழில்களும் மக்களும்

முனைவர் மு.சத்தியமூர்த்தி,
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
கொன்சாகா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மகளிர்,
காத்தாம்பள்ளம், எலத்தகிரி,
கிருஷ்ணகிரி -635108. கைப்பேசி: 96554 18759
DOI 10.5281/zenodo.15069922.

Abstract :

The Lemurian theory holds that the first human race emerged in Lemuria, located south of South India, and that they are the aborigines of Tamil Nadu. The descendants of the people who lived on the Lemurian continent now live in South India, Sri Lanka, and the East Indies. They share many characteristics, including ethnic identity, physical similarity, and linguistic similarity. The languages spoken by the Maori people, the aborigines of New Zealand, and the people living on the small islands scattered around this island, have a connection with Tamil. In addition, the cult symbols revered by some tribes and clans of the South Indian people, including the 'boomerang', a returning hunting knife thrown by the Kallars, can be found among the aborigines living in Indonesia and Polynesia.

Key Words : Lemurian Land - History - South Indian Studies

முன்னுரை

உலக நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வரலாறு உண்டு. மக்கள் சமுதாயத்தைப் பற்றிய செய்திகள் வரலாற்று நூல்களில் இடம்பெறும். பண்டைய மக்களின் கலைத்திறன் அவர்களுடைய விருப்பு வெறுப்புகள், அவர்கள் புரிந்துக்கொண்ட திருமணங்கள், தொழில்கள் ஆகியவற்றையே வரலாற்று ஆசிரியர்கள் தம் நூல்களில் குறிப்பிடுவது வழக்கமாக இருந்து வந்தது. எனவே பண்டைய மக்களும் அவர்களின் தொழில்களும் பின் வருமாறு காண்போம்.

பண்டைய மக்களின் வாழ்வும் தொழிலும்

தென்னிந்தியாவுக்குத் தெற்கில் அமைந்திருந்த லெமூரியா விற்றான் முதன்முதல் மக்களினம் தோன்றிற்று எனவும், அவ்வினமே தமிழ்நாட்டின் ஆதிகுடிகள் எனவும் லெமூரியக் கொள்கையினர் கருதுவர். லெமூரியக் கண்டத்தில் வாழ்ந்து வந்த மக்களின் வழிவந்தவர்கள் இப்போது தென்னிந்தியாவிலும், இலங்கையிலும், கிழக்கிந்தியத் தீவுகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களிடம் இனவொற்றுமை, மக்கள் உடல்கூறு ஒற்றுமை, மொழி அமைப்பு ஒற்றுமை ஆகியவை பல காணப்படுகின்றன. நியூஜிலாந்தில் வாழும் ஆதிகுடிகளான மேவோரி மக்களும், இத் தீவைச் சுற்றிலும் சிதறுண்டு கிடக்கும் சிறுசிறு தீவுகளில் வாழும் மக்களும் பேசும் மொழிகளுக்கும் தமிழுக்கும் ஒரு தொடர்பு உண்டு. இஃதன்றி, தென்னிந்திய மக்களுள் சில குலத்தினரும் மரபினரும் போற்றும் வழிபாட்டுச் சின்னங்களையும் அவர்களுள் கள்ளர்கள் என்பார் எய்யும் 'பூமராங்' என்னும் மீண்டுவரும் வேட்டைக் கத்தியையும் இந்தோனேசியாவிலும் பாலினீசியாவிலும் வாழும் ஆதிகுடிகளிடம் காணலாம். மேலும் போர்னியா தீவின் ஆதி குடிகமக்களான டையாக்குகளும், ஆனைமலையின் பழங்குடிகளான காடர்களும் மரமேறும் முறை

http://Creativecommons.org//license/by/4.0/.

ஒரேவிதமாக உள்ளது. இக்காடர்களும், தென்னிந்திய ஆதிகுடிகளுள் மற்றோர் இனத்தவரான மலை வேடர்களும் தம் முன் பற்களைத் துணித்துக்கொள்ளும் வழக்கம் ஒன்று உண்டு. மலேசிய நாட்டினரான ஜுகுன்களும் இப் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். மற்றும் தென்னாப்பிரிக்க வாசிகளான நீக்குரோவர்களின் சாயை தென்னிந்திய ஆதிகுடிகள் சிலரிடம் தோற்றமளிக்கின்றது. பண்டைக் காலத்தில் இந் நீக்கிரோவர்களுக்கும், தென்னிந்தியருக்கும், தென்கிழக்கு ஆசியத் தீவினருக்குமிடையே தொடர்ந்த போக்குவரத்தும் இனக்கலப்பும் ஏற்பட்டிருக்க வேண்டும். லெமூரியாக் கண்டம் இருந்ததற்கும், அக்கண்டத்தில் வாழ்ந்த ஆதி மக்கள் வழி வந்தவர்களே தமிழர்கள் என்பதற்கும் மேலே கொடுத்த சான்றுகள் ஆதரவாகக் காட்டப்படுகின்றன. எனினும், தமிழ் மக்கள் லெமூரிய ஆதிகுடிகளின் நேர்வழி வந்தவர்தாமா என்ற ஐயப்பாடு நிகழாமல் இல்லை. இங்கு நாம் கருத்திற் கொள்ள வேண்டிய தொன்றுண்டு. ஐந்துகோடி யாண்டுகளுக்கு முன்பு, அதாவது, கங்கைவெளி யுயர்ந்து லெமூரியா மூழகிப் போம்போது உலகின்மேல் எங்கும் மனித இனமே தோன்றவில்லை. அது தோன்றியதே சில நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான். எனவே, ஐந்து கோடி யாண்டுகட்கு முன்பு லெமூரியர்கள் வாழ்ந்திருந்தனர் என்பதும், அவர்களே தமிழர்கட்கு முன்னோர்களாவார்கள் என்பதும் எவ்வாறு பொருந்தும்?

தமிழர் தமிழகத்திலேயே பிறந்த ஆதிகுடிகள் என்பது லெமூரியக் கொள்கையினரின் முடிவு. இவர்கள் மேலும் ஒன்று கூறுவர். தமிழ் மக்களில் சிலர் நாட்டைவிட்டு வெளியேறிப் படர்ந்து சென்று மத்தியதரைக் கடற்பகுதியில் குடியேறிப் பின்பு பல பழம் நாகரிகங்களை வளர்த்தனர் என்றும் இவர்கள் கூறுகின்றனர். இக் கொள்கைக்குப் பேராதரவு கொடுத்தவர் பேராசிரியர் பி.டி.சீனிவாச ஆய்யங்கார் ஆவார்.

பண்டைய மக்களின் தொழில் முறைகள்

பண்டையத் தமிழர்கள் சோம்பித் திரிந்தவர்கள் அல்லர். உழைத்து உழைத்து வாழ்க்கையில் இன்பம் காணுவதிலேயே கண்ணுங் கருத்துமாக விளங்கினார்கள். அவர்கள் மலைகளுடனும், காடுகளுடனும், கடலுடனும் கலந்து உறவாடினார்கள். அதுமட்டும் அல்லாமல் கிரீஸ், ரோம், எகிப்து முதல் கிழக்கே சீனம் வரையில் கடலோடிப் பிழைத்தார்கள் என்பது அவர்களின் உழைப்பையும் வணிகத்தையும் நிலைநாட்டுகிறது.

ஔவையாரின் சொல்லிற்கிணங்க பண்டைய மக்கள் கடல் கடந்து வாணிபம் செய்தார்கள் என்பது நமக்கு புலனாகிறது. ‘திரைகடலோடியும் திரவியம் தேடு’ என்பது மூதுரை காலத்தால் பிற்பட்டதாயினும் பழந்தமிழரின் வாழ்க்கைப் பண்பாடுகளுள் ஒன்றாக இது விளங்குகிறது. அவ்வகையில் பண்டைய மக்கள் அவர்கள் வாழ்ந்த நிலங்களை அடிப்படையாக வைத்தே தொழில்களை மேற்கொண்டு வந்தார்கள் என்பதை நாம் பின்வருமாறு அறியலாம்.

பெரும்பான்மையான மக்கள் சிற்றூர்களில் அவரவர்க்குரிய தொழில்களைச் செய்துகொண்டு வாழ்ந்து வந்தனர். அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நாற்பெரும் பிரிவினர் சமூகத்தின் மேல்தளத்தில் இருந்துள்ளனர். இவர்களைத் தவிரச் சமூகத்தின் நல்வாழ்வுக்கு உதவும் தொழில்களைச் செய்த பல்வேறு தொழில் பிரிவினர்

http://Creativecommons.org//license/by/4.0/.

இருந்துள்ளனர். குறிஞ்சி நிலத்தவர் குறவர் என்றும், முல்லை நிலத்தவர் ஆயர் என்றும், மருத நிலத்தவர் உழவர் என்றும், நெய்தல் நிலத்தவர் பரதவர் என்றும் பெயர் பெற்றனர். பாலை நிலத்தில் எயினர் என்னும் வகுப்பார் வாழ்ந்துள்ளனர். தச்சர், கொல்லவர், குயவர், வண்ணார், நெசவாளர், உமணர், பறையர், பாணர், துடியர், கடம்பர், வேட்டுவர், கணியர், பரத்தையர் முதலான பல வகுப்பாரும் வாழ்ந்துள்ளனர்.

தச்சுத் தொழில்

தமிழ்நாட்டுத் தச்சர்கள் மக்கட்கு வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்களையும், வண்டிகளையும், தேர்களையும் செய்து கொடுத்தனர். நால்வகைப் படைகளில் தேர்ப்படையும் ஒன்றாக விருந்ததால், தேர் செய்வது அன்றையத் தச்சர்களின் தலைமையான கடமையாகவிருந்தது. அதியமானின் வலிமையைக் கூறவந்த ஔவையார்

“வைகல் எண்டேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே” (புறம் 87)

என்று பாராட்டினார்.

கொல்லுத் தொழில்

தமிழர் உலோகத் தொழிலில் மிகவும் மேம்பட்டிருந்தனர். இரும்பு செய் கொல்லரும் பொன் செய் கொல்லரும் தனித்தனியே பேசப்படுகின்றனர். போர்கள் நிறைந்த அக்காலத்தில் வாளும் வேலும் பிற போர்க்கருவிகளும் செய்ய எண்ணற்ற கொல்லர்கள் தேவைப்பட்டிருப்பர். வெயிலில் காய்ந்து வெம்மையேறிய பாறையினை ‘உலைக் கல்லன்ன பாறை’ என்று புலவர் பேசினர். மகளிரின் துன்பப் பெருமூச்சிற்கு ‘ஊதுலைக் குருகினை’ - உவமையாகக் கூறியுள்ளனர். அதியமானின் படைக்கலங்கள் கங்ககக சசசிதைந்தும் நுனி மழுங்கியும், ‘கொற்றுறைக் குற்றில்லத்தில்’ கிடந்ததாக ஔவையார் பாடலில் அமைந்துள்ளது.

“கருங்கைக் கொல்லன் இரும்பு விசைத்து எறிந்த
கூடத் திண்ணிசை”(பெரும்பாண். 437-439)

மட்பாண்டத் தொழில்

பண்டை நாளில் பெரும்பான்மையான மாந்தர் மட்பாண்டங்களையே பயன்படுத்தினர். சமைத்தலுக்கு மட்டுமின்றி உடல்களைப் புதைப்பதற்கும் தாழிகள் தேவைப்பட்டன. வேட்கோவர்கள் “கலஞ்செய்கோ” எனப்பட்டனர். மண்பாண்டம் செய்யப் பயன்பட்ட கருவியும் அறியப்படுகிறது. “அச்சுடைச் சாகாட்டு ஆரம்” (புறம் 256) என்பது காண்க. பெரிய சூளைகளில் பானைகளும் பிற கலன்களும் சுடப்பட்டன.

“இருள் திணிந் தன்ன குரூஉத்திரள் பரூஉப்புகை
அகலிரு விசும்பின் ஊன்றும் சூளை”(புறம் 228)

நெய்தற்றொழில்

நெசவுத் தொழிலில் பண்பட்ட பழம்பேரினங்களில் தமிழினம் தலையாயது. தமிழ்நாட்டு ஆடை கட்கு வெளிநாடுகளில் நல்ல மதிப்பிருந்தது. பருத்தி, பட்டு, உரோமம் முதலியவற்றால் ஆடைகள் நெய்யப்பட்டன. ஆடைகள் பாலாவி, மூங்கில் தோல், பாம்புரி, எண்ணெய் நுரை ஆகியவைபோல் இருந்தன. கண்ணக்குப் புலப்படாத நுண்ணிய

http://Creativecommons.org//license/by/4.0/.

இழைகளால் நெய்யப்பட்ட ஆடைகட்கு வண்ண மூட்டப்பட்டது. பல பூ வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. பெரிய நகரங்களில் காருகர் இருக்கைகள் தனியே இருந்தன. ஆடைகளின் ஓரங்களில் குஞ்சங் காட்டும் கலைஞர் இருந்தனர். ஆடைகளைப் புலைத்தியர் வெளுத்துக் கஞ்சி தோய்த்து மடித்தனர்.

வண்ணார்

ஆடைகளை வெளுக்கும் வண்ணார்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. வண்ணாருக்குக் 'காழியர்' என்னும் பெயர் வழங்கிற்று (அகம் 89), வண்ணாரப் பெண் 'புலைத்தி' எனச் சுட்டப்படுகிறாள். இதனால் அன்று இவர்கள் புலையர்களோடு ஒத்தவர்களாகக் கருதப்பட்டமை தெளிவாகும்.

"பசைவிரல் புலைத்தி நெடிதுபிசைந் தூட்டிய
பூந்துகில் இமைக்கும் பொலன்காழ் அல்குல்" (அகம் 387)

என்னும் குறிப்பால் ஆடையை ஒரு வகைப் பசையிட்டுக் காயவைத்தமை புலனாகும்.

உமணர்

உமணர் என்னும் சொல் உவர் மண்ணர் என்பதன் திரிபாகலாம். இவர்கள் உப்பினை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு ஊர் ஊராகச் சென்று வணிகம் புரிந்த இனத்தோராவர். இவர்களின் வாழ்வு பற்றிப் பெரும்பாணாற்றுப் படையும் சிறு
பாணாற்றுப் படையும் விரிவாகச் சங்க காலத் தொழிற்பிரிவினரும் சமூக அமைப்பும் கூறுகின்றன. வீட்டுச் சாமான்கள் அனைத்தையும் வண்டிகளில் ஏற்றிக்கொண்டு ஊர் ஊராக உப்பினை விலை கூறி விற்று வாழ்ந்தனர். உமணப் பெண்ணே வண்டியை ஓட்டிச் சென்றாள். ஆடவர்கள் மாடுகளைத் தாம்பில் பிணித்து ஓட்டிக்கொண்டு நடந்து செல்வர். மாடுகள் பயனற்றுப் போகும்பொழுது நடுக்காட்டிலேயே அவற்றை விட்டுச் சொல்வாராம். வழியில் கல்லடுப்பிலே உணவு சமைத்து உண்பர். எப்போதும் சேம அச்சினை ஆயத்தமாக வைத்திருப்பர். உமணப் பெண்கள் தலையில் உப்பினைச் சுமந்து

"நெல்லும் உப்பும் நேரே ஊரீர் கொள்ளீரோவெனச் சேரி
தொறும் நுவலும் இயல்பினராவர்"(அகம் 390)

பாணர், பறையர், துடியர், கடம்பர்

பாணர், பறையர், துடியர், கடம்பர் என்பார் ஒரு சேரப் புலையரென்று வழங்கப்பட்டனர்.

"பாணன், பறையன், துடியன், கடம்பன் இந்நான் கல்லது குடியும் இல்லை"(புறம் 335) என்று இவர்களைப் போர்ச் செயலோடு தொடர்புற்ற குடிகளாக ஒரு புறச் செய்யுள் பேசுகின்றது.இவர்கள் தொன்மையான குடிகளாகக் கருதத் தக்கோராவர். பறையை முழக்கியவன் பறையன் என்றும்,துடி கொட்டுபவன் துடியன் என்றும் அறியப்பட்டனர் எனலாம். கடம்பன் என்பதன் பொருள் விளங்கவில்லை. பாணர் என்பார் யாழ் மீட்டி இசை பாடும் இயல்பினராவர். இவர்கள் நாடோடிகளாய் மன்னர்களையும் வள்ளல்களையும் நாடிச் சென்றனர். இவர்கள் பேசப்படுமிட மெல்லாம் பசியும் உடன் பேசப்படுகிறது. எனவே இவர்கள் வறுமையில் வாடினர் எனலாம். வள்ளல்கள் 'பாண்பசிப் பகைஞர்' என்று பாராட்டப்பட்டனர். வள்ளல்கள் இறந்த போது இவர்கள் பெரிதும் துன்பத்திற்கு ஆளாயினர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

இவர்கள் வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டு ஆற்றுப்படையென்றொரு பாடல் வகையே தோன்றியுள்ளது.

குறிஞ்சி நிலக் குறவர்கள்

குறுஞ்சி நிலமக்கள் கு(ன்)றவர்களாவர். இவர்கள் பெரும்பாலும் வேட்டுவர்களே. இவர்கள் கானவர் என்றும் பெயர் பெறுவர். பெண்பாலார் குறத்தி, கொடிச்சி எனப்பட்டனர். இவர்கள் தினையை விதைத்து உண்பர். பரண்களைக் கட்டி அவற்றின் மேல் ஏறி நின்று கவண் வீசி விலங்குகளையும் பறவைகளையும் வெருட்டுவர்.

"புலத்துப்புனிறு போகிய புனஞ்சூழ் குறவர்
உயர்நிலை இதண மேறிக் கைபுடையூஉ
அகன்மலை யிருமபிற் றுவன்றிய யானைப்
பகனிலை தளர்க்கும் கவணுமிழ் கடுங்கல்"-மலைபடு. 203-206

மலை நிலத்துக் குறவர்கள் தாம் வேட்டையாடிய உடும் பிறைச்சி, கடமானிறைச்சி, பன்றியிறைச்சி முதலியவற்றை உண்டனர். தேக்கள் தேறலை மூங்கிற் குழாயில் இட்டு அருந்தினர். மேலும் தாமே சமைத்த நெல்லால் ஆகிய கள்ளையும் உண்டனர். மூங்கிலரிசியால் சமைத்த உணவைப் பலாக்கொட்டை மாவோடு கலந்து உண்பர் (மலைபடு. 174-183).

இவர்கள் வாழ்ந்த ஊர் சிறு குடி என்றும் குறிச்சி என்றும் பெயர் பெறும்.

"மழை விளையாடும் குன்றுசேர் சிறுகுடி" (குறுந் 108:1)

இவர்கள் மலைவாழ் தெய்வமாகிய முருகனை வழிபட்டனர். இதனைத் திருமுருகாற்றுப்படையால் அறியலாம்.

நெய்தல் நிலப் பரதவர்

இவர்களை நுளையர். பரதவர், வலைஞர் எனப் பலவாறு அழைத்தனர்.'நுளைமகள்' என்னும் சொல் சிறு பாணாற்றுப்படையில் இடம் பெறும் (சிறுபாணா 156-58) இவர்கள் படகுகளில் ஏறி மீன் பிடிக்கச் சென்றனர் (பட்டி. 111-112, புறம். 24 : 3-4 குறுந்.304: 1-4). மீன் பிடிக்க வலைகளைப் பயன்படுத்தினர்.

"வள்ளை நீக்கி வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்"(மதுரைக் 255-56)

பரதவர்கள் சினைச்சுறவின் கோட்டினை நட்டு வணங்கினர். உவா நாட்களில் கடல் கொந்தளிக்கும் ஆதலால் அன்று மீன்பிடிக்கச் செல்லாது மடிந்திருப்பர்; தாழை மடலைச் சூடிக்கொள்வர், பனங்கள்ளினை அருந்துவர். புனலில் மூழ்கி மகிழ்வர்; அலவனாட்டியும், திரையுழக்கியும், பாவை சூழ்ந்தும் பகற்பொழுதில் மகிழ்வர் (பட்டினப். 86 - 101).பரதவப் பெண்கள் மீனுணங்கலைக் காவல் செய்வர். மீன்களைக் கூடைகளில் எடுத்துச் சென்று விற்று நெல்லைக் கொண்டு வருவர்.

மருதநில உழவர்

சங்ககாலத்தில் உழவே தலைமையான தொழிலாக விளங்கிற்று. மன்னரின் வெற்றி உழவரின் கலப்பையையே நம்பியிருந்தது. "பொருபடை தரூஉம் கொற்றமும் உழவர் ஊன்றுசால் மருங்கின், ஈன்றதன் பயனே" (புறம், 35) என்று வெள்ளைக்குடி நாகனார்

http://Creativecommons.org//license/by/4.0/.

புகழ்வார். திருவள்ளுவர் உழவுக்கு எனத் தனியதிகாரம் அமைத்தார். உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்றும், உழவினார் கைமடங்கினால் உலகைத் துறந்த துறவிகட்கும் நிலையில்லை என்றும்,பல குடை நீழலும் தம் ஒருகுடைக் கீழ்க் காண்பார் உழவர் என்றும் கூறிய அவர் பயிர்த்தொழில் நுட்பங்கள் பலவற்றையும் குறிப்பிடுகின்றார். ஏரினும் எருவிடலும் களையெடுத்த பின் நீர்பாய்ச்சுவதனினும் அதனைக் காத்தலும் மிகவும் நன்று என்று கூறுகின்றார். மேலும் தொடியளவு புழுதியைக் க:சு அளவாகுமாறு காய விட்டால் பிடியெருவும் இடவேண்டுவதில்லை என்கிறார். மேலும் உழவன் நிலத்தைக் கண்காணிக்காவிடில் இல்லாளைப்போல ஊடி விளைவினைத் தராது போய்விடும் என்கிறார்.

முடிவுரை

பண்டைய மக்கள் லெமூரியாவில் தோன்றி நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டனர். தனக்கான ஒரு துணையை ஏற்படுத்திக்கொண்டு ஓர் இடத்தில் நிலையான வாழ்க்கை வாழத்தொடங்கினான். பின் அவரவர் நிலங்களுக்கு ஏற்றவாறு (இருப்பிடம்) தொழில்களை மேற்கொண்டனர். பொருளாதாரம் காரணமாகவும் தன் சூழ்நிலையின் காரணமாகவும் ஆங்காங்கு இடம்பெயர தொடங்கினர். அதன் மூலமாகவே எல்லா நாடுகளிலும் தமிழ் இனம் பெருகளாயிற்று அது மட்டும் அல்லாமல் வாணிப ஏற்றுமதி இறக்குமதி பெருகலாயிற்று இவ்வாறு மனித இனம் தோன்றியதிலிருந்து அவர்களின் வாழ்வு, விருப்பு, வெறுப்பு, திருமணங்கள், சடங்குகள், தொழில்கள் அனைத்தும் இன்று வரை மேன்மேலும் பெருகிக்கொண்டு வளர்ந்து வருவதை காணமுடிகிறது.

மேற்கோள் நூல்கள்

- டாக்டர் கே.கே.பிள்ளை, தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113.
- டாக்டர் அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப் பதிப்பகம் - சென்னை - 600 005.
- டாக்டர் மா.இராசமாணிக்கனார், தமிழக வரலாறும் பண்பாடும், சாரதா பதிப்பகம், சென்னை - 600 014.

http://Creativecommons.org//license/by/4.0/.

08. பழந்தமிழரின் நிலமும் வரலாறும்

ச. லித்திக்கா,
முதலாம் ஆண்டு வரலாறு, வரலாற்றுத் துறை,
கொன்சாகா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, காத்தாம்பள்ளம்,
கிருஷ்ணகிரி

பேரா.ச.பூபாலன்,
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை,
கொன்சாகா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, காத்தாம்பள்ளம்,
கிருஷ்ணகிரி.

DOI 10.5281/zenodo.15069939.

Abstract :

The Tamil language that tells the land and history of the ancient Tamils is literature during the Sangam period. Various books like grammar have also been written in Tamil literature. Many stories have been told in the books like Agasthiyam, Tolkappiyam, Pathinen Merkanakku, Pathinen Kilakkanakku. There is a lot of evidence like the news given by the Sangam books during the Sangam era, Sangam era land records, Sangam era kings, Sangam era allies, Sangam era flowers, Sangam era poets, Sangam era country people games. Discrimination based on land is also a land record.

The history of the Tamils is very ancient. It is about 2000 years ago. The Tamils called their land Tamil Nadu. The land includes the present Tamil Nadu, Puducherry, Kerala, Karnataka and Sri Lanka. The history of the ancient Tamils was ruled by many empires and features.

Key Words : Sangam Periods - Tamilans' Land - Evidence

முன்னுரை

பழந்தமிழரின் நிலத்தையும் வரலாற்றையும் கூறும் தமிழ் மொழி சங்க காலத்தில் இலக்கியம். இலக்கணம் போன்ற பல்வேறு நூல்களும் எழுதியுள்ளனர் தமிழ் இலக்கியத்தில் அகத்தியம், தொல்காப்பியம் , பதினெண்மேற்கணக்கு ,பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என பல செய்திகளை கூறியுள்ளது. சங்கநூல் தரும் செய்திகள் போன்று சங்கம் மருவிய காலத்தில் சங்க கால நிலத்திணைகள், சங்ககால மன்னர்கள், சங்க கால கூட்டாளிகள் சங்ககால மலர்கள் சங்கம் சங்ககாலப் புலவர்கள் சங்ககால நாட்டு மக்கள் விளையாட்டுகள் போன்ற அதிக சான்று இருக்கின்றன . நிலத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டும் பாகுபாடு நிலத்திணை.

தமிழர்களின் வரலாறு மிகவும் பழமையானது .இது சுமார் 2000 ஆண்டுகளுக்கு முந்தையது. தமிழர்கள் தங்கள் நிலப்பரப்பை தமிழகம் என்று அழைத்தனர் .நிலம் தற்போதைய தமிழ்நாடு ,புதுச்சேரி ,கேரளா ,கர்நாடகா மற்றும் இலங்கை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. பழந்தமிழரின் வரலாறு பல பேரரசுகள் மற்றும் அம்சங்களால் ஆளப்பட்டது. அவை தமிழ் மொழி கலாச்சாரம் மற்றும் அரசியலை வளர்த்தன இதைப் பற்றி கீழ்க்கண்ட கட்டுரையில் காண்போம்.

சங்ககாலத்தில் இருந்து ஐவகை நிலங்கள்

குறிஞ்சி

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி திணையாகும். உரிப்பொருள் புணர்களும் புணர்தல் நிமித்தமும் ஆகும் .குறிஞ்சி என்பது தமிழ்நாட்டில் உள்ள ஐந்து வகையான

http://Creativecommons.org//license/by/4.0/.

நிலங்களில் ஒன்றாகும். தொல்காப்பியம் குறிஞ்சி நிலத்தை பற்றி விவரிக்கிறது. இந்த நிலத்தில் வாழும் மக்கள் வேட்டையாடுதல் மீன்பிடித்தல் போன்ற தொழில்களை செய்து வாழ்கின்றனர். குறிஞ்சி நிலத்தின் தனித்துவமான அம்சங்கள் அமைந்துள்ளது. குறிஞ்சி நிலம் தமிழ்நாட்டின் மிக உயரமான மலை பாங்கான பகுதிகளை கொண்டுள்ளது .இக்குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் உணவு வகைகள், தானிய வகைகள், காய்கறி ,பழங்கள், பால் வகைகள், மாமிச வகைகள் , கடல் உணவு வகைகள் ஆகும்.

(எ.கா)

அவரைப் பொருந்திய பைங்குரல் ஏனல்
கவரி கடமா கதூஉம் படர்சாரல்
கானக நாட ! மறவல் வயங்கிழைக்கு
யான் இடை நின்ற புணை ...

முல்லை (திணை)

முல்லை என்பது பண்டைத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றாகும். காடும், காடு சார்ந்த இடங்களும் முல்லை நிலமாகும். செம்மண் பார்த்திருந்தால் முல்லை நிலமானது செம்புலம் எனவும் அழைக்கப்படுகிறது. இந்நிலம் முல்லை மலரைக் கழுவில் பெயரிடப்பட்டது.

"மாயோன் மேய காடுறை உலகமும்"

எனத் தொல்காப்பியம் முல்லை பற்றிக் கூறுகிறது.

முல்லை நிலத்தின் பொழுதுகள் கார் என்னும் பொழுதும், மாலைஎனும் சிறுபொழுதும் முல்லை நிலத்திற்குரிய பொழுதுகளாகும். முல்லை நிலமக்களின் தொழில் கால்நடை வளர்ப்பு, உழவுத்தொழில் செய்தல், ஏறுதழுவுதல் விளையாடுதல்.

(எ.கா)

நனந்தலை உலகம் வளைஇ, நேமியொடு
வலம்புரி பொறித்த மா தாங்கு தடக்கை
நீர் செல நிமிர்ந்த மாஅல் போல,
பாடு இமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி ...

மருதம்

மருதம் என்பது பண்டைத் தமிழகத்தில் பகுத்தறியப்பட்ட ஐந்து வகை தமிழர் திணைகளில் ஒன்றாகும். வாயிலும் வயிறு சார்ந்த இடமும் மருது என அழைக்கப்பட்டது. இதனால் மருத நிலத்தில் வாழ்ந்த ஒரு உழவு தொழில் புரிபவர் மருத நிலத் தலைவர்கள் வேந்தன் மகிழ்நன் ஊரின் கிழவன் என்றும் வேளாண்மை செய்யும் பொருட்கள் ஊரின் கிழவன் என்னும் வேளாண்மை செய்யும் பொருட்கள் வேளாளர் என்று அழைக்கப்பட்டனர். மருத நிலத்தின் கடவுள் இந்திரன்.

"ஏனோர் பாங்கிலும் எண்ணுங்
காலை ஆன வகைய திணை நிலை
பெயரே" (தொல். பொருள் - 968)

http://Creativecommons.org//license/by/4.0/.

மருத நிலத்தின் பொழுதுகள் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் மருத நிலத்துக்குரிய பொழுதுகள் ஆகும்.

நெய்தல்

நெய்தல் நிலம் என்பது பண்டைத் தமிழகத்தில் பகுத்தறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத்தினிகளில் ஒன்றாகும். கடலும் கடல் சார்ந்த இடங்களும் நெய்தல் என அழைக்கப்படுகின்றன.

"வருணன் மேயப் பெருமணல் உலகமும்"

என தொல்காப்பியம் இதைப்பற்றி கூறுகிறது.

நெய்தல் மலரில் குப்பங்கல்களில் பூக்கும் உவர் நீர் மலர் நெல்வயலில் பூக்கும் நன்னீர் மலர் என இருவகை உண்டு.

நெய்தல் நில மக்களின் தொழில் மீன்பிடித்தல், மீன் உலர்த்தல், உப்பு உலர்த்தல், உப்பு வீற்றல் ஆகும் உணவு மீன் ,உப்பு விட்டு பெற்ற உணவுப் பொருள் .

(எ.கா):

"கருத்தில்லா கவிதை
உப்பில்லா உணவே ! "

பாலை

பாலை என்பது பண்டைத் தமிழகத்தில் பண்பின் அடிப்படையில் பகுத்தறியப்பட்ட ஐந்து வகை தமிழ் நிலத்தினைகளில் ஒன்றாகும். குறிஞ்சி முல்லை ஆகிய நிலத்திணைகளுக்கு இடையில் அமைந்த தாழ் நிலப்பகுதி பாலையாகும். அதாவது காடாகவும் இல்லாமல் மலையாகவும் இல்லாமல் இரண்டும் கலந்து மயங்கி வெப்பம் விகுதிகள் திரிந்த சுரமும் சுரம் சார்ந்த இடமும் பாலை நிலம் ஆகும். பாலை நிலத்தலைவர் காளை விடலை என அழைக்கப்பட்டனர். பாலை நில மக்கள் மறவர் என்றும் எய்னர் என்றும் அழைக்கப்பட்டனர். பாலை நில மக்களின் தொழில் போர் தொழில் செய்தல், வேட்டையாடுதல், பாலை நிலத்தின் பொழுதுகள்.

தமிழர்களின் தோற்றம்

தமிழ் தோற்றம் பற்றி நான்கு கருத்துக்கள்கள் உள்ளன. தமிழர் கூறும் குமரிக்கண்டத்தில் இருந்து வந்தார்கள் என்பது ஒரு கருதுகோள் பழந்தமிழர் தென்னிந்தியாவின் பழங்குடிகள் என்பது இன்னொரு கருதுகோள் மூன்றாவது கருத்துக்கள் தமிழர்கள் ஆதியில் ஆப்பிரிக்காவில் இருந்து அரேபிய கடல் ஊடாக தென்னிந்தியா வந்தோரின் வழித்தோன்றல்களை என்கிறது . தமிழர் மத்திய ஆசியா,வட இந்தியா நிலப்பரப்புகளில் இருந்து காலப்போக்கில் தென் இந்தியா வந்தனர் என்பது மற்ற கருதுகோள். எப்படியாயினும் தமிழ் இனம் தொன்மை வாய்ந்த மக்கள் இடங்களில் ஒன்றாகும் .மேலும் தமிழர்களின் வரலாற்று பற்றி பின்வருமாறு காண்போம்.

தமிழர்களின் வரலாறு

தமிழர் என்பவர் தமிழை தாய்மொழியாக கொண்டவர்களாவர். அவர் மிகப் பழகி தமிழ் சமுதாயங்கள் தென்னிந்திய இலங்கை சேர்ந்தவர்கள் ஆகும் உலகம் முழுவதிலும் அவர்களது தாயகம் தமிழ்நாடு பிரித்தானிய குடியேற்றவாத அரசர் பெருந்தொட்டு பயிர்

http://Creativecommons.org//license/by/4.0/.

செய்கிறாக தென்னிந்தியாவிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் தமிழர்கள் மலேசியா, சிங்கப்பூர், பர்மா போன்ற நாடுகளை குடியற்றப்பட்டார்கள். மேலும், மொரிசியஸ், மடகாசுகர், தென்னாப்பிரிக்கா போன்ற ஆப்ரிக்க நாடுகள் பலவற்றிலும் தமிழர்கள் குடியேறியுள்ளார்கள் உள்ளார்கள் .

20ம் நூற்றாண்டில் தொழில் வாய்ப்புகள் பெற்று ஆசிய நாடுகளுக்கு சென்று வசிக்கின்றனர். 1950 ஆம் ஆண்டுக்கு பின்னர் தமிழர் தொழில் வல்லுநர்களாக ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர். 1983 ஆம் ஆண்டு இலங்கை உள்நாட்டு இன கலவரங்களில் பாதிக்கப்பட்ட பெருமளவு ஈழத் தமிழர்கள் ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, தென் மேற்கு நார்வே ஆகிய நாடுகளிலும் சென்று வாழ்கிறார்கள். உலகில் 70 மில்லியன் மக்கள் தமிழை தாய் மொழியாகவும் .மேலும் ,ஒன்பது மில்லியன் மக்கள் தமிழ் இரண்டாம் மொழியாக கொண்டுள்ளனர் . மேலும் தமிழர் மொத்த மக்கள் தொகை 77,000,000 ஆகும்.

முடிவுரை

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் குறிப்பாக ஆதிச்சநல்லூரில், நடந்த அகழ்வாராய்ச்சியில் அமர்ந்தெடுக்கப்பட்டு புதையுண்ட மண்பாண்டங்கள் கி.மு 1000 ஆண்டு காலத்தை சேர்ந்தவைகள் ஆகும் .இவை தமிழர்கள் இங்கு வாழ்ந்ததற்கான சான்றாக விளங்குகின்றன .அப்புதைப் பொருட்களில் உள்ள குறிப்புகளும் பண்டைய தமிழ் இலக்கியங்களில் உள்ள குறிப்புகளும் ஒத்துப்போவதால் அக்காலகட்டத்தில் இன்று இந்தியாவில் தமிழர்கள் வாழ்ந்ததை இவ்விடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் கிடைத்த பழைய தமிழ் எழுத்துக்கள் குறைந்தது பொ.ஊ.மு. 500 ஆம் ஆண்டு சேர்ந்துவையாகும். இதையும் சங்கத்தமிழ் இலக்கிய ஆதாரங்களையும் கொண்டு குமரி கண்டத்தில் இருந்து தமிழர் வந்தார்கள் என்று சிலர் கூறுவர். தமிழர்கள் தங்கள் நிலத்தையும் வரலாற்றில் பாதுகாப்பதன் மூலம் தங்கள் தனித்துவமான கலாச்சாரத்தையும் ,அடையாளத்தையும் பாதுகாக்க முடியும். எதிர்கால சந்ததியினருக்கு தமிழர்களின் வளமான வரலாற்றையும் ,பண்பாட்டையும் கொண்டு செல்வது நமது கடமை ஆகும்.

சான்றுகள்:

1. பாண்டியர்வரலாறு டி.வி.சதாசிவ பண்டாரத்தார், ஸ்ரீசெண்பகா பதிப்பகம்.
2. மூவேந்தர்கள் சேரர் சோழர் பாண்டியர் வரலாறு, ஔவை சு.துரைசாமி பிள்ளை வித்துவான்,மா.இராசமாணிக்கம் பிள்ளை, தி.வை.சதாசிவபண்டாரத்தார். அமராவதி பதிப்பகம் நாமக்கல், தமிழ்நாடு. தமிழ்நாட்டு வரலாறு, இராமசாமி முன்னாள் துணைவேந்தர், அழகப்பா பல்கலைக் கழகம் சென்னை.
3. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும். டாக்டர் கே கே பிள்ளை, உலக தமிழாராய்ச்சி நிறுவனம்.
4. தமிழர் வரலாறு- பி .ஐ சீனிவாச அய்யங்கார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

09. பழந்தமிழரின் வாழ்விடமும் குலக்குறியும்

முனைவர் ஏ. ராஜ்மோகன்
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
தனலட்சுமி சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மாமல்லபுரம், சென்னை - 104. - 9841783827
DOI 10.5281/zenodo.15069963.

Abstract :

In the Sangam poems that describe the inner life, the habitats of the Agamants are generally mentioned in order to identify natural objects. They are placed on the basis of the primary objects according to the nature of the land they live in. The clan symbols that appear in this way are formed according to the land and its location. The purpose of this article is to analyze and explain them by classifying them under the headings of clan symbols related to small villages and towns, clan symbols related to residence, clan symbols related to living space, and clan symbols related to fear of work.

Key Words ; Sangam poems - Natural Objects - Sign

முன்னுரை

அகவாழ்வியலை எடுத்துரைக்கும் சங்கப்பாடல்களில் பொதுவாக, இயற்கை பொருட்களை அடையாளப் படுத்தும் வகையில் அகமாந்தர்களின் வாழ்விடங்கள் சுட்டப்படுகின்றன. அவை, அவர்கள் வாழும் நிலத்தின் தன்மைக்கு ஏற்ற வகையில் முதன்மையான பொருளாக விளங்கும் கருபொருள்களின் அடிப்படையில் இடம்பெறுகின்றன. அவ்வாறு இடம்பெறும் குலக்குறி அடையாளங்களை அதன் நிலமும் அதன் இடத்தினை பொருத்தே அமைகின்றது அவற்றினை சிற்றூர், பேரூர் சார்ந்த குலக்குறிகள், குடியிருப்பு சார்ந்த குலக்குறிகள், வாழிடவளமை சார்ந்த குலக்குறிகள், தொழிலிட அச்சம் சார்ந்த குலக்குறிகள் என்னும் தலைப்புகளில் வகைமைப்படுத்தி ஆராய்ந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குலக்குறி:

குலக்குறி அடையாம் அல்லது குலமரபுச் சின்னம் என்பது குறி அல்லது அடையாளத்தைக் குறிக்கும். ஓர் இனத்தைப் பாதுகாக்கிற ஆவி வாழ்வதாக நம்பப்படுகிற மிருகம் அல்லது தாவரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற சின்னமாக இக்குலக்குறி பயன்படுத்தப்பட்டது. ஒவ்வொரு குலமும் ஒவ்வொரு வகையான விலங்கோடு அல்லது தாவரத்தோடு பெயர் அடைகள், நம்பிக்கை, சடங்கு, வழிபாடு, கலை முதலானவற்றுடன் தொடர்பு கொண்டிருப்பர், அந்த விலங்கு அல்லது தாவரம் அந்தக் குலமரபின் சின்னமாக காணலாம்.

சிற்றூர், பேரூர் சார்ந்த குலக்குறிகள்

சங்க இலக்கிய அகமாந்தர்கள் வாழிடங்கள் சிற்றூர், பேரூர், பாக்கம், கழிமுகப் பகுதி, மலை, காடு, வயல், பகுதிகள் எதுவாயினும் அவர்களின் வாழ்வியலுக்கு ஏற்ற வாழிடங்கள் சுற்றி அவர்களுக்குரிய கருப்பொருட்கள் அமைந்துள்ளன. சான்றாக குறிஞ்சி நிலமக்கள் வாழும் பகுதி மலைப்பகுதியாயினும் சிற்றூர் என அழைக்கப்படுகின்றது. கருங் கோற் குறிஞ்சி நும் உறைவு இன் ஊர்க்கே (அகம். 308) என அகநானூறும். கருங்கோற்

http://Creativecommons.org//license/by/4.0/.

குறிஞ்சியின் மலர்களைக் கொண்டு தேனிழைக்கும் நாடனொடு நட்பே (குறு. 3) குன்ற நாடன் கேண்மை (குறு. 38), அவர் நன்நெடும் குன்றம் (குறு.23) சாரல் நாட (குறு.18,69) என குறுந்தொகையும் கருங்காற் குறிஞ்சி மதன் இல் வான் பூ (நற்றி. 268) ஓங்கு மலை நாட (நற்றி.55) என நற்றிணையும் இயம்புவதைக் குறிப்பிடலாம். இவ்வாறு குறிப்பிடும் இடங்களில் குறிஞ்சி நிலத்தின் கருப்பொருள்களான மான், புலி, யானை, பாம்பு, அருவி, தேன், மலை போன்றவை பெருமளவில் குறிப்பிடப்படுகின்றன.

அதைப்போல மருதநில ஊர் பற்றி குறிப்பிடும் இடங்களில் தலைவன் தலைவியைப் பற்றி விவரிப்பதின் ஊடாக மருத நிலத்தின் கருப்பொருள்களான நெல், கரும்பு, ஆம்பல், தாமரை, எருமை, நாரை முதலானவை பெருமளவில் இடம்பெறுகின்றன. வாழைத்தாறின் பூவை அசைக்கின்ற நெற் கதிர் விளைந்த கழனியிலுள்ள சேற்றில் மள்ளர் அறுத்துப் போட்ட அரிச்சூட்டின் பக்கத்தே பூத்துள்ள கரும்பினையும் விளைந்து முதிர்ந்து பயன்தரும் நெல்லினையும் ஒருங்கேயுடைய கழனி களைக் கொண்ட ஊரினன் (ஐங்.4) பஞ்சாய்க் கோரை யன்ன செருந்திக் கோரையோடு வேழம் கரும்பு போலச் சுழலுதற்குக் காரணமான கழனிகள் சூழ்ந்தது தலைவனது ஊர் (ஐங்.18). தலைவன் பசிய காயையுடைய வயல்களின் சிவந்த கொடியினை நண்டுகள் அறுத்தற்கிடனான கழனிகளையுடைய ஊரினன் (ஐங்.25) அணையை உடைத்துப் பாயும் புதுநீர் பாய்ந்த அளவிலே கழனியிலுள்ள தாமரைகள் முதலிற் கலங்கிப் பின்னர் மலர்ந்தன (ஐங்.53) பழனத்திலுள்ள சம்பங்கோழி ஒலிக்கின்ற தன் பெடையை அகவும் கழனியூரன் தலைவன் (ஐங். 60) எருமைக்கடா மணமுடைய மலர்மிக்க நீர் நிலைக்கண் புகுந்து ஆம்பல் மலரைச் சிதைத் தற்கிடனான கழனியூரனின் மகள் தலைவி (ஐங். 91) கவின்பெறு சுடர்நுதலாகிய தலைவியின் தந்தையூரிலுள்ள கழனியின்கண் தாமரைகள் மலர்ந்தன (ஐங்.94) என நெய்தல் நில சிற்றூர், பேரூர் பற்றி குறிப்பிடுகின்றன.

அதைப் போலவே நெய்தல் நிலம்பற்றி குறிப்பிடும் போது நெய்தல் நிகர்க்கும், ஊரன் நட்புச், (ஐங்.2) நீலமணி போன்ற நிறமுடைய நெய்தல், ஆம்பலொடு மிக வளரும், ஊரனுடைய மகளாகிய தலைவி, பழன ஊரன், (ஐங்.96) என குறிப்பிடுகின்றன. மேற்கூறிய சான்றுகளில் குறிஞ்சி நிலத் தலைவனை அடையாளப்படுத்தும் இடங்களில் கருங்கோற் குறிஞ்சி ஊரன், கருங்காற் குறிஞ்சி, சாரல் நாடன், குன்ற நாடன் என கூறுவதில் இருந்து மலையில் இருக்கும் குறிஞ்சி மலர் அவர்களின் குலக்குறி அடையாளங்களாக விளங்குவதை அறியமுடிகிறது. அதைப் போலவே மருத நிலத்தின் தலைவனை அடையாளப்படுத்தும் போது பொதுவாக ஊரினன், கழனியூரன், என்று கழனியில் இடம்பெறும் நெல் , கரும்பு முதலானவையும் ஆம்பல், தாமரை போன்ற மலர்களும் எருமை, நாரை ஆகியவற்றொடு அவர்களை இணைத்து அவர்களின் குலக்குறியாக அடையாளப்படுத்தப்படுகின்றன. அதைப் போலவே நெய்தல் நிலத் திணைக் கூறும் இடங்களில், தலைவனது ஊரைச் சிறப்பித்துக் கூறும் இடங்களில், ஊர் வளமையினை எடுத்துரைக்கும் இடங்களில் அவர்களின் குலக்குறியான நெய்தல் மலர் இடம்பெற்றுள்ளதை காணமுடிகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

அகமாந்தர்களோடு சிற்றூர்களை இணைத்து கூறுவதுபோல அவர்களின் வாழ்விடங்களுள் ஒன்றான பேரூர்களையும் இணைத்துக் குறிப்பிடும் பதிவுகள் காணப்படுகின்றன. சான்றாக குறுந்தொகையில் பாலைத்திணைப்பாடல் ஒன்றில் பேரூர் கொண்ட வார்கலி விழவிற் (குறு.223) எனக் காணப்படுவதையும் நற்றிணையிலுள்ள நெய்தல் திணைப்பாடல் ஒன்றில் "நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க், கடுந்தேர்ச் செல்வன் காதல் மகனே" (நற்றி.45) எனக் காணப்படுவதையும் நற்றிணையிலுள்ள மற்றொரு நெய்தல் திணைப்பாடல் ஒன்றில் பேர் ஊர் துஞ்சும் / எகினம் நடுங்கும் நல்நகர்ப் பயில் படை எனக் காணப்படுவதைமயும் சான்றாகக் குறிப்பிடலாம். மேற்கூறியவற்றில் பேரூர், நியம மூதூர், நல்நகர் என வரும் பெயர்கள் அகமாந்தர்களின் வாழ்விடங்களாகும். இவ்வாழ்விடங்களைக் குறிப்பிடும் பாடல்களில் அகமாந்தர்களின் குலக்குறி அடையாளங்களை இணைத்தே கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

குடியிருப்பு (குடில்) சார்ந்த குலக்குறிகள்

மனிதனைப் பற்றித் தனியே பாடும் போது அவனது குலக்குறியுடன் சேர்த்து பாடுவது எளிது, ஆனால் செடி, கொடிகள் இணைத்து பாடுவது கடினம் .அதனால் சங்கப் புலவர்கள் குடிலைப் பற்றியும் ஊரைப் பற்றியும் சொல்லும் போதே குலக்குறியையும் சேர்த்தே பல இடங்களில் பாடிவிடுகின்றனர். எனவே தான் பறவை, விலங்கு முதலியவற்றை விட மரஞ்செடி, கொடிகள் குலக்குறியாக இருந்ததற்கான சான்றுகள் பழந்தமிழ் இலக்கியத்தில் அதிகம் கிடைக்கின்றன. அவற்றுள் குறிப்பாக மரஞ்செடி, கொடிகளில் நொச்சி, வேங்கை, தாழை நெய்தல், முல்லை, குவளை, காந்தள், குறிஞ்சி, ஆகியவை குலக்குறிகளாக அதிகம் காணப்படுகின்றன. சான்றாக "நொச்சி மனைகெழு பெண்டிர்" (அகம்.203) "மனையிள நொச்சி மௌவல்வான்முகை" (அகம்.21) "மனைய தாழ்வின் நொச்சி" (அகம்.23) "மனைவளா நொச்சி" (அகம்.367) "மனைமர நொச்சி மீமிசை மாச்சினை" (நற்றி.115 நற்.246) என்ற பாடல் வரிகள் மனையுடன் கூறப்பட்டுள்ளன . குடிகள் பற்றி குறிப்பிடும் இடங்களில் அதனை

"கானவன் எய்த முளவுமான் கொழுங் குறை
தேம் கமழ் கதுப்பின் கொடிச்சி, கிழங்கொடு
காந்தளஞ் சிறுகுடிப் பகுக்கும்
ஓங்கிமலை நாடன்நின் நசையினானே" (நற்றி.85)

என்று குறிப்பிடும் பாடல்வரிகள் போல பல தாவரங்கள் குலக்குறியாக இடம்பெறுவதை "வேங்கை கமழும் எம் சிறுகுடி" (குறுந்.355) பரதவர் குடியிருப்புக்கள் 'பாக்கம்', 'சிறுகுடி' என்றழைக்கப் பட்டன. தாழை வேலியும், கழி சூழ்ந்திருக்க (படப்பை) முண்டகச் சருகுகளால் வேயப்பட்ட 'குறியிறை'க் (தாழ்வாரம்) குடிசைகளைக் கொண்ட பாக்கங்களில் வாழ்ந்தார்கள் (நற்.207). கானலில் இருந்த பனை ஓலைகளைக் கொண்டு வீட்டைச் சுற்றி வேலி கட்டி மணற் காற்றுக்குப் பாதுகாப்புச் செய்தார்கள் (நற்றி.354) பரதவர் ஊர்த் தெருக்களில் மணல் மலிந்திருந்தது; மீன் புலால் நாற்றம் மிகுந்திருந்தது; புல் வேய்ந்த குடிசைகளைக் கொண்ட பரதவர்களின் ஊரை ஊர் என்று கூற முடியாத சிறுமையைக் கொண்டிருந்ததாகப் புலவர் குறிப்பிட்டனர் (அக.200) சில ஊர்களைச் சுற்றிப்

http://Creativecommons.org//license/by/4.0/.

பனைஓலையோடு முள் மிடைந்து வேலி எழுப்பியிருந்தார்கள். ஏனெனில் பனைமரத்தின் குருத்தும் நெடு மடலும் பிய்ந்து வீழும் அளவிற்குக் கடும் கடற்காற்று வீசும்போது (குறு.372) ஊர் அழிந்துவிடாதிருக்க இத்தகைய வேலிகளைப் பரதவர்கள் அமைத்துள்ளனர்.

மேலும், வீட்டைச் சுற்றி இருந்த முள்வேலியை எருமை தன் கொம்பினால் அகற்றியது. இதனை, கூர்முள் வேலி கோட்டின் நீக்கி என்ற அடியில் (அகம். 46) உணர்த்துகிறது. மேலும், முல்லை வேலி முல்லைக்கொடி படர்ந்திருந்ததை வேலி சுற்றிய வால்வீ முல்லை என்று அகநானூறு (314) கூறுகிறது. இவ்வாறு கூறுவதால் பீர்க்கங்கொடி, வேலிகளின் மீது படர்ந்திருந்தது போல் முல்லைக் கொடியும் படர்ந்திருக்கலாம் என்று உணரமுடிகின்றது.

குறிஞ்சி நிலத்தில் காந்தள் செடியும் இயற்கை வேலியாக இருந்துள்ளது என்பதை, காந்தள் அம் சிலம்பில் சிறுகுடி என்று குறுந்தொகை (100) காட்டுகின்றது. மனைக்கு வேலியாக நொச்சி மரம் இருந்ததையும், அதன் கிளையில் குயில் கூவும் என்பதையும் நற்றிணை கூறுகிறது. அதாவது

"மனைமா நொச்சி மீமிசை மாச்சினை
வினை மாண் இருங்குயில் பயிற்றலும் பயிற்றும்"(நற்றி.246)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. மேலும் பனை மரங்களிலிருந்து விழும் பனையோலைகளைக் கொண்டு வேலி அமைத்த, மணல் பரந்த நெய்தல் நில முற்றத்தை நற்றிணை (354) உணர்த்துகிறது. இதன்மூலம் குடிசையின் கூரை மட்டுமல்ல, வேலியும் பனையோலையால் அமைவதும் உண்டு என்று அறியலாம். பனை ஓலையோடு முட்கள் சேர்த்துக் கட்டப்பெற்ற வேலியைப் பற்றி நற்றிணை (38) பாடல் குறிப்பிடுகின்றது. மற்றொரு பாடல் மூங்கிலால் கட்டப்பட்ட வேலிப்பற்றி குறிப்பிடுகிறது (வேரல் வேலி - நற்றி.232) குறிப்பிடுகிறது.

தாழை மரங்களும் வேலியாக இருந்ததை நற்றி (363, 372) பாடல் காட்டுகின்றது. குறிஞ்சி நிலத்தில் மூங்கில் வேலியாக இருந்தது போன்று நெய்தல் நிலத்தில் தாழை இருந்தது என்று அறியமுடிகிறது. எனவே, முள்வேலி, பனையோலை வேலி, மூங்கில்முள் வேலி, தாழை மர வேலி, நொச்சி மர வேலி, முல்லைக்கொடி வேலி, கழற்கொடிவேலி போன்ற பலவகை வேலிகள் என நில அமைப்பிற்கு ஏற்றாற்போல் இவ்வேலிகள் இருந்தன. இவ்வேலிகளில் இயற்கையாக அமையும் வேலியை வாழ்வேலி என்றும், செயற்கையக அமையும் வேலியை இடுமுள்வேலி என்றும் அழைத்துள்ளனர். பண்டைய தமிழர்கள் வீட்டைச் சுற்றிப் பலவகையான தாவரங்களால் ஆன வேலிகளை அமைத்துள்ளனர். விலங்குகளால் வரும் ஆபத்தை தவிர்க்கவே இவ்வாறு வேலியை அமைத்திருப்பர் எனத் தோன்றுகிறது. மேலும், அதில் முல்லை, காந்தள், நொச்சி, பனை, மூங்கில், பருத்தி, தாழை, போன்றவை வேலியாகவும் அதேசமயத்தில் அவர்களுக்கான பாதுகாப்பின் குறியிடாகவும் இடம் பெறுகின்றன. இவ்வாறு சங்கப் பாடல்களில் அகமாந்தர்களின் குடியிருப்பு சார்ந்த வாழ்விடங்கள் அவர்களின் குலக்குறி அடையாளங்களோடு இணைத்துப் பாடப்பட்டுள்ளன.

வாழிட வளமை சார்ந்த குலக்குறிகள்

http://Creativecommons.org//license/by/4.0/.

இயற்கை, மனித வாழ்விற்கு முதன்மையான ஆதாரமாகும், இனக்குழு மக்கள் எப்பொருட்களை முதன்மையானப் பொருட்களாக சார்ந்து வாழ்கிறார்களோ அவர்களை அப்பொருட்களுடன் இணைத்தே சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. சான்றாக நெய்தல் நிலமக்களுக்கு முதன்மையானப் பொருளியலாக விளங்கும் உப்பு, அவர்களின் வளமைக்கு உதவும் பொருளாக விளங்குகின்றன. எனவே அவர்கள் (பரதவர், உமணர்) அவர்கள் உப்பை தனது வளமை சார் குலக்குறி அடையாளங்களாக கருதுகின்றனர். அதைப்போலவே குறிஞ்சி நில மக்கள் தம் வளமைக்கு உதவும் பொருட்களான தேன், தினை, கிழங்கு, ஆகியவற்றைத் தங்களுடைய வளமை சார் குலக்குறி அடையாளங்களாக கருதுகின்றனர்.

தொழிலிட அச்சம் சார்ந்த குலக்குறிகள்

ஐந்நில மக்கள் தம் தொழில் சார்ந்த இடங்களிலுள்ள உயிரினங்களின் பொருட்களை குலக்குறியாகக் கொண்டுள்ளனர். மனிதனுக்கு மிகுந்த அச்சத்தினை உண்டாக்கும் விலங்குகளின் மீது கொண்ட அச்சத்தின் காரணமாகவும் விலங்குகளின் ஆற்றல் தமக்கு கிடைக்க வேண்டும் என்ற காரணமாகவும் அவற்றைக் குலக்குறிகளாகக் கொள்வர் என அறிஞர்கள் கூறுவர். இரவு நேரங்களில் மீன் பிடிக்கும் இடங்களில் உப்பாளம் குழிகளில் செல்லும் போது விலங்கு மீன், தாக்கும் என அச்சம் கொண்டு அதனைத் தம் குலக்குறியாக ஏற்று வழிபட்டனர் என்பதற்கானச் சான்று சங்கப்பாடல்களில் காணப்படுகின்றன. குறுந்தொகைப்பாடல் ஒன்றில் "மிகுந்த வலிமையுடைய சுறாமீன் வழியில் இருக்கும் என்பதாலும் வலிமை வாய்ந்த சுறாமீன் மீன் வேட்டையாட கடலில் செல்கின்றவர்களை தாக்கி எறிகின்ற சுறாமீன்கள் நிறைந்து விளங்கிய கடற்பரப்பை (எறிசுறாக் கலித்த விலங்கு நீர்ப்பரப்பின் நறுவீ ஞாழலோடு புன்னை தாஅய்" (குறுந்.318) எனக் குறிப்பிடுகின்றது. இதே கருத்தை அடுப்பங் கொடிய சுற்றிய வளைந்த காலினை உடைய முதலையோடு, கோட்டுமீன் எனப்படும் சுறாமீனும் தென்படும் கரிய உப்பங்கழியாகிய அரிய வழி வினைக் கடந்து தலைவன் இரவில் வந்ததை;

"கொடுந்தாள் முதலையோடு கோட்டுமீன் வழங்கும்
இருங்கழி இட்டுச் சுரம் நீத்தி இரவின்" (அகம் . 80)

எனக் குறிப்பிடுகின்றது. மேலும், அகநானூற்றில் உள்ள இரண்டுப் பாடல்கள் உப்பங்கழியிலுள்ள சுறாமீனின் தாக்குதலால் புண்ணுற்ற காலையுடைய கோவேறு கழுதை, நீண்ட நீரினையுடைய கரிய வழியில் செல்லுவதால் மிக மெலிவடைகிறது (அகம்.120) எனவும் விரைந்த செலவினையுடைய, வாள் போன்ற கோட்டினையுடைய சுறாமீன் திரிகின்ற, சங்குகள் மேய்கின்ற, பெரிய துறையினையுடைய கழியென்றும் (அகம்.153) எனவும் கூறுகின்றன. நற்றியினையின் நெய்தல் பாடல் ஒன்று காப்பு மிகுதிக்கண் கலங்கிய தலைவி தோழிக்குச் சொல்லுமிடத்து சுறா மீன் வாயைப்பிளந்து கொண்டு நீரில் தோன்றுகிறது என அச்சமடைந்ததைக் (திருந்து வாய்ச்சுரவம் நீர் கான்று நற்றி.132) கூறுகின்றாள். இவ்வாறு நெய்தல் மக்கள் நெய்தல் நிலத்தின் தொழிலிடங்களில் முதலை, சுறா, ஆகியவற்றால் அச்சமடைந்ததால் அவற்றை வழிபட்டால் நமக்கு ஊறுசெய்யாது என நம்பினர். எனவே முதலை,சுறா அகியவற்றை அச்சம் சார்ந்த குலக்குறியாக ஏற்றனர்.

முடிவுரை

http://Creativecommons.org//license/by/4.0/.

சங்க இலக்கிய அகப்பாடல்களில் திணைக்குடி மக்களின் குலக்குறி அடையாளங்கள் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றன. அவர்களின் வாழ்விடங்களான சிற்றூர், பேரூர் சார்ந்த குலக்குறிகளில் குறிப்பாக குறிஞ்சி நிலத் தலைவனை கருங்கோர்ட் குறிஞ்சி ஊரன், சாரல் நாடன், குன்ற நாடன் என குறிப்பிடுவதில் குறிஞ்சி மலையில் இருக்கும் குறிஞ்சி மலர் அவர்களின் குலக்குறி அடையாளங்களாக வெளிப்படுகின்றன. மருத நிலத்தைக் கூறும் இடங்களில் ஊரினன், கழனி ஊரன் எனக் கூறும் இடங்களிலும் நெய்தல் நிலத்தினைக் கூறும் இடங்களிலும் ஊரின் வளமையினை எடுத்துரைக்கும் இடங்களிலும் அவர்களின் நெல், கரும்பு, ஆம்பல், தாமரை, நெய்தல் மலர் குழுக் குலக்குறிய அடையாளங்களாக வெளிப்படுகின்றது. பேரூர், நியம், மூதூர், நல்நகர் எனவரும் வாழ்விடங்களில் தனக்குரிய அடையாளங்கள் இணைத்து கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

சங்கப் பாடல்களில் அகமாந்தர்களின் குடியிருப்பு சார்ந்த வாழ்விடங்கள் அவர்களின் குலக்குறிய அடையாளங்களோடு இணைத்துப் பார்க்கப்பட்டுள்ளன. குறிஞ்சி நில மக்கள் தம் தம் வளமைக்கு உதவும் தேன், தினை, கிழங்கு ஆகியவற்றையும் நெய்தல் மக்களுக்கு முதன்மையானப் பொருளாக விளங்கும் உப்பு ஆகியவையும் வளமை சார் குலக்குறி அடையாளங்களாகக் கருதினர். நெய்தல் நில மக்கள் தம் தொழில் இடங்களில் முதலை, சுறா ஆகியவற்றால் அச்சமடைந்ததால் அவற்றை வழிபட்டால் நமக்கு ஊரு செய்யாது என நம்பினர். எனவே அவற்றை அச்சம் சார்ந்த குலக்குறியாக ஏற்றுள்ளார்கள்.

பார்வை நூல்கள்

1. பாலசுப்பிரமணியம் .கு.வெ - அகநானூறு (தொகுதி1,2) வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை 98.
2. பாலசுப்பிரமணியம். கு.வெ -ஐங்குறுநூறு (தொகுதி1,2), வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை - 98.
3. பாலசுப்பிரமணியம் .கு.வெ - குறுந்தொகை (தொகுதி 1,2) வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை 98.
4. பாலசுப்பிரமணியம். கு.வெ - நற்றிணை, வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை - 98.

http://Creativecommons.org//license/by/4.0/.

10. பூமணியின் படைப்பாளுமை (அஞ்ஞாடி நாவல்)

முனைவர் பே.சிவசக்தி
இணைப் பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்
அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை - 642126.
செல் - 86675 71311 - மின்னஞ்சல் - sivahariharan09@gmail.com
DOI 10.5281/zenodo.15069976.

Abstract :

The novel "Anjnadi" by Poomani, a great writer of the Karisal region and a Sahitya Akademi award-winning author, is under study. "Anjna" is a word that refers to mother. The friendship between the Pallar-Vannar community through the characters of Andi-Maari is presented, and the historical events that took place during the British rule before India gained independence, the Dhol Seelai struggle in Kerala, the Sivakasi riots, mythological literary events, and folklore elements are arranged in a flexible manner. In this way, the novel and the character, the author - relationship - historical legends, and devotional literary elements are explained, and the study highlights the way Poomani has expressed her creativity.

Key Words : Anjadi - Poomani - Karisal - Sakithya academy - Dhol Seelai

முன்னுரை

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பல்வேறு வகையான ஆற்றல் வாய்ந்த படைப்புகள் உருவாக்கம் பெற்றுள்ளது. புராண இதிகாசங்கள், சங்க இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள் தொடர்ந்து வளர்ந்த நிலையில் சிறுகதை, நாவல், நாடகம், கவிதை எனப் பல பரிமாணங்களைப் பெற்று இலக்கியங்கள் வளர்ந்த வண்ணமிருக்கின்றன. மனித சமுதாயத்திற்கு தேவையான நற்கருத்துகளை எடுத்துச் சொல்வதற்கு இவை களமாக அமைகின்றன. அந்த வகையில் நாவல் இலக்கியம் மானுட வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சிறியவர் முதல் பெரியவர் வரை கதை கேட்பதற்கும் படிப்பதற்கும் மிக்க ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர். ஒரு சமூகத்தின் வளர்ச்சியையும் அழிவையும் படம்பிடித்துக் காட்டுவதில் ஏராளமான நாவல்கள் முதன்மையும் முக்கியத்துவம் பெறுகின்றன. அவற்றில் "பூமணி"யின் "அஞ்ஞாடி" நாவலின் படைப்பாளுமை குறித்த பதிவுகளை இக்கட்டுரை முன் வைக்கின்றது.

நாவலும் பாத்திரப்படைப்பும்

நாவலில் பாத்திரப்படைப்பு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. நல்ல நாவல்களில கதை, கதைக்கரு, கதைப்பின்னல் ஆகியன சிறப்பாக அமைய பாத்திரப்படைப்பு காரணமாக அமைகிறது. பொதுவாக நாவலில் படைக்கப்பெறும் மாந்தர்களே உருமாற்றம் பெற்று நாவல் மாந்தர்களாகின்றனர். இம்மாந்தார்கள் படைப்பையும் படைப்பாளியையும் மீறி எங்கும் உலவிக் கொண்டிருப்பார்கள்.

"தலை சிறந்த பெருநாவல்களையெல்லாம் நாம் நினைக்கின்ற போது முதலில் நம் நினைவுக்கு வருவது அவற்றைப் படைத்த ஆசிரியர்களோ, அந்நாவலின் கருவோ, கதைப்பின்னலோ, பிறவோ அல்ல கதை மாந்தர்களே" என்கிறார் மா.இராமலிங்கம். இக்கருத்து கதைமாந்தர்களின் இருப்பினைப் பறைசாற்றக் கூடியதாக அமைகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

"அனைத்து நாவல்களும் பாத்திரங்களோடு தொடர்பு கொண்டவை. மனம் அறிவு, சிந்தனை, குண இயல்பு இவற்றைக் கூர்ந்து அறிந்து அனுபவமாக வெளிப்படுத்துவதே பாத்திரப்படைப்பு" என்கிறார் ஜெயகாந்தன்

ஒரு நாவலின் சிறப்பு பாத்திரப் படைப்பின் மூலம் உணரப்படுகிறது. பாத்திரம் கதைக்கோப்பை உருவாக்குகிறது. கதைப்கோப்பு பாத்திரத்தைச் சார்ந்ததாக அமைகிறது. படைப்பாளன் தான் கூற நினைக்கும் தனது அனுபவங்கள் அனைத்தையும் படைப்பில் அமைக்க இயலாது. அதனால் தான் கூற நினைக்கும் கருத்துக்கு ஏற்ப அதை விளக்கும் வகையில் அமைந்த மனிதப் பண்புகளை மட்டுமே பாத்திரத்தில் அமைத்துக் கொள்கிறான். அவர்களிடமிருந்து தான் விரும்புவனவற்றையும் தன்னைக் கவர்ந்து தன்னுடைய கற்பனையில் பட்டுத் தெளிந்த சில கூறுகளையும் தன் படைப்பிற்கு மூலமாக கொள்கிறான். இவ்வாறு பாத்திரப்படைப்பு நாவலுக்கு மிக முக்கியமானதாக அமைந்து படைப்பாளுமைக்கு வலுச்சேர்ப்பதாக உள்ளது.

படைப்பாளியின் அனுபவம்

காலந்தோறும் மனித சமுதாயத்தின் பல்வேறு பரிமாணங்களைப் படைப்பிலக்கியம் பதிவு செய்து வருகின்றன. தனிப்பட்ட மனிதர்கள், குறிப்பிட்ட நிகழ்வுகள், மனித மனத்தின் வேறுபட்ட எண்ணங்கள் ஆகியவற்றை மனித சமுதாயம் முழுமைக்குமான, ஒரு வரலாற்றின் வகை மாதிரியாகவும் நுட்பமாகவும், நுணுக்கமாகவும் காட்டி வருகின்றன. வாழ்ந்து காட்டும் வாழ்க்கையைச் சொற்களால் கூறும் அனுபவமே படைப்புகளாகும். இவை வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாகும்.

அனுபவம் உள்ளுணர்வுடன் தொடர்புடையதாகும். அனுபவம் ஒரு கலைஞனின் ஆளுமையின் பாதிப்பைப் பெற்று விளங்குகிறது. அவரது பிறப்பு, வளர்ப்பு, வாழ்ந்த காலம், அவர் சார்ந்து நிற்கும் கோட்பாடு ஆகியவை படைப்பாளனின் ஆளுமையின் பகுதிகளாகும் அனுபவங்களை அவர் பொருட்படுத்திக் கொண்டதன் வடிவுகளே படைப்பாளியின் படைப்பாக அமைகிறது. படைப்பாளனின் படைப்பாளுமை அவரது அனுபவங்களின் ஆளுமையைப் பொறுத்தே அமைகிறது.

எழுத்தாளனின் அனுபவ எல்லையை மட்டும் கொண்டு படைக்கப்படுபவை வட்டார இலக்கியங்கள் என்பதாலும், காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடம் அனுபவங்களும் பார்வைகளும் மாறுவதாலும் வட்டார இலக்கியங்களுக்கு அவ்வட்டார அனுபவங்களே படைப்புக்கான அனுபவங்களாக அமைகின்றன. பார்த்ததும், கேட்டதும் தாம் அனுபவித்ததும் படைப்புகளில் அமைவதுடன் கற்பனைப் புனைவு அனுபவங்களையும் படைப்பில் ஏற்றிக் கூறும் பொழுது படைப்பு சிறப்புப் பெறுகிறது.

படைப்புக்கான சூழலையும் படைப்புக் களத்தையும் பூமணிக்குக் கரிசல் பூமி தந்தது போலவே நாவலைப் படைப்பதற்கான அனுபவங்களைக் கரிசல் பூமியே தந்துள்ளது. இந்த அனுபவங்களைத் தன் நாவலுக்குள் சமூகம் சார்ந்தும், பண்பாடு சார்ந்தும், தொழில் சார்ந்தும், வாழ்க்கை அனுபவம் சார்ந்தும், பெண்கள் சமூகத்தில் பெறும் மதிப்பு சார்ந்தும் படைத்துள்ளார். இவ்வாறு படைக்கப்பட்டுள்ள நாவலான "அஞ்ஞாடி"யில் ஆளுமைத் திறன் புலப்படும் பாங்கினை அறியலாம்.

http://Creativecommons.org//license/by/4.0/.

மனித மாண்பு - நட்பின் அருமை உணர்த்தல்

கரிசல்காட்டு மக்களின் பெருவரலாற்றை இருநூறு கால ஆண்டு இடைவெளியில் விவரிக்கப்படும் இலக்கியமாக அமைந்துள்ள அஞ்ஞாடி நாவலின் பெரும் கதைசொல்லியாக விளங்கும் மாரியையும், ஆண்டி என்னும் பெரும் விவசாயியையும் இணைத்துக் கொண்டு இருவேறு பரம்பரைகளின் வழிக்கதைகளை, கலாச்சாரக் கூறுகளைக் காட்சிப்படுத்துகிறார்.

ஆண்டி மதிய வேளையில் தன் அஞ்ஞைக்குக் (அம்மா) கஞ்சி கொண்டு வந்து கொடுக்கிறான். அப்போது கலிங்கலோடைக்கு அருகில் இருக்கும் நாணல் கூட்டத்தைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தவன் குறுக்காக நடந்து ஓடைச் சேற்றுக்குள் இறங்கிவிடுகிறான். மெல்ல மெல்ல சேற்றுக்குள் மூழ்கி இறந்துவிடுவோம் என்று எண்ணிக் கொண்டிருப்பவனின் கண்களுக்கு கழுதை மேய்த்துக் கொண்டிருக்கும் மாரி தெரிகிறான். அவனை அழைத்து தன்னைக் காப்பாற்றும்படி கூறுகிறான். அங்கிருந்த பாராங்கல்லைத் தூக்கி சகதியில் போட்டு மீட்டு அவனை மேலே கொண்டு வருகிறான். தன் உயிரைக் காப்பாற்றியவனைத் தன் வாழ்நாள் முழுக்க நண்பனாக்கிக் கொள்கிறான் ஆண்டி.

ஆண்டி மாரியிடம் "நீ இல்லண்ணா அம்புட்டுத்தான். முங்கிச் செத்திருப்பேன் என்கிறான். இதுல இல்லன்னா வேற ஒரு வழியும் மனசுக்குள்ள வச்சிருந்தேன் என்றான். அதென்ன எனக் கேட்டவனுக்கு, கழுதையில கவுத்தக் கெட்டீற வேண்டியது. அந்தப் பக்கம் நீங்க புடச்சுக்கிற வேண்டியது. கழுதைய லேசாப் பத்துனா சங்கடமில்லாம வெளிய வந்துருவீகல்ல" என்று தான் செய்த உபாயம் பற்றிக் கூறினான்.

ஆண்டியும் மாரியும் தொட்டுப் புழங்காத சாதிக்காரர்கள். ஆனால் இளமைப் பருவம் என்பது நல்லவைகளையும், நல்ல செயல்களையும் பற்றிச் சிந்திக்கும் ஆற்றலுடையது. பிறரைக் கெடுக்கத் தெரியாத வஞ்சனை செய்யாத மனப் பக்குவம் கொண்டது. அதனால் மாரி ஆண்டியின் உயிரைக் காப்பாற்றுவது ஒன்றே தன் நோக்கமாகக் கருதி இவ்வாறு சிந்தித்தேன் என்று காரணம் கூறினான். இதனால் மாரிக்குப் பின்னும் அவனது குழந்தைகளையும் பேத்துப் பிதுர்களையும் காப்பாற்றுவதில் குறிக்கோள் உடையவனாக இருக்கிறான் ஆண்டி. இவ்வாறு சாதி சம்பிரதாயங்களைக் கடந்த நட்பின் ஆழமும் அன்பின் வெளிப்பாடும் புலப்படுத்தப்பட்டுள்ளது.

தொழிலால் கிடைக்கும் மரியாதை

பஞ்சம், பட்டினி, கொள்கை, காலரா எனப் பல துயரங்கள் வாழ்க்கையில் வந்த போதும் யாரையும் கைவிடாமல் அனைத்துச் செல்லும் உயர்ந்த இலட்சியம் உடைய மனிதனாக ஆண்டி திகழ்கிறான். பெரும் விவசாயி என்பதால் தன்னுடைய நிலத்தை உழுது விதை விதைத்துவிட்டு மற்றவர்களின் வயல்களில் விதைத்துத் தருவதற்குச் செல்கிறான். அப்போது விதைப்பதற்கென்று கூலி வாங்கிக் கொள்வதில்லை. இதனால் மற்றவர்களிடம் மிகுந்த மரியாதை இருந்தது என்பதை,

விதைப்புக்கா க அயலூர்களிலிருந்தும் ஆண்டியைத் தேடி வருவார்கள். இன்ன சாதிக்காராகள் என்றில்லை. அவனும் சுணங்காமல் போவான். அவன் எந்த ஊருக்குப்

http://Creativecommons.org//license/by/4.0/.

போனாலும் வாய் நிறைய மரியாதை கிடைக்கும். மேல் சாதிக்காராகள் கூட அவன் விதைப்பைப் பெருமையாகப் பேசுவார்கள்.

"புள்ளீகளப் பத்தி வெசாரிக்கற மாதிரி வெள்ளாமையப் பத்தி வெசாரிக்கான். அவன் என்ன கஞ்சிக்கில்லாத வெங்கம்பயலா. ஈரனேருச் சம்சாரி. ஏகப்பட்ட நெலம், வாழப்பழம் போல மாடு. கெதியான விவசாயம். சொந்த வேலையப் போட்டுட்டு வந்து ஊரானுக்கு வெதச்சுக் கொடுக்கனும்னு வேதாவதியா" என ஆண்டியின் பெருமைகளைப் பேசுவார்கள். சராசரி மனிதனாக இருந்தாலும் சுத்துப்பட்டி முழுக்க அவன் கற்ற வித்தையும் அவன்மீது கொண்ட அன்பும் பற்றிய பெருமைகளைப் பேசுவதால் சாதி என்னும் வர்க்க பேதம் மறைந்து பண்பினால் உயர்ந்து நிற்கும் தன்மை வெளிப்படுகிறது. ஔவையினது கூற்றான "சாதி இரண்டொழிய வேறில்லை" என்னும் கருத்து மெய்ப்பிக்கப்படுவதை உணர முடிகின்றது.

இனவரலாற்றுத் தொன்மை

பள்ளர் சமூகம் உருவான வரலாற்றை ஆண்டியின் மனைவியான கருப்பி தன் பேரப் பிள்ளைகளுக்குக் கதையாகச் சொல்கிறாள். பரமசிவன் வேர்வையில் முளைத்த குழந்தை மேலோகத்தில் விளைவித்த நெல்லை பூமிக்குக் கொண்டு வந்து சேர்த்ததும், பூமியில் வாழ்ந்து விவசாயத்தைப் பெருக்கியதுமான கதையைச் சொல்லுகின்ற போது பள்ளர்களின் வாழ்க்கைமுறை பதிவு செய்யப்படுகிறது. பள்ளர் சமூகம் அம்மா பள்ளன், அஞ்ஞாபள்ளன், அய்யா பள்ளன் என அவரவர் கூப்பிடும் முறையில் உருவான கதையைப் பேரக் குழந்தைகளுக்குச் சொல்வதிலிருந்து ஒரு சமூகத்தின் வரலாற்றை உணர்ந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு தான் சார்ந்த சமூகத்தின் வரலாற்றை எடுத்துரைக்கும்போது இன வரலாற்றின் தொன்மையை அறிய முடிகின்றது.

வரலாற்றுப் புனைவுகள்

கற்காலம் தொடங்கி இன்று வரை காடுவெட்டிக் கழனி திருத்தி உழைப்பையும், உற்பத்தியையும் பெருக்கிய மக்களின் சமூக வாழ்வியலின் கூறுகளை உள்ளடக்கியதே வரலாறு எனலாம். இலக்கியம் எதுவும் வெற்று வெளியில் இருந்து தோன்றுவதில்லை. குறிப்பிட்ட காலத்தின் பின்னணியில் குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த படைப்பாளியினால் படைக்கப்படுகின்றது. அந்த வகையில் பல வரலாறுகளைத் தம்புனைவில் வெளிப்படுத்திப் படைப்பாளுமைக்கு உயிர் கொடுத்துள்ளார்.

"வரலாற்றை இலக்கியத்தில் கொண்டு வந்து புகுத்துவதற்கு அதன் சூழலமைப்பு காரணமாக இருக்கின்றது. குறிப்பிட்ட இலக்கியத்தின் சொற்றொடர்கள், படிமங்கள், கட்டமைப்புகள் முதுலியவற்றிலுள்ள தனிச் சிறப்புக் கூறுகள் விளக்கப்பெறும். அவ்விலக்கியம் கூறுகின்ற செய்திகளின் உண்மையான அதன் காரண காரியத் தொடர்பான பரிமாணங்கள் புலப்படும். படைப்பாளியின் நோக்கமும் நிறைவேறும்" எனத் தி.சு.நடராசன் குறிப்பிடுவது இலக்கியங்களில் வரலாற்றுக் கூறுகளைப் புகுத்தி கட்டமைத்துக் கொள்ளுவதற்குப் பொருந்துவனவாக அமைந்துள்ளது. இதனடிப்படையில்,

மங்கம்மாள் ஆட்சி, திருமலை நாயக்கர் இறப்பு, பாஞ்சாலங்குறிச்சி பெயர் காரணம், கட்டபொம்மு தூக்கிலிடப்படுதல், ஊமைத்துரை வரலாறு, தூத்துக்குடி வணிகத் தளமாக

http://Creativecommons.org//license/by/4.0/.

விளங்குதல், மருது சகோதரர்களின் இறப்பு போன்றவை வரலாற்றுப் பதிவுகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இருபத்து இரண்டு வயதில் பெரியம்மை நோயால் மகன் இறப்பதன் காரணமாகப் பெயரன் பெயரைச் சொல்லி மங்கம்மாள் அரியணையேறிய வரலாறும்,

திருமலை நாயக்கர் இருநூறு மனைவிகளைப் பெற்றிருந்தும் கோயல் பட்டரின் மனைவி மீது விருப்பம் கொண்டு அவளை அடைவதனால் பிராமணர்கள் ஒன்று சேர்ந்து அவரைக் கிணற்றில் தள்ளிக் கொன்றனா என்ற செய்தியும்,

ஆங்கிலேயருடைய அடக்குமுறையை எதிர்த்ததன் விளைவாக கட்டபொம்மு தூக்கிடப்பட்டதையும், ஆங்கிலேயரின் கைகளுக்கு கடைசி வரை அகப்படாத ஊமைத்துரை வரலாறும், ஊமைத்துரை மருது சகோதரர்களுக்கான நட்பும் ஆங்கிலேயர்களால் மருது சகோதரர்கள் காளையார் கோவலில் தூக்கிலிடப்பட்ட நிகழ்வும்,

ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட பொட்டிப் பகடை பல்வேறு இன்னல்களுக்கு ஆளாயினும் பகடை இனத்தைச் சார்ந்தவனாக இருந்த போதும் தன்முனைப்புடனும் போராட்ட குணமுடனும் அன்னிய சக்தியை நாட்டைவிட்டு அகற்ற வேண்டும் என்று அவன் செய்த செயல்களும் அவனைச் சமூகத்தில் உயர்ந்த நிலையில் வைத்துப்பார்க்கும் தன்மையை ஏற்படுத்தியுள்ளது.

நாடு விடுதலை பெற்ற சூழலில் தான் அறிந்தவைகளையெல்லாம் ஆற்றொழுக்காகவும் காலம் தவறாமையுடனும் வரலாற்றுப் பதிவுகளாகப் புனைந்துள்ள பாங்கு அவரது படைப்பாளுமைக்கு மிகச் சிறந்த உதாரணங்களாக விளங்குவதை அறிய முடிகின்றது.

வேற்றுமையில் ஒற்றுமை

ஒரு சாதியைச் சேர்ந்தவர் மற்றொரு சாதியைச் சேர்ந்தவரோடு கொண்டிருந்த இணக்கமும், பிணக்கும்கூட உறவுகளை வலுப்படுத்துவதற்குத் துணை செய்கின்றன. நாவலின் வழி காணலாகும் பள்ளர், வண்ணார், நாடார், கிறித்துவர், தேவர், அருந்ததியர், பிராமணர் ஆகியோரிடையே கொண்டிருந்த உறவுகள் வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பதாக அறிய முடிகின்றது.

முடிவுரை

வாழ்க்கையிலிருந்து தோன்றி வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டும் ஒருவகை இலக்கியம் நாவலாகும். தன்னுடைய அனுபவமே படைப்பாளனுக்கு முதல் கருவாக அமைகிறது. படைப்பாளன் தன் மண் சார்ந்த மக்களையும், அம்மக்களின் எண்ணங்களையும், உணர்வுகளையும் கருவாகக் கொண்டு இலக்கியத்தைப் படைக்கின்ற போது ஆளுமை வெளிப்படுகிறது.

கரிசல் மண்ணைக் களனாகக் கொண்டு அம்மண்ணின் மாந்தர்களைப் படைப்பு மனிதர்களாகத் தம் கதையில் வாழ வைத்துள்ளார். கரிசல் சமுதாயத்தில் காணப்படுகின்ற எல்லா வகையான மனிதர்களும் இவரது படைப்புக்குள் இருக்கின்றனர். எல்லா வகையான பண்பு நிலைகளும் முன்னிலைப் படுத்தப்படுகின்றன.

http://Creativecommons.org//license/by/4.0/.

ஒரு படைப்பின் மிகப் பெரிய சாதனை என்பது வாசகர்களின் மனதைக் கவரக்கூடிய வகையிலும் நம்பக்கூடிய வகையிலும் மாந்தர்களைப் படைப்பதாகும். பூமணி தமது படைப்புலக மாந்தர்களால் குறிப்பிடத்தக்கவராக விளங்குவதற்கு அவரது படைப்பாளுமையே காரணமாக அமைந்துள்ளது என்பதை இவ் ஆய்வு எடுத்துரைத்துள்ளது.

பார்வை நூல்கள்

1. இராமலிங்கம், மா., நாவல் இலக்கியம், ப.70, தமிழ் புத்தகாலயம், சென்னை, இரண்டாம் பதிப்பு.
2. ஜெயகாந்தன், சில நேரங்களில் சில மனிதர்கள், முன்னுரை, ப.3, மீனாட்சி பப்ளிகேஷன்ஸ், 2018.
3. கைலாசபதி, சமூகவியலும் இலக்கியமும், ப.47, காலச்சுவடு பதிப்பகம், முதற்பதிப்பு, 2021.
4. பூமணி, அஞ்ஞாடி, ப.2, க்ரியா, சென்னை-41, முதற்பதிப்பு 2012.
5. மேலது, ப.65,
6. பழனிவேலு, கே (தொ.ஆ)., காவ்யா வெளியீடு, சென்னை, டிசம்பர் 2008.

http://Creativecommons.org//license/by/4.0/.

11. பெரும்பாணாற்றுப்படையில் விருந்தோம்பல் பண்பு

இரா.நிரோஷா,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வுத் துறை,
அரசு கலைக்கல்லூரி (நிலை 1),அரியலூர்.

முனைவர் **த.மரகதம்,**
இணைப் பேராசியர், தமிழாய்வுத் துறை,
அரசு கலைக்கல்லூரி (நிலை 1), அரியலூர்.

DOI 10.5281/zenodo.15069988.

Abstract :

Hospitality is a part of the culture of ancient Tamils, as can be seen from Tamil literature. In ancient times, when people went on a long journey, they would stop at the houses of strangers to stay and eat. Then they would continue their journey. It is a tradition among people to welcome newcomers to their homes and live by providing them with food and other necessities. It can be seen from the songs of the Perumpanathrupadai that Tamils excelled in hospitality by giving the food available in their own land to others.

Key Words : Dark mountain - Novelty - Rice made from rice - Pot - Padi house

முன்னுரை

வருவோருக்கு விருந்தளித்தலோடு விருந்தோம்பல் முற்று பெறுவதில்லை. விருந்தினரை உபசரிக்கும் முறை விருந்தோம்பலில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. அறிந்தோரும் அறியாதோரும் விருந்தினராகலாம் அங்ஙனம் வரும் விருந்தினருக்கு முதல் விருந்தாக அமைவது இன்முகத்தோடு கூடிய அன்பு பார்வையே இதனையே, வள்ளுவர்,

“மோப்பக் குழையும் அனிச்சம் முகத்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து” **குறள் எண்.90**

என்றுரைக்கிறார்.

மேலும் பழந்தமிழர் நில அமைப்புக்கு ஏற்ற உணவுகளை விருந்தினருக்கு அளித்தனர் என்பதை

“சேதா நறுமோர் வெண்ணையின் மாதுளத்து
உருப்புறு பசுங்காய்ப போழொடு கறிகலந்து
கஞ்சுக நறுமுகி அளை இப் பைந்துணர்
நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவீர்” பெரும்பாண். பா.அடி.306-310

என்று பெரும்பாணாற்றுப்படை விளக்குகிறது.

விருந்தோம்பல்

விருந்தினர்களை அன்புடன் வரவேற்று உபசரித்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு நல்லொழுக்கம் விருந்தோம்பல் ஆகும். விருந்தோம்பலில் தமிழரே பேர் பெற்றவர்கள். பழந்தமிழர்கள் விருந்தோம்பலை வாழ்க்கையின் உயிர் நாடியாகக் கொண்டமை அக்கால நூல்களால் நன்கு தெரிகிறது. விருந்தோம்பலின் அருமையை அறிந்து வள்ளுவர் விருந்தோம்பலுக்கென்று தனியோர் அதிகாரத்தைப் படைத்துள்ளார்.

விருந்து என்ற சொல் புதுமையைக் குறித்துப் பின்பு ஆகுபெயராய் விருந்தினரைக் குறித்தது என்பதைத் தொல்காப்பியர்

http://Creativecommons.org//license/by/4.0/.

"விருந்து தானும் புதுவது கிளந்த
யாப்பின் மேற்றே" தொல்.பொருள் - செய்யுளியல் நூ.எண்.237.

என்றுரைக்கிறார்

பெரும்பாணாற்றுப்படை

பெரும்பாணாற்றுப்படை என்பது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகும். இந்நூல் மொத்தம் 500 பாடல் அடிகளைக் கொண்டு அமைந்தது. பெரியாழ் என்பது 21-நரம்புகளை உடைய யாழ் ஆகும். இப்பேரியாழை வாசிக்கும் பாணனொருவன் வறுமையால் வாடும் இன்னொரு பாணனை, தொண்டைமான் இளந்திரையன் என்னும் மன்னனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது. பெரும்பாணாற்றுப்படை நூலாகும்.

குறிஞ்சி நிலத்தவரின் விருந்தோம்பல்

குறிஞ்சி நாட்டு மன்னன் தன் சொல் கேளாத பகை மன்னரின் காவலுடைய நிலத்திற்குச் சென்று அதிகாலையில் அவர்களுடையப் பசுக்களைப் பற்றிக் கொண்டு வந்து அவற்றைக் கள்ளுக்கு விலையாகக் கொடுத்து குறிஞ்சி நிலத்தவர் தம் இல்லத்தில் நெல்லால் செய்த கள்ளினை உண்டு மகிழ்வர் இதனை,

"நான் ஆ தந்து தறவு நொடை தொலைச்சி
இல் அடு கள் இன் தோப்பி பருகி
மல்லல் மன்றத்து மதவிடை கொண்டி" பெருபாண் பா.அடி.140-145.

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடல் அடி கூறுகிறது.

மேலும் கண்ணகி கோவலனை விட்டுப் பிரிந்த நிலையில் விருந்தோம்பல் செய்ய இயலாததை எண்ணி வருந்துவதை

"அறவோர் களித்தலும் அந்நதணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" சிலம்பு.கொலை.பா.அடி.70-74.

என்னும் பாடல் அடி மூலம் அறிய முடிகிறது.

முல்லைநில மக்களின் விருந்தோம்பல் சிறப்பு

முல்லை நில ஆயர் வாழும் பாடியில் பாணர் செல்கையில் அவர்களை அன்புடன் வரவேற்றுத் தங்கள் மனையிலே அமர வைப்பர். குறிஞ்சி நிலத்தில் மோர் விற்று அதற்கு விலையாகப் பெற்று வந்த தினையரிசி யாலானச் சோற்றை இனிய பாலொடு கலந்து விருந்து கொடுப்பர்.

இதனை,

"எருமை நல் அன் கருநாடு பெறூஉம்
முடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்
இருங்கிளை ஞொண்டின் சிறுபார்ப்பு அன்ன
பசுந்திணை ஓரல் பாலொடும் பெறுகுவிர்" பெருபாண்.பா.அடி.165-170.

என்னும் பெரும்பாணாற்றுப் பாடல் அடி உணர்த்துகிறது.

மேலும்,

http://Creativecommons.org//license/by/4.0/.

விருந்தினரிடம் நண்பனைப்போல் உறவு கொண்டு இனிய சொற்களைக் கூறி கண்ணில் காணும் படி தனக்கு நெருக்கமாக இருக்கச் செய்து, கன்று ஈன்ற பசு கன்றிடம் காட்டும் அன்பு போல விருந்தினரிடம் அன்பு காட்டி எலும்பே குளிரும்படியான அன்பால் நெகிழச் செய்ய வேண்டும் இதனையே,

“கேளிர் போல கேள் கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறி
கண்ணால் காண நண்ணுவழி இரீஇ
பெருகு அன்ன அருகா நோக்கமொடு” **பொருநர்.பா.அடி.77-78.**

என்னும் பொருநராற்றுப்படை பாடலடி கூறுகிறது.

மருத நிலத்தவர்கள் விருந்தோம்பல் சிறப்பு

ஆயர்வாழ் சிற்றூரைக்கடந்து மருதநிலத்தினை அடையும் பாணரை, இங்கு வாழும் மக்கள் இனிதாக வரவேற்று வரகரசிச் சோற்றுடன் அவரைக்கொட்டைப் பொரியலும் தந்து விருந்தளிப்பர் இதனை,

”அவரை வான்புழுக்கு அட்டிப்பயில்வுற்று
இன்சுவை மூரல் பெறுகுவீர்” **பெருபாண்.பா.அடி. 195-199.**

என்கிறது பெரும்பாணாற்றுப்படை.

மேலும்,

கிடைத்தற்கரிய அமிழ்தம் கிடைத்தாலும் தான் மட்டும் உண்ணாமல் விருந்தினர்களோடு பகிர்ந்து உண்டார்கள். என்பதை,

”இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும்
இனி தெனத் தமியர் உண்டலும் இலரே” **புறம்.பா.எண்.182.**

நெய்தல் நிலத்தவரின் விருந்தோம்பல்

பொங்கல், அடை, அரியல்கள், மீன்சூட்டு வறுவல் போன்றவை நெய்தல் நிலத்தில் கொடுக்கப்படும் விருந்தாகும். நெய்தல் நிலத்தவர் அரியன் பிழியைச் சுடச்சுடத் தருவார்கள் என்பதை,

”வெம்நீர் அரியல் விரல் அலை நறும்பிழி
தண் மீன் சூட்டோடு தளர்தலும் பெறுகுவீர்” **பெருபாண்.பா.அடி.281-282.**

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடலடிகள் விளக்குகின்றன.

மேலும்

அவர்கள் மாடு மேய்க்கப் புறப்படும் போது உணவினை மூங்கில் குழாயில் இட்டு, மாட்டின் கழுத்தில் கட்டிக் கொண்டு காட்டுவழியே செல்வர். அங்கு யாரும் பசியோடு வந்தால். தாம் மட்டும் உண்பதற்கு வைத்திருக்கும் உணவினை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பர். என்பதை,

”கோவலன் மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி
செவியடை தீரத் தேச்சிலைப் பகுக்கும்
புல்லி நன்னாடு” **அகம் பா.எண்.311.**

என்ற அகநானூறு பாடல் மூலம் அறிய முடிகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

பாலை நிலத்தவரின் விருந்தோம்பல்

பெரும்பாணன் அவன் சுற்றத்தோடு திரையனைக் காண்பதன் பொருட்டு பாலை நிலத்தைக் கடந்து செல்கையில் அங்கு வாழும் எயினர்கள் பெரும்பாணர்களையும் எதிர்கொண்டழைத்து விருந்தளிப்பர். பாலை நிலத்தவரான எயினர்க்கு உணவு, சமைத்து உண்பர். புல்லரிசி என்பது எறும்பு புற்றில் சேர்த்து வைக்கும் அரிசியாகும். இத்தகைய அரிசியைத் தமது சுற்றத்தாருடன் சென்று எடுப்பர். நெய்தல் மக்களிடம் வாங்கிய உலர்ந்த மீன் கருவாடு இரண்டையும் சேர்த்து உண்பர் இதனை,

"வல் ஊற்று உவரி தோண்டித் தொல்லை
முரவு வாய்க் குழிசி முரி அரிப்பு ஏற்றி
வாராது அட்டவாரு உண் புழுக்கல்
வாடாத் தும்பை வயவர் பெருமகன்
ஓடாத் தாளை ஒண்தொழிற் கழற்கால்
சேவ்வாரை நாமன், சென்னயம் எனினே
தெய்வு மடையின் தேக்கு இலைக்குவை இநூம்" பெருபாண் பா.அடி.130-134.

என்ற பெரும்பாணாற்று பாடலடி எடுத்துரைக்கின்றது.

மேலும்

தலைவி தன் தோழியிடம் பலர் வரும் அளவிற்குள்ள பெரிய வாயிலை அடைப்பதற்கு முன்னர் உணவருந்த வரவிருக்கும் விருந்தினர் யாராவது இருக்கின்றார்களா? என அறிவிக்குமாறு வினவுகிறார். இதனை,

"புள்ளும் மாவும் புலம்பொடுவதிய
நள்ளென வந்த நார் இல் மாலை
பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர்"   குறுந்.பா.எண்.118.

என்று பழந்தமிரின் விருந்தோம்பல் பண்பைக் குறுந்தொகை பாடல் அடி மூலம் அறிய முடிகிறது.

தொகுப்புரை

சங்ககாலத் தமிழர் பண்பாடு மிக்கவர்களாகவும், பிறர் மானம் அறிந்து வாழ்பவர்களாகவும் காணப்படுகின்றனர். தமிழர்கள் தங்குவதற்கும், உணவு உண்ணுவதற்கும் முன் பின் அறியாதவர்களின் வீடுகளுக்குச் சென்று உணவு உண்டு இளைப்பாறினர். பிறகு தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். பழந்தமிழர்கள் விருந்தினைரை உபசரித்து அறுசுவை உணவுகளையும் வழங்கியது தமிழ்ச்சமூகம் என்று பெரும்பாணாற்றுப்படைத் தெரிவிக்கின்றது.

முடிவுரை

பண்டைய தமிழர்கள் அரசர்கள் முதல் குடிமக்கள் வரை அனைவரும் விருந்திளிக்கும் பண்பில் சிறந்து விளங்கி உள்ளனர். இன்றும் விருந்தோம்பல் திருமணங்களிலும், கோவில்களிலும், உறவினர்களுக்கும், முன் பின் அறியாதவர்களுக்கும் வயதானவர்களுக்கும் உணவு கொடுத்து மகிழ்ச்சியடைகின்றனர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

முதன்மை ஆதாரங்கள்

1. மோகன் இரா.(உ.ஆ): பத்துப்பாட்டு மூலமும் உரையும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி சிட்கோ இன்டஸ்டிரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை 600098.

துணைமை ஆதாரங்கள்

1. இராமலிங்கம் பிள்ளை, வெ. (உ.ஆ) திருக்குறள், தென்றல் பதிப்பகம், 12பி, மேலசன்னதி, சிதம்பரம் 608001.
2. சுப்பிரமணியன், ச.வே.(உ.ஆ), அகநானூறு, மெய்யப்பன் பதிப்பகம், 52, புதுத்தெரு, சிதம்பரம், 608001., முதற்பதிப்பு டிசம்பர் - 2009.
3. சுப்பிரமணியன் ச.வே.(உ.ஆ), புறநானூறு, மெய்யப்பன் பதிப்பகம், 52, புதுத்தெரு, சிதம்பரம், 608001., முதற்பதிப்பு டிசம்பர் - 2009.
4. புலியூர்க்கேசிகன், (உ.ஆ), குறுந்தொகை ஜீவா பதிப்பகம், புதிய எண்.8, சீனிவாசன் தெரு, தி.நகர், பேருந்து நிலையம் எதிரில் சென்னை 600017. முதற்பதிப்பு, ஆகஸ்ட் - 2012.
5. கௌமாரீஸ்வரி, எஸ்.(ப.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை - 14, முதற்பதிப்பு - 2005.

http://Creativecommons.org//license/by/4.0/.

12. முதுமொழிக்காஞ்சி காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

திருமதி பத்மபிரியா.கூ,
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
தேனிகம்மவார் சங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கொடுவிலார்பட்டி, தேனி.
DOI 10.5281/zenodo.15070004.

Abstract :

Literature speaks of the life of the Tamils, who are considered to be the oldest people who emerged before the time of Kalthonri and Manthonra. Since ancient times, the Tamils have been following morals in their lives without deviating from them. Therefore, humanity is continuously blossoming among the people. In this way, we will study the life shown by Mudhumozhikanji, one of the eighteen books, through this article.

Key Words ; Tamil - Mudhumozhi kanji - Life's Style

முகவுரை

முதுமொழி, முதுசொல் என்பவைப் பழமொழியைக் குறிக்கும். காஞ்சி என்பது நிலையைக் குறிக்கும் அறிவு நிறைந்த மொழியாகிய காஞ்சி என்பது இதன் பொருளாகும். முதுமொழியைப் பழமொழி என்றும் அழைப்பர். முதுமொழிக்காஞ்சி உலகியல் உண்மைகளை எடுத்துக் கூறுகின்றது.

“காஞ்சி என்பது பெண்கள் இடையில் அணியக் கூடிய ஒருவகை அணிகலக் கோவையையும் குறிக்கும் பல மணிகள் கோத்த காஞ்சி அணி போல முதுமொழிகள் பல கோத்த காஞ்சி எனப் பெயர் பெற்றது என்று கருதுவாரும் உண்டு. அங்ஙனம் கொள்ளின், முதுமொழிக்காஞ்சி என்பது அறவுரைக்கோவை என்னும் பொருள் பயந்து நிற்கும்” என ச.வே.சுப்பிரமணியன் கூறுகிறார்.

வாழ்வியில் சிந்தனைகள்

மனிதன் இப்பூமியில் பிறந்தது முதல் இறக்கும் வரை அவன் வாழ்வில் பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அவன் இப்பூமியில் வாழும் சில ஆண்டுகளில் அவன் வாழ்கின்ற வாழ்வில் உன்னால் இயன்ற அளவு அறங்களை செய்யுங்கள் என நம் முன்னோர்கள் நீதி இலக்கியங்கள் மூலம் நல்ல செய்திகளை உணர்த்தினர். அதில் முதுமொழிக் காஞ்சியும் ஒன்று. அந்நூலில் கூறியுள்ள வாழ்வியல் சிந்தனைகளைப் பற்றிக் காண்போம்.

தனிமனித ஒழுக்கம்

வாழ்வியல் ஒழுக்கம் என்பது நற்பண்பாகும். நன்னெறிகளை பின்பற்றி வாழ்ந்தால் வாழ்வில் மேம்பட்ட மனிதராக வாழமுடியும். தனிமனித வாழ்வியல் ஒழுக்கத்தை அனைத்து அற இலக்கியங்களும் முதன்மைப்படுத்துகின்றன.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (திருக்குறள் - 131)

ஒழுக்கம் என்னும் சொல் “தான் ஒழுகுதலும்”, பிறரை ஒழுகுமாறு செய்தலும்” என்ற இருகருத்தையும் உணர்த்துவதாகும். ஒழுக்கமே எல்லோர்க்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால் அந்த ஒழுக்கமே உயிரைவிடச் சிறந்தது என்கிறார் வள்ளுவர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

பழமொழி நானூறு ஒழுக்கத்தை விட உயர்ந்தது ஒன்றுமில்லை என்பதை,

“கல்லாதவரிடைக் கட்டுரையின் மிக்கதுஓர்
பொல்லாதது இல்லை ஒருவருக்கு - நல்லாய்
இழுக்கத்தின் மிக்க இழிவு இல்லை இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு”

(பழமொழிநானூறு - 64)

எனக் கூறுகிறது. நல்லொழுக்கமே செல்வம் என்கிறது நான்மணிக்கடிகை. அதே வேளையில் ஒழுக்கம் தவறியவர்களிடத்துச் செல்வம் தங்காது என்பதனை,

“திருவும்திணை வகையான் நில்லர் பெருவலிக்
கூற்றமும் துறுவசெய்து உண்ணாது ஆற்ற
மறைக்க மறையாதாம், காமம் முறையும்
இறை வகையான் நின்றுவிடும்”

(நான்மணிக்கடிகை - 39)

கல்வி கற்றால் ஒழுக்கம் வரும் என்று அனைத்து இலக்கியங்களும் கூறுகிற போது முதுமொழிக்காஞ்சி ஒழுக்கம் கல்வியைவிட சிறந்தது என்கிறது.

“ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்
ஓதலின் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை”

என உணர்த்துகிறது.

கல்வி

பழந்தமிழர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தனர் என்பதனை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். கல்வி மனிதனை மனிதனாக்குகிறது. கல்வி கற்றலின் அவசியத்தை அறிந்த கிழார்,

“குலன் உடைமையின் கற்புச் சிறந்தன்று”

(சிறந்த பத்து - 7)

கல்வி கற்றவர்கள் எக்குலத்தில் பிறந்தவராயினும் அவர்கள் உயர்ந்தவர்களாவார்கள். கல்லாதவர்கள் எக்குலத்தில் பிறந்திருந்தாலும் அவர்கள் இழிகுலத்தவர்களாகவே கருதப்படுவார்கள் என்று கூறுகிறார். இதனையே திருவள்ளுவரும்,

“மேற்பிறந் தாராயினும் கல்லாதார் கீழ்கிறந்தும்
கற்றார் அனைத்திலா பாடு”

(திருக்குறள் - 409)

கல்வி கற்றால் மட்டும் போதாது. கற்ற கல்வியை என்றும் மறவாது இருத்தல் வேண்டும். அதனை,

“மேதையின் சிறந்தன்று, கற்றது மறவாமை”

(சிறந்த பத்து - 3)

அதிகமான நூல்களைக் கற்று பேரறிவுடையவன் என்பதைக் காட்டிலும், படித்த கல்வியை மறவாது இருத்தல் சிறந்ததாகும் என்று கல்வியின் இன்றியமையாமையை விளக்குகிறார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

ஈகை

இல்லாத ஒருவருக்கு இருப்பவர் கொடுத்துதவும் பாங்கே ஈகை எனப்படும். அறவழியில் மட்டுமே ஈகை செய்ய வேண்டும் என்று எடுத்துரைக்கின்றது இந்நூல். இதனை,

"அறத்து ஆற்றின் ஈயாதது ஈகையன்று"

(அல்ல பத்து - 8)

என்ற பாடலடி உணர்த்துகிறது. மேலும் மற்றொரு பாடலில் விருப்பதுடன் தான் ஈகை செய்ய வேண்டும். விருப்பம் இல்லாமல் ஈகை செய்யக் கூடாது என்று எடுத்துரைக்கிறார். இதனை,

"பேண் இல்ஈகை மாற்றலின் துவ்வாது"

(துவ். பத்து - 4)

என்ற பாடலடி உணர்த்துகிறது. மேலும் மற்றொரு பாடலில் வறியவர்க்கு ஒன்று ஈவதை விடச் சிறப்பு இல்லை என்கிறார். இதனை,

"இரப்போர்க்கு ஈதலின் எய்தும் சிறப்பு இல்லை"

(இல்லை பத்து - 10)

என்ற பாடலடி குறிப்பிடுகிறது. திருவள்ளவரும் திருக்குறளில் ஈகை என்ற ஒரு அதிகாரத்தையேப் படைத்துள்ளார். அதில்,

"வறியவர்க்கொன்று ஈவதே ஈகைமற்றெல்லாம்
குறியெதிர்வை நீர துடைத்து"

(திருக்குறள் - 221)

என்கிறார். இல்லாதவருக்கு ஒரு பொருளைக் கொடுப்பது தான் கொடையாகும். மற்றவர்களுக்குக் கொடுக்கும் கொடையெல்லாம் பயனை எதிர்பார்க்கும் தன்மையை ஒத்தன என்று குறிப்பிடுகிறார்.

புகழ்

உலகத்தில் ஒருவன் சேர்த்து வைக்கக் கூடியது புகழ் ஆகும். இதனை,

"இசையின் பெரியது ஓர்எச்சம் இல்லை"

(இல்.பத்து - 8)

என்ற பாடலடி விளக்குகிறது. மேலும் மற்றொரு பாடலில் நற்செயல்களைச் செய்பவன் புகழ்பெறுவான் என்ற கருத்தை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். இதனை,

"வீங்கல் வேண்டுவோன் பலபுகழ் தண்டான்"

(தண்.பத்து - 2)

என்ற பாடலடி உணர்த்துகிறது. திருவள்ளுவரும் இக்கருத்தை வலியுறுத்துகிறார். இதனை,

"நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு"

(திருக்குறள் - 234)

இப்பூமியின் எல்லையளவுக்குப் பரவியிருக்கும் புகழ்தரும் செயல்களை ஒருவன் செய்வானானால், தேவகுலத்தவர் தேவரைப் போற்றாது அவனையே போற்றுவர் என்று குறிப்பிடுகின்றார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

அரசுடைமை

செங்கோல் இல்லாத அரசரது நாட்டில் இருந்துகொண்டு அவ்வரசனது கொடுங்கோன்மையைப் பழித்துச் சொல்லக் கூடாது. இதனை,

"முறைஇல் அரசர் நாட்டுஇருந்து பழியா"

(பழியா.பத்து - 6)

என்ற பாடலடி குறிப்பிடுகிறது. இக்கருத்தை வலு சேர்க்கும்விதமாக வள்ளுவரும்,

"கொலைமேற்கொண் டாரிற் கொடிதே
அல்லவை செய்தொழுகும் வேந்து"

(திருக்குறள் - 551)

என்று குடிகளை வருத்துதலை மேற்கொண்டு நீதியில்லாதவற்றைச் செய்து நடக்கும் அரசன், கொலைத் தொழில் செய்கின்றவர்களை விடக் கொடியவனாவான் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

சொல்வன்மை

ஒருவனுடைய தவறுகளை அவனது மாறுபாடுள்ள சொல்லால் அறியலாம். இதனை,

"ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு"

(திருக்குறள் -642)

என்ற குறட்பா சொல்லின் வன்மையை, வலிமையை வலியுறுத்துகிறது. எனவே சொல்லின்கண் சோர்வு என்பது எப்பொழுதும் கூடாத ஒன்றாகும். அந்தச்சொல்லின்கண் சோர்வு இருந்ததால் தான் பாண்டிய மன்னன்,

"தாழ்பூங் கோதை தண்கால் சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகின்
கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கென"

(சிலப்பதிகாரம், கொலைகளக்காதை:151-153)

என்று கூறினான். கோவலன் மாண்டான். சொல்லின் சோர்வு இல்லாவிடில், "கொணர்க சிலம்பை" என்று கூறியிருப்பான். எனவே சொல்கிற சொற்களில் இந்தப் பிழை உண்டாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்பிழையை நீக்கிக் கொள்ளாத ஒருவன் தன்னிடத்தில் உண்டாகும் வேறு பிழைகளையும் அறிந்துகொள்ள மாட்டான். இதனையே முதுமொழிக்காஞ்சி,

"சொல்சோர்வு உடைமையின் எச்சோர்வும் அறிப"

(அறிவுப்பத்து - 8)

எனக் குறிப்பிடுகிறது. ஒருவன் முயற்சியின் திறம் அவன் முடிக்கும் செயலால் அறியப்படும் என்பது அறிவுப்பத்தில் நாம் அறிந்து கொள்ளக்கூடிய செய்தியாகும்.

நிறைவுரை

எத்தகைய உயர்குடியில் பிறந்தவனாக இருந்தாலும் கல்வி கற்கவில்லை என்றால் குடிப்பிறப்பு மங்கி வெறும் ஊனைச் சுமந்து நிற்கும் மலையாகவே கருதப்படுவான். தேடி வரும் வறியவர்க்கு இல்லையென்று கூறாமல் அவர்களுக்கு தேவையான பொருளைக்

http://Creativecommons.org//license/by/4.0/.

கொடுத்து உதவும் ஈகைத்தன்மையும், கல்வியை விட மேலானது ஒழுக்கம் என்றும், ஒருவனுடைய தவறுகளை அவனது மாறுபாடான சொற்களால் அறியலாம் என்பது பற்றியும் கூடலூர் கிழார் தான் இயற்றிய முதுமொழிக்காஞ்சியில் எடுத்துக் கூறுவதன் மூலம் அறிய முடிகிறது.

துணைநூற் பட்டியல்

1. சுப்பிரமணியம்.ச.வே.(ப.ஆ), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2007
2. திருக்குறள் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், 2000.
3. ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ), சிலப்பதிகாரம், ராமையா பதிப்பகம், 2008.

http://Creativecommons.org//license/by/4.0/.

13. வரலாற்றுப் பதிவுகளும் இலக்கியங்களும்

பேரா.ச.பூபாலன்
உதவிப் பேராசிரியர் & வரலாற்றுத் துறைத்தலைவர்,
கொன்சாகா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
காத்தாம்பள்ளம், கிருஷ்ணகிரி.
DOI 10.5281/zenodo.15070014.

Abstract :

When the boundaries of history are narrowed and the history of our society is studied, it becomes interesting and more useful. Many historical landmarks are hidden in the towns, villages, and cities where we live without our knowledge. When the interesting history of these historical monuments is studied, it has made a very rich contribution to its culture, history, and literary tradition. The oldest and most famous literary works and historical documents of Tamil play an important role in its development. In this study, we can learn about the importance of historical records and literature of Tamil Nadu, their types and their sociological implications.

Key Words ; History - Literature - Tradition - Development

முன்னுரை

வரலாற்றின் எல்லை குறுகி நமது சமூகத்தின் வரலாற்றை ஆய்வு செய்கின்ற பொழுது அது சுவாரசியமாகவும் அதிக பயனுள்ளதாகவும் அமைகின்றது. நாம் வாழ்கின்ற ஊர், கிராமம், மற்றும் நகரம் போன்றவற்றில் பல வரலாற்று அடையாளங்கள் நாம் அறியாமலேயே மறைந்திருக்கின்றன. இந்த வரலாற்று நினைவுச் சின்னங்களின் சுவாரசியமான வரலாற்றை ஆய்வு செய்யப்படும் பொழுதுஅதன் கலாச்சாரம், வரலாறு, மற்றும் இலக்கிய பாரம்பரியத்தில் மிகுந்த செழிவான பங்களிப்பு வழங்கியுள்ளது.

தமிழின் மிகப் பழமையான மற்றும் தலைசிறந்த இலக்கிய படைப்புகளும், வரலாற்று ஆவணங்களும் அதன் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த ஆய்வில் தமிழ்நாட்டின் வரலாற்று பதிவுகள் மற்றும் இலக்கியங்களின் முக்கியத்துவம் அவற்றின் வகைகள் மற்றும் அதன் சமூகவியல் தாக்கங்கள் பற்றி அறிந்து கொள்ளலாம்.

அகப்பொருள் இலக்கியம்

அகப்பொருள் இலக்கியங்கள் என்பது சுமார் கிமு 300ஆம்நூற்றாண்டுக்கு முன்பு சங்க காலத்தில் உருவான இலக்கியங்கள் ஆகும். இதில் கிமு 300லிருந்து கிமு 200 வரை உள்ள காலகட்டத்தில் எழுதப்பட்டவை செவ்வியல் இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியம் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட வரை 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381பாடல்களைக் கொண்டுள்ளது. இப்புலவர்களுள் பலதரப்பட்ட தொழில் நிலையில் உள்ளோரும், பெண்களும், நாடாளும் மன்னரும் உண்டு. இவர்களின் படைப்புகளில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை ஆகும்.

19-ம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களான சி.வை தாமோதரம் பிள்ளை, உ.வே சாமிநாத ஐயர் ஆகியோரின் முயற்சியினால் சங்க இலக்கியங்கள் அச்சுருப் பெற்றன. இவ்வாறான அனைத்து படைப்புகளும் சங்க கால மக்களின் இல்லற

http://Creativecommons.org//license/by/4.0/.

வாழ்க்கைப்பற்றிய செய்திகளை நமக்கு எடுத்துக் கூறுகின்றன இதனையே அகப்பொருள் இலக்கியங்கள் என்று கூறுகின்றனர்.

புறப்பொருள் இலக்கியம்

புறப்பொருள் இலக்கியங்கள் என்பது வரலாற்று நிகழ்வுகள் மற்றும் பழமையான மாகாணங்களின் தொடர்பில் எழுதப்பட்ட இராமாயணம், மகாபாரதம், போன்ற பண்டைய இந்திய மரபுகளுடன் இணைந்து தமிழில் உள்ள சங்க கால சேரர், சோழர், பாண்டியர் போன்ற அரசு குடும்பங்கள் பற்றிய வரலாற்று தகவல்களை கூறுவனவாகும். இது அகப்பொருள் இலக்கியங்களுக்கு மாறாக வீரம், போர், வெற்றி, கொடைபோன்ற புறப்பொருள் சார்ந்த விஷயங்களை கூறும் இலக்கியங்கள் ஆகும்.

இதில் புறப்பொருள் இலக்கியங்களாக கருதப்படுவது புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு போன்ற நூல்கள் புறப்பொருள் இலக்கியங்கள்சிறந்த எடுத்துக்காட்டாகும். அதேபோல் அகம் மற்றும் புறம் ஆகிய இரண்டையும் சேர்த்து காட்டக்கூடிய இலக்கியங்களாக கருதப்படும் நூல்கள் தொல்காப்பியம், ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, அகநானூறு, போன்ற நூல்கள் இரண்டையும் ஒருசேர காட்டும் நூல்கள் ஆகும்.இவற்றுள் புறப்பொருள்கூறப்படும் தொல்காப்பியம்.

- வெட்சித்திணை
- வஞ்சித் திணை
- தும்பைத்திணை
- உழிஞைத்திணை
- வாகைத்திணை
- காஞ்சித்திதிணை
- பாடாண் திணை

போன்ற ஏழு பெரும் பிரிவுகளாக பிரிந்து சங்ககால ஆட்சி முறையை நமக்கு வரலாற்று தகவல்களாக கூறுகின்றது.

இதனைத் தொடர்ந்து புறப்பொருள் வெண்பாமாலை நெறிகளாக,

வெட்சி	கரந்தை	வஞ்சி	காஞ்சி
உழிஞை	நொச்சி	தும்பை	வாகை
பாடாண்	பொதுவியல்	கைக்கிளை	பெருந்திணை

ஆகிய நூல்கள் சங்க கால புறப்பொருள் வரலாற்று படைப்புகளை நமக்கு எடுத்துக் கூறுகின்றன.

இந்திய வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கு இலக்கிய ஆதாரங்கள் ஒரு புதையல். அவற்றை பரவலாக பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

http://Creativecommons.org//license/by/4.0/.

மத நூல்கள்

இந்து நூல்கள் வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள் மற்றும் மகாபாரதம் மற்றும் ராமாயணம் போன்ற இதிகாசங்கள் பண்டைய இந்திய சமூகம், கலாச்சாரம் மற்றும் அரசியல் பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகின்றன.

பௌத்த நூல்கள்

திரிபிடகங்கள் (வினய, சுத்த மற்றும் அபிதம் பிடகங்கள்) மற்றும் ஜாதகக் கதைகள் புத்த போதனைகள் மற்றும் வரலாற்று சூழல்களைப் பற்றிய ஒரு பார்வையை வழங்குகின்றன.

சமண நூல்கள்

ஆகமங்கள் மற்றும் கல்பசூத்திரம் போன்ற படைப்புகள் சமண தத்துவம் மற்றும் நடைமுறைகள் குறித்து வெளிச்சம் போடுகின்றன.

மதச்சார்பற்ற இலக்கியம்

வரலாற்று கணக்குகள்: கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் மற்றும் காளிதாசரின் படைப்புகள் (எ.கா., அபிஞானசகுந்தலம்) போன்றநூல்கள்ஆட்சி, பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் பற்றிய தகவல்களை வழங்குகின்றன.

சங்கஇலக்கியங்கள்

எ.கா., பத்துப்பட்டு போன்ற சங்ககால தமிழ்நூல்கள் பண்டைய தென்னிந்தியாவின் சமூக-அரசியல் மற்றும் கலாச்சார வாழ்க்கையை பிரதிபலிக்கின்றன.

வெளிநாட்டவரின் படைப்புகள்

தமிழ் வரலாறு மற்றும் கலாச்சாரம் பற்றி வெளிநாட்டினர் எழுதியுள்ள சில முக்கிய படைப்புகள்.

மெகஸ்தனிஸ் (இண்டிகா), ஃபா-ஹியன் மற்றும் அல்-பிருனி போன்ற பயணிகள். இந்திய சமூகத்தைப் பற்றிய தங்கள் அவதானிப்புகளை ஆவணப்படுத்தி, வெளிப்புறக் கண்ணோட்டத்தைச் சேர்த்தனர்.

இந்த இலக்கிய ஆதாரங்கள், தொல்பொருள் கண்டுபிடிப்புகளுடன் இணைந்து, இந்தியாவின் வளமான மற்றும் பன்முகத்தன்மை கொண்டவரலாற்றை மீண்டும் உருவாக்க உதவுகின்றன.

- பெர்சிவல் (Percival)

  இவர் 'தென் இந்தியாவிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள்' என்ற நூலை எழுதியுள்ளார்.

- கால்டுவெல் (Robert Caldwell):

  திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (A Comparative Grammar of the Dravidian or South-Indian Family of Languages) என்ற நூலை எழுதியுள்ளார்.

- ஜி.யு.போப் (George Uglow Pope)

  திருக்குறள், திருவாசகம் போன்ற தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

- பி.ஐ.சீனிவாச அய்யங்கார் (P.T. Srinivasa Iyengar)

http://Creativecommons.org//license/by/4.0/.

இவர் "தமிழர் வரலாறு" (History of the Tamils From the Earliest Times to 600 A.D.) என்ற நூலை எழுதியுள்ளார்.

- எஃப்.டபிள்யூ. எல்லீஸ் (F.W. Ellis)

திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

- ஹென்றி வதிங்டன் (Henry Yule)

இவர் மார்கோபோலோவின் பயணங்களோடு தொடர்புடைய பல குறிப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

- மார்கோபோலோ (Marco Polo)

இவர் பாண்டிய மன்னர்களின் ஆட்சியில் தமிழ் நாட்டில் இருந்த வளங்களை பற்றி தன்னுடைய பயணக்குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூல்கள் தமிழர்களின் வரலாறு, மொழி, கலாச்சாரம் மற்றும் சமூகம் குறித்த வெளிநாட்டினரின் பார்வையை நமக்கு வழங்குகின்றன.

வரலாற்று ஆவணங்கள்

ஒருநாட்டின்வரலாற்றைவிவரிக்கும்ஆவணங்கள் பலவாக உள்ளன. அவற்றுள் தமிழர் நாகரிகம், அரசியல் அமைப்புகள், சமூகவியல் கட்டமைப்புகள், மற்றும் கலாச்சார பரிமாற்றங்களை பற்றி கூறுவன வாகும்.அவற்றுள்,

- அரசர்களின்செயல்கள்
- சட்டங்கள்
- போர்களின் தகவல்கள்
- ஓலைச்சுவடிகள்
- கல்வெட்டுகள்
- செப்பு பட்டயங்கள்
- அகழாய்வில் கிடைக்க பெறும் புதைபொருட்கள்
- நாட்டை பற்றிய ரகசிய கடிதங்கள்
- இரு நாட்டுடன் ஆன ஒப்பந்தங்கள்
- கல்வி சார்ந்த ஆவணங்கள்
- மருத்துவ பதிவுகள்

போன்ற அனைத்தையும் வரலாற்று ஆதாரங்களாக கருதப்படுகின்றது.

சட்டம் மற்றும் வரலாற்று ஆவணங்கள்

இந்தியாவை பல்வேறு ஆட்சியாளர்கள் ஒரே குடையின் கீழ் ஆட்சி செய்தனர். அவற்றில் குறிப்பாக தமிழகம் பல்வேறு ஆட்சியாளரின் கீழ் இருந்தது. சோழர், பாண்டியர், முகலாயர்கள், ஆங்கிலேயர்கள் பெரும்பான்மையாக ஆட்சி செய்தனர்.ஒவ்வொரு ஆட்சியாளர்களின் காலங்கள் பற்றியும் வரலாற்றில் ஆவணங்களாக பதிவிடப்பட்டது. இவை அனைத்தும் முற்காலங்களை ஆட்சி செய்த சோழர்கள் பாண்டியர்களின் அரசாட்சி நேரங்கள் போக அவர்களுடைய ஆட்சி முறைகள், போர் முறைகள், சமூக, பொருளாதார, சமயம், கலை, கட்டடக்கலை ஆகிய அனைத்தையும் கல்வெட்டுகளாக பொறிக்கப்பட்டனர். இதனை பிற்காலங்களில் பதிவேட்டு ஆவணங்களாக மாற்றப்பட்டது. இவை அனைத்தும் அன்றைய அரசியல் மற்றும் சமூக அமைப்புகளை புரிந்து கொள்ள உதவுகின்றன.

http://Creativecommons.org//license/by/4.0/.

எழுத்து பொருள்கள்

வரலாற்று படைப்புகளில் மேலும் ஒரு முக்கிய பங்கு வகிப்பவை இலக்கியங்கள். இவை மிகப்பெரிய பங்காக உணரப்படும்.பனை இலைகளில் எழுதப்பட்ட கைப்பதிவுகள் மிக முக்கியமானவை. இவை பெரும்பாலும் கடவுள் வழிபாடுகள், அரசியல், சமூகவியல், மற்றும் வரலாற்று நிகழ்வுகள் பற்றிய பதிவுகளை கொண்டிருந்தன.

இது மட்டும் இன்றி மிக முக்கியமான ஆவணங்களாக கருதப்படுவது செப்பு தகடுகளில் பதிக்கப்பட்டு இருந்த ஆவணங்கள் ஆகும். அதில் அரசவை சம்பந்தமான ஆவணங்கள், சட்டம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஆகிய நிலையாக இருக்க வேண்டும் என்பதற்காக உலோகங்களால் பொறிக்கப்பட்டு இருந்தன. அது மட்டும் இன்றி அரசுக்கு உறுதுணையாக இருந்த அரசு சேவகர்களுக்கு பட்டயங்கள் வழங்கப்பட்டது. இவை அனைத்தையும் தங்கம் மற்றும் வெள்ளி போன்ற உலோகங்களாலும் வழங்கப்பட்டது.

நாட்டின் சமூக பொருளாதாரங்களை பற்றிய வரலாற்று ஆவணங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்றால் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் மூலமாகவும் வாணிபத் தலங்கள் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம். இவை அனைத்தும்எழுத்துப்பொருட்களின் வரலாற்று ஆவணங்களாக கருதப்படுகின்றது.

முடிவுரை:

வரலாற்றில் சமூக மாற்றங்கள் மற்றும்தமிழில் எழுத்துப் பணிகள், தமிழ் இலக்கியம் சமுதாய மாற்றங்களை பிரதிபலிக்கின்றது. சிறந்த எழுத்தாளர்கள் தங்களின் படைப்புகளின் மூலம் சமூக ஒழுக்கம், அரசியல் நிலைகள், கலாச்சார மாற்றங்கள் பற்றிய கருத்துக்களை வழங்கினர்.பிரிதிபோன்ற இலக்கியங்கள் சமூகத்தை திருத்துவதற்கான இலக்கை அடைவதற்காக எழுதியவை.

தமிழக வரலாற்று பதிவுகள் மற்றும் இலக்கியங்கள் தமிழின்செழிப்பான கலாச்சார மற்றும் வரலாற்றை போதிக்கும் முக்கியமான ஆதாரங்களாகும். இவை நம் சமூகத்தின் பொருளாதார, அரசியல் மற்றும் சமுதாய நிலைகளின் மேலான புரிதலை வழங்குகின்றன.தமிழின் பெருமையான வரலாறும் இலக்கியங்களும் எப்போதும் உலகளாவிய மரபுகளுக்கு ஊக்கமளிக்க தக்கவை.

சான்றுகள்:

- பாண்டியர் வரலாறு டி.வி. சதாசிவ பண்டாரத்தார், ஸ்ரீ செண்பகா பதிப்பகம்.
- மூவேந்தர்கள்சேரர்சோழர்பாண்டியர்வரலாறு. ஔவை சு.துரைசாமி பிள்ளை வித்துவான், மா.இராசமாணிக்கம்பிள்ளை,தி.வை.சதாசிவபண்டாரத்தார். அமராவதி பதிப்பகம் நாமக்கல், தமிழ்நாடு.
- தமிழ்நாட்டுவரலாறுஅ.இராமசாமிமுன்னாள்துணைவேந்தர்,அழகப்பாபல்கலைக்கழகம் சென்னை.
- தமிழ்நாட்டின் சிறப்புக் குறிப்புடன் இந்தியாவில் நடைபெற்ற மக்கள் எழுச்சிகள். சி.பி.ஆர். இன்டோலாஜிக்கல் ரிசர்ச் நிறுவனம் (மெட்ராஸ் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) சி.பி. ராமஸ்வாமி ஐயர்அறக்கட்டளை. எல்டாம்ஸ்சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை.
- வெளிநாட்டவரின் படைப்புகள் உள்ளடக்கி இருக்கின்றன.

http://Creativecommons.org//license/by/4.0/.

14. வரலாற்றுப் பார்வையில் தமிழர் நிலமும் மொழியும்

பா. மஞ்சுஸ்ரீ,
முதலாம் ஆண்டு வரலாறு, வரலாற்றுத் துறை,
கொன்சாகா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, காத்தாம்பள்ளம்,
கிருஷ்ணகிரி

பேரா.ச.பூபாலன்,
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை,
கொன்சாகா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, காத்தாம்பள்ளம்,
கிருஷ்ணகிரி.

DOI 10.5281/zenodo.15070023.

Abstract :

The land and language of the Tamils are not just geographical places or instruments of exchange. They are a mirror that reflects the soul and identity of a civilization. From the Sangam period to the present day, the land of the Tamils has not only been their livelihood but also their cultural and spiritual identity. Moreover, the lands are divided into five types of territories and have shaped the lifestyles and thoughts of the Tamils in each period. Similarly, language has been a tool to preserve the history, knowledge and arts of the Tamils of the world. Moreover, the Tamil language has been enriched in various forms in various periods from Sangam literature to modern times.

Key Words : land and language - Sangam Periods - Civilization - cultural and spiritual

முன்னுரை

தமிழர் நிலமும் மொழியும் வெறும் புவியியல் இடங்களோ அல்லது பரிமாற்ற கருவிகளோ அல்ல. அவை ஒரு நாகரீகத்தின் ஆன்மாவையும் அடையாளத்தையும் பிரதிபலிக்கும் கண்ணாடி. சங்ககாலம் முதல் இன்று வரை தமிழர்களின் நிலம் அவர்களின் வாழ்வாதாரமாக மட்டும் இன்றி அவர்களின் கலாச்சாரம் மற்றும் ஆன்மீக அடையாளமாகவும் இருந்து வருகிறது. மேலும் நிலங்கள் ஐவகை திணைகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழர்களின் வாழ்க்கை முறைகளையும் சிந்தனைகளையும் வடிவமைத்துள்ளது. அதேபோல் மொழி என்பது உலகின் தமிழர்களின் வரலாற்றையும் அறிவையும் கலைகளையும் பாதுகாக்கும் கருவியாக விளங்கி வருகிறது. மேலும் தமிழ் மொழியும் சங்க இலக்கியம் முதல் நவீன காலம் வரை தமிழ் மொழி பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வடிவங்களில் செழுமைப்படுகிறது.

வரலாற்று பார்வையில் நிலம்

தமிழர்களின் பூர்வீக நிலம் 'தமிழகம்' என்று அழைக்கப்படுகிறது. சங்க காலத்தில் தமிழகம் சேர, சோழ, பாண்டிய நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்துவமான நிலவியல் மற்றும் கலாச்சார அடையாளங்கள் இருந்தன. நிலம் தமிழர்களின் வாழ்வாதாரமாக மட்டுமின்றி அவர்களின் கலாச்சாரம் மற்றும் ஆன்மீக அடையாளமாகவும் இருந்தது.

சங்க இலக்கியங்கள் நிலத்தை ஐந்து திணைகளாக பிரித்து நிலத்தின் தன்மையை சிறப்பாக கூறுகிறது. ஐவகை நிலங்களின் பட்டியல் பின்வருமாறு :

http://Creativecommons.org//license/by/4.0/.

- குறிஞ்சி
- முல்லை
- மருதம்
- நெய்தல்
- பாலை

போன்றவை ஐவகை நிலங்களாக குறிப்பிடப்படுகின்றன.

குறிஞ்சி

மலையும் மலை சார்ந்த இடங்களும் குறிஞ்சி நிலம் ஆகும். இப்பகுதியில் குறவர் மற்றும் குறத்தியர் வாழ்ந்தனர். குறிஞ்சி நிலத்தின் தெய்வம் முருகன் ஆவார். குறிஞ்சி பூக்கள் கொண்டு இயற்கையை வழிபட்டனர். இவர்களின் முக்கிய தொழில்களாக வேட்டையாடுதல் மற்றும் தேன் சேகரித்தல் இருந்தன. குறிஞ்சி நில மக்கள் எளிமையான வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தனர்.

முல்லை

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலமாகும். முல்லை நிலத்தின் தெய்வம் திருமால் ஆவார். இசைக்கருவிகளைக் கொண்டு இறைவனை வழிபட்டனர். முல்லைப் பூக்கள் கொண்டு இறைவனை வழிபட்டனர். இங்கு ஆயர் மற்றும் ஆய்ச்சியர் வாழ்ந்தனர். இவர்களின் முக்கிய தொழிலாக கால்நடை வளர்ப்பு மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி போன்றவை இருந்தன.

மருதம்

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் ஆகும். இங்கு உழவர் மற்றும் உழத்தியர் வாழ்ந்தனர். மருத நிலத்தின் தெய்வம் இந்திரன் ஆவார். இம்மக்கள் வயல்வெளிகளில் இயற்கையை வணங்கினர். மருத நில மக்கள் பல்வேறு கலைகளை வளர்த்தெடுத்தனர் விவசாயம் மற்றும் நெல் உற்பத்தி அவர்களின் முக்கிய தொழில்களாக இருந்தன.

நெய்தல்

கடலும் கடல் சார்ந்த இடங்களும் நெய்தல் நிலம் ஆகும். இங்கு பரதவர் மற்றும் பரத்தியர் வாழ்ந்தனர். நெய்தல் நிலத்தின் தெய்வம் வருணன் ஆவார். நெய்தல் நில மக்கள் மீன்பிடித்து இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். மீன்பிடித்தல் மற்றும் உப்பு உற்பத்தி இவர்களுடைய முக்கிய தொழில்களாக விளங்கின. இவர்கள் கடல் சார்ந்த விளையாட்டுகளில் ஈடுபட்டனர்.

பாலை

வறண்ட மற்றும் மணற்பாங்கான இடமாகும். இது மணலும் மணல் சார்ந்த இடம் எனவும் அழைக்கப்படுகிறது. இங்கு எயினர் மற்றும் எயினியர் வாழ்ந்தனர். இவர்கள் கொற்றவை தெய்வத்தை வணங்கினர். இம்மக்கள் போர் முறைகளை பயன்படுத்தி வாழ்ந்தனர். கொள்ளையிடுதல் மற்றும் கால்நடை திருடுதல் அவர்களின் முக்கிய தொழில்களாக இருந்தன. மேலும், ஐவகை நிலங்களும் தமிழர்களின் வாழ்க்கை முறையையும் கலாச்சாரத்தையும் நிலவியல் அறிவையும் பிரதிபலிக்கின்றன.

http://Creativecommons.org//license/by/4.0/.

வரலாற்றுப் பார்வையில் மொழி

மொழி என்பது மனிதன் தனது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு கருவியாகும். இது பேச்சு எழுத்து மற்றும் சைகைகள் அல்லது வேறு எந்த குறியீட்டு முறைகளையும் பயன்படுத்தி தகவல் தொடர்பு கொள்ள உதவும்.

மொழி பற்றிய சில முக்கிய தகவல்கள்

- கருத்து பரிமாற்றம்
- கலாச்சாரம்
- அடையாளம்
- சிந்தனை கருவி
- பல்வேறு வடிவங்கள்
- வளர்ச்சி

மொழி என்பது மனிதகுலத்தில் மிக முக்கியமான கண்டுபிடிப்புகளில் ஒன்றாகும். இது மனிதர்களின் ஒன்றிணைக்கவும் அறிவை பகிரவும் கலாச்சார பாதுகாப்பிற்கும் உதவும். மொழிகளுள் தமிழ் மொழி மற்றும் ஐவகை நிலங்களில் பேசப்பட்ட மொழி பற்றி அறிவோம்.

ஐவகை நிலங்களில் மொழி

குறிஞ்சி

குறிஞ்சி நில மக்கள் பேசிய மொழி மலைவாழ் மக்களின் பேச்சு வழக்குகளை கொண்டிருந்தது. மேலும் தமிழ் மொழியின் ஆரம்பகால வடிவத்தினை கொண்டிருந்தது. நில அமைப்பு காரணமாக தனித்துவமான சொற்களும் பேச்சு வழக்குகளும் அமைந்தன .

முல்லை

இம்மக்கள் காட்டு வாழ்க்கை மற்றும் கால்நடை வளர்ப்பு சார்ந்த சொற்கள் அதிகமாக இருந்தன . இடையர் இன மக்கள் பேசிய பேச்சு வழக்குகள் சிறப்புற்று இருந்தன.

மருதம்

இம்மக்கள் பேசிய மொழியில் விவசாயம் மற்றும் நீர் மேலாண்மை வணிகம் சார்ந்த சொற்கள் அதிகமாக இருந்தன. நகர்ப்புற பேச்சு வழக்குகளும் வணிக மொழிகளும் வளர்ச்சி அடைந்தன.

நெய்தல்

மீன்பிடித்தல், கடல் வணிகம் மற்றும் கப்பல் போக்குவரத்து சார்ந்த சொற்கள் அதிகமாக இருந்தன. கடலோர பேச்சு வழக்குகளும் கடல் வணிக மொழிகளும் வளர்ச்சி அடைந்தன.

பாலை

பாலை நில மக்கள் பேசிய மொழியில் வறட்சி கொள்ளை மற்றும் போர் சார்ந்த சொற்கள் அதிகமாக இருந்தன. வறண்ட நிலப் பகுதி பேச்சு வழக்குகளும் போர் மொழிகளும் வளர்ச்சி அடைந்தன.

http://Creativecommons.org//license/by/4.0/.

ஐவகை நிலங்களின் மொழிகள் பண்பாடு மற்றும் கலாச்சாரம் ஆகியவை தமிழர்களின் வரலாற்று அடையாளங்களை வெளிப்படுத்துகின்றன.

வரலாற்றுப் பார்வையில் தமிழ் மொழியின் பங்கு

பண்டைய தமிழ்மொழி

தமிழ் மொழி திராவிட மொழிக் குடும்பத்தில் மிகவும் பழமையான மொழியாகும். சங்க இலக்கியங்கள் தமிழ் மொழியின் தொன்மையையும் அதன் வளத்தையும் பறைசாற்றுகின்றனர் . தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள் தமிழ் மொழியின் கட்டமைப்பையும் அதன் சிறப்புகளையும் விளக்குகின்றன.

இலக்கிய வளம்

சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் என தமிழ் இலக்கியம் பல்வேறு காலகட்டங்களில் வளர்ந்துள்ளது. திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காவியங்கள் தமிழ் மொழியின் இலக்கியவளத்திற்கு சான்றாக உள்ளன . மேலும், பக்தி இலக்கியங்கள் தமிழ் மொழியின் ஆன்மீக பரிமாணத்தை வெளிப்படுத்துகின்றன.

மொழியின் சிறப்பம்சங்கள்

- தமிழ் மொழி ஒரு செம்மொழி.
- இலக்கண வளம் மிக்க மொழி.

தமிழ் மொழி உலகம் மொழிகளில் மிகவும் பழமையான மொழிகளில் ஒன்றாகும். தமிழ் மொழி பல்வேறு இலக்கிய வளங்களைக் கொண்டது.

இந்த அம்சங்கள் தமிழ் மொழியின் வரலாற்றையும் அதன் சிறப்புகளையும் விவரிக்க உதவுகின்றன.

முடிவுரை

வரலாற்றுப் பார்வையில் தமிழர் நிலமும் மொழியும் என்ற இந்த ஆய்வு தமிழர்களின் தொன்மையான வரலாற்றையும் அவர்களின் நிலம் மற்றும் மொழியின் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துகிறது.

ஐவகை நிலங்கள் தமிழர்களின் வாழ்வியல் முறையையும் அவர்களின் நிலவியல் அறிவையும் பிரதிபலிக்கின்றன.

தமிழ்மொழி உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்றாக தமிழர்களின் வரலாற்றையும், அறிவையும், கலைகளையும் பாதுகாக்கும் கருவியாக விளங்கி வருகிறது. தமிழர்களின் நிலமும் மொழியும் வெறும் புவியியல் இடங்களோ அல்லது தகவல் பரிமாற்ற கருவிகளோ அல்ல. மாறாக, அவை ஒரு நாகரிகத்தின் ஆன்மாவையும் அடையாளத்தையும் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகிறது. பல்லாயிரம் ஆண்டுகளாக இந்த நிலமும் மொழியும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து தமிழர்களின் வாழ்க்கை முறையையும், கலாச்சாரத்தையும், வரலாற்றையும் செதுக்கியுள்ளன.

http://Creativecommons.org//license/by/4.0/.

இந்த ஆய்வு தமிழர்களின் வரலாறு கலாச்சாரம் மற்றும் மொழி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றை பாதுகாக்கவும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லவும் உதவும் என்பதில் ஐயமில்லை ! ...

சான்றுகள்:

1. சு. சக்திவேல் - தமிழ்மொழி வரலாறு.
2. தமிழக வரலாறும் பண்பாடும் - டாக்டர் இராசமாணிக்கனார்.
3. அறியப்படாத தமிழகம் - தொ. பரமசிவன்.
4. தமிழ் இலக்கிய வரலாறு - மு. அருணாச்சலம்.
5. தமிழ்நாட்டு வரலாறு - தமிழ் இணைய நூலகம்.

http://Creativecommons.org//license/by/4.0/.

15. சமூகவியல் பார்வையில் சாதியம்

முனைவர் செ.மார்கண்டன்,
இணைப்பேராசிரியர்,
வேல்ஸ்பல்கலைக்கழகம்,
பல்லாவரம், சென்னை - 117, செல் : 9842324206.

DOI 10.5281/zenodo.15070044.

: Abstract

The term 'caste' as used today in the Sangam society did not exist at that time. But it cannot be denied that the elements of caste are visible in some places. Our grammar and literature show that the structure of caste in society has continuously developed in many stages. It is an absurd argument that the category 'caste' did not exist in Tamil society in the beginning. It can be seen through research that it emerged as a professional surname, turned into a clan name over time and later became a caste name by birth. In that sense, the purpose of this article is to discuss the records on castes.

Key Words : Caste - Sangam Society - Literature

முன்னுரை

சங்க கால சமூகத்தில் இன்றைய பொருளில் பயன்படுத்தும் 'சாதி' என்ற பொருண்மை அன்று இல்லைஆனால் சாதிக்கான கூறுகள் சில இடங்களில் . சமூகத்தில் சாதி என்ற .தென்படுவதையும் மறுப்பதற்கில்லைகட்டமைப்பு தொடர்ந்து பல படிநிலைகளில்வளர்ந்து வந்துள்ளதை நம் இலக்கண, இலக்கியங்கள் காட்டுகின்றன .'சாதி' என்ற பிரிவே தமிழ்ச் சமூகத்தில் ஆதியில் இல்லை என்பது அபத்தமான வாதமாகும் . தொழில்வழிக் குடிப்பெயராகத் தோன்றிக் கால ஒட்டத்தில் குலப்பெயராக மாறிப் பின்னாளில்பிறப்பு வழிச் சாதிப் பெயராக மாறி வந்திருப்பதை ஆய்வுகளின் மூலம் அறியலாம்அந்த வகையில் சாதிகள் குறித்த பதிவுகளை விவாதிப்பதே இக்கட்டுரையின் . .நோக்கமாகும்

சாதி என்னும் சொல்லாட்சி

சாதி என்னும் சொல்லாட்சி தமிழ்ச்சொல் அல்ல என்ற வாதம் நிலவுகிறது .'ஜாதி' என்ற வடசொல்லே தமிழில் 'சாதிஎன்ற சொல் வருவதற்கு காரணம் என்ற வாதமும் - ஆனாலும் .தமிழ்ச் சூழலில் நிலவுகிறது, சாதி என்ற சொல் தொல்காப்பியத்தில் இரண்டு இடங்களிலும், சங்க இலக்கியங்களில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையில் ஓர் இடத்திலும் வருவதை நோக்கலாம்.

'ஜாதி' என்று இன்று நாம் வழங்கும் பொருளில் கையாளப் படவில்லைஇனம் ., பிரிவு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதைப் பின்வரும் கருத்துகள் வழி அறியலாம்.

"**நீர்வாழ் சாதியுள் அறு பிறப்பு உரிய**" (தொல் மரபு .பொருள் .1542)

"**நீர் வாழ் சாதியுள் நந்தும் நாகே**"(தொல்- மரபு-பொருள்-1563)

என்னும் சாதி குறித்தான சொல்லாட்சியைத்தொல்காப்பியப் பொருளதிகார மரபியல் சூத்திரங்கள் காட்சிப்படுத்துகின்றன.

http://Creativecommons.org//license/by/4.0/.

சாதி என்ற சொல் தமிழ்ச்சொல் அல்ல என்ற வாதம் ஒருபுறம் இருக்க, ஆனால்தமிழண்ணல், 'சாதி' என்பதுதமிழ்ச்சொல்லே என்ற விளக்கத்தை முன்வைப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழண்ணல் எழுதிய தொல்காப்பிய உரை பின்வருமாறு, "நீரில் வாழும் சாதியாகிய சுறா, முதலை, இடங்கர், கராம், அரால், வாளை எனும் ஆறும் போத்து எனும் பெயர் பெறும்இனம் எனும் பொருளுடைய தமிழ்ச்சொல் .வகைமை - சாதி .. சாதிஎன்பதுதமிழ்ச் சொல்லேவக .இது பிறப்பு பற்றியதன்று .ைமை பற்றியது " தமிழண்ணல்); தொல்காப்பியம்; 2017; 531) இக்கூற்று மிகவும் கவனிக்கத்தக்க ஒன்றாகும்சாதி என்ற சொல் தமிழ்ச் சொல்லே என்ற தமிழண்ண.லின்கருத்து தமிழ்ச் சமூகத்தில் சாதி என்ற பிரிவினை இருந்ததற்கான தரவினை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

"**கடுப்புடைப் பறவைச் சாதி யன்ன**" (பெரும்பாணாற்றுப்படை : 229)

இக்கூற்றை வலியுறுத்தும் வகையில் வள்ளலாரும் திருவருட்பா பாடலொன்றில் '**பறவைச் சாதி**'என்று குறிப்பிடுவதும் தமிழ்ச்சமூகத்தில் சாதி என்ற சொல்லாட்சி புழக்கத்தில் இருந்து வந்துள்ளதை விளக்குவதாகும்.

நான்கு வருணங்கள்

வடமொழியின் தாக்கமே வருண பாகுபாட்டு முறையாகும்இந்த நால்வருண . முறையையே தொல்காப்பியம் பின்பற்றி இருக்கலாம்அதைப் போன்று தமிழ்ச் சமூகமும் . .நான்கு வகை நிலப்பகுப்பு முறையிலான திணை பகுப்பு முறையும் ஆராயத்தக்கதாகும் நான்கு வருணங்கள்என்ற பிரிவு வேதத்தில் தொடங்கப் பெற்று, மனுதர்மசாத்திரம் அதனை வழிமொழிந்து, பகவத்கீதையும் அக்கருத்தை அடியொற்றி நகர்வதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

"பிராமணர்கள் தலையிற் பிறந்தவர்கள்
சத்திரியர்கள் தோளிற் பிறந்தவர்கள்
வைசியர்கள் தொடையிற் பிறந்தவர்கள்
சூத்திரர்கள் பாதத்திற் பிறந்தவர்கள்" (ரிக்வேதம் : 10/90/12)

என்னும் கருத்தை வேதமும்,மனுதருமமும் சொல்வது பொருத்தமற்றதாகும் .எனவே, சாதியைக் கண்டிப்பதைவிடச் சாதிகள் தோன்றிய இந்த வகைமையைத் தான் முதலில் எதிர்க்கப்பட வேண்டியதாகும்.

"**தொழில் ஒழுக்கம் பற்றிச் சாதிகள் ஏற்படுத்தப்பெற்றன. தத்துவ ஒழுக்கம் பற்றிச் சமயங்கள் ஏற்படுத்தப் பெற்றன என்றுவள்ளற்பெருமான் இராமலிங்க அடிகளும் கூறுகிறார்**"ஊரன் அடிகள்) , சாதியும் மதமும்;2003;40)சமூகத்தில் பலவகையான தொழில் பிரிவுகள் இருந்தாலும் தொல்காப்பிய கருத்தில் உருவான அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவில் அடங்கும் கல்வி, காவல், வணிகம், வேளாண்மை என்னும் தொழில் ரீதியான பெரும் பிரிவுகளே சாதிகளுக்கான அத்தியாயங்களாக கொள்ள நேர்கிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

கீழோர் மேலோர்

மனித சமுகம் ஏற்றத் தாழ்வுகளை போற்றி கடைபிடிக்கும் தன்மை கொண்டது . தொழில் பிரிவுகளின் அடிப்படையில் கீழானவர்களாக மாற்றுவது இச்சமூகத்தின் கட்டமைப்புபிராமணர் ., சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று வடமொழி நூல்கள் கூறுவதையே தமிழ் நுல்கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனக் குறிப்பிடுகின்றன.

"**மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்**

கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே"(தொல்; கற்பியல்:2017; 1090)

என்னும் தொல்காப்பியப் பொருளதிகாரக் கற்பியல் சூத்திரத்தில் மேலோர் என்பது அந்தணர், அரசர், வணிகர் என்னும் மேல் மூன்று வருணத்தாரைக் குறிக்கும்கீழோர் என்பது . இக்கருத்தை அடியொற்றிய புறநானூற்று சங்கப் .நான்காவதாகிய வேளாளரைக் குறிக்கும் .பாடல் ஒன்றை ஆராயலாம்

"**வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்**

கீழ்ப்பா லொருவன் கற்பின்

மேற்பா லாருவனு மவன்கட் படுமே) "183)

(ஔவை சுதுரைசாமிப்பிள்ளை., புறநானூறு ; 2009; 610)

என்னும் புறநானூற்றுவரிகளில் 'நாற்பால்' என்பது நான்கு சாதியைக் குறிப்பதாகும்மேலும் . சாதி பிரிவு இருந்ததற்கான தரவாக'கீழ்ப்பால்' ' மேற்பால்' என்ற சொல்லாட்சி சாதியப் பிரிவு, சங்க காலத்தில் இருந்துள்ளதைத் தெளிவுப்படுத்தும் சான்றுகளாக அமைகிறதுபுறநானுற்றில் மாங்குடி கிழார் பாடிய பாடல் கூறும் சாதியப்பிரிவுகுறித்து.,

"**துடியன், பாணன், பறையன்,கடம்பன் என்று**

இந்நான்கு அல்லது குடியும் இல்லை- புறம்) "335)

என்றஇப்பாடலுக்கு ஔவை துரைசாமிப் பிள்ளை தரும் விளக்கம் நோக்கத் தக்கதாகும் . நான்கு குடிகள் தவிர வேறு இல்லையா? இப்புலவர் பாடியபாடலின்விளக்கம் அவ்வூரைமட்டும்குறிப்பதாக ஔவை விளக்கம் தருகிறார்இவ்விளக்கம் ஏற்புடையதாக . இருந்தாலும், இக்குடிகள் தலையாய குடிகளாகும், இத்தகைய சாதிய பிரிவுகள் (குடி) எனவே .இருந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை, சங்க காலத்தில் சாதிய பிரிவுகள் இருந்துள்ளது என்பது திண்ணமாகும்மேலும் .,இப்பாடலில் மற்றுமொரு கருத்தும் நோக்கத்தக்கதாகும்."**வீரர்களின் நடுகல் தவிர வேறு கடவுள் இல்லை**என்ற கருத்தின் " வழி அன்றைய காலங்களில் பற்பல கடவுள்கள் இல்லை என்பதை தெளிவுப்படுத்துகிறது . பிற்கால ஆன்மிகவாதிகளால் பல கடவுள்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

நானிலப் பிரிவு

பழங்காலத்தில் தமிழகத்தின் நிலப்பரப்பு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்காகப் பிரிக்கப்பட்டிருந்ததை அனைவரும் அறிவோம்இந்நானில நால்வகை . நிலப்பிரிவு இயற்கையை ஒட்டிய இயல்பான பிரிவாக இருந்தாலும், நான்கு இனக்குழுக்களுக்கான தனித்த அடையாளப் பிரிவு என்பதை மறுப்புதற்கில்லைஇத்தகைய . பிரிவுகளே குடி வகைமைகக்கான சாதியி பிரிவுகளாக இருந்திருக்கலாம்.

http://Creativecommons.org//license/by/4.0/.

"பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்ற நான்கு வருணங்கள் அல்லது அதையே அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்று தமிழிற்கூறும் நான்கு சாதிகள் பொதுவாக இந்திய நாடு முழுவதிலும் பரவியிருந்தவை, இப்போதும் உள்ளவைஇவை . தவிர வேறு பல சாதிகளும் பழந்தமிழ் நூல்களில்அதாவது (சாதிப் பெயர்களும்) அவை .தொல்காப்பியம் சங்க இலக்கியங்கள் முதலியவற்றிற் காணப்பெறுகின்றன அந்நாளில் தமிழகத்தில் நிலவிய நிலப்பிரிவுகள் தொழிற்பிரிவுகள் அடிப்படையில் ".அமைந்தவை(ஊரன் அடிகள்; சாதியும் மதமும்;2003;16) இத்தகைய பிரிவுகள், நிலம் சார்ந்தும், திணை ஒழுக்கம் சார்ந்த சாதிய பிரிவுகளாக அல்லது குடி வகைமைகளாக இருந்திருக்க அதிக வாய்ப்பு உள்ளதை புரிந்துகொள்ளலாம்.

'சிலப்பதிகார ஊர்காண் காதையில்') 212) **"குலம் நான்காகப்படுத்த வகையால் தெரிந்த அந்தணர் அரசர் வணிகர் வேளாளரெனச் சொல்லப்பட்டார் இருக்கும் நான்காய் வேறுபட்ட தெருக்களும்"** என்று அடியார்க்கு நல்லார் உரை விளக்கம் தருகிறார் . இத்தகைய கூற்றுகள் நான்கு வருணத்தாரும் தனித்தனியாக நான்கு வெவ்வேறு .தெருக்களில் வாழ்ந்துள்ளனர் என்பதைப் புலப்படுத்துகிறது

தொல்காப்பிய பொருளதிகாரத்தில் சில இடங்களில் சாதியைப் பற்றிய செய்திகள் உள்ளன . குறிப்பாக மரபியலில்71முதல் 85வரை 15சூத்திரங்கள் சாதியப் பிரிவுகளைக் குறிப்பதாகவே உள்ளன.

போர்த் தொழிலும் குடி வேறுபாடும் -

ஆநிரைகளைக் கவரும் நோக்கோடு போர் மரபு தொடங்கி இருக்கிறது . பிற்காலங்களில் நிலம் கவர்தலைநோக்கமாக கொண்டு மாறிவந்துள்ளதுஇத்தகைய . .போர்கள் குடிகளுக்கு இடையே நடந்த போர் மரபு என்பதை மறுப்பதற்கில்லை

"குலங்களிடையே நடந்து வந்த முந்தைய யுத்தங்கள் கால்நடைகளையும் அடிமைகளையும் செல்வங்களையும் கைப்பற்றும் நோக்கத்தில் நிலத்திலும் நீரிலும் திட்டமிட்ட படையெடுப்புகளாக இருந்து ஒரு முறையான தொழிலாக மாறிவிட்டன .பெ) ". மாதையன்; சங்க இலக்கயத்தில் வேளாண் சமுதாயம்; 2010: 49) இத்தகைய போர் மரபு என்பது குடிகளுக்கு இடையே நடந்தவையாகும்இதுவே பிற்கால சாதிய பிரிவுகள் தோன்ற . .காரணமாகவும் இருக்திருக்கலாம்

சங்க காலஉடன்போ -க்கு

சங்க இலக்கியங்களில் உடன்போக்கு, நிகழ்ந்துள்ளதை அறிய முடிகிறது . உடன்போக்கு நிகழ காரணம் என்ன? என்ற விவாதத்தை முன் வைத்து, சங்ககால சமூகத்தை ஆராயலாம்மருதநிலத் தலைவி ., மருதநில தலைவனுடன் மட்டுமே உடன்போக்குச் சென்றாள் என்ற எந்த அடிப்படைத் தரவுகளும் இல்லைந ான்கு நிலத்தலைவியும் அந்தந்த நிலத்தலைவனுடன் மட்டுமே உடன்போக்குச் சென்றனர் என்ற கருத்து சங்க இலக்கியங்களில் எங்கும் பதிவாகவில்லை.

அகமண முறையைக் கடைப்பிடித்து வந்த சங்ககால சமூகத்தில் அகமண முறை ஒழுக்கம் உடைக்கப்பட்டு உடன்போக்கு என்ற புதிய நிலை தோன்றி இருப்பதை அறியலாம்இந்த உடன்போக்கு முறை என்பது ஒரு குடியில் இருந்து மாற்று குடிக்கு .

http://Creativecommons.org//license/by/4.0/.

இங்கே மாற்று குடிகள் என்பது .பெண் சென்று வரைவை முடிப்பதையே காட்டுகிறது மாற்றுச் சமூகமாக அல்லது மாற்று சாதிகள் என்ற பிரிவை அடையாளப்படுத்துவதாக இந்த வகையில் .இருக்கிறது குறுந்தொகை பாடல் ஒன்றை ஆராயலாம் .

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறுகலிங்கம்கழாஅதுஉடீஇக்
குவளைஇயுண்கண்குய்ப்புகைகமழத்
தாந்துழந்துஅட்டதீம்புளிப்பாகர்
இனிதெனக்கணவன்உண்டலின்
நுண்ணிதின்மகிழ்ந்தன்றுஒண்ணுதல்முகனே" (குறுந்தொகை : 167)

இப்பாடல் தரும் விளக்கம்தலைவி உடன்போக்குச் சென்று வேறு குடியைச் சார்ந்த . உயர்குடியில் தோன்றிய தலைவி .தலைவனிடம் தனிக்குடித்தனம் நடத்த தொடங்குகிறாள் எவ்வாறு தலைவனுக்கு .நடத்துகிறாள் (வாழ்க்கை) எவ்வாறு தன் தலைவனுடன் குடும்பம் சமைத்து தருகிறாள் என்பதை மறைந்து நின்று பார்க்கும் செவிலித்தாயின் செயல்பாடு சாதிப் பிரிவினை மையப்படுத்தியதாக இருக்கலாம். பிரிந்து சென்ற தலைவியை நேரில் சென்று நலம் விசாரிக்காமல், மறைந்து நின்று பார்க்க வேண்டிய அவசியம் என்ன? உயர்குடியில் தோன்றியதாகச் சொல்லப்படும் தலைவி, எதிர்நிலையில் உள்ள கீழ்க்குடியில் தோன்றிய தலைவனுடன் உடன்போக்கு சென்று விட்டதால், நேரில் சென்று பார்க்க தயங்கி மறைந்து நின்று பார்த்திருக்கலாம் செவிலித்தாய். எனவே, பழங்கால சமூகவியல் என்பதும் சாதியப் படிநிலை அடங்கிய சமூகமாகவே இருந்துள்ளதை வெளிப்படுத்துகிறது.

முடிவுரை

கல்வி, காவல், வணிகம், வேளாண்மை என்னும் பல பிரிவுகளில் சாதி இயங்கி இருப்பதை மறுப்பதற்கில்லைதொழில்களை மையமிட்டு மக்களை நான்கு வகையாக . தொடக்கத்தில் தொழிலால் .பிரித்துள்ள பிரிவுகள் சாதிய அடிப்படையிலானதாகும் ஏற்படுத்தப்பட்ட பிரிவு, பிறப்போடு தொடர்புப்படுத்தப்பட்டு காலப்போக்கில் பிறப்பால் சாதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனஎனவே ., சங்க கால சமூகம் என்பதும் சாதிய படிநிலைகளைக் கொண்டே இயங்கி வந்திருக்கின்றன என்பதை இக்கட்டுரையின் வழி அறிந்துகொள்ள முடிகிறது.

பார்வை நூல்கள்

1. தமிழண்ணல் தொல்காப்பியம் -, மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம் 48, தானப்ப முதலி தெரு, மதுரை -625 001, பதிப்பு - 2017.
2. ஔவை துரைசாமிப்பிள்ளை, புறநானூறு((முதல் பாகம்), பூம்புகார் பதிப்பகம், பிரகாசம் சாலை, சென்னை-600108, பதிப்பு -2009.
3. ஊரன் அடிகள், சாதியும் மதமும்,சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர்-607303 (கடலூர் மாவட்டம் - பதிப்பு (2003.
4. பெ.மாதையன்,சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பதிப்பு -2010.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – IV VOLUME - 1
மார்ச்சு-2025 E-ISSN : 2584 - 1238

16. பண்டைத் தமிழ்க்குடியும் மணிமுடியும்

முனைவர் கா.ஸ்ரீதர்,
முதுகலைத்தமிழ்த்துறைத்தலைவர்,
வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி), விருதுநகர்.
DOI 10.5281/zenodo.15070057.

Abstract :

Literature, which is a mirror reflecting the times, is composed with contemporary existence and its environment as its theme. Ancient Tamil literature is mostly composed by poets in the true glory of the king who is the patron. However, it records the dignity and governance of everyone from the crown-bearing Peruvendar to the small-town king, and occasionally the living conditions of individuals. This article is an attempt to find out how the administrative capacity of the kings who inherited the kingdom and the lifestyle of the people of that time were cultivated in ancient Tamil land from the peak of the development of education, science and civilization.

Key Words : Old Tamil Society - Sangam Literature - Civilization

காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் திகழும் இலக்கியங்கள், சமகால இருப்பையும் அதற்குரிய சூழலையும் கருவாகக் கொண்டு புனையப்பட்டு இருக்கும்.பழந்தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் புரவலரான மன்னனின் மெய்கீர்த்தியாகவே புலவர்களால் இயற்றப்பட்டு இருக்கும். இருப்பினும் அவைமணிமுடி தாங்கிய பெருவேந்தர் முதல் குறுநில மன்னர் வரை அனைவரது மாண்பு, அரசாட்சி முறையுடன் ஆங்காங்கே தனிமனிதர்களின் வாழ்க்கை நிலையையும் பதிவு செய்திருக்கும். கல்வி, அறிவியல், நாகரிக வளர்ச்சியின் உச்சத்தில் இருந்து பண்டைத் தமிழ் மண்ணில் வாரிசு உரிமையில் அரசுரிமை பெற்ற மன்னர்களின் நிர்வாகத் திறனும்அக்கால மக்களின் வாழ்க்கை முறையும் எங்ஙனம் பண்பட்டு இருந்தது என்பதைத் தேடும் முயற்சியாக இக்கட்டுரை அமைகிறது.

மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி

மன்னன் எத்தகைய குணம் கொண்டுஇருக்கிறாரோ; எதைப் போற்றுகிறாரோ மக்களும் அதற்கேற்பவே இருப்பர். நீதிநெறி விளக்கம் இதற்கு , '**நீர்வழிப்பட்டபுணை**' யைச்சான்று காட்டி உள்ளது. தமிழ் மண்ணில் அரசுமுறை குறித்தச் சான்றைத் தேடினால் சங்க காலம் முதல் இன்று வரை எண்ணற்ற இலக்கியங்களின் கதைக் களமாக நிலை பெற்று இருக்கும் மதுரை மாநகரைக் குறிப்பிடலாம். குடிமக்கள் காப்பியம், முத்தமிழ் காப்பியம், மூவேந்தர் காப்பியம் என பலசிறப்புகளைக் கொண்ட சிலப்பதிகாரத்தில் உள்ள பாண்டிய மன்னன் சற்று கவனத்திற்கு உரியவாக உள்ளார்.

ஆடல் மகளிரின் ஆடற்கலையில் தன்னை மறந்த மன்னனின் செயலால் ஊடல் கொண்ட கோப்பெருந்தேவி அந்தப்புரம் விரைந்தாள். ராணியின் ஊடலால் பதறிய மன்னர், மந்திரச் சுற்றத்தை நீக்கி விட்டு உடனே கணவராக அந்தப்புரம் விரைந்தார். காலமும் சூழலும் பொற்கொல்லனுக்குச் சாதகமாகவும் மன்னனுக்குப் பாதகமாகவும் இருந்தது. அதனால் பாண்டிய மன்னன் முழுமையாகப் பொற்கொல்லன்

http://Creativecommons.org//license/by/4.0/.

வசமானார்.விளைவு கோவலன் கொல்லப்பட்டான். நீதி கேட்டு வந்த கண்ணகி, கோவலன் குற்றமற்றவன் என்பதை மன்னனுக்கு நிரூபித்தாள்.

தான் செய்த தவற்றையும் அதனால் விளைந்த இழப்பையும் உணர்ந்த மன்னனுக்கு, '**மன்பதை காக்கும் தென்புலம் காவல் என்முதல் பிழைத்தது**' (வழக்குரைகாதை, வரிகள் 76,77) எனக் குடிப் பெருமைக்குத் தன்னால் இழிவு வந்து விட்டது என்பதே நினைவிற்கு வருகிறது. உடனே மன்னன், '**கெடுக என் ஆயுள்**' என்று மாண்டு விடுகிறார். முன்னோர்கள் இதுவரை சேர்த்த வைத்த நற்பெயரை அழித்து, இனிவரும் பாண்டியன் மரபுக்குப் பழிவரத் தான் காரணமாகி விட்டோமே என்ற குற்ற உணர்ச்சியால் உடனே உயிர் நீத்தார்.

நிர்வாகத்தின் அதிகார மையமாகத் திகழும் மன்னருக்கு ஆலோசனை வழங்க பல அமைச்சர்கள் பல சான்றோர்கள் இருப்பினும் இறுதி முடிவு மன்னரின் தன்னிச்சையானதாகும். அதனால் வரும் நன்மை, தீமைகள் அனைத்தும் மன்னர் ஒருவரையே முழுமையாகச் சாரும் என்பதே எதார்த்தம். பாண்டிய மன்னன் கோவலனின் இறப்புக்குத் தானே பொறுப்பு என்பதை உணர்ந்து, '**பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட யானோ அரசன் யானே கள்வன்**' (வழக்குரைகாதை, வரிகள் 74,75) என்று கூறுகிறார்.

மதுரைக்கு வாழ்வாதாரம் தேடி வந்த கோவலனின் மரணத்திற்கும் கண்ணகியின் துயரத்திற்கும் பாண்டிய மன்னனே காரணமாகிறார்.தன்நிலை திரியாது வாழ்ந்தான். தான் செய்தது குற்றம் / தவறு என்று உணர்ந்தவுடன் உயிர் நீத்தான் என்ற நிலையில் வாழ்வதே உயர்வான வாழ்க்கை முறை ஆகும். தன் முன்னோர் மற்றும் சந்ததிக்கும் அவப்பெயரை ஏற்படுத்திய துயரத்தில் பாண்டிய மன்னன் மாண்டான் என்ற செய்தியைப் பிறர் அறியும் முன்னே தவறுணர்ந்த பாண்டிய மன்னனின் உயிர் நீங்கியது என்ற செய்தியே முதலில் சென்று சேரும் என்பதாக இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவன் கூற்றாக,

> ' . . . . **வேந்தர்க் குற்ற**
> **செம்மையின் இகந்தசொல் செவிப்புல, படாமுன்**
> **உயிர்பதிப் பெயர்த்தமை உறுக ஈங்கென**
> **வல்வினை வளைத்த சோலை மன்னவன்**
> **செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது**' என்று பதிவு செய்து

உள்ளார்.

பாண்டிய மன்னன் தன் குலம் அல்லாது சேர மரபைச் சார்ந்த சேரன் செங்குட்டுவனால் பாராட்டப்படும் வகையில் வாழ்ந்து உள்ளான். பாண்டியனின் மனைவி கோப்பெருந்தேவி தன் கணவனுடன் உயிர் துறந்ததால் வானுலகில் சிறப்புப் பெறுவாள். நம் நாட்டிற்கு வந்துள்ள கண்ணகியைப் போற்றித் துதிக்க வேண்டும் என்று கண்ணகி கோவிலுக்கான முன்னுரையும் முதலுரையும் எடுத்துரைத்தது செங்குட்டுவனின் மாபெருந்தேவியே ஆவாள்.

http://Creativecommons.org//license/by/4.0/.

கவிக்கு கவரி வீசிய மணிமுடி

சங்க காலம் முதல்கல்வி ஞானமும் கேள்வி ஞானமும் பெற்ற புலவர்களைப் புரவலர்கள் போற்றியும் பேணியும் வந்துள்ளனர். இவர்கள் புலவர்களின் வாயிலாக செவி இன்பத்தையும் மன நிறைவையும் பெற்று உள்ளனர்.கவியாலும் ஒற்றாலும் நீடித்த புலவர் புரவலர் நட்பிற்கு ஔவையார் - அதியமான்; கபிலர் - பாரியைச் சான்று சொல்லலாம். பார்க்காமலேயே நட்பு பாராட்டிய கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையாரும்; முரசுக் கட்டிலில் துயில் கொண்ட மோசிகீரனாருக்குக் கவரி வீசி இன்றும் அழியாப் புகழ் பெற்று வரலாற்றில் நிமிர்ந்து நிற்கும் சேரமான்தகடூர்எறிந்தபெருஞ்சேரல்இரும்பொறையும் இதில் கூடுதல் சிறப்பிற்குரியவர்களாக உள்ளனர்.

மோசிகீரனார் மன்னனைக் கண்டு பரிசில் பெற வந்தார். களைப்பு மிகுதியால் தன்மை தெரியாமல் முரசுக் கட்டிலில் துயில் கொண்டார். அங்கே வந்த மன்னன், கவியாகக் களைப்பு நீங்கி துயில் எழும் வரை விசிறிக் கொண்டு இருந்துள்ளார். இந்நிகழ்வை மோசிகீரனாரின்,

‘ . . . .

அதனொடும் அமையாது, **அணுக வந்து**, நின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித், **தண்ணென**
வீசி யோயே . . . .’ என்ற புறநானூற்றுப் பாடல் (50) வழியேஅறியலாம். கல்விப் புலமையை மதித்தல் என்ற நிலை கடந்து அதற்குச் சேவகம் செய்தல் என்ற உயர்நிலைக்குச் சென்ற மன்னர்களும் இம்மண்ணில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் சிறப்பாகும்.

மன்னனின் பக்தி மன(ண)ம்

மனிதனை நெறிப்படுத்தும் கட்டுப்படுத்தும் காரணியாக பக்தி, பணம், அதிகாரம், பதவி, நட்பு, உறவு, உரிமைஎனப் பல உள்ளன. ஒவ்வொரு மனிதனும் ஏதோவொரு காரணிக்குக் கட்டுப்பட்டவனாக இருப்பான். ஆனால் அதிகாரம், பணம், பதவி, உரிமை என சகலமும் கொண்ட மன்னன் இறை பக்தி வழியே வீடு பேற்றை எண்ணித் தன்னைக் கொலை செய்தவனையும் மன்னிக்கும் மனம் உடையவனாக இருக்கிறான்.

திருக்கோவலூரிலிருந்து அரசு புரிந்த மெய்ப்பொருள் நாயனாரிடம் பகை கொண்ட முத்தநாதன் பல முறை முயற்சித்தும் தோல்வியைத் தழுவினான். இறுதியில் அவரது சிவபக்தியையே தனது கேடயமாக்கி, மெய்ப்பொருள் நாயனாரைக் கொலையும் செய்து பாதுகாப்புடன் மீள்கிறான். மன்னன் தான் சார்ந்த கொள்கையால் தன் அழிவிற்குக் காரணமான எதிரியையும் மன்னிக்கும் மனம் கொண்டு இருக்கிறார். அதிகாரத்தால் தண்டிக்க மட்டும் அல்ல. மன்னிக்கவும் கருணை காட்டவும் முடியும் என்ற சிந்தனை விதை தமிழ் மண்ணில் விதைக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறியலாம்.

மணி முடியும் தனி மனிதனே

உயர் அதிகாரத்தில் இருப்பவர்களும் எண்ணம்; உணர்வு அடிப்படையில்சாதாரண மனிதர்களே ஆவர்.இருப்பினும் அவர்கள் சமூக மரியாதைக்காக தம்மைக் கட்டுப்படுத்திக்

http://Creativecommons.org//license/by/4.0/.

கொண்டு போலியாக வாழ்கிறார்கள் என்பதே எதார்த்தம். இதற்குச் சான்றுகள் தேடத் தேவையில்லை என்று எண்ணுகிறேன்.இருப்பினும் இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றானமணிமேகலைக் காப்பியத்தில் மன்னனின் மனைவியாக இருக்கும் இராசமாதேவி தனித்து கவனிக்கப்பட வேண்டிய ஒருவர் ஆவார்.

மணிமேகலையின் மீது கொண்ட வேட்கையால் மன்னன் நெடுமுடிக் கிள்ளி - இராசமாதேவியின் மகன் இளவரசன் உதயணன் காயசண்டிகையின் கணவன் காஞ்னனால் கொல்லப்படுகிறான். பிள்ளையை இழந்த இராசமாதேவி ராணியாக இருக்க முடியாமல் பிள்ளைப் பாசத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி மணிமேகலையைப் பழி வாங்க எண்ணுகிறாள். அதன் வெளிப்பாடாக மூன்று முறை முயற்சித்தும் தோல்வியைத் தழுவுகிறாள். மணிமேகலையைக் கண்டு அச்சம் கொண்ட ராணியார்,

'செய்தவத் தாட்டியைச் சிறுமை செய்தேன்
என்மகற்கு உற்ற இடுக்கன் பொறாது' (**சிறைவிடு காதை**- 64,65)

என்று மன்னிப்புக் கோர்கிறாள்.ராணியார் தான் செய்தது தவறு; ராணிக்குரிய அதிகாரத்தைச் சுயத்திற்காக தவறாகப் பயன்படுத்தி விட்டோம் என்பதை உணர்கிறார். பழங்காலத்தில் மணிமுடி தரித்தவராக இருந்தாலும் உணர்வு / உணர்ச்சி வயப்பட்ட நிலையில் செய்யும் தவறுகளுக்கு மன்னிப்பு வேண்டி நின்ற தருணங்கள் இலக்கியங்களில் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கின்றன என்பதை அறிய முடிகிறது.

குழந்தை வளர்ப்பும் மன முதிர்ச்சியும்

ஒரு குழந்தையின் முதல் ஆசான் தாயே ஆவார்.அதன் தொடர்ச்சியே தாயைப் போல பிள்ளை.நூலைப் போல சேலை என்ற சொலவடை ஆகும்.கடந்த நூற்றாண்டில் காக்கைக் குருவி எங்கள் சாதி என்றான் பாரதி. ஆனால் அதற்கும் முன்பாக சங்க இலக்கியத்தில், குழந்தைப் பருவ காலத்தில் விளையாடி மறந்த புன்னை விதை தற்பொழுது மரமாக வளர்ந்து நிற்கிறது. இது உன்னுடைய தங்கையைப் போல என்று தாய் சொல்லியதால் அம்மரத்தின் அருகே தலைவனுடன் களவில் ஈடுபடுவது தகாது என்று எண்ணும் அளவிற்கு இயற்கையோடு இயைந்த வாழ்வைப் பழந்தமிழர்கள் வாழ்ந்து உள்ளனர். இதை,

'விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி,
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய,
'நெய் பெய் தீம் பால் பெய்து இனிது வளர்ப்ப;
நும்மினும் சிறந்தது; நுவ்வை ஆகும்' என்று,
அன்னை கூறினள், புன்னையது நலனே
அம்ம! நாணுதும், நும்மொடு நகையே; . . . . ' என்ற நற்றிணைப் (172)

பாடலை வாசிக்கும் பொழுது புலமைப்பித்தனின்,

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே
பின் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பதிலே' என்ற திரைப்படப் பாடல் வரிகளே நினைவிற்கு வருகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

பிற உயிரையும் தன்னுயிர் போல் நேசித்தல்;

திருமூலரின், **யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**என்ற கூற்று தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கைத் தத்துவத்தை எடுத்துரைக்கும். தான் மட்டும் இன்புற்று வாழ்ந்தால் போதாது.தன்னைச் சுற்றி இருக்கும் சக மனிதர்களும் சக உயிரினங்களும் இன்புற்ற வாழ வேண்டும். தான் பெற்ற இன்பத்தையும் சுற்றத்துடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்; பிற உயிரினங்களுக்கு எவ்வித இடையூறும் இன்றி இருக்க வேண்டும் என்று எண்ணியவனாகத் தமிழன்வாழ்ந்துள்ளான்.

பொருள் தேடச் சென்ற தலைவன் உரிய பருவத்தில் தலைவியின் இருப்பிடம் நோக்கி வருகிறான்.தலைவி, தலைவனின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்து இருக்கிறாள்.மலர்கள் பூத்து கார் கால வருகையைப் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன.பருவம் அறிந்து தலைவியை நோக்கித் தோழி, கார் காலச் சூழலில் இணையுடன் இனிதாகக் கூடி இன்புறும் வண்டினங்கள் அச்சப்படக் கூடாது என்பதற்காக தலைவன் தனது தேர்க் குதிரையின் மணிகள் ஒலிக்காத வண்ணம் அவற்றின் நாவைக் கட்டி வைத்து இருப்பான். நமது தலைவன் தன்னால் வண்டினங்கள்கூட கலக்கம்படக் கூடாது என்று எண்ணுபவன். அத்தகைய பண்பு உள்ளவன் உன்னைக் கலக்கம் அடையச் செய்வானா என்று தோழி தலைவியை,

. . . . **நரம்பு ஆர்த்தன்ன வாங்கு வள்பு அரிய**
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாது உண்பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண் வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் குறும் பொறை நாடன்' (அகநானூறு - 4)

என்று ஆற்றுப்படுத்துவதாக அகநானூற்றில் ஒரு பாடல் உள்ளது.இது வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலரைவிட பிற உயிர்களுக்கு எவ்விதத்திலும் இடையூறு இன்றி பழந்தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கான சாட்சியாகவே எண்ணாத் தோன்றுகிறது.

தொண்டருக்குத் தொண்டர் ;

சைவ சமயத்தின் முதன்மைக் கடவுளாக இருப்பவர் சிவபெருமான் . பெரும்பாலும் சிவன் மீது அன்பு கொண்டு வணங்குவர்; சிவனின் திருத்தளத்தில் திருப்பணியில் ஈடுபடுவது வழக்கம். ஆனால் இதற்கு மாறாக அப்பூதியடிகள், திருநாவுக்கரசரின் சீரிய சிவத்தொண்டினை அறிந்து திருநாவுக்கரசரின் பெயரில் அன்னதானம் வழங்கல், நீர்பந்தல் அமைத்தல், சத்திரம் அமைத்தல் போன்ற இறைப் பணியை மேற்கொண்டு வந்தார். திருநாவுக்கரசர்இதை அறிந்து அப்பூதியடிகளைக் கண்டு, கேட்டதற்குத் திருநாவுக்கரசர் சமண சமயத்தில் பெரும் துறவியாய் இருந்ததையும், சிவனருளால் அச்சமயம் விட்டு சைவ சமயத்தை ஏற்றுத் தொண்டுகள் புரிந்து வருவதையும் எடுத்துரைத்தார். இறைவனின் மீது அன்பு கொள்வதை விடவும், அவனுடைய அடியார்கள் மேல் அன்பு கொள்ளுதல் மேலும் சிறப்பானது என்று எடுத்துரைத்தார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

குளம் நிறைந்த நீர்த் தடம்

'போல் குளிர் தூங்கும் பரப்பினதாய்
வளம் மருவும் நிழல் தரு
தண்ணீர்ப் பந்தர் . . . . ' (அப்பூதியடிகள் புராணம். பா.எண்.5

சமூகத்தில் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணமே சில இயல்பை மீறிய செயல்பாட்டைக் கொண்டவர்களால் தானாவே எழுகிறது. தமக்காக என்பதைவிட பிறரைக் காரணம் காட்டிச் செயல்படுவதில் மனிதன் ஏதோவொரு மனநிறைவை அடைகிறான்.

இன்றைக்கும் இளைஞர்கள் தமது அன்பிற்குரிய நடிகர்கள், விளையாட்டு வீரர்களின் பெயரில் சமூகப் பணி ஆற்றுவது அப்பூதியடிகளின் செயலைப் பின்பற்றித் தானோ என எண்ணத்தக்கதாக உள்ளது.

முடிவுரை

பண்டைய முடியாட்சி காலத்தில் மன்னர்கள் எல்லையற்ற அதிகாரம் படைத்தவர்களாக இருந்தனர். இருப்பினும் சில சந்தர்ப்பச் சூழ்நிலைகளில் அறியாமல் தவறு செய்தாலும் அதற்குப்பொறுப்பேற்றுக் கொள்ளக்கூடிய மனப் பக்குவத்தில் இருந்தனர். அவர்கள் தமது உயிரைவிட குடிப் பெருமையையும் கொள்கையையும்உயர்வாக எண்ணியவர்கள். எதிரியும் பகைவருமே புகழும் வகையில் வாழ்ந்தவர்கள். தம்மையும் தம் மண்ணையும் நம்பி வந்தவர்களைக் காக்க வேண்டிய கடமை; போற்ற வேண்டிய பண்பு கொண்டவர்கள்.மன்னர்கள்; புரவலர்கள் புலவர்களுடன் நட்பு பாராட்டுவதைப் பெருமையாக எண்ணியுள்ளனர்.

அதிகார உச்சத்தில் இருப்பவர்களும் அன்பு, பாசத்தால் தன்னிலை மறந்து, திரிந்து விடுகிறார்கள். ஒவ்வொருதாயும் தனது குழந்தைக்கு நற்சிந்தனை கூறி, நல்ல சூழலில் வளர்த்தால் சமூகம் ஆரோக்கியமானவே இருக்கும்.களவு இன்பம் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானதாகும். ஒவ்வொரு தனிமனிதனும் ஏதோ ஒரு விதத்தில் சமூகத்தோடு தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும்.**பண்டைத் தமிழ்க்குடியும் மணிமுடியும் குலப் பெருமையைக்கு முக்கியத்துவம் கொடுத்து உள்ளன.**

துணைமை நின்றவை :

1. https://www.tamilvu.org/slet/l5F10/l5F10pd1.jsp?bookid=126&pno=178
2. https://www.tamilvu.org/ta/courses-degree-p104-p1041-html-p1041223-26404
3. https://ta.wikisource.org/wiki/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B2%E0%AE%AE%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%95%E0%AE%A4%E0%AF%88/%E0%AE%95%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%95%E0%AF%8D_%E0%AE%95%E0%AE%BE%E0%AE%A4%E0%AF%88
4. http://vaiyan.blogspot.com/2014/09/004.html

http://Creativecommons.org//license/by/4.0/.

SPL-EDITION – IV VOLUME - 1
மார்ச்சு-2025 E-ISSN : 2584 - 1238

17. அறத்தைப் பேண மறந்த இளைஞர்கள்

முனைவர் **ப.சக்திவேல்**,
உதவிப் பேராசிரியர்,முதுகலைத் தமிழ்த்துறை,
வி.இ.நா.செ.நா. கல்லூரி, விருதுநகர்,
அலைபேசி எண்: 7871503553, - **மின்னஞ்சல்**: smartsakthivel1989@gmail.com.
DOI 10.5281/zenodo.15070067.

Abstract :

The future pillars of a country are the youth. The youth have the greatest responsibility to light the lamp for the country through various fields such as being the best teachers, doctors, engineers, scientists, military personnel, political leaders, and excellent citizens of tomorrow's society. The young Sri Lankan author 'Ra.P.Aroose', in his book 'Enenil Naan Manithan', expresses the negative views that corrode the minds of the youth through his poem 'Ilaygnan', as the voice of society.

Key Words : Poems – poet – Srilankans' Tamilans – Ra.P.Aroose

ஒரு நாட்டின் எதிர் காலத் தூண்கள் இளைஞர்களே. நாளைய சமுதாயத்தின் தலைசிறந்த ஆசிரியராகவும், மருத்துவராகவும், பொறியாளராகவும், அறிவியல் விஞ்ஞானியாகவும், இராணுவ வீரனாகவும், அரசியல் தலைவராகவும், தலை சிறந்த குடிமகனாவும் என பல்வேறு துறைகளின் மூலம் நாட்டிற்கு ஒளி விளக்கை ஏற்றி வைக்கக் கூடிய மிகப் பெரிய பொறுப்பை உடையவர்கள் இளைஞர்களே, இவ்வாறான உயரிய பணிகளை ஏற்க வேண்டிய இளைஞர்கள் பொறுப்பில்லாமல் பொழுது போக்கு அம்சங்களில் மூழ்கியும் தீய பழக்கங்களில் சிக்கிக் கொண்டும் தன் எதிர் காலத்தை வீணடிக்கின்றனர் என்ற கருத்தினை இலங்கையைச் சேர்ந்த இளம் படைப்பாளர் 'ரா.ப.அரூஸ்' அவர்களின் 'ஏனெனில் நான் மனிதன்' நூலில் இளைஞன் என்ற கவிதை வழியே இளைஞர்களின் மனதினை துருப்பிடிக்கச் செய்யும் எதிர்மறையான கருத்துக்களை உலகிற்கு சமூகத்தின் குரலாகவே ஒலிக்கின்றார்.

அறம் - சொல்லும் பொருளும்

அறம் என்னும் சொல் பல்வேறு அர்த்தப்புலப்பாடுகளைக் கொண்டது. அறம் சமூகத்தினை உள்ளடக்கிய பொதுச்சொல்லாகும். 'அறு' என்னும் வினைச்சொல் அடியாகப் பிறந்ததே 'அறம் ' என்ற சொல்லாகும். மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்கமுறைமைகளின் தொகுதியே அறமாகும். அறம் என்ற சொல்லிற்கு நற்பண்பு, ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, புண்ணியம், ஈகை, ஆறக்கடவுள் ஆகிய பொருண்மைகளை இலக்கியங்கள் உணர்த்துகின்றன. தமிழ்மொழியில் அறம் என்ற சொல்லிற்குத் தரப்படுகின்ற விளக்கங்களைப் பின்பற்றுதலின் தன்மையாகவே பிற மொழிகளில் அறம் என்ற சொல் தோன்றியிருக்கக் கூடும் என்பது தெரிகிறது. ஆங்கிலத்தில் 'எதிக்கஸ்' (நுவாiஉள) என்ற சொல் இதிகாசம் என்ற பொருளைக் கடந்து, அறம் என்றும் பொருள்படுகிறது. இதனை, "நல்ல அல்லது தீய செயல்களி;ன் மூலம் தானே வெளிப்படும் மக்களுடைய நடத்தையைப் பற்றிய ஆய்வியல் கலையே எதிக்கஸ் என்பதாகும்." என்று க.த.திருநாவுக்கரசு குறிப்பிடுகிறார். அறத்தை வலியுறுத்தும் இயல் அறவியல் எனப்படுகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

அறம் என்பதை சொல்; என்றும், செயல் என்றும் மனிதனின் எண்ணம் என்றும் அடையாளப்படுத்த முடிகிறது. எண்ணம் தூய்மையாக இருந்தால் தான் சொல்லும் செயலும் தூய்மையாக அமையும். எண்ணம் தூய்மையாக அமைவதற்கு பல்வேறு நிலைக்கலன்கள் காரணியாக அமைகிறது. எண்ணம் மாசு இல்லாததாக இருக்க வேண்டும் என்பது அறத்தின் முதல்படி. ஒருவனது சொல்லுக்கேற்ப செயல் அமைவதும், செயலுக்கேற்ப சொல் அமைவதும் அறத்தின் அடிப்படையாகும். இத்தகைய அறத்தைச் சங்ககாலம் தொடங்கி இன்றுவரை காலமாற்றத்தின் தன்மைக்கேற்ப இலக்கியங்கள் விளக்குகின்றன.

தமிழ் இலக்கியத்தில் அறம்

பண்டைய தமிழ்ப் புலவர்கள் அறம் என்பதை வாழ்க்கையின் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவானது என்ற தன்மையில் வலியுறுத்தி உள்ளனர். அறம் என்ற சொல் ‘ஒழுக்கம்’ என்ற பொருளில் கலித்தொகை குறிப்பிடுகிறது. ‘அறஞ்சாரான் முப்பே போல்’ (கலித்.38), ‘அறனுமது கண்டற்றாயின்’ (கலித்.62), ‘அஞ்சுவ தஞ்சான் அறனிலி’ (கலித்.43) எனவரும் பாடலடிகள் குறிப்பிடுகிறன. மனிதன் அறத்தைச் சார்ந்து வாழவேண்டும். அதனை வாழ்க்கையில் காண வேண்டும். அஞ்சுவதற்கு அஞ்சி வாழவேண்டும் இதுவே அறம் என்று குறிப்பிடப்படுகிறது.

அறத்தினைக் காத்தல் வேண்டும். அறமே தலையானது. அறம் என்பது மனித வரலாற்றில் அடிப்படைக் கரு. ‘அறன்கடைப் படா வாழ்க்கையும்’ (அகம்.155) என்ற அகநானூற்றுப் பாடலில் அறத்தை வாழ்க்கையில் கடைபிடித்தல் என்பது அவசியம். அவ்வாறு கடைபிடிக்கவில்லையெனில் வாழ்க்கையின் அவசியம் புரியாமல் போய்விடும் என்று உணர்த்தப்படுகிறது. ‘அறநெறி முதற்றே அரசின் கொற்றம்’ (புறம்.55) அரசன் ஆட்சி புரிவதற்கும் அறம் அவசியாகிறது. அறமே அரசின் முதல் கொற்றம் என்று புறநானூற்றில் வலிறுத்துகிறது. பழந்தமிழர்கள் அறங்கூறும் மன்றங்கள் பல அமைத்துள்ளனர். அவை அரசின் முக்கிய அங்கம் வகித்த இல்லறமாக இருந்தன. அங்கு நெறிப்பட்ட அவையங்கள் நடைபெற்றன. இதனை, ‘அறமறக்கண்ட நெறிமாண்பு அவையம்’ (புறம்.224) என்ற புறநானூற்றுப் பாடலடி மூலம் உணரமுடிகின்றது. மதுரை மாநகரில் இத்தகைய அறநெறி அவையம் இருந்தது என்பதை மதுரைக்காஞ்சி, ‘சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்’ (மதுரைக்காஞ்சி.492) என்று குறிப்பிடுகிறது. மன்னன் செங்கோல் தவறாமல் செயல்பட்ட இடம் அறம் கூறும் அவையமாகும். அறம் அரசனை ஆட்சி செய்துள்ளது. அறத்திற்கு அஞ்சி வாழ்ந்துள்ளனர். கடைப்பிடித்துள்ளனர். இதனை, சிலப்பதிகாரம், ‘அரைசுகோல் கோடிணம் அறம் கூறு அவையத்து’ (சிலம்பு-5:135-136) என்று குறிப்பிடுகிறது. இவ்வாறாக சங்ககாலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் அறம் என்பது அஞ்சிவாழும் நெறிமுறைகளில் ஒன்றாகக் கடைபிடிக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக அறம் அரசனையும், செங்கோலையும், மக்களையும் ஆட்சிசெய்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

நேர வீணடிப்பு

இந்த உலகில் பணம் கொடுத்து வாங்க முடியாதவை நேரமாகும் அதனால் தான் நேரத்தினை காலம் பொன் போன்றது என்று கூறுகின்றனர். அவ்வாறான பொன்னான நேரத்தினை இன்றைய இளைஞர்கள் வீணடிப்பதற்கான காரணங்களாக இணையதளம் சினிமா

http://Creativecommons.org//license/by/4.0/.

நட்புவட்டாரம் என பல அம்சங்களைக் கொண்டு நேர வீணடிப்பினை அரங்கேற்றுவதனை ஆசிரியர்

இவ்வுலகில்
நேர வீணடிப்பினை
அதிக பட்சமாய்
அரங்கேற்றுவது
நான் தான் ப – 17

என்று இன்றைய இளைஞர்களை அறிமுகம் செய்கின்றார். தன் பொன்னான நேரங்களை தன் வளமான கல்விக்காகவும் சமூகத்திற்காகவும் செலவிடாமல் காதல் நட்பு என்று கூறிக் கொண்டு வீதிகளில் கூடி வீண் சண்டைகளில் ஈடுபடுவதனை

காதலென்ற பேரிலும்
நட்பென்ற பேரிலும்
நாட்களைக் கடத்துவதும்
வீதியில்
காதல் கொண்டு
வீண் சண்டை
வளர்ப்பதுமே
என்
தலையாய கடமை ப – 17

என்ற கவிதை வரிகளின் மூலம் இளைஞர்களின் கடமையாக நினைத்துக் கொண்டு இருப்பதனை பட்டியலிடுகின்றார்.

காதல் வலை

இன்றைய இளைஞர்களுக்கு எண்ணெற்ற கடமைகள் இருக்க தன் தலையாய கடமையாக காதல் செய்வது என்று பெண்கள் பின்னே சுற்றுதல் காதல் என்னும் பெயரில் சுய கட்டுப்பாட்டை இழந்து எண்ணெற்ற பெண்களுடன் சகவாசம் கொண்டு எதிர் கால சமுதாயத்தை சீரலிக்கும் இளைஞர்களின் முகத் திரையை கிழிக்கின்றார்

ஒன்று
இரண்டு
மூன்று
என
வரிசையாய்க் காதலிப்பேன் ப – 18

என்றும் பெண்களை தன் காம இச்சைக்காக பயன்படுத்திக் கொள்;ள நினைக்கும் ஆண்கள் இங்கே மலிந்து கிடக்கின்றனர் இவர்கள் தான் எதிர்பார்க்கும் காமலீலைகளை அரங்கேற்ற சந்தர்ப்பம் கிடைத்ததும் அவர்களை பயன்படுத்திக் கொண்டு எச்சில் இலையாக தூக்கி எரிந்து விடுவதனை,

சந்தர்ப்பம்
கிடைத்து விட்டால்

http://Creativecommons.org//license/by/4.0/.

சாப்பிடத்
தயங்க மாட்டேன்
அப்புறம்
சஞ்சலமேதுமின்றிக்
கை கழுவிச்
சென்று விடுவேன் ப – 19

என்று காமத்திற்கு அடிமையாகிக் கிடக்கும் இன்றைய இளைஞர்களின் ஈன நிலையை தமது எழுத்துக்கள் மூலமாக படம் பிடித்துக் காட்டுகின்றார் இவ்வாறான தவறுகளுக்கு ஆண்கள் மட்டுமே காரணம் என்று கூறி விடவும் முடியாது கல்வி கற்க வேண்டிய வயதில் தம் இளமை வேட்கையில் காதல் வலையில் விழுகும் பெண்கள் தன் எதிர்காலத்தை இழந்துவிடுகின்றனர் கல்வி கற்கும் வயதில் காதல் எதற்கு என்ற வினா மனதில் எழுகின்றது இளைய தலைமுறைகள் தடமாறுவதற்கு ஊடகங்களே முதன்மையான காரணம.; காதலிக்கும் ஆணும் பெண்ணும் தன் முன்னேற்றத்திற்காக கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கும் தாய் தந்தையை நிலையை ஒரு நிமிடம் நினைவில் கொள்ள வேண்டும். தான் காதலிக்கும் ஆண் எப்படியானவன் என்று சோதித்துப் பார்க்காமலே தம் எல்லைகளை மீறுகின்றனர்.

ஆபாசத்திற்கு அடிமையாகுதல்

நூலகம் அறிவுகளை உற்பத்தி செய்யும் கூடமாகும் அவ்வாறான நூலகத்தினை பயன்படுத்தி சமுதாயத்திற்கு பெருமை சேர்த்தவர்கள் இச்சமூகத்தில் தலை சிறந்த தலைவர்களாகவும் சமூகத்தில் மதிப்பு மிக்கவர்களாகவும் விளங்கியுள்ளனர் ஆனால் நூலகத்தினை தன் ஆக்க சக்திக்காக பயன்படுத்தும் இளைஞர்களின் எண்ணிக்கை குறைந்துவருகிறது பெரும் பான்மையானவர்கள் இதழ்களில் இடம்பெறும் பெண்களின் ஆபாசபடங்களைச் சேகரிப்பதுவே தன் வேலையாக கொண்டுள்ளதனை

நூலகத்திற்குச்
செல்கிறேன்
பத்திரிகையின்
நடுப்பக்கம் கிழிக்க ப – 21

பத்திரிகையின் நடுப்பக்கத்தில் இடம்பெறும் அழகிகளின் அரைகுறையான ஆடைகளுடன் பதிவிடப்படும் புகைப்படத்தினை பார்த்து காமத்தினை திண்றுவிடுகிறான் சிறுகச் சிறுக திண்ணப்பட்ட காமமோ இளைஞனை மிச்சம் மீதமின்றி முழுமையாக திண்றுவிடுகின்றன.

சுயநலம்

தன்னலமின்றி செயல்படும் பெற்றோர்களை இன்றைய இளைஞர்கள் விரோதிகளைப் போலவே பார்க்கத்துத் துவங்குகின்றனர். அவர்களிடமிருந்து விலை உயர்ந்த கைபேசி இருசக்கர வாகனம் பகட்டான ஆடைகள் வேண்டிய பொழுதுகளில் பணம் போன்றவற்றிற்காக அவர்களிடம் அன்பாக இருப்பதனைப் போன்று நாடகமாடுகின்றதனை

என் தந்தையை
எனக்கு

http://Creativecommons.org//license/by/4.0/.

ரொம்பப் பிடிக்கும்
அவரின்
சட்டைப் பையில்
பணமிருக்கும் போது ப – 20

என்று தந்தையின் சட்டைப் பையில் பணம் இருக்கும் போது மட்டும் அன்பாக பேசுவதும் பணம் இல்லாச் சூழலில் எரிந்து விழுவதுமாக இருப்பதனையும்

நான்
தாய் சொல்
தட்டமாட்டேன்
சீதனப் பேச்சில்
மட்டும் ப – 21

அன்பின் அடையாளமாகத் தெரியும் தாய் தந்தைக்குத் தெரியாமல் தன் பிள்ளைகளுக்கு பணம் வழங்கும் பொழுது மட்டும் தாய் பேச்சினை தட்டுவதே இல்லை என்பதனை ஒவ்வொரு வீடுகளிலும் நிகழும் நிகழ்வினை எதார்த்தமாக பதிவு செய்கிறார் ஆசிரியர்

தீயபழக்கங்கள்

புகை மனிதனுக்கு பகை இவ்வாறான தீய பழக்கங்களை நாகரீக செயலாக கருதி தன் உடல் ஆரோக்கியத்தை இழக்கின்றான் இப்பழக்கம் திரைப்படங்கள் மூலமாக கற்றுக் கொண்டு தன் அடையாளமாக கருதுவதனை

சிகரட்டை
என்
அங்க அடையாளங்களில்
ஒன்றாக்குவேன் ப – 18

புகைப்பழக்கம் இளைஞர்களை ஆட்கொண்டுள்ளதனை சுட்டிக் காட்டுகின்றார் மேலும் பொன்னும் பணமும் பிறரிடமிருந்து திருடுதல் மட்டுமே திருட்டு அல்ல. ஒருவரின் உடைமைகளைத் திருடினாலும் திருட்டு தான் பெரும்பாலும் கிராமப்புறங்களில் வீடுகளில் வளர்க்கப்படும் கோழிகளைத் திருடி சமைத்து உண்டு உடலை வளர்க்க என்னும் இவர்களை

நண்பர்களுடன் சேர்ந்து
இரா நேரத்தில்
சமைப்பேன்
அதிகாலைதான் சொல்லும்-என்
கைவண்ணம் பற்றி
பக்கத்து வீட்டில்
கோழி தேடும் போது ப - 18

இவ்வாறான செயலில் ஈடுபடும் இளைஞர்கள் சமூக விரோதிகளே என்று எண்ணத் தோன்றுகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

உலகம் அன்பினால் இயங்குகின்றது இச்சமுகத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் எல்லையில்லா இன்பத்தை கொடுத்து அதன் மூலமாக தானும் இன்பத்தை பெற வேண்டும் என்ற எண்ணங்களை மறந்து தம் பேச்சினால் பிறரின் மனதினைக் காயப்படுத்துவதை

நான்
பிறர் மனத்திலே
நையாண்டியால்
தீ மூட்டுவேன் ப – 21

தன் இன்பத்திற்காக பிறருடைய மனதினைக் காயப்படுத்தும் இளைஞர்களை முகத்திரையை கிழிக்கின்றார்.

பொறாமை குணம்

மரம் செடிகளை வளர்த்தால் இயற்கை வளம் தரும் ஆனால் இளைஞர்கள் பொறாமைச் செடியை தம் மனதில் வளர்ப்பதனை

பொறாமைச்
செடி வளர்த்து
தினமும் அதற்கு
நீருற்றுவேன் ப – 22

பொறாமை குணம் இருந்தால் நல்ல எண்ணங்களையும் அழித்து விடும் என்று தெரியாமல் அவற்றை வளர்த்து வரும் இளைஞர்களை சுட்டுகின்றார் ஆசிரியர்.

முடிவுரை

இன்றைய இளைஞர்கள் மேற்கத்திய கலாச்சாரங்களை பின் பற்றுதலாலும் சமூக ஊடகங்களினாலும் பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுகிறது தவறான பழக்கம் கொண்ட இளைஞர்கள் ஒட்டு மொத்த சமூகத்திற்குமே உண்டான சாபக்கேடாகும். இவர்களிடமிருந்து சமூகத்தைக் காக்க நாம் அனைவரும் கடுமையாக உழைத்து சுய ஒழுக்கத்தை மேம்படுத்த கற்பிக்க வேண்டும். ஆசிரியர் ரா.ப.அரூஸ் அவர்களின் பேனா வழியே வெளியான அத்தனையும் சமூகத்தின் குரலாகவே ஒலிக்கின்றது இதனை யாரும் மறுக்கவும் முடியாது. இவர்களைத் தாண்டி தன் முன்னேற்றத்திற்காகவும் சமூகத்திற்காகவும் உழைக்கும் இளைஞர்களும் இருக்கிறார்கள். தீய பழக்கங்கள் கொண்ட இவர்களே ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் போல் ஒட்டு மொத்த சமூகத்தையுமே சீரலித்துவிடும் என்பதில் மாற்றுக் கருத்துமில்லை.

துணைமை நின்றவை :

1. ‘ரா.ப.அரூஸ்’ , ஏனெனில் நான் மனிதன், பதிப்பாசிரியர் அல்ஹாஜ் எம். எம். மஹரூப், பி. ஏ. (சிறப்பு) கலாசார, சமய அலுவல்கள் அமைச்சு முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 34, மலே வீதி, கொழும்பு 2, இலங்கை. 1995
2. https://noolaham.net/project/44/4371/4371.html
3. https://noolaham.net/project/89/8819/8819.pdf

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – IV VOLUME - 1
மார்ச்சு-2025 E-ISSN : 2584 - 1238

18. எஸ்.ராமகிருஷ்ணனின் சிரிக்கும் வகுப்பறை புதினம் சுட்டும் கல்விச்சிந்தனை

முனைவர் ப.கீதா
கௌரவ விரிவுரையாளர் தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி(தன்னாட்சி),கோவை-18
DOI 10.5281/zenodo.15070100.

Abstract :

Humanity carries its way of life, culture and traditions to the next generation. Education is the basic factor for all the people living in the world to live together. This article aims to examine the educational thinking of children through the novel 'The Laughing Classroom' by S. Ramakrishnan, and how the school, instead of developing the personality of a child, distorts his natural imaginations, and to explain the need for innovations in the educational system.

Key Words : Humanity - S.Ramakrishnan - School - Imagination

மனித இனம் தம்முடைய வாழ்க்கை முறைமையையும் பண்பாட்டையும் மரபுகளையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்கிறது. உலகில் வாழக்கூடிய மக்கள் அனைவருமட வாழ்வாங்கு வாழ அடிப்படைக் காரணியாக விளங்குவது கல்வியாகும்.அத்தகைய கல்வியானது எஸ்.ராமகிருஷ்ணனின் 'சிரிக்கும் வகுப்பறை' புதினத்தின் வழி குழந்தைகளின் கல்விச்சிந்தனை குறித்தும், பள்ளிக்கூடம் ஒரு சிறுவனின் ஆளுமையை வளர்த்து எடுப்பதற்குப் பதிலாக, அவனது இயல்பான கற்பனைகளை எங்ஙனம் சிதைக்கின்றது என்பதையும், கல்வி முறையில் புதுமைகளின் தேவை பற்றி விளக்கும் வகையில் அமைந்துள்ளமையை ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

கல்வி- சொல் விளக்கம்

'கல்லுதல்' என்பதன் பொருள் தோண்டுதல் என்பதாகும். 'கல்' என்னும் அடிச்சொல்லிருந்து கலப்பை என்ற பெயரும், கல்வி என்ற பெயரும் வந்தன. நிலத்தை கிளருவதற்கு கலப்பை பயன்படுத்துவது போல கல்வி, கல்லுதல் என்பது மனத்தை கிளறித் திருத்திப் பண்படுத்துவதாகும் என்கிறார் சித்பவானந்த சயத், (நீதி நூல்களில் கல்வி ப:3)

மேலும், கல்வி என்பதற்கு அறிவு, கற்றல்,நூல், வித்தை, பயிற்சி, உறுதி, ஊதியம், ஓதி, காரணம், கலை, கேள்வி, சால்பு,தேர்ச்சி, விஞ்ஞை என்று கௌரா தமிழ் அகராதி விளக்கம் அளிக்கிறது.

மனித மனதைப் பண்படுத்தும் இக்கல்வியினை கற்றுத்தரும் பள்ளிக்கூடங்கள் குழந்தைகளின் மனநிலைக்கு ஏற்ற வகையில் அமைதல் வேண்டும்.

கல்வியின் பிரதிநிதியாகப் பள்ளிகள்

ஒரு பள்ளியானது பல ஆளுமைத்திறன் கொண்டவர்களின் ஒருமித்த இடம். சமூக சக்திகளின் மைதானம். முறைசார்ந்த, முறைசாரா கட்டுப்பாடுகள் கொண்ட ஒரு ஒழுங்குமுறையாகும். சிறப்பான பண்பாட்டு உலகம் எனலாம்..'குரோ அண்ட் குரோவின் கருத்துப்படி வாழ்க்கையிலும் வாழ்க்கையின் கற்றல் வழிகளைப் பற்றியும் ஒரு கற்பித்தல் செயல்முறையே பள்ளியாகும். சுமூகத்தினால் அளிக்கப்பட்டுள்ள சில அடிப்படையான

http://Creativecommons.org//license/by/4.0/.

பணிகளை பள்ளியானது நிறைவேற்ற வேண்டும். ('இந்தியக் கல்வியியல் சவால்கள்' ப:78) என்ற கருத்து குறிப்பிடத்தக்கது.

ஜான்டுயி பள்ளியை சமூகத்தின் ஒரு அங்கமாகக் கருதினார், பள்ளியானது ஒரு சிறிய சமுதாயமாகும். அவர் பள்ளியைக் குறிப்பிடும் போது பள்ளியானது வாழ்க்கைக்காண தயாரிப்பு எனக் கூறுவதை விட அதுவே வாழ்க்கை எனக் குறிப்பிடுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

சிரிக்கும் வகுப்பறை புதினத்தில் கல்வியியல் சிக்கல்கள்

கதை கேட்கவும் சொல்லவும் ஆர்வமிக்க குழந்தைகளை வெறும் மனப்பாடம் செய்யும் இயந்திரங்களாக மாற்றி வைத்துள்ளது. இன்றைய கல்விமுறை, பரீட்சை, ஆசிரியர், தண்டனை என்று நீளும் பயங்களின் பட்டியல் மிகப்பெரியது. சிரிக்கும் வகுப்பறை புதினத்தில் குழந்தைகளின் மனநிலையிலும் மொழியிலுமே வாசகனுக்குப் புரிய வைத்திருப்பது படைப்பாசிரியரின் படைப்பாளுமையை வெளிப்படுத்துகிறது.

கல்வியியல் சிக்கல்கள்

- குடும்ப பாதிப்புகள்
- பள்ளிச் சூழ்நிலை
- தண்டனை முறைகள்
- ஆசிரியர்களின் போக்கு

போன்ற சிக்கல்கலை மையமிட்டு இப்புதினத்தின் வழிக் குழந்தைகளின் கல்விமுறையில் ஏற்படும் சிக்கல்களைத் தெளிவுபடுத்தலாம்.

குடும்ப பாதிப்புகள்

"குடும்பமே குழந்தைகளின் முதல் மனிதத்தொடர்பைத் தருகிறது. இது குழந்தையின் ஆளுமை அமைப்பிலும், அவனது மனப்பான்மைகளைத் தீர்மானிப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒரு நல்ல குடும்பம், ஒரு பொருத்தப்பாடுடைய ஆளுமையை உருவாக்குகிறது". (கல்வி உளவியல் ப:27) என்ற கருத்திற்கு ஏற்ப இப்புதினத்தில் 'திவாகர்' என்ற சிறுவன் பாடங்களின் மீது ஆர்வமின்மை காரணமாக, அதீத கற்பனையின் வெளிப்பாடாக இல்லத்திலும் பள்ளியிலும் அவன் கேட்கும் கேள்விகளினால் எரிச்சல் அடைந்து, அரவணைத்துச் செல்ல வேண்டிய அவன் தாயார் அவனை எவ்விதப் புரிதலுமின்றி அடிக்கின்ற செய்கையினால் திவாகரின் மனம் அம்மா தன்னை தண்டிப்பது கூட ஒரு பொருட்டாகக் கருதாமல் இருக்கும் நிலையினையே காணமுடிகிறது. இது குறித்து அவன் எவ்வித மனக்கலக்கமும் இன்றி அடுத்த நிலைக்கு மாறி சிந்திக்கின்ற நிலையினையும் காணமுடிகிறது.

கல்வியில் ஆர்வம் குறைந்திருப்பினும் கற்பனை ஆற்றல் மிகுதியாக உள்ளதையும் அவர்கள் தொடர்ந்து ஒரு பள்ளியில் சேர்ந்து மிகுதியாக உள்ளதையும்,அவர்கள் தொடர்ந்து ஒரு பள்ளியில் சேர்ந்து கற்க முடியாத நிலையினை இப்புதினத்தின் வழி அறியப்படுகிறது.

> "திவாகர் இப்போது ஏழாம் வகுப்பில் படிக்கிறான் ஆனால்
> இதற்குள் ஒன்பது பள்ளிக்கூடங்கள் மாறிவிட்டான்......" (பக்9)

http://Creativecommons.org//license/by/4.0/.

என்பதிலிருந்து இச்சிறுவனுக்குக் கல்வியில் ஆர்வமின்மை இருப்பினும் அவனுடைய அதீத கற்பனையினால் அவன் செய்யும் சேட்டைகளும் அவன் கேட்கும் கேள்விகளுமே அவனைப் பல்வேறு பள்ளிகளுக்கு மாறி மாறிப் போகவைத்த நிலையினைக் காணமுடிகிறது.

பள்ளிச்சூழநிலை

குழந்தையின் சமூக வளர்ச்சியில் பள்ளியின் செல்வாக்கு மிக அதிகமாக இருக்கிறது. ஆசிரியர் தாய்க்கு இருக்கிறார். ஒருநாளில் பாதி நேரத்தை அவன் பள்ளியிலேயே கழிக்கின்ற நிலையே காணமுடிகிறது. எனவே இது வீட்டிற்கு அடுத்த இரண்டாவது காரணியாக விளங்குகிறது". (கல்வி உளவியல்:ப-31)

இப்புதினத்தில் பள்ளி என்பது குழந்தைகளின் ஆளுமைப் பண்பினை வளர்த்தெடுப்பதற்கு பதில் அவர்களை ஒரு இயந்திர கதியி;ல் மாற்றி துன்புறுத்துவதாகவே உள்ளது.

"இரவில் படுக்கையில் படுத்த போதும் கூட அவனுக்கு எளிதில் உறக்கம் வராது கரப்பான் பூச்சி இரவில் என்ன செய்துகொண்டிருக்கும். அதற்கு குளிராதா? (பக-19)

என்று ஏதாவது ஒன்றைப் பற்றி நினைத்துக் கொண்டு பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் அவன் கேட்கும் கேள்விகளினால் அவன் பல்வேறு பள்ளிகளுக்கு மாற்றம் செய்யப்படுகிறான்.

அவ்வாறு அவன் மாற்றம் செய்யப்பட்ட பள்ளிகளுள் "சயனகிரியில் உள்ள பள்ளிகளில் முட்டாள், மக்கு, உதவாக்கரை என நீக்கப்பட்ட மாணவர்கள், வகுப்பில் அடிதடி செய்து விலக்கப்பட்டவர்கள் பலமுறை தோற்றுப்போனவர்கள் எந்தப் பள்ளியிலும் சேர்க்க லாயக்கு அற்றவர்கள் மற்றும் பள்ளிக்குப் போக மறுத்துத் தப்பியோடுகின்றவர்கள் இவர்களுக்காகவே அக்ரமா பள்ளி உருவாக்கப்பட்டிருந்தது." (ப:47) என்ற இப்புனைவில் மாணவர்களின் ஒழுக்கமின்மையைச் சரிசெய்வதற்குப் பதில் இப்பள்ளியில் மாணவச் சிறுவர்களுக்குப் பல்வேறு தண்டனைகள் வழங்கி அவர்களைத் துன்புறுத்தியதும் அத்தண்டனைகளைப் பரிசோதிக்கும் ஆய்வுக்கூடமாகவும் செயல்பட்டதைச் சுட்டுகிறது.

"பள்ளியில் இருந்து மாணவர்கள் எவரும் தப்பிப்போகேவா அல்லது பாதியில் வெளியேறவோ முடியாது. இந்தப் பள்ளியில் படித்த மாணவர்களும் வெளியே சென்ற பிறகும் பள்ளி நடைமுறைகளைத் தெரியப்படுத்திவிடக்மூடாது என்ற விதியிருந்தது. உண்மையில் இது தண்டனைப்பள்ளி" (ப:48) மாணவர்களை எப்படியெல்லாம் அடித்துச் சித்திரவதை செய்யலாம் என்பதைப் பரிசோதனை செய்வதற்காக உருவாக்கப்பட்ட ரகசியப்பள்ளியாக புனைந்திருக்கிறார்.

தண்டனை முறைகள்

பள்ளிக்கல்வி அதிகாரியாக வேலை பார்த்த ராபர்ட் லொங்கோ என்பவர் மாணவர்களுக்குப் பல்வேறு நிலைகள் தண்டனைகளைக் கொடுப்பதில் விருப்பம் கொண்டவராக இருந்தார். அவை மாணவர்களுக்குப் பிரம்பால் அடிப்பது, தலையில் கொட்டுவது, வட்டம் போட்டு அடிப்பது, முழங்கால் போட்டு முதுகில் அடிப்பது, உச்சந்தலையைச் சுவரில் மோத வைப்பது,கன்னத்தில் அறைவது காதைப்பிடித்து

http://Creativecommons.org//license/by/4.0/.

உக்கிபோட வைப்பது, காதை மைதானத்தில் ஓட வைப்பது, நூறு முறை இம்போசிஷன் எழுதுவது போன்ற தண்டனைகளை வழங்குவார்.

பள்ளியில் தமிழ் பேசும் குழந்தைகளின் நாக்கில் ஒட்டும்
ரெட் ஸ்டிக்கர் அது. ஆதை ஒட்டிவட்டால் சில நிமிடங்களில்
நாக்கு புண்ணாகி விடும் ….. இதற்கு பயந்து பிள்ளைகள்
தமிழில் பேச மாட்டார்கள் …………………….”(பக்:50,51)

என்ற நிலையினை நோக்கும் பொழுது அக்ரமா பள்ளியின் தண்டனை முறைகளை அதீத புனைவுத் தன்மையுடனும் இதன் வழிக் குழந்தைகளின் ஒழுக்கநெறிகளை இத்தகைய தண்டனைகளைச் சரிசெய்ய இயலாது என்பதனையும் அறியமுடிகிறது.

ஆசிரியர்களின் போக்கு

“குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியில் ஆசிரியரின் செல்வாக்கு முக்கியமான ஒன்றாகும் குழந்தை தன்னைப்பற்றி கொண்டுள்ள உணர்வை ஆசிரியர் அவனது நடத்தையைச் சரிசெய்வதன் மூலமும் அவனது பள்ளிச்செயல்களுக்கு விளக்கம் கூறுவதன் மூலமும் நேரடியாக மாற்றி அமைக்கிறார்.”(கல்வி உளவியல்ப:12) இத்தகைய தாய் உள்ளம் கொண்ட ஆசிரியர்களைத் தான் மாணவர்களும் விரும்புகின்ற நிலையினை,

சிரிக்க சிரிக்கப் பேசும் ஆசிரியர்கள் வந்து பாடம் நடத்தி
அவனோடு விளையாடி, அவன் சொல்லும் கதைகளைக் கேட்டு
சந்தோசப்பட வேண்டும் என்று நினைப்பான்………..(ப:12)

என்ற திவாகரின் எதிர்பார்ப்பு ஒட்டு மொத்தக் குழந்தைகளின் எதிர்பார்ப்பாகவே ஆசிரியர் பதிவுசெய்கிறார்.

அக்ரமா பள்ளி முன்பு புத்ததுறவி நிர்மயா என்பவரால் உருவாக்கப்பட்ட குகைப்பள்ளியாகும். மலைமீது குகைகளில் பள்ளியைத் துவக்கி மாணவர்களுக்குக் கல்வி கற்றுத்தர வேண்டும். அது பின்னாளில் ஒழிக்கப்பட்டு தீயவர்களின் கையில் அகப்பட்டு தண்டனைப் பள்ளியாக மாறியது. புத்ததுறவி நிர்மயாவின் ஒத்துழைப்பால் திவாகரும் அவனது நண்பர்களும் அப்பள்ளியை மீட்டெடுப்பதாகக் கதையை மிக நேர்த்தியாக நகர்த்திச் செல்கிறார்.

குகைப்பள்ளியின் செயல்பாடுகள்:

குகைப்பள்ளியில் தண்டனைகள் கிடையாது ஆசிரியர் மாணவர் பேதமில்லை, பரஸ்பரம் பேசி விவாதம் செ;து கற்றுக் கொள்ளுதல், பாடத்திட்டங்களைவிட இயற்கை அதிகமாக கற்றுத்தரும் என்ற நம்பிக்கை. ஏல்லா மாணவர்களிடமும் ஏதாவதொரு திறன் இருப்பதைக் கண்டறிந்து நடத்தல், சமாதானத்தை, சகமனிதனை நேசிக்கும் அன்பை, அறிவைப் பகிர்ந்து தரும் நிறுவனம். இலவசமாக இயங்கக்கூடிய பள்ளியாகும் பள்ளியில் கரும்பலகைகள் கிடையாது. மனப்பாடம் செய்யும் கொடுமை கிடையாது. அடிக்கின்ற ஆசிரியர்கள் கிடையாது, கட்டாயப் பாடங்கள் கிடையாது, இத்தகைய கல்வி முறையே இன்றைய காலச்சூழலுக்குக் குழந்தைகளுக்குத் தேவை என்பதனை விளங்க வைக்கிறார். ஆக்ரமா பள்ளி சுதந்திரப் பள்ளியாக மீண்டும் உருவெடுக்கும் நிலையினையும் சுட்டுகிறார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

தாகூரின் கல்வி;ச்சிந்தனை

"கல்விமுறை வாழ்க்கையுடன் ஒன்றுபட்டது கல்வி வெறும் அறிவினைப் பெறுவதோ அல்லது செய்திகளைச் சேகரிப்பதோ கல்வியாகாது. எல்லாவற்றுடனும் இணக்கம், சுதந்திரம், படைப்பாற்றல் மிக்க வெளிப்பாடு, இயற்கையோடும் மனிதனோடும் உள்ள உறவு நெருக்கம் பன்னாட்டு நோக்கு இவைகளின் தொகுப்பே தாகூரின் கல்விச்சிந்தனையாகும".; (கல்வி புதுமைகள் - ப:42)

"பாடப்புத்தகங்களைப் படிப்பது மட்டு கல்வியில்லை விவசாயம், கட்டுமானப் பணிகள், தச்சு, நெசவு போன்ற பல்வேறு தொழில்கள் என ஒரு மனிதன் தன் வாழ்விற்குத் தேவையான அத்தனையும் தானே கற்றுக்கொள்ள வேண்டும்.". (ப:134) என்பதிலிருந்து தாகூரின் கல்விக் கொள்கைக்கு ஏற்ப இன்றைய கல்விச் சூழல் மாறவேண்டும். அதுவே மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஏற்றது என்பதனையும் இப்புனைகதையின் வழி உணர்த்துகிறார்.

முடிவு:

பள்ளிக்கூடம் என்பது ஒருபோதும் சிறைச்சாலையாக மாறிவிடக்கூடாது. அது ஒரு சுதந்திரப் பள்ளியாகச் செயல்பட வேண்டும். வீடே குழந்தைகளின் முதல்பள்ளி, இரண்டாவது பள்ளிக்கூடங்கள், மூன்றாவது இயற்கையோடு இயைந்த உலகம் ஆகும். ஆசிரியரால் ஒரு குழந்தையினைத் திறம்பட கற்கச் செய்தல் என்பது இயலாத ஒன்றாக இருப்பினும், அக்குழந்தைக்குத் தேவையான சூழ்நிலையினை அளித்து, அதற்கேற்றபடி செயல்பட்டு அக்குழந்தை கற்பதற்கு உதவிட முடியும். இம்மாதிரியான வகுப்பறை மற்றும் பள்ளிச் சூழ்நிலைகள் கற்றலை அதிகத் திறன்மிக்கதாக மாற்றுவதற்கு உதவி செய்வதுடன் குழந்தைகள் விரும்பும் "சிரிக்கும் வகுப்பறை" களாக இருக்கும் என்பதனை எஸ்.ராமகிருஷ்ணன் தன் படைப்பில் உணர்த்தியுள்ளமையை அறியலாம்.

துணை செய்த நூல்கள்:

1. எஸ்.ராமகிருஷ்ணன் - "சிரிக்கும் வகுப்பறை", சிவம் புக்ஸ், 19, டி.எம்.சாரோன்,திருவண்ணாமலை-606601. ஆகஸ்ட்-2013
2. பேரா.முனைவர் - "கல்விப் புதுமைகள்" காவ்யமாலா பப்ளிஷர்ஸ் 7.8. ஞஞு நகர், சின்னாளப்பட்டி-624301. திண்டுக்கல் மாவட்டம்
3. ஜி.எஸ்.எஸ் - "குழந்தைகள் சைக்காலஜி",நலம் பதிப்பகம், சென்னை-600018
4. பாரதியார் பல்கலைக்கழகம் - "கல்வியியல் உளவியல்" 1992
5. பாரதியார் பல்கலைக்கழகம் - "இந்தியக் கல்வியியல் சவால்கள்" 1992

http://Creativecommons.org//license/by/4.0/.

SPL-EDITION – IV VOLUME - 1
மார்ச்சு-2025 E-ISSN : 2584 - 1238

19. மானிடவியல் நோக்கில் பொருநர் வாழ்வியல்

முனைவர் கி மலர்விழி
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த் துறை
அரசு கலைக்கல்லூரி,(த)கோவை-18.

DOI 10.5281/zenodo.15070114.

: Abstract

Anthropology is the science of man, says Bhaktavacala Bharathi. The term anthropology is the equivalent of the word 'anthropology' in English. This word is derived from the Greek words 'anthropos' and 'logos'. Art is considered to be the foremost of the things that bring happiness to man. With its attraction, art is integrated into everyone's life and works with close companionship in increasing happiness if it occurs in that life and greatly reducing suffering if it occurs. Art is to be mixed with a person's life and play a major role in all stages of his life and always make its presence known. During the Sangam period, music and the arts were highly appreciated. Artists were highly valued. Among these artists, Koothan, Panan, Porunan and Viraliyar are notable. The purpose of this article is to explain from an anthropological perspective how the lives of the people among them were structured.

Key Words : Anthropology - Bhaktavacala Bharathi - Koothan, Panan, Porunan and Viraliyar

முன்னுரை

மானிடவியல் என்பது மனிதனைப் பற்றிய அறிவியல் என்பார் பக்தவச்சல பாரதி. மானிடவியல் என்ற சொல்லாக்கம் ஆங்கிலத்தில் வழங்கப்பெறும் 'anthropology' என்னும் சொல்லுக்கு நேரானது. இச்சொல் 'anthropos' 'logos' ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்கள் ஆகும்மனிதனுக்கு மகிழ்ச்சி விளைவிக்கும் பொருள்களில் தலையானதாகக் . தன் ஈர்ப்பாற்றலால் எல்லோருடைய வாழ்க்கையிலும் கலையானது .கலை விளங்குகிறது ஒன்றிப்பிணைந்து அவ்வாழ்வில் சுகம் நேர்ந்தால் அதனை அதிகமாக்குவதிலும், துயரம் நேர்ந்தால் அத்துன்பத்தை பெருமளவு குறைப்பதிலும் நெருங்கிய தோழமையின் ஈடுபாட்டோடு செயல்படுகிறது.ஒருவனது உயிரோடு இரண்டறக் கலந்து அவனுடைய வாழ்வின் அனைத்து நிலைகளிலும் மிகப்பெரிய பங்கு வகித்து தன் இருப்பை எப்பொழுதும் புலப்படுத்தியவாறு இருப்பது கலையாகும்சங்க. காலத்தில் இசைகூத்துக்கலைகள் , பெரிதும் போற்றப்பட்டன. கலைஞர்கள் மிகவும் மதிப்பிற் குறியவர்களாக போற்றப்பட்டனர்அக்கலைஞர்களுள் . கூத்தன்,பாணன் , பொருநன், விறலியர் என்போர் குறிப்பிடத்தக்கவராவர் இவர்களுள் . பொருநர்களின் வாழ்க்கை என்பது எவ்வாறு அமைந்திருந்தது என்பதை மானிடவியல் நோக்கில் எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கலை விளக்கம்

கலை என்னும் சொல் மனதை வசப்படுத்த கூடியதும் நிகழ்த்துகின்றவனையும் பார்வையாளனையும் ஒரே உணர்வுக்குள் ஆட்படுத்தக் கூடியதும் பொழுதுபோக்கு கூறுகளை உடையதும் ஆகும். கலையின்' அடிப்படை பொருள் மனதின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் தன்மைகளையும் அழியாத உண்மையின் தத்துவத்தையும்

http://Creativecommons.org//license/by/4.0/.

வெளிப்படுத்தலேயாகும்' .உலகியலோடு தொடர்புடைய மக்கள் உணர்வுகளைத் தூண்டுவது கலையின் படைப்பாக்கத்திற்குரிய முக்கியமான காரணங்களில் ஒன்றாகும். இவ்வாறு தூண்டப் பெறும் உணர்ச்சி சாயலின் புலத்துடனேயே வாழ்வியல் உண்மைகள் ஊட்ட பெறல் வேண்டும்

.**கலை என்னும் சொல் கல் என்னும் வேர் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். கலை, கல்வி எனும் இரு சொற்களும் கல் எனும் வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியதாகும்**பாலசுப்ரமணியம் சங்க இலக்கியத்தில் கலையும் கலைக் .வெ.கு) ." .(11-கோட்பாடும் ப ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கலைகளில் வல்லவர்கள் கலைஞர் எனப்படுகின்றனர் இச்சொல் பிற்காலத்ததாகும். பழைய இலக்கியங்களில் இன்று நாம் பயன்படுத்தும் 'கலை' என்றும் சொல் வழங்கவில்லை மாறாக ,கலைக்கணாளர்" கலைவலார், கிழவியார் என்னும் சொற்கள் தான் வழங்கப்படுகின்றன. கலைக்கணாளர் என்பது ஒரு தொடராகும். அமைச்சர்களை அக்காலத்தில் இத்தொடரால் சுட்டுவது மரபு " என்று சீவக சிந்தாமணி குறிப்பிடுகின்றது.

தொல்காப்பியர் சுட்டும் கலைஞர்கள்

மக்கள் புற வாழ்விலும், அக வாழ்விலும் கலைஞர் பெற்றிருந்த பங்கினை தொல்காப்பியர் இலக்கணமாக கூறியுள்ளார். ஆற்றுப்படை இலக்கியங்களுக்கு இலக்கணமாக புறவாழ்வினைக் கூறினும் அது கலைஞர் புரவலரை நாடிச் சென்று பரிசில் பெறுதல், தத்தம் இனத்தவரைப் பரிசல் பெற்ற புரவலர்பால் ஆற்றுப்படுத்துதல் என்னும் நடைமுறை உண்மைகளையும் நன்கு உணர்த்துவதாகவும் அமைகின்றது .

கலையின் தோற்றம்

கலை தோன்றிய முறையை வரையறுத்துக் கூற இயலாது. கலையின் தோற்றம் பற்றி பல்வேறு கொள்கைகள் நிலவுகின்றன. **தொடக்கத்தில் விலங்கை போன்று வாழ்ந்த மனிதன் சற்று நாகரிகம் அடைந்த பிறகு வயிற்றுப் பிழைப்புக்காகப் பல்வேறு தொழில்களைச் சிறிது சிறிதாக கற்றுக் கொண்டான். அத்தொழில்களே பின்பு அவனுக்கு தேறுதல் அளிக்கும் கலைகள் ஆயின**) "சீனிவேங்கடசாமி நுண்கலைகள்என்ற (5.ப, ஒரு கருத்து உண்டு. கலையாவது அறிவோடு தொடர்புடையது. ஐம்புலன்களையும் நுட்பமாக அறிந்துணரும் பேரறிவுத்திறன் உடையவரால் கலை தோன்றியிருக்க இயலும். இத்தகைய திறன் வாய்க்கப் பெற்றவர்களின் கொடை தான் கலையாகும். கலை மனமகிழ்ச்சியைத் தரும் என்று முதலில் கண்டு உணர்ந்தனர் . அம்மகிழ்ச்சியை மேலும் விரிவுபடுத்த வேண்டி இக்கலையை ஆழமாக ஆராய்ந்தும் வகைப்படுத்தியும் ஓர் ஒழுங்கு வரையறைக்குள் அடங்குமாறு செய்தனர். மக்களுள் எப்பிரிவினராயினும் நுண்ணறிவுத்திறம் நிறைந்தவரிடம் கலை விளக்கமடைந்து நிற்பதை இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன. கூர்மதியுடைய ஆடவருக்கும் மகளிர்க்கும் கலை என்பது பொதுவானதாகும். சிறந்த அறிவுடைய வரால் தோற்றுவிக்கப்பட்ட கலை, கல்வி அறிவு பெறாத எளிய மக்களின் உள்ளங்களை பிணித்து அனை வரையும் தன்மயமாக்கும் ஆற்றல் கொண்டதாகத் திகழ்கின்றது. அக்கால முதல் இக்காலம் வரை இது தொடர்ந்து தொய்வின்றி நிலைத்து நிற்பதற்கு இப்பொதுமை தன்மையே காரணமாகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – IV VOLUME - 1
மார்ச்சு-2025 E-ISSN : 2584 - 1238

பொருநர் வாழ்வியல்

பொருநர் என்போர் திறம்படப் பாடி நடிப்பவர்இவர்கள் . தடாரி, கிணை ஆகிய தோற்கருவிகளை இசைத்துப் பாடுவர். பொருநர் என்ற சொல்லுக்கு போர்' வீரர்' என்ற பொருளை மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது. பொருநர் என்னும் சொல்லைப் பொருநர்+ எனப் பகுக்கலாம்,பொருந என்னும் விளிச்சொல் வீரன் . அரசன், முதலானோரை குறிக்கும் பொருநர் என்போர் பொருந்த வேடமிட்டு ஆடிப் பாடுபவர். பொருநர் என்போர் பாணர்களில் ஒரு வகையினர். மன்னனுடன் போர்க்களத்திற்குச் சென்று மன்னனையும் போர் வீரர்களையும் தங்களுடைய போர்ப் பாடல்களால் மகிழ்விக்கும் பணியைச் செய்யும் ஒரு வகையான இசைக் குழுவும் அக்காலத்தில் இருந்துள்ளதுஇவ்விசைக் . குழுவில் இடம் பெற்ற கலைஞர்கள் பொருநர் என அழைக்கப்பட்டனர் .

பொருநர் நடிப்புக்கலைச் சார்ந்த திறன்களுக்காக மட்டுமின்றிப் பல்துறை அறிவிற்காகவும் எப்பொழுதும் அறிவு சார்ந்த நகைச்சுவைப் பேச்சுகளுக்காகவும் தெளிவான வாதத் திறமைக்காகவும் பாராட்டப்பட்டவர்களாக விளங்கினர். **பொருநர் ஏர்களம்" பாடுநர், போர்க்களம் பாடுநர், பரணி பாடுநர் என மூவகைப்படுவர்தமிழண்ணல் புதிய ')' . (91.நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு** பபொருநர் புலம்பெயரும் தன்மையை உடையவர். போர்க்களத்தில் இருந்து மன்னன் நாட்டிற்குச் செய்தியைக் கொண்டு செல்லும் பணியையும் இவர்கள் மேற்கொண்டு இருந்தனர்". **பொருநர்களும்பாணர்களும் , ஒரே இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்த போதும் பாணர்களைக் காட்டிலும் பொருநர்கள் மன்னர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர்களாக விளங்கினர்"** தமிழக -பிள்ளை.கே.கே) என்பர் (279.ப,வரலாறும் மக்களும் பண்பாடும். பொதுவாக பாணர்களைக் காட்டிலும் தலைசிறந்த பாடகர்களாகவும் புலவர்களாகவும் பொருநர் விளங்கினர். இதன் காரணமாக மன்னர்களின் மதிப்பீட்டில் பொருநர்கள் உயர்ந்து இருந்தனர் எனலாம். நலங்கிள்ளியைப் பாடும் சோழநாட்டுப் பொருநர்கள் தங்களை" பொராஅப் பொருநரேம்எனத் தம்மை " அழைத்துக் கொள்வதால் போர்க்களத்தில் போரிடாது கூத்தர் குழுவிற்க்கு தலைமை தாங்கிச் செல்லும் பொருநரும் இருந்துள்ளனர்.

பொருநர் பாடிய கரிகாலனின் புகழ்

பொருநர் சோழன் கரிகாற் பெருவளத்தானை வெள்ளி எழுந்த இருளை உடைய விடியக் காலையில் நாடிச்செல்வர். கண்ணகன்ற உடுக்கை தோற்றுவித்த இரட்டைத் தாளத்திற் கேற்ப மன்னனை வாழ்த்திப் பாடுவர் . பொருநன் அதியமான் பொருட்டெழியின் முற்றத்தில் இளநிலவு திகழும் பனிசொரியும் விடியற் காலத்தே ஒருகண் மாக்கிணையை அறைந்து நீ நெடிது ' வாழ்வாயாக' எனப் பாடுவர். சோழிய ஏனாதி திருக்குட்டுவனின் முன்றிலில் இருட்பொழுதும் நிலவுப் பொழுதும் கழிந்த பகற் பொழுதினைச் செய்தற்கு தோன்றிய விடிய காலத்தே ஒரு கண்ணையுடைய பெரிய தடாரிப் பறையை மெல்ல ஒலிக்குமாறு இசைத்து வஞ்சித்துறை பாட்டுடொன்றைப் பாடுவர் . பொருநர் சேவற்ககோழி கூவித் துயில் எழுப்பப் படுக்கையினின்று எழுவர். தண்ணிய பனித் துளிக்கும் விடியலில் தடாரிப் பறையைக் கொட்டி அவியன் முற்றத்தில்

http://Creativecommons.org//license/by/4.0/.

நின்று பலவாகிய உழவெருதுகளை வாழ்த்திப் பாடுவர்.பொருநர் காட்டு வழியில் வரும் பொழுது காட்டுறை கடவுளை வணங்குவர். இதனை

இலையின்“ மராத்த எவ்வந் தாங்கி
வளைவலந் தன்ன மென்னிழன் மருங்கிற்
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை ”

(53-வ50.**பொருநராற்றுப்படை பா)**

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன . பொருநர் நண்பகலில் காட்டிடத்தே நடந்து வருந்தி மாலைப் பொழுதில் அரசன்மனை முன்றிலில் தடாரியுடன் பரிசில் வேண்டி நிற்பர். இரவுப் பொழுதிலும் சென்று அரசனைப் பாடி பரிசில் பெறுவர் . பொருநரும் அவரது சுற்றத்தாரும் ஊருக்கு முன்னிடமான பொதியிலில் வந்து தங்கியிருப்பார். பொருநர் இரவில் அதியமான் நெடுமான் அஞ்சியின் முன்றிலில் தடாரிப் பறையை அறைந்து பாடி நெல் பெறுவர் . பொருநரின் சுற்றத்தார் சோழன் கரிகால் பெருவளத்தான் அரண்மனையில் பல நாட்கள் உண்டும் கண்டும் கேட்டும் தங்குவர். அவ்வாறு தங்கும் பொழுது விறலியர் முழவிசையோடு சீறியாலும் இசைக்க தாளத்திற்கு ஏற்ப பாடி ஆடி மகிழ்வர் .இதனை

மண்’ அமை முழவின் பண் அமை சீறியாழ்
ஒண்நுதல் விறலியர் பாணி தூங்க,
மகிழ்ப் பதம் பல்நாள் கழிப்பிஒரு, நாஇள்

(111-வ109.**பொருநராற்றுப்படை பா)**

என்ற பொருநராற்றுப்படை பாடல் வரிகளால் அறியலாம்.

பொருநர் பெரிய மூங்கிலால் ஆகிய தூண்டிலில் மீன் பிடிப்பர் அம்மீன்களை கிணை மகளிர் கொண்டு சென்று விற்றுவருவர்.அதில் கிடைக்கும் பொருளை கொண்டு புளியங்கூழ் சமைப்பர். அவ்வுணவைக் காலமல்லாத காலத்தில் உண்பர். இதனால் பெருநர் உண்டற்குரிய கால வரவு நோக்கியிருந்து உண்ணாது உணவு வரவு நோக்கியிருந்து உண்ணும் வாழ்க்கையினர் என்பது விளங்குகின்றதுஇவர்கள். பனை மரத்து நாரினையும் பனங்குருத்தையும் கொண்டு பல பொருட்களை இடிக்கச் செய்து விற்று வாழ்வர். இதனையும் இலக்கியங்கள் சுட்டுகின்றன. பொருநர் முழவு போன்ற அடியினையுடைய பனையின் அரம்போலும் கருக்குப் பொருந்திய பெரிய மடலினின்று எடுத்த நாரினையும் பனங்குறுத்தையும் கிணையோடு சேர்த்துக் கட்டி உழுதுண்டு வாழ்வோர் இல்லங்கட்குச் சென்று முறையே அவர் நல்கும் உணவை இரந்துண்டு வாழ்வர்.

முடிவுரை

கலைக்கும் வாழ்க்கைக்கும் இடையில் ஒரு வகை தொடர் உண்டு பயனற்ற வாழ்வை பயனுடையதாய் ஆக்குவது இசைக்களையாகும் கட்டுப்பாடான வரையறுக்கப்பட்ட வாழ்வினை வற்புறுத்தும் சமய நூல்களுள் கலையின் இன்றியமையாமையை உணர்ந்து இதற்கு தனியாக ஒரு இடத்தை தந்தது இங்கு கருதத்தக்கது. இன்பத்தை விரும்பி நாடுவது மனித இயல்பு என்பது எளிதாக ஒருவனுக்கு இடையூறு இன்றி கொடுப்பது கலையாகும். இதனால் கலைகள் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டு இருப்பதோடு மட்டுமின்றி அவ்வாழ்வில் பெரும் பங்கு வகிக்கின்றன.

http://Creativecommons.org//license/by/4.0/.

அவ்வகையில் பொருநர்களின் வறுமையான வாழ்க்கை என்பது நிரந்தரமாக இருந்த போதிலும் மன்னர்கள் மற்றும் புரவலர்களிடம் இருந்து தாங்கள் பெற்ற பரிசு பொருட்களை தங்களுக்கென போற்றி பாதுகாவாது பிறருக்கு வாரி வழங்கிய காரணத்தினால் தான் எப்போதும் வறுமையாளர்களாகவே காணப்பட்டனர் என்பது புலப்படுகிறது. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பதற்கு ஏற்ப கலைஞர்கள் எப்பொழுதும் கூட்டம் கூட்டமாகவே வாழ்ந்தனர் எந்த சூழ்நிலையிலும் இக்குழுத்தன்மை விடாது கடைபிடித்து வந்துள்ளன.

பெரும்பாலும் அன்றைய கலைஞர்கள் புலம்பெயரும் நாடோடி வாழ்க்கைக்கு அடிப்படை காரணமாக இருந்தது அவர்கள் தம்மிடத்தில் இருக்கும் கலை ஆற்றலை பலருக்கும் வெளிப்படுத்துவதன் வாயிலாக மகிழ்வூட்ட வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே.. தங்களிடம் உள்ள கலைத்திறமையை வருவாய் பெறும் நோக்கத்திற்காக பயன்படுத்தியதை விடவும் பிறரை மகிழ்விப்பதற்காக பயன்படுத்தியதே மிகுதியாக இருந்துள்ளது. அன்றைய கலைஞர்கள் எதிர்பார்த்தது எதுவுமே இல்லை ஆனால் இன்று பெருமளவில் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்காக மட்டுமே கலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

துணைமை நின்றவை :

1. கதி. முருகேசன்உரை, பத்துப்பாட்டு, சாரதாபதிப்பகம், சென்னை - 14, ஆறாம்பதிப்பு 2017.
2. அ. தட்சிணாமூர்த்திஉரை, பெரும்பாணாற்றுப்படை, நியுசெஞ்சுரிபுக்ஹவுஸ் (பி) லிட், சென்னை - 98,முதற்பதிப்பு, 2004.
3. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உரை, புறநானூறு,சாரதாபதிப்பகம், சென்னை - 14, இரண்டாம்பதிப்பு 2017.
4. ச. மெய்யப்பன் பதிப்பு,திருக்குறள், மணிவாசகர்,பதிப்பகம், சென்னை - 106,மறுபதிப்பு, 1967.
5. இ. அண்ணாமலை கிரியாவின் தற்கால தமிழ் அகராதி, சென்னை - 41,முதல்பதிப்பு 1993.

http://Creativecommons.org//license/by/4.0/.

20. பண்டையக் காலத் தமிழ்ச் சமுகத்தில் பண்பாட்டு நோக்கில் பட்டங்கள்

முனைவர் கசெந்த .ில்குமார்,
உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை (முதுகலை)
வி .நா .இ.செ626 -விருதுநகர் , கல்லூரி .நா .001,
senfolkphd@gmail.com
DOI 10.5281/zenodo.15070125.

: Abstract

In ancient Tamil society, kings respected the people and praised their talents. Therefore, they were given many titles. In particular, kings were also called Ko, Arasan, and Vendan. In this article, we will look at the titles given to Tamils in Tamil society.

Key Words : Ancient Tamil - Arasan - Vendan - Society

முன்னுரை

பண்டையக் காலத் தமிழ்ச் சமூகத்தில் மக்களை மன்னர்கள் மதித்தனர் அவர்களின் திறமையை போற்றினர் .எனவே அவர்களுக்கு பல பட்டங்கள் வழங்கப்பட்டது . குறிப்பாக மன்னர்களையே கோ, அரசன், வேந்தன் என்றும் அழைத்துள்ளனர் . இக்கட்டுரையில் தமிழ்ச் சமூகத்தில்தமிழர்களுக்குத் தரப்பட்ட பட்டங்களைப் பற்றிப் பார்க்கலாம்.

பண்பாடு

பண்பாடு என்பது, மனித செயற்பாடுகளின் கோலம், அவற்றின் சிறப்புத் தன்மை, முக்கியத்துவம் ஆகியவற்றை குறிக்கும் குறியீட்டு அமைப்பாகும் .பண்பாடு திருவள்ளுவர் நோக்கில் அறம்இன்பம் என்ற இம்ம ,பொருள் ,ைப் பயனையும்வீடு பேறு என்ற மறுமை , எழுமைப் பயனையும் தானும் பெற்று தன்னை சார்ந்தவர்களும் பெற ,பயனையும் இன்பம் வீடைதல் ,பொருள் ,அறம் .உதவுவதே பண்பாட்டின் நோக்கங்கள் ஆகும் அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் .நூற்பயனே என முன்னோர்கள் மொழிந்துள்ளனர் என்ற இரண்டுமே பண்ுபுடைமை என திருவள்ளுவர் பண்பாட்டின் நோக்கத்தை தெளிவுபடுத்துகிறார். விளைகின்ற நிலத்தை உழுது பண்படுத்துவதுபோல மக்கள் தம் வாழ்க்கையினை நெறிப்படுத்துவதே பண்பாடாகும்தமிழர் பண்பாடும் அத்தகையதே .

நாகரிக முதிர்ச்சியில் தோன்றும் பண்பட்ட பயன்மிகு பழக்கவழக்கங்கள், பட்டறிவு, நம்பிக்கைகள், கலைகள், விளையாட்டுகள், வழிபாடுகள், இலக்கியப் படைப்பு, பழமொழி, நீதிகள், அறவியல் அனைத்தும் பண்பாடு என சுருங்க கூறலாம் என்கிறார் கோமதி[1]

தமிழர் பண்பாட்டின் அமைப்பொழுங்கானது அடிப்படையில் இரண்டு அம்சங்களைக் கொண்டதாகும்ஒன்று ., அதனளவில் சார்புடையது)culture dependent). மற்றொன்று, உலகளாவிய அமைப்பியல்புகளோடு பொருந்தக்கூடியது)culture independent). அதாவது, தமிழ்ப் பண்பாட்டின் உருவகத்தைத் தரக்கூடிய 'புறக் கூறுகள்' பண்பாடு சார்ந்தும், அவற்றின் 'அகக் கூறுகள்' உலகளாவிய அமைப்புகளோடு ஒத்திசைவு பெறுவதும் இதன் உட்பொருளாகும் எனலாம்.

http://Creativecommons.org//license/by/4.0/.

காதல்) தமிழர்களின் பண்பாட்டு கூறுகள், வீரம், நட்பு, விருந்தோம்பல், ஈகை, கொடை, கற்புடமை, உலக ஒருமைப்பாடுஇலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி (; பாவாணர் கூறுவது போல, பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம், நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கைஎன தமிழர்களின் பண்பாட்டு பெருமைகள் உலகம் முழுவதும் பரந்து விரிந்து . சென்றுள்ளது[2] .

ஏனாதி

தமிழகத்தை பொறுத்தவரை காதலையும்வீரத்தையும் இரு கண்களாக சங்க , இலக்கிய மக்கள் போற்றினர் குறிப்பாக இளைஞர்கள் அப்படி காதலை அவர்கள் கைப்பற்றும் முன் தங்கள் வீரத்தை காட்ட வேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு இருந்த காரணத்தினால் ஏராளமான வீர தீர செயல்களை செய்து தங்களுக்கு பிடித்தவர்களிடமோ அல்லது மக்கள் மனதிலோ இடம் பிடித்தனர் அதில் ஒன்றுதான் போர் .

பந்திக்கு முந்து படைக்குப் பிந்து என்ற பழமொழியின் வாயிலாக 'பந்தி' என்பது காலட்படையில் முதல் வரிசையில் நிற்கும் வீரர்களை குறிப்பிடும் சொல் அப்படியாக தங்கள் வீரத்தை வெளிப்படுத்தினர் சங்ககால மனிதர்கள்அப்படி போருக்கு செல்லும் . ஆடவர்களில் சிறந்த வீரரை மன்னரால் சேனாதிபதியாக ஆக்குகின்ற நிலையை நாம் அப்படி குறிக்கப்படும் வீரர்களுக்கு .சங்கப் பாடல்களின் வாயிலாக அறிய முடிகிறது **ஏனாதி** என்ற பட்டத்தை சங்ககால மன்னர்கள் தந்துள்ளனர் அவர்களை படைத்தலைவர்களாகவும் பொறுப்பு வகித்துள்ளனர் என்பதையும் சங்க இலக்கியத்தின் வாயிலாக அறிய முடிகிறது. ஏனாதி என்பது சேனாபதியைக் குறிக்கும் சங்ககாலத் தமிழ்ச்சொல் வில்லாண்மையில் சிறந்தவன் என்னும் பொருளில் இந்த ஏனாதி என்னும் பட்டம் சங்ககால மன்னர்களால் வழங்கப்பட்டது.

- ஏனாதி திருக்கிள்ளி,
- சோழிய ஏனாதி
- திருக்கண்ணன்

ஆகியோர் ஏனாதி பட்டம் பெற்ற படைத்தலைவர்கள்.

காவிதி பட்டம்

சங்க காலத்தில், (கி மு.600-கி பி.200) தமிழர்களின் வாழ்க்கையின் முதன்மைப் பகுதியாக வேளாண்மை இருந்தது. இது வாழ்க்கைக்கு அவசியமான ஒன்றாக கருதப்பட்டது, எனவே அனைத்து தொழில்களைவிட இது முதன்மை வகித்ததுஉழவர்கள் . அவர்கள் உணவு தானிய .சமூக நிலையில் மேல் நிலையில் இருந்தனர் உற்பத்தியாளர்களாக இருந்ததால், சுய மரியாதையுடன் வாழ்ந்தனர்சங்க காலத்தின் . துவக்கக் கட்டங்களிலேயே வேளாண் தொழில் பழமையானதாக இருந்தது, ஆனால் நீர்ப்பாசனம், உழவு, எருவிடுதல், சேமிப்பு, விநியோகம் ஆகியவற்றில் முன்னேற்றத்துடனும் செயல்திறன் கொண்டதாகவும் இருந்ததுபண்டைய தமிழர்கள் . பல்வேறு விதமான மண்வகைகள், அவற்றில் பயிரிடப்படும் பயிர் வகைகள் அந்தந்த பகுதிகளுக்கு பொருத்தமான பல்வேறு நீர்ப்பாசன முறைகளை அறிந்திருந்தனர் .

http://Creativecommons.org//license/by/4.0/.

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் தமிழ் நாட்டின் ஐவகை நிலப் பிரிவுகளில், மருத நிலப்பிரிவு மிகவும் வளமான நிலப்பகுதியாக இருந்ததால் சாகுபடிக்கு மிகவும் ஏற்றதாக இருந்தது. இவ்வாறு வேளாண்மை சார்ந்த பணிகளில் ஈடுபடும் மக்களை மன்னர்கள் போற்றிப் பாதுகாத்தனர்அவர்கள் சார்ந்தவர்களையும் ,அவர்களையும் , பெருமைப்படுத்தினர் அதனால் அவர்களுக்கு**காவிதி** எனும் பட்டம் தரப்பட்டதுசிறந்த . உழவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டம் இது இத்துடன் சிறந்த உழவுகளுக்கு

- **காவிதி பூ**
- **காவிதிப்புறவு**

என்பன போன்ற மேலும் இரண்டு விருதுகளையும் தந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

எட்டி பட்டம்

எட்டி என்பது சிறந்த உள்நாட்டு வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பட்டம். இப்பட்டம் சங்ககால விருதுகளில் ஒன்று என அறியபடுகிறதுசிறந்த உள்நாட்டு வணிகனுக்கு . எட்டிய நிலங்களில் உள்ள பொருள்களைப் பிறருக்குக் .அரசனால் இது வழங்கப்பட்டது இந்த எட்டி என்னும் தொழிற் வழிச் சொல் ,கிட்டும்படி செய்பவன் எட்டி என்றும் பிற்காலத்தில் ஆரியர்கள் வருகைக்கு பின் சாதிய குறியீடாக மருவி செட்்டி என வழங்குபடுகிறது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

வாணிக மரபின் வருபொருள் ஈட்டி
நீள்நிதிச் செல்வனாய் நீள்நில வேந்தனின்
எட்டிப் பூப்பெற்று இருமுப் பதிற்றியாண்டு
.ஒட்டிய செல்வத்து உயர்ந்தோன் ஆயினன்

)**மணிமேகலை சிறை செய் காதை** -115(

தரும தத்தன் என்பவன் பெரும் பொருள் ஈட்டி பட்டம் பெற்ற செய்தி 'எட்டி' .ஒன்றை மணிமேகலை நூல் குறிப்பிடுகிறதுதருமதத்தன் புகார் நகரத்தில் வாழ்ந்த வணிகன் ஒருவனின் மகன் தன் மாமன் மகள் விசாகையுடன் தகாத உறவு கொண்டிருந்ததாக ஊர்மக்கள் தவறாறாகப் பேசிக்கொண்டனர்தருமதத்தனின் பெ .ற்றோரும் அவ்வாறே எண்ணி மகனைக் கண்டித்தனர்அதனால் மனம் உடைந்த தருமதத்தன் ., விசாகையை மனமாற விரும்பினாலும், புகார் நகரத்தையே விட்டுவிட்டு மதுரைக்குப் போய்விட்டான்வணிகருள் .தருமதத்தன் மதுரையில் பெரும்பொருள் ஈட்டினான் . சிறந்தவருக்கு வழங்கப்படும் எட்டி என்னும்விருதினையும் பெற்றான்தான் ஈட்டிக் . கொண்டுவந்த பொருளைக் கொண்டு அறம் செய்கிறான் என்ற செய்தியை மணிமேகலை .காப்பியம் குறிப்பிடுகிறது

இத்துடன் எட்டி பட்டம் பெற்றவர்களுக்கு பட்டத்துடன் சேர்த்து அவர்களை மேலும் ' .பெருமை படுத்தும் விதமாக எட்டிபூ தரப்பட்டுள்ளது**எட்டிப்பூ**' என்பது பொன்னால் செய்யப்பட்ட தங்கப் பதக்கம் போன்ற அணிபெரும் பொருள் ஈட்டிய வாணிகச் . செல்வர்களுக்கு எட்டிப் பட்டம் அளிக்கும்போது இப்பொற் பூவையும் அரசர் அளித்தனர் .என்பதை அறிய முடிகிறது

http://Creativecommons.org//license/by/4.0/.

எட்டிப்புறவு - எட்டி விருது பெற்றவருக்கு இறையிலியாக நிலம் வழங்கப்பட்டது . இறையிலி என்னும் சொல் தமிழ்க் கல்வெட்டுகளில் பரவலாகக் காணப்படும் சொற்களில் போர்வீரர் .ஒன்று, புலவர் முதலானோரைப் பாராட்டி அரசன் தன் ஆளுகைக்கு உட்பட்ட நிலத்தை வழங்குவது உண்டுஅப்போது அது முற்றுட்டாகவோ இறையிலியாகவோ . இறையிலி என்றால் நில .வழங்கப்படும்ம் பெற்றவர் அந்த நிலத்துக்கு வரி செலுத்த வேண்டியது இல்லை.

மாராயம்

.மாராயம் என்பது சிறந்த படைவீரனுக்கு வழங்கப்பட்ட சங்ககால விருது ஆனிரைகளைக் கவர்ந்து வந்த .தொல்காப்பியம் இந்த விருதைப் பற்றிக் கூறுகிறது அரையன் அரசன் என வருவது ப .வீரனுக்கு இது வழங்கப்பட்டதுோலவும், அரசன், ராசன் என வருவது போலவும் மா .அரையன் என்னும் சொல் மாராயன் என மருவும்-"பஞ்சவ மாராயன் .என்பது கல்வெட்டில் வரும் தொடர் "கொங்காள்வான்...... அரசன் பெறும் விருது . .மாராயம் பெற்றவன் நெடுமொழி கூறுவான்

சங்ககாலத்தில் அரசன் போரில் சிறந்து விளங்கிய வீரனை'மாராயம்' என்னும் விருது வழங்கிப் பாராட்டுவது வழக்கம்இப்படி மாராயம் பட்டம் பெற்றவன் அரசனின் . பெருமையை எடுத்துப் பேசுவதோடு மட்டுமன்றித் தன் பெருமையையும் எடுத்து கூறுவது .இதற்கு நெடுமொழி கூறல் என்று பெயர் .வழக்கம்

வஞ்சிப் போரில் வெற்றியைத் தேடித்தந்த வீரனுக்கு மாராயம் பட்டம் வழங்கப்பட்டதைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது .

> **குடைநிலை வஞ்சியும், கொற்ற வஞ்சியும்,**
> **நெடு மாராயம் நிலைஇய வஞ்சியும்**
> **வென்றோர் விளங்கிய வியன்**[3]

மாராயன் விருதை மன்னவன் தகைமை இல்லாத ஒருவனுக்கு வழங்காமல் இருப்பது நன்று என அறநூல் கூறுகிறது .

தாமரை விருது:

சங்ககால .இந்த விருது சிறந்த தெருக்கூத்து விறலிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது அரசர்கள் சிறந்த யாழிசைப் பாணனைப் போற்றிப் பொன்னால் செய்யப்பட்ட தாமரையை விருதாக வழங்கினர்சங்ககாலத்துக் காஞ்சி அரசன் தொண்டைமான் இளந்திரையன் . தன்முன் பின்னணி இசைக்கருவிகளுடன் யாழிசை மீட்டித் தன் திறமையை வெளிப்படுத்திய பாணன் பித்தையில் தீயில் மலர்ந்த தாமரையைத் தன் கையால் சூட்டிப் பெருமைப்படுத்தினான் என்று இலக்கியத்தில் இடம் பெற்றிருக்கிறது யாழிசையில் சிறந்து விளங்கும் பாணனுக்குப் பொன்னால் செய்யப்பட்ட தாமரைப்பூ வழங்கப்பட்டது.

கிழார் விருது

கிழார் .இவ்விருது ஊர்த்தலைவர் மற்றும் புலவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது, கிழான் என்னும் சொற்கள் உரிமை பூண்டவரைக் குறிக்கும்பெண் ஒருத்திக்க .ு உரிமை பூண்டவனை அகத்திணை இலக்கணம் 'கிழவன்', 'கிழவோன்' என்னும் சொற்களால் குறிப்பிடுகின்றன நிலத்துக்கு உரியவனைத் திருக்குறள் .'கிழவன்' எனக் குறிப்பிடுகிறது .

http://Creativecommons.org//license/by/4.0/.

இந்த வகையில் அரிசில் கிழார் என்றால், அரிசில் என்னும் ஊரில் வாழும் மக்களுக்கு உரியவர் எனப் பொருள்படும்அரசன் ஓர் ஊரின் .இது இவருக்கு மக்கள் வழங்கிய விருது . நிலம் முழுவதையும் வழங்கி, இறையிலியாக அதனைக் கிழார் பெருமகனாருக்கு உரிமையாக்கியதால் 'கிழார்' எனச் சிறப்பிக்கப்பட்டார் எனக் கொள்வாரும் உண்டுஆயின் ., இது அரசனால் வழங்கப்பட்ட விருதுபல புலவர்கள் இவ்விருதி .னைப் பெற்றிருக்கின்றனர்.

மாநாய்கன் விருது

சிலப்பதிகார .இந்த விருது சிறந்த கடல் வணிகருக்கு வழங்கப்பட்டிருக்கிறது நாயகியான கண்ணகியின் தந்தை'மாநாய்கன்' எனப் போற்றப்பட்டான்நாய்கன் எனப்பட்ட . வணிகர்களின் தலைவனை'மாநாய்கன்' என்றனர் அன்றியும் நாவாய் ஓட்டியவனை . 'நாய்கன்' என்றும், பெரிய நாவாய்களைக் கடலில் ஓட்டியவனை 'மாநாய்கன்' என்றும் வழங்கினர்இதே போன்று ., உறையூர்ப் பொருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் சங்ககாலப் புலவர்களில் ஒருவர் இந்தப் புலவரின் தந்தை .'உறையூர்ப் பெருங்கோழி நாய்கன்' எனப் போற்றப்பட்டவர்.

மாசாத்துவன் விருது

இந்த விருது சிறந்த தரை வணிகருக்கு வழங்கப்பட்டிருக்கிறதுசிலப்பதிகாரக் . .கண்ணகியின் தந்தை இந்த விருதுக்குரியவராகவும் கருதப்படுகிறார்

முடிவுரை

தமிழர் வரலாற்றில் பண்டையக் காலத்தில் விருதுகள் என்பது அவர்களின் உண்மையான தகுதியையும், அவர்களது திறன்களையும் அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டிருக்கின்றனமேற் சொன்னதையும் விடுத்து நாயகன் என்ற பட்டம் சிறந்த . அதோடு வணிகர் .கடல்வணிகனுக்கு வழங்கப்பட்ட பட்டம் என அறியபடுகிறது அஞ்சுவண்ணம் முதலிய பட்டங்களும் ,குழுமங்கட்கு வலஞ்சை மணிக்கிராமம் அளிக்கப்பட்டன என்பதும் அறியபடுகிறதுஇதனால் தமிழ் மக்களை மன்னர்கள் மதித்து . .போற்றினர்

துணைமை நின்றவை :

1. தமிழியலின் எதிர்காலவியல்2006 - சென்னை , கலைஞன் பதிப்பகம் ,
2. புறநானூற்றில் தமிழர் பண்பாடு செபழனிச்சாமி வாணி பதிப்பகம் கோவை . -1989
3. சிலப்பதிகாரம் வேங்கடசாமி.(மு.ந)நாட்டார் (கௌரா பதிப்பகம், 2011

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – IV VOLUME - 1
மார்ச்சு-2025 E-ISSN : 2584 - 1238

21. இயற்கை வேளாண்மை போராளி, தமிழ் மண்ணின் அடையாளம்: கோ. நம்மாழ்வார்

முனைவர் பி.பாரதி,
இணைப்பேராசிரியர், பொருளியல் துறை,
விருதுநகர் இந்து நாடார்களுக்குப்
பாத்தியப்பட்ட செந்திக்குமார நாடார்
கல்லூரி(தன்னாட்சி), விருதுநகர்.

முனைவர் ப.விஜி,
உதவிப்பேராசிரியர், விலங்கியல் துறை,
விருதுநகர் இந்து நாடார்களுக்குப்
பாத்தியப்பட்ட செந்திக்குமார நாடார்
கல்லூரி(தன்னாட்சி), விருதுநகர்.

DOI 10.5281/zenodo.15070282.

Abstract :

Tamil Nadu has a rich agricultural tradition that dates back thousands of years. It is also known for its rich agricultural heritage. Since ancient times, the agricultural prowess of the region has been appreciated for its sophisticated practices adapted to various terrains. The oldest literary work available in Tamil, Thirukkural, provides detailed information about the agricultural practices adopted by the Tamils about 2,000 years ago. During the Sangam period, farmers were placed at the top of the social hierarchy. The classic Tamil text of that period, Thirukkural, describes agriculture as the chief occupation above all else and states that the entire world follows it. In this regard, this article highlights the personality of the natural agronomist Nammalvar, who has highlighted and implemented ancient agricultural practices in Tamil Nadu agriculture, which is facing new consequences under the changes of the modern world.

Key Words : Nammalvar - Organic farming - Modern World

முன்னுரை

தமிழ்நாட்டின் விவசாய மரபு என்பது பன்னெடும் ஆண்டுகள் பழமையானது. வளமான விவசாயப் பாரம்பரியத்திற்கும் பெயர் பெற்றது ஆகும். பண்டைய காலங்களிலிருந்தே, இப்பகுதியின் விவசாயத் திறமை பல்வேறு நிலப்பரப்புகளுக்கு ஏற்றவாறு அதன் அதிநவீன நடைமுறைகளால் பாராட்டப்பட்டது. தமிழில் கிடைக்கக்கூடிய மிகப் பழமையான இலக்கியப் படைப்பான திருக்குறள், சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விவசாய நடைமுறைகள் பற்றிய விரிவான தகவல்களை வழங்குகிறது. சங்க காலத்தில், விவசாயிகள் சமூக வகைப்பாட்டின் உச்சியில் வைக்கப்பட்டனர். அந்தக் காலத்தின் உன்னதமான தமிழ் உரையான திருக்குறள், விவசாயத்தை எல்லாவற்றிற்கும் மேலாக தலைமைத் தொழிலாக விவரிக்கிறது மற்றும் முழு உலகமும் அதன் பின் வருவதாகக் கூறுகிறது. அந்த வகையில் நவீன உலகின் மாற்றங்களுக்குட்பட்டு புதிய விளைவுகளைச் சந்திக்கும் தமிழக விவசாயத்தில் தொன்மை விவசாய இயல்புகளை எடுத்தியம்பியும் நடைமுறைப்படுத்தியும் வந்த இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரின் ஆளுமையை எடுத்தியம்புவதாக இக்கட்டுரை மலர்கின்றது.

யார் இந்த நம்மாழ்வார்?

தொன்மை விவசாயத்தை மறந்துவிட்டு நவீன உலகில் இரசாயன உரங்கள் பயன்பாடு, பசுமைப் புரட்சி, உலகமயமாக்கல் என அழிந்துபோயிருந்த தமிழகத்தில், “இயற்கையின் தூதனாய்” வந்தவர் நம்மாழ்வார் என்றால் மிகையாகாது. இயற்கை

http://Creativecommons.org//license/by/4.0/.

விவசாயம் வழி, தமிழகத்தில் இன்று வரவேற்பைப் பெற்றிருக்கும் இயற்கை விவசாயத்தின் தந்தை நம்மாழ்வார்

இந்திய மண்ணில், தான் வாழும் காலத்திலேயே தன்னுடைய இலட்சியம் நிறைவேறியதைப் பார்த்துச்சென்றவர்களுக்கு மகாத்மா காந்திக்கு அடுத்த இடம், 'இயற்கை வேளாண் விஞ்ஞானி' நம்மாழ்வாருக்குத்தான். இன்றைய இளம் தலைமுறையினருக்கு உணவு சுழற்சி குறித்தும் விவசாயம் குறித்தும் எளிய வகையில் புரிய வைத்தவர் நம்மாழ்வார். தற்சார்பு வாழ்வியல் முறையை முன்னெடுத்து இயற்கை விவசாயத்தின் மகத்துவத்தைத் தனது வாழ்நாள் முழுவதும் ஊர் ஊராகச் சென்று பரப்பினார்.

இயற்கை வேளாண் ஆர்வலர்

இந்தியாவில் நிறைய இயற்கை வேளாண் ஆர்வலர்கள், விஞ்ஞானிகள் இருக்கிறார்கள். ஆனால், அவர்களிடமிருந்து நம்மாழ்வார் வேறுபடும் இடம், 'அர்ப்பணிப்பு'. தான் நம்பும் ஒன்றுக்காகத் தன்னுடைய வாழ்க்கையையே அர்ப்பணிக்கும் துணிச்சல் மிகச்சிலருக்கே இருக்கும். நம்மாழ்வார் அப்படிப்பட்டவர். ஏறக்குறைய தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களுக்கும் அவர் பயணித்திருக்கிறார். மக்கள் பயணத்திலும் 50-ஆண்டு பொதுவாழ்க்கை அவருக்கு இருக்கிறது.

இயற்கை விவசாயத்துக்கு நம்மாழ்வார் சொல்லிய வரையறை மிகவும் எளிமையானது. 'மண்ணிலேயே அனைத்து ஆற்றலும் இருக்கிறது. ஒரு செடியோ, மரமோ வளர அதுவே போதுமானது' என்பதைத் தொடர்ந்து சொல்லி வந்தார். நம்மாழ்வார் ஒரு நவீனமும் மரபும் கலந்த விஞ்ஞானி தான். ஆனால், 'நான் சொல்வதெல்லாமே புதுமையானவை' என்று அவர் சொன்னதில்லை. 'தமிழர்களுக்கு என்று ஒரு மரபு இருக்கிறது. அவன் வேளாண்மையைத் தொழிலாகப் பார்த்தவனில்லை, வாழ்வியலாக வாழ்ந்து காட்டியவன். அதை அப்படியே நாம் தொடர்ந்தால் போதும்' என்றே, அவர் எல்லா இடங்களிலும் பேசினார்.

எளிமையின் அடையாளம்

சுயநலம் துறத்தல், வேறுபாடுகளின்றி அனைவரையும் அரவணைத்தல், இடையறாத மக்கள் சேவை, எளிமை, மனசாட்சியின் குரலுக்கு மதிப்பளித்த நேர்மை, போராடுவதில் காட்டிய நெஞ்சுரம், அன்பைப் பொழிவதில் வெளிப்படுத்திய தாய்மை குணம் எனப் பன்முகத் தன்மை கொண்டவர். தான் வாழ்ந்த காலத்தில் மிகப் பெரிய தாக்கத்தைத் தன் எண்ணங்களால், செயல்களால் உருவாக்கிச் சென்றவர். வாழ்நாள் முழுவதும் தான் நம்பிய இயற்கை விவசாயமுறை ஊக்குவிக்க போராடிய நம்மாழ்வார் காந்தியைப் போன்றே மேலாடையைத் துறந்தவர். கடைசிவரை தனது கொள்கையில் உறுதியாக இருந்தவர், கடும் பனிக்காலத்திலும்கூட சட்டை அணிய மாட்டார்.

அவரின் நலம் விரும்பிகள் அவருக்கு கார் வாங்கித் தர முன்வந்தும் "என்னால் முடிந்தவரைக்கும் சூழல் கேட்டைக் குறைச்சுக்குறேனே" என்று தவிர்த்து விட்டார். தன் வாழ்க்கைத்துணை சாவித்திரியை 50 ஆண்டுகளில் ஒருமுறைகூட ஒருமையில் அழைத்தது கிடையாது. "வாங்க... போங்க" என்று மரியாதையுடன்தான் அழைத்த பண்பாளர் நம்மாழ்வார்

http://Creativecommons.org//license/by/4.0/.

போராளி நம்மாழ்வார்

தமிழகத்தில் ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டால் மண்வளம் பாதிக்கப்படுவதைக் கண்டு கொதித்தெழுந்து, மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் அரசுப்பதவியை உதறித்தள்ளியவர். பசுமைப்புரட்சிக்கு எதிராகத் தமிழகம் முழுவதும் பல்வேறு பேரணிகள், கூட்டங்கள் நடத்தி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியர் இவர். காந்தியவாதி ஜே.சி.குமரப்பா மற்றும் மசனாபு புகாகோவின் கிராமியப் பொருளாதாரத்தால் ஈர்க்கப்பட்ட நம்மாழ்வார், நெல்லின் “அடி காட்டுக்கு, நடு மாட்டுக்கு, நுனி வீட்டுக்கு” என்ற வார்த்தையை எல்லாக்கூட்டங்களிலும் கூறியவர்.

பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் வேட்டைக்காடாக விவசாய நிலங்கள் மாற்றப்பட்டு, இரசாயன உரங்களின் நச்சுக் குவியலாலும் மரபணு மாற்றப் பயிர்கள் எனும் இயற்கை அழிப்புத் திட்டங்களாலும் பாழ்பட்டுள்ள தமிழக விவசாயத்தை, அந்த அழிவிலிருந்து காப்பாற்ற அவர் பல கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளைச் சந்தித்து கருத்தரங்குகளும், பயிற்சி வகுப்புகளும் நடத்தி இயற்கை வேளாண்மை முறைகளை மீட்டெடுத்தார். இரசாயன உரத்துக்கு மாற்றாக, பயிர் சுழற்சி வேளாண்மை முறையின் மூலம் அதை ஈடுசெய்ய முடியுமென்பதை அவர் அறிவியல்முறையில் செயல்படுத்திக் காட்டினார். கேடு விளைவிக்கும் மரபணு மாற்றப் பயிர்களை எதிர்த்த அவர், பாரம்பரிய ஒட்டு இரகங்களை உருவாக்கினார். ‘செயற்கை கலந்த எதுவுமே மண்ணுக்கு எதிரி. அது தற்காலிகமாக வேண்டுமானால் பலன் தரலாம். ஆனால், நாளடைவில் மண்ணை அது பாழாக்கும். அதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும்’ என்று கடைசிவரை செயற்கை உரங்களுக்கு எதிராகக் கடுமையாகப் போராடினார்.

இயற்கை விவசாயம்

ஒற்றை நாற்று நடவு, செம்மை நெல் சாகுபடியை உலகுக்கே அறிமுகப்படுத்தியது தமிழர்கள்தான் என்ற உண்மையை ஆதாரங்களுடன் எடுத்துரைத்தவர் நம்மாழ்வார். இன்றைக்குத் தமிழகத்தில் ஒற்றை நாற்று நடவு பிரபலமாகியுள்ளது என்றால் அது இவரால்தான். இவர் பேசும் கூட்டங்களில் எல்லாம் நாட்டு மரங்கள், நாட்டு மாடுகள், கால்நடைகள் மற்றும் நாட்டு விதைகளின் அவசியத்தை எளியவர்களும் உணரும் வகையில் எடுத்துரைப்பார்.

2008-ஆம் ஆண்டு திருவாரூரில் நடந்த ஒரு விழாவில், இயற்கை விவசாயம் என்பது இரசாயனம் பயன்படுத்தாதது மட்டும் இல்லை. நிலம் முழுக்க ஒற்றைப் பணப்பயிர் நடுவது இயற்கை விவசாயம் இல்லை. நிலத்தில் ஒரு பயிர் மட்டும் நடாமல், பல்வேறு காலக்கட்டங்களில் அறுவடைக்கு வரும் மரங்களை நட வேண்டும். அஞ்சு அடுக்கு முறை, ஏழு அடுக்கு முறையில் விவசாயம் செய்யுங்க. தேக்கு, தென்னை, வாழை, பாக்குனு கலவையா மரங்களை நடணும். ஊடுபயிராகக் காய்கறிகளையோ, கடலை மாதிரியான பயிர்களையோ விவசாயம் செய்ய வேண்டும் என்றார். மேலும், இதற்கான காரணத்தையும் அவர் எளிமையாக விளக்கினார். இப்படி விவசாயம் செய்தால் காற்றடிக்கும் போது ஒரு மரம் மற்றதற்கு அரணாக இருக்கும் என்றும் எடுத்துரைத்தார். மேலும், சுழற்சியில் அறுவடைக்கு வரும் போது அது, பொருளாதார ரீதியாவும் பலன் கொடுக்கும் என்றார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

இதைச் சொன்னவர் வாய்ச்சொல் வீரராக மட்டும் நின்றுவிடவில்லை. நேரடியாகக் களத்தில் இறங்கி கிராமந்தோறும் விவசாயிகளைச் சந்தித்துப் பேசினார்.

இயற்கை வேளாண்மை தொடர்பான சமூக மாற்றத்தை இளைஞர்கள் மூலமாகவே ஏற்படுத்த முடியும் என்பதில் நம்மாழ்வார் உறுதியாக இருந்தார். இயற்கை வேளாண்மை மீதான ஈடுபாடும், அக்கறையும் இளைஞர்களிடம் அதிகரித்துள்ளதற்கு, வாழ்நாள் முழுவதையும் விதையாக மாற்றி நம்மாழ்வார் தந்த ஆக்கமும், ஊக்கமும்தான் காரணம் என்பதை உறுதியாக நம்பலாம். எல்லோரும் கடைசியில் இயற்கையிடம் தான் தஞ்சமடைந்தாக வேண்டும். அதை நம்மாழ்வார் போல உலகுக்கு உணர்த்தியவர் வேறு யாரும் இல்லை. அதற்காக, தமிழர்கள் மட்டுமில்லை, மனித இனமே அவருக்கு நன்றி சொல்லவேண்டியிருக்கிறது!

பாரம்பரிய விதை மீட்பு

பாரம்பரிய நெல்ரகங்களை மீட்டெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நெல் ஜெயராமனை ஊக்கப்படுத்தி சுமார் 200 பாரம்பரிய நெல்ரகங்களை மீட்டெடுக்கும் புரட்சிக்கு அச்சாணியே நம்மாழ்வார்தான். தமிழகம் முழுக்க பல்லாயிரக்கணக்கான இயற்கை விவசாயிகளை உருவாக்கி, வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் அரசின் வேளாண்மை துறையில் அங்கக வேளாண்மை பிரிவை உருவாக்கப்பாடுபட்டதில் பெரும்பங்கு இவருடையது.

வீரிய வகை விதைகளின் வருகையால் அழிவு நிலையிலிருந்த நம்முடைய பாரம்பர்ய விதைநெல் வகைகளுக்கான 'மாப்பிள்ளை சம்பா', 'குடவாழை', 'குழியடிச்சான்', 'யானை கவுனி' என நூற்றுக்கணக்கான விதை நெல் ரகங்களை மீட்டு, மீண்டும் விவசாயிகளிடம் சேர்த்த பெருமை நம்மாழ்வாரைத்தான் சேரும். நம் நாட்டு வேப்ப மரத்துக்கான காப்புரிமையைப் பெற ஜெர்மனியில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் வாதாடி மீட்டு வந்தவர். இதுவரை குடும்பம், லீசா உள்ளிட்ட 250-க்கும் மேலான கூட்டுப் பண்ணைகளை உருவாக்கியவர். இயற்கை மீது ஆர்வமுள்ள இளைஞர்கள், விவசாயிகள் எனப் பலதரப்பினர் இவரின் பின்னால் நடந்தனர். இன்று இயற்கை விவசாயம் வேரூன்றிட முக்கியமானவர்களுள் ஒருவர்.

பிடி கத்தரி எதிர்ப்பு.

இந்தியாவில் பி.டி. கத்திரியை அறிமுகம் செய்வது குறித்து அன்றைய மத்திய சுற்றுச்சூழல் அமைச்சராக இருந்த ஜெய்ராம் ரமேஷ் நடத்திய கருத்துக்கேட்புக் கூட்டங்களில் தனது பிரதிநிதிகளை அனுப்பி பி.டி-க்கு எதிராகப் பேசச் செய்தார் நம்மாழ்வார். அத்தோடு நில்லாமல் நம்மாழ்வாரின் நண்பர்களான அரச்சலூர் செல்வம், டாக்டர் சிவராமன் ஆகியோர் அன்றைக்குத் தமிழக முதல்வராக இருந்த கருணாநிதியிடம் நேரில் சென்று பி.டி-யின் கேடுகளை எடுத்துச் சொல்லி, தமிழகத்தில் அதற்குத் தடை உத்தரவும் பெற்றனர்.

"இந்தியாவில் ஒரு Bt கத்திரிக்காயை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லை, இந்தியா மிகப்பெரிய பல்லுயிர் பெருக்கத்தைக் கொண்ட தகுதியைக் கொண்டுள்ளது. இந்தியாவில் 2,500 பாரம்பரிய கத்திரிக்காய் வகைகள் உள்ளன. ஒவ்வொரு சமூகமும் ஒரு

http://Creativecommons.org//license/by/4.0/.

குறிப்பிட்ட வகையை, அதாவது உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் ஒன்றை உட்கொள்ளப் பழகிவிட்டன. அதன் நன்மைகள் குறித்து தவறான கூற்றுகளுடன் Bt கத்திரிக்காயை அறிமுகப்படுத்துவது உள்ளூர் வகைகளை மாசுபடுத்தும் மற்றும் மில்லியன் கணக்கான மக்கள் உட்கொள்ளும் காய்கறியின் பல்லுயிர் பெருக்கத்தை அரிக்கும்." என்று அவர் கூறுகிறார்

மரபணு மாற்றப்பட்ட விதைகளைப் பொறுத்தவரை நடப்பது விவசாயியின் பிரச்சினை மட்டுமல்ல, நாட்டின் பிரச்சினையும் கூட என்று மரபணு மாற்றப்பட்ட விதைகளைப் பயன்படுத்தக் கூடாது என்பதற்கான சில காரணங்களை அவர் கூறினார்.

மரபணு மாற்றப்பட்ட விதைகள் குடும்பத்துடன் தொடர்புடைய பிற தாவரங்களை மாசுபடுத்துகின்றன. இது மண்ணின் பல்லுயிர் பெருக்கத்தை அழித்துவிடும், அதன் பிறகு, அந்தப் பகுதிக்கும் தேவைக்கும் ஏற்ற தாவரங்களை நாம் தேர்வு செய்ய முடியாது. இது ஒரு ஆபத்தான அறிவியல், எந்த நேரத்திலும், மரபணு தாவரங்களிலிருந்து விலங்குகளுக்கு நகரலாம்.

பூச்சிகளைக் கட்டுப்படுத்த, நமக்கு மரபணு மாற்றப்பட்ட விதைகள் தேவையில்லை. மரபணு மாற்றப்பட்ட விதைகள் சமூகத்தின் நலனுக்காக உற்பத்தி செய்யப்படுவதில்லை. மரபணு மாற்றப்பட்ட விதைகள் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் என்று நிறுவனங்கள் கூறுகின்றன. ஆனால் அது உண்மையல்ல. விதைகளின் விலை மிக அதிகம். விளைச்சலை அதிகரிக்க இது எதுவும் இல்லை. ஒரு நிறுவனத்திற்கு ஏகபோகம் இருக்கும்போது, அவர்கள் விதைகளின் விலையை தீர்மானிப்பார்கள், மேலும் நாம் நமது தேசிய இறையாண்மையை இழக்கிறோம். Bt பயிர்களை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு இந்த எல்லா விஷயங்களையும் நாம் பார்க்க வேண்டும் என்று அவர் வெளிப்படுத்துகிறார்.

நம்பிக்கையை விதைத்தார்!

"இயற்கை விவசாயம் என்பது சாத்தியமே இல்லை, அதில் விளைச்சல் கிடைக்காது, நஷ்டம் தான் ஏற்படும்…" என்று விவசாயிகளின் பொதுப்புத்தியில் படிந்திருந்த நம்பிக்கையைப் படிப்படியாகப் பேசி, செயல்வடிவத்தில் நிகழ்த்திப் புதுமைபுரிய வைத்ததில் நம்மாழ்வார் அனைவராலும் வியந்து பார்க்கப்பட்டார். "இயற்கை விவசாயம் செலவில்லாதது, பாரம்பரிய விதைகளே பாதுகாப்பானது, அதில் கிடைக்கும் உணவே சத்தானது, இயற்கை தரும் கொடைக்கு மேலாக வேறு யாரும்,எவரும் நமக்கு ஒருபோதும் தந்துவிட முடியாது! இயற்கையை அழித்துப் பெறும் எதுவுமே ஆரோக்கியமற்றது மட்டுமல்ல, ஆபத்தானதும் கூட..!" என இடைவிடாது பிரச்சாரம் செய்து வந்தார் நம்மாழ்வார்!

வேம்பின் உரிமையை வென்றெடுத்தார்!

பன்னாட்டு நிறுவனம் ஒன்று நமது நாட்டு வேப்பமரத்திற்குக் காப்புரிமை பெற்று விட்ட செய்தி அறிந்து கொந்தளித்துப்போன நம்மாழ்வார் அதற்காக ஜெர்மன் நீதிமன்றம் சென்று வாதாடி வேம்பின் உரிமையை (மே-9, 2000) இந்தியாவிற்குப் பெற்றுத் தந்தார். சுனாமி பாதித்த நாகப்பட்டினம் மாவட்டம் மீண்டும் புத்துயிர் பெற அரும்பாடுபட்டு

http://Creativecommons.org//license/by/4.0/.

உழைத்தார். தமிழகம் மட்டுமின்றி மற்ற இந்திய மாநிலங்களிலும் சுற்றுப்பயணம் செய்து பேசியும், களப்பணிகள், பயிற்சிகள் தந்துமுள்ளார்.

முடிவுரை

இயற்கை விவசாயத்தை இன்றைய தலைமுறைக்குக் கொண்டு சென்ற பெரும் ஆளுமை அவர். இயற்கை வேளாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அடிப்படை மானுட வாழ்வாதார உரிமைகள் என அடிப்படைகளை இணைக்கும் பார்வையை அவர் தன் பொதுவாழ்க்கை முழுவதும் முன்வைத்து வந்தார். தமிழுணர்வாளர்கள், சுதேசி அமைப்பினர் என அனைவருக்கும் அவரது பங்களிப்பும் பார்வையும் முக்கியமானவையாக இருந்தன. இயற்கை வேளாண்மை குறித்தும் நம் வாழ்க்கை முறை குறித்தும் அவரது பேச்சு மிகவும் இயல்பானதாகவும் கருத்துச்செறிவு கொண்டதாகவும் அமைந்திருக்கும். இன்று இயற்கை வேளாண்மை அனைவராலும் பார்க்கப்படும் பேசப்படும் விவாதப் பொருளாகத் தமிழகத்தில் மாறியிருப்பதில் நம்மாழ்வாரின் பங்கு முக்கியமானது. அவரது இயற்கை வேளாண்மையின் அடிப்படையில் ஒரு ஆன்மிகப் பார்வை இருந்தது. மதங்களைக் கடந்து மனிதர்களை இணைக்கும் இந்த மண்ணுக்கே உரிய ஆன்மிகப் பார்வை அதுவாகும். அதையும் அவர் எப்போதும் முன்வைத்து வந்தார். எளிமையான மனிதர். பழகுவதற்கு இனியவர். மண்ணின் வாசம் தெரிந்தவர். இறுதி காலம் வரை போராளியாகவும் புத்தாக்கச் சக்தியாகவும் திகழ்ந்தவர். ஒரு புதிய திறப்பினை நமக்குக் கொண்டு வந்தவர். இனி என்றென்றும் அவர் தமிழ்ப் பண்பாட்டின் ஒரு அழியாத சின்னமாக வழிகாட்டும் குருவாகத் திகழ்ந்து கொண்டிருப்பார்.

பார்வைக் குறிப்பு

1. https://www.puthiyathalaimurai.com/agriculture/natural-agriculture-redeemer--today-is-nammalvar-birthday----
2. https://www.vinavu.com/2014/02/11/nammalvar-championed-fought-against-chemical-fertilizers/
3. https://aramonline.in/2562/nammazhwar-organicfarm-silentrevolution-aram/
4. https://www.hindutamil.in/news/blogs/203690-10.html
5. https://www.valaitamil.com/ko-nammalvar_13706.html
6. https://www.dailythanthi.com/News/Sirappukatturaigal/nanban-foundation-and-nammalvar-vanagam-collaboration-879508
7. https://www.hindutamil.in/news/supplements/uyir-moochi/207534-.html

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – IV VOLUME - 1
மார்ச்சு-2025 E-ISSN : 2584 - 1238

22. பழந்தமிழரின் மரபுகள்

முனைவர் ரா. ராஜேஸ்வரி,
மொழித்துறைத் தலைவர் மற்றும் உதவிப் பேராசிரியர்,
எம்.ஒ.பி. வைணவ மகளிர் கல்லூரி, சென்னை - 600 034.
கைப்பேசி:9841786669 - மின்னஞ்சல்: rajihasini1982@gmail.com
DOI 10.5281/zenodo.15070290.

Abstract :

Elements handed down from generation to generation acquire an undying continuity over time and are transformed into traditions. It can be seen that various traditions have been handed down in the Tamil land since the Tolkappiya period. Some of the elements handed down since that time have taken the form of traditions over time. In this way, this article aims to examine the traditions of the ancient Tamils.

Key Words : Tholkappiyam - Traditional - Generation - Ancient Tamilnadu.

முன்னுரை:

தொன்றுதொட்டு வழங்கப்படும் கூறுகள் காலப்போக்கில் அழியாத தொடர்ச்சியினைப் பெறும்போது மரபுகளாக உருப்பெறுகின்றன. தொல்காப்பியக் காலந்தொட்டு பல்வேறு மரபுகள்தமிழ் நிலத்தில் வழங்கி வந்தமையைக் காணமுடிகின்றது. அக்காலந் தொட்டு வழங்கப்பட்ட சில கூறுகள் காலப்போக்கில் மரபுகள் எனும் வடிவத்தினைப் பெறுகின்றன. அவ்வகையில் பழந்தமிழரின் மரபுகள் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

மரபு - விளக்கம்:

"மரபு என்பது எழுதப்படாத சட்டம்". இதனைச் சமூகம் உள ஒருமைப்பாட்டால் உருவாக்குகின்றது. இம் மரபுகள் சமுதாயத்தால் ஏற்பட்டவை. மரபு என்பது வழக்கமாகத் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்படுவது என்ற பொருள்படும். ஒவ்வொரு சமுதாயமும் தனக்கென சில தனித்த மரபுகளைக் கொண்டிருக்கக் காண்கிறோம்.

ஒரு சமுதாயத்தின் மரபினைப் பிறிதொரு சமுதாயத்தின் மரபு கட்டுப்படுத்துவதில்லை."மரபுகள் சமுதாயந்தோறும் மாறுபடினும் அவை அச்சமுதாயத்தின் சிறப்பியல்புகளைக் காக்கவல்லனவாக இருப்பதால் மானுட சமுதாயம் இன்றும் அவைகளைப் போற்றி பாதுகாத்துவருகின்றது". (ப.15, டாக்டர் க. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற் பதிப்பு, 2003) எனும் கருத்து இவண் சுட்டத்தக்கது.

திருமணத்தில் மரபுகள்:

பெண் வீட்டிற்குச் சென்று ஆண் வீட்டார் மணம் கேட்கும் மரபு தொன்றுதொட்டு வழங்கப்பட்ட நிலையினைச் சங்கப் பாடல்கள்வழி அறியவியல்கின்றது.

"வாழியாதன் வாழி யவினி
வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக
எனவேட் டோளே யாயே யாமே
மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்

http://Creativecommons.org//license/by/4.0/.

தண்டுறை யூரன் வரைகி
எந்தையும் கொடுக்க வெனவேட் டேமே“ (ஐங்கு. பா. 6)

எனும் பாடலில் சங்கத் தமிழரும் தற்காலம் போன்று பெண் வீட்டிற்குச் சென்று திருமணத்திற்குப் பேசிய நிலையினை அறிய முடிகின்றது.

திருமுணம் நடைபெறக் கூடிய நாள், சிறந்த நாளாக இருக்க வேண்டும் என்பதால் சங்கத் தமிழரும் ஒத்துப்போகின்றனர்.

“நடுநாள் வருதல் அஞ்சுதும் யாமென
வரைந்துவரல் இரக்குவ மாயின் நம்மலை
நன்னாள் வதுவை கூடி நீடின்று
நம்மொடு செல்வர்மன் தோழி” (நற்றிணை 125;5-8)

என்பது போன்றமையும் சங்கப் பாடல்கள் நன்னாள் பார்த்து மணமுடித்த நிலைக்குச் சான்றாகின்றன.

இறைவழிபாட்டிற்குப் பின் திருமணம் நடந்த தன்மையினை சங்கப்பாடல்களிலும் காணவியல்கின்றது.

”சகடமண்டிய துகள்தீர் கூட்டத்து
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முழவொடு பரூஉப்பனை இமிழ” (அகம். 126;5-7)

எனும் அகநானூற்று அடிகள் வலியுறுத்துகின்றன.

திருமணம் நடைபெறும் இடத்தில் விளக்கேற்றும் மரபினையும் அக்காலத்தோரிடம் காணமுடிகின்றது.

”மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலை”(அகம். 86; 4-5)

என்பதால் நன்னாளில் விளக்கேற்றும் மரபும் தொன்றுதொட்டு பேணப்படுவதை அறிய முடிகின்றது.

திருமணத்தின் போது விளக்கேற்றும் மரபு தொன்றுதொட்டு பின்பற்றப்படுவது போல மலர் மாலையினைத் தொங்க விடும் முறையும் இருந்தமையை இப்பாடல் காட்டுகின்றது.

நெல்லும் மலரும் தூவி மணமக்களை வாழ்த்திய மரபினையும் தொன்றுதொட்டு காண முடிகின்றது. சங்கப்பாக்கள் இக்கூற்றிற்குச் சான்றாகின்றன.

”பெற்றோர் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தாங்க....
வதுவை நன்மணம் கழிந்த பின்றை” (அகம். 86;14-17)

எனும் அடிகள் மேற்கூற்றிற்குக் களனாகின்றன.

மணமகள் வீட்டார், மணமகளின் கையினை மணமகனிடம் ஒப்படைத்த நிலையினை,

”நேரிறை முன்கை பற்றிநுமர் தர
நாடறி நன்மண மயர்கஞ் சின்னாள்
கலங்க லோம்புமின” (குறிஞ்சிப்பாட்டு. 231-233)

http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற அடிகளில், தலைவியின் கரங்கள் தலைவனிடம் ஒப்படைக்கப்பட்ட மரபு தொன்றுதொட்டு இருக்கின்ற தன்மையினைக் காட்டுகின்றது. இதனையொத்த கருத்தினை அகநானூற்றிலும் காணமுடிகின்றது.

"கல்லென சும்மையர் ஞெரேரெனப் புகுந்து
பேரிற் கிழத்தி யாகெனத் தமர்தர" (அகம். 86;18-19)
"தமர்நமக் கீத்த தலைநாள் " (அகம். 136;18)

ஆகிய அடிகளும் மேற்கருத்தையே வலியுறுத்துகின்றன.

"சடங்குகள் மரபுவழிப்பட்ட செயல்முறைகளை அடிப்படையாகக் கொண்டு அமையக் காண்கிறோம். (ப.52, டாக்டர் க. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற் பதிப்பு, 2003) எனும் கருத்தும் சடங்குகள் மரபுவழிப்பட்டு போற்றும் நிலையை எடுத்துரைக்கின்றது.

விழாக்களில் மரபுகள்:

"விழா மரபுகள் என்பது விழாக்களில் தொன்றுதொட்டு பயின்றுவரும் சில வழக்காறுகளைக் குறிப்பதாகும்.அவை ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்து வரும் தலைமுறையினருக்கு மரபுவழியில் புகட்டிப்பட்டதாகவே காட்சி தருகின்றன. பண்பாட்டில் நிகழும் மாற்றங்களை விழாக்களில் ஏற்படும் மாற்றங்கள் கொண்டறியலாம். விழா மரபுகள் கொண்டு ஒரு பண்பாட்டின தன்மைகளை நிச்சயிக்கலாம்". (ப.57, டாக்டர் க. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற் பதிப்பு, 2003)

விழாக்காலங்களில் கொடியேற்றும் மரபினைப் பண்டைக்காலம் முதல் தற்காலம் வரை காணவியல்கின்றது. கொடியேற்றுதல் என்பது விழாக்காலச் சூழலைக் காட்டுகின்றது. "கொடி" என்பது விழாவிற்கான மனநிலையினை மக்களுக்கு உருவாக்குகின்றது. விழாவிற்கான அடையாளமாக தற்காலம் வரையிலும் கொடியேற்றுதல் நிகழ்த்தப்படுவதைக் காணமுடிகின்றது. பன்னெடுங்காலத்தின் நீட்சியாக இக்கொடியேற்றுதல் அமைந்துள்ள தன்மையினைச் சான்றுகள் காட்டுகின்றன.

"சாறயர்ந் தெடுத்த உருவப் பல்கொடி" (மது.366)

என்ற அடியானது கொடியின் தன்மையினை எடுத்துரைக்கின்றது.

விழாக்களில் மகிழ்ச்சியை வெளிப்படுத்த ஆடிய தன்மையினை சங்கப்பாடல்களின் வழி அறிகிறோம்.

"மன்றுதொறும் நின்ற குரவை சேரிதொறும்
உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கி" (மது.615)

என்ற அடிகளால் விழாக்களில் மகிழ்வினை வெளிப்படுத்த ஆடிய நிலையினைக் காணமுடிகின்றது. தற்காலம வரை திருமண விழாக்களில் நடனம் ஆடும் முறை தொடர்வதால் மகிழ்ச்சியை வெளிப்படுத்த ஆடும் மரபு பண்டைக்காலம் முதல் தற்காலம் வரை தொடர்கின்ற தன்மையினை அறியமுடிகின்றது. மேலும் மற்றொரு பாடலில்,

http://Creativecommons.org//license/by/4.0/.

"வியலறை வரிக்கு முன்றிற் குறவர்
மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கும்
ஆர்கலி விழவுக்களங் கடுப்ப" (அகம். 232;9-11)

எனும் அடிகளும் இதனை வலியுறுத்துகின்றன.

விழாக்களில் மகளிர் மலர்களோடு அணிகலன்களை அணிந்திருந்த தன்மையினையும் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன.

"மணிக்குரல் நொச்சித் தெரியல் சூடிப்
பலிக லார்கைப் பார்முது குயவன்
இடுபலி நுவலு மகன்றலை மன்றத்து
விழவுத்தலைக் கொண்ட பழவிறல் மூதூர்" (நற். 293;1-4)

தற்காலம் வரை சில சமூகத்தின் பலியிடும் முறையினைப் பின்பற்றுதலைக் காணமுடிகின்றது.

கார்த்திகை விழா கொண்டாடும் மரபினை சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. நிறைமதி நாளில் விளக்குகளை ஏற்றி கார்த்திகை விழாவினை, சங்கம் தொட்டே கொண்டாடி வந்துள்ளமையை சான்றுகள் வழி அறிகிறோம்.

"மழைகால் நீங்கிய மாக விசும்பிற்
குறுமுயல் மறுநிறங் கிளர மதிநிறைந்து
அறுமீன்சேரு மகலிருள் நடுநாள்
மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுட னயர வருகதில் லம்ம" (அகம். 141;6-11)

கார்த்திகை விழாவில் முற்றம் முழுக்க விளக்கேற்றி வழிபடும் மரபினைக் "கார்நாற்பது" எனும் இலக்கியத்திலும் காணவியல்கின்றது.

"நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாலள் விளக்கில் தகையுடைய வாகிப்
புலமெலாம் பூத்தன தோன்றி சிலமொழி
தூதொடு வந்த மழை" (காற்நாற்பது.63)

நன்னாட்களில் விளக்கேற்றும் மரபு தொன்று தொட்டு வழங்கப்படுவது போலவே, கார்த்திகை நாளில் தொடர்ச்சியான விளக்குகளை ஏற்றி வழிபடும் மரபினையும் இச்சான்றுகள் காட்டுகின்றன.

நல்ல நாளிலோ வெற்றியினைக் கொண்டாடும் வகையிலோ பிறர்க்கு விருந்தளிக்கும் நிலை தற்காலத்தில் காணப்படுவது போல பண்டைக்காலத்தில் வீரர்களுக்கு மன்னன் உணவளித்த நிலையினைக் காணமுடிகின்றது. இதனைத் தொல்காப்பியம்,

"பிண்டமேய பெருந் சோற்று நிலை" (தொல். பொருள்.65)

என்கின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

நற்சொல் கேட்டல்:

ஏதாவதொரு நன்னிகழ்வினைத் தொடங்குமுன் எதிர்காலம் குறித்துக் கணித்தறிவோரிடம் கேட்டறிதல் தற்காலத்தில் வழக்கிலுள்ளது. இதனையொத்த கூறினை "நற்சொல் கேட்டல்" எனலாம். "விரிச்சி கேட்டல்" என்பதையும் சங்கப் பாடல்களில் அறிகிறோம். "ஏதேனும் ஒரு செயலை மேற்கொள்ளப் புகுங்கால் அம்முயற்சி இன்னவாறு கைகூடும் என்பதனை அறிதற்கே இவ்வாறு செய்வர். இதனை நற்சொல் எனவும் கூறலாம்". (ப.17, டாக்டர் க. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற் பதிப்பு, 2003).

நல்ல நாள் பார்த்து ஒரு செயலைத் தொடங்கும் நிலையினைப் பன்னெடுங்காலமாகத் தமிழர் மரபில் காண முடிகின்றது.

இயற்கை வழிபாடு:

இயற்கை வழிபாட்டினைப் பண்டுதொட்டே காணமுடிகின்றது. கோயிலின் வாசலில் இருக்கும் மரத்தினை வணங்குதல் தற்காலத்தில் காணப்படுகின்றது. கோயிலில் இருக்கும் மரத்திற்கு சந்தனம், குங்குமம், மலர்களிட்டு வணங்கும் தற்கால நிலையின் தோற்றுவாயினை சங்க காலத்திலேயே காண முடிகின்றது.

"கடவுள் மரத்த முள்மிடை குடம்பைச்
சேவலொடு புணராச் சிறுக்கும் பேடை" (அகம். 270; 12-13)

"மக்கள் தாங்கள் ஈடுபடும் செயல்களில் நன்மை பயக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்". எனவே தான் நல்ல காலங்களைத் தேர்ந்து செயல்களைத் தொடங்குகின்றனர். நல்ல நாளும் நல்ல பொழுதும் பார்த்துச் செயல்படும்நிலை பழங்குடி மக்கள் தொட்டு நாகரிக மக்கள் வரை அனைத்துச் சமூக மக்களிடமும் தொடர்ந்து மரபுவழியாகப் பின்பற்றப்பட்டு வருவதை வரலாறுகளும் வாழ்க்கை முறைகளும் உணர்த்துகின்றன. இவ்வுணர்வு தோன்றுவதற்கு அடிப்படையாக அமைவது நன்மை விளைய வேண்டும் என்ற மனித மனத்தின் எதிர்ப்பார்ப்பும் தீமைகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும் என்ற காப்புணர்வுமேயாகும். தமிழலக்கியத்தில் நாளும் பொழுதும் பார்த்து செயலாற்றி தொல்காப்பியம் தொட்டு இன்றைய இலக்கியங்கள் வரை வாழ்க்கை முறை வரை தொடர்ந்து பயிற்சி பெற்று வந்திருக்கின்றது. "நாள் பற்றிய நம்பிக்கையினைப் புலப்படுத்துவதாக உள்ளது. (ப.156, டாக்டர் க. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற் பதிப்பு, 2003).

தொகுப்புரை:

பழந்தமிழர் தொன்றுதொட்டு சில கூறுகளைப் பின்பற்றி வந்துள்ளனர். தொல்காப்பியக் காலந்தொட்டே சில கூறுகள் பின்பற்றப்பட்டு வருகின்ற தன்மையைச் சான்றுகள்வழி அறிகிறோம்.

திருமணத்தின்போது விளக்கேற்றும் மரபும் தொன்றுதொட்டு இருப்பதை அறியவியல்கின்றது. நெல்லும் மலரும் தூவி மணமக்களை வாழ்த்திய மரபினையும் தொன்றுதொட்டு காணமுடிகின்றது. திருமணம் முதற்கொண்டு பல்வேறு சடங்குகளிலும்

http://Creativecommons.org//license/by/4.0/.

விழாக்களிலும் மரபுகள் காலந்தோறும் தமிழர் வாழ்வில் ஒன்றிணைந்து இருத்தலைச் சான்றுகள் காட்டுகின்றன.

ஒரு நன்னிகழ்வினை நிகழ்த்துமுன் காலநேரம் பார்த்துச் செயல்படும் மரபினையும், நன்னிகழ்வின்முன் பெரியோரைச் சந்தித்தலையும் இலக்கியங்கள் காட்டுகின்றன.

விழாக்களில் கொடியேற்றும் மரபு அக்காலம் முதலே பின்பற்றப்படுகின்ற தன்மையினைக் காண்கிறோம். விழா நேரங்களில் மகிழ்வினை வெளிப்படுத்த ஆடிய முறையினைக் காண்கிறோம். தற்காலத் திருமண நிகழ்ச்சிகள் வரை இந்த மரபு பின்பற்றப்படுகின்ற நிலையினைக் காணவியல்கின்றது.

விழாக்களில் பெண்கள் மலர்கள் சூடியும் அணிகலன்கள் அணிந்தும் பங்கேற்றமையைக் காண்கிறோம்.

இவ்வாறு, திருமண விழாக்களிலும் பிற சூழல்களிலும் பண்டுதொட்டு சில மரபுகள் போற்றப்பட்டு தற்காலம் வரை தொடர்கின்ற நிலையினைக் காணமுடிகின்றது. தமிழரின் பாரம்பரியமும் தொன்றுதொட்ட நீட்சியினைக் கொண்டதென்பதை இதன்வழி அறியலாம்.

துணைநூற்பட்டியல்:

1. சுப்பிரமணியன்.ச.வே., தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசக பதிப்பகம், சென்னை, எட்டாம் பதிப்ப, 2006.
2. பாலசுப்பிரமணியன். கு.வெ.முனைவர்., (உரை), நற்றிணை (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர்.2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,சென்னை - 98.
3. மோகன்.இரா.முனைவர்., (உரை), பத்துப்பாட்டு (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை - 98.
4. ஜெயபால்.இரா.முனைவர்., (உரை), அகநானூறு (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை - 98.

http://Creativecommons.org//license/by/4.0/.

23. வள்ளலாரும் பெண்மையும்

முனைவர் சீதாலட்சுமி
ஆசிய மொழிகள் மற்றும் பண்பாடுகள்
தேசியக் கல்விக் கழகம்,
நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.
DOI 10.5281/zenodo.15070441.

: Abstract

At first, I did not think anything of why the respected Mr. Sothinathan, who gave the title "Vallalar and Women", gave this title. When I read the news about Vallalar's songs about women on the internet, that is, when I read it with today's intellectual and life experience, I felt very sad for a moment. Are the things said here correct? Are they written by Vallalar? When I was sad, I thought, in the end, the news of Professor Subha.Thinnappanar (2022) brought joy to my mind. However, when I looked at the internet, I could also see that there is a responsibility hidden there for academics and researchers. I entered the article with the firm belief that I would be able to express the ideas attached to this title in quality language. This article is based on the news that I have received so far.

Key Words : Vallalar - Feminism - Spirituality - Wisdom

முன்னுரை

"வள்ளலாரும் பெண்மையும்" என்ற தலைப்பைத் தந்த மதிப்பிற்குரிய திரு.சோதிநாதன் ஐயா இந்தத் தலைப்பை ஏன் தந்தார் என்று ஆரம்பத்தில் எதுவும் எண்ணவில்லை. இணையத்தில் வள்ளலாரின் பெண்கள் குறித்த பாடல்களைப் பற்றிய செய்திகளைப் படித்தவுடன் அதாவது இன்றைய அறிவு, வாழ்வியல் அனுபவச் சூழலுடன் படித்த போது ஒரு கணம் மிகவும் வருந்தினேன். இங்கே கூறப்படுபவை சரியானவையா? வள்ளலார் எழுதியவை தாமா? என்று எண்ணி வருந்திய போது, முடிவில், பேராசிரியர் சுப.திண்ணப்பனார்(2022) அவர்களின் செய்தி மனத்துக்கு மகிழ்வைத் தந்தது. இருப்பினும் இணையத்தை நோக்கும்போது, கல்வியாளர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் ஒரு கடப்பாடு அங்கே ஒளிந்திருப்பதையும் அறிய முடிந்தது. இந்தத் தலைப்பை ஒட்டிக் கூறவரும் கருத்துகளைத் தரமான மொழியில் என்னால் கூற இயலும் என்ற திடமான நம்பிக்கையில் கட்டுரைக்குள் புகுந்தேன். கட்டுரையாளராகிய நானறிந்த வரை கிடைத்த செய்திகளின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகிறது.

வள்ளலார்

இராமலிங்கர் 5.10.1823 இல் மருதூரில் பிறந்தார். அவரது ஊருக்கு அருகில் தான் சிவபெருமான் மன்றாடிய சிதம்பரமும் இருக்கிறது. இவர் இளவயதிலேயே முருகனது அருள் பெற்றுச் செந்தமிழும் வடமொழியும் வரப்பெற்றவராக இலங்கினார். அண்ணன் சபாபதிப்பிள்ளையிடமும் குரு காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடமும் முறையாகக் கல்விப் பெற்று இளமையிலேயே கவிபாடுதல் முதல் பல்வேறு ஞானத்திறமைகளைப் பெற்றார். இளவயதிலேயே தந்தையை இழந்த இவர் தாய்,

http://Creativecommons.org//license/by/4.0/.

அண்ணன் சபாபதி, அண்ணியார் ஆகியோரது அன்பிலும் அரவணைப்பிலும் நன்கு வளர்த்தெடுக்கப்பட்டார்.

இவரைப் பற்றிக் கூறும் போது, அவரது திருவருட்பா மூலமும் உரையும் என்ற நூலில், அவர், "புலவராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, உரைநடைஎழுத்தாளராக, நூலாசிரியராக, உரையாசிரியராக, ஞானாசிரியராக, போதகாசிரியராக, மருத்துவராக இவர்களுக்கெல்லாம் மேலாகத் துறவியாக, ஞானியாகக் காட்சிதந்தார்" என்று நூலின் பதிப்பாளர் கூறுகிறார்.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று பாடிய வள்ளலார். "அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி!" என்று சோதியை முன்னிறுத்தித் தம் ஞானமார்க்க முறையை அதாவது சமரசச் சன்மார்க்க நெறியை மக்களிடையே பரப்பினார். இன்றும் தமிழ்நாட்டிலும் அயல்நாடுகளிலும் வாழும் தமிழர்கள் சோதி வழிபாட்டைப் பின்பற்றி இவரது நெறிப்படி வாழ்ந்து வருகின்றனர்.

இராமலிங்கர் எழுதிய திருஅருட்பா ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன . அவற்றில் இடம் பெற்ற பாடல்களின் எண்ணிக்கை 5818 ஆகும். அப்பாடல்களுக்குப் புகழ்பெற்ற கல்வியாளரும் தமிழறிஞருமான பேராசிரியர் ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை அவர்கள் உரையெழுதியுள்ளார்கள். வள்ளலார் அப்பர், சம்பந்தர், சுந்தரம், மாணிக்கவாசகர் ஆகியோருக்குப் பிறகு பட்டினத்தார், வள்ளலார் என்று கூறுமளவுக்கு இருவரும் மக்களிடையே நன்னெறிக் கருத்துகளைத் தொடர்ந்து எடுத்துக் கூறிப் பதித்து வந்துள்ளனர்.

வள்ளலார் சிறுவயதிலேயே தாம் கருவிலேயே திருவுடையவராகப் பிறந்தவர் என்பதை உறவினர்கள் அறியாத நிலையிலும் சில அற்புதச் செயல்கள் வழியாகப் புரியவைக்கப்பட்டவர் என்பதை, அவரது அண்ணியார் வடிவில் இறையம்மை அவருக்கு உணவளித்தல், குழந்தையாக இருக்கும் போது ஒட்டுத்திண்ணையில் உறங்கியபோது மேலிருந்து கீழே விழாது காப்பாற்றப்படல், அண்ணன் ஆற்ற வேண்டிய உரையினை இவர் ஏற்றுத் தம் திறமையைப் பிறர் அறிய வைத்தது, இறைவன் கண்ணாடியில் அவருக்குக் காட்சியளித்தது, வியாசர்பாடியில் பாம்பு அவரைத் தீண்டாது சென்றமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வள்ளலாரைப் பற்றிக் கூறும் போது அவர் 5818 பாடல்களைக் கொண்ட திருவருட்பாவை இயற்றியுள்ளார். அப்பாடல்கள் ஆறுதிருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றின் குறிப்பிடத்தக்கதாக அருட்பெருஞ்சோதி அகவல் அமைகிறது. 19.04.1972இல் அதாவது தமிழ்மாதமான சித்திரை எட்டாம்நாள் ஒரே இரவில் கடுக்காய்மையைக் கொண்டு 15,696 அடிகள் கொண்ட அருட்பெருஞ்சோதி அகவலை வள்ளலார் எழுதியுள்ளார் என்பது அனைவரையும் வியப்பிலாழ்த்தும் செய்தியாகும்(தினமணி, 2019 1). வள்ளலார் இராமலிங்கர் கவிதை மட்டுமின்றி உரைநடையில் படைப்புகளைப் படைப்பதிலும் திறமிக்கவராகத் திகழ்ந்தார். அவ்வகையில் அவர் மனுமுறைகண்டவாசகம், ஜீவகாருண்யஒழுக்கம், வியாக்கியானங்கள், மருத்துவக்குறிப்புகள், உபதேசங்கள், திருமுகங்கள்(கடிதங்கள்). அழைப்பிதழ்கள், அறிவிப்புகள், கட்டளைகள், விண்ணப்பங்கள் ஆகியவற்றைப் படைத்துள்ளார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

அவ்வகையில் வள்ளலார் மக்களை நல்வழிப்படுத்தி அவர்கள் வாழ்வில் ஆக்ககரமாகச் செயல்பட ஊக்குவித்த மாமனிதர் என்பதுடன் ஒரு நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், பத்திரிகைஆசிரியர், போதிக்கும்ஆசிரியர், ஞானஆசிரியர், சித்தமருத்துவர், வியாக்கியானர், அருள்கவிஞர், அருள்ஞானி என்று பல நிலைகளில் தம் பங்களிப்பை நிகழ்த்தியவர் என்று ஒரு கட்டுரை (தினமணி 1, 1919) கூறுகிறது.

வள்ளலார் பெண்களை விரும்பாதவரல்ல. தாயை மதித்தும் தாயொத்த அண்ணியை மதித்தும் வாழ்ந்தவர். அவர்களுக்காக அவர்தம் சொந்த முடிவை, விருப்பைக் கூட விட்டுக்கொடுத்து மதித்து ஏற்றுக் கொண்டவர். இப்படி இருக்கும்போது பெண் என்றால் பேய் என்றோ பெண் என்றால் பிறரைத் தவறான நோக்கில் மயக்கும் ஒரு மனித இனம் என்றோ அவர் நினைத்திருப்பார் என்று எண்ணத் தோன்றவில்லை.

தமக்குத் திருமணம் வேண்டாம் என்று கூறியும் தாயின் வற்புறுத்தலாலும் அண்ணன் உட்படக் குடும்பத்தினர் வற்புறுத்தலாலும் குடும்ப நண்பரும் பெரியவருமான ஒருவரது அறிவுரை, ஆலோசனை ஆகியவற்றால் தமது சகோதரிகள் இருவரில் ஒருவரது மகளான தன் கோட்டியம்மாளை மணந்திடத் திருமணத்துக்கு ஒப்புக்கொண்டார். ஒப்புக்கொள்வது வேறு ஏற்றுக்கொள்வது வேறு குடும்ப வாழ்வில் ஈடுபடுவது வேறு இங்கு முன்னது ஏற்புடையதாக இருப்பினும் இரண்டாவது ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டுக்கு ஏற்ப அமைந்தாலும் மூன்றாவது பகுதி என்பது அறவே இல்லையே என்று எண்ணும் வகையில் அவரது வாழ்க்கை அமைந்திருந்தது. அதனால் தான் முதலிரவில் மனைவி இங்கே நிறையப் பழங்கள், இருக்கின்றன என்று தெரிவித்த செய்தியைக் கேட்டதும் அவற்றை விடத் திருவாசகம் இன்னும் சிறப்பாகவும் பழங்களின் இனிப்பையும் சுவையையும் கொண்டு எனக்குள் இன்பம் தருவன என்ற பொருளில்

“வான்கலந்த மாணிக்கவாசக!நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால்,நற்கருப்பஞ்சாற்றினிலே
தேன்கலந்து, பால்கலந்து,செங்கனித்தீஞ்சுவைகலந்து,என்
ஊன்கலந்துஉயிர்கலந்து, உவட்டாமல் இனிப்பதுவே” (வள்ளலார்

என்று பாடினார். இங்கு பாலும் பழமும் தேனும் சுவையும் எல்லாம் இருப்பினும் அவற்றைவிட திருவாசகத்தின் சுவை இனிது இனிது பெரிதும் இனிது என்கிறார் அவர். திருமணத்தைச் செய்து கொண்டாலும் இறைவன் மீது திருமண வாழ்வையும் விஞ்சும் வகையில் பாசமும் காதலும் பக்தியும் பெருமையும் மதிப்பும் சீடனொத்த மனநிலையும் கொண்டிருந்தாலும் மனைவியை வெறுத்தவர் போல் அவர் தெரியவில்லை. இதற்குத் திருமணம் என்ற ஒரு கருத்தமைவின் மீதும் பண்பாட்டு நிகழ்வின் மீதும் அவர் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் தம்மைத் திருமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்திய தாய், சகோதரர் உட்பட குடும்ப நண்பர் மீதும் அவர் வைத்திருந்த பாரம்பரிய நோக்கிலான மதிப்பும் பணிவும் ஒரு காரணமாக இருக்கலாம் என்பது கட்டுரையாளரின் கருத்தும் நம்பிக்கையும் ஆகும். அங்கும் தாய் என்பவரது கருத்துக்கு ஒப்புதல் தெரிவித்துத் திருமணம் செய்து கொண்ட, பெரியோர் பார்த்த பெண்ணையே மதிப்புக் குறைத்துப் பேசியதாக அறியவில்லை என்பதும் பெண்கள் மீது அவர் கொண்டிருக்கும் மதிப்பை

http://Creativecommons.org//license/by/4.0/.

எடுத்துக் காட்டுகிறது எனத் துணியலாம். இதுதவிர, அவரது மனைவியாரோ தம் கணவரையும் அவரது இயல்பையும் நன்கறிந்த நிலையில் அவரது துறவுடன் கூடிய பக்திவாழ்வுக்கு முழுச்சம்மதம் தெரிவித்தார். ஆக ,இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்தவர்கள் என்பது வெளிப்படை.

திருமண வாழ்வில் தம்பதியர் இருவரும் பெரிதும் விருப்பப்பட்டு ஈடுபடாவிடினும், தமக்கு விருப்பமான கடவுள்மீது தம்மைப் பெண்ணாகப் பாவித்துப் பாடல்கள் பாடுவதில் வள்ளலார் மிகவும் வல்லவர் என்பதை இங்கு உணரமுடிகிறது. அப்படியென்றால் பெண்களைப் பற்றியும் பெண்ணின் மனத்தைப் பற்றியும் அவர் அறிந்தவர் என்பதையும் நாம் உணர முடிகிறது. அவர் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகியன மனிதருக்கு அதிலும் நல்லவருக்கு ஏற்றனவல்ல என்பதையும் தாய் தந்தையை மதிக்க வேண்டும் என்பதையும் பசி வரும் போது பலவகையான தவறான சிந்தனைகள் வரும் என்பதற்காகப் பசிப்பிணியறுக்கும் உணவுச்சாலையை உருவாக்கி இன்றுவரை சேவையாற்ற வழி செய்துள்ளார் என்ற செய்தியும் இங்கு நினைவில் கொள்ள வேண்டியவை. மேலும், பெண்களை இவர் மதிப்பவர், சமூகத்தின் பெண்ணின் நிலை எவ்வாறு உள்ளது என்று நன்கறிந்தவர் என்பதை எப்படிக் கூறுவது என்றால் கவிதையில் அவர் பயன்படுத்தும் கருத்தமைவுகள், சொற்கள், உணர்வுகள், அவை கேட்பவரை அல்லது வாசிப்பவரைத் தம் வசமீர்க்கும் நிலை, அவர்களிடத்தில் ஏற்படுத்தக் கூடியதாக்கங்கள் ஆகியன ஆதாரங்களாக அமைகின்றன என்பதேபதில் .இனி அவரது பாடல்களில் கட்டுரையாளர் வாசித்த நூல்களிலிருந்து சில கருத்துகளை அறியலாம்.

நற்றாய்

பெண் என்றால் முதலில் தாய் எனும் கருத்தமைவு தான் கண்முன் நிற்கும். அதற்குப் பிறகு தான் பிற வயதுப்பெண்கள் நம் மனக்கண்ணில் வருவர். அவ்வகையில்,

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

(திருவள்ளுவர்)

எனத் திருவள்ளுவரால் புகழப் பெற்ற தாய் எனும் பெண் தான் பெண்மைக்கு மிகவும் சிறப்பைச் சேர்ப்பவள்.. அரபு இலக்கியத்தில் தாயையும் மகளையும் பற்றி ஆராய்ந்த ஆய்வாளர் தாயும் மகளும் பற்றிய ஒரு கதையை முன் வைக்கிறார். பாலஸ்தீனியக் கதையான நீலநிற அழகுப் பொருளும் ஜூபைனாவின் வீடு திரும்பலும் என்ற அக்கதை (The Blue Charm and the Return of Jubayna) (AbudiDalya. (2010 இல்பப.12). தவமிருந்து இறைவனின் அருளால் பாலடைக் கட்டியைனப் போன்ற அழகிய பெண் குழந்தையான ஜூபைனாவைப் பெற்றடுத்த தாய் அவளை மிகவும் பத்திராமாகக் காக்கிறாள். அவளது கையில் நீலநிறப் பட்டையில் அழகான ஓர் அழகுப் பொருளையும் இணைத்துக் கட்டிவைக்கிறாள். இருந்தாலும் இயற்றையும் விதியும் யாரை விடப் போகின்றன? அந்தப் பெண் ஜிப்ஸிக்களால் கவர்ந்து செல்லப்பட்டு முடிவில் எப்படியோ ஓர் இளவரசனுக்கு மனைவியாகிறாள். மகன் போன கவலையில் தாய் அவளைத் தேடித்தேடி முடிவில் கண்பார்வையை இழக்கிறாள். ஜூபைனாவோ ஆண்குழந்தையைப் பெற்றிடுக்கிறாள். தன்

http://Creativecommons.org//license/by/4.0/.

பிள்ளையைப் பார்த்தவுடன் தன் தாயின் நினைவில் ஏங்கிய அவள் தன் தாயைப் பார்க்க விரும்புகிறாள். கணவனோ அனுமதியும் அளவில்லாப் பரிசுப் பொருள்களையும் தந்து அனுப்புகிறான். எப்படியோ தாம் இருந்த கிராமத்துக்கு வந்த ஜூபைனாவுக்கு, தண்ணீருக்காக ஏங்கும் மகனின் தாகத்தைத் தீர்க்க வேண்டிய கட்டாயம். அங்குள்ள பெண்மணி ஒருவரிடம் கேட்ட போது, ஜூபைனா இங்கிருந்து போனது முதல் தண்ணீர் வருவதில்லை என்கிறார். பிறகு தான் தான் அந்த ஜூபைனா என்பதைப் புரிய வைத்தவுடன் தண்ணீர் ஊற்றாய்ப் பெருக்கெடுத்து ஓடுகிறது. மகனின் தாகம் தீர்ந்த நிலையில் தாயைப் போய்ப் பார்த்து பெருமகிழ்வு கொள்கிறாள். தாயையும் அவள் பெருமகிழ்வு கொள்ள வைக்கிறாள். இங்கு தாயும் மகளும் வைத்திருக்கும் தொடர்பு நிலைத் தன்மை மிக்கது. ஏனெனில் ,தாய் தான் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் வாழ்வியல் விழுமங்களையும் மகளுக்குக் கற்றுத் தருகிறாள். இங்கே பண்பாட்டுக் கடப்பு என்பது தலைமுறை தலைமுறையாக அமைகிறது. அவ்வகையில் மகன் என்பவன் தனக்கு ஒரு மனைவி கிடைக்கும் வகை என்றும் மகள் என்பவள் காலத்துக்கும் மகள் என்றும் கூறப்படும் முதுமொழியை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டி இருக்கிறது. ஏனெனில் மகள் பிறந்தவுடன் தாய் அவளுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்து அவளை வளர்த்தெடுக்கிறாள். இயல்பாகவே பெண்ணுக்கு இயற்கை தந்துள்ள உடல்ரீதியான சில அமைப்புமுறைகள் அவள் தம் கற்பு, தம் உடல் ஆகியவற்றின் மீது மிகவும் கவனமாக இருக்க வேண்டிய ஒரு கட்டாயத்தைச் சட்டம் இயற்றாமல் சட்டமாக்கியுள்ளது. அதனால் தாயைப் போலப் பிள்ளை நூலைப்போல் சேலை என்பார்கள். இன்று வரை இந்த உறவு மிகவும் சிறப்பாக ஏறக்குறைய எல்லாச் சமூகங்களிலும் சிறப்பாக அமைந்து வருகிறது. அவ்வகையில் வள்ளலாரும் இந்தத் தாய், மகள் உறவைப் பற்றிப் பேசும் வகையில் தம் பாடல்களில் அவர்களை மகிழ்வுடன் உலவ விடுகிறார். அதில் முதல் பகுதியாக இங்கும் நற்றாய் குறித்த கருத்துகளுடன் இப்பகுதி தொடங்குகிறது.

சிவஞான போதத்தின் மீது பக்தி கொண்டவர்கள் சிவன் மீதும் சத்தி மீதும் சிவசக்தி மீதும் காதல் கொள்வது இயல்பே. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இருநிலைத் தன்மைகளும் இருப்பினும் அவர்களது உணர்வு, அறிவு நோக்கில் ஆண்கள் பெண்கள் கொள்ளும் உணர்வுகளையும் சிந்தனைகளையும் அறிவு நோக்கிலான சிந்தனைகளையும் கொள்வதுஇயல்பு. இது ஒருகுறிப்பிட்டஅளவிற்குள் இருக்கும்போது அவர்களது இயல்பான தன்மை மாறாது. இராமபிரானைக் கண்டு அவனது அழகிலும் குணத்திலும் மயங்கிய ஆடவர் அவர் மீது காதல் கொள்ளும் போது பெண்களாகத் தம்மை எண்ணியதை உரையாசிரியர் துரைசாமிப்பிள்ளை கூறும் போது இது இன்றும் இடம்பெறும் மனித இயல்பு என்று கொள்ளலாம்.

அவ்வகையில் வள்ளலாரின் பெண் நோக்கிலான கூற்றுகளுக்கும் பாடல்களுக்கும் அவர் சிவன் மீது கொண்ட பேரன்பும் பெருங்காதலும் தாம் காரணங்கள் எனலாம். இங்கே உரையாசிரியர் வள்ளலாரின் கைக்கிளைக் காதலுக்குச் சப்பைக் கட்டுவது போலவும் அக்காதலை முறைப்படுத்தி விளக்கு முகமானும் தம் கருத்தையும் கூறுகிறார். வள்ளலாரின் தூய சிவயோகம் மீது கொண்ட அன்பையும் அந்த அன்பினால்

http://Creativecommons.org//license/by/4.0/.

கிடைக்கப்பெறும் சிவபோகத்தையும் நோக்கிய நிலையில் பிள்ளையவர்கள் கூறும் கருத்துடன் கட்டுரையாளர் தம் கருத்தை ஒப்பிடும் போது, சிவயோகப் பற்று வள்ளலாரைப் பாடல்களைப் பாடவைத்துள்ளது எனலாம். இங்கு அவர் இறைவனுக்கு முன்பு இப்பாடலைப் பாடும் பின்னணி என்ன என்றால் ஆன்ம சிற்சத்தியைத் தலைவியாகவும் அந்த சிற்சத்திக்குத் தாம் நற்றாயாகவும் உயிர்த்தோழியாகவும் இருந்து பின்வரும் பின்னணியுடன் கூடிய பாடலைப் பாடுகிறார்..

இங்கு உண்மையில் பார்த்தால் தலைமகள் தன் விருப்ப மிகுதியைத் தலைவனான சிவபெருமானை எண்ணி வாய்விட்டு உரைக்கின்றார். அவ்வாறு தலைவி கூறுவதை நற்றாய் எடுத்துக் கூறும் வகையில் இப்பாடல் அமைகிறது. ஆக தலைவியாகத் தன்னை நற்றாய் கருதாவிடினும் தன்மகள் தலைவியாக இருந்து இறைவன் மீது காதல் கொண்டு பாடிய பாட்டைத் தாம் ஒரு நற்றாயாக இருந்து பாடும் நிலையில் அமைந்துள்ளது. இது ஒரு வகை இலக்கிய வெளிப்பாட்டு உத்தியாகும்.

“காதல்கைம்மிகுந்ததென்செய்வேன்எனைநீ
கண்டுகொள்கணவனேஎன்றாள்
ஓதலுன்புகழ்அன்றிநான்ஒன்றும்
உவந்திலேன்உண்மையீதென்றாள்”
(வள்ளலார், திருவருட்பா)

நற்றாய்க் கூற்று என வரும் பகுதியில் ,”காதல் அளவு மீறி இருக்கிறது நான் என் செய்வது? நீ என்னைக் கண்டு கொள்கணவனே !என்று மகள் கூறினாளாம் உன்பு கழை ஓதுவதன்றி நான் வேறு எதிலும் மகிழ்ச்சி கொள்ளவில்லை. இது உண்மை என்று மகள் கூறுகிறாளாம். அப்படி என்றால் இங்கே, “நீ என்னைக் கண்டு கொள்கணவனே!” என்றால் இங்கே நற்றாய்க் குமருமகனாக இறைவன் திகழ்கிறான். அதுமட்டுமல்ல, “உன்புகழையே நான் பாடுகிறேன். இது தவிர வேறு எதிலும் மகிழ்ச்சி கொள்ளவில்லை என்றால் அந்த மகள் கணவனைப் புகழ்வதையே தொழிலாக வைத்துள்ளாள். இது சத்தியம்!” என்றும் பரிந்துரையாகச் செய்தியைக் கூறுகிறாள், தாய். அப்படி என்றால் அக்காலத்தில் கணவனைப் புகழ்வது மனைவியின் வேலையா? அது தான் மகிழ்ச்சியைத் தருகிறது என்றும் கூறவேண்டுமா? ஆணைச் சார்ந்த நிலையில் பெண் இப்படித்தான் இருக்கவேண்டுமா? இது உண்மை என்று தலையிலடித்துச் சத்தியம் வேறு செய்ய வேண்டுமா? என்றெல்லாம் எண்ணத் தோன்றுகிறது. மறைமுகமாக இது அன்றைய ஆண்களின் எதிர்பார்ப்பையும் காட்டுகிறது என்றும் கூறலாம்.

இங்கே மகளின் கருத்தைக் கூறும் வகையில் தாய் தன் சிவபாசத்தை எடுத்துக்காட்டுகிறாளோ அல்லது தனக்கு வயது வந்த பெண் இருப்பதால் தான் தன் காதலை எடுத்துரைப்பது சமூக ஒழுங்கிற்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் ஒத்து வராதது என்பதால் இப்படிச் சொல்கிறாளோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. மேலும் சில குடும்பங்களில் தனது முறைப் பெண்ணை மணக்க வேண்டிய மணாளன் வயதில் தன்னை விட இளையனாக இருக்கும் போது தன் மகளைத் திருமணம் செய்யும் பாங்கும் இருப்பது இயல்பு என்ற நிலையில் தாய் பெறா உறவைத் தன் மகள் பெறுவது என்ற

http://Creativecommons.org//license/by/4.0/.

நிலையில் தன் காதலை தன் மகளை வைத்துச் சொல்லும் நிலையில் வள்ளலார் நற்றாயாகப் பேசுகிறாரோ என்றும் எண்ணத் தோன்றுகிறது

"அடுத்துநான்உன்னைக்கலந்தனுபவிக்க

....

வரத்தினால்நான்பெற்றமகளே" (வள்ளலார், பாடல் 4194)

என் மகள், "என் காதலனே நான் உன்னைக் கலந்து பெறும் இன்ப அனுபவத்தைப் பெற ஆசை அளவு மீறிப் பொங்குகிறது. இதை யாரும் தடுக்க முடியாது என்பதுடன் இத்தகு ஆசையைத் தாங்கிக் கொண்டு இனி சிறிது நேரமும் நான் தாங்க மாட்டேன் என்றும் தலைவனே !நேரத்தையும் வாய்ப்பையும் கடத்திடாதீர் என்றும் கூறுகிறாள். இங்கு ஆசை ஒரு பக்கம் மனத்தையும் மேனியையும் அறிவையும் வாட்டுகிறது என்றாலும் சுற்றியுள்ள உறவினர்கள் வாயால் என்னைத் தூற்றுவதை என்னால் தாங்க முடியவில்லை என்றும் அதைச் சொல்லி முடியாது அதனால் சொல்ல முடியாது என்கிறார். என்துயரைத்தீர்!" என்று மகள் கேட்பதைப் பற்றி நற்றாய் முறையிடுகிறாள்.

இங்கே நற்றாய் முறையிட்டாலும் சமூகத்தில் அலர் தூற்று தலைப் பற்றிப் பேசுகிறாள். ஒரு வகையில் வள்ளலார் தாம் வாழ்ந்த சமூகத்தையும் பெண்களின் நிலையையும் நன்கு அறிந்தவர் எனில் மிகையில்லை. இவ்வாறு பத்துப் பாடல்களில் நற்றாய்க் கூற்றைக் கட்டுரையாளர் வாசித்துள்ளார்.

மற்றொரு பாடலில் சிவபெருமான் மீது ஆசை எனும் பெரும் பேயை விரட்டப் பொங்கலிட்டு வணங்கிய தாயர்கள் இவளை விட்டு அந்தப் பேய் போகாத நிலையில் முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு வீடு போனார்கள் என்றும் கூறும் நற்றாய், தன் மகளின் கழுத்தில் திருவருளுடன் மங்கல நாண் சூட்ட வேண்டும் என்று தம் விருப்பத்தைச் சபையில் நடனமாடும் தனிப் பெருந்துரையிடம் தெரிவிக்கிறாள். இங்கே இவளது மகள் சிவபெருமான் மீது காதல் கொண்டமையால் மற்றப் பெண்கள் அவன் மீது காதல் கொள்ள வழியில்லாமல் போவதால் அவர்களது அன்னையர்கள் இந்தப் பெண் மீதான பேயை விரட்ட இறைவனுக்குப் பொங்கலிட்டு வணங்கினர் என்று கருத்தைக் கட்டுரையாளர் பெறுகிறார். நல்ல மாப்பிள்ளை கிடைத்தால் தம் பெண்களும் மகிழ்ச்சியுடன் இருப்பர் என்று அந்த அன்னையரும் சராசரி அன்னையரைப் போல் ஏங்கினரோ என்றும் வள்ளலாரிடம் வினவத் தோன்றுகிறது.

இங்கே தமிழ்ப் பண்பாட்டில் அன்றும் இன்றும் தனக்கென ஓரிடம் பெற்றுள்ள மங்கல நாணைப் பூட்டுதலும் திருமணம் செய்தலும் சமூகத்தில் தரக் கூடிய பெரும் அங்கீகாரத்தினை பெண்களைப் பெற்ற எல்லாத் தாயரும் விரும்புவது போல் இவளும் விரும்புகிறார். இங்கே இராமலிங்க வள்ளலாரின் பாரம்பரிய மனத்தை நாம் அறிய முடிகிறது.

நற்றாய் எனும் போது, தலைவியும் தோழியும் ஒரு புறமிருக்க, தலைவியும் நற்றாயும் மறு புறமிருப்பது போல் வரும் வினாவிடைப் பாடல் பகுதியில் கேள்விக்குப் பதில் தரும் பகுதியில் சிவனின் பேரானந்தம் குறித்த வினாக்களும் விடைகளும் அகப்

http://Creativecommons.org//license/by/4.0/.

பாடல் நோக்கில் வருவதை இங்கே ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற நிலையில் பார்க்கலாம்

'திருவருளே உருவாக ஆகிய இறைவன் தம் அருளால் பக்தர்களுக்கு அறிவை வழங்கும் போது அந்த சிவானுபவம் எப்படி இருக்கும் தாயே என்று தலைவி கேட்க, பசு பாசமானமாகிய மருட்சி உணர்வுக்கு ஏதும் புலப்படாமல் திருவருளை நல்கும் சிவஞானக் காட்சியினால் காணப்படும் திருக் கூத்தெனும் பெருங்கூத்து, இன்ப மிக்க சிவானு பவமாக அமையும் மகளே, இதை நீ அறிவாயாக!' என்று ஔவை துரைசாமிப் பிள்ளையவர்களின் உரையினூடே பாடலைப் படிக்கும் போது நம்மையும் அந்த சிவ அனுபவமும் தாய் மகள் உறவும் அனுபவமும் தொற்றிக் கொள்ளும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

"அருளாலேஅருளிறைஅருள்கின்றனபொழுதங்
கனுபவமாகின்றதென்னடிதாயே
தெருளாலேமருளாலேதெரியாதுதெரியும்
திருநடஇன்பம்என்றறியாயோமகளே"(வள்ளலார்,பாடல் 2994)

இங்கு அடுத்து இடம் பெற்றுள்ள பாடலில், 'தில்லையம் பலத்தில் நடமாடும், நடிக்கும் என் கணவனை அன்றி வேறு எவரையும் என் மனத்தில் நினைக்க மாட்டேன், மிகவும் கொடிய துன்பங்களைப் போக்குகின்ற அந்தப் பெருமானின் பாத மலரடியை ஒரு கணப் பொழுதும் மறக்கமாட்டேன் என்றும் எந்த ஒரு சிறு பொருளையும் தனக்கென வைத்துக் கொள்ளும் சிறு புத்தியை அவன் உடையவன் அல்லன் என்று மற்றவர்கள் கூறினாலும் உலகமெல்லாம் உடையவானவன் அவன் என்று கூறுவேன், நான் இனி மற்றொரு பிறப்பையும் இறப்பையும் அடைய மாட்டேன் என்றும் தங்கத்தில் திருத்தமாகச் செய்யப் பட்ட வளையலை அணிந்த என் மகள் மகிழ்ச்சி நிறைந்த மனநிலையில் கூறுகிறாள்' என்று நற்றாய் கூறுகிறாள். இங்கே நற்றாயும் மகிழ்ச்சியுடன் மகளின் இறைத் தொடர்பை ஏற்றுக் கொள்பவள் போல் கூறுகிறாள். அந்தப் பெரு மிதத்தினை இங்கே பார்க்க முடிகிறது. இவ்வாறு முன்பு புலம்பிய நற்றாயுடன் ஒப்பிடும் போது ஏற்றுக் கொண்ட நற்றாயாக வள்ளலார் தம் சிவானுபவ மகிழ்வைக் காட்டுகிறார்.

"மன்றிடைநடிக்கும்மணாளனைஅல்லால்
....
பொற்றொடி பொங்குகின்றாளே"
(வள்ளலார், 2002))

நற்றாய் என்பவள் தலைவியைப் பத்து மாதம் சுமந்து பெற்ற தாய் என்ற வகையில் அவளுக்கு ஆதரவாக அமைபவர்கள் தலைவியும் செவிலித்தாயும் தலைவியின் தோழியுமாவர். கணவனிடம் கூறுவதை விட இப் பெண்களிடம் எதையும் கூறும் போது அவளுக்கு ஒரு மன நிறைவும் மனக் கலக்கத்திற்கு ஒரு வழியும் கிடைக்கும். இத்தகு மனநிலையை நன்கு அறிந்த வள்ளலார் தாயின் மனநிலையை அங்குலம் அங்குலமாகத் தம் சிவனன்புப் பாடல்களில் விளக்கிக் கூறியுள்ளார். தாய்க்கான மதிப்பையும் அவர் சொல்லாமல் சொல்கிறார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

தலைவி கூற்று

தலைவி பேசுவதைப் போல் வரும் பகுதிகளில் தன் கணவராக எண்ணிய சிவபெருமானுடன் இருந்த சூழலையும் கனவிலும் அவர் வருவதாகவே கனவும் இருப்பதையும் தோழிகளிடம் எடுத்துச் சொன்ன போது அவர்களுக்கு மனம் கொள்ளவில்லை." இந்தப் பெண் அடங்க மாட்டாள்!" என்று கூறினர். என்னை வளர்த்த செவிலித்தாயிடம் கூறிய போதும் அவளும் என்னை அல்லலாய்ப் பார்க்கிறாள். என்னிடம் அவ்வாறே நடந்து கொள்கிறாள். ஊர் மக்கள் தூற்றும் பழி ஒரு ஊர் கடந்து பக்கத்து ஊருக்கெல்லாம் காற்றாய்ப் பறப்பது போல் அமைகிறது. வள்ளல் நடராயர் என்ன எண்ணியுள்ளாரோ?" என்று ஏங்குகிறாள். இங்கும் சமூகத்தில் தமிழ்ப் பெண்ணின் நிலையும் அவளது வயதொத்த தோழியரின் பொறாமையும் தாயின் வருத்தமும் சொல்லாமல் சொல்லப்படுகிறது. வள்ளலார் இறைவன் மீது விருப்பங் கொண்டு பாடல்களைப் பாடினாலும் அவர் ஏன் ஓர் ஆண்மகன் மீது விருப்பங் கொண்ட பெண்மகள் நிலையை இப்படிப் பேசுகிறார்? பெண்காதல் வயப்பட்டாலும் ஊருடன் ஒத்து வாழ் என்பது போல் ஊரில் அதற்கு என்ன பதில் கிடைக்கும் என்று எண்ணும் வகையில் பேசுகிறார் அல்லது பாடுகிறார். இது அவர் பெண்ணைப் பற்றி நன்கு தெரிந்துதான் பேசுகிறார் என்று தானே பொருள்படுகிறது?.

"அங்கலிட்டகளத்தழகர்அம்பலவர்திருத்தோள்
....
சபையில்நடம் புரிகின்றன தனிப்பெரிய துரையே"
(வள்ளலார், பாடல் 4201)

திருச்சிற்றம்பலம் என்ற தலைப்பில் தலைவி வருந்தல் என்ற பகுதியில் இவ்வளவு பாசத்தையும் பக்தியையும் காட்டியும் இறைவன் தன்னை ஆட்கொள்ளவில்லையே என்று எண்ணிப்பாடும் வகையில் தலைவியின் கூற்றாகப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன 'நேசப்பான்மை இல்லாமல் என்மனம் எனும் தோழியும் எனக்குப் பகையாகி விட்டாள்' என்கிறாள் தலைவி. ஒருவேளை இதற்கு ஏற்ற பருவம், மனபக்குவம் இல்லாத காரணமோ? சரியான பழக்கமில்லாமை காரணமோ? ஆணவம் காரணமோ? என்றும் தன் நிலையை மறுபரிசோதனை செய் துபார்க்கிறாள்? மேலும்,

"பருவமிலாக்குறையாலோபகுதிவகையாலோ
....
நிபுணர்எங்கள்நடராயர்நினைவைஅறிந்திலனே"
(வள்ளலார், பாடல் 4210)

இங்கே இவ்வாறு பாடும் தலைவி, இன்னும் பல பாடல்களில், 'நான் சிவனைக் கணவனாகப் பேசி, அவனுடன் இருந்த நேரங்களைப் பற்றித் தோழியிடமும் வெளிப்படையாகவும் பேசுகிறேன். ஆனால் இது உண்மைதான் என்று கூறும் வகையில் அவர் நேரில் வரவில்லையே? அது ஏன்? 'என்றும் தனக்குள் வினவுகிறாள். இங்கே தலைவியின் பாடு பெரும்பாடாக இருப்பதை உணர முடிகிறது. இத்தகு மனநிலைகளைப் பார்க்கும் போது, வள்ளலார் சிவஞானத்தையும் சிவபோகம் தரும் இன்பத்தையும் பற்றிப்

http://Creativecommons.org//license/by/4.0/.

பேசும் போது பெண்ணை ஏன் பயன்படுத்தினார் என்று கேட்கத் தோன்றுகிறது. இயல்பான ஒரு மனநிலையில் சமூகத்தில் உள்ளோரும் சிவஞானத்தையும் சிவபோகத்தையும் சிவனது சிறப்பையும் அறியவும் ஆன்மச் சிறப்புகளைப் பெறவும் பெண் பேசுவது போலும் பிதற்றுவது போலும் பாடுவது போலும் அமையும் போது அங்கே இயல்பான ஒரு நிலை இருக்கும் என்று எடுத்துக் கூறும் வகையில் நற்றாயாகவும் தலைவியாகவும் தோழியாகவும் பாத்திரமேற்றுப் பாடுதல் உத்தியை அவர் பயன்படுத்த முனைந்தார் என்று கூறலாம். ஆனால் பெண்ணின் மனஉணர்வுகளைப் பலவேறு கோணங்களிலும் அவர் எடுத்துக் கூறிய முறை பாராட்டுக்குரியது. எதுவும் இயல்பு அல்லாதது என்று தள்ளிவிட இயலாத அளவுக்கு அனைத்தும் சிறப்பாக அமைந்துள்ளன.

முன்பெல்லாம் ஒருவரை நாம் வீட்டை விட்டு வெளியே விட முடியாது அல்லது அனுப்ப இயலாது என்றால் வீட்டிலுள்ள யாராவது ஒருவரிடம், "போய்த் தலைவாசல் கதவை அடைத்து வைத்திடு!" என்று ஆணையிடும் வகையில் உரிமையுடன் கூறிடுவோம். "ஒரு குடம் தண்ணி ஊத்தி ஒரே பூ பூத்தது என்று தரமான பேச்சுத் தமிழிலும் ஒரு குடம் தண்ணீர் ஊற்றி ஒரே பூ பூத்தது" என்று எழுத்துத் தமிழிலும் கூற்றுகள் இடம் பெற்றுள்ள சிறுவர் விளையாட்டில், இறுதியில் பத்துக்குடம் தண்ணீர் ஊற்றிப் பத்துப் பூ பூத்தது என்று வரும் போது இடையில் உள்நுழைபவரை இறுக்கிப்பிடித்து, "என் ஆடு எங்கே போனது? என்று கண்டீர்களா? சொன்னால் உங்களை விட்டு விடுவோம்" என்று கேட்கும் வினா இடம் பெறும். அதுபோல் இங்கும் தலைவி வந்தவரை வெளியே விடாதிருக்கும் வகையில், "இரட்டைத் தாழ்ப்பாள் போடு!" என்று கூறுகிறார். இது நெஞ்சுக்குக் கூறும் வகையில் அமைந்துள்ளது.

சிவனார் சிறுவயதில் நிறைந்த புன்னகையுடன் என்னைச் சேர்ந்தார், பிறகு சென்றவர்கள் தயாவில் இன்று வந்தார். இவர்க்கு ஆர் ஈடாவார்கள். அப்படிப்பட்ட புதையலான இவர் என்னை விட்டு எங்கு ஓடி விடமுடியும்? என்று எண்ணிய நிலையில், இவர் இனி எப்படிப் போவார் என்று பார்க்கிறேன். ஓடு ஓடிப் போய் இந்தக் கதவை இரட்டைப் பூட்டுப் போட்டு மூடு. இவர்க்கும்எனக்கும்ஒருபெரியவழக்குஇருக்கிறது. அதை இன்று தீர்க்க வேண்டும் என்றாலும் தீர்க்க முடியாத தீரா வழக்காக அது ஆகிவிடும் போல் தெரிகிறது என்கிறாள், தலைவி. இதற்கான பாடல் பின்வருமாறு அமைகிறது.

"சின்ன வயதின் என்னைச் சேர்ந்தார் புன்னகையோடு
....
என்றும்தீராவழக்குக்காணடி." (வள்ளலார், பாடல் 4500)

வள்ளலார் சிவனின் மனைவியாக இலங்கும் அம்மையை வணங்கி வழிபடுவதில் தன்னிகரற்றவர் என்பதை அவரது பாடல்களின் வழியே அறியலாம். இந்நிலையில் திருவதிகை பெரியநாயகி அம்மாவைப் பற்றிய பாடலில்,

உரியநாயகியோங்கதிகைப்பதித்
....
பெரியநாயகிபெற்றியைப்பேசுவோம்
(வள்ளலார், பாடல் 2487)

http://Creativecommons.org//license/by/4.0/.

சல்லாபலகிரி,தலைமகளின் முன்ன முடிபு, வேட்கைக் கொத்து ஆகிய பகுதிகளில் கட்டுரையாளர் தலைவியின் மனநிலையை வள்ளலார் எடுத்துக்காட்டிய வகைகளைப் பற்றிப் படித்துள்ளார்.. இவ்வாறு தலைவியாக அமைந்து பாடல்களைப் பாடி இறைவனின் சிறப்புகளை அகப்பாடல் அணுகுமுறையில் வெளியிட்டமை வாசிப்பவர் தம் வியப்புக்கும் சிறப்புக்கும் உரியது.

நுதலிப்புகுதல் என்ற உத்தியின் வழியே அமையும் திருவதிகைப் பெரியநாயகியார் தோத்திரத்தில் வந்துள்ள இப்பாடலில் திருவதிகைவதியும் வீரட்டேசுரரின் இடத்தில் பங்கேற்ற பெரியநாயகி அம்மை ஈசனின் பிரிய நாயகி, அவருக்கு மட்டுமின்றி அனைவருக்கும் உரிய நாயகி என்றும் பாடி அவரது அருளைப் பெறுகிறார்.. இறைவனிடம்மட்டுமின்றிப்பெரியவர்களைக்காணும்போதுஎப்படிஅவர்களைவாழ்த்திவழிபட்டுப்பெறவேண்டியஅருளைப்பெறவேண்டும்என்பதைச்சொல்லாமல்சொல்கிறார்வள்ளலார். ஓரிடத்தில்உலகில்ஆண்களுக்குச்சிவன்என்றால்பெண்களுக்கானஅருளரசியாகஅம்மைவிளங்குவதைப்பெரியநாயகிப்பெண்ணரசேஎன்றுபாடி, எடுத்துக்காட்டுகிறார்.

பெண்கள் அறுவர் அல்லது எழுவர் எதிரும் புதிருமாக நின்று வினவுதலும் விடைபகரலும் என அமையும் விளையாட்டில் தம் இதயங் கவர்ந்த கணவர்களையும் பற்றிப் பாடுவர் அல்லது அவர்களது இயல்பைக் கூறும் பாடல்கள் பல உள. அவற்றில் ஒன்று வருமாறு

“தண்மதிணொய்முகப்பெண்மணியேஉன்னைத்
தான்கொண்டநாயகராரேடி
அண்மையிற்பொன்னணியம்பலத்தாடல்செய்
ஐயரமுதரழகரடி”

(வள்ளலார், பாடல் 2971)

என்ற பாடலில் உன்னைத் தன் வசம் ஆட்கொண்ட நாயகர் யார் என்று கேட்டபோது அண்மையில் பொன்னால் அணி செய்யப் பெற்ற அம்பலத்தில் ஆடும் பெரியாரே அந்த அமுத அழகரே என்று பெண்களுக்கே உரித்தான “ஏக” போட்டுப் பேசும்பாணியில் கவிதை வந்துள்ளது. இங்கு இன்று போல் அன்றும் பெண்களே “டா” போட்டுப் பேசும் முறையும் இருப்பதை அறிய இயலவில்லை. எனினும் ,இந்தக் கருத்தை வைத்து, “யாரோ யாரோடி உன்னோட புருஷன்?” என்ற திரைப்படப் பாடலை அவர் நினைவுகூர வைக்கிறார்.

குழந்தை இலக்கியத்தில் பழமொழிகள், உவமைகள் வாயிலாகப் பெண்களைப் பற்றிப் பேசியமை

வள்ளலார் தம் உரைநடைப் படைப்புகளில் பலவேறு பழமொழிகளையும் உவமைகளையும் பயன்படுத்தியிருக்கிறார் குழந்தை இலக்கியங்களுக்கு அன்றே .அடித்தளம் போட்டவராக விளங்கும் வள்ளலார், தமது மனுமுறை கண்ட வாசகம் என்ற நூலில் மனுநீதி மன்னனின்வரலாற்றைக் கூறுகிறார்அதில் தம் குழந்தையைப் பற்றிக் கூறும்போது .. பொதுவாகப் .அவனை வர்ணிப்பதற்கு மென்மையான மலர்களைப் பயன்படுத்தியுள்ளார் பெண்களைவருணிப்பதற்குப் பயன்படும் மலர்களைக் குழந்தைகளுக்கும் பயன்படுத்துவர் .

http://Creativecommons.org//license/by/4.0/.

இங்கு மென்மை மனம் கொண்ட ஆண் குழந்தைக்கு அவற்றைவர்ணனைத்தொடர்களாகப் பயன்படுத்தியமை அவரது தாயுள்ளத்தைக் காட்டுகிறது.

அரசர் தவறு செய்தால் இடித்துரைக்கவேண்டிய அரசினர், எல்லாவற்றுக்கும் ஆமாம் சாமி போடுதல் குறித்துப் பேசும்போது வரும் பகுதியில், பின்வரும் பழமொழிகளையும் உவமைகளையும் வள்ளலார் பயன்படுத்தியுள்ளார்இவை வாழ்விலும் தம் மொழியிலும் . அவர் கொண்டுள்ளபேரனுபவத்தையும் அதனைப் பயன்படுத்துவதில் கொண்டுள்ள லாவகத்தையும் எடுத்துக்காட்டுகின்றன .

> “கூடிப்பிரிந்த மங்கையின் குரலோசையைக் கேட்ட நாயகனைப்போலவும்”
> “பேயைத் தாயென்று பிள்ளை வரங்கேட்டானாம்”
> “மனங் குளிர்ந்து உடல்பூரித்து அளவிடப்படாத களிப்புடையவராய்ப் பாங்கியருக்கு விலை உயர்ந்து பரிசுகளை வழங்கினார். தனக்கு மகன் பிறந்திருக்கிறான் என்ற செய்தியைப் பாங்கியர் மூலம் கேட்ட மனுமன்னனன“
> “கரும்பு கசப்பென்றால் எட்டிக்காய்போற் கசப்பென்றும், தாயைக்கொலை செய்வது தக்கதென்றால் வேதத்தில் விதித்திருக்கிறதென்றும்)”மகாலிங்கம், நா, 1997,(ப(இல்லை.

என்று வரும் இடங்களில் பெண்கள் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன .

மேலும் இளவரசன் வீதிவிடங்களைப் பாதாதிகேசமாக வருணிக்கும்போது, அவனைப் பார்த்த மங்கையர், “மணமுள்ள மலரை வண்டுகள் சூழ்ந்ததுபோலவும் இனிய சுவையுள்ள தேனை ஈக்கள் சுற்றியது போலவும் சூழ்ந்து கொண்டனர் ”(மகாலிங்கம், நா., 1997. பக்களண்இல்லை) என்று வருணிக்கிறார்இங்கே மலராகவும் தேனாகவும் மென்மையான . இளவரசனை வருணிக்கிறார்.

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று சமூகம் கேட்ட காலத்தில் மெத்தப் படித்த பெண்களைத் திருமணம் செய்வது மேட்டுமேல் வீடு கட்டுவதற்கு ஒப்பும் என்றும் சமூகம் வாதமிட்ட காலத்தில் பெண்களுக்குப் படிப்பறிவு தேவை என்று வாதிட்டவர் வள்ளலார் . அதாவதுமொழியறிவுக் கல்வி மட்டுமின்றி மெய்ஞ்ஞானக் கல்வியைப் பெறவும் பெண்களுக்கு உரிமை உள்ளது என்று முழக்கமிட்டவர் அவர் .இவ்வகையில் பெண்களைப் பற்றிப் பெருமையுடன் பேசும் வள்ளலார் அவர்களை இறைவனை நோக்கிய அகப்பாடல்களிலும் அதிக அளவில் பயன்படுத்தியிருப்பது, பெண்களைப் பற்றி அவர் கொண்டுள்ள மதிப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

முடிவுரை

- அருட்பெருஞ்ஜோதி வள்ளலாரின் அற்புதங்கள் பகுதிகள் 1,2,3,4 ஆகியவற்றை இணையத்தில் வாசித்தபோது, கணவன் இறந்த பிறகு மனைவி தாலி வாங்க வேண்டாம், மனைவி இறந்தால் கணவன் மறுமணம் செய்ய வேண்டாம் என்ற கருத்துகளை வள்ளலார் தெரிவித்தமையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன (தினமணி 2, 1919).

http://Creativecommons.org//license/by/4.0/.

- இங்கே வள்ளலார் பெண்களுக்கு ஆதரவாகப் பேசியிருக்கிறார். இவ்வாறு, கூறும்போது, ஒரு வகையில் அவரது இரண்டாவது கருத்தை இன்றைய நிலையில் தமிழ்ச்சமூகம் ஏற்றுக் கொள்ளுமா என்ற வினாவும் எழும்பும் நேரத்தில் இத்தகு கருத்துகள் முற்போக்குக் கருத்துகளாக இருப்பதும் உண்மையா என்று கேள்வியை எழுப்ப வைக்கும் வகையிலும் அவை அமைந்திருக்கும் போது அவர் பெண்களை மதிப்பவர் என்ற கருத்துக் கூடுதலாக வலுப்படுகிறது.
- இன்று உலக முழுதும் வள்ளலார் பெயரில் அறச்சாலைகளும் சோதி வழிபாட்டு மையங்களும் உணவு வழங்கும் அற உணவுச்சாலைகளும் இடம்பெற்று வருவதை இணையம் வழியே அறிய முடிகிறது. 'ஏழைகளுக்கு உணவிடுதலும் அவர்களது பசிதீர்த்தலும் ஆகிய இரண்டில் இருக்கும் ஆனந்தம் எவ்வளவு பணமிருந்தாலும் கிடைக்காது' என்ற கருத்தை வெளிப்படுத்துகிறார், திருவாட்டி காந்திமதி அம்மாள்.
- இத்தகு நல்ல கருத்துகளுடன் இணையத்தில் வேறுபட்ட கருத்துகளும் இடம் பெறுவதற்கு, வள்ளலாரைப் பற்றிய சரியான புரிந்துணர்வு சமூகத்தில் இல்லாமை காரணமா என்றும் எண்ணத் தோன்றுகிறது..
- இது தமிழன்னைக்குச் சேவை செய்தோரின் பெயரைத் தொடர்ந்து கட்டிக்காக்கவும் எதிர்காலத் தலைமுறையினருக்குத் தமிழின் சிறப்பையும் சீர்மையையும் எடுத்துக் கூறவும் மிகவும் இன்றியமையாத கடப்பாடாகும்.

மேற்கோள்நூல்கள், இணையப்பக்கங்கள்

1. திண்ணப்பன், சுப., (2022). தொலைபேசிவழியேசெய்திதெரிவித்துப்பதில்பெற்றதனிஉரையாடல். 17 டிசம்பர் 2022. திருவருட்பிரகாசவள்ளலார்அருளியதிருஅருட்பா. இணையப்பக்கம்: https://www.thiruarutpa.org/thirumurai/v/T218/tm/n_arraay_kavanrathu
2. திருவள்ளுவர். திருக்குறள். இணையம். தினமணி.1. (2019). *ஆன்மீகம்கட்டுரைகள்- அருட்பெருஞ்சோதிவள்ளலாரின் அற்புதங்கள் பகுதி1.* இணையப்பக்கம் https://www.dinamani.com/religion/religion-articles/2019/jan/10/%E0%AE%85%E0%AE%B0%E0%AF%81%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%86%E0%AE%B0%E0%AF%81%E0%AE%9E%E0%AF%8D%E0%AE%9C%E0%AF%8B%E0%AE%A4%E0%AE%BF-%E0%AE%B5%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%85%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81%E0%AE%A4%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D-3074382.html
3. தினமணி.2. (2019). *ஆன்மீகம்கட்டுரைகள் -அருட்பெருஞ்சோதி வள்ளலாரின் அற்புதங்கள் பகுதி 4.*இணையப்பக்கம் https://www.dinamani.com/religion/religion-articles/2019/jan/23/%E0%AE%85%E0%AE%B0%E0%AF%81%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%86%E0%AE%B0%E0%AF%81%E0%AE%9E%E0%AF%8D%E0%AE%9C%E0%AF%8B%E0%AE%A4%E0%AE%BF-

http://Creativecommons.org//license/by/4.0/.

%E0%AE%B5%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%85%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81%E0%AE%A4%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D---%E0%AE%AA%E0%AE%95%E0%AF%81%E0%AE%A4%E0%AE%BF-4-3081730.html

4. மகாலிங்கம், நா., (1997). முன்னுரை .திருஅருட்பிரகாச வள்ளலார் (ஆசிரியர்) உரை) திருவருட்பா உரைநடைப் பகுதிநடை நூல்கள், வியாக்கியானங்கள், மருத்துவக் குறிப்புகள், உபதேசங்கள், திருமுகங்கள், அழைப்புகள், அறிவிப்புகள், கட்டளைகள், விண்ணப்பங்கள் :சென்னை .என்ற நூலில் .(வர்த்தமானன் பதிப்பகம்..
5. மகாலிங்கம், நா., (1997). முன்னுரை .இராமலிங்கஅடிகளார் (ஆசிரியர்)*திருவருட்பா உரைநடைப் பகுதி உரைநடை நூல்கள்), வியாக்கியானங்கள், மருத்துவக் குறிப்புகள், உபதேசங்கள், திருமுகங்கள், அழைப்புகள், அறிவிப்புகள், கட்டளைகள், விண்ணப்பங்கள்.(* என்ற நூலில் :சென்னை .வர்த்தமானன் பதிப்பகம்.
6. வள்ளலார். (1987). ஔவைதுரைசாமிப்பிள்ளைசு., (உஆர்.). *திருவருட்பா மூலமும் உரையும் (ஒன்பதாம் தொகுதி - மூன்றாம் திருமுறைத் மூன்றாம் பகுதித் தொடர்ச்சி, நான்காம்திருமுறை, ஐந்தாந்திருமுறைத்தொடக்கப்பகுதிகள் 2474-3159).*சிதம்பரம்: அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.
7. வள்ளலார். (1989). ஔவைதுரைசாமிப்பிள்ளைசு., (உஆர்.). *திருவருட்பா மூலமும் உரையும் (ஒன்பதாம் தொகுதி - ஆறாம்திருமுறைத்தொடர்ச்சி 3780-4614).* சிதம்பரம் அண்ணாமலைப்ப ல்கலைக்கழகம்.
8. வள்ளலார் பெயரில் சேவை செய்யும் பெண் -*தினமும் நுறு ஏழைகளுக்கு இலவச உணவு*. இணையத்தளம்https://www.youtube.com/watch?v=Ai6zo7cqzmU
9. வள்ளலார். வேண்டும். இணையப்பக்கம்(http://www.tamildi.com/board/post-35-need)
10. வெள்ளைவாரணனார்க., இராமலிங்க, இராமையா பிள்ளை சுவாமி (வள்ளலார்) (1989). *திருவருட்பாச்சிந்தனை*. சென்னை: மணிவாசகர்பதிப்பகம்.
11. AbudiDalya. (2010). *Mothers and Daughters in Arab Women's Literature*: The Family Frontier. BRILL.

நன்றி உரித்தாகுக

இந்தக் கட்டுரையின் வழியே திருவருட்பாவையும் குறிப்பிட்ட சில நூல்களையும் ஆழமாக வாசிக்க வாய்ப்புகளைக் கொடுத்த திரு.சோதிநாதன் அவர்களுக்கும் நல்லதோர் உரையின் வழியே தம் தமிழின் சிறப்பை எடுத்துரைத்த உரையாசிரியர் திரு.ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்களுக்கும் நூல்களை வாசிக்க வழிசெய்த தேசியக் கல்விக் கழக நூலகத்திற்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

http://Creativecommons.org//license/by/4.0/.

24. 'தமிழ்மாமணி' க.வெள்ளைவாரணனார்

முனைவர் தி.மல்லிகா,
உதவிப்பேராசிரியர்,தமிழ் உயராய்வு மையம்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை-624 004
ORciD :https://orcid.org/0000-0002-2402-0263
DOI 10.5281/zenodo.15070664.

Abstract :

The last part of the 19th century and the beginning of the 20th century were the golden age when Tamil scholarship and Tamil studies flourished. It was during this golden age that the great Tamil scholar K. Vellaivaranar, a member of the Tamil Council, emerged, grew and added wealth and strength to the mother tongue Tamil.K. Vellaivaranar was a Tamil scholar, essayist, researcher, Tamil music scholar, editor, Tholkappiya researcher, Isai Tamil grammarian, literature, and Saiva philosophy. He assisted Vibulananda in the creation of the Jaffna book. He laid down the principles to be followed by those who study music through Isai.

Key Words : K.Vellaivaranar - Tamil maamani - Tholkappiyam

முன்னுரை

19-ஆம் நூற்றாண்டில் இறுதிப் பகுதியும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியும் தமிழ்ப் புலமையும் தமிழாய்வும் மேலோங்கி வளர்ந்த பொற்காலமாகும். இப்பொற்காலப் பகுதியில் தான் தமிழ்ப் பேரவைச் செம்மல் பெருந்தமிழறிஞர் க.வெள்ளைவாரணனார் தோன்றி வளர்ந்து வாழ்ந்து தாய்மொழித் தமிழுக்கு வளமும் வலிமையும் சேர்த்தார்.

க.வெள்ளைவாரணனார் தமிழறிஞர், உரையாசிரியர், ஆராய்ச்சியாளர், தமிழிசை அறிஞர், பதிப்பாசிரியர், தொல்காப்பிய ஆய்வாளர், இசைத்தமிழ் இலக்கணம், இலக்கியம், சைவசித்தாந்தம் ஆகிய துறைகளில் நூல்கள் எழுதினார். யாழ் நூலின் உருவாக்கத்தில் விபுலானந்தருக்குத் துணையாக இருந்தார். இசைவழி நின்று ஆய்வு செய்வோர் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகளை வகுத்தார்.

பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் வாழ்க்கைக்குறிப்பு

பேராசிரியர் 14.01.1917-ஆம் ஆண்டு பிறந்தார். மறைவு 13.06.1988-இல் மறைந்தார். க.வெள்ளைவாரணனார் பெற்றோர் பெயர் கந்தசாமி, அமிர்தம் ஆவார்கள். இவருடைய ஊர் தஞ்சை மாவட்டம் திருநாகேச்சரம் ஆகும். திருப்பெருந்துறை தேவாரப் பாடசாலையில் (1928-1930) கல்வி பயின்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் (1930-1935) வரை கல்லூரிப் படிப்பை முடித்தர். க.வெள்ளைவாரணனார் ஆசிரியர்கள் வித்துவான் அறிஞர் க.சுப்பிரமணிய பிள்ளை சுவாமி விபுலானந்தர், நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியோராவர்கள். நாவலர் சோமசுந்தர பாரதியார் வழிகாட்டி 'தொல்காப்பிய - நன்னூல் எழுத்ததிகாரம் ஒப்பாய்வு என்ற தலைப்பில் ஆய்வு மாணவராக இருந்து தமிழ்அறிஞர் பெருமக்களிடம் கல்வி பயின்றார், ஆழ்ந்த சமயப் பற்றாளர். பதவிக்கும், புகழுக்கும், காசுக்கும் தம்மை ஆட்படுத்திக் கொள்ளாது தமிழ்ப் பணி ஒன்றையே தம் வாழ்வின் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர். தம்முடைய தமிழாய்வுப் பணி மூலம் தமிழ் வரலாற்றில் நிலைத்து நின்றவர். தமிழையும், சமயத்தையும் இரு கண்களாகக் கொண்டவர். தொல்காப்பியன் என்ற பெயர் இயற்பெயரே என்று நிறுவியவர், தொல்காப்பியத்தில்

http://Creativecommons.org//license/by/4.0/.

 E-ISSN : 2584 - 1238

வடக்கே வேங்கட மலைத் தொடரும், தெற்கே குமரியாறும் தமிழக எல்லையாக அமைந்திருந்தன என்றும், கடல்கோளுக்கும் பிறகு குமரிக் கடல் தென்எல்லை ஆனது என்பதையும் தொல்காப்பியர் இடைச்சங்க காலத்தவர். தொல்காப்பியம் இடைச்சங்கக் காலத்தில் இயற்றப்பட்டது என்பதையும், முச்சங்க வரலாற்றை முதன்முதலில் கூறியது. இறையனார் களவியல் உரை தான் என்பதையும் நெடுங்காலத்திற்கு முன்னரே இயற்றப்பட்டது என்பதையும் தம் ஆய்வில் தெரிவித்தவர் க.வெள்ளைவாரணனார்.

வெள்ளைவாரணனார் கல்விப்பணி

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் விரிவுரையாளராகவும் (1938-1963), அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் (1943 - 1962) இணைப்பேராசிரியராகவும் (1962-77) துறைத்தலைவர், புல முதன்மையர் எனப் பல தகுதிகளைப் பெற்று (1977-79) பணியாற்றியவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சிறப்புநிலைப் பேராசிரியராகவும் (1979-1982) தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் - இலக்கியத் துறைத்தலைவர், சிறப்பு நிலைப் பேராசிரியர், புல முதன்மையாளராகவும் (1982-87) பணியாற்றினார்.

வெள்ளைவாரணனாரின் தனிச்சிறப்பு

'பண்பிலே இமயம், நல்ல படிப்பிலே இமயம், தூய அன்பிலும் இமயம்' எனக் கலைமாமணி க.வெள்ளைவாரணனார் டாக்டர் தமிழண்ணல் பாராட்டுவார். குள்ளமான தோற்றம், அறிவுக் கூர்மையினையும், ஆன்மீகக் கட்டுப்பாட்டினையும் ஒரு சேர புலப்படுத்தும் அகன்ற நீறு பூசிய நெற்றி, பார்ப்போரை ஈர்க்கும் புன்னகை தவழும் முகம், எளிய தூய வெண்ணிற உடை உடுத்திய மேனி இவ்வாறு விளங்கியவரே வெள்ளை வாரணனார் ஆவார்.

பயனில சொல்லாப் பண்பும், நகைச்சுவை இழையோடுமாறு இன்சொல் பேசும் இயல்பும் கொண்டிருந்த இப்புலவர் பெருந்தகை, மாணாக்கரின் அன்புக்குரியவராகத் திகழ்ந்தார். இவர் தமிழ் இலக்கியம், இலக்கணம், திருமுறைகள், சைவசித்தாந்தம் ஆகியவற்றைக் கற்றுத் துறைபோய நற்றமிழ் அறிஞர் ஆவார். ஓர் இலக்கியச் செல்வராகவும், இலக்கணக் கடலாகவும், கன்னித் தமிழ்க் காவலாராகவும் விளங்கிய இவரை ஆன்றளித் தடங்கிய அருந்தமிழ்ச் சான்றோர் எனலாம். இயற்றமிழோடு இசைத்தமிழில் நுணுக்கங்களை அறிந்த நுண்ணறிவாளராகவும் திகழ்ந்தமை இவரின் தனிச்சிறப்பாகும்.

க.வெள்ளைவாரணனார் இயற்றிய நூல்கள்

க.வெள்ளைவாரணனார் தமிழ் இலக்கிய வரலாறு - தொல்காப்பியம், தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம், தொல்காப்பியம் - நன்னூல் சொல்லதிகாரம், தொல்பொருள் உரைவனம் (ஏழுதொகுதிகள்) ஆகிய இலக்கண நூல்களையும் குறிஞ்சிப்பாட்டாராய்ச்சி சங்ககாலத் தமிழ்மக்கள் ஆகிய சங்க இலக்கியம் சார்ந்த நூல்களையும், திருவுத்தியார், திருக்கவிற்றுப்படியார், சேக்கிழார் நூல் நயம், பன்னிரு திருமுறை வரலாறு, தில்லைப் பெருங்கோயில் வரலாறு, திருவருட்பார் சிந்தனை ஆகிய சைவ சமயம் சார்ந்த நூல்களையும் தேவார அருள்முறைத் திரட்டுரை திருமந்திர அருள்முறைத் திரட்டுரை, திருவருட் பயன் விளக்கவுரை ஆகிய உரைநூல்களையும்

http://Creativecommons.org//license/by/4.0/.

காக்கை விடு தூது என்னும் படைப்பிலக்கியத்தையும், இசைத்தமிழ் நாடகத்தமிழ் சார்ந்த நூல்களையும் எழுதியுள்ளார். விபுலானந்தரின் யாழ்நூலுக்கு இவர் எழுதியுள்ள முன்னுரை இவரின் இசைப்புலமைக்குச் சான்றாக அமைந்துள்ளது.

க.வெள்ளைவாரணனாரின் புலமை

வெள்ளைவாரணனாரின் உரைநூல்கள் அவரின் நுண்மான் நுழைபுலத்தினைக் காட்டுவன. திருமந்திர அருள்முறைத் திரட்டு என்னும் உரை நூலில் இடம் பெற்றுள்ள ஒரு பாடலும் அதன் விளக்கவுரையும் கீழே தரப்பட்டுள்ளன.

“நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரியும் சிவபெருமா னென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வேனே”

இப்பாடலில் இடம் பெற்றுள்ள தேடுதல் என்பது அன்பர் பலரையும் வினவிச் செல்லுதல், திரிதல் என்பது சிவபரம் பொருளை எதிர்ப்பட்டுக் கண்டு மகிழ வேண்டும் என்னும் ஆர்வத்துடன் அடியார் பலருடன் பல ஊர்களில் சுற்றியலைதல், பாடுதல் என்பது வாக்கின் தொழில், பணிதல் என்பது காலத்தின் தொழில்.

1937-இல் ராஜகோபாலச்சாரியார் சென்னை மாகாண முதலமைச்சர் ஆனார். 1938-இல் இந்தியாவிலேயே முதன்முதலாக மாகாணத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். தமிழைக் கட்டாயப் பாடமாக்காமல் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியதை எதிர்த்து மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், தந்தை பெரியார். அறிஞர் அண்ணா முதலானோர் எதிர்ப்புக் குரல் கொடுத்தனர். பலர் சிறைப்படுத்தப்பட்டனர். தமிழ்ப் புலவர் பெருமக்கள் கொதித்து எழுந்தனர். இவ்வெழுச்சி கரந்தைப் புலவர் கல்லூரியில் பணியாற்றிய க.வெள்ளைவாரணனரையும் ஆட்கொண்டது. 1939-இல் பாந்தர் வெண்கோழியார் என்ற புனைப்பெயரில் காக்கை விடு தூது என்னும் நூலை எழுதி முதலமைச்சருக்கு அனுப்பியதன் மூலம் போராட்டத்தில் தாமும் ஈடுபட்டார்.

க.வெள்ளை வாரணனார் விருதுகள்

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு இலக்கியம் மற்றும் சமய அமைப்புகளும் பல்கலைக்கழகங்களும் வெள்ளைவாரணனாருக்குப் பல்வேறு விருதுகளை வழங்கிப் பெருமை சேர்த்துள்ளன. சித்தாந்தச் செம்மல், தமிழ்ப்பெரும்புலமைச் சான்றோர், தமிழ்மாமணி, சிவகவிமணி, திருமுறைத் தெய்வமணி, தமிழ்ப்பேரவைச் செம்மல் ஆகிய விருதுகள் பல்வேறு ஆண்டுகளில் கொடுக்கப்பட்டவை. தமிழ்நாடு, இயல், இசை, நாடகமன்றம் இவருக்கு 1985-இல் கலைமாமணி விருதை வழங்கியது.

முடிவுரை

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் போது வெள்ளைவாரணனாருக்கு உடல்நலம் குன்றியது. தில்லை சென்று தங்கி அங்கு ஆடவல்லானையே சிந்தித்து வாழ்த்திருந்த இப்புலவர் பெருமான் 1988-ஆம் ஆண்டு சூன் 13-ஆம் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

அன்பு நெஞ்சர் அருந்தமிழ்க்காதலர்
பண்பின் உறைவிடம்ப ழகுதற்கினியார்
உள்ளம் சிறிதிலா வெள்ளைவாரணனார்
நிலைத்த புகழுடன் நீடு வாழ்கவே!

துணைநின்ற நூல்கள்

1. க.வெள்ளைவாரணனார்,தமிழ்இலக்கியவரலாறு, தமிழ்மண்பதிப்பகம், சென்னை, 2013
2. வித்துவான் க.வெள்ளைவாரணனன், தமிழ் இலக்கிய வரலாறு, தொல்காப்பியம், மீனாட்சி புத்தக நிலையம், 2023
3. சித்தாந்த செல்வர் க.வெள்ளைவாரணனார், முனைவர் சா.கிருஷ்ணமூர்த்தி, முனைவர் ச.சிவகாமி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை - 2005
4. தினமணி நாளிதழ் தமிழ்மணி, 2009.

http://Creativecommons.org//license/by/4.0/.

25. ஆற்றுப்படையும் பாணர்களின் பண்பாடும்

டாக்டர் மு.சற்குணவதி D.Lit.,PostDoctorate.,Ph.D.,M.A.,B,Ed.,Dip in JMC.,Dip in FL
மேனாள் பேராசிரியர் & தலைவர்
தமிழ்த்துறை,தொலைதூரக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்,சென்னை - 600 005
தொலைபேசி: 9840375921 - மின்னஞ்சல்: gunavathym@gmail.com
DOI 10.5281/zenodo.15070763.

Abstract :

'Atrupadai' means to appease, guide, and guide. A person who goes to a nobleman or a king and receives a reward for his singing and dancing skills will encounter someone on his way. If he goes to such and such a king, he will receive a reward. The Atrupadai books are literature written with the aim of guiding and sending people like him, saying that this is the way to get there. Only one was written by Nakkhirar with a view to the divine. The Sirupanatrupaadi of Nallur Nathatthanar, the Perumpantrupaadi of Kadiyalur Uruthrangannar, the Porunaratrupaadi of Mudatthamakanniyar, and the Kootharatrupaadi of Perungausikanar are all written with the aim of appeasing the Iravalas. In these Atrupadai books, cultural elements such as the musical instruments of the Panars, clothing, appetite, various sounds, physical strength, occupation, surroundings, and mountain routes are also revealed. The characteristic of appeasing is one of the virtues of life. It is also worth remembering and admiring the culture of the Sangam people, who greatly appreciated it.

Key Words : Bed - virtue - comfort - host - profession - relationship - culture - kadam - yazh - subtlety, mango tree - foot-stirring - puravi - kollval - art.

முன்னுரை:

சங்க இலக்கிய வகைப்பாட்டுள் பத்துப்பாட்டு என்பது பத்து நூல்களின் தொகுதி ஆகும். இதில் சரிபாதி 'ஆற்றுப்படை' என்னும் வகைப்பாட்டில் எழுதப்பட்டுள்ளது. ஐந்து ஆற்றுப்படை நூல்களுள் திருமுருகாற்றுப்படை முருகப்பெருமானிடம் பக்தனை ஆற்றுப்படுத்தும் நோக்கில் நக்கீரரால் எழுதப்பட்டுள்ளது சோழன் கரிகாற்பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்தும் முடத்தாமகக் கண்ணியாரின் பொருநராற்றுப்படை, ஒய்மான்நாட்டு நல்லியக்கோடனிடம் ஆற்றுப்படுத்தும் இடைக்கழிநாட்டு நல்லூர்நக்கத்தனாரின் சிறுபாணாற்றுப்படை, தொண்டைமான் இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்தும் கடியலூர் உருத்திரங்கண்ணனாரின் பெரும்பாணாற்றுப்படை, பல்குன்றக்கோட்டத்துச் செங்கண்மாத்து வேள்நன்னன் சேய்நன்னனிடம் பெருங்கௌசிகனார் ஆற்றுப்படுத்தும் கூத்தராற்றுப்படை ஆகிய நான்கும் இரவலரை ஆற்றுப்படுத்துவதாக எழுதப்ப்டடுள்ளது. இந்நூல்களுன் பொருநர், பாணர், கூத்தர், விறலியர் என்னும் பாட்டும் கூத்தும் அறிந்த கலைஞர்களின் பண்பாட்டுக் கூறுகளும் பொதிந்துள்ளன.

ஆற்றுப்படைஇலக்கணம்:

ஆற்றுப்படை என்பது சங்கச் சான்றோர் பாடிய பாட்டு வகைகளுன் ஒன்று ஆகும். ஆற்றுப்படை என்பது ஆற்றின்கண் படுப்பது. ஆறுவழி: படுப்பது செலுத்துவது. அதாவது

http://Creativecommons.org//license/by/4.0/.

ஒருவர் செல்ல வேண்டிய வழி துறைகளைச் சொல்லித் தெரிவித்து அவற்றைப் பின்பற்றிச் செல்லுமாறு செலுத்துவது.

“கூத்தரும் பாணரும பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத்தோன்றி
பெற்றபெருவளம் பெறாஅர்க்கு அறிவுரீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்”

(தொல். புறத்திணைஇயல் 36)

என்னும் நுற்பா ஆற்றுப்படையின் இலக்கணத்தைச் சுட்டுகின்றது. ஒரு புரவலனிடம் சென்று பெரும் பொருள் பரிசிலாகப் பெற்று வந்த பொறுநர், பாணர், விறலியர், கூத்தர், புலவர் ஆகியோருள் ஒருவர், பரிசில் பெறாதார் ஒருவருக்குத் தாம் பெற்ற பெருவளத்தைச் சுட்டிக்காட்டி, அதனை நல்கிய தலைவனிடம் செல்வதற்குரிய வழி துறைகளையும் எடுத்துச் சொல்லி அப்புரவலனிடம் செலுத்துவது ஆற்றுப்படை எனப்படும்.

பண்பாடு:

பண்பாடு என்பது இசைவான வாழ்க்கையைக் குறிப்பது நம்பிக்கைகள், சடங்குகள், தொழில், கலைகள், பழக்க வழக்கங்கள், உறவுமுறைகள் முதலான அனைத்தையும் உள்ளடக்கிய இணக்கமான வாழ்வே பண்பட்ட வாழ்வாகிறது. பாணர்களின் வாழ்வியல் கூறுகளை உள்ளடக்கிய ஆற்றுப்படை நூல்கள் அவர்களின் பண்பாட்டுச் சுவடுகனை வெளிப்படுத்தி உள்ளன.

பாணர்கள்:

சங்க காலத்தில் வள்ளல்களையும் அரசர்களையும் புகழ்ந்து பாடியவர்கள் புலவர்கள் என்றும் பாணர்கள் என்றும் இரு பிரிவினர் இருந்தனர். புலவர்கள் நிலைகுடிகளாக வாழ்ந்தவர்கள். அரசவையிலும் வீற்றிருந்தனர். பாணர்கள் அலைகுடிகளாக வாழ்ந்தவர்கள். பாடுவதுடன் ஆடல்கலையும் வெளிப்படுத்தினர். இவர்களை இரவலர் என்று இலக்கியம் சுட்டுகிறது. ஆற்றுப்படை நூல்களுள் இடம் பெற்றிருக்கும் பொருநர் போர்க்களத்தில் ஒருவரைப் போல் வேடமிட்டுப் பாடும் தன்மையினர். விழாக்களிலும் பாடுவர். பாலை யாழ் மீட்டுவதில் வல்லவராய் இருந்தனர். இச்செய்திகளைப் பொருநராற்றுபடை வெளிப்படுத்துகிறது. மதங் கொண்ட யானை முழங்குவது போல், மலையில் கேட்கும் ஓசைகளையெல்லாம் தொகுத்துக் கூறுவதால் மலைபடுகடாம் என்ற பெயரையும் பெற்ற கூத்தராற்றுப்படை கூத்துக் கலைஞர்களை ஆற்றுப்படுத்தும் நோக்கில் எழுதப் பெற்றது. சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை இரண்டும்; பாணர்களை ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. பாணர்கள் சிறுபாணர், பெரும்பாணர், பண்டைப்பாணர் எனப் பல வகைப்படுவர். அவர்களுள் சீறியாழை இசைத்துப் பாடியவர் சிறுபாணர் என அழைக்கப்பட்டனர் பேரியாழ் இசைக்கும் பாணர்கள் பெரும்பாணர் எனப்பட்டனர். அரசர்களையும் வள்ளல்களையும் நாடிச் சென்று அவர்களைப் பாடி இசைக்கருவிகளை இசைத்துப் புகழ்ந்து பாடியும் ஆடியும், பரிசில் பெற்று வரும் கலைஞர்களே பாணர்கள் யாழ் முதலிய இசைக்கருவிகளை இசைத்துப் பாடும் கலைஞன் (தமிழ்அகராதி, பக்கம்.706)

http://Creativecommons.org//license/by/4.0/.

பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ள நான்கு ஆற்றுப்படை நூல்களும் பாணன் சமுகத்தாரின் வாழ்வியலைக் கூறுபவை என்றாலும் இந்தக் கட்டுரையில் சிறுபாணாற்றுப்படை, பெருபாணாற்றுப்படை செய்திகள் மட்டுமே தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

பாணர்களின் தொழிலும் பொருளாதாரமும்:

தொழில் என்பது குறிப்பிட்ட வேலையைச் செய்யும் திறமை அல்லது குறிப்பிட்ட வேலையிலுள்ள நுணுக்கம் (தமிழ்அகாரதிபக்கம் - 503) எனலாம். பொருளாதாரம் என்பது வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட செயல் எனலாம். மனிதன் தன்னுடைய தேவைகளை நிறைவு செய்துக் கொள்ள தான் வாழ்கின்ற சூழ்நிலையைப் பயன்படுத்தும் முறையை அடிப்படையாகக் கொண்டதே பொருளாதாரம். அந்த வகையில் பாணர்கள் பல்வேறு தொழில்களைச் செய்து வந்தார்கள். நிலை குடிகளிடமும் கிழார்களிடமும், குறுநில மன்னர்களிடமும், வேந்தர்களிடமும் நெருங்கிய உறவு கொண்டிருந்தனர். தூது செல்லுதல், தலைவன், தலைவி, தோழி ஆகியோர்க்கு வாயில்களாகச் செயல்படுதல் என்பன போன்ற பல்வேறு பணிகள் மூலம் சங்க காலப் பாணர்கள் நிலை குழுக்களுடன் நெருக்கமாக உறவு கொண்டிருந்தனர்.

மீன் பிடிக்கும் தொழிலைச் செய்ததாக, ஐங்குறுநூறு 48-ஆம் பாடல் 'வலை வல் பாண்மகன்' என்று கூறுகிறது. இத்தகு பாணர்கள் சிறுபான்மையினராக இருந்தனர். பெருவாரியான பாணர்கள் கலைத் தொழிலையே செய்து வந்தனர். பாண் சமூகத்தினர் புரவலர்களால் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்பதால் தங்களுக்குள் பாடல், ஆடல், யாழ் வாசித்தலில் போட்டிகளை நடத்தித் தம் தகுதிகளை வளர்த்துக் கொண்டுள்ளனர் என்பதை புறப்பொருள் வென்பாமாலை (357, 359, 360) சுட்டுகின்றது இத்தகு கலைத்திறம் கொண்ட பாணர்கள் வள்ளல்களை நாடிச் சென்றனர் என்பதை,

“பொருநர்க்குஆயினும்,புலவர்க்குஆயினும்
அருமறைநாவின்அந்தணர்க்குஆயினும்
அடையாவாயில்” **(சிறுபாணற்றுப்படை - 203 - 206)**

என்ற வரிகள் நல்லியக்கோடனின் அடையா வாயிலைச் சுட்டுகிறது. அதேவேளையில் பாணர்கள் வள்ளல்களை நாடி கலை வெளிப்பாட்டுத் தொழிலைச் செய்தனர் என்பதும் பெறப்படுகிறது.

மழை இல்லாததால் வறுமையுற்ற பாணர்கள்,

“பழுமரம்தேடும்பறவைபோல
கல்லென்சுற்றமொடுகால்கிளர்ந்துதிரிதரும்
புல்லென்யாக்கைபுலவுவாய்ப்பாணர்”

(பெரும்பாணாற்றுப்படை 19-22)

பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவையைப் போலப் பசியால் அழுகின்ற உன்னைச் சார்ந்த உன் சுற்றத்துடன் ஓர் இடத்தில் இல்லாமல் எந்தப் பயனும் இன்றி ஓடித் திரிவதுடன் மெலிந்த தோற்றத்தையும் கற்ற கல்வியை வெறுத்துரைக்கும் வாயினையும் உடைய பாணர் என்ற செய்தி, பாணர்கள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதும்,

http://Creativecommons.org//license/by/4.0/.

வள்ளல்களை நாடிச் சென்று, யாழிசைத்து ஆடிப் பாடுவதையே தொழிலாகக் கொண்டிருந்தனர் என்பதை வெளிப்படுத்துகிறது.

பொருளாதாரம்:

கலைத் திறம் கொண்ட பாணர்கள் வள்ளல்களும் அரசர்களும் பரிசாகக் கொடுக்கும் பொருள்களையே தமது வாழ்க்கைக்கு ஆதாராமாகக் கொண்டிருந்தனர்.

"பிடிக்கணஞ்சிதனும்பெயல்மழைத்தடக்கைப்
பல்லியக்கோடியர்புரவலன்பேரிசை
நல்லியக்கோடனை" (சிறுபாணற்றுப்படை 124-126)

பெண் யானைகளைக் கொடையாக வழங்கும் மழை போன்ற கையினை உடையவனும், கூத்தர்களைப் போற்றிக் கொடை வழங்குவதில் வல்லவனும், பெரும்புகழை உடையவனுமாகிய நல்லியக்கோடன் என்னும் வள்ளனைப் பாடிக் கொண்டு அவ்வள்ளளிடம் சிறுபாணர்கள் செல்கின்றனர். அவர்களை வரவேற்று வறுமை மாறி வளமை பெறுக என நல்லியக்கோடன் பரிசுப் பொருள்களை வழங்குகின்றான்.

கயிறுகள் இற்றுக் கூரை சரிந்து விழுந்த பழமையான சுவரில் தோன்றிய கரையான்கள் அரித்த புழுதி நிரம்பிய இடத்தில் காளான்கள் தோன்றின. அத்தகைய வறுமையில், பசியால், குப்பையில் வளர்ந்த வேளைக் கீரையை உப்பில்லாமல் சமைத்துப் பிறர்காண நேர்ந்தால் அவர்கள் கூறும் சொற்களுக்கு நாணம் கொண்டு வீட்டு வாயிலை அடைத்து எங்கள் சுற்றமுடன் உண்டோம் இந்தப் பசித் துன்பம் அழியுமாறு வலிமையுடைய யானைகளையும் தேரினையும் நல்லியக்கோடன் எமக்களித்தான் (சிறுபாணாற்றுப்படை 139-143) என்னும் செய்தியால் வள்ளல்கள் அளித்த யானையும் தேரும் கொண்டு பாணர்களின் பொருளாதாரத்தை அறியலாம். மேலும், எருதுகளையும் குதிரைகளையும் அணிகலன்களையும் பரிசாகப் பெற்றதையும் அறியலாம்.

நீண்ட காலமாக நிலை பெற்றிருந்த பசியினால் துன்புற்ற எம்முடைய பெரிய சுற்றத்தினருடன் நாங்கள் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையாத அளவில்லாத செல்வத்தை தொண்டைமான் இளந்தினரயன் கொடுத்ததையும், குதிரைகளையும், யானைகளையும் வேண்டும் மட்டும் பெரும்பாணர்கள் பெற்று வந்ததையும்,

"பழம்பசிகூர்ந்தவெம்இரும்பேரொக்கடிலொடு
வழங்கத்தவாஅப்பெருவளனெய்தி
வாலுனைப்புரவியொடுவயக்களிறுமுகந்துகொண்டு
யாமவணின்றுவருதும்" (பெரும்பாணாற்றுப்படை 35-38)

என்னும் வரிகளால் அறியலாம்

எனவே, பாணர்கள் வள்ளல்களை நாடிச் சென்று யாழிசைத்து, ஆடி, பாடி, கலைத்தொழில் செய்து பெரும்பொருள் பெற்று வந்து தமது வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்திச் செய்து வாழ்ந்தார்கள் என்பதை அறியலாம்.

பாணர்களின் இல்வாழ்க்கை:

பாணன், இசைக் கருவிகளை இசைத்துப் பாடுபவன், அவன் மனைவியான விறலி, ஆடல் பாடல்களில் தேர்ந்தவள். அவன் சிறந்த அழகி "முல்லை சான்ற கற்பின்

http://Creativecommons.org//license/by/4.0/.

மெல்லியல்" (சிறுபாணாற்றுப்படை 30) அவள் தன் கணவனுடன் காடும் மலையும் கடந்து சென்று வள்ளல்களைக் கண்டு நடனம் ஆடினாள். பாணன் இசைக்கருவிகளை இசைத்துப் பாடினான். இருவரும் வள்ளல்கள் அளித்த பரிசில் கொண்டு வாழ்க்கை நடத்தினர். கணவனும் மனைவியும் ஒற்றுமையாய் இருந்து விழாக்களிலும் தம் கலைத்திறமைக் காட்டிப் பொருள் பெற்றனர். தமது வீடுகளில் பிள்ளைகளைப் பேய் முதலியவை பற்றாதிருக்க வேப்பிலையைக் கட்டி வைத்தனர் என்பது (பெருப்பாணாற்றுப்படை 59) பாணர்களின் நம்பிக்கையைச் சுட்டுகின்றது.

தாம் கற்றுக் கொண்டதைத் தாம் பெற்று வந்ததை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் அதுவே, சிறந்த பண்பாடு. இது சங்க காலத்தில் 'கோள்' எனப்பட்டது. அதாவது, கொள்ளுதல் (பகிர்ந்து கொள்ளுதல்) என்பதாகும். இப்பண்பை அடிப்படையாகக் கொண்ட பாணர்கள் "கோள்வல் பாண்மகன்" (பெரும்பாணாற்றுப்படை 284) எனப்பட்டனர்.

பாணர் கலைகள்:

கலை என்பது, உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் செயல்கள் அனைத்தும் கலைகளே, தனித்தனியான திறமைகளை நயத்துடன் வெளிப்படுத்தி நுகர்வோரை மகிழ்வித்தலே கலையின் நோக்கமாகும். புலன் விருந்தாகவும் பயன்பாட்டிற்காகவும் கலைகள் வளர்ந்துள்ளன. அந்தந்தக் காலத்து நாகரிகத்தையும் பண்பாட்டையும் பிரதிபலிப்பதாகவும் கலைகள் அமைகின்றன. அத்துடன் சமுதாய நியதிகளையும் அறங்களையும் உட்படுத்திக் காட்டும் தன்மையையும் கலைகள் பெற்றுள்ளன. பாணர்களில் பெரும்பான்மையினர் பாடுவதிலும் இசைக்கருவிகளை இசைப்பதிலும் ஆடுவதிலும் வல்லவர்கள். தடாரிப்பறை, முழவு ஆகியவற்றின் இசைக்கேற்ப ஆடுவதிலும் கதை தழுவிய நாடகம் ஆடுவதிலும் விறலியர் தேர்ந்த கலைஞர்களாக விளங்கினார்கள்.

"நாடகமகளிர்ஆடுகளத்துஎடுத்த
விசினீங்குஇன்னியங்கடுப்பப்கயிறுபிணித்து"
(பெரும்பாணற்றுப்படை 55-56)

என்னும் அடிகள் இன்னியம் எனும் இசைக் கருவி கொண்டு இசைத்த ஆடு மகளிரைச் சுட்டுகின்றன.துடி, கிணைப் பறை, பறை குழல் முழவு போன்ற இசைக்கருவிகளை இசைக்கவும் அறிந்திருந்தனர்.

உணவு:

ஒய்மா நாட்டுத் தலைவனான நல்லியக்கோடன் அரண்மனையில் பாணருக்கு. மயக்கத்தை உண்டாக்கும் தேறல் (கள்) தரப்பட்டது. வீமசேனன் வரைந்த சமையற் கலை நூலிற் கண்டபடி உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டுப் பொற்கலங்களில் படைக்கப்பட்டன. (சிறுபாணற்றுப்படை 237-244) தொண்டை நாட்டுத் தலைவனான இளந்திரையன் என்பவனது காஞ்சி மாநகரத்து அரண்மனையில் சமையல் வல்லோன் பல இறைச்சி வகைகளைத் தயாரித்தான்: செந்நெற் சோற்றறை வடித்தான் கண்ட சருக்கரையோடு அடிக்கல் (சருக்கரைபொங்கல்) ஆக்கினான். இங்கனம் வல்லோனால் ஆக்கப்பட்ட பல வகை உணவுப்

http://Creativecommons.org//license/by/4.0/.

பொருள்கள் பாணர் பிள்ளைகளுக்குச் சிறிய வெள்ளிக் கலங்களிலும், பெரியவர்களுக்குப் பெரிய வெள்ளிக்கலங்களிலும் படைக்கப்பட்டன. (பெரும்பாணற்றுப்படை 471-480)

உடை:

ஒய்மா நாட்டு நல்லியக்கோடன் பாணர்க்கு மூங்கிலின்; மெல்லிய பட்டையை உரித்தாற் போன்ற மாசில்லாத உடையை வழங்கினான்.

"மாசில்,காம்பு சொலித்தன்ன அறுவை" (சிறுபாணற்றுப்படை235-236)

தொண்டைமான் பாணர்க்குப் பாலாவியை ஒத்த நூலாற் செய்த கலிங்கத்தை(ஆடை) ஈந்தான்.

"ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம்" (பெரும்பாணற்றுப்படை 469)

அணிகள்:

இளந்திரையன் பாணனுக்குப் பொற்றாமரையும் விறலிக்குக் கூந்தல் அணியாகப் பொன்மாலையும் வழங்கினான்.

பாத்திரங்கள்:

புளியங்காய் நெல்லிக்காய் முதலிய ஊறுகாய்கள் வைக்கப்பட்ட மிடா எனப்பட்டது. சோறு சமைக்கும் பானை குழிசி (பெரும் 150) எனப் பெயர் பெற்றது. நெல், வரகு முதலிய கூலங்களை (தானியங்கள்) வைக்கக் குதிர்கள் இருந்தன (பெரும் 186)

விருந்தோம்பல்:

பாணர்களுக்கு அரசர்களின் உபசரிட்புடன் பொதுமக்களின் உபசரிப்பும் இருந்தது. ஓய்மா நாட்டு உழவர் தங்கை, பாணர் முதலியோரைத் தன் பிள்ளைகளைக் கொண்டு உறவு கூறி, அவர் போக்கைத் தடுத்து உபசரித்து உணவு படைத்தாள் (சிறு 190-195)

"செல்விருந்து ஓம்பிவரு விருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்த வர்க்கு" (குறள் 86)

என்னும்குறளின்செய்திக்கேற்பவள்ளல்கள்பாணர்கூத்தர்களின்வருகையைஎதிர்பார்த்துஉபசரித்தனர்.

முடிவுரை:

- பாணர்கள் இயல், இசை, நாடகமெனப் பல்துறை வல்லுநர்களாக இருந்தாலும் அவர்கள் புலமைக்கேற்ற பொருள் வளமில்லாமல் இருந்தார்கள். வறுமையில் வாடினார்கள்.
- பாணர்கள் தாங்கள் செல்லும் இடங்ககளுக்கெல்லாம் மண்டையை (உண்கலம்) உடன் கொண்டு செல்வார்கள்.
- பாரி வள்ளல் பாணர்களின் மண்டை நிறையக் கள் வழங்கி மகிழ்வித்தான் என்பதையும் பசியால் வாடிய பாணர்கள் மண்டை கொண்டு உணவு பெற்றுப் பசியாறினர் என்பதை,"பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்"(புறநானூறு 115: 2)

என்ற அடிகள் மூலம் அறியலாம்.

- பாணர்களின் எச்சமாக இன்றைக்கும் சில கலைஞர்கள் மாற்றுவடிவமாக வாழ்ந்து வருகின்றனர். செய்தி அறிவிப்போர், கழைக்கூத்தாடிகள், வருவதுரைக்கும் குடுகுடும்பைகாரன், பூம்பூம்மாட்டுக்காரன், நகைச்சுவைக்கலைஞர்கள்,

http://Creativecommons.org//license/by/4.0/.

வித்தைகாட்டுபவர், சாட்டையால் அடித்துக் கொள்வோர், இசைத்தொழில் செய்வோர், வெறியாட்டும் கோடங்கி, தெருகூத்துக் கலைஞர்கள் போன்றோர் இத்தன்மையினர் எனலாம்.

துணைநூற் பட்டியல் :

1. கதி. முருகேசன்உரை, பத்துப்பாட்டு, சாரதாபதிப்பகம், சென்னை - 14, ஆறாம்பதிப்பு 2017.
2. அ. தட்சிணாமூர்த்திஉரை, பெரும்பாணாற்றுப்படை, நியுசெஞ்சுரிபுக்ஹவுஸ் (பி) லிட், சென்னை - 98,முதற்பதிப்பு, 2004.
3. ஔவைதுரைசாமிப்பிள்ளைஉரை, புறநானூறு,சாரதாபதிப்பகம், சென்னை - 14,இரண்டாம்பதிப்பு 2017.
4. ச. மெய்யப்பன்பதிப்பு,திருக்குறள், மணிவாசகர்,பதிப்பகம், சென்னை - 106,மறுபதிப்பு, 1967.
5. இ. அண்ணாமலைகிரியாவின்தற்காலதமிழ்அகராதி, சென்னை - 41,முதல்பதிப்பு 1993.

http://Creativecommons.org//license/by/4.0/.

26. பெண்ணிய வாசிப்பில் மணிமேகலை

முனைவர் பெ.ஆனந்தி,
உதவிப்பேராசிரியர்,முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
ananthi-tam@sfrcollege.edu.in - 9659664915
DOI 10.5281/zenodo.15071967.

Abstract :

The heroine of the epic poem Manimekalai, Manimekalai, is created by Satan as a female saint, a woman who turned a prison into a place of charity, and a cure for hunger. However, Satan has identified Manimekalai as a 'woman' in many places in his writings. Feminist reading is the art of capturing such definitions of women that are evident in the works of male writers. The purpose of this article is to apply this method to Manimekalai, the heroine of the epic poem Manimekalai.

Key Words : Manimegalai - Feminism - Womens' Thing

மணிமேகலைக் காப்பியத்தின் நாயகி மணிமேகலை, ஒரு பெண் துறவியாகவும், சிறைச்சாலையை அறச்சாலை ஆக்கியவளாகவும், பசிப்பிணி தீர்த்தவளாகவும் சாத்தனாரால் படைக்கப்பட்டுள்ளாள். ஆயினும் சாத்தனார் அவரது எழுத்துக்களில் மணிமேகலையைப் பல இடங்களில் 'பெண்' என்ற தன்மை கொண்டவளாக அடையாளப்படுத்திப் படைத்துள்ளார். ஆண் எழுத்தாளர்களின் படைப்புகளில் தெரியலாகும் இது போன்ற பெண்ணிற்கான வரையறைகளைப் படம் பிடித்துக் காட்டுவது பெண்ணிய வாசிப்பு. இம்முறையை மணிமேகலைக் காப்பியத்தின் நாயகியான மணிகேலை மீது பொருத்திக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெண்ணிய வாசிப்பு முறை

பெண்ணியத் திறனாய்வு வகைகளுள் ஒன்று பெண்ணிய வாசிப்பு முறையாகும். ஆண்கள் படைத்த இலக்கியங்களைப் பெண்ணிய முறையில் வாசிப்பது பெண்ணிய வாசிப்பு முறைத் திறனாய்வாகும். இந்தப் பெண்ணிய வாசிப்புமுறை குறித்து எலைன் ஷோவால்டர் என்ற பெண்ணியவாதி கூறும் கருத்து இங்கு சிந்திக்கத்தக்கது. "இலக்கியத்தில் இடம்பெறும் பெண் பிம்பங்களையும் ஒரே மாதிரியான திரும்பத் திரும்ப வரும் பெண் மாதிரிகளையும் உணர்ந்து கொள்ளும் வாய்ப்பினைத் தருவதாகப் பெண்ணிய வாசிப்பு அமைகின்றது. **(It offers feminist reading of texts, which consider the images and stereo types of women in literature)"1** எனவே, பெண்களின் உணர்வினையும் மரபினையும் சித்திரிக்கும் ஆண் எழுத்துகளை அலசி ஆராய்வது பெண்ணிய வாசிப்புமுறை ஆகின்றது. பெண் மீதான ஆண்ள முத்தின் அடக்குமுறைகளையும், வன்முறைகளையும் படம்பிடித்துக் காட்டுவதே பெண்ணிய வாசிப்பு முறையாகும்.

இப்பெண்ணிய வாசிப்பு முறை குறித்து மு. பழனியப்பன் தரும், "ஆண்களால் படைக்கப் பெற்ற இலக்கியங்களில் இடம் பெறும் பெண்கள் உண்மையான பெண்களாக உண்மையான உணர்வுடையவர்களாக இருப்பதில்லை. கற்பனை கதாபாத்திரங்களாகவே

http://Creativecommons.org//license/by/4.0/.

ஆண்களால் பெண்கள் படைக்கப்பட்டு உள்ளனர் என்று பெண்ணியவாதிகள் முழங்குகின்றனர். இவ்வாறு கற்பனை கதாபாத்திரங்களாகவே படைக்கப்பெற்ற பெண்கள் எவ்வாறு பொய்மை உடையவர்கள் என ஆராய்வது 'பெண்ணிய வாசிப்புத் திறனாய்வு' எனப்படுகின்றது"2 என்ற விளக்கமும் கருதத்தக்கது.

எனவே, பல்வேறு காலங்களிலும் ஒரே மாதிரியாகப் படைக்கப்பட்டு வரும் பெண்ணின் இயல்புகளான கற்பு, அடக்கம், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்றவை குறித்து வினா எழுப்பித் தீர்வு காண இப்பெண்ணிய வாசிப்புமுறை பயன்படுகிறது.

பெண்ணிய வாசிப்பின் நோக்கம்

ஆண் எழுத்துகளைப் பெண்ணிய ரீதியில் வாசிக்கும் பெண்ணிய வாசிப்பு முறையானது சில நோக்கங்களைக் கொண்டது. "பெண் ஆணிலிருந்து வேறுபட்டவளாக இயற்கையால் படைக்கப்பெற்றுள்ளாள், அவளது உணர்வுகளும் தேவைகளும் தனித்த உடலியல் பாற்பட்டவையன. இவளுள் இயற்கையாக அமைந்துள்ள சுரப்பிகளின் சுரப்புகளும் உடலின் இயங்கு தன்மையும் இவளை ஆணிலிருந்து வேறுபடுத்துவனவாக உள்ளன. இதன் மூலம் இவளின் உடல் இயல்பை ஆண் அறிய முடியாதவனாக உள்ளான். (Women are differentiated from men as creatures of nature their strange behaviours is caused by gladular secertions and bodily processes unknown to men -Feminist criticism (Reading as Women)- KINGSLY AIMS, LUCKYJIM) என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஆண் படைப்புகளை ஆராய்ந்தால் ஆண் காட்டும் பெண்ணின் பிம்பம், உணர்ச்சிஆகியனபோலியானவைஎனமுடியலாம். அந்தக் கற்பனைத் தன்மையை வெளிக் கொணருவது பெண்ணிய வாசிப்பின் நோக்கமாகும்."3

மேலும், பெண்களின் உரிமையை உணர்வினை ஆண்களின் படைப்புகள் எங்ஙனம் இழிவுபடுத்தியுள்ளன என்பதை ஆராயும் பெண்ணிய வாசிப்புமுறையானது சில போக்குகளையும் அவசியங்களையும் கொண்டதாகும். "இத்திறனாய்வின் வழியாக "பெண் ஓர் உயிரினம் (அ) மனித உயிரி" என்ற அளவில் கூட இலக்கியங்களில் படைக்கப் பெறவில்லை அதற்கு மாறாக "பெண் ஒரு சடப் பொருள்"(Women as objects not as subjects) என்பதாகவே படைக்கப் பெற்றுள்ளாள் என்ற முடிவிற்குப் பெண்ணியவாதிகள் வருகின்றனர்"4 எனவே பெண்ணின் அகவய உணர்வு மீறல்கள், புறவய உணர்வு மீறல்கள் போன்றவற்றை இப்பெண்ணிய வாசிப்புமுறைத் திறனாய்வின் வழி நம்மால் அறிய முடிகிறது.

பரத்தமை வலியுறுத்தல்

ஒரு படைப்பாளி ஆணாக இருக்கும் போது அவனது படைப்புகளில் அவனை அறியாமலேயே ஆணாதிக்கம் மேலோங்கி, பெண்ணடிமை வலியுறுத்தப்படுகிறது. எனவே, பெண்ணிய வாசிப்புமுறையில் ஆண் எழுத்தில் பெண் எப்படிB படைக்கப்பட்டுள்ளாள் என்று கவனிக்க வேண்டியது அவசியமாகிறது. மணிமேகலை பரத்தையர் குலத்தில் பிறந்தவள். மாதவியின் மகள். ஆயினும் மாதவியால்,

"காவலன்பேரூர்கனையெரியூட்டிய
மாபெரும்பத்தினிமகள்மணிமேகலை"(மணி.2:54-55)

http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற வகையில் கண்ணகியின் மகளாகவே அறிமுகப்படுத்தப்படுகிறாள். மணிமேகலையைப் பரத்தைக் குலத்தை விடுத்து துறவியாக உயர்த்த வேண்டும் எனச் சாத்தனார் விரும்பிய போதிலும் அவரை அறியாமலேயே வயந்தமாலை, சித்திராபதி, உதயகுமரன், ஊர்மக்கள் எனப் பலர் வாயிலாகவும் பல இடங்களில் பரத்தமையை வலியுறுத்தியுள்ளார்.

"பொதுமகளிர், விலைமகளிர், வரைவில் மகளிர், பதியிலார், வேசியர் என்று பல பெயராலும் அழைக்கப்படும் பரத்தையர்கள் பிற்காலத்தில் தமது குலத்திற்குரிய தொழிலைப் பின்பற்ற விரும்பாத போதும் அந்தக் குலத்திலிருந்து வெளியேறச் சமுதாயம் இடம் கொடுக்கவில்லை."5 என்ற கருத்து இங்கு சிந்திக்கத்தக்கது. எனவே சாத்தனாரால் மணிமேகலைக்குப் பரத்தமை பல இடங்களில் வலியுறுத்தப்படுகிறது.

வயந்தமாலை வழி பரத்தமை வற்புறுத்துதல்

மணிமேகலையும் மாதவியும் இந்திர விழாவிற்கு வராதது கண்டு மாதவியின் தாய் சித்திராபதி, வயந்தமாலையைத் தூது அனுப்புகிறாள். வயந்தமாலை மாதவியின் தோழியாக இருப்பினும் அவளது நிலையைப் புரிந்து கொள்ளாமல்,

"பொன்னேர்அனையாய்ப்புகுந்ததுகேளாய்
உன்னோடுஇவ்வூர்உற்றதுஒன்றுஉண்டுகொல்
வேத்தியல்பொதுவியல்என்றிருதிறத்து

நற்றவம்புரிந்ததுநாணுடைத்துஎன்றே" (மணி.2:16-33)

என்ற வகையில் மணிமேகலைக்கும் மாதவிக்கும் பரத்தமைத் தொழிலையே வற்புறுத்துகிறாள். வயந்தமாலை, மாதவியைப் பார்த்து நீயும் உன் மகளும் துறவு பூண்டு இருப்பது நாணத்திற்குரியது என்று கூறும் இக்கூற்றின் வழி நாம் சாத்தனாரின் ஆண் உணர்வை அறிய முடிகின்றது. அதாவது, சாத்தனார், ஆணாதிக்கச் சமூகத்தின் வழி நின்று, பெண்கள் துறவு பூணுதல் நாணுதற்குரியது என்ற கருத்தினையும் பரத்தையர்கள் இருத்தலே ஆடவருக்கு நலம் பயக்கும் என்பன போன்ற கருத்துகளையும் தம் எழுத்துகளில் பதிவு செய்துள்ளார். எனவே, பெண்ணின் வழியே பெண்ணிற்குப் பரத்தமையை வலியுறுத்திய சாத்தனாரின் சிந்தனை பெண்ணிய வாசிப்பில் சிந்திக்கத்தக்கதாகும்.

ஊரார் வழி பரத்தமை வற்புறுத்துதல்

ஊரார் எனப் புலப்படுபவர்களில் பெரும்பான்மையினர் ஆண்களே. ஊரில் உள்ள நபர்களாலும் மணிமேகலைக்குப் பரத்தமை வலியுறுத்தப்பட்டுள்ளது. மணிமேகலை மலர் வனம் செல்கையில் அவள் அழகைக் கண்டோர்,

"அணியமைதோற்றத்துஅருந்தவப்படுத்திய
தாயோகொடியள்தகவிலள்ஈங்கிவள்" (மணி3:149-150)

எனக் கூறுகின்றனர். அதாவது இவ்வளவு அழகுவாய்ந்த மணிமேகலையைத் தவ நெறிப்படுத்திய அவளது தாய் கொடுமையானவள் என்கின்றனர். இக்கருத்து, "ஆணாதிக்கச் சமூக அமைப்பினால் பெண்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை இழந்து தனித்துவமிக்கத்

http://Creativecommons.org//license/by/4.0/.

தன்மைகளை அடையாமல் சிதைந்து விடுகின்றனர்."6 என்ற சத்தியமூர்த்தியின் கருத்தோடு பொருத்திப் பார்க்கத்தக்கது. சாத்தனார் இவ்விடத்தல் தானே அந்த ஆண்கள் நிறைந்த ஊரார் கூட்டத்திற்குத் தலைமை ஏற்று மணிமேகலையைத் துறவு பூணச் செய்த தாயைக் கொடுமையானவள் என்கிறார். ஏனெனில் பரத்தையர் பெண் துறவியாதலை எந்த ஆணாலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வகையிலேயே சாத்தனாரும் ஊரார் வழி பரத்தமையை வலியுறுத்துகிறார்.

சித்திராபதி வழி பரத்தமை வற்புறுத்தல்

மாதவியின் தாயாகிய சித்திராபதி வழியேயும் மணிமேகலைக்குப் பரத்தமை வற்புறுத்தப்படுகிறது. இன்றைய சமுதாயத்தில் "பத்தினியோ, பரத்தையோ, விபசாரத் தொழில் தவிர மற்ற விஷயங்களில் சட்டத்தின் முன் இருவரும் சமம் தான்"7 என்ற கருத்துப்படியே பெண்கள் மதிக்கப்பட்டு வருகின்றனர். ஆனால், சாத்தனார், சித்திராபதி வழியாகப் பரத்தையர் வேறு, பத்தினிகள் வேறு, இருவர் உலகமும் தனித்தனி என்கிறார்.

"பத்தினிப்பெண்டிர்அல்லோம்பலர்தம்
கைத்தூண்வாழ்க்கைகடவியமன்றே
பாண்மகன்பட்டுழிப்படூஉம்பான்மையில்
யாழினும்போலும்இயல்பினம்"(மணி18:15-18)

என்ற இடத்தில் சித்திராபதி, நாம் பத்தினிப் பெண்கள் இல்லை, பாணனோடு சாகாத அவனது யாழ் போன்றவர்கள். எனவே, நமக்குப் பரத்தமைத் தொழிலே சிறந்ததாகும் என்று கூறுகிறாள். இதன் வழி சாத்தனார்,

- பத்தினிகள் - இல்லத்தைஅலங்கரிக்கவும்
- பரத்தையர்கள் - தம்உடலின்பத்தைதீர்க்கவும்

என இருவகை பெண்டிரும் ஆண் சமூகத்திற்குத் தேவைப்படுவதை மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே, சித்திராபதி வாயிலாகவும் மணிமேகலைக்குப் பரத்தமை வற்புறுத்தப்படுகிறது.

உதயகுமரன் வழி பரத்தமை வற்புறுத்துதல்

உதயகுமரன் அரசிளங்குமரன். தன் மனத்துள் பதிந்த ஓவியப் பாவை போன்ற மணிமேகலையை அடையக் கருதி அவள் இருக்குமிடம் அறிந்து விரைகிறான். அங்கு மணிமேகலை, துறவுகோலத்தில் இருக்க அவளைக் கண்டு,

"நல்லாய் என்கொல் நற்றவம் புரிந்தது
சொல்லாய் என்றுதுணிந்தவுடன் கேட்ப"(மணி18:126-127)

என்று கேட்கிறான். அதாவது, பரத்தையர் குலத்தைச் சேர்ந்த உனக்குத் தவநெறி வாழ்வு பற்றிய எண்ணம் ஏன் பிறந்தது? என வெளிப்படையாகக் கேட்கிறான். மேலும்,

"கற்புத்தான்இலள்நற்றவஉணர்விலள்
வருணக்காப்பிலள்பொருள்விலையாட்டிஎன்று"(மணி5:86-87)

http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற வகையில் மணிமேகலையைப் பொருள் விலையாட்டி என்று வருணிக்கிறான். "மணிமேகலை பொருள் விலையாட்டியாக இருந்தமைக்கு எங்கும் சான்றில்லை ஆனால் அவள் அந்தக் குலத்தில் பிறந்துவிட்டமையால் அந்தத் தொழிலில் ஈடுபடாத போதிலும் அவள் பொருள்விலையாட்டி என ஏளனப் படுத்தப்படுகிறாள்."8 சாத்தனார் தான் ஒரு ஆண் எனும் உணர்வோடு இந்த இடத்தில் மணிமேகலையை உதயகுமரன் வழிக் குறிப்பிடுகிறார். 'துறவு வாழ்வு மேற்கொள்ள விரும்பியவளே! நீ பொருளுக்காக விலைபோகும் பெண் தான்' எனத் தனது குரலினை உதயகுமரன் வழிப் பதிவு செய்கிறார்.

முற்பிறவிக் கடமைகளைச் சுட்டுதல்

மணிமேகலை முற்பிறவியில் இலக்குமியாகப் பிறந்தவள். அவளது முற்பிறவி கணவன் இராகுலன். இந்த இராகுலனே இந்தப் பிறவியில் உதயகுமரனாகப் பிறவி எடுத்திருக்கிறான் என்பதை,

"உவமனமருங்கில்உன்பாற்தோன்றிய
உதயகுமரன்அவன்உன்இராகுலன்"(மணி10: 42-44)

என்று மணிமேகலா தெய்வம் கூறியதிலிருந்து மணிமேகலை அறிந்து கொள்கிறாள். தன்னுடைய முற்பிறவி கணவனுக்கும் அவனது இப்பிறவி தாய்க்கும் மணிமேகலை தன்னை அறியாமலேயே பல பணிவிடைகளைச் செய்கிறாள், செய்பவளாக சாத்தனாரால் படைக்கப்பட்டுள்ளாள். ஏனெனில் பெண்கள் யாவரும் எத்தனை பிறவி எடுப்பினும் கணவனுக்கும் அவனைச் சார்ந்தோருக்கும் அடிமைப்பட்டவர்களே என்பது பெரும்பான்மையான ஆண்கள் தம் எண்ணம். இதன்படிச் சாத்தனாரும் தன் உணர்வினை வெளிப்படுத்துகிறார்.

முற்பிறவி கணவனை வணங்குதல்

மணிமேகலை தன்னுடைய முற்பிறவி கணவனாகிய உதயகுமரனை இப்பிறவியிலும் வணங்குபவளாகக் காட்டப்பட்டு உள்ளாள். அதாவது தன்னையும் அறியமல் ஒரு பெண்ணின் இயற்கைக் குணமாக ஆண் வர்க்கத்தினரால் வரையறுக்கப்பட்ட 'கணவனைத் தொழல்' என்ற பண்பை மணிமேகலை தன் முற்பிறவிக் கணவனுக்குச் செய்கிறாள்.

"என்னமர் காதலன் இராகுலன் ஈங்கிவன்
தன்னடி தொழுதலும் தகவென வணங்கி"(மணி18:128-129)
"தொன்று காதலன் சொல்லெதிர் மறுத்தல்
நன்றியன் றெனநடுங்கினள் மயங்கி"(மணி18:132-133)

என்ற வகையில் மணிமேகலையின் வழி பெண்ணிற்கான இயல்புகள் வகுக்கப்பட்டுள்ளன. இவ்விடத்தில் சாத்தனார், பெண் என்பவள் இப்பிறவி மட்டுமல்லாமல் ஏழேழு பிறவிக்கும் கணவனை வணங்கி, அவனது சொல்லை மறுத்துப் பேசாது வாழக் கடமைப்பட்டவளாகக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. இது "ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண் என்பவளை ஆணுக்கு அடுத்த இடத்திலேயே வைத்துக் கருதும் நிலை உள்ளது."9 என்ற கருத்துடன் ஒப்புமை

http://Creativecommons.org//license/by/4.0/.

உடையதாகும். எனவே, ஆண்வர்க்கம் பெண்ணை, 'மனைவி' என்ற பதவி தந்து, ஏழு பிறவிக்கும் அவளை தன் கட்டுப்பாட்டின்படி நடத்தி வர வேண்டுமெனத் துணிந்த திறம் இதன் வழி பெறப்படுகிறது.

இராசமாதேவியை வணங்குதல்

மணிமேகலை தன் முற்பிறவிக் கணவனாகிய உதயகுமரனை மட்டுமல்லாது அவனை இப்பிறவியில் பெற்றெடுத்த இராசமாதேவியையும் வணங்குகிறாள். இதனை,

"ஆங்கவள்தொழுதலும்ஆயிழைபொறாஅள்
தான்தொழுதேத்தித்தகுதிசெய்திலை
காதலன்பயந்தோய்" (மணி23:144-146)

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன. அதன்வழி, பெண் என்பவள் மரபு சார்ந்தே அடிமையாக்கப்பட்ட விதம் புலப்படுகிறது. மணிமேகலையினது இலக்கு வேறாக இருப்பினும் முற்பிறவிக் கணவன், அவனை இப்பிறவியில் பெற்றெடுத்தவள் என அனைவரையும் வணங்குகிறாள் என்ற கருத்து சாத்தனாரின் ஆண் என்ற உணர்வினை, பெண்ணடிமைத்தனத்தை விளக்குகின்றன. மணிமேகலையைத் துறவியாக உயர்த்திக் காட்ட ஆசைப்பட்ட சாத்தனார் இதுபோன்ற பல இடங்களில் தன்னை அறியாது தன் ஆண்மன உணர்வை வெளிப்படுத்தியுள்ளார்.

சமயவாதிகளால் ஒதுக்கப்படல்

சமயங்கள் யாவும் பொதுவாகப் பெண்ணைப் புறக்கணிக்கின்றன. மணிமேகலை பௌத்தத் துறவியாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பின்பு, பல சமய அறங்களைத் தெரிந்து கொள்ளத் துணிகிறாள். அப்போது,

"இளையள்வளையோள்என்றுஉனக்குயாவரும்
விளைபொருள்உரையார்வேற்றுருக்கொள்கென"(மணி26: 68-69)

என்ற வகையில் கண்ணகி தெய்வம் கூறியது. இதிலிருந்து பெண் என்ற காரணத்தால் சமயவாதிகள் மணிமேகலைக்கு விளை பொருளாகிய சமயத் திறத்தைக் கூற மறுப்பர் என்ற கருத்துப் பெறப்படுகிறது. "மதம் சார்ந்த மரபுகள் அனைத்துமே பெண்ணடிமைத்தனத்தை நிலை நாட்டுகின்றன."10 என்ற கருத்து மணிமேகலைக் காப்பியத்தின் வழி உண்மையாகிறது. சமய உலகில் ஆண்களின் ஆட்சியே வேரூன்றிக் கிடந்ததை இந்தக் கருத்து மெய்ப்பிக்கின்றது. மேலும்,

"பல்வேறுசமயப்படிற்றுரைஎல்லாம்
அல்லியங்கோதைகேட்குறும்அந்நாள்
இளையள்வளையோள்என்றுஉனக்குயாவரும்
விளைபொருள்உரையார்வேற்றுருஎய்தவும்" (மணி10:77-80)

என்ற இடத்து மணிமேகலா தெய்வம் கூறிய கூற்றிலிருந்தும், "மதம் சார்ந்த சமுதாயமும் சட்டங்களும் பெண் விடுதலைக்கு எதிரி என்பது உலகளாவிய அனுபவம்."11 என்ற கருத்தும் பெறப்படுகிறது. எனவே, பெண்களைச் சமயவாதிகள் ஒதுக்கி இருந்த நிலையை

http://Creativecommons.org//license/by/4.0/.

மணிமேகலை வாயிலாக அறிய முடிகிறது. சமய உலகில் ஆண்களே வேரூன்றி இருந்த நிலையையும் நாம் அறியமுடிகிறது.

மறைக்கப்பட்ட காதல் உணர்வுகள்

'மணிமேகலைத் துறவு' எனப் பெயரிடப்பட்ட ஒரு காப்பியம் மணிமேகலை என்ற பெண்ணின் துறவு வாழ்வை மட்டும் குறித்ததல்ல. மாறாக, மணிமேகலையின் காதல் உணர்வுகளை மறைத்ததுமாகும். மணிமேகலை என்பவள் ஒரு துறவியாக இருந்த போதிலும் அவளது இயல்புகள் அனைத்தும் சாத்தனாரால் ஒரு கட்டுக்குள் வைக்கப்பட்டு இருந்தன. அதாவது துறவியாக இருந்தாலும் ஒரு பெண் ஆணின் மீது காதல் கொள்ள வேண்டும், ஆணின்மீது தான் கொண்ட காதலையும், காதல் உணர்வுகளையும் அவள் வெளிப்படையாகச் சொல்லக் கூடாது என்பன போன்ற பல கட்டுப்பாடுகள் சாத்தனாரின் வழிவகுக்கப்பட்டன என்பது இதன்வழி தெரியலாகிறது.

மணிமேகலை தானே கூறும் காதலுணர்வுகள்

துறவியாக நம்மைப் பிறருக்கு அடையாளம் காட்டியுள்ளோம் என்று நினையாது மணிமேகலை பெண்ணின் இயற்கை உணர்வாகிய காதல் உணர்வைத் தன்னை அறியாது வெளிப்படுத்துகிறாள்.

"புதுவோன்பின்றைப்போனதுஎன்னெஞ்சம்
இதுவோஅன்னாய்காமத்துஇயற்கை"(மணி5:89-90)

என்ற விதத்தில் மணிமேகலை முதன்முறையாக உதயகுமரனைக் காணும் போது காதல் கொள்கிறாள். ஆனால் அவளது காதலுணர்வு தவறென உணர்ந்து அடுத்த நொடியிலேயே,

"இதுவே யாயிற் கெடுக தன் திறமென"(மணி5:91)

என்று கூறுகிறாள். ஒரு பெண், துறவு வாழ்வு பூண்டமையால் தன் இளம் வயதில் தோன்றும் காதல் உணர்வுகளையும் மறைக்க வேண்டியக் கட்டாயத்தைச் சாத்தனார் வலியுறுத்தியுள்ளதை அறிய முடிகின்றது. இவ்விடத்து "பெண்கள் தங்கள் உணர்ச்சிப் பெருக்குகளை அப்படியே வெளிப்படுத்தலாகாது"12 என் றஅறிஞர் பஞ்சாங்கத்தின் கருத்தும் கவனிக்கத்தக்கது. ஒரு பெண் தன் மனஉணர்வுகள், உணர்ச்சிகளை அப்படியே வெளிப்படுத்திக் கூறக் கூடாது என ஆண் இனத்தினர் விதித்தக் கட்டளைகளையே சாத்தனார் மணிமேகலையின் வழிப் புலப்படுத்தியுள்ளார்.

மணிமேகலா தெய்வம் கூறும் மணிமேகலையின் காதல் உணர்வுகள்

மணிமேகலை இயல்பான பெண். அவளை என்ன தான் துறவியாகச் சமுதாயம் அடையாளம் கண்டாலும் அவள் ஒரு பெண் மட்டுமே. இந்தப் பெண்ணிடத்துப் பிறந்த காதலுணர்வு குறித்து மணிமேகலா தெய்வம்,

"உவவனமருங்கில்உன்பாற்தோன்றிய
உதயகுமரன்அவன்உன்இராகுலன்
ஆங்கவன்அன்றியும்அவன்பாலுள்ளம்
நீங்காத்தன்மைநினக்கும்உண்டாகலின்" (மணி10:42-45)

http://Creativecommons.org//license/by/4.0/.

என்று குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும். "பெண் அன்பு காட்ட வேண்டியவள், அன்பை மொத்தக் குத்தகை எடுத்தவள் என்று காலம்காலமாய் மூளைச்சலவை செய்யப்பட்டே பெண்ணின் தனித்துவம் மறுக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டாள்."13 என்ற மைதிலி சிவராமனின் கருத்து இங்கு மணிமேகலைக்கு மிகச் சரியாகப் பொருந்தி வந்துள்ளது. தன்னுடைய முற்பிறவி கணவன் என்பதாலேயே இப்பிறவியிலும் அவன்பால் உள்ளம் சென்றது என வலிந்து பொருள் கொண்டு மணிமேகலை தன் காதலை மறைக்க, மறக்க மணிமேகலாத் தெய்வம் வழி செய்கிறது. இந்த இடத்தில் சாத்தனார் மணிமேகலாத் தெய்வத்தின் வழி பெண் தனக்கென விதிக்கப்பட்ட வாழ்விற்குள் அது துறவோ, கைம்மையோ, இல்லறமோ அதற்குள்ளேயே வாழ வேண்டுமெனக் கட்டளை பிறப்பிப்பது தெரியவருகிறது.

மணிமேகலைப் புலம்பல் வாயிலாகத் காதலுணர்வுகள்

மணிமேகலை தன்னுடைய காதலுணர்வினை உதயகுமரனின் இறப்பின் போது புலம்பலாக வெளிப்படுத்துகிறாள். அதாவது தன்னுடைய அன்புக் காதலன் உதயகுமரன், காஞ்சனனின் வாளால் வெட்டுண்டு இறந்தபோது,

"உவவனமருங்கில்நின்பாலுள்ளம்
தவிர்விலேன்ஆதலின்தலைமகள்தோன்றி

விழுமக்கிளவியின்வெய்துயிர்த்துப்புலம்பி" (மணி21:13-25)

என்று புலம்பி அழுகிறாள். இந்தக் கூற்றிலிருந்து மணிமேகலை முற்பிறவிக் கணவனாகிய இராகுலன் மீது இப்பிறவியிலும் காதல் கொண்டிருந்தமையையும் அந்தக் காதல் உணர்வை அவள் மறைக்க முயல்வதையும் அறியலாம். எனவே, பெண்ணானவள் எந்த நிலையிலும் தன் காதலுணர்வை வெளிப்படுத்தக் கூடாது என்ற ஆண்இனத்தின் கட்டுப்பாட்டினைச் சாத்தனார் இவ்விடத்தில் வெளிப்படுத்துகிறார். அவள் தம் காதல் உணர்வையும் அவனது இறப்பிலேயே புலப்படுத்திட நினைத்த சாத்தனாரின் உணர்வு சிந்திக்கத்தக்கது.

துறவிக்கான வருணனைகள்

மணிமேகலை துறவியாகத் தன்னைக் கருதியவள். தன்னை அறியாமலேயே வெளிப்பட்ட காதல் உணர்வுகளையும் மறைக்க முயன்றவள். எனினும் மணிமேகலையை இச்சமூகம் துறவியாக ஏற்கவில்லை. அவளைப் பரத்தை குலப் பெண்ணாக, ஒரு போகப் பொருளாக மட்டுமே வருணித்துள்ளது. அதாவது மணிமேகலை மலர்வனம் செல்கையில் அவளைக் கண்டு,

"நல்லிளவன்னம்நாணாதாங்குள
வல்லுறகொல்லோமடந்தைதன்னடை
மாமயிலாங்குளவந்துமுன்நிற்பன
சாயல்கற்பனகொல்லோதையல்தன்னுடன்
பைங்கிளிதாமுளபாவைதன்கிளவிக்

http://Creativecommons.org//license/by/4.0/.

கெஞ்சுலகொல்லோஇசையுநவல்ல
என்றிவைசொல்லியாவரும்ஸ.." (மணி3:152-158)

என ஊரார் யாவரும் வருணிக்கின்றனர். மணிமேகலைத் துறவியாக இருக்கும் போதிலும் ஆணாதிக்கச் சமுதாயம் அவளை வெறும் போகப் பொருளாக மட்டுமே கருதிய நிலை இதன்வழிப் பெறப்படுகிறது. மேலும்,

"வளரிளவனமுலைமடந்தைமெல்லியல்
தளரிடையறியுந்தன்மையள்கொல்லோ
விளையாமழலைவிளைந்துமெல்லியல்
முளையெயிறரும்பிமுத்துநிரைத்தனகொல்
செங்கயல்நெடுங்கண்செவிமருங்கோடி
வெங்கணைநெடுவேள்வியப்புரைக்குங்கொல்"(மணி4:97-102)

என்ற வகையில் உதயகுமரன் கூறும் வருணனைகள் அனைத்தும் பெண், ஆணின் இன்ப உணர்வைத் தீர்க்க மட்டுமே பயன்படுபவளாகப் பார்க்கப்பட்டு வந்த நிலையைப் புலப்படுத்துகிறது. பெண் என்பவள் ஆணின் கண்ணிற்கு அழகாகத் தெரிய வேண்டும். அவள் அழகு மட்டுமே ஆணால் ரசிக்கப்படுவது என்பதும் இதன்வழி அறியமுடிகிறது. இங்கு, "மணிமேகலை வாயிலாகப் பௌத்த அறம் வெளிப்படுத்தப்பட்டாலும் பிக்குணிக்குரிய கடமைகள் அனைத்தையும் அவள் கடைபிடித்து வாழ்ந்தாள் என்பதற்குரிய சான்றுகள் தெளிவாகக் கிடைக்கவில்லை."14 என்ற கருத்தும் கவனிக்கத்தக்கது. எனவே, ஒரு பெண் துறவியாக இருந்த போதிலும் அவளது அழகு ஆண்வர்க்கத்தால் வருணிக்கப்பட்டதை நாம் அறிய முடிகின்றது.

தொகுப்புரை

மணிமேகலைக் காப்பியத்தின் நாயகியான மணிமேகலையைப் பெண்ணிய வாசிப்பின் அடிப்படையில் நாம் நோக்கும் போது, பரத்தையர் குலத்தில் பிறந்தவர்கள் தாங்கள் விரும்பிய போதிலும் தம் தொழிலை விட்டு வர முடியாத நிலையையும் பரத்தமை ஒழுக்கம் சமூகத்தால் வலியுறுத்தப்பட்ட நிலையையும் அறிய முடிகின்றது. பெண் என்பவள் இப்பிறவிக்கும் மட்டுமல்லாமல் ஏழேழு பிறவிக்கும் கணவனுக்கும் அவன் சார்ந்த உறவுகளுக்கும் அடிமையே என்ற கருத்துப் பெறப்படுகிறது. சமயங்கள் யாவும் அன்பையே வலியுறுத்திய போதிலும் அங்கு பெண்ணிற்கு இடமில்லை என்ற நிலையை அறிய முடிகின்றது. பெண் தன்னுடைய காதலுணர்வினை வெளிப்படுத்தக் கூடாது. அவள் உணர்வுகள் யாவும் கட்டுக்குள்ளே இருக்க வேண்டும் என்ற நிலையையும் அறிய முடிகின்றது. துறவு வாழ்விற்குள் நுழைந்த பெண்ணாயினும் அவளது அழகை வருணிக்கும் ஆண்வர்க்கத்தின் இயல்பினை அறிந்து கொள்ள முடிகிறது. பெண்ணின் உயர்வினைப் போற்ற வேண்டும் என எண்ணி எழுதும் ஆண் படைப்பாளர்கள் கூட தங்களை அறியாமலேயே ஆண் ஆதிக்க உணர்வைத் தங்கள் படைப்புகளில் வெளிப்படுத்துகின்றனர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

ஆரம்பகாலம் தொட்டு இன்று வரையிலும் ஆண் படைப்பில் பெண், மிகப் பாவப்பட்டவளாகவே படைக்கப்பட்டுள்ளாள்.

சான்றெண் விளக்கம்

1) மு.பழனியப்பன், பெண்ணியவாசிப்பு,ப-25
2) மு.பழனியப்பன், பெண்ணியவாசிப்பு,பக்-26,27
3) மு.பழனியப்பன், பெண்ணியவாசிப்பு,ப-7
4) மு.பழனியப்பன், பெண்ணியவாசிப்பு,ப-49
5) ர.விஜயலட்சுமி,தமிழகமகளிர்,ப.181
6) ஜெ.சியாமளா,பெண்கட்டுடைப்பும்கட்டமைப்பும்,ப.47
7) மைதிலிசிவராமன்,பெண்ணுரிமைசிலபார்வைகள்,ப.11
8) ர.விஜயலட்சுமி, தமிழகமகளிர்,ப.183
9) ஜெ.சியாமளா, பெண்கட்டுடைப்பும்கட்டமைப்பும்,ப.97
10) மைதிலிசிவராமன், பெண்ணுரிமைசிலபார்வைகள்,ப.29
11) மைதிலிசிவராமன், பெண்ணுரிமைசிலபார்வைகள்,ப.31
12) க.பஞ்சாங்கம்,பெண்ணெனும்படைப்பு,ப.119
13) மைதிலிசிவராமன், பெண்ணுரிமைசிலபார்வைகள்,ப.64
14) ர.விஜயலட்சுமி, தமிழகமகளிர்,ப.216

http://Creativecommons.org//license/by/4.0/.

27. பண்டைய மகளிர் தொழில்கள்

முனைவர் ச.தனலெட்சுமி
உதவிப்பேராசிரியர் (ஆய்வுநெறியாளர்)
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி
DOI 10.5281/zenodo.15072279.

Abstract :

The Sangam literature shows that women were held in high esteem during the Sangam period. The references in the Sangam hymns also provide insight into the status of women. The literature shows that women were held in a respectable position in both external and internal life. The purpose of this research article is to explain the occupations performed by women during the Sangam period.

Key Words : Sangam Literature - Occupations - External Life.

சங்ககாலத்தில் மகளிர்க்குச் சங்க இலக்கியங்கள் உயர்ந்தமதிப்பு இருந்ததுஎன்பதனைச் சங்கஇலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. சங்கஅகப் பாடல்களிலும் இடம்பெறும்குறிப்புக்களால் மகளிர்நிலை பற்றி அறிய முடிகின்றது. புற வாழ்க்கையிலும், அக வாழ்க்கையிலும் மகளிர்நிலை போற்றத் தகுந்த நிலையில் இருந்ததனை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. சங்ககால மகளிர் செய்து வந்த தொழில்கள் குறித்து விளக்குவதே இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

பண்டைச் சமூகத்தில் மகளிர்நிலை

சமூக மதிப்பீட்டில் ஆணுக்கு அடுத்த நிலையில் தான் பெண் உள்ளாள். பெற்றோர்க்கு இன்மை உலகப் புகழும் மறுமைஉலக இன்பமும் குறைவின்றித் தருவது ஆண்மகனே, (அகம் 66:1-5) ஆவான், தந்தையின் பெயரை மகனுக்குச் சூட்டுதல் (கலி 81:35) காணப்படுகின்றது. அன்றி தாயின் பெயரை மகனுக்கோ அல்லது மகளுக்கோ அளித்தல் இல்லை. இற்செறிப்பு, உடன்போக்கு, அம்பல், அலர், வெறியாடல், கைம்மை,நோன்பு, உடன்கட்டை ஏறுதல் முதலான பெண்ணுக்குரிய துன்பம் ஆணுக்கு இல்லை. தன்னை விரும்பாத பெண்ணை வலிந்து பற்றிக் கொள்ளலாம். (கலி 62:14-15) மடலேறியும் பெறலாம். (கலி.138:8-13,குறுந் 173),பெண் ஆணின் உடைமையாக உணர்த்தப்படும் ஏறு தழுவுதல், இரவலர்க்குப் பரிசில் அளிக்கும் உரிமை, தென்புல வாழ்நராகிய முன்னோர்க்குச் செய்யும் சடங்குகள் ஆணுக்கு மட்டுமே உரித்தாதல (புறம்9:2-5) பரத்தமையொழுக்கில் பெண்ணை மட்டும் குற்றவாளியாக்குதல் (மது 570-574) என்பன போன்றவை ஆண், பெண் சமம் இன்மையையும் ஆணாதிக்கத்திற்கான வழிமுறைகளையும் காட்டுகின்றன.

பொருளாதார நிலையில் பெண்ணினத்திடையே வேறுபாடு அமைதலும், தொழிலடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிப்பதும் (பரத்தை, புலைத்தி - தாழ்வுநிலை) காணப்படுகிறது. சமூகத்தில் பொருளாதார நிலையில் உயர்வு பெற்றிருந்த அரச மகளிர் பொதுநிலையில் பிற பெண்டிர் ஒப்பவே அமைகின்றனர். புறம் 166:13-18, புறம்.144) எனினும் அரச மகளிர் எனும் தகுதி காரணமாகச் சில தனித்த மதிப்பிழத்தல்களையும் இவர் அடைந்துள்ளனர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

கணவனாகிய அரசன் போரில் தோல்வியடைந்தால் மாற்றானால் துன்புறுத்தப்பட்டனர் (பதி 8-ஆம் பதிகம், ப-4-10) இப்பெண்டிரது கூந்தலைக் கொய்து,அதில் கயிறுதிரித்து, அதனால் யானைகளைக் கட்டியிழுத்து (பதி 5-ஆம் பதிப்பகம் 15-17) அவமதிக்கப்பட்டனர்.

கொண்டி மகளிராகச் சிறைபிடிக்கப்பட்டு வெற்றி பெற்றோர் நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு ஊர்ப் பொதுமன்றத்துக் கோயிலில் விளக்கேற்றுதல் (பட் 246-249) முதலான அரச மகளிரை உடன்கட்டை ஏறத் தூண்டியிருக்கலாம். அரச மகளிராயினும், சமூகத்தின் பொதுவிதிகள் அவருக்கும் ஏற்புடையதே என்பதை உடன்கட்டை ஏறிய பெருங்கோப் பெண்டின் பாடல் (புறம் 246) வலியுறுத்தும்.

"அக்காலச் சமுதாயம் அவளுக்கு எவ்வளவு கவுரமும் பெருமையும் தர உட்பட்டதோ அதற்கு உட்பட்டுப் பெண்ணை ஆணின் உடைமையாகக் கருதினர்."1 என்று சுப்பிரமணியன் கூறியுள்ளார்." இந்தச் சூழலில் தன்னுரிமை நிறைவோடு எவரையும் சாராது வாழ்வதற்குப் பெண்ணுக்கு வாய்ப்பில்லை"2 என எஸ்.இராமகிருஷ்ணன் தன்னுடைய இந்தியப் பண்பாடும், தமிழரும் என்ற நூலில் பதிவு செய்துள்ளார். "கணவனை இழந்தவர்களையும்,கணவனைப் பிரிந்தவர்களையும், ஒருநிகராகச் சங்ககாலச் சமுதாயம் கருதியது"3 என்று ஆ.இராமகிருஷ்ணன் தன் கருத்தைப் பதிவிட்டுள்ளார். இங்ஙனம் பண்டைய மகளிர்நிலை பற்றி அறிஞர்கள் தம் கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

தொழில்

சுயமாகத் தொழில்கள் செய்துவருவாய் ஈட்டுவதன் மூலம் தமது தேவைகளைத் தாமே நிறைவேற்றிக் கொள்ள இயலும். தன்னம்பிக்கையும், சுயமதிப்பும் சொந்தமாக அண்டி வாழ வேண்டிய நிலையில் பெண்கள் இன்றும் இருந்து வருகின்றனர். ஆனால் சங்கப் பாடல்களில் பெண்களும் ஆண்களுக்குச் சமமாகத் தொழில் செய்தனர் என்பதனைப் பண்டைய இலக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

சங்ககால மகளிர் தொழில்கள்

சங்ககால மகளிர் தம் வாழ்க்கைக்குத் தேவையானதைத் தம்மிடத்துள்ள பொருட்களை அவை தேவைப்படும் பிறர்க்குக் கொடுக்கும் தம்மிடத்திலில்லாத பொருட்களைப் பிறரிடத்திலிருந்து பெற்றும் வாழ்ந்துள்ளனர். குடும்ப மகளிரின் இந்தக் கொள்வினை-கொடுப்பினையில் தொடங்கி நாளடைவில் இந்நிலை பிற்காலத்தே வணிகஇயல் வல்லுநர் பண்டமாற்று என்று சிறப்பிக்கும் முறைக்கும் அடித்தளமாய் அமைந்தது.

சங்ககால மகளிர் தம் காலிலே நிற்க வேண்டுமெனும் எண்ணத்தினராய் ஏதேனும் தொழில் செய்துவந்தனர். தொழில்கள் இல்லறத்திலிருந்து பொருளீட்டி இன்பம் துய்ப்பதற்கு ஏதுவாக இருந்தன. சங்ககாலத்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலங்களில் வாழ்ந்து வந்த காரணத்தினால் அந்நிலத்துக்கேற்றவாறு தொழிலும் அமைந்திருந்தது.

சங்க காலத்தில் மக்கள் திணையடிப்படையில் பகுக்கப்பட்டு அவர்கள் திணை அமைந்துள்ள முறையில் தங்கள் தொழில்களை வகுத்துக் கொண்டனர். இதனால் அவர்கள்

http://Creativecommons.org//license/by/4.0/.

செய்தொழிலின் அடிப்படையில் அமைந்திருந்தனர். அதேஅடிப்படையில் பெண்டிர் மேற்கொண்ட தொழில்களும் அமைந்திருந்தன.

திணை அடிப்படையிலான தொழில்கள்

சங்க காலத்தில் மக்கள் திணையடிப்படையில் பகுக்கப்பட்டுஅவர்கள் திணை அமைந்துள்ள முறையில் தங்கள் தொழில்களை வகுத்துக் கொண்டனர். இதனால் அவர்கள் செய்தொழிலின் அடிப்படையில் அமைந்திருந்தனர். அதே அடிப்படையில் பெண்டிர் மேற்கொண்ட தொழில்களும் அமைந்திருந்தன.

கொடிச்சியர்

குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த பெண்கள் கொடிச்சியர் எனப்பட்டனர். காவலின் பொருட்டுத் தினைப்புனத்தில் அமைக்கப்பட்டபரண் மீதிருந்து தினையை உண்ண வரும் பறவைகளைக் கவண்வீசியும், தட்டைதட்டியும் ஓட்டிக் காத்தனர். மகளிர் தினைப்புனம் காக்கும் செய்தி கூறும் சங்க நூற்பகுதிகள் மிகுதியும் உள்ளன. இச்செய்திகளை,

“தழலைவாங்கியும் தட்டையும் ஓம்பியும்
……………………
குறமகள் காக்கும் ஏனல்” (**அகம்**:118, 11-13)
“படுகிளிகடியும் கொடிச்சிகைக்குளிரே
உண்கிளிகடியும் கொடிச்சிகைக்குளிரே”

வரும் பகுதிகளால் உணரலாம். சங்ககாலத்தில் பருவம் எய்திய பெண்கள் தினைப்புனம் காவலின் பொருட்டு வெளியே வருவர். தினைப்புனக் காவல் அவர்களது வாழ்வின் தொடக்கமாக அமைவதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

ஆய்ச்சியர்

முல்லை நிலப் பெண்டிர் ஆய்ச்சியர் என்ற பொதுச் சொல்லால் அழைக்கப்பட்டனர். ஆநிரை, ஆட்டு நிரை போன்றவற்றின் மூலம் கிடைக்கும் பால், மோர், தயிர், வெண்ணெய் போன்றவற்றை விலைக்கு விற்றல் தொழிலையும், பண்டமாற்றுத் தொழிலையும் அவர்கள் செய்து வந்தனர் என்பதை இலக்கியங்களில் முல்லைநிலப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

ஆய்மகள் ஒருத்தி தான் தயிர் கொண்டு வந்த மிடாநிறையும் படி மகளிர்படி, மருத நிலத்து மகளிர் தந்த வெண்ணெல்லைப் பெற்று மகிழந்து சென்றதனைப் புறநானூறு,

“…………… ஆய் மகள்
தயிர்கொடுவந்ததசும்புநிறைய
ஏரின் வாழ்நர்பேரிலரிவையர்
குளக்கீழ் விளைந்தகள்கொள் வெண்ணெல்
முகந்தனர்கொடுப்பஉவந்தனர்பெயரும்”

என்று குறிப்பிடுகிறது. இப்பாடல் அடிகளில் தயிர்க்கும் பண்டமாற்றாக வெண்ணெல்லைப் பெற்ற செய்தி இடம் பெற்றுள்ளதனை அறியலாம்.

சங்கச் சமூகப் பெண்கள் பொருளுடைமையாளராகளம் கேள்வன் தருமோ (கலி 106: 44-45) என வினவுவதும், “பெண்டிரும் தம் பதம் கொடுக்கும்” (புறம் 151-5) எனும் குறிப்பும் காட்டுகின்றன. காலைப் பொழுதிலே தயிர் கடைந்து அதனை மோராக்கி

http://Creativecommons.org//license/by/4.0/.

விற்று,அதனின்றும் வரும் வருவாயில் சுற்றத்துடன் பகிர்ந்துண்பதும், நெய்யினால் கிடைக்கும் பொருளில் நல்ல கறவைகளை வாங்கித் தன் இல்லத்தினை மேலும் மேலும் வளம் பெறச் செய்யும் ஆய் மகளிரை,

“ஆம்பிவான்முகைஅன்ன கூம்புமுகிழ்

……………………………………………………………………….

எருமைநல்லாள் கருநாகுபெறூஉம்”(பெரும் 157-165)

எனக் காட்டியிருப்பது எண்ணத்தக்கது. இப்பொருளாதாரச் சுதந்திரம் பிற நில மகளிருக்கு இருந்ததா என்ற மேலாய்விற்குரிய வினா இங்கெழுகின்றது. குறிஞ்சி, நெய்தல், முல்லை நிலப் பொருட்களை அந்நிலத்தவர் கொணர, தன் இல்லிலிருந்தே பண்டமாற்றாக அவற்றைப் பெற்றுக் கொள்ளுகிறாள். (புறம் 33:1-7) (ஐங் 47:1-3) இவற்றை நோக்க நிலத்திற்குத் தக மகளிர்க்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளில் நெகிழ்ச்சியும், அழுத்தமும் இருந்தனவோ என்ற எண்ணம் தோன்றுகிறது. மேற்படி நிலத்தை விட மருத நில வாழ்வு பொருளாதாரத்தில் உயர்நிலை உடையதாக அமைந்திருந்ததும் கருதற்பாலது.

உழத்தியர்

சங்ககாலத்தில் வேளாண்மை முக்கிய தொழிலாக அமைந்திருந்தது. ‘மகளிர் உழவுத் தொழிலில் பெரிதும் ஈடுபட்டிருந்தனர், வேளாண்மையின் பல்வேறு நிலைகளில் பெண்கள் உதவி புரிந்தனர். நாற்று நடுவதில் ஈடுபட்டிருந்ததை,

‘உழாஅநுண்தொளிநிரவியவினைஞர்
முடிநாறுஅழுத்தியநெடுநர்ச் செறுவில்”

என்று பெரும்பாணாற்றுப்படையிலிருந்து அறிகிறோம். மருத நிலத்துப் பெண்டிர் உழத்தியர் என்ற பொதுச் சொல்லால் அழைக்கப்பட்டனர். வேளாண் தொழில் செய்யும் மாந்தர் உழவர் எனப்பட்டமை போல் வேளாண் தொழிலுக்குத் துணைபுரிந்த உழவரின் மனைவியர் உழத்தியர் எனப்பட்டனர். மருதநில மாந்தர்களின் செயற்பாடுகள் சங்க இலக்கியங்களில் பரவலாகச் சொல்லப்பட்டுள்ளன.

உழவர்கள் மாடுகள் பூட்டியஏர்களைக் கொண்டுநிலத்தைஉழுவர். மகளிர் நெல்நாற்றுக் களை நடுமுன் தம் கால்களால் சோற்றை மிதிப்பர். பின் நெல் நாற்றுக் களைநடு முன் தம் கால்களால் சேற்றை மிதிப்பர். பின் நெல் நாற்றுக்களை நடுவர் களைப் பறிப்பர். அறுவடை செய்து தலையில் சுமந்துவந்துகளத்தில் சேர்ப்பர். நெல்லடித்த பின்பு முற்றத்தைக் கொண்டு காற்றிலே, நெல்லைத் தூற்றிஎடுப்பர். கொண்டை முடித்துத் தழையுடை அணிந்திருந்த கடைசியர் வயலில் களைகளாக முளைத்த நெய்தல், ஆம்பல் போன்றவற்றைக் களைந்த காட்சியைப் புறநானூறு, (61:1-3)

“கொண்டைக் கூழைத் தண்டழைக் கடைசியர்
சிறுமாண் நெய்தல் ஆம்பலொடுகட்கும்
மலங்குமிளிர்செறு”

என்று குறிப்பிடுகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

பரதவ மகளிர்

நெய்தல் நிலத்தில் வாழும் ஆடவரைப் பரதவர், நுளையர் என்றும், மகளிரைப் பரத்தையர் நுளைச்சியர் என்றும் குறிப்பிடுவர். ஆடவற், கடலிற் சென்று மீன் பிடிக்கும் தொழிலைச் செய்தனர். அவ்வாறு பிடித்துக் கொணர்ந்த மீன்களை மகளிற் சேரிகளிற் கொண்டு சென்று விற்றல், எஞ்சியவற்றை உலர வைத்தல் போன்ற பணிகளைச் செய்தனர்.

தொழில் அடிப்படையில் மகளிர்

நில அடிப்படையில் மட்டுமல்லாமல் செய்தொழில் அடிப்படையிலும் பெண்கள் அழைக்கப்பட்டனர் என்பது புலனாகின்றது. அரியல் மகளிர் (கள் விற்பவள்) பண்ணியம் முதலிய பல்பொருள் விற்கும் மகளிர், பூவிலை மடந்தையர், (பூவிற்கும் மகளிர்) பருத்திப் பெண்டிர், ஏவல் மகளிர், புலைத்தி, கொண்டி மகளிர் போன்றோரைப் பற்றிய குறிப்புக்களும் காணக் கிடக்கின்றன.

பூவிலைமடந்தையர்

மகளிர் தம் ஒப்பனைப் பொருட்களுள.; மலர்கள் என்றும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. பண்டைக் காலத்தில் அந்தந்தப் பருவத்தில் மலர்ந்த புத்தம் புதுப் பூக்களைக் கொய்து இளமகளிர் வட்டிகளில் ஏந்தித் தெருக்கள் தோறும் திரிந்து விலை கூறிவிற்றாள். இச்செய்தியை நற்றிணை, அகநானூறு, மதுரைக்காஞ்சி, புறநானூறு போன்ற இலக்கிய்ங்கள் குறிப்பிடுகின்றன.

“பூவிற்கும் மகளிர், காலச் சூழ்நிலையறிந்து இல்லங்களுக்குச் சென்று மலர் விற்பர் என்னும் கருத்தினைப் புறநானூறு,

> **“குறும்பர்க்குஎறியும் ஏவல் தண்ணுமை**
> **நாணுடைமாக்கட்கு இரங்குமாயின்**
> **எம்மினும் பேரெழில் இழந்துவினையெனப்**
> **பிறர்மனைபுகுவார்கொல்லோ**
> **அளியள் தானேபூவிலைப் பெண்டே”**

என்று கூறுகின்றது.

பருத்திப் பெண்டிர்

மகளிர், தாவர இனஞ் சார்ந்த பருத்தியினின்றும், விலங்கின் வகையைச் சார்ந்த பட்டுப் பூச்சினின்றும் நூலைப் பெற்று ஆடைகளை நெய்தனர். இதில் குறிப்பாகப் பருத்திநூல் நெசவு சிறப்பு பெற்றிருந்தது. பருத்தியைப் பயிர்செய்து, விளைவித்து, வில்லில் அடித்துக் கொட்டையும் கோதும் நீக்கித் தூய்மை செய்து பயன்படுத்தினர். மகளிர் நெசவில் ஆடவர்க்குப் பெரிதும் உதவிசெய்தனர். இரவுப்பொழுதில் இவ்வேலையைச் செய்தனர்என்பதைச் “சிறுதீவிளக்கத்து” (புறம்-326:5) எனவரும் புறநானூற்றுத் தொடரால் அறியலாம்.

ஏவல் மகளிர்

அரண்மனையில் மகளிருட் சிலர் ஏவற் பெண்டிராக இருந்து பிறர்க்குப் பணிகள் செய்து வந்தமையினைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. தொல்காப்பியரும் ஏவற் பணி செய்வோரைப் பற்றிச் சுட்டுகின்றனர். ஏவல் மகளிர் மன்னனுக்குப் பொற்காலத்தில்

http://Creativecommons.org//license/by/4.0/.

மதுவை ஊட்டுவர், பாட்டாலும், கூந்தலாலும் மன்னர் அவையை மகிழ்ச்சியுறச் செய்யும் இன்னகை மகளிர் இருந்ததைப் பத்துப்பாட்டும், பதிற்றுப்பத்தும் கூறுகின்றன.

புலைத்தி

சங்க காலச் சமுதாயத்தில் ஆடை வெளுப்போள் புலைத்தி என்ற சொல்லால் அழைக்கப்பட்டாள். அவர்களது செயல்களைப் பற்றி,

“களர்ப்படு கூவல் தோண்டிநாளும்
புலைத்திகழிஇய தூவெள் அறுவை”

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது.

பொதுநிலையில் சிலதொழில்கள்

நிலப் பாகுபாட்டிற்கேற்ப பெண்களின் தொழிலும் பலவாக அமைகின்றன. இவை தவிர பொதுநிலையில் சில தொழில்களும் மகளிர்க்குரியனவாக இருந்தன.

அரியல் மகளிர்

அன்று பெருவழக்காக இருந்த கள்ளருந்தும் பழக்கத்திற்குத் தேவையான கள்ளினைக் காய்ச்சித் தயாரிப்பதையும், பல்லிடங்களுக்கு எடுத்தச் சென்று விற்பதையும் பெண் மேற்கொண்டதைச் சங்கப்பாக்கள் தெரிவிக்கின்றன. (அகம் 157:1-4) (பெரும் 339). இவர் அரியற் பெண்டிர் எனவும் கள்ளம் மகளிர் எனவும் அழைக்கப்பட்டனர். இவர்தம் தொழில் திறமைக்காகப் பெண் யானையைப் பரிசிலாகப் பெற்றதும் (குறுந் 298:5) நோக்கிற்பாலாகாது.

ஆடவர் மகிழ்ந்து அருந்த மகளிர் அவர்க்குக் கள் வழங்கும் காட்சி பெருமையாக உணர்த்தப்பட்டிருப்பது. (புறம். 367:6-7, 18) என்பதும்.இங்கு குறிப்பிடத்தக்கது. பெண் ஆணின் போகப் பொருளாகச் சங்ககாலத்திலே விளங்கியமையை இவ்வடிகள் புலப்படுத்துகிறது.

புலைத்தி - துணைத்தொழில்

பிறரின் ஆடைகளைத் தூய்மைசெய்யும் புலத்திதுணைத் தொழிலாகப் பனையோலைகொண்டுபெட்டிகளைச் செய்துவிற்றலும் காணப்படுகிறது (கலி.117: 6-8). கைத்தொழிலுக்கும்,மகளிருக்கும் உள்ளநெருங்கியதொடர்பினை இது காட்டுகிறது.

அகவல் மகளிர்வெறியாள்

அகவல் மகளிர்,வெறியாட்டைநிகழ்த்தும் வெறியாள் (குறுந்.366) எனப்பிறரும் அறியப்படுகின்றனர். இத்தொழிலாளர்அனைவரும் தம் தொழிலுக்கு ஊதியமாகஎவற்றை எப்படிப் பெற்றனர்என்பதற்கானவிளக்கங்கள் சங்கப் பாக்களில் தென்படவில்லை.

குற்றவேல் மகளிர்

பெருஞ்செல்வந்தர் இல்லங்களிலும் (நற் 331:2) அரண்மனைகளிலும் (நெடு 151) குற்றவேல் செய்யும் மகளிரும் காணப்படுகின்றனர். பாசறைகளில் குற்றேவல் பணியாளராகப் பெண்டிர்முல்லைபணியாற்றியுள்ளனர்.

புலம் பெயர்தல்

பொதுநிலையில் மகளிரைத் தொழில் நிலையில் அணுகும்பொழுது பொருளாதாரத்தில் பின்தங்கியோர், பொருள் தேடலின் பொருட்டு நிலம் பெயர்தல் தடை செய்யப்படவில்லை எனத் தெரிகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

தொகுப்புரை

சங்ககாலத்தில் ஒவ்வொருநிலப்பகுதியிலும் வாழ்ந்தஆடவரும்,மகளிரும் தத்தம் தொழில் செய்தனர் என்று தெரிகின்றது. ஆடவர்க்குத் துணையாகவும் மகளிர் தொழில் செய்ததையும் அறியமுடிகின்றது. மேலும்,அவரவர் வேறுபாடு கருதாது அவரவர் செய்தொழில்களைச் செய்து வந்தனர் என்பதும் ,பிற சமுதாய நிலைகளிலும் ஆடவரோடு ஒப்ப மதிக்கும் நிலையைப் பெற்றிருந்தனர் என்பதையும் நன்குணர முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. சுப்பிரமணியன் ந,சங்ககாலவாழ்வியல்,ப-54
2. இராமகிருஷ்ணன்எஸ்,இந்தியப் பண்பாடும்,தமிழரும்,ப-313
3. ஆ.இராமகிருஷ்ணன்,அகத்திணைமாந்தர் - ஓர் ஆய்வு,ப-239

http://Creativecommons.org//license/by/4.0/.

28. பண்பாட்டு நிலவியல் நோக்கில் சங்கஇலக்கியம்

முனைவர் **மா.பத்மபிரியா,**
உதவிப்பேராசிரியர்,முதுகலை மற்றும் தமிழ்ஆய்வுத்துறை
எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி, (தன்னாட்சி) ,சிவகாசி.
மின்னஞ்சல் padmapriya-tam@sfrcollege.edu.in - **அலைபேசி** - 9486862263
DOI 10.5281/zenodo.15072304.

Abstract

Literature arises through the interplay of tradition and modernity. From ancient times, literary works reflecting the ancient Tamil society have embedded geographical records, creating a long-standing historical narrative. The depiction of the Sangam period's way of life through the Akathinai and Purathinai literary traditions can be understood as cultural geography. The five landscapes–Kurunji, Mullai, Marutham, Neydal, and Palai–represent not only physical territories but also the cultures associated with them. As generations settle in specific lands, customs and practices evolve based on the natural features of those regions. The customs passed down by ancestors, continued through generations, become integral cultural elements. In this context, these cultural elements are intertwined with the land, becoming symbols of their respective regions. While landscapes, water resources, and technologies may change over time, the land and water continue to shape the essence of the soil and its cultural identity. This forms the focus of the research paper

Keywords

Cultural Geography,Landscape and Geography,water resource ,Cultural Identity,Ancestral Traditions

முன்னுரை

ஐந்திணைப் பாகுபாடுகள் பழந்தமிழர்களின் சூழலியல் அறிவினைப் பறைசாற்றுகின்றன. சங்கப்பாடல்கள் மனித உணர்வுகளை இயற்கைக் காட்சிகளின் மூலமாகவே வெளிப்படுத்துகின்றன. மலையும் மலை சார்ந்த இடமான குறிஞ்சி, காடும் காடு சார்ந்த இடமான முல்லை, வயலும் வயல் சார்ந்த இடமான மருதம், கடலும் கடல் சார்ந்த இடமான நெய்தல், வறண்ட மண் பாலை என்று ஐவகை நிலவியல் அமைப்பு அகத்திணைக்கான நிலப்ப சுட்டப்படுகின்றது. திணைகளின் நிலமும், நீர் நிலைகளும் பேசப்படுவது மட்டுமின்றி உயிரினங்களையும் பயிரினங்களையும் பதிவு செய்துள்ளனர். அகப்புற உணர்வோடு சூழ்நிலையின் பொருத்தவுணர்வும் சுட்டப்படுகின்றது. ஒரு நிலப்பரப்பு என்பது மலைகள், ஆறுகள் , ஏரிகள் , குளங்கள் மற்றும் கடல் போன்ற நீர்நிலைகள் போன்ற இயற்பியல் கூறுகளால் ஆனது.இத்தகைய நிலவியலின் இயல்பும் அதில் வாழும் மனிதஉணர்வும் ஒருங்கிணைந்தே சூழலியல் பண்பாடு உருவாகின்றது. இயற்கை வழிபாடு, நீர் விழா ,மரவழிபாடு போன்ற அவற்றின் பிரதிபலிப்பாகும்.இத்தகைய பண்பாட்டு நிலவியலை இக்கட்டுரை ஆராய்கின்றது.

பண்பாட்டு நிலவியல் (Cultural Geograpy)வரையறை

இயற்கையும் மனிதனும்,மண்ணும் மானுடமும் கலாச்சார புவியியலின் அடிப்படைகள் ஆகும்.மனிதர்களை, அவர்களின் புவியியல் சார் வாழ்வெளியால் உருவாக்கப்படும் பண்பாட்டுக் கூறுகளோடு இணைத்து தான் ஆய்வு செய்யவேண்டும் என்று பண்பாட்டு நிலவியல் வலியுறுத்துகின்றது.பண்பாட்டு நிலவியல் என்பது

http://Creativecommons.org//license/by/4.0/.

இயற்கையோடு இணைந்து வாழும்மனிதனை ஆராயும் சமூகஅறிவியல் துறையாகும்.ஆகையால்,கலாச்சாரங்களும் சமூகங்களும் நிலப்பரப்புகளால் கட்டமைக்கப்படுகின்றன எனலாம். "இந்த மரபைப் பயன்படுத்தி வரும் புவியியலாளர்கள் கலாச்சாரங்கள் மற்றும் சமூகங்கள் அவற்றின் உள்ளூர் நிலப்பரப்புகளிலிருந்து வளர்வதாகவும், அந்த நிலப்பரப்புகளை வடிவமைப்பதாகவும் பார்க்கிறார்கள்."[1](Sauer C O.1925)நிலப்பரப்பு தான் பண்பாட்டினை உருவாக்குகின்றது. ஆதலால் நிலமே அனைத்திற்கும் அடிப்படை ஆகும். "நிலமிழந்து போனால் பலமிழந்து போகும்! பலமிழந்து போனால் இனம் அழிந்து போகும்"[2] (ஈழத் தேசக்கவி புதுவை இரத்தினதுரை) என்ற கூற்று பண்பாட்டு நிலவியலில் ஒப்புநேக்கத்தக்கது.

"கலாச்சார புவியியல் என்பது மனித புவியியலுக்குள் அமைந்த ஒரு துணைப்பிரிவு ஆகும். பூமியில் உள்ள பல்வேறு நாடுகளின் கலாச்சாரங்கள் பற்றிய ஆய்வின் முதல்தடயங்களை தம் பயணத்தால் கண்டறிந்தவர்கள் டோலமி, ஸ்ட்ராபோ போன்ற புவியியலாளர்கள். அவர்களிடம் இருந்து கலாச்சார புவியியல் கல்வி ஆய்வாக முதலில் தோற்றம் பெற்றாலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சுற்றுச்சூழல் கோட்பாடுகளுக்கு மாற்றாக கலாச்சார புவியியல் வெளிப்பட்டது. அவர்கள் மக்களும் சமூகங்களும் அவை வளரும் சுற்றுச்சூழலால் கட்டுப்படுத்தப்படுகின்றனர் என்று நம்பினர்."[3] பண்பாட்டு நிலவியல் நேரடியாக இலக்கியத்தோடு தொடர்பு கொள்வதில்லை. ஆயினும் மனிதர்களின் வாழ்க்கை மற்றும் மனஉணர்வுகளால் உருவாக்கப்படும் பண்பாட்டுக்கூறுகளைத் தன்னகத்தே கொண்டு படைக்கப்படும் இலக்கிய உருவாக்கத்திற்கு காரணமாகின்றது.ஆதலால், பண்பாட்டு நிலவியல் இலக்கியத்தோடு பிரிக்க இயலாத உறவுகொள்கிறது எனலாம்.

"கலாச்சார புவியியலின் தந்தை" என்றழைக்கப்படுபவர் கார்ல் ஓ.சாயரால் ஆவார். இவர் பெர்க்லியின் கலிபோர்னியாபல்கலைக்கழகத்தில் பணியாற்றிய ஆய்வாளர். புவியியலே கலாச்சாரத்தை வடிவமைக்கிறது என்று கூறினார்.

திணைப் பாகுபாடும் நிலவியலும்

அகப்பொருளை ஏழுதிணையாக வகுத்த தொல்காப்பியர் கைக்கிளை, பெருந்திணை தவிர்த்த அன்பின் ஐந்திணைக்கே இயற்கைப் பின்புலம் அமைத்துள்ளார். அகத்திணையில் முதற்பொருளின் கூறுகளாக நிலம் பொழுதைக் கூறுகிறார். இடம் என்பது நிலத்தைக் குறிப்பதாகவும், காலம் என்பது பொழுதைக் குறிப்பதாகவும் அமைகிறது.

"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பு எனமொழிப இயல்பு உணர்ந்தோரே"[4]

முதற்பொருள் எனக் கூறப்பெறும் நிலமும், பொழுதும் மனித வாழ்வாதாரத்திற்கு முதலாகின்றது.இக்கருத்தினைபேராசிரியர்மாதையன்பின்வருமாறு சுட்டுகின்றார்."முதலெனப்பட்ட நிலத்துடனான பருவமாற்றங்களின் இணைவு அதன் வளர்ச்சிக்கும் செழுமைக்கும் ஆதாரமாக அமைந்த மனித வாழ்விற்கு அடிப்படையாகின்றது.வாழ்க்கைக்கான இருப்பிற்கான இடமும் காலமும் மனித வாழ்வின் எல்லா நிகழ்வுகளுக்கு ஆதாரமாக அமைவதால் இவை இரண்டுமே முதற்பொருள்கள் எனப்பட்டன."[5]இக்கருத்து ஏற்புடைத்தாகும். உயிரினங்களுக்கு நன்மை தீமைகளைத் தரும்

http://Creativecommons.org//license/by/4.0/.

எந்த நிலையும், எந்தச் சந்தியும், எந்தப் பொருளும் காரணி எனப்படும். இயற்கையில் காணப்படும் மண், நீர், வெப்பம், ஒளி, காற்று, தீ ஆகியவை சூழ்நிலைக் காரணிகளாகும். பழந்தமிழர்கள் நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்ற சூழ்நிலைக்காரணிகளை ஐம்பூதங்கள் என்று சிறப்பித்து அதன்இயல்புத் தன்மையைப் போற்றியுள்ளனர்.

“மண் திணிந்த நிலனும்,
நிலன் ஏந்திய விசும்பும,;
விசும்புதைவரு வளியும்,
வளித்தலைஇய தீயும்,
தீமுரணிய நீரும,; என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்”[6]

இச்சூழ்நிலைக் காரணிகளைத் ஆய்ந்த ஆய்வறிஞராக தொல்காப்பியர் வரிசைப்படுத்தியுள்ளார்.

“நிலம் தீ நீர் வளி விசும் போடைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்
திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்”[7]

உலகம் பற்றிய அறிவியல் உண்மையினை தொல்காப்பியர் உணர்ந்துள்ளார். உயர்திணை மற்றும் அஃறிணையின் இயல்பு நெறி மரபுநிலை மாறுதல் கூடாது என்று தொல்காப்பியர் அன்றே குறிப்பிட்டுள்ளமை சுற்றுப்புற மாசுறுதலின் அபாயத்தினை உணர்ந்து தான். மேலும், உலகப்பகுப்பினை தொல்காப்பியர் நான்கு நிலைகளில் பிரித்தறிவித்துள்ளார். அப்பஞ்ச பூதங்களில் முதன்மையான நிலப்பகுப்பு திணைப்பகுப்புடன் இணைத்துக்காட்டப்பட்டுள்ளது.

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன்; மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே”[8]

சூழலியல் நோக்குடன் நிலப்பகுப்பில்; தொல்காப்பியர் இயற்கைவளத்தை ஆவணப்படுத்துகிறார்.

முல்லை- காட்டு வளம்
குறிஞ்சி- மலை வளம்
நெய்தல் - கடல் வளம்
மருதம் - நீர் வளம் சார்ந்த வேளாண்மை வளம் ஆகும்.

‘நடுவண் திணை’ என்ற பாலை பற்றிய பதிவும் இடம்பெற்றுள்ளது.அது வளத்துடன் சாற்றப்படவில்லை.

“அவற்றுள்
நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே” [9]

http://Creativecommons.org//license/by/4.0/.

நிலவியலில் பாலை என்பது வளமிழந்தகுறிஞ்சி,முல்லை நிலமே ஆகும். இச்செய்தி சிலப்பதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. தட்ப வெப்ப நிலையில் ஏற்படும் இயற்கை மாற்றத்தால் பாலை உருவாகிறது.விளைநிலம் அழிக்கப்படுவதாலும் பாலைநிலம் உருவாகிறது. சமூகப்பண்பாட்டுச் சூழலில் வறட்சியின் தாக்கம் ஏற்படுகிறது. பாலைத் திணை மணல் சார்ந்த பகுதியாக இலக்கணங்கள் எடுத்துரைத்தாலும் இயற்கை வளங்கள் நிலவிய குறிப்பு சங்க இலக்கியத்தில் காண முடிகிறது.

"முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை பெயன்பதோர் படிவங் கொள்ளும்"[10]

இவ்வாறு இளங்கோவடிகள் பாலை நிலம் பற்றிக் கூறுகிறார். வளம்குன்றினால் பாலை உருவாகும் என்கிறார்.

அகக்கவிதைகளில் பண்பாட்டு நிலவியல்

இயற்கை குறியீடுகளால் காதல் பண்பாடு வெளிப்படும் சங்கஅகக்கவிதைகள் பண்பாட்டு நிலவியலுக்கான சாட்சிகள் ஆகும்.கபிலர் குறிஞ்சித் திணைப் பாடுவதில் வல்லவர் என்பர்.அத்தகைய சான்றோன் காதலில் பண்பாட்டு நிலவியலை பொருத்திக்காட்டியுள்ளார்.

"நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்றும் என்றோள் பிரிபறி யலரே
தாமரைத் தண்டா தூதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி
நறுநுதல் பசத்த லஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பறி யலரே"[11]

மேற்கண்ட நற்றிணைப்பாடலில் காதல் பண்பாடு நிலவியல் சார்ந்து எழுந்துள்ளது. தாமரையினின்று குளிர்ந்த தாதினை எடுத்துச் சந்தன மரத்தின் மீது வைக்கப்பட்ட இனிய தேன் சுவை போல தலைவன் கொண்டுள்ள உள்ளத் தொடர்பு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. குறிஞ்சி மலையின் மீதான சந்தனமரம் தலைவனின் உயர்ந்த ஒழுக்கத்தின் குறியீடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.தாமரையின் மகரந்தம் தலைவியின் உயர்ந்த காதல் குறியீடாக சுட்டப்பட்டுள்ளது.மேலும் நீர் இன்றி அமையாத உலகம் போல உயர்ந்த காதல் பண்பாடு போற்றப்பட்டுள்ளது.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர் அளவு இன்றே சாரல்
கரும் கோல் குறிஞ்சி பூ கொண்டு
பெரும் தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"[12]

http://Creativecommons.org//license/by/4.0/.

நிலவியல் சார்ந்து எழுந்த சிறந்த காதல் கவிதை ஆகும். பூகோளம் காதலின் குறியீடாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. தேவகுலத்தார் பாடிய இப்பாடலில் நிலப்பரப்பு மற்றும் புவியியல் (Landscape and Geography) தலைவனின் தன்மைகளாக பேசப்பட்டுள்ளது. குறவர்களின் தேனெடுக்கும் தொழில் பற்றி மறைமுகமாக கூறப்பட்டுள்ளது.

யாயும் ஞாயும் யாராகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல,
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே! ”[13]

இப்பாடலை இயற்றியவர் நிலவியல் பெயராக செம்புலப்பெயல்நீரார் என்றே சுட்டப்படுகின்றார். நிலமும் நீரும் கலந்த தன்மை புணர்ச்சியின் குறியீடாக அடையாளப்படுத்தப்படுகிறது.

ஐயவி அன்ன சிறுவீ ஞாழல்
செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்த்
துறைஅணிந் தன்றவ ளூரே......”[14]

மேற்கண்ட பாடலில் தலைவன் ஊர் நீர்நிலை வைத்து அடையாளப்படுத்தப்படுகின்றது. நீர்நிலையின் அருகில் உள்ள மரங்களும் மலர்களும் கூறப்பட்டுள்ளன. வெண் சிறுகடுகைப் போன்ற சிறிய பூக்களையுடைய ஞாழல் மரத்தின் பூவுடன் சிவந்த மலர்களையுடைய மருத மரத்தின் பழம்பூவும் பரந்து, தலைவனுடைய ஊர்.

புறப்பாடல்களில் பண்பாட்டு நிலவியல்

பட்டினப்பாலையில் காவிரிஆற்றின் நீர்வளம்குறிப்பிடப்பட்டுள்ளது. பாட்டுடைத்தலைவன் கரிகால்பெருவளவனின் சோழ நாட்டுவளமாக பேசப்படுவன யாவும் மன்னனின் வளம் சிறந்த ஆட்சியின் வெளிப்பாடாகும்

“வான் பொய்ப்பினும்தான் பொய்யா,
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன் கொழிக்கும்
விளைவு அறா வியன் கழனி”[15]

பட்டினப்பாலை நூல் முழுவதும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் சோழநாட்டின் நிலவியலை காட்சிப்படுத்தும் போது சோழநாட்டின் பண்பாடுகள் வெளிக் கொணரப்பட்டுள்ளன எனலாம். சிறுபாணாற்றுப்படையில் நாட்டுவளம் பற்றிய பதிவுகளை நிலவியல் வரைபடமாக நத்தத்தனார் காட்சிப்படுத்தியுள்ளார்.

அலை நீர்த் தாழை அன்னம் பூப்பவும்,
தலை நாள் செருந்தி தமனியம் மருட்டவும்,
கடுஞ்சூல் முண்டகம் கதிர் மணி கழாஅலவும்,
நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்,
கானல் வெண் மணல் கடல் உலாய் நிமிர்தர,
பாடல் சான்ற நெய்தல் நெடு வழி

http://Creativecommons.org//license/by/4.0/.

மணி நீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனி நீர்ப் படுவின் பட்டினம் படரின் ”[16]

எயிற்பட்டினத்திற்குச் செல்லும் வழியும் பரதவர் தரும் விருந்தும் சுட்டப்படுகிறது. இங்கு நெய்தல் நிலம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கடலோரத் தாவரங்களும் உயிரினங்களும் அத்தகைய இயற்கைச் சூழலைச் சார்ந்த மக்களின் விருந்தோம்பல் பண்பாடும் நிலவியலுடன் பொருத்திக்காட்டடப்பட்டுள்ளது எனலாம்.

முடிவுரை

பண்பாட்டு நிலவியல் அடிப்படையில் சங்கப்பாடல்களை வாசித்தால் தொல்காப்பியர் கட்டமைத்த நிலவியல் விதிக்குள் குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலை என்ற ஐந்திணைகளும் பொருந்துகின்றன. ஆதலால் பண்பாட்டு நிலவியல் வாசிப்புக்கு தொல்காப்பியம் வழிகாட்டுகின்றது எனலாம். சங்க அகப்பாக்களில் சுட்டப்படும் நிலஅமைப்பு முறைகள் தலைன் -தலைவி காதல் உணர்வுகளுக்கு காணமாகின்றன. குறிஞ்சி நிலத்தில் வசிக்கும் காதலர்களுக்கு புணர்ச்சி என்பது மலைவாழ்விடச் சூழலால் சாத்தியமாகின்றது எனலாம்.பண்பாடுகள் இயற்கையின் இயல்புகளுக்கு ஏற்ப மாற்றம் பெற்றுக் கொண்டே வருகின்றன.சங்ககாலப் பண்பாடு இன்று மறைந்து போனது. பண்பாட்டு மாற்றத்தை இயற்கையின் சீர்குலைவால் பெறுகிறோம் என்று பண்பாட்டு நிலவியல் ஆய்வு வழி அறியஇயலுகிறது.

குறிப்புகள்

1. Carl Ortwin Sauer (1925), The Morphology of Landscape,University of California Publications, Berkeley. http://geog.uoregon.edu/.../Sauer_1925_Morphology_of...
2. ஈழத் தேசக்கவி புதுவை இரத்தினதுரை, புரட்சிப்பாக்கள், https://www.facebook.com/ImShritharan/posts/ நிலமிழந்து-போனால்பலமிழந்து-போகும்பலமிழந்து-போனால்இனம்-அழிந்து-போகும்ஆதலால்-
3. Peet, Richard (1998) Modern Geographical Thought; Blackwell Publications April 1998.
4. தொல்காப்பியம்,பொருளதிகாரம்,அகத்திணையியல்,நூ.1.
5. பெ.மாதையன்,அகத்திணைக்கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும்,ப.27.
6. புறநானூறு.2
7. தொல்காப்பியம்,பொருளதிகாரம்,மரபியல்,நூ.91.
8. தொல்காப்பியம்,பொருளதிகாரம், அகத்திணையியல், நூ.5.
9. தொல்காப்பியம்,பொருளதிகாரம், நூ.948
10. சிலம்பதிகாரம், காடுகாண் காதை: 64-66.
11. நற்றிணை.1
12. குறுந்தொகை .3
13. குறுந்தொகை 40

http://Creativecommons.org//license/by/4.0/.

14. குறுந்தொகை.50:1-3
15. பட்டினப்பாலை.5-8
16. சிறுபாணாற்றுப்படை.146-153

துணைநூற்பட்டியல்

1. Carl Ortwin Sauer (1925), The Morphology of Landscape, Volume 2, Issue 2,University of California Press,Berkeley.1925
2. ஈழத்தேசக்கவிபுதுவைஇரத்தினதுரை, புரட்சிப்பாக்கள், https://www.facebook.com/ImShritharan/posts/ நிலமிழந்து-போனால்பலமிழந்து-போகும்பலமிழந்து-போனால்இனம்-அழிந்து-போகும்ஆதலால்-
3. Peet, Richard (1998) Modern Geographical Thought; Blackwell Publications April 1998.
4. அடியார்க்குநல்லார், சிலப்பதிகாரஉரை,டாக்டர்உ.வே.சா. நூல்நிலையவெளியீடு,1978.
5. சோமசுந்தரனார். பொ. வே (உ.ஆ), சிறுபாணாற்றுப்படை, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம். 1979
6. சோமசுந்தரனார். பொ. வே (உ.ஆ)பட்டினப்பாலை, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம். 1979
7. இளம்பூரணனார்(உ.ஆ),தொல்காப்பியம்பொருளதிகாரம்,சாரதா பதிப்பகம்,சென்னை 600 014,முதற்பதிப்பு, மே 2005.
8. ச.வே.சுப்பிரமணியன்,சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும் (மூன்று தொகுதிகள்),மணிவாசகர் பதிப்பகம்,சென்னை
9. பெ மாதையன்,அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும்,பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.2009

http://Creativecommons.org//license/by/4.0/.

29. தமிழ் எழுத்து வரலாற்றில் மக்கட் பெயரும் ஊர்ப் பெயரும்

முனைவர். **அ. கலையரசி**
உதவிப் பேராசிரியர், நாட்டுப்புறவியல் மற்றும் பண்பாட்டு ஆய்வுகள் துறை
நிகழ்த்துக் கலைப் புலம்,மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,மதுரை - 21
அலைபேசி: 9942430223, Email ID: akarasi07@gmail.com
DOI 10.5281/zenodo.15072388.

Abstract :

Humans are one of the few living beings in the world that speak. That speech later becomes language. Every society starts writing its language after its own languages have developed. That is, spoken language is given a written form. There are still tribal societies that continue to speak orally without converting their language into writing. Tamil society is one of the ancient societies that have both speech and writing together. Some of the various languages that existed three thousand years ago have become extinct/some have been destroyed. However, Tamil is a rich language that is still in use today in speech and writing. Moreover, Tamil language occupies an important place in all the living and cultural spheres of the Tamil people. This article aims to examine the way in which people's names and place names have taken place in such a Tamil writing history.

Key Words : Tamil Letters - Humans Name - City Name

முன்னுரை:

உலகில் உள்ள பல்லுயிரினங்களுள் பேசுகின்ற சில உயிரினங்களில் மனித உயிரினமும் ஒன்றாகும். அந்தப் பேச்சே பின்னர் மொழியாகிறது. ஒவ்வொரு சமூகமும் தத்தம் மொழிகள் வளர்ச்சி பெற்ற பின்னர் தம்முடைய மொழியை எழுதத் தொடங்குகின்றன. அதாவது பேச்சு மொழிக்கு வரி வடிவம் தரப்படுகிறது. இன்னும் தம் மொழியை எழுத்தாக மாற்றாமல் வாய்மொழியாகவே தொடர்கின்ற பழங்குடிச் சமூகங்களும் உள்ளன. பேச்சும் எழுத்தும் ஒருங்கே கொண்ட தொல்சமூகங்களில் ஒன்றாகத் தமிழ்ச் சமூகமும் விளங்குகின்றது.

மூவாயிரம் ஆண்டிற்கு முந்தைய பல்வேறு மொழிகளில் சில அழிந்துவிட்டன/ சில அழிக்கப்பட்டுவிட்டன. ஆனால், தமிழ் மொழியோ பேச்சிலும் எழுத்திலும் இன்றும் வழக்கில் உள்ள செழுமையான மொழியாகும். மேலும் தமிழ் மொழியானது தமிழ் மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டு வெளிகள் அனைத்திலும் முக்கிய இடம் பெற்று வருகிறது. அத்தகைய தமிழ் எழுத்து வரலாற்றில் மக்கட் பெயர்களும் ஊர்ப்பெயர்களும் இடம் பெற்றுள்ள விதம் குறித்து ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

பேச்சு - ஒலி வடிவம், கருத்து வடிவம்:

பெர்டினான்டி சசூர் (Ferdinand de Saussure) என்னும் மொழியியலாளர் மொழி பற்றிக் கூறுகையில் மொழிக்கு இரு வடிவம் உண்டு என்கிறார். ஒன்று ஒலி வடிவம் மற்றொன்று கருத்து வடிவம் ஆகும். ஒலி வடிவத்தைக் குறிப்பான் (Signifier) என்றும் கருத்து வடிவத்தைக் குறிப்பீடு (Signified) என்றும் குறிப்பிடுகிறார். இந்தக் குறிப்பான் எனும் ஒலிவடிவமும் குறிப்பீடு எனும் கருத்துவடிவமும் சேர்ந்துதான் குறி உருவாகிறது என்று கூறுகின்றார். குறிப்பானெனும் ஒலிவடிவத்திற்கும் குறிப்பீடு எனும் கருத்து

http://Creativecommons.org//license/by/4.0/.

வடிவத்திற்குமிடையிலான உறவு இருவிதத்தில் இருக்கும். ஒன்று காரண காரிய உறவு மற்றொன்று இடுகுறி உறவு என்று கூறுகிறார். ஒலி வடிவத்திற்கும் கருத்து வடிவமான காட்சி வடிவத்திற்கும் நேரடியான உறவு இருந்தால் அதைக் காரண காரிய உறவு என்று கூறுகிறார்.

எடுத்துக்காட்டு:

காகம் என்ற ஒரு பறவையின் பெயரை எடுத்துக் கொள்வோம். கா, கா எனக் கரைவதால் அப்பறவைக்கு அப்பெயர் வந்திருக்கிறது. அப்பறவைக்கும் அப்பறவையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தும் ஒலி வடிவத்திற்கும் இங்கு நேரடி உறவு உள்ளது. இந்த நேரடி உறவைத் தான் காரண காரிய உறவு என்கின்றார் சசூர். அதே வேளையில் 'மரம்' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். மரம் என்ற பொருளின் கருத்து வடிவம் எனும் காட்சி வடிவத்திற்கும் அதன் ஒலிவடிவத்திற்கும் நேரடியான உறவு இல்லை. அவ்வுறவானது இட்டுக்கட்டப்பட்டதாக இடுகுறி நிலையிலேயே உள்ளது. எனவே அதனை இடுகுறி உறவு என்கிறோம்.

சசூர் அவர்கள் குறிப்பிடுவது போன்று ஒலிக்கும் காட்சிக்குமே நேரடியான உறவில்லாத பொழுது ஒலியையும் காட்சியையும் இணைத்த வரிவடிவமான எழுத்துக்கள் இன்னும் இன்னும் கூடுதலான இடுகுறித்தன்மையைக் கொண்டவையே எனலாம். அவ்வாறிருக்கும் பொழுது மனித சமூகங்கள் பேச்சை எழுத்தாக மாற்றியுள்ள நிலை நமக்கு வியப்பளிக்கக் கூடியதாக உள்ளது.

எழுத்து - வரி வடிவம்:

மக்களின் பேச்சிற்கான அல்லது மொழிக்கான வரி வடிவமே எழுதும் எழுத்தாகும். அவ்வெழுத்தின் மூலம் ஒரு பொருளை அல்லது ஒரு காட்சியை அல்லது ஒரு செயலை குறிக்கவோ/ விளக்கவோ/ எடுத்துரைக்கவோ முடியும். நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று பேச்சின் ஒலி வடிவத்திற்கும் கருத்து வடிவத்திற்குமிடையிலான உறவே நேரடித் தன்மையற்றதாக இருக்க, வரிவடிவத்திற்கும் பேச்சு வடிவத்திற்குமான உறவு இன்னும் கூடுதலான இடுகுறித்தனமையைக் கொண்டவையாகவே விளங்குகின்றன **எனலாம்.**

எழுத்து வகைகள்:

உலகில் உள்ள எழுத்துக்கள் எழுதப்பட்ட விதத்தை அடிப்படையாகக் கொண்டு நான்காக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1) சித்திர எழுத்து
2) உணர்வெழுத்து
3) தன்மையெழுத்து
4) ஒலியெழுத்து

இந்நான்கு எழுத்து முறைகளில் தமிழ் எழுத்து வடிவானது ஒலியெழுத்து வகையைச் சேர்ந்ததாகும். நம் ஒலியே, பேச்சே, மொழியே, தமிழ் மொழியே எழுத்தாக வடிக்கப்பட்டுள்ளன.

http://Creativecommons.org//license/by/4.0/.

எழுதப் பயன்படுத்தப்பட்ட களங்கள்:

உலகில் எழுத்துக்கள் பல்வேறு தன்மை வாய்ந்த பொருட்களில் எழுதப்பட்டுள்ளன. சுமேரிய நாகரீகத்தில் களிமண் தட்டுகளில் எழுதப்பட்டுள்ளன. முதலில் பச்சைக் களிமண் தட்டில் எழுதிப் பின்னர் நெருப்பில் சுட்டுள்ளனர். உரோம, கிரேக்கம் போன்ற நாடுகளில் விலங்குகளின் தோல்களில் எழுதியுள்ளனர். எகிப்தில் பார்பரஸ் எனும் செடியை வெட்டியெடுத்துக் காயவைத்துப் பக்குவப்படுத்தி, அதில் எழுதியுள்ளனர். சீனாவில் மூங்கில் கம்புகளை வெட்டி எழுதுவதற்கு பயன்படுத்தியுள்ளனர். பின்பு பட்டு மற்றும் பருத்தித் துணிகளிலும் எழுதியுள்ளனர். பாறைகளைச் செதுக்கியும் அதில் எழுத்துக்களை எழுதியுள்ளனர்.

சீனாவில் காகிதங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு காகிதங்களில் எழுதும் பழக்கம் உருவானது. ஜெர்மனியில் அச்சு எந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு காகிதங்களில் எழுத்துக்கள் அச்சுக் கோர்க்கப்பட்டன. அதன் பின் உலகம் முழுதும் அதுவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு உலக அளவில் எழுத்துக்கள் பல்வேறுவிதமான பொருட்களைக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. அவ்வகையில் மேற்குறிப்பிட்டதைப் போன்றே பல்வேறுபட்ட களங்களில் தமிழ் எழுத்துக்களும் எழுதப்பட்டுள்ளன. மட்பாண்டங்கள், பாறைகள், கற்கள், ஓலைச்சுவடிகள், துணிகள், செப்பேடுகள், பொற்கட்டிகள் போன்றவற்றில் தமிழ் எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. இங்கு ஆய்வுச் சுருக்கம் கருதி மண்பாண்டங்கள் மற்றும் நடுகல் கல்வெட்டு எழுத்துக்கள் மட்டும் ஆய்வுக்கான களங்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

தமிழ் எழுத்து - சான்றுகள்:

1) **மட்பாண்டங்களில் மக்கட் பெயர்கள்:**

கீழடி ஆய்வுகளில் மண்பாண்டங்களில் எழுத்துப் பொறிப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இத்தமிழ் எழுத்துக்களின் காலம் கி.மு - 6 ஆம் நூற்றாண்டிற்கு முந்தையது என்பதைக் கார்பன் டேட்டிங் ஆய்வு முடிவுகள் நமக்கு உணர்த்துகின்றன. இதன் மூலம் கி.மு - 6 ஆம் நூற்றாண்டிலேயே தமிழர்களிடம் மண்பாண்டங்களில் தமிழில் எழுதும் முறை வழக்கில் இருந்துள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது.

இங்கு நாம் மண்பாண்டங்கள் உருவாக்கப்பட்டதற்கான காரணங்கள் குறித்துப் பார்க்கலாம். சமைப்பதற்கும், உணவு உண்பதற்கும், நீர் அருந்துவதற்கும், நீரை சேமித்து வைப்பதற்கும், தானியங்களைச் சேமித்து வைப்பதற்கும், பொருட்களை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கும் எனத் தங்களது அன்றாடத் தேவைகளுக்காக மட்பாண்டங்களையே பயன்படுத்தியுள்ளனர். அம்மண்பாண்டங்களில் மக்கட் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இது இன்னாருடைய மண்பாண்டக்கலம் என்பதைக் குறிப்பதற்காக / அடையாளப்படுத்துவதற்காகப் பெயர்கள் எழுதப்பட்டிருக்கலாம். மண்பாண்டங்களை உருவாக்கியதும் அதில் பெயர் எழுதப்பட்டதும் அன்றைய தொழில் நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டே செய்யப்பட்டுள்ளன எனலாம். மண்பாண்டங்களில் பெயர்கள்

http://Creativecommons.org//license/by/4.0/.

எழுதும் முறை இருவிதமாகும். பச்சை மண்பாண்டங்களில் காய்ந்தவுடனும் அல்லது மண்பாண்டங்களைக் சுள்ளையில் வேகவைத்த பின்னரும் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன.

மேலும் அக்காலத்தில் நடைபெற்ற கடல் வணிகத்திலும் அதிக அளவில் மண்பாண்டங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வணிகத்தில் பொருட்களைப் பாதுகாப்பதற்கான, எடுத்துச் செல்வதற்கான கருவியாக மண்பாண்டங்களே இருந்திருக்க வேண்டும். அயல் நாடுகளிலும் கடல் வணிகத்தில் மண்பாண்டங்களே அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அயல் நாடுகளிலிருந்து மதுக்கலங்கள் அதிக அளவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அம்மதுக்கலங்கள் அயல்நாடுகளில் உருவாக்கப்பட்ட மண்பாண்டங்களே ஆகும். ஆகவேதான் தமிழகத்தில் நடைபெறும் தொல்லியல் ஆய்வுகளில் தமிழக மண்பாண்டங்களோடு கிரேக்க, உரோமானிய மண்பாண்டங்களும் அதிக அளவில் கிடைக்கப் பெறுகின்றன. இவ்வாறு வணிகத்திற்காகப் பயன்படுத்திய மண்பாண்டங்களில்தான் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. இச்செய்தியை சிலப்பதிகாரம் பதிவு செய்துள்ளது.

“வம்ப மாக்கள் தம் பெயர் பொறித்த கண்ணெழுத்துப்
படுத்த எண்ணும் பல் பொதிக் கடை முகவாயிலும் “

இவ்வாறு மண்பாண்டங்களில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் கண்ணெழுத்து என்று அழைக்கப்பட்டதாகவும் அவற்றை எழுதியவர்கள் சித்திரக்காரர்கள் என அழைக்கப்பட்டதாகவும் மகாராசன் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மண்பாண்டங்களில் எழுதப்பட்ட தமிழ் எழுத்தானது கடல் வணிகத்தில் முக்கிய இடம் பெற்றிருந்ததை இதன்மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு ஒரு பெயரை மண்பாண்டங்களில் எழுதியதற்குப் பின்னதாக பல்வேறுவிதமான கூறுகள் உள்ளடங்கியிருந்துள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.

மக்கட் பெயரை எழுதுதல்:

மட்பாண்டங்களில் தான் முதன்முதலில் மனிதர்களின் பெயர்களுக்கு வரிவடிவம்/ தனி எழுத்து வடிவம் தரப்பட்டுள்ளதைப் பார்க்க முடிகின்றது. அதற்கு முன்னர் மனிதர்களைக் குறிப்பதற்குக் கோட்டு உருவங்களும் குறியீடுகளுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. மனிதர்கள் வேட்டையாடுவது போன்ற பாறை ஓவியங்களை இதற்கான ஆதாரமாகக் கொள்ளலாம். இப்பாறை ஓவியங்களின் மூலம் அக்காலகட்டத்து மனிதர்கள் எவ்வாறு குழுவாகச் சேர்ந்து வேட்டையாடினார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. ஆனால், யார் யார் வேட்டையாடினார்கள் என்பது போன்ற செய்திகளைத் தெரிந்து கொள்ள இயலாது. தனிப்பட்டு ஒருவரை அடையாளப்படுத்துவது என்பது அக்காலகட்டத்தில் கடினமான ஒன்றாகும். அதேவேளை, பெயரை எழுதுதல் என்பது, ஒருவரை தனித்து அடையாளப்படுத்துவதாகும். அப்பெயரே அவராகிறார். அதுவே அவரது அடையாளமாகிறது. இவ்வாறு தனி நபர்களின் பெயர்களை எழுத்தில் வடிப்பது என்பது மிக முக்கியமானதாகும்.

மேலும் இங்கு நாம் மற்றொன்றையும் கவனப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. ஒரு மனிதரைக் குறிப்பதற்கான/ ஒலிப்பதற்கான ஒலிக்கும் அவருக்கும் நேரடி உறவு

http://Creativecommons.org//license/by/4.0/.

இல்லை. அது இடுகுறி நிலையிலேயே உள்ளது. எடுத்துக்காட்டு மலர்விழி என ஒரு பெண்ணை அழைப்பதற்கான ஒலிவடிவத்தை ம - ல - ர் - வி - ழி என்று வைத்துக் கொள்வோம். அந்த பெண்ணிற்கும் அந்த ஒலிவடிவத்திற்கும் நேரடியாக உறவு இல்லை. ஆனால், ம - ல - ர் - வி - ழி என்னும் ஒலியானது அந்த பெண்ணைக் குறிப்பதற்காகவே பயன்படுத்தப்படுகிறது.

எழுத்தின் வழியாக ஒருவரை அடையாளப்படுத்துதல் என்பது மிகவும் சிரமமான காரியம். ஒருவரின் பெயரை ஒலிக்கும் பொழுதே அந்த ஒலிக்கும் அந்த நபருக்கும் நேரடியாக சம்பந்தம் இல்லை என்பதையும் அது அரூபமாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டியது என்பதையும் அறிவோம். சூழல் அவ்வாறு இருக்க ஒரு குறிப்பிட்ட நபரின் பெயரை வரிவடிவமாக மாற்றுவது தொடக்க நிலையில் எவ்வளவு கடினமான செயலாக இருந்திருக்கும் என்பது விளங்கும். ஆனால், தமிழில் வரி வடிவத்தில் மக்களின் பெயர் எழுதப்பட்டுள்ளதும் அந்த வரி வடிவமானது அம்மக்கள் எல்லோராலும் புரிந்து கொள்ளப்பட்டிருந்ததும் ஆச்சர்யமிக்க ஒன்றாகும். ஏனெனில், சீனாவின் சித்திர எழுத்துக்கள் என்பவை ஒரு பொருளை அல்லது ஒரு காட்சியைச் சித்திரமாக வரைவதாகும். சித்திரங்களே அங்கு எழுத்தாக மாறுகின்றன. ஆனால், தமிழின் எழுத்து வடிவமானது ஒலியெழுத்து வடிவமாகும். இவ்வொலி எழுத்துக்கள் இடுகுறித்தன்மை கொண்டவையாகும். அதில் ஒருவரின் பெயரை எழுதுவதும் அப்பெயரே அவரின் அடையாளமாக மாறுவதும் வியக்கத்தக்க ஒன்றாகும்.

மேலும் தமிழ் எழுத்தின் வழியே ஒருவரின் பாலின அடையாளத்தைத் தெரிந்து கொள்ளவும் இயலும். பெண் பாலினப் பெயரைக் குறிக்க 'ள்' விகுதியும், ஆண் பாலினப் பெயரைக் குறிக்க 'ன்' விகுதியும் இடப்படுகிறது. எனவே, ஒருவருடைய பெயரை எழுதுவதுடன் இணைந்தே அவரின் பாலின அடையாளமும் வந்து சேர்ந்து விடுகிறது.

இவ்வாறு புழங்கு பொருட்களில் தம் பெயரை வடித்த தமிழ்ச் சமூகத்தில் இந்நிலை இன்னும் தொடர்வதைக் காண முடிகின்றது. காலந்தோறும் தொழில்நுட்பங்கள் மாறிக்கொண்டே வருவதால் அதற்கேற்றார் போல் பயன்பாட்டுப் பொருட்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தொடக்ககாலத்தில் மண்பாண்டங்களைப் பயன்படுத்தத் தொடங்கிய மக்கள், தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப வெண்கலம், ஈயம், சில்வர், காப்பர், பிளாஸ்டிக் எனப் பல்வேறு விதமான பொருட்களைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனாலும் பாத்திரங்களில் பெயர்களை வடிக்கும் வழக்கம் மட்டும் தொடர்ந்து வருவதைக் காணமுடிகின்றது. இன்றளவும் அவை தமிழ் எழுத்து வடிவிலேயே பெரும்பாலும் வடிக்கப்படுகின்றன. இதில் நாம் மற்றுமொரு செய்தியையும் கவனிக்க வேண்டும். பெண்கள் திருமணம் முடித்து கணவன் வீட்டிற்குச் செல்லும் பொழுது தாய்வீட்டுச் சீராகப் பாத்திரங்களைக் கொண்டு செல்கின்றனர். அந்தப் பாத்திரங்களில் பெரும்பாலும் அந்தப் பெண்ணின் பெயரோ அல்லது கணவன் மனைவி இருவரின் பெயர்களுமோ எழுதப்பட்டிருக்கும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

இவ்வாறு தமிழ் எழுத்து மரபானது பண்பாட்டு மரபுடன் இணைந்து கலந்திருப்பதையும் அது இன்றுவரை தொடர்வதையும் வரலாறு நெடுகிலும் காணமுடிகின்றது.

தமிழ் எழுத்துக்களை மக்களின் புழங்கு பொருட்களாக இருந்த மண்பாண்டங்களில் எழுதப்பட்டதைப் போன்று மலைகள், கற்கள், போன்றவற்றிலும் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் சங்க கால நடுகல் கல்வெட்டுக்கள் குறித்துக் காண்போம்.

2) **நடுகல் கல்வெட்டு எழுத்துக்களும் ஊர்ப் பெயர்களும் :**

தமிழில் கிடைக்கப்பெற்றுள்ள நடுகற்களில், தேனி மாவட்டத்தில் கடந்த 2002 - ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற புலிமான் கோம்பைக் கல்வெட்டானது, மிகப் பழமையானதாகும். இக்கல்வெட்டுக்கள் ஆநிரை கவர்தல் போரின் போது, இறந்துபட்ட வீரனுக்காக எடுக்கப்பட்ட நடுகற்கள் பற்றிய செய்தியைத் தருகின்றன.

நடுகல் ஒன்று:

1. .... அன் ஊர் அதன்
2. .....ன் அன் கல்

நடுகல் இரண்டு:

1. வேள் ஊர் அவ்வன்
2. பதவன்

நடுகல் மூன்று:

1. கல்
2. பேடுதீயன் அந்தவன்
   கூடல் ஊர் ஆகோள்

" முதல் கல்வெட்டு கால்நடைக்கான போரில் இறந்த தீயன் அந்தவன் என்பவருக்காகவும், இரண்டாவது கல்வெட்டு ஆதன் என்பவரின் நினைவாகவும், மூன்றாவது கல்வெட்டு பாட்டவன் அவ்வன் என்பவரின் நினைவாகவும் நடப்பட்டுள்ளன. இதில் இரண்டாவது, மூன்றாவது கல்வெட்டுகள் கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றும், முதல் கல்வெட்டு அதற்கும் முந்தியது என்றும் முனைவர் கா.ராஜன் அவர்கள் தெரிவிக்கிறார்.

தொல்லியல் அறிஞர் கா. ராஜன் அவர்கள் குறிப்பிடுவது போன்றே இக்கல்வெட்டின் எழுத்துப் பொறிப்புகள் மூன்று விதமான தன்மையைக் கொண்டுள்ளன எனலாம். ஒன்று மட்பாண்டங்களில் எழுதப்பட்டது போன்றே இக்கல்வெட்டுக்களிலும் தீயன், ஆதன், அந்தவன் என்ற பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. இரண்டாவது இக்கல்வெட்டுக்களில் அன் ஊர், வேள் ஊர், கூடல் ஊர் என ஊர்ப் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. இதிலிருந்து நாம் ஒரு செய்தியைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. கல்வெட்டுக்களில் மக்கட்பெயருடன் இணைத்து ஊர்ப் பெயர்களும் எழுதப்பட்டுள்ளன என்பதுதான் அது. மூன்றாவதாக என்ன காரணத்திற்காக இக்கல்வெட்டு எடுக்கப்பட்டது என்ற செய்தியையும் அவைச் சொல்லிச் செல்கின்றன.

http://Creativecommons.org//license/by/4.0/.

மண்பாண்டங்கள் அன்றாட பயன்பாட்டிற்கும், கடல் வணிகத்திற்கும் பயன்பட்டனவென்றால் நடுகல் கல்வெட்டுக்கள் போரையும் ஊரையும் இறந்த வீரர்களையும் பற்றிப் பேசுகின்றன. ஊர், போர் எல்லாம் உருவாக்கப்பட்ட பின்னரே இந்நடுகற்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும். மண்பாண்டங்களை உற்பத்தி செய்வதற்கும் அவற்றில் எழுத்துக்களை எழுதுவதற்கும் ஒருவிதமான தொழில்நுட்ப அறிவு தேவை. அதே போன்று கற்களை, பாறைகளைச் செதுக்குவதற்கும், அவற்றில் பெயர்களைப் பொறிப்பதற்கும் வேறுவிதமான தொழிநுட்ப அறிவு தேவைப்பட்டிருக்க வேண்டும். கற்களில், பாறைகளில் பெயர்களைப் பொறித்தல் என்பதெல்லாம் இரும்பின் பயன்பாட்டிற்குப் பின்னரே சாத்திமாகியிருக்க முடியும் என்பது தெளிவு. மேலும் நிலையான, நிலம் சார்ந்த, ஊர் சார்ந்த வாழ்க்கை முறைக்கு வந்த பின்னர் தான் ஊர்ப் பெயர்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு தமிழ் எழுத்து மரபானது பெயர், ஊர், போர் என அடுத்த கட்டமாக வளர்ச்சியடைந்துள்ளதைக் காண முடிகின்றது.

தொல்காப்பியத்தில் போரில் இறந்த வீரனுக்கு நடுகல் எடுப்பதற்கான முறை பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக, சங்க இலக்கியங்களிலும் போரில் இறந்த வீரர்களுக்கு எழுப்பப்பட்டுள்ள நடுகற்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அதில் கிடைக்கும் கூடுதல் தகவல் என்னவெனில், இறந்த வீரனின் பெயருடன் சேர்த்து அவரது உருவமும் வரையப்பட்டு இருப்பதுதான்.

மேலும் நாம் இங்கு இன்னொன்றையும் கூர்ந்து கவனிக்க வேண்டும். இறந்தவர்களைத் தாழியில் வைத்துப் புதைக்கும் பழக்கம் மக்களிடம் வழக்கில் இருந்துள்ளது. அவ்வாறிருக்க, நடுகல் எனத் தனியாக ஒரு வடிவத்தை எடுக்க வேண்டிய அவசியம் என்ன என்பதையும் நாம் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. இறந்தவர்களை முதுமக்கள்தாழியில் வைத்துப் புதைக்கும் வழக்கம் அனைவருக்குமானதாக இருந்திருக்கலாம். நடுகல் எடுப்பது, வீரர்களுக்கு மட்டும் எடுக்கப்பட்டிருக்கலாம். அதேவேளையில் வீரர்கள் அனைவருக்கும் நடுகல் எழுப்பப்படவில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டியுள்ளது. எனவே, ஒன்று அவன் மிகச்சிறந்த வீரனாக இருக்கலாம். அதனால் அவனது வீரத்தைத் தனித்து சிறப்பித்து அடையாளப்படுத்துவதற்காக நடுகல் உருவாக்கப்பட்டிருக்கலாம். மற்றொன்று இறந்த வீரரின் உடல் கிடைக்கப்பெறாமல் இருந்ததால் அவரின் பெயரை எழுத்தாக வடித்து, உருவத்தை வரைந்து அவருக்கு நடுகல் எடுக்கும் வழக்கம் உருவாகியிருக்கலாம். இத்தகைய நடுகற்கள் பற்றிய அகநானூற்றுப்பாடல் பின் வருமாறு.

‘விழுத்தொடை மறவர் வில்இட வீழ்ந்தோர்
எழுத்துடை நடுகல் இன்நிழல் வதியும்’

கல்லில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டதையே எழுத்துடை நடுகல் என்று இப்பாடல் கூறுகிறது.

பண்பாட்டுத் தளத்தில் மக்கள் இந்நடுகற்களை நெல்லும் மலரும் தூவி வழிபட்டதற்கான குறிப்புகள் சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இன்றும் இந்நடைமுறை வழக்கில் இருப்பதைக் காண முடிகின்றது. மன்னர்களின் பெயர்கள் கூட

http://Creativecommons.org//license/by/4.0/.

இந்நடுகற்களில் பொறிக்கப்படவில்லை. போரில் இறந்த வீரர்களின் பெயர்களே எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. நடுகல்லின் வழியே அக்காலகட்டத்தில் வீரம் மையப்படுத்தப்பட்டிருந்ததை அறிந்து கொள்ளமுடிகின்றது.

இங்கு நாம் மற்றொன்றையும் கவனப்படுத்த வேண்டும். இன்றும் இறந்தவர்களின் நினைவிடங்களில், கல்லறைகளில் இறந்தவர்களின் பெயர்களை எழுதுவது வழக்கமாக உள்ளது. அதற்கு அடுத்த கட்டமாக, புகைப்படங்களில் இறந்தவர்களின் பெயர்களை, ஆண்டுகளுடன் சேர்த்து எழுதுதல் எனத் தொடர்கிறது.

தமிழ் எழுத்தில் மக்கள் பெயரும் ஊர்ப்பெயரும்:

தமிழ்ச் சமூகம் தமது பெயரை எழுத்தாக அடையாளம் கண்டு கொண்டதும், வணிகம் செய்வதற்கு பயன்படுத்தியது என்பதெல்லாம் நமக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளன. மட்பாண்டங்களில் தனி நபரின்/ வணிகரின் பெயர் மட்டுமே பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால், நடுகல்லிலோ வீரனின் பெயருடன், அவனது ஊர், என்ன காரணத்திற்காக இறந்துபட்டான் என்கிற செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

ஒரு சமூகம் தன்னுடைய எழுத்தில் தம் பெயரைப் பொறித்துக் கொள்வதும் தம் வணிகச் செயல்பாடுகளையும் வழிபாட்டு முறைகளை அமைத்துக் கொள்வதும் அவற்றைத் தொடர்வதும் அச்சமூகத்தின் இயங்கியலோடு இணைந்ததாகும். மேலும் கடல் வணிகமும், போரும் தமிழ் எழுத்து வரலாற்றில் மிக முக்கியமான கூறுகளாக இருந்துள்ளன. இவ்வெழுத்துக்களின் வழியே தமிழ்ச் சமூகத்தின் வரலற்றை, தமிழ் எழுத்தின் வரலாற்றை அறிந்து கொள்ளவும் பண்பாட்டை எழுதிக்கொள்ளவும் முடிகின்றது .

துணைநூற் பட்டியல்:

1. மகாராசன், 2019,தமிழர் எழுத்துப் பண்பாட்டு மரபு, ஆதி பதிப்பகம்.
2. ந. இரத்தினக்குமார், பெ. க. பெரியசாமி ராஜா (தொ. ஆ), 2018, தொல்லியல் வரலாற்றுத் தடங்கள், கருத்து = பட்டறை

http://Creativecommons.org//license/by/4.0/.

30. சிலப்பதிகாரத்தில் இயற்கைநுண்ணறிவூட்டலும் புறந்தள்ளும் கதைப்பின்னலும்

முனைவர் ப.வித்தியாவதி
கௌரவவிரிவுரையாளர்,தமிழ்த்துறை,
அரசுகலைக்கல்லூரி(தன்னாட்சி),கோவை-18

DOI 10.5281/zenodo.15072336.

Abstract :

Today's man wants to completely shake off the grip of nature and immerse himself in the shadow of artificiality. Artificiality is the driver of today's world dynamics. Artificial intelligence is the stage where the dynamics of nature are transformed into the dynamics of artificiality. Silapadhikara can be pointed out as an epic that built those who acted in opposition to the driven instinctive environment of nature. The article is an investigation into the background of the natural intelligence of the dynamics.

Key Words : Silapathigaram - Plot - Environment - Nature

இன்றைய மனிதன் இயற்கையின் பிடியைமுழுவதும் உதறிவிட்டு செயற்கையின் நிழலக்குள் தன்னைஉட்புதைத்துக் கொள்வதையே விரும்புகிறான். இன்றையஉலக இயங்கியலின் இயக்கியாகச் செயல்படுவதுசெயற்கையே. இயற்கையின் இயங்கியலைச் செயற்கையின் இயக்க மாற்றியாக மாற்றமுனையும் நிலையே செயற்கைநுண்ணறிவு. இயற்கையின் உந்துதல் உள்ளுணர்வு சூழல்தனை மறுதலித்து எதிர்நிலையில் இயங்கியவர்களைக் கட்டமைத்த காப்பியமாகச் சிலப்பதிகாரத்தைச் சுட்டலாம். இயங்கியலின் இயற்கை நுண்ணறிவூட்டலைப் புறந்தள்ளியகதைப்பின்னலைஆய்வதாகக் கட்டுரைஅமைகிறது.

இயற்கையின் இயங்கியல்

விசும்புபருப்பொருளுடன் இயக்கவியல் விசையில் இயைந்து நிற்கின்றது. காலமும் விசும்பும் எல்லையற்றதன்மையுடன் விளங்குவதைப் போன்றுஊழ்வினையும் எல்லை யற்றிருக்கின்றது. ஐம்பூதங்கள் இயற்கையின் ஆற்றல் சக்திநிலையை இயற்கை நுண்ணறிவுப ;புலனாக அடையாளப்படுத்தலாம்."உலகில் காணப்படும் அனைத்தும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. முற்றிலும்இயக்கமோ,மாற்றமோ இல்லாதபொருட்கள் என்றுசொல்வதற்கு இவ்வுலகில் ஒன்றும் இல்லை. பருப்பொருளின் இருப்புஎன்பதே இயக்கத்தில்தான் நிலவுகிறது. இயக்கம் இன்றிபருப்பொருள் இல்லை. அதேபோன்றுபருப்பொருள் இன்றி இயக்கமும் இல்லை, இயங்குகிறபொருள் என்பதுவிசும்போடும் (இடத்தோடும்) காலத்தோடும் (ளு்யுஊநு யு்னு வுஐஆநு) இணைந்தேசெயல்படுகிறது. ஒவ்வொருபொருளும் தம்முள்ளும் பிறபொருட்களுடனும் இணைந்துசெயல்படுவதையே இயக்கம் என்று கூறுகிறோம். இந்த இயக்கம் பார்வைக்கு இயக்கமற்றதாக இருக்கலாம். இயக்கமற்றஅமைதிநிலைஎன்பதுபொருளின் ஒப்பீட்டுத் தன்மையில்தான் காணப்படுகிறது." (மார்க்சியதத்துவம் - பக்:38,39) என்னும இயங்கியலைக் காரணமும் விளைவும் (ஊயுருளுநு யு்னு நுகுகுநுஊவு)என்றகோட்பாட்டுடன் இணைவுறுத் திசிலப்பதிகாரக் கதைப்பின்னல் நோக்கத்தக்கது.

http://Creativecommons.org//license/by/4.0/.

காரணமும்,விளைவும்

ஒரு நிகழ்வு நடைபெற்றது எனில் அது நிகழ்வதற்கான காரணங்களின்றி நடைபெறுவதில்லை. நிகழ்வு குறிப்பிட்ட காரணங்களின் விளைவாகும். குறிப்பிட்ட விளைவை ஏற்படுத்துகின்ற காரணியே அந்நிகழ்வு தோன்றக் காரணமாகும்.

ஒரு நிகழ்வு மற்றொரு நிகழ்வை உருவாக்குகிறது எனின் முந்தையது காரணம் என்றும் பிந்தையது விளைவு என்றும் குறிப்பிட்டனர். .காரணமான நிகழ்வு விளைவுக்கு முன்பானது.விளைவு காரணத்துக்குப் பிந்தியதாகும். காரணத்தால் ஏற்படும் விளைவு என்பது காரண வரிசைத் தொடரை வெளிப்படுத்தும். காரணமும் விளைவும் இடங்களைமாற்றிக் கொள்வதையும் உணர்த்துகிறது. இப்போது விளைவாய் இருக்கும் நிகழ்வுமற்றொன்றுக்குக் காரணமாகும் போது முந்தைய விளைவுபுதியதுக்குக் காரணமாகிறது. இதன் தொடர்ச்சி எல்லையற்று நிகழ்கிறது. குறிப்பிட்டகாரணங்கள் குறிப்பிட்டவிளைவைக் கட்டாயம் ஏற்படுத்தும் என்பதில் அவற்றின் அவசியத்தன்மைஅடங்கியுள்ளதுஎன்னும் காரணவிளைவுக் கோட்பாடு சிலம்பில் உள்ளுறுத்தும் வினையாகஅடையாளப்படுத்துகிறார் இளங்கோவடிகள். வினை இயங்கியல் நிலையில் காலம் வெளி இவற்றில் இணைவுற்று இயற்கை நுண்ணறிவுப் புலனால் கனவாக முன்னுணர்த்தப்பட்டு விளைகாலத்தில் விளைவாக மாறுகிறது. வினைவிளையும் காலம் முன்பு இயங்கியல் இயற்கை நுண்ணறிவுப் புலனால் நுட்பமாகக் கனவினூடே முன்னறிவித்தலை நிகழ்த்துகிறது. காலம், வெளி என்ற இயற்கை விளைவின் முன்புஉரியவரின் சூழலுக்குக் கனவின் மூலம் அறிவிக்கின்றமை இயற்கை நுண்ணறிவூட்டலாகக் கொள்ளத்தக்கது. கண்ணகி, கோவலன் கனவு கோவலனின் வினை விளைவுக்கும் பாண்டிமாதேவியின் கனவுபாண்டியனின் வினைவிளைவுக்கும் காலத்தின் முன்னுணர்வூட்டலாம்.

ஊழ்வினைக் கதைப்பின்னலும் பின்புலமும்

சிலப்பதிகாரக் கதைப்பின்னல் ஊழ்வினையைஅடிப்படையாகக் கொண்டது. மங்கலவாழ்த்தில் தொடங்கி ஊழ் முந்துறுத்தகதைநகர்வுஅமைகிறது. நேரிடை நிகழ்வினூடே கானல்வரியிலும் கண்ணகியின் மதுரைப் பயணத்திலும் பின்புலமாக இயங்குகிறது.

இயற்கை நுண்ணறிவூட்டலாய் கனவு

இயக்கவியல் விதிப்படிபொருளுக்கும் விசும்பிற்குமானஉறவாகமனிதனுக்கும் அவன் வினைக்குமான உறவுபிறவிகளைக் கடந்தும் நீள்கிறது. இந்தச் சூழலுறவுவிசும்பில் நிலைநின்று குறிப்பிட்ட வினைவிளைகாலத்தில் வெளிப்படும். விசும்பில் நிலைபெற்ற வினை புலனுணர்விற்கு முன்னூட்டும் வகையில் சிலப்பதிகாரத்தில் கனவுகளாகத் தோன்றுகின்றன.

மூன்றுகனவுகள்

கண்ணகி,கோவலன்,பாண்டிமாதேவிஎனும் மூவருக்கும் கனவுவருகின்றது. கனவின் மூலம் வினைவிளைகால நிகழ்வின் நிழல் உணர்வு இயற்கையினூடே கனவாக உணர்த்தப்படுகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

கண்ணகியின் கனவில் இருவரும் பெரியநகரில் புகுதல், இடுதேளிடுதல், பழிச்சொல், கோவலனுக்குத் தீங்கு,அரசன் முன் வழக்குரைப்பதுஎனநிழல் வரைபடமாகவேகண்ணகிக்கு இயற்கை உணர்த்துகிறது. (சிலப்பதிகாரம், கனாத்திறம். உ.க-பா.எண்:45-54) கனவினில் முன்னுணர்த்தப்பட்டு கலங்கிவருந்தியபோதும் கோவலன் அழைத்தவுடன் கனவைப் புறந்தள்ளிவிட்டுமதுரைக்குப் புறப்படுகிறாள்.

கோவலன் கனவு

அடைக்கலக்காதையில் தான் கண்டகனவைநினைத்துவருந்தியநிலையில் எதிரிலிருந்தமாடலமறையோனிடம் உரைக்கிறான். கீழ்மகன் ஒருவன் செயலால் மதுரைமாநகரில் கண்ணகிதுயர் எய்த, ஆடை பிறரால் கொள்ளப்பட,எருமைமீதுகோவலன் ஏறிச் செலுத்த,பற்றற்றோர் பேறடைய,மணிமேகலைதுறவுபூணஎனஅனைத்தும் நனவுபோலத் தோன்றியகனவாகும் எனக் கோவலன் தன் கனவினைக் கூறுகிறான் இந்நிகழ்வும் பின்னர் நிகழவிருக்கும் வினைவிளைவுஅது இயற்கை இயங்கியலினால் முன்னுணர்வாய் உணர்;த்தப்படுகிறதுமேலும் கனவைப் புறந்தள்ளிச் செல்லமுனைந்தகோவலன் எதிரில் எருதுஒன்றுபாய்ந்துதாக்கவருகிறது. அதனையும் பொருட்படுத்தாதுவினைவிளைகாலம் நெருங்கசெல்கிறான். (சிலப்பதிகாரம்-கொ.க. காதை- பாஎண்95-106)

பாண்டிமாதேவியின் கனவு

கண்ணகி அரண்மனைவாயிலை நெருங்கி போது பாண்டிமாதேவி தான் கண்டதீக்கனவைத் தோழியிடம் கூறிக்கொண்டிருந்தாள். வெண்கொற்றக் குடையும் செங்கோலும் கீழேவீழ்தல், இடைவிடாதவாயில் மணிஓசை, சூரியனை இருள் விழுங்குதல்.இரவுவானில் வானவில் போன்றனதோன்றிவருந்தஅவள் தன் கணவனிடம் கூறிமுடிக்கையில் கண்ணகியின் வழக்குதொடங்கிவிடுகிறது.

கோவலன்

(**அடைக்கலக்காதை**)

கண்ணகி பாண்டிமாதேவி (கனாத்திறம் உரைத்தகாதை) (வழக்குரைகாதை) மூன்று வெவ்வேறு நபர்களிடம் தோன்றிய கனவு ஒரு தீயநிகழ்வைப் பின்புலமாகக் கொண்டே அமைந்தது. கண்ணகி கண்ட கனவிற்கும் நிகழ்விற்குமானகாலமும்,கோவலன் கண்ட கனவிற்கும் நிகழ்விற்குமானகாலமும்,பாண்டிமாதேவிகண்டகனவிற்கும் நிகழ்விற்குமான காலமும் மாறுபட்ட கால இடைவெளியைக் கொண்டன.

கண்ணகிகோவலன் பாண்டிமாதேவி

(கனவு) (கனவு) (கனவு)

கோவலன்பாண்டியன்

(இறப்பு) (இறப்பு

ஒவ்வொரு நிகழ்வும் அதன் காரணத்தை அடியொற்றிய விளைவுகளாகவே காட்டப்படுகின்றன. இருப்பினும் கால இடைவெளி மாறுபாடு கொண்டுள்ளன. கண்ணகி, கோவலன் கனவிற்கும் கோவலன் இறப்பிற்குமானகாலவெளியென்பதுவினையின் முன்னுணர்வித்தலுக்கும் விளைகாலத்திற்குமான வெளியாக அடையாளப்படுத்தலாம். இயற்கையி;ல் தேங்கிய வினையின் செயல்பாடு கனவின் மூலம் முன்னுணர்த்தி

http://Creativecommons.org//license/by/4.0/.

வினைவிளை காலத்தில் நிகழ்ந்துவிடுகிறது. பாண்டிமாதேவியின் கனவிற்கும் அதன் விளைவிற்குமானவெளிஎன்பதுஅதனைவெளிப்படுத்தியஅளவிலேயேநிகழ்ந்துவிடுகிறது.

கோவலன் முற்பிறவியில் சங்கமனைப் பொய்சாட்சி மூலம் கொலை தண்டனைக்கு ஆளாக்குகிறான். சங்கமனைக் கோவலனின் பொய்சாட்சிகொலைக்குஆளாக்கியதைப் போன்றே கோவலனும் பொய்சாட்சிக்குஆளாக்கப்பட்டுக் கொல்லப்படுகிறான். காரணியாக விளங்குபவன் தன் சுய சிந்தனையால் சரியான முடிவெடுக்கும் போது தவறுகளைத் தடுக்க இயலும். அதுவே அவர்களுக்கான வினைவிளை காலவெளி.

பாண்டிய மன்னனின் வினைவார்த்திகனுக்கு வழங்கிய தண்டனையால் விளைந்ததாக மதுராபதி தெய்வம் கூறுகிறது. ஒருவரின் வழக்கை ஆராயாமல் தீர்ப்பு வழங்கினால் தன் வினைக்குத் தானே காரணியாகி விளைவை எதிர்கொள்ள நேரிடும். தண்டனை தீர்மாணிப்பவனுக்குக் குருகிய கால வெளியாகவும் இளங்கோவடிகள் கதைப்பின்னலைஅமைத்துள்ளார்

முடிவு:

ஒவ்வொரு வினையும் அதன்; எதிர்விளைவைஉருவாக்கும். காரணம்விளைவுக்கு இயங்கியல் ஊடகமாகவிளங்குகிறது. காலம் விசும்பில் தேங்கிய வினை உரிய விளைகாலத்தில் விளைவிக்கும். அதனை இயற்கைதன் நுண்ணறிவால் உணர்த்தினாலும் தடுக்க இயலாது என்பதைத் தனதுகதைப்பின்னலின் மைய இழையாக இளங்கோவடிகள் அமைத்துள்ளார்

துணைசெய்த நூல்கள்:

1. உ.வே.சா- சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்குநல்லாருரையும், உ.வே.சா நூல் நிலையம்,சென்னை-90
2. அ.கா.ஈஸ்வரன் - மார்க்சியதத்துவம், பொன்னுலகம் பதிப்பகம்,திருப்பூர்-03

http://Creativecommons.org//license/by/4.0/.

31. திருமுருகாற்றுப்படையில் குறிப்பு உரிச்சொற்கள்

திருமதி மு.பூங்கோதை,
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
மின்னஞ்சல் - poonkothai-tam@sfrcollege.edu.in அலைபேசி - 7010350017
DOI 10.5281/zenodo.15072368.

Abstract :

The adjective is registered as a word that is reserved for poems only. Adjectives provide a denotative meaning along with music and character in their ability to describe the meaning. Out of the 120 adjectives mentioned by Tolkappiyar, 96 adjectives are denotative adjectives. This article aims to identify these denotative adjectives and to identify the usage and changes in the meaning of denotative adjectives, which give one meaning to many words in Thirumurukatrupadai.

Key Words : Ancient Tamil - Kappiyam - Aatruppatai

முன்னுரை

செய்யுளுக்கு மட்டுமே உரிமை பூண்டவை என்று முத்திரையிடப்பட்ட சொல்லாக உரிச்சொல் பதிவு செய்யப்பட்டுள்ளது. உரிச்சொற்கள் பொருளை விளக்குகின்ற தன்மையில் இசை, பண்பு ஆகியவற்றோடு குறிப்பு பொருளையும் தருகின்றன. தொல்காப்பியர் சுட்டும் 120 உரிச்சொற்களுள் 96 உரிச்சொற்கள் குறிப்பு உரிச்சொற்கள் ஆகும். அக்குறிப்பு உரிச்சொற்களை எடுத்துக்காட்டுவதோடு திருமுருகாற்றுப்படையில் பல சொல் ஒரு பொருள் தருகின்ற குறிப்பு உரிச்சொற்களின் பொருள் நிலையிலான பயன்பாட்டையும் மாற்றங்களையும் கண்டுணர்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

அகராதிகள் தரும் விளக்கம்

தமிழில் தோன்றியுள்ள ஒவ்வொரு சொற்களும் ஏதேனும் ஒரு பொருளையோ, அல்லது பல பொருளையோ குறிப்பதாக உள்ளது. குறிப்பு என்பதற்கு அகராதிகள் பலவாக பல்வேறு விதமாக விளக்கங்களை தருவதனை இங்கு காண்போம்.

குறிப்பு என்பது “நிகழ்ச்சி, செய்தி, பாடம் முதலியவற்றின் அளவான தகவல்களுன் கூடிய சிறுவிவரம், சுருக்கம்; சுருக்கமான சான்று; வெளிப்படையாகவோ நேரடியாகவோ அல்லாமல் சிந்தித்து புரிந்துகொள்ளக் கூடியதாக அல்லது தெரிந்து கொள்ள கூடியதாக இருப்பது”1 என்று க்ரியா அகராதி விளக்கம் தருகின்றது. இதிலிருந்து விரிவான கருத்து ஒன்றினை சிந்தித்து அறியக் கூடிய குறுகிய வடிவமே குறிப்பு என்பது தெரிகின்றது.

குறிப்பு என்பதற்கு கழகத் தமிழ் அகராதியானது, “அடையாளம், எழுத்துப் பழக்குங் குறிப்பு, ஒருமை, கருத்து, சைகை, நினைப்புக்கு எழுதின எழுத்து, விருப்பம், உள்ளக்கருத்து வெளிப்படையல்லாது”2 என்றும் விளக்கம் தருகின்றது.

குறிப்புச்சொல் என்பதற்கு “குறிப்பினால் பொருள் உணர்த்துஞ் சொல்” எனவும், குறிப்புரிச்சொல் என்பதற்கு “மனத்தாற் குறித்தறியப்படும் உரிச்சொல்”3 என்று விளக்கம் தருகின்றது. இதிலிருந்து மனதினால் ஆராய்ந்து பொருளினை உணர்த்த வல்ல சொற்களாக உரிச்சொற்கள் திகழ்வது புலனாகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

குறிப்பு என்பதற்கு நர்மதா அகராதியானது "கருத்து, குறிப்புப்பொருள், சைகை" 4 என்று விளக்கம் அளிக்கின்றது. குறிப்புரிச்சொல் என்பதற்கு "மனத்தாற் குறித்தறியப்படு முரிச்சொல்"5 என்று விளக்கம் தருகின்றது.

குறிப்பு பற்றி தொல்காப்பியத்திற்கு உரை எழுதின உரையாசிரியர்களின் கருத்து காண்கையில் அதனை குறித்த தெளிவான விளக்கங்கள் பெறப்படுகின்றன. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதின உரையாசிரியர் இளம்பூரணர், சொல்லிற்கு மட்டும் உரை எழுதின சேனாவரையர், மற்றும் நச்சினார்க்கினியர் ஆகியோர் "குறிப்பு" பற்றி கூறியுள்ளனர்.

இளம்பூரணர் குறிப்பு பற்றித் "தோன்றுவனவற்றிற்குத் தத்தங்குறிப்பு சென்றுநிலை மருங்கு"6 என குறிப்பு உரிச்சொற்களை விளக்கியுள்ளார்

குறிப்பு என்பதை "மனத்தாற் குறித்து உணரப்படுவது" 7 என்று சேனாவரையர் விளக்கம் அளிக்கின்றார். இதனை கொண்டு பார்க்கையில் குறிப்பு என்பது மனத்தால் ஆராய்ந்து பொருள் கொள்ளத் தக்கதொரு சொல் குறிப்புரிச்சொல் என்பது புலனாகின்றது.

நச்சினார்க்கினியர் சேனாவரையர் உரையைச் சார்ந்து "மனத்தாற் குறித்துணரும் பொருண்மைக்கண்ணும்"8 என குறிப்பு என்பதற்கு பொருள் விளக்கம் தருகின்றார்.

இவ்வாறு குறிப்பு பற்றி உரையாசிரியர்கள் தருகின்ற விளக்கங்கள் கருத்து வேறுபாடு இன்றி மனதால் குறித்து உணரப்படும் சொல் குறிப்புரிச்சொல் என்பதை விளக்கி நிற்பதை காணமுடிகின்றது.

தொல்காப்பியர் சுட்டும் குறிப்பு உரிச்சொற்கள்

தொல்காப்பியர் உரியியலில் 93 குறிப்பு உரிச்சொற்களை குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் இசை, மற்றும் பண்பு உரிச்சொற்களை விட குறிப்பு உரிச்சொற்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்திருப்பது புலனாகின்றது. இச்சொற்களை

1. **பல சொல் ஒரு பொருள் தருதல்**
2. **ஒரு சொல் பல பொருள் தருதல்**
3. **ஒரு சொல் ஒரு பொருள் தருதல்**

என்ற நிலையில் திருமுருகாற்றுப்படை இலக்கியத்தில் பல சொல் ஒரு பொருள் தருகின்ற குறிப்பு உரிச்சொற்களை பொருத்தி ஆராயும் விதமாக இக்கட்டுரைஅமைகின்றது.

பலசொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்கள்

ஒரு பொருளைத் தரவல்ல பல குறிப்பு உரிச்சொற்களாக 41 உரிச்சொற்களை தொல்காப்பியர் உரியியலில் சுட்டுகின்றார். அவைமுறையே,

1. உறு,தவ,நனி - மிகுதி (3)
2. உரு,உரும், பேம், நாம் - அச்சம் (4)
3. ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய் - நுணுக்கம் (4)
4. பிணை, பேண் - பாதுகாப்பு (2)
5. கூர்ப்பு, கழிவு - சிறப்பு (2)
6. வய, தா, மத, எறுழ் - வலிமை (4)
7. கதழ்வு, துனைவு - விரைவு (2)

http://Creativecommons.org//license/by/4.0/.

8. பரவு, பழிச்சு - வாழ்த்துதல்(2)
9. அலமரல், தெருமரல் - சுழற்சி(2)
10. அதிர்வு, விதிர்ப்பு - நடுக்கம்(2)
11. ஞெமிர்தல், பாய்தல் - பரத்தல்(2)
12. இலம்பாடு, ஒற்கம் - வறுமை(2)
13. விறப்பு, உறப்பு - செறிவு(2)
14. பையுள், சிறுமை - நோய்(2)
15. நம்பு, மே - விருப்பம்(2)
16. தீர்தல், தீர்த்தல் - விடுதல்(2)
17. செல்லல், இன்னல் - துன்பம்(2)

மிகுதிப்பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள்

தொல்காப்பியர் மிகுதிப் பொருளை உணர்த்தும் சொற்களாக உறு, தவ, நனி போன்றவற்றைச் சுட்டுகின்றார். அதனை,

"அவைதாம்
உறுதவ நனியென வரூஉ மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப"9

என்ற நூற்பாவின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

உறு

மிகுதிப் பொருளைத் தருகின்ற உறு என்ற உரிச்சொல் திருமுருகாற்றுப்படையில் மொத்தம் 5 இடங்களில் பயின்று வந்துள்ளது.

உறுநர்த் தாங்கிய (திரு.,4) - தீவினை போக்குபவன்
செய்வுஉறு திவவின் (திரு..140) - சுற்றுதல்
உறுகுறை மருங்கில் (திரு.,173) - தமக்கு
விரை உறுநறுமலர் (திரு.,188) - மிகுதி
ஏமுறு ஞாலந் தன்னில் (திரு.163) - உடைய

தொல்காப்பியர் உறு என்பதற்குத் தருகின்ற மிகுதி என்ற பொருள் சில இடங்களில் மட்டுமே ஆற்றுப்படை இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. உறுநர் என்ற பெயர்ச் சொல் நிலையில் தன்னைச் சேர்ந்தவர்களின் தீவினையை போக்குபவன் என்று பொருள் அளிக்கின்றது. மேலும் வருத்தம், சுற்றுதல், போர்த்துதல், ஊடாகச்செல்லுதல், விலை, போன்ற பொருண்மையிலும் உறு என்ற உரிச்சொல் பயன்பாட்டில் இருந்தமையை ஆற்றுப்படை இலக்கியங்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. திருமுருகாற்றுப்படையில் ஏமுறு என்று வருகின்ற பொழுது ஏ மற்றும் உறு ஆகிய இரண்டு உரிச்சொற்கள் இணைந்து வந்துள்ளது. க்ரியா அகராதி உறு என்பதற்கு "ஓர் உணர்ச்சியை அல்லது ஒரு நிலையை அடைதல், பெறுதல் என்னும் பொருளில் குறிப்பிட்ட பெயர்ச்சொற்களோடு இணைந்து வரும் துணை வினை, வினைப்படுத்தும் வினை"10 என்று விளக்கம் அளிப்பதன் வாயிலாக உணர்ச்சியை வெளிப்படுத்தும் சொல்லாக உறு கையாளப்படுவதை தெரிந்து கொள்ள முடிகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

நனி

மிகுதிப் பொருளை உணர்த்தும் மற்றொரு உரிச்சொல்லான நனி திருமுருகாற்றுப்படையில் ஒரு இடத்தில் பயின்று வந்துள்ளது.

இனியவும் நல்லவும் நனிபல ஏத்தி (திரு.,286) - மிகுதி

ஆற்றுப்படையிலக்கியத்தில் நனி என்ற உரிச்சொல் தொல்காப்பியர் சுட்டும் மிகுதி என்ற பொருண்மையையே விளக்கிநிற்கின்றது. தொல்காப்பியர் சுட்டும் மிகுதிப் பொருளோடு "நெருக்கம், பெருமை, மிகுதி"11 போன்ற பிற பொருள்களையும் தரவல்லது என்று கழகத் தமிழ் அகராதி பதிவு செய்துள்ளது.

அச்சப்பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள்

அச்சப்பொருளை தரக்கூடிய உரிச்சொற்களாக நான்கினை தொல்காப்பியர் அடையாளப்படுத்துகின்றார். அவைமுறையே,உரு, உரும், பேம் ,நாம் ஆகியவை ஆகும். இதனை,

"உருவுட்காகும்"12
"பேம்நாம் உருமென வரூஉங் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள"13

என்ற இரு நூற்பாக்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. அவற்றுள் உரு மற்றும் உரும் ஆகியவை மட்டுமே ஆற்றுப்படையில் பயின்றுவந்துள்ளது. பேம், நாம் ஆகியவை ஆற்றுப்படையில் பயன்படுத்தப்படவில்லை.

உரு

உரு என்ற சொல் திருமுருகாற்றுப்படையில் மொத்தம் 11 இடங்களில் பயின்று வந்துள்ளது.

உருள் பூந்தண்தார் (திரு.,11) - தேரினைப் போன்ற வடிவம்
உருகெழு செலவின் (திரு.,51) - அச்சம்
முருகு ஆற்றுப்படுத்த உருகெழு (திரு.244) - அச்சம்
பரிசிலர் தாங்கும் உருகெழு (திரு.,273) - அச்சம்
இருபேர் உருவின் (திரு.,57) - வடிவம்
ஐவேறு உருவின் செய்வினை (திரு.,83) - வடிவம்
வேறுபல் உருவில் குறும்பல் (திரு.,282) - வடிவம்
திறல் விளங்கு உருவின் (திரு.,287) - வடிவம்
உருவினர் மானின் (திரு.,128) - வடிவம்
முரண்கொள் உருவின் இரண்டு (திரு.230) - வடிவம்
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல் (திரு.,) - தள்ளி

தொல்காப்பியர் சொன்ன அச்சம் என்ற பொருளைத் தருவதோடு கொடுமை, உருட்டுதல், உருகவைத்தல், வெப்பம், வடிவம் போன்ற பிற பொருண்மைகளை தர வேற்று வடிவங்களில் உரு என்ற உரிச்சொல் ஆற்றுப்படையில் பயன்படுத்தப்;பட்டுள்ளது. கழகத் தமிழ் அகராதியானது உரு என்பதற்கு "வடிவு, செபவுரு, உடல், சிலை, கரு, உரு, நிறம், வடிவழகு, வெப்பம், பெருமை, அச்சம், மேன்மை, அட்டை, மான், அகலம், எலுமிச்சை,

http://Creativecommons.org//license/by/4.0/.

நோய், பதுமை, பருமை, பாடல், பெரிது, மரக்கலம், மிகுதி, விக்கிரகம்" 14 போன்ற பல பொருள்களை அளிப்பதிலிருந்து உரு அளிக்கின்ற பிற பொருண்மைகளைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. மேலும் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியானது உருவிற்கு "ஒன்றை இன்னது என்று தெரிந்து கொள்வதற்கு உரிய புற அடையான தோற்றம், புற வடிவ அமைப்பு, உருவம், தாலியில் கோக்கப்படும் தங்கத்தால் ஆன சிறுமணி" 15 என்று விளக்கம் அளிப்பதிலிருந்து ஒன்றினது புற அமைப்பை சுட்டும் சொல்லாக தற்காலத்தில் இருப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

உரும்

அச்சப்பொருளைத் தரும் உரும் என்ற உரிச்சொல் ஆற்றுப்படையில் ஆறு இடங்களில் வந்துள்ளது.

உரும் இடிமுரசமொடு (திரு.,121) - முழங்குதல்
உரும் இடித்தன்ன (திரு.172) - இடி

தொல்காப்பியர் கூறின அச்சம் என்ற பொருளைச் சுட்டாமல் இடியைக் குறிக்கவும், இடியைப் போன்று சப்பத்ததை குறிக்க முழங்குதல் என்ற பொருண்மையினைக் குறிக்க ஆற்றுப்படையில் உரும் என்ற உரிச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நுணுக்கப் பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள்

நுணுக்கம் என்ற குறிப்பினை உணர்த்தும் சொற்களாக தொல்காப்பியர் நான்கினைச் சுட்டுகின்றார். அவைமுறையே,ஒய்தல்,ஆய்தல், நிழத்தல்,சாஅய் என்பவைகளாகும். இதனை,

"ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"16

என்ற நூற்பாவின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. இவற்றுள் ஒய்தல், நிழத்தல், சாஅய் என்ற சொல்லினைத் தவிர ஆய்தல் என்ற சொல் மட்டும் பயின்று வந்துள்ளது.

ஆய்தல்

நுணுக்கப் பொருளை உணர்த்தும் ஆய்தல் என்ற உரிச்சொல் திருமுருகாற்றுப்படையில் 1 இடத்தினில் பயின்று வந்துள்ளது.

துணையோர் ஆய்ந்த இணை (திரு.,20) - ஆராய்தல்

ஆய்தல் என்ற உரிச்சொல்லானது நுணுக்கப் பொருளை உணர்த்தாமல் நேரடிப் பொருளான ஆராய்தல் என திருமுருகாற்றுப்படையில் உணர்த்துகின்றது. மேலும் ஆய் என்ற அதன் வேர்ச்சொல் நிலையில் இடையர் இனத்தையும், அழகு, ஆய் என்ற வள்ளலையும் உணர்த்துவதை ஆற்றுப்படை இலக்கியத்தின் வழி அறிய முடிகின்றது. கழகத் தமிழகராதியானது ஆய்தல் என்பதற்கு, "நுணுகியறிதல், வருந்துதல், அழகமைதல், அசைதல், கொண்டாடுதல், குத்துதல், கொய்தல்" 17 என்று விளக்கம் அளிக்கின்றது. இதிலிருந்து ஆய்தல் உணர்த்துகின்ற பிற பொருண்மைகளை தெரிந்து கொள்ள முடிகின்றது. மேலும் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியானது, "ஆராய்ச்சி, திட்டம் முதலியன ஏற்கப்படுவதற்கு உரிய பரிசீலனை" 18 என்று விளக்கம் அளிப்பதிலிருந்து ஆய்தல் என்ற உரிச்சொல்லின் தற்கால நிலையை அறிந்து கொள்ள முடிகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

பாதுகாப்புப் பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள்

பாதுகாப்பு என்ற பொருளை உணர்த்தும் உரிச்சொற்களாக தொல்காப்பியர் இரண்டு சொற்களைச் சுட்டுகின்றார். அவை,பிணை, பேண் என்பவைகளாகும். இதனை,

"பிணையும் பேணும் பெட்பின் பொருள"19

என்ற நூற்பாவின் வழி அறிய முடிகின்றது. இவற்றுள் பிணை என்ற சொல் மட்டுமே ஆற்றுப்படை இலக்கியத்தில் பயின்று வந்துள்ளது.

பிணை

பாதுகாத்தல் என்ற பொருளை உணர்த்தும் பிணை என்ற உரிச்சொல் திருமுருகாற்றுப்படையில் 2 இடங்களில் பயின்று வந்துள்ளது.

இணைப்புறு பிணையல் (திரு.,) - மாலை
மென்றோள் பல்பிணை (திரு.216) - மாலை

பாதுகாத்தல் என்ற பொருளை உணர்த்தாமல் மாலை, கட்டுதல், பிணைந்து, பெண்மான் என்று வேறு பொருள்களில் ஆற்றுப்படை இலக்கியத்தில் பிணை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. உரியியலில் பாதுகாத்தல் பொருளை உணர்த்தும் சொல்லாக பிணை என்ற சொல்லை சுட்டும் தொல்காப்பியர் பொருளதிகார மரபியலில் பெண்பாற் பெயராக பிணையினை சுட்டுகின்றார். இதனை,

"பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்
மூடும் நாகும் கடமையும் அளகும்
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்
அந்தம் சான்ற பிடியொடு பெண்ணே"20

என்ற நூற்பாவின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் பிணை என்ற சொல்லானது புல்வாய், நவ்வி, உழை, கவரி என்னும் மான்வகை பெண் இனத்தை சுட்டும் என்று தொல்காப்பியர் சுட்டுவதை,

"புல்வாய் நவ்வி உழையே கவரி
சொல்வாய் நாடின் பிணை எனப்படுமே"21

என்ற நூற்பாவின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் கழகத் தமிழ் அகராதியானது பிணை என்பதற்கு, "ஆசை, உடன்பாடு, ஒட்டகம் கவரிமா கழுதை குதிரை நாய் பன்றி புல்வாய் யானை இவற்றின் பெண், கட்டு, பூமாலை, புறந்தருகை, விருப்பம், பெண்மான்"22 என்று விளக்கம் அளிக்கின்றது. இதிலிருந்து பிணை அளிக்கின்ற பிற பொருண்மைகளை தெரிந்து கொள்ள முடிகின்றது.

சிறப்புப்பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள்

சிறப்பு என்கின்ற குறிப்புப் பொருளைத் தரக்கூடிய சொற்களாக தொல்காப்பியர் இரண்டு சொற்களைச் சுட்டுகின்றார். அவை முறையே,கூர்ப்பு, கழிவு ஆகியவையாகும். இதனை,

"கூர்ப்புங் கழிவும் உள்ளது சிறக்கும்"23

என்ற நூற்பாவின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்விரண்டு சொற்களும் ஆற்றுப்படை இலக்கியத்தில் பயின்று வந்துள்ளது.

http://Creativecommons.org//license/by/4.0/.

கூர்ப்பு

முன் சிறப்பு இன்றி இருந்து பின் சிறப்பு அடைந்ததை குறிக்கப் பயன்படும் கூர்ப்பு என்ற உரிச்சொல் திருமுருகாற்றுப்படை இலக்கியத்தில் 1இடத்தில் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கூர்உகிர் கொடுவிரல் (திரு.,52) - கூர்மை

சிறந்து நிற்றல் என்று தொல்காப்பியர் சுட்டிய பொருண்மையினை விளக்காமல் கூர்ப்பு என்ற உரிச்சொல் கூர்மை, நுட்பம், மிகுதி ஆகிய பொருண்மையினை விளக்குகின்றது. மேலும் கழகத் தமிழ் அகராதியானது கூர்ப்பு என்பதற்கு, "உள்ளது சிறத்தல், கூர்மை, அறிவு, நுட்பம், உவர்ப்பு"24 என்று விளக்கம் அளிக்கின்றது. இதன் வாயிலாக கூர்ப்பு என்ற சொல் அளிக்கின்ற பிற பொருண்மைகளையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

கழிவு

சிறத்தல் பொருளைத் தருகின்ற கழிவு என்ற உரிச்சொல்லானது திருமுருகாற்றுப்படையில் 2 இடங்களில் வந்துள்ளது.

கண்தொட்டு உண்ட கழிமுடைக் (திரு.,53) - மிகுதி

பலவுடன் கழிந்த உண்டியர் (திரு..131) - கழிந்த

சிறந்து நிற்றல் என்ற தொல்காப்பியர் சுட்டிய பொருளினை உணர்த்தாமல் மிகுதி, செல்லுதல், நடத்தல், நீர்நிலை, காத்தல், கழி போன்ற பிற பொருள்களில் மாற்றத்தோடு வந்துள்ளது. கழகத் தமிழ் அகராதியானது, "இழிவு, இறந்தகாலம், கழிகடை, பிராய்ச்சித்தம், அழிவு, மிகுதி"25 என்று கழிவிற்கு விளக்கம் அளிப்பதலிருந்து அச்சொல் அளிக்கின்ற பிற பொருண்மைகளை அறிந்து கொள்ள முடிகின்றது. க்ரியா அகராதியானது, "தேவையற்றது என்று கழிக்கப்பட்டதாகிய குப்பைக்கூளம், தொழிற்சாலையில் பயன்படுத்தப்பட்ட பின் சேரும் அல்லது வெளியேற்றப்படும் ரசாயனக் கலப்புடைய பொருள், மனிதர்கள் மற்றும் விலங்குகளின் ஆசனவாய் வழியாக வெளியேறுவது, தரத்தில் குறைந்தது என்று நீக்கப்பட்டது, உரமாகப் பயன்பாடு, கழிக்கப்பட்ட இயற்கைப் பொருள், ஏலச்சீட்டு முதலியவற்றில் அளிக்கப்படும் தள்ளுபடி, விற்கும் போது பொருள்களுக்கு அளிக்கப்படும் விலைக்குறிப்பு, தள்ளுபடி"26 என்று அளிக்கின்ற விளக்கமானது கழிவு என்பதன் தற்கால பொருண்மையினை அறிய முடிகின்றது.

வலிமைப் பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள்

வலிமைப் பொருளை தரக்கூடிய சொற்களாக தொல்காப்பியர் நான்கினைச் சுட்டுகின்றார். அவைமுறையே,வய, தா, மத,எறுழ் என்பவைகளாகும். இதனை,

"வயவலி யாகும்"27

"மதவே மடனும் வலியும் ஆகும்"28

"எறுழ் வலியாகும்"29

"தாவே வலியும் வருத்தமும் ஆகும்"30

என்ற நூற்பாக்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. இவற்றுள் மத என்ற சொல் மடமை பொருளையும், தா என்ற சொல் வருத்தம் என்ற பொருளையும் தர வல்ல ஒரு சொல் பல பொருள் உரிச்சொற்களாகவும் திகழ்கின்றன. இவற்றுள் வய, மத, ஆகிய

http://Creativecommons.org//license/by/4.0/.

இரண்டு சொற்கள் மட்டுமே திருமுருகாற்றுப்படை இலக்கியத்தில் பயின்று வந்துள்ளன. தா, எறுழ் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை.

வய

வய என்ற சொல்லானது திருமுருகாற்றுப்படை இலக்கியத்தில் ஒரு இடத்தில் பயின்று வந்துள்ளது.

கோழி வயப்பெடை (திரு.,311) - வலிமை

வலிமை என்ற பொருளினை உணர்த்துவதோடு வயாஅ என்று அளபெடுக்கும் போது விரும்புதல் என்ற பொருண்மையினையும், வாயவ என்ற நிலையில் வீரர், படைத்தலைவர் என்ற பொருண்மையினையும், அடைமொழியாக ஏற்ற பொழுது அரிமா என்ற பொருளையும் அளிக்கின்றது.

மத

வலிமைப் பொருளைத் தரும் மத என்ற உரிச்சொல் திருமுருகாற்றுப்படை இலக்கியத்தில் ஒரு இடத்தில் பயின்று வந்துள்ளது.

மதவலி நிலைஇய மாத் தாள் (திரு.232) - மிகுதி

மத என்ற இச்சொல் திருமுருகாற்றுப்படையில் மிகுதி என்று பொருள் மாற்றத்துடன் காணப்படுகின்றது.

வய, எறுழ், மத ஆகிய இம்மூன்று சொற்களுள் வய, எறுழ் ஆகிய சொற்கள் தற்காலத்தில் வழக்கொழிந்துவிட்டன. மத என்ற சொல் வேர்ச்சொல் நிலையில் பயன்பட்டு வருகின்றது. உதாரணமாக மதம் என்ற சொல்லைக் குறிப்பிடலாம். இச்சொல் மத என்ற உரிச்சொல்லினை வேர்ச்சொல்லாகக் கொண்டதாகும். மேலும் வலிமையை சுட்டும் என்று தொல்காப்பியர் கூறின தா என்ற சொல் ஆற்றுப்படை இலக்கியத்தில் பயன்படுத்தப்படாத போதிலும் தற்காலத்ததில் வழக்கில் இருக்கின்ற ஒரு சொல்லாக இருக்கின்றது. ஒருவரிடம் இருந்து ஒன்றினைப் பெறுவதற்கு தா என்று கேட்கும் நிலையில் இச்சொல்லானது வழக்கில் இருக்கின்றது.

வாழ்த்துதல் பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள்

வாழ்த்துதல் என்ற குறிப்புப் பொருளை உணர்த்தும் சொற்களாக தொல்காப்பியர் இரண்டினைக் கூறுகின்றார். அவை முறையே, பரவு, பழிச்சு என்பதாகும். இதனை,“பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள”என்ற நூற்பாவின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

பரவு

வாழ்த்துதல் என்ற பொருளைத் தரும் பரவு என்ற சொல் திருமுருகாற்றுப்படை இலக்கியத்தில் ஒரு இடங்களில் பயின்று வந்துள்ளது.

கைதொழூஉப் பரவிக்கால் (திரு.252) - புகழந்து கூறுதல்

திருமுருகாற்றுப்படையில் புகழ்ந்து கூறுதல் என்ற பொருளையும் விளக்கி நிற்கின்றது.

விடுதல் பொருளை உணர்த்தும் உரிச்சொல்

விடுதல் பொருள் உணர்த்தும் சொல்லாக தீர்தல் மற்றும் தீர்த்தல் என்ற சொற்களை தொல்காப்பியர் சுட்டுகின்றார். இதனை,“தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்”என்ற

http://Creativecommons.org//license/by/4.0/.

நூற்பாவின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. இச்சொல் திருமுருகாற்றுப்படை இலக்கியத்தில் 2 இடங்களில் வந்துள்ளது.

செயிர்தீர் மேனி (திரு.,19) - தீர்தல்

தீதுதீர் நியமத்து (திரு.,70) - தீர்தல்

தொல்காப்பியர் சுட்டிய விடுதல் என்ற பொருண்மையினை சுட்ட தீர்தல் என்ற உரிச்சொல் ஒரு இடத்தில் பயின்று வந்துள்ளது. தீர்தல் என்ற நேரடிப்பொருளை விளக்குவதாக ஆற்றுப்படையில் பல இடங்களில் வந்துள்ளதை அறியமுடிகின்றது.

பயன்படுத்தப்பட்ட சொற்களும் பயன்படுத்தப்படாத சொற்களும்

தொல்காப்பியர் சுட்டின 41 பலசொல் ஒரு பொருள் உரிச்சொற்களுள் 13 உரிச்சொற்கள் 30 இடங்களில் திருமுருகாற்றுப்படையில் கையாளப்பட்டுள்ளது. அவைமுறையே உறு (5), நனி(1), உரு(11), உரும்(2), ஆய்தல்(1), பிணை(2), கூர்ப்பு(1), கழிவு(2), வய(1), மத(1), பரவு(1), தீர்தல், தீர்த்தல்(1) போன்றவைகளாகும்.

28 உரிச்சொற்கள் கையாளப்படவில்லை. அவைமுறையே தவ, பேம், நாம், ஓய்தல், நிழத்தல், சாஅய், பேண், கதழ்வு,துனைவு, தா, எறுழ், கமழ்வு, துனைவு,பழிச்சு,அலமரல், தெருமரல்,அதிர்வு, விதிர்ப்பு, ஞெமிர்தல், பாய்தல்,இலம்பாடு, ஒற்கம்,விறப்பு, உறப்பு,வெறுப்பு, பையுள், சிறுமை, மே,நம்பு போன்றவைகளாகும்.

தொகுப்புரை

உறு என்ற உரிச்சொல் உறுநர் என்ற பெயர்ச் சொல் நிலையில் தன்னைச் சேர்ந்தவர்களின் தீவினையை போக்குபவன் என்று பொருள் அளிக்கின்றது. திருமுருகாற்றுப்படையில் ஏமுறு என்று வருகின்ற பொழுது ஏ மற்றும் உறு ஆகிய இரண்டு உரிச்சொற்கள் இணைந்து வந்துள்ளது.நனி என்ற உரிச்சொல் தொல்காப்பியர் சுட்டும் மிகுதி என்ற பொருண்மையையே விளக்கிநிற்கின்றது.தொல்காப்பியர் சொன்ன அச்சம் என்ற பொருளைத் தருவதோடு கொடுமை, உருட்டுதல், உருகவைத்தல், வெப்பம், வடிவம் போன்ற பிற பொருண்மைகளை தர வேற்று வடிவங்களில் உரு என்ற உரிச்சொல் ஆற்றுப்படையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.தொல்காப்பியர் கூறின அச்சம் என்ற பொருளைச் சுட்டாமல் இடியைக் குறிக்கவும், இடியைப் போன்று சப்பத்தை குறிக்க முழங்குதல் என்ற பொருண்மையினைக் குறிக்க ஆற்றுப்படையில் உரும் என்ற உரிச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.ஆய்தல் என்ற உரிச்சொல்லானது நுணுக்கப் பொருளை உணர்த்தாமல் நேரடிப் பொருளான ஆராய்தல் என திருமுருகாற்றுப்படையில் உணர்த்துகின்றது.பாதுகாத்தல் என்ற பொருளை உணர்த்தாமல் மாலை, கட்டுதல், பிணைந்து, பெண்மான் என்று வேறு பொருள்களில் ஆற்றுப்படை இலக்கியத்தில் பிணை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.சிறந்து நிற்றல் என்று தொல்காப்பியர் சுட்டிய பொருண்மையினை விளக்காமல் கூர்ப்பு என்ற உரிச்சொல் கூர்மை, நுட்பம், மிகுதி ஆகிய பொருண்மையினை விளக்குகின்றது. சிறந்து நிற்றல் என்ற தொல்காப்பியர் சுட்டிய பொருளினை உணர்த்தாமல் மிகுதி, செல்லுதல், நடத்தல், நீர்நிலை, காத்தல், கழி போன்ற பிற பொருள்களில் மாற்றத்தோடு வந்துள்ளது.தொல்காப்பியர் சுட்டின 41 பலசொல் ஒரு

http://Creativecommons.org//license/by/4.0/.

பொருள் உரிச்சொற்களுள் 13 உரிச்சொற்கள் 30 இடங்களில் திருமுருகாற்றுப்படையில் கையாளப்பட்டுள்ளது. 28 உரிச்சொற்கள் கையாளப்படவில்லை.

சான்றெண் விளக்கம்

1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,ப.,458
2. கழகத் தமிழ் அகராதி.,ப.,369
3. மேலது.,ப.,369
4. நர்மதாவின் தமிழ் அகராதி.,ப.292
5. மெய்யப்பன் தமிழ் அகராதி.,ப.507
6. ஆ.சிவலிங்கனார் (ப.ஆ).,தொல்காப்பிய உரைவளம்.,சொல்லதிகாரத் உரியியல்.,ப.9
7. சேனாவரையர் (உ.ஆ).,தொல்காப்பிய சொல்லதிகாரம்.,ப.186
8. ச.வே.சுப்பிரமணியன்.,தொல்காப்பிய உரைவளக்கோவை, சொல்லதிகாரம் உரியியல்.,ப.68
9. சேனாவரையர் (உ.ஆ).,தொல்காப்பிய சொல்லதிகாரம்.,ப.186
10. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,பக்.222-223
11. கழகத் தமிழ் அகராதி.,ப.,595
12. சேனாவரையர் (உ.ஆ).,தொல்காப்பிய சொல்லதிகாரம்.,ப.187
13. மேலது.,ப.196
14. கழகத்தமிழ்அகராதி.,ப.169
15. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,ப.205
16. சேனாவரையர் (உ.ஆ).,தொல்காப்பிய சொல்லதிகாரம்.,ப.191
17. கழகத் தமிழ் அகராதி.,ப.,82
18. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,ப.109
19. சேனாவரையர் (உ.ஆ).,தொல்காப்பிய சொல்லதிகாரம்.,ப.191
20. தமிழண்ணல் (உ.ஆ)., தொல்காப்பியம் பொருளதிகாரம்.,தொகுதி4.,ப.117
21. மேலது.,ப.134
22. கழகத் தமிழ் அகராதி.,ப.,670
23. சேனாவரையர் (உ.ஆ).,தொல்காப்பிய சொல்லதிகாரம்.,ப.188
24. கழகத் தமிழ் அகராதி.,ப.,376
25. மேலது.,ப.300
26. க்ரியா தற்காலத் தமிழ் அகராதி.,ப.376
27. சேனாவரையர் (உ.ஆ).,தொல்காப்பிய சொல்லதிகாரம்.,ப.196
28. மேலது.,ப.197
29. மேலது.,ப.199
30. மேலது.,ப.193

http://Creativecommons.org//license/by/4.0/.

32. தமிழச்சி தங்கப்பாண்டியனின் படைப்பும் படைப்பாளுமையும்

ஆய்வாளர்
திருமதி சி.கீர்த்தனா,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி,சாத்தூர்.
7339471755 - keerthanajeyasri1411@gmail.com

ஆய்வு நெறியாளர்
முனைவர் ச.தனலெட்சுமி,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
7010204935 - sfrdhanam@gmail.com

DOI 10.5281/zenodo.15072539.

Abstract :

The creator is the one who creates a literary idea or subject. The idea created by the creator is the work. Tamizhachi is a notable female poet from Tamil Nadu. She was born on July 25, 1962, in Mallanginattu, Virudhunagar. Tamizhachi's poems stand out in giving priority to the earth and the moonlight. Tamizhachi's subtle ideas are embodied in the conversations she has started with the Tamil community. Tamizhachi's great specialty is that a woman who lived in a village, even though she lived in the city, brings out the smell of the earth in all her poems. This research article aims to examine the works of Tamizhachi Thangapandian and the creativity evident in her works.

Key Words : Modern Literature – Poem – Poets – Rural

முன்னுரை

கலை அறிவியல் தொழில்நுட்பம் எனப் பல துறைகளில் ஏதேனும் ஒரு புதியக் கருத்தை அல்லது பொருளை உருவாக்கும் ஒருவரே படைப்பாளன். அப்படைப்பாளரால் உருவாக்கப்படும் கருத்தே படைப்பு. அந்த வகையில் படைப்பில் பெரும்புகழ் ஆற்றிவரும் தமிழச்சி தங்கப்பாண்டியனின் படைப்புகளும் படைப்புகளில் புலனாகும் படைப்பாளுமையையும் ஆராயும் நோக்கில் இவ்ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

தமிழச்சி தங்கப்பாண்டியன் பிறப்பும், கல்வியும்

தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் தமிழச்சி. 1962-ஆம் ஆண்டு சூலை 25- ஆம் நாள் விருதுநகர் மல்லாங்கிணற்றில் பிறந்தார். இயற்பெயர் சுமதி. தொடக்கக் கல்வி மல்லாங்கிணற்றில் பயின்றார். பின் உயர்க்கல்வி விருதுநகரிலும், மதுரை தியாகராயர் கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தில், இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களைப் பெற்றார்.

“ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கை புலம்பெயர் தமிழர்களின் ஆங்கிலப் படைப்பிலக்கிய வெளிப்பாடுகள்”[1] எனும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார். ஆங்கிலப் பேராசிரியையாகச் சென்னை ராணி மேரிக் கல்லூரியில் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றார்.

படைப்புகள்

தமிழச்சி தங்கப்பாண்டியன் தன் தந்தையின் இறப்பின் பொழுது பாடிய முதற்படைப்பாகும். குங்குமம் இதழில் வெளிவந்த இப்படைப்பு கையறுநிலையில் அமைந்தது. இலக்கிய விமர்சனக் கட்டுரைகள், மொழிபெயர்ப்பு இலக்கியம், புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களது சிறுகதைகளும், ஆய்வுக்கட்டுரைகளும் எழுதியுள்ளார். அரங்கம் எனப்படும் மேடைநாடகத்திலும் சிறப்புப் பெற்றவர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

கவிதைத்தொகுப்புகள்

எஞ்சோட்டுப்பெண்
வனப்பேச்சி
மஞ்சணத்தி
அருகன்
அவளுக்கு வெயில் என்று பெயர்

கட்டுரைத்தொகுப்புகள்

•பாம்படம்
•சொல்தொடும்தூரம்
•மயிலறகுமனசு
•சொட்டாங்கல்

ஆராய்ச்சி மற்றும் நேர்காணல் தொகுப்புகள்

•நிழல்வெளி ,பேச்சரவம்கேட்டிலையோ

சிறுகதைமற்றும்விமர்சனநூல்

•முட்டுவீடு (சிறுகதை)
•காலமும்கவிதையும் - தமிழச்சியின்படைப்புலகம்
•காற்றுகொணர்ந்தகடிதங்கள்

ஆளுமை

ஆளுமை என்பது ஒருவரின் ஒழுங்கமைந்த> இயங்கியல் பண்புகளும் அவை தோற்றுவிக்கும் தோரண நடத்தைகள் உணர்வுகள் சிந்தனைகளையும் குறிக்கிறது.

பொதுவாக, ஆளுமை என்பது ஒருவரின் வெளித்தோற்றத்தைக் குறிப்பாகக் கூறுகிறது. ஆளுமை என்பதை "ஒருவரை தனித்துவமானவராக ஆக்கும் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் என்பவற்றாலான ஒன்று"[2] என்று விளக்கலாம்.

ஆளுமை - சொற்பொருள் விளக்கம்

'Personality' எனும் ஆங்கிலச் சொல்லே தமிழில் ஆளமை என்று அழைக்கப்படுகின்றது. 'Personality' எனும் சொல் இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்தது ஆகும்.

'தனிமனிதனுடைய எண்ணங்கள், செயல்படும்முறை, நடத்தைகள், அவன் பிறரிடம் பழகும் முறை, மனப்பான்மைகள், அவன் வாழ்க்கையைப் பற்றி கொண்டுள்ள கண்ணோட்டம், அறிவாற்றல், உணர்ச்சி வெளிப்பாடுகள் ஆகிய பல கூறுகள் இணைந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் ஒரு தனித்தன்மையே அவனது ஆளுமை எனப்படும்"[3] என வாழ்வியல் களஞ்சியம் விளக்கம் தருகின்றது.

படைப்பாளியின் ஆளுமை

படைப்பாற்றல் என்பது மனிதர்கள் எல்லோரிடமும் காணப்படும் பொதுமைப் பண்பாக இல்லாமல், ஒரு சிலரிடம் மட்டுமெ காணப்படும் தனிமனிதப் பண்பாக உள்ளது. ஒவ்வொரு படைப்பாளியின் தனிமனித ஆளுமை மற்றும் தனிப்பண்பு உண்டு.

படைப்பாளியின் தனிமனித ஆளுமைப்பண்புகளை வெளிக்கொணர அவர்களது படைப்புகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டாலும் அவரது பிற எழுத்துக்கள். அவர்களது

http://Creativecommons.org//license/by/4.0/.

நாட்குறிப்புகள். வரலாற்றுச் செய்திகள். அவர் எழுதிய கடிதங்கள், அவருக்குப் பிறர் எழுதிய கடிதங்கள் பதிவு செய்யப்பட்ட பிற ஆதாரங்கள் போன்ற பலவற்றையும் துணைமை ஆதாரமாகக் கொள்வது அவசியம். அப்போது தான் அவரது ஆளுமை பற்றிய நம் கணிப்புகள் சரியானதாக அமையும்" என்கிறார் இரா.காஞ்சனா.

தமிழச்சியின் படைப்பாளுமை

கவிஞர் தமிழச்சி தங்கப்பாண்டியனின் படைப்புகள் அவருடைய விமர்சனங்கள் அவர் இலக்கியத்தின் மீது கொண்டுள்ள ஆழம், அறிவியல் பார்வை மற்றும் அவர் மேற்கொண்டுள்ள சில பண்புகளின் அடிப்படையில் படைப்பாளியின் ஆளுமை குறித்து ஆராயப் பெற்றுள்ளது.

கிராமத்து நினைவும் நகரமயமாதலும்

தமிழச்சி எனும் புனைபெயரிலே தமிழச்சியின் கிராமத்து வாசைன வீசத் தொடங்கியது. தமிழச்சி ஒரு நேர்காணலில் "தமிழச்சி என்பது எளிய கிராமத்துப் பெயர்"[4] என்பார். கவிதைத் தொகுப்புகள் அனைத்திலும் கிராமத்து மணம் கமழும் கவிதைகளை எடுத்தியம்பியுள்ளார். மல்லாங்கிணறு எனம் கிராமத்தில் பிறந்த தமிழச்சி மண்மணம் மாறாதவர் என்பதை,

"முற்றம்பெருக்கி
முத்தரிசிமாக்கோலம்போட்டு
செம்மண்வரியிட்ட
மணிஅடுப்பில்
வெண்கலப்பானையில்
பால்விட்டுமண்டைவெல்லம்
முந்திரியிட்டுநெய்யூற்றி
இறக்கினாலும்
விளைச்சல்பொய்த்ததில்
கடைஅரிசியில்சமைத்தபொங்கல்
கசக்கத்தான்செய்கிறது" (எ.பெண்.ப.122)

எனும் பொங்கல் கவிதையில் கிராமத்து அடையாளத்தை எடுத்தியம்புகிறார் கவிஞர். மேலும், வனப்பேச்சி கதைத் தொகுப்பில் வனப்பேச்சி எனும் பாத்திரத்தின் வழி படைப்பாளரின் எண்ணலைகள் வெளிப்படுவதை,

"சுருண்டிருக்கும்சர்ப்பமென
அவசரம்புதைந்திருக்கும்
இந்நகரத்தின்எந்தவீட்டில்
குழந்தைக்கானஒருதூளிச்சேலையும்
வயதுமுதிர்ந்தவளுக்கானசுருக்குப்பையும்இருக்கிறதோ
அங்குதான்விருந்தினளாகவருவேன்
என்றஅடம்வனப்பேச்சின்னு" (வனப்பேச்சிப.49)

http://Creativecommons.org//license/by/4.0/.

எனத் தொடரும் கவிதையில் கிராமங்களில் குழந்தையை தூளியில் இடுவது கிழவிகள் வைத்திருக்கும் சுருக்குப்பை இவையெல்லாம் காணக்கூடிய ஒன்று. ஆனால், இன்றும் அவையாவும் இருக்கும் வீட்டிற்கு விருந்தினராக வருவேன் என்று எடுத்தியம்புகையில் கிராமத்து அடையாளம் மாறாத கவிஞராகப் பிரதிபலிக்கிறார் என்பது புலனாகும். மண்ணுக்குள்ளிருந்து முளைத்து மண் வாசனையுடன் மிளிரும் கவிதையானது, தமிழச்சியின் படைப்பாளுமையில் மண் மணம் மாறாமல் இருப்பதைக் காட்டுகிறது.

இயற்கை

நம் பழங்கால மனிதர்கள் யாவரும் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர் என்பது அறிந்த ஒன்று."இயற்கைச் சூழலில் மக்கள் நலனுக்குப் பயன்படும் எந்த ஒரு பொருளையும் வளம் எனக் குறிப்பிடலாம். மனிதனின் தேவைகளை நிறைவேற்றும் உயிருள்ள மற்றும் உயிரற்ற அனைத்தும் வளங்கள் எனப்படும்"[5]

இரவு, வெயில், மழை என இயற்கைச் சார்ந்து விவரிக்கப்பட்டுள்ளன தமிழச்சியின் கவிதைககள்.வெயில் என்பது இயற்கையானது.உலகத்து உயிரினங்களுக்கு அளித்த கொடை நீரின்றி அமையாது உலகு போல, வெயில் இன்றியம் எதுவும் இயங்காது என்று விளக்குகிறார்.

"கால் சுற்றித் தோளேறிய
வெயிலை
உதற மனமின்றி
அவனை அணைப்பதுபோல்
உடுத்திக்கொண்டேன்
வியர்வையாய் ஊற்றெடுக்கிறது அன்பு"

(அ.வெ.எ.பெ-ப.79)

என்பதில், வெயில் ஏற்படுத்தும் நெருக்கடியால் அன்பின் கசிவு எங்கும் பரவுவதாக கூறுகிறார்.வெயிலுகந்த அம்மன் என்று வெயிலையே தெய்வமாக வழிபடும் மண்ணில் பிறந்த தமிழச்சி இயற்கையான வெயிலை படைப்பில் குறிப்பது எடுத்தியம்பப்படுகிறது. மழையின் மீதான பிரியத்தை,

"ஒரு விலகலை
ஒரு பிரிவை
ஒரு துக்கத்தை
சொட்டு முத்தத்தில்
மறக்கடித்து விடுகிறது மழை"(அ.வெ.எ.பெ-ப.137)

என்று இயற்கையின் மீதான காதலை பறைசாற்றுகிறார்.தண் பொருந்திய இரவை,

"ஒரே இரவில்
அத்தனை காதலர்களையும்
ஒன்று சேர்க்கிறது மழை
அவரவர் பூந்தொட்டியில்
அதிகாலையில் மயங்கிக்

http://Creativecommons.org//license/by/4.0/.

கிடக்குமொரு வண்ணத்துப்பூச்சி"

(அ.வெ.எ.பெ-ப.130)

இரவினில் பொழிகின்ற மழை உருவாக்கும் அதிஅற்புத மனநிலைக்கு ஈடு எதுவுமில்லை.இரவு எல்லாவற்றையும் கலைத்துப் போடுவது போல, மழையின் நெருக்கமானது, பட்டாம்பூச்சியாக மாறுவதே விந்தைதான் என்று இரவின் தன்மையை விளக்குகிறார்.பருவங்கள் சார்ந்து தன்னுடைய கொண்டாட்டத்தைக் கட்டமைக்கும் தமிழச்சியின் மாறா மரபு எடுத்தாளப்படுகின்றது.

தமிழச்சியின்படைப்புகளில்தாவரங்களின்ஆளுமைமுக்கியபங்குவகிக்கிறது.

"அருவியின்அடியில்அடித்துச்
செல்லப்படும்வேரற்ற
சிறுசெடியானதொருதுர்சொப்பனம்
கண்டுகண்விழிக்கும்அது
காலையில்
கையளவேதெளிக்கப்டும்தண்ணீருடன்" (வனப்பேச்சி>ப.68)

என்பதில் செடியின் வளர்ச்சியை வெளிப்படுத்துகிறார்.

பெண்ணாளுமை

சமூகம் என்பது ஆண், பெண் உறவின் மீதே கட்டமைக்கப்பட்டதாகும். ஆனால் பெண்ணை மட்டும் சமூகத்தில் உள்ள ஆண்கள் பலவிதங்களில் கட்டுப்படுத்தியும், கட்டுக்குள்ளாக்கியும் நடத்தி வந்தனர். சங்ககால ஔவை முதல் தற்காலக் கவிஞர்கள் வரை பெண்ணியத்தையும் பெண்ணியம் சார்ந்த சிக்கல்களையும் பேசி வந்துள்ளனர்.

சமூகத்திலும் வேலைத்தளத்திலும் பெண்களை அடக்குவது, ஒடுக்குவது போன்று உணர்வுநிலைகள் நடைபெறுகிது. இந்நிலையை மாற்ற எடுக்கப்படும் படிநிலைகளே' பெண்ணியம்' என்றாகும். பெண்ணியம் எனும் ஆங்கிலத்தில் பெமினசம்(Feminisam) என்று அழைக்கப்படும். பெண்ணியம், பெண்நிலைவாதம், பெண்ணுரிமை என்று பலவாறு பெண்ணியம் அழைக்கப்படுகின்றது.' பெமினா' என்ற சொல்லுக்குப் 'பெண்' என்று பொருள். பெமினா எனும் சொல்லிருந்தே' பெமினிசம்' எனும் சொல் உருவானது.' பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம்"என்கிறார் கார்டன்

பெண் சிக்கல், பெண் விடுதலை திறனாய்வு நோக்கில் பெண்ணியம் என்று பன்முகப் பார்வையில் தமிழச்சியின் படைப்புகளில் பெண்ணியம் விளக்கப்படுகின்றது.

"கதவுகளையும்
திரைச்சீலைகளையும்தாண்டி
சுவர்களில்முதுகுதேய்த்து
சன்னல்கம்பிகளில்தயங்கியபடி
மிதியடிகளில்நிதானித்து
இறுகமூடியகுழாய்களின்
இடைவெளிகளில்கசிந்து
குளியலறைத்தண்ணீருடன்
வெளியேறுகிறது

http://Creativecommons.org//license/by/4.0/.

நிறுத்தப்பட்டிருந்தவியர்வையுடன்
பூட்டியிருந்தஅறைக்குள்
மூச்சடைத்திருந்தகாற்று" (எ.பெண்- ப.எண்.61)

என்பதில் பெண்ணியச் சிக்கல்களையும் அறைக்குள் அடைந்திருந்த காற்றாகப் பெண் அடக்கலையும் வெளியேறும் காற்றாகப் பெண் விடுதலையையும் குறிப்பதாக அமைகின்றது. ஆணுக்கு நிகராகப் பெண் விடுதலையாக சுதந்திரமாக இருக்க விரும்புவதைக் கவிஞ ர்எடுத்தியம்புகிறார்.

மேலும், தமிழச்சியின் படைப்புகளில், கிராமத்துதோழிகள் ,அப்பத்தா, பேச்சி, கச்சம்மா, இருஞ்சாயி, கருவாச்சி, அம்மினி, கோமதி, ஒச்சம்மா, காமாட்சி போன்ற பெண்பால் பெயர்கள் எடுத்தியம்பப்படுகின்றன. பெண்ணியச் செய்திகளை, பகைமை பாராட்டாத எள்ளலோடு அவர் எழுதுவது அவருடைய ஆளுமையை நிர்ணயிக்கும் காரணிகளாகும்.

அப்பா - மகள்

ஆதிமனிதனின் வாழ்க்கை மெல்ல நாகரீகம் அடையஅடைய தாயைவிட தந்தையர் முதன்மை அடையத் தொடங்கினர். தந்தைக்கும் பிள்ளைக்கும் உள்ள தொடர்பு பரம்பரைபரம்பரையாக வருவதை இன்றளவும் நாம் உணரலாம். மகள் நிலத்தில் நடந்தாலே மனம் நொந்து வேதனைப்படும் தந்தையின் இயல்பினை,\,

"எந்தையும்நிலன்உறப்பெறான்சீரடிசிவப்ப
எவன்இலகுறுமகள்! இயங்குதிஎன்னும்"[6]

எனும் சங்க இலக்கியப் பாடலில் கபிலர், மகள் நிலத்தில் நடப்பதைப் பார்த்து அவள் சீறடி என்னவாகுமோ என்று எண்ணி நொந்த தந்தையின் அன்பு எடுத்தாளப்படுகிறது. தமிழச்சியும் கிராமம், குடும்பம் எனச் சூழலுடன் ஒத்திசைந்து படைப்பினில் ஈடுபடுபவர். புறச்சூழலில் பரந்துபட்ட நிலையில் அவருடைய நேசம் எங்கும் பரவுகின்றது. அப்பா பற்றிய தமிழச்சியின் கவிதைகள் எளிய மொழியில் உறவுகளில் பொங்கிடும் அன்பைப் பதிவு செய்கிறது.

"கொடியறுத்தநொடியில்
உலகைஎதிர்கொள்ளும்
உள்ளங்கையில்
அப்பாக்களின்முதல்ஆகாயம்"

என்பதில் மகளுக்கும், அப்பாவுக்கும் இடையிலான பிரியம் எப்பொழுதும் ஈரமாகவே உள்ளது புலப்படுத்தப்படுகிறது. திருமணத்திற்குப் பின் பெண்கள் அப்பாவை எண்ணுவது அரிது. ஆனால், அப்பாக்கள் மகள்களின் நினைவுகளுடனே வாழ்கின்றனர். தமிழச்சியின் அப்பா குறித்த கவிதைகள் யாவும், ஆழமான அன்பையும், கசிந்த வலியையும் உள்ளடக்கியது.

நடப்பியல்

யதார்த்தவாதம் அல்லது நிகழ்வியல் பாங்கு என அறியப்படுவதும், சொல்லப்படுவதுமே நடப்பியல். மனித வாழ்க்கையின் பலம் மற்றும் பலவீனங்களை வெளிச்சமிடுவது நடப்பியல். இவை பெரும்பாலும் நடக்கக்கூடிய ஒன்று. நடைமுறை

http://Creativecommons.org//license/by/4.0/.

வாழ்வின் பல பகுதிகளைக் கொண்டு இயங்குவது. நடப்பியலுக்கு சி.கனகசபாபதி கூறும் விளக்கமானது, "நடப்பதை அல்லது உள்ளதைப் பற்றிய உணர்வுப் பதிவைச் சாதாரண மனிதனுக்கு எப்படித் தோன்றுகிறதோ அப்படிப் படைத்துத் தரும் கலைக் கூறு அமைந்தது தான் நடப்பியல் இயக்கம்"[7] என்கிறார்.

இவ்வாறு சாதாரண மனிதனுக்குப் புரியும் வண்ணம் தமிழச்சி தம் கவிதைப் படைப்பில் பல இடங்களில் படைத்துக் காட்டுகிறார்.இ தனை,

"ஏடன்தோட்டத்தில்
ஏவாளின்நிர்வாணம்மறைத்தசாத்தான்
கடல்சூழ்தேயிலைத்தோட்டத்தில்மட்டும்
நிர்வாணத்தைமோகித்தது
சீருடையின்விறைப்பால்இருக்கலாம்
கண்களும், கைகளும்கட்டப்பட்ட
கண்ணியமற்றமரணத்தின்
வலிஏந்திமரித்தார்கள்அவர்கள்" (மஞ்சணத்தி,ப.83)

எனும் கவிதையில் ஈழத்தமிழர்கள் நிர்வாணமாக்கப்பட்டு கண்களும், கைகளும் கட்டப்பட்டு, சுடப்பட்டு இறந்த நிகழ்வினைத் தமிழச்சி விளம்புகிறார்.

முடிவுரை

கவிதைகள் எளிமையாக, ஜோடனை இல்லாமல் இருப்பதே கவிஞர் தமிழச்சியின்; மிகப் பெரிய ஆளுமை. கவிஞர்கள் தமிழச்சியின் படைப்புகள் புறவாழ்வின் ஏளனங்களைக் கடந்து நிற்பதற்குத் துணை புரிவன. பல பெரும்படிமங்களைக் கவிதையின் உள்தளத்தில் உருவாக்கும் தமிழச்சிக்குரியது. வெயில், மழை, தாவரம், இரவு, காதல், அன்பு என்று ஆளுமையின் பன்முகத் தன்மை விரிந்துக் கொண்டே செல்கிறது.

அப்பா பற்றிய இவரது பிடிப்பு ஒரு தமிழ்ப் பெண் பிள்ளையின் வழக்கமான தந்தை பாசத்தையும் தாண்டிச் செல்கிறது. கவிதைத் தளத்தின் வழியே படைப்பாளரின் ஆளுமைகள் யாவும் பரந்துப்பட்டுக் கிடக்கின்றது. பெண்ணியச் சிக்கல்களை பெண் படைப்பாளராக இருந்து கவிதையில் வெளிக்கொணரும் சிறப்பும் குறிப்பிடத்தக்கது.

சாதாரண மனிதனுக்குப் புரியும் வண்ணம் தமிழச்சி தம் கவிதைப் படைப்பில் நடப்பியலையும் பல இடங்களில் படைத்துக் காட்டுகிறார்.

சான்றெண் விளக்கம்

1. திருமதிஇரா.சரோஜா,பா.விஜய்படைப்பாளுமைத்திறன்,முனைவர்பட்டஆய்வேடு
2. வாழ்வியற்களஞ்சியம்,தொகுதி-11
3. .https://www.vikatan.com/literature/arts/parvin-sultanas-kathaipoma-show-with-thamizhachi-thangapandian-part1#amp_tf=From%20%251%24s&aoh=17421054046633&referrer=https%3A%2F%2Fwww.google.com&ampshare=https%3A%2F%2Fwww.vikatan.com%2Fliterature%2Farts%2Fparvin-sultanas-kathaipoma-show-with-thamizhachi-thangapandian-part-1
4. சுற்றுச்சூழல் பயில்வுகள், சேதுராமன்.சி, நியுசெஞ்சுரிபுக்ஹவுஸ்,சென்னை, ப.17)
5. அகநானூறு,12: 2-3
6. இலக்கியமும்நடப்பியலும், சி.கனகசபாபதி,ப.40

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – IV VOLUME - 1
மார்ச்சு-2025 E-ISSN : 2584 - 1238

33. விருதுநகர் மாவட்ட நாட்டார் வழிபாட்டு மரபுகள்

திருமதி க.பொற்கொடி,
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ்
இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) ,
சிவகாசி..

ஆய்வுநெறியாளர் :
முனைவர் **மா.பத்மபிரியா**,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ்
இராஜரத்தினம் மகளிர் கல்லூரி(தன்னாட்சி)
,சிவகாசி

susilaporkodi@gmail.com அலைபேசி - 9994728728

DOI 10.5281/zenodo.15072791.

Abstract:

Worship has always been an integral part of the lives of ancient Tamils, with the belief that it can ease one's suffering, a tradition that has been passed down through generations and continues today. This article aims to examine the rural worship practices observed by the people. In Virudhunagar district, various rituals dedicated to local deities are common across temples, including offerings of Pongal, hair donations, carrying fire pans, rolling on the ground, presenting milk pots, offering flour lamps, placing figurines, and making monetary donations. However, there are distinct rituals, Kuzhi Maatrik Kuduththal which are unique to the Aavudaiyapuram Sandhanamariyaman Temple. Other special rituals like the sugarcane cradle worship (Karumbu Thottil) and child cradle worship (Pillai Thottil) are also observed in the Aavudaiyapuram Sandhanamariyaman and Irukkan Kudi Mariamman temples. Additionally, there are temples where certain rituals are performed exclusively by men on specific days, such as at the Rajapalayam Neer Katha Ayyanar Temple and Sengkunrappuram Sri Vairavanathan Temple. This article highlights the distinct and enduring nature of the rural worship practices in Virudhunagar district.

Keywords:

Rural Tradition,Pongal,Placing Figurines,Kuzhi Maatrik Kuduththal

முன்னுரை

கிராமங்கள் நாட்டார் என்றும் நாட்டுப்புறம் என்றும் அழைக்கப்படுகின்றன. தெய்வங்கள் இல்லாத கிராமங்களே இல்லை எனலாம். கிராமங்களில் மரபு சார்ந்த வழிபாடுகள் காணப்படுகின்றன.நாட்டார் என்பது நாட்டுப்புற மக்களைக் குறிக்கும். உலக மக்கள் காலத்திற்கேற்ப எண்ணற்ற மாறுபாடுகளை சந்தித்தாலும் மாற்றமடையாத ஒன்றாக நாட்டார் மகக்ளின் வழிபாட்டைக் கூறலாம். பழந்தமிழர்களின் வழிபாட்டுமுறைகளை மாற்றாமல் மரபுசார்ந்து பின்பற்றுபவர்களாக நாட்டார் மக்களைக் கூறலாம். மனிதன் தோற்றம் பெற்ற பொழுது தன்னை அச்சுறுத்தும் அனைத்தையும் வழிபாடு என்ற கோட்பாட்டிற்குள் கொண்டு வந்தான். தன்னை அச்சுறுத்தும் இயற்கை சார்ந்த அனைத்துக் கூறுகளையும் வழிபட்டான். தங்கள் வாழ்வியலுக்கு ஏற்றவாறு தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்து வாழ ஆரம்பித்த பொழுது வழிபாட்டில் மாற்றம் ஏற்பட்டது. அவ்வகையில் நாட்டாரால் வழிபடப்படும் தெய்வ வழிபாட்டு முறைகளை விருதுநகர் மாவட்ட நாட்டார் வழிபாட்டு மரபுகள்வழி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

வழிபாடுகள்

அச்சத்தால் உருவாகி இன்று வரை நிலைத்து நிற்பது வழிபாடுகள் ஆகும். மனிதன் தன்னை மிஞ்சி நின்ற, தனக்கு துன்பம் விளைவிக்காத ஆற்றலைக் கடவுள் என்று நம்பி வழிபட்டான். அக்கடவுளுக்குத் தனது விருப்பத்திற்கு ஏற்றவாறு உருவம் கொடுத்தான். தனக்கு அச்சத்தை ஏற்படுத்தும் பிற பொருட்களை அக்கடவுளின் ஆயுதமாகவும், விலங்குகளாகவும், பறவைகளாகவும் மாற்றி அவற்றை வழிபாடும் செய்தான். இவ்வாறு வழிபட்டால் தம்முடைய துன்பம் நீங்குவதாக நம்பினான். மனிதன் தனிமனிதனிலிருந்து சமுதாயமாக மாறுகிறான். அப்பொழுது தனது வாழ்வியல் சூழலுக்கு ஏற்றவாறு தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்து வாழ ஆரம்பிக்கிறான். ஒவ்வொரு குழுவினருக்கு ஏற்றவாறு வழிபாடு மாறுபடுகின்றது. “நாட்டார் தெய்வங்கள் ‘தத்துவ விசாரங்களிலே’ நொறுங்கிப் போகுமளவு மெலிதானவையல்ல. அவற்றின் வேர்கள் வலிமையானவை”[1] என்ற தொ.பவின் கருத்தடிப்படையில் நாட்டுப்புறத்தெய்வ வழிபாட்டின் முக்கியத்துவத்தை அறியலாம். மேலும் “வழிபாடு செய்யும் ஒவ்வொரு குழுவும் வெவ்வேறுபட்ட தனித்தனி நடத்தைகளையும் நம்பிக்கைகளையும் பூசாரிகளையும் கொண்டிருக்கும். இயற்கையிறந்த சக்தியின் மீது நம்பிக்கையும் பக்தியும் கொண்டு புனிதமான நடத்தைகளில் மக்கள் குழுவினர் ஈடுபடும் போது தான் வழிபாடு தோன்றும்”[2]என்று தே.லூர்து அவர்கள் தமது நூலில் சுட்டிக் காட்டியுள்ளார். பெரும்பாலும் மக்களுடன் மக்களாக இயல்பாக வாழ்ந்து மறைந்த முன்னோர்களே பெரும்பாலும் நாட்டுப்புறத் தெய்வங்களாக வழிபடப்பட்டு வருகின்றனர். தமிழகத்தில் கணக்கில் அடங்காத நாட்டுப்புறத்தெய்வங்கள் காணப்படுகின்றன. “நாட்டுப்புறத்தெய்வங்களை,

- ஊர் தெய்வங்கள்
- இன தெய்வங்கள்
- குல தெய்வங்கள்
- மாலை தெய்வங்கள்
- சமாதி தெய்வங்கள்
- துணை தெய்வங்கள்

என்று ஆறு வகையாக பகுக்கிறார் டாக்டர் துளசி ராமசாமி”[3]என்ற .கருத்தினை நாட்டுப்புறஇயல் நூலின் வாயிலாக அறிய முடிகின்றது.

விருதுநகர் மாவட்ட நாட்டார் தெய்வத்திற்கானவழிபாட்டு முறைகள்

தமிழ்நாட்டின் முக்கிய மாவட்டங்களில் ஒன்று விருதுநகர் மாவட்டம் ஆகும். விருதுநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட கிராமங்கள் கிராமங்களில் நாட்டார் தெய்வங்களுக்கு சிற்சில வழிபாட்டுமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஆண் பெண் என்ற வரிசைமுறையிலும் இனக்குழு அடிப்படையிலும் இத்தெய்வ வழிபாட்டில் சில மாற்றங்களைக் காண முடிகின்றது. மாவிளக்கு எடுத்தல், உருவ பொம்மை வழிபாடு, அங்கப் பிரதட்சணம் செய்தல், பூச்சட்டி எடுத்தல், ஆயிரங்கண் பானை எடுத்தல் ஆகிய முறையில் வழிபாடு செய்வது பல தெய்வங்களின் வழிபாட்டில் காணும் ஒற்றுமைகளாகும். பொங்கல்

http://Creativecommons.org//license/by/4.0/.

வைத்தல், முடி காணிக்கை கொடுத்தல், ஆடை சாத்தி வழிபடுதல்போன்ற வழிபாட்டு முறை அனைத்து கோயில்களிலும் பொதுவானது.

நாள் வழிபாடு

நாட்டார் தெய்வங்களுக்கு தினசரி வழிபாடு நடத்தப்படுவது உண்டு. இவ்வழிபாட்டில் மக்களால் வழங்கப்படும் இயல்பான பத்தி, சூடம், பூ மாலைகள் கொண்டு வழிபாடு செய்வர். காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலுமே பூசை நடத்தப்படும். அதன்படி விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து நாட்டார் கோவில்களிலும் நாள் வழிபாடு நடைபெறுகிறது. மேலும் ஒவ்வொரு வாரத்திலும், செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை நடைபெறும் பூசைகள் சிறப்பானவை. பெண் தெய்வங்களுக்கு நீராட்டு எனப்படும் அபிசேகம் செய்யப்பட்டு, பட்டு ஆடைகள் சாத்தப்பட்டு வழிபாடுகள் நடைபெறுகிறது. ஆண் தெய்வங்களுக்கு வேட்டி அணிவிக்கப்படடட மலர் மாலைகளுடன் பூசை செய்யப்படுகின்றது. உதாரணமாக ஆவுடையாபுரம் சந்தன மாரியம்மனுக்கு பால் அபிஷேகம், எண்ணெய் காப்பு, மஞ்சள் நீராடல், செய்யபப்பட்டு பத்தி, சூடம், மாலை, பட்டு உடுத்தி சந்தனம் பூசப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. பௌர்ணமி பூஜை, மாதவெள்ளி ஆகிய இரண்டு வழிபாடு நடைபெறுகிறது. ஆனால் இங்குள்ளஜக்கம்மாள் கோயில்களில் முள் கோட்டைக்குள் சாமியை வைத்து வழிபடுவதால் வெளியில் உள்ள மற்ற தெய்வங்களுக்குப் பூசைகள் நடைபெறும்.வருடத்திற்கு மூன்று நாட்கள் மாசி மாதத்தில் முள் கோட்டை திறக்கப்பட்டு மூன்று நாட்களும் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

ஆண்கள் வழிபாடு

சுமங்கலி பூசை போல் ஆண்களால் மட்டும் செய்யும் சில வழிபாடுகளும் விருதுநகர் மாவட்டத்தில் உண்டு. சில ஆண் தெய்வங்களுக்கு குறிப்பிட்ட நாட்களில் ஆண்கள் வழிபாடு செய்வர். செங்குன்றாபுரம் கிராமத்தில் உள்ள ஸ்ரீவைரவநாதன் கோயிலில் உள்ள முத்தையா தெய்வத்திற்கு ஆண்கள் செய்யும் வழிபாடு இன்றியமையாதது. கார்த்திகை நாட்களில் முத்தையா கருவறை முழுவதும் நெய்விளக்குகளால் அலங்காரம் செய்வர். துளசி மாலைகளில் அவரை அலங்காரம் செய்து பூசைகள் நடத்துவர். பூசையில் பங்கேற்கும் ஆண்கள் தங்களின் முகத்தை துணியால் மறைத்துக் கொண்டு பங்கு பெறுகின்றனர். நீர்காத்த அய்யனார் கோயிலில் உள்ள காவல் தெய்வங்களான சின்ன பொன்னோட்டகாரன் மற்றும் பெரிய பொன்னோட்டகாரனுக்குப் படையல் வைத்து வழிபாடு செய்கின்றனர்.இதுஒரு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. பொன்னோட்டக்காரர்களைக் குல தெய்வமாக வழிபடும் அனைத்து நாடார் இனத்தவரும் தை மாதம் நடைபெறும் விழாவில் கலந்து கொள்வார்கள். பின்னர் உணவு சமைத்து இறைவனுக்குப் படைப்பர். படையல் வைக்கும் உணவை ஆண்கள் சமைப்பர். இச்சமையலில் பெண்களின் பங்கு இருக்காது. ஆண்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து விழாவினை நடத்துவர். பெண்களும் விழாவினைக் கொண்டாடுவர். இறுதியில் உணவு உண்பர். இதன் வழி இராஜபாளையம் நீர்காத்த அய்யனார் கோவிலில் தை மாதம் நடைபெறும் திருவிழாவில் ஆண்களே சமையல் செய்து தெய்வத்திற்குப் படையல் இடுகின்றனர் என்பது புலனாகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

பூச்சட்டி(அக்னி) ஏந்தி வழிபடுதல்

உடலை வருத்தி வழிபாடு செய்தால் கடவுள் தன்னையும் தன் குடும்பத்தாரையும் காப்பார் என்ற நம்பிக்கை மக்களிடம் காணப்படுகின்றது. குடும்பத்திலுள்ளோருக்கு அம்மை, காய்ச்சல், காலரா போன்ற நோய்களில் இருந்து குணமடைய வேண்டும் என்று நெருப்பு மூட்டப்பட்ட தீச்சட்டியை கையில் எடுப்பர். பங்குனி, சித்திரை மாதங்களில் திருவிழா காலங்களில் விருதுநகர், திருத்தங்கள்ல், ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர் மற்றும் அவற்றைச் சூழ்ந்திருக்கும் அனைத்துப் பகுதிகளில் உள்ள மாரியம்மன், காளியம்மன் தெய்வங்களுக்குப் பூச்சட்டி எடுக்கின்றனர். ஆனால் இருக்கன்குடியிலுள்ள மாரியம்மன் கோயிலில் மட்டும் வருடத்தின் அனைத்து மாதங்களிலும் பூச்சட்டி எடுக்கும் மரபினைக் காணமுடிகின்றது.

பிள்ளைத்தொட்டில் எடுத்தல்

பிள்ளைத்தொட்டி நேர்த்திக்கடன் என்பது பல வருடங்களாக குழந்தை இல்லாமல் குழந்தை வரம் கேட்போர் செலுத்தும் கடமையாகும். குழந்தை பிறந்தவுடன் குழந்தை வரம் கிடைக்கப் பெற்ற கணவனும், மனைவியும் செய்யும் நேர்த்திக்கடனை நிறைவேற்றவர். ஆவுடையாபுரம் சந்தன மாரியம்மன் கோயிலில் சித்திரைப் பொங்கல் இரண்டாவது நாள் நேர்த்திக்கடன் செலுத்தப்படும் பிள்ளைத்தொட்டி எடுக்கக் கூடிய பெண் முதலில் கிழக்குத்திசையில் உள்ள கோயிலுக்கு உரிய கிணற்றில் நீராடி விட்டு பிறகு தொட்டிலில் போடும் குழந்தையையும் மஞ்சள் நீரில் குளிக்க வைப்பர். பின்னர் சேலையைத் தொட்டிலாக செய்து அதனை ஒரு கை வழியாக விட்டு மறு கையில் மாற்றி அந்தப் பெண்ணின் கழுத்தின் வழியே துணியை விரித்து குழந்தையை தொட்டிலில் போடுவர். கையில் வேப்பிலை எதுவும் இல்லாமல் அக்னிச்சட்டியை வாங்கிக் கொண்டு காளியம்மன் கோயிலை வணங்கிய பிறகு கருப்பசாமி கோயிலையும் வணங்கி இறுதியாக சந்தன மாரியம்மன் கோயிலையும் அடைந்து 3 முறை சுற்றி அக்னிச்சட்டியை இறக்கி வைப்பார்கள். அதன் பின்னர் குழந்தையைத் தொட்டிலில் இருந்து தூக்குவார்கள்.இம்முறை இருக்கன்குடி மாரியம்மன் கோயிலிலும் மற்ற பெண் தெய்வ வழிபாட்டுக் கோயில்களிலும் காண முடிகின்றது.

கரும்பாலத்தொட்டில்

கரும்பாலத் தொட்டில் என்பது குழந்தை இல்லாதப் பெண்களுக்கு விரைவில் மழலைச் செல்வம் கிடைத்தால் தாய் வீட்டில் இருந்து 1000 ரூபாய் பணம் பெற்று 9 கரும்பு அல்லது 13 கரும்பினை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி அதில் மஞ்சள் துணியால் நனைக்கப்பட்ட சேலையில் தொட்டில் கட்டி அதில் குழந்தையைப் போட்டு எடுப்பது கரும்பாலத் தொட்டி ஆகும். குழந்தை பிறக்கும் நேரத்தில் தாய் மற்றும் குழந்தைக்கு துன்பம் நேரும் போது துன்பம் விலக இந்நேர்த்திக்கடனைச் செலுத்துவதாக இறைவனிடம் வேண்டுவர். அச்சிக்கல் நீங்கி குழந்தை நல்ல படியாகப் பிறந்தால் குழந்தை கரும்பாலத் தொட்டி எடுப்பதாக நேர்த்திக்கடன் செய்வார்கள்.

ஆவுடையாபுரம் சந்தன மாரியம்மன் கோயில் மற்றும் இருக்கன்ன்குடி மாரியம்மன் கோயில்களில் நேர்த்திக்கடன் செலுத்த குழந்தை மற்றும் தாய்மாமனை அழைத்துக்

http://Creativecommons.org//license/by/4.0/.

கொண்டு பின்னர் வீட்டிற்கு வந்தவுடன் மஞ்சள் நீரால் நனைக்கப்பட்ட சேலையை கரும்புகளில் தொட்டிலாகக் கட்டி தொட்டிலில் குழந்தையை தாய்மாமன்மார்கள் தோளில் போட்டு, சந்தன மாரியம்மன் கோயிலை 11 முறை அல்லது 21 முறை சுற்றி வந்து குழந்தையை விழிக்கச் செய்வார்கள். ஐந்து முதல் 7 வயது வரை உள்ள குழந்தையை போட்டு எடுப்பது கரும்பாலத் தொட்டி நேர்த்திக்கடன் ஆகும். சில நேரங்களில் தாயும் தந்தையும் இவ்வகை நேர்த்திக்கடன்கள் செய்வது உண்டு.

உருண்டுக் கொடுத்தல்

உருண்டுக் கொடுத்தல் என்பது உடலில் ஏற்பட்ட நோயான கால்வலி, கைவலி, நரம்பு தளர்ச்சி, கை, கால் செயலிழத்தல் தீர்ந்து நலம் பெற உருண்டுக் கொடுத்தல் செய்யப்படும். தனக்கு ஏற்பட்ட நோய்கள் குணமடைந்ததும் கடவுளை வேண்டிக் கொண்டு கோயிலின் பிரகாரத்திலுள்ள தரையில் படுத்து உருண்டு கொடுத்து நேர்த்திக்கடனை நிறைவேற்றுவார்கள். சிவகாசி, திருத்தங்கல், விருதுநகர், சாத்தூர் மற்றும் ஸ்ரீ வில்லிப்புத்தூரில் உள்ள மாரியம்மன் மற்றும் காளியம்மன் கோயில்களில் தரையின் தன்மையைக் கூடப் பொருட்படுத்தாமல் உருண்டுக் கொடுத்து வழிபடுகின்றனர்.

மனித உறுப்புகளையும் உருவங்களையும் செலுத்துதல்

மக்கள் தங்களைக் காக்கும் இறைவனுக்கு தங்கள் வழிபாட்டின் ஒரு பகுதியாக நேர்த்திக்கடன் செலுத்தும் மரபை மேற்கொள்கின்றனர். தான் வேண்டுகோளை ஏற்ற கடவுள்களுக்கு நன்றி செலுத்தும் விதமாக உருவம் கொண்டு வருதல் நேர்த்திக்கடனைச் செய்கின்றனர். கால்வலி, கைவலி போன்ற நோய்களுக்கும் குடும்ப உறவுகளில் துன்பம் நேரும் போதும் இந்நேர்த்திக்கடன் செய்வதாக இறைவனிடம் வேண்டுவர். கால் உருவ பொம்மை, கை உருவ பொம்மை, குடும்பங்கள் சேர்ந்த உருவ பொம்மைகள், வீடுகள், ஆண் பெண் உருவ பொம்மைகள் ஆகிய உருவ பொம்மைகள் கொண்டு வந்து வைத்து வழிபடுகின்றனர். இம்முறையும் பெரும்பாலான பெண் தெய்வக் கோயில்களில் காணப்படுகின்றது.

காணிக்கை செலுத்துதல்

இறைவனிடம் வேண்டுதல் வைக்கும் பொழுதும் வேண்டுதல் நிறைவேறிய பிறகும் காணிக்கை செலுத்துவர். சு.சண்முகசுந்தரம் அவர்கள் “காணிக்கையெனப் பொதுவாகக் காசுகளை உண்டியலில் போடுவர்”[4] என்கிறார். திருவிழாக்காலத்தில் காணிக்கை செலுத்துதலும் ஒரு வித நேர்த்திக்கடனாகச் செய்யப்படுகிறது. குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு காய்ச்சல், காலரா, நீண்ட நாள் வைரஸ் காய்ச்சல் போன்ற நோய்களால் துன்புறும் போது இறைவனுக்கு பணமாகவோ, பொருளாகவோ காணிக்கை செலுத்துவதாக நேர்த்திக்கடன் இடுவர். பின்னர் அந்நோய் தீர்ந்த பிறகு இந்நேர்த்திக்கடன் செலுத்துவர். தங்கள் இரு கை நிறைய சில்லறைக் காசினை அள்ளி கோயிலின் உண்டியலில் போடுவார்கள். அது பணமாகவோ அல்லது பொருளாகவோ செய்யப்படும். இம்முறை விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அய்யனார், கருப்பசாமி, சுடலை மாடசாமி, மாரியம்மன், காளியம்மன் கோயில்களிலும் காணப்படுகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

பொங்கல் வைத்தல்

பக்தர்கள் தங்கள் மனதில் வீடுகட்டுதல், திருமணம், நீண்ட நாள் பிணி நீங்க நாட்டார் தெய்வங்களிடம் வேண்டிக் கொள்வார்கள். அவர்கள் வேண்டிய காரியம் நடந்துவிட்டால் அத்தெய்வங்களுக்கு பொங்கல் வைத்துப் படையலிட்டு தங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றனர். இதனை "அம்மன் தெய்வங்களுக்குச் செவ்வாய்க்கிழமைகளிலும் ஆண் தேவதைகளுக்கு வெள்ளிக் கிழமைகளிலும் பொங்கலிடுவர்"5 என்று சண்முகசுந்தரம் அவர்கள் குறிப்பிடுகின்றார். ஆவுடையாபுரம் சந்தனமாரியம்மனுக்கு முதல் படையல் வைப்பர். விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அய்யனார், கருப்பசாமி, சுடலை மாடசாமி, மாரியம்மன், காளியம்மன் கோயில்களிலும் காணப்படுகின்றது.

குழிமாற்றிக் கொடுத்தல்

குழிமாற்றிக் கொடுத்தல் என்பது ஆவுடையாபுரம் சந்தன மாரியம்மன் கோயிலில் காணப்படும் ஒரு மாறுபட்ட வழிமுறை ஆகும். கோயிலின் முன்பு ஒரு குழியைத் தோண்டி குழந்தையைக் குழியில் போடுவார்கள். குழந்தைக்கு மஞ்சள் நிற ஆடை அணிந்து வேப்பிலையை கையில் கொடுத்து குழியில் படுக்க வைத்து மண்ணையும் வேப்பிலையும் போட்டு மூடுவது குழிமாற்றிக் கொடுத்தல் ஆகும்.

சித்திரைப் பொங்கல் இரண்டாவது நாள் காலை 10 மணி அளவில் குழிமாற்றிக் கொடுக்கும்நேர்த்திக்கடன் செய்யப்படுகிறது. குழிமாற்றிக் கொடுத்தல் என்பது சந்தன மாரியம்மன் கோயிலின் முன்பு ஒரு அடி குழியைத் தோண்டி நேர்த்திக்கடனாக குழந்தையை குழியில் போடுவார்கள். இந்த நேர்த்திக்கடனை 5 முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்குச் செய்வார்கள். அக்குழந்தைக்கு மஞ்சள் நிற ஆடை அணிந்து வேப்பிலையை கையில் கொடுத்து குழியில் படுக்க வைத்து பின்னர் அக்குழியை மண் மற்றும் வேப்பிலையும் நிரப்பி குழந்தை 15 நிமிடங்கள் வரை வைத்திருப்பர். இந்த நேர்த்திக்கடனைச் செய்யும் போது சில குழந்தைகள் இறந்தமையால் தற்போது சில ஆண்டுகள் செய்யவில்லை. குழிமாற்றிக் கொடுத்தல் நேர்த்திக்கடனை செய்யும் ஆண்கள், பெண்கள் என இருவரும் 1 மாதம் வரை விரதம் இருப்பார்கள். குழியில் போடும் குழந்தை 5 நாட்கள் விரதம் இருப்பதையும் காண முடிகின்றது.

முடிவுரை

தமிழர்களின் வரலாற்றில் வழிபாடு என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். அதிலும் நாட்டார் வழிபாடு என்பது காலம் காலமாய் மக்களால் பின்பற்றப்படும் ஒரு முறை ஆகும். நாட்டார் தெய்வங்கள் காவலாகவும், காப்பு தெய்வங்களாகவும் இருக்கின்றனர். இவர்களை வழிபடுவதால் நோய்கள் நீங்கி மகிழ்வுடன் வாழ்வதாக நம்புகின்றனர்.

சான்றெண் விளக்கம்

1. தொ.பரமசிவன், தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும், ப.69
2. லூர்து.தே, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப.334
3. டாக்டர் சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல், ப..161

http://Creativecommons.org//license/by/4.0/.

4. மேலது, ப.163

5. மேலது, ப.164

துணைநூற்பட்டியல்

1. சண்முகசுந்தரம்.சு.,நாட்டுப்புற இயல்காவ்யா பதிப்பகம்,சென்னை - 5 இரண்டாம் பதிப்பு - 2007

2. பரமசிவன்.தொ.,தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,சென்னை - 600050.முதற்பதிப்பு - 2022.

3. லூர்து.தே.,நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்,நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்,பாளையங்கோட்டை, 627002இரண்டாம் பதிப்பு - 2000

http://Creativecommons.org//license/by/4.0/.

34. வெ.முனீஷ் அவர்களின் கவிதைகளில் திருநங்கைகள்

பேரா.அ.பார்த்திபன்,
உதவிப்பேராசிரியர், ஆங்கிலத்துறை,
விருதுநகர் இந்து நாடார்களுக்குப் பாத்தியப்பட்ட
செந்திக்குமார நாடார் கல்லூரி(தன்னாட்சி), விருதுநகர்.
DOI 10.5281/zenodo.15072916.

Abstract :

Transgender people have a long history in this world. They have held various positions as assistants to kings, guardians of the palace, and commanders. There is a lot of information about them in the epics and Puranas. Their primary job is to cultivate sprouts during festivals in temples. It is a belief that they are invited to auspicious occasions like marriage and childbirth to receive blessings. This article examines why transgender people, who were originally seen as incarnations of God, were later forced to do menial jobs.

Key Words : Transgender literature - Poem - Poets - Modern Literature

முன்னுரை :

இந்நில உலகின் நீண்ட பெரும் வரலாற்றில் நெடிய தொடர்புடையவர்கள் திருநங்கைகள். அரசர்களுக்கு உதவியாளர்களாக, அந்தப்புரத்தின் காப்பாளராக, படைத்தளபதிகளாக பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்கள். இதிகாசங்களிலும் புராணங்களிலும் இவர்களைப் பற்றி ஏராளமான தரவுகள் இருக்கின்றன. கோயில்களில் திருவிழாக்காலங்களில் முளைப்பாரி வளர்ப்பது இவர்களின் முதன்மை பணியாக உள்ளது. திருமணம் மற்றும் குழந்தைப்பிறப்பு போன்ற சுபநிகழ்வுகளில் இவர்களை அழைத்து ஆசீர்வாதம் பெருவதென்பது இன்றளவும் கொண்டிருக்கும் ஒரு நம்பிக்கை. அடைப்படையில் இறைவனின் அவதாரங்களாகப் பார்க்கப்பட்ட திருநங்கைகள் பின்னர் இழிதொழில் செய்யத் தள்ளப்பட்டது ஏன் என்பதை ஆய்வுக்கு உட்படுத்துகிறது இக்கட்டுரை.

வெ.முனீஷ்

திருநங்கை ஆய்வாளர் மற்றும் செயல்பாட்டாளரான வெ.முனீஷ் தனியார் கல்லூரியில் உதவிப் பேராசிரியர் பணியிலிருப்பவர். இவர் ‘தமிழ் இலக்கியத்தில் அரவாணிகள்’, ‘அரவாணிகளின் பன்முக அடையாளங்கள்’,’காலந்தோறும் தமிழ் இலக்கணங்களில் மூன்றாம் பாலினம்’ போன்ற நூல்களை எழுதியிருக்கிறார். திருநங்கையர் குறித்துச் சொல்லப்பட்ட முதல் ஆய்வு ‘தமிழ் இலக்கியத்தில் அரவாணிகள்’. தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, நீதிநூல்கள், ஐம்பெரும் காப்பியம், பன்னிருதிருமுறைகள், நாலாயிர திவ்யப்பிரபந்தம் ஆகியவற்றில் இருக்கும் அரவாணியர் குறித்த பதிவுகளை வெளிக்கொணர்ந்து அவர்களுக்கான வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்திருக்கிறார்.

தமிழ்நாடு அரசின் சிறந்த எழுத்தாளர் விருதை 2010-இல் பெற்றிருக்கும் இவர், மணிமுத்தாறு இலக்கிய விருது, அரவாணியர் மேம்பாட்டுக்காக உழைக்கும் விருது ஆகியவற்றையும் பெற்றிருக்கிறார். திருநங்கைகளின் வலிநிறைந்த வாழ்வியலைப் பற்றி இவர் எழுதிய ‘சுயம்பு’ என்ற கவிதைத்தொகுப்பில் அமைந்துள்ள கவிதைகளினூடாக இந்தப்

http://Creativecommons.org//license/by/4.0/.

பொதுச்சமூகத்தில் இன்னலுரும் திருநங்கைகளின் அவலநிலையை ஆராய்கிறது இக்கட்டுரை.

திருநங்கைகளின் மனவலி:

திருநங்கைகளின் மனவலியைப் பொதுச்சமூகப் புத்திக்குத் திருநங்கையின் பார்வையில் பேசுகின்றன இவரது கவிதைகள். தன்னுடைய, 'இப்ப வேண்டும் தாயே' என்கிற கவிதையில் ஆணாகப் பிறந்து அன்புமழையில் நனைந்து வளர்ந்து பதின்பருவத்தில் தன்னுள் ஏற்பட்ட பாலின மாற்றத்தால் சொல்லொன்னா துயருற்றுத் தனக்குள் இருக்கும் பெண்மையை நடை, உடை, பேச்சில் வெளிப்படுத்தி பெற்றோர் கண்டிக்க, சுற்றத்தாரும் நண்பர்களும் எள்ளி நகையாட இன்னல் பொறுக்காது இல்லம் நீங்கிய ஒரு இளந்திருநங்கையின் மனக்குமுறலைக் கவிஞர் பின்வருமாறு விவரிக்கிறார்:

"நான் இருக்கேன் உனக்கு
நீ எதற்கும் பயப்படாத என்றாயே!
இன்று வீதி வீதியாய் சுற்றி
பிச்சைக்காசுக்கு அலைகின்றேன் எனக்கான -
அந்த தைரியமூட்டிய பேச்சு இப்ப வேண்டும் தாயே !
நிலாச்சோறு ஊட்டி வயிறு முட்ட முட்ட பசியாற்றினாயே
இன்று பலவேளை பட்டினிக் கிடந்து
ஒருவேளை சாப்பிடுகின்றேன் எனக்கான -
அந்த நிலாச்சோறு இப்ப வேண்டும் தாயே!
கல்தடுக்கி விழுந்தபோது -
நீ கொண்ட கோபம் - பூமிமீது கொஞ்சம் நஞ்சமல்ல
இன்று கடைவீதியில் போகும்பொழுது
கல்லெறியப்படுகின்றேன் எனக்கான. -
அந்தக் கோபம் இப்ப வேண்டும் தாயே !
அடிச்சுட்டான்னு ஒருத்தன சொன்னதுக்கு
ஊரையே சண்டைக்கு இழுத்தாயே!
இன்று ஊரே ஒன்னு சேர்ந்து
விரட்டி துரத்தி அடிக்குது எனக்கான -
அந்த சண்டை இப்ப வேண்டும் தாயே!"

என்று தாயால் புறக்கணிக்கப்பட்ட ஒவ்வொரு திருநங்கையின் அகக்குரலாக ஒலிக்கிறது இந்தக்கவிதை. திருநங்கைகள் என்றாலே அவர்கள் கைதட்டி யாசிப்பவர்கள் பணம்கொடுக்க மறுப்பவர்களைக் கண்டபடி ஏசுபர்கள், பொதுவாகவே பொதுஅமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்கள் என்று அவர்கள்மீது கட்டவிழ்க்கப்பட்ட கற்பிதங்களைத் தன்னுடைய புத்தகம் என்னும் குறுங்கவிதையின் வாயிலாக பின்வருமாறு சாடுகிறார்:

"வாசிக்கப்படாமல் விமர்சிக்கப்படும் புத்தகம் அரவாணிகள்."

தாயின் புறக்கணிப்பு என்ற கவிதையில் தன்னுடைய பாலின மாற்றத்தால் பிறந்தகம் ஒதுக்க பெற்றவளும் புறக்கணிக்க அந்தப் புறக்கணிப்பின் பெரும்வலியினைப்

http://Creativecommons.org//license/by/4.0/.

பதிவு செய்கிறது. அன்புகொண்டு நேசித்து அரவனைத்த தன்னுடைய குடும்பம் தான் கொண்டிருந்த பாலின மாற்றத்தால் வெறுத்து ஒதுக்குவதால் அன்பையும் ஆதரவையும் யாசித்துப்பெரும் நிலையில் திருநம்பிகளும் திருநங்கைகளும் தள்ளப்பட்டுள்ளதை இக்கவிதை நினைவூட்டுகிறது.

கருவிலே கொன்றிருக்கலாம்
அன்றைக்கே அழிந்திருப்பேன்
குப்பைத்தொட்டியில் போட்டிருக்கலாம்
நாய்கள் குதறியாவது செத்திருப்பேன்
புதருக்குள் போட்டிருக்கலாம்
புளுத்தள்ளி எறும்பு மொய்த்தாவது செத்திருப்பேன்
பெற்றெடுத்து பெயர் வைத்து வீதியில்
விட்டெறிந்து விலகிக் கொண்டாயே!
உலகமே நீதானே! நீயே புறக்கணித்தால் -
இந்த உலகம் மட்டும் எப்படி ஏற்றுக்கொள்ளும்?."

என்று தனித்துவிடப்படும் திருநங்கைகளின் தீராத வலிகளை வார்த்தைகளாய் மொழிபெயர்க்கிறது மேற்கண்ட கவிதை. திருநங்கைகள் என்றாலே அவர்கள் பாலியல் இச்சைமிகுந்தவர்கள் என்றும் பாலியல் தொழிலில் ஈடுபடுவர்கள் என்ற கற்பிதம் நம்சமூகத்தின் புறையோடிய நம்பிக்கை. இந்நம்பிக்கையைத் தன்னுடைய விலைமகள் என்னும் கவிதையில் பின்வருமாறு பேசுகிறார்:

"பூப்பெய்தாப் பெண்கள்
மாதவிடாய் காணா மங்கைகள்
கருப்பை இல்லா! கன்னிகள்
மணமாகா விதவைகள்
வாழ்க்கைச் சந்தையில் வாங்கப்படாத
நாங்கள் விற்கப்படுகிறோம் விலைமாதர்களாக."

திருநங்கையும் திருநங்கைச் செயல்பாட்டாளருமான லிவிங் ஸ்மைல் வித்யா தன்னுடைய 'மரணம் மட்டுமா மரணம்' என்னும் கவிதைத்தொகுப்பில் ஒவ்வொரு கவிதையிலும் திருநங்கைகளின் வலிநிறைந்த வாழ்வியலை சித்திரித்துள்ளார்.

"படகு ஒன்று இருந்தது.
அதில் துளை விழுந்துவிட்டது
பாதகமொன்றுமில்லை
அது இப்போது ஆற்றில் இல்லை
ஆனால் இனி எப்போதும் அதற்கு ஆறு இல்லை."

இந்தக் கவிதை வரிகளை ஆழ்ந்து நோக்கினால் இதன் குறியீட்டு விளக்கம் புலப்படும். இங்கு கவிஞர் தன்னை ஒரு படகாகவும் அதில் ஏற்பட்டுள்ள துளையைத் தன்னுள் ஏற்பட்ட பாலின மாறுபாட்டிற்கும் ஒப்பிட்டுப் பேசுகிறார். எவ்வாறு துளைகொண்ட

http://Creativecommons.org//license/by/4.0/.

படகிற்கு ஆறில்லையோ பாலின மாற்றம் கொண்டவருக்கு வீடில்லை என்பதனைக் குறியீடாகப் பேசியுள்ளார்.

தன்னுடைய மற்றுமொரு கவிதையில் பாலின மாறுபாட்டினால் பாதிக்கப்பட்ட குழந்தை தன்னுடைய அடையாளத்திற்காக மெனக்கிடுவதையும், அதன் நிராகரிப்பின் நெடும்வலியினையும் பேசுகிறார்:

"அப்போது நான்
முழுக்கை சட்டையும் கால் சராயும்
அணிவது வழக்கம்
அப்போது நான்
மாதம் ஒருமுறையென சீராக முடிதிருத்தி வந்தேன்
அப்போது நான்
ஆண்களுடன் Boys School- ல் தான் படித்தேன்
இருந்தாலும் அவர்கள் கிண்டல் செய்தார்கள்
"நான் ஆணில்லை" என..."

இப்போது நான் புடவை கட்டி ஒத்த சடை பின்னிப்பூ முடிந்து பாந்தமாக வளைய வந்தாலும் அவர்கள் என்னவோ கண்டுபிடித்துவிட்டார்களாம் "நான் பெண்ணில்லை"யென்று. பால்மாறுபாடு கொண்டவர்கள் தங்கள் பாலினஅடையாளத்தை மறைக்கவும் முடியாமல் மறுக்கவும் அல்லல்படும் நிகழ்வினை இந்தக் கவிதையில் மிக அழகாகச் சித்திரித்துள்ளார் கவிஞர். தனக்குள் பதிந்திருக்கும் பெண்மைய வெளிப்படுத்தியதற்காகத் தான் பிறந்த வீட்டிலிருந்து வெளியேறி அல்லது வெளியேற்றப்பட்டு வீதிக்குவரும் திருநங்கைகள் பொதுச்சமூகத்தின் புறக்கணிப்பால் வேலை கிடைக்காமல் தன் வயிற்றைக்கழுவ உடலை விலைபேசும் அவர்களின் அவலநிலையைத் தன்னுடைய 'விபச்சார பயணம்' என்னும் கவிதையில் வெ.முனுஷ் கீழ்க்காணுமாறு பேசுகிறார்:

"எவனோ! ஒருவனின் உடல்பசிக்கு இரையாகி -
என் வயிற்றுப்பசி நீக்கிட
விலையான நிறைவோடு புறப்படுவேன் -
கையில் விற்பனை
வருமானம் இருநூறோ! ஐந்நூறோ!"

தன்னுடைய 'மாற்றுப்பயணம்' என்னும் கவிதையில் திருநங்கைகளின் தொழில்களில் ஒன்றான இறப்பு நிகழ்வுகளுக்குச் சென்று ஒப்பாரிப் பாடுவதாக அமையப்பட்டுள்ள இந்தக் கவிதையில் கவிஞர் அவர்களின் அழுகைக்கான காரணங்களைக் கீழ்க்கண்டவாறு பதிவு செய்கிறார்:

"அழுகின்றோம்......
எழவே முடியாது என்பதற்காக அல்ல -
இனி அழவே கூடாது என்பதற்காக......
வலிகளையும் ரணங்களையும் கடத்திடவே
இறப்பு வீடுகளில் அழுகின்றோம்.

http://Creativecommons.org//license/by/4.0/.

இறப்புக்காக மட்டுமல்ல -
எங்கள் பிறப்புகாகவும் சேர்த்து
ஈரமுள்ள நெஞ்சங்களை இரக்கம்கொள்ள செய்திட்டோம்!"

முடிவுரை :

தன்னுடைய நங்கையும் நம்பியுமாய் எனும் கவிதையில் ஆணாகப்பிறந்து பெண்தன்மையை உணர்ந்து ஆணுறுப்பை அருத்து பெண்ணாக மாறிய திருநங்கைகளையும் பெண்ணாகப்பிறந்து ஆண்தன்மையோடு பெண் அடையாளங்களை அழித்து ஆணாக வாழும் திருநம்பிகளையும் மையமாகக்கொண்டது. அவர்கள் எதிர்கொள்ளும் நிராகரிப்பின் வலிகளைப் பேசுகிறது. முரண்பாட்டின் முழு உருவம் ஒற்றுமையின் சிறு உருவம் இயற்கைத் தாய் பிரசவித்ததில் இரட்டைக் குழந்தைகள் நங்கையும் நம்பியுமாய் நானும் நீயும் எனக்குப் பிடித்தது உனக்குப் பிடிக்கவில்லை உனக்குப் பிடித்தது எனக்குப் பிடிக்கவில்லை ஆணாகிப் பெண்ணானதால் ஆணை ஈர்க்கின்றேன் பெண்ணாகி ஆணானதால் பெண்ணை ஈர்க்கின்றாய் நான் வெறுத்த ஆண்மையை - நீ நேசிக்கின்றாய் நீ வெறுத்த பெண்மையை - நான் நேசிக்கின்றேன் பாலின மாறுபாடென்பது இயற்கை நம் உடம்பில் மேற்கொண்ட பால்குரோமோசோம்களின் மாறுபாடே அன்றி மற்றேதுமில்லை.

மேற்கோள் நூல்கள் :

1. லிவிங் ஸ்மைல் வித்யா, மரணம் மட்டுமா மரணம் கருப்புப்பிரதிகள் 2018.
2. வெ.முனிஷ், சுயம்பு, கவியரசர் கலைத்தமிழ்ச்சங்கம், பரமத்தி வேலூர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

35. கூத்தும் நாடகமும் - வகைமையும் வளர்ந்தமையும்

முனைவர் F.மலர்விழி,
துறைத்தலைவர்,மொழியியல் துறை,
பிராவிடென்ஸ் மகளிர் கல்லூரி,குன்னூர்.
DOI 10.5281/zenodo.15072998.

Abstract :

Folklore is one of the emerging fields. In the applied science of folklore, the goal is to obtain and analyze the records created by the people living in villages according to the time, place, and circumstances in which they lived. Those records revealed the lifestyle that was expressed in the songs of normal working conditions and evening gatherings for entertainment. These types of records, which are not written in writing, acquire a classical character when they start taking shape in writing over time. This article is intended as an introductory explanation of the gathering art and its classical form, the Nadakala.

Key Words : Folklore - Drama - Tamil Ethical Drama - Classical Drama

அறிமுகம் :

நாட்டுப்புறவியல் என்பது வளர்ந்து வரும் துறைகளுள் ஒன்றாகும். நாட்டுப்புறவியல் என்னும் செயலாக்க அறிவுத்துறையில், கிராமங்களில் வாழுகின்ற மக்கள் தாங்கள் வாழ்ந்த கால இடம், சூழ்நிலைக்கேற்ப நாட்டார் படைத்த பதிவுகளைப் பெற்றுப் பகுப்பதே குறிக்கோளாகின்றது. இயல்பான பணிச்சூழலிலான பாடல்கள், பொழுதுப்போக்கிற்கான மாலை நேரக் கூத்துகளிலும் வெளிப்படும் வாழ்வியலை அப்பதிவுகள் வெளியிட்டன. ஏட்டில் எழுதாத இவ்வகை பதிவுகள் காலப்போக்கில் ஏட்டில் வடிவம் கொள்ளத் தொடங்கும் பொழுது செவ்வியல் தன்மையைப் பெற்றுவிடுகின்றது. கூத்துக்கலையும் அதன் செவ்வியல் வடிவமாகக் கருதப்படும் நாடக்கலையும் குறித்து ஒரு அறிமுகத் தன்மையிலான விளக்கமாகவே இக்கட்டுரை அமையப்பெறுகின்றது.

கூத்து :

கூத்து என்பது, இசை, நடனம், கதை ஆகியவற்றைச் சேர்த்து நிகழ்த்தப்படும் ஒரு பழங்காலக் கலை. இது, ஆரம்பகால தமிழ்நாட்டில் தோன்றிய ஒரு நாட்டுப்புறக் கலையாகும். முற்காலத்தில் வாழ்ந்தவர்கள் பொழுதுபோக்கிற்காகவும், தங்களது களைப்பைப் போக்கும் செயற்பாடாகவும் ஒரு முற்றத்தில் ஒன்று கூடி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். அதுவே நாளடைவில் பல்வேறு பரிணாமங்களைப் பெற்று கலைகளாகத் தோற்றம் பெற்றது. அவர்கள் அன்று பொது முற்றத்தில் ஆடியவை இன்று கூத்து என்ற பெயரைப் பெற்று வளர்ந்து நிற்கின்றன. கூத்து, தெருக்கூத்து அல்லது கட்டைக்கூத்து என்றும் அழைக்கப்படுகிறது.

கூத்து வகைகள் :

- அகக்கூத்து
- புறக்கூத்து
- சாந்திக்கூத்து
- விநோதக்கூத்து
- தோல்பாவைக்கூத்து
- கணியான் கூத்து

http://Creativecommons.org//license/by/4.0/.

- வடமோடிக்கூத்து.

கூத்து ஆடுபவர்கள் கூத்தர் எனப்பட்டனர். கூத்துக்கள் இரவு பொழுதில் நடைபெறும் என்பதையும் விடியும் வரையும் நிகழ்த்தப்படும் என்பதையும் உணர்த்துகிறது. இயல், இசை, கூத்து என்பன முத்தமிழ். இயல் என்பது எழுதப்படுவதும் பேசப்படுவதுமாகிய தமிழ். இசை என்பது பண்ணிசைத்துப் பாடப்படும் தமிழ். கூத்து என்பது ஆடலால் உணர்த்தப்படும் தமிழ்.

நாடகம் :

நாட்டு + அகம் = நாடகம். அதாவது, நாட்டு மக்களின் அகத்தை பிரதிபலிக்கும் கலை. இயல் இசை நாடகம் என்ற தமிழ் இலக்கிய மூன்றாம் வடிவம். கதை ஒன்றை அரங்கிலே நடிப்பு, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி முதலான கலைகளின் ஒன்றிணைப்பால் படைத்துக் காட்டுவதே நாடகம்.

“மக்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் ஒரு கலை வடிவம் நாடகம்” என்னும் அளவில் இச்சொல் விளக்கம் பெறுகிறது. நாடு + அகம் என்பதை மாற்றி அகம்+நாடு என வைத்துப் பார்த்தாலும், 'அகத்தை நாடு', 'உள்ளத்தை நாடு' என்னும் பொருள் தருவதை உணரலாம். நாடகம் என்பது ஒரு கலை அல்லது பலவகைக் கலைகளின் கூட்டுச் சேர்க்கையாகும். நாடகத்தின் பண்புகள்: நாடகம் என்பது, கற்பனையான அல்லது கற்பனை அல்லாத நிகழ்வுகளை எழுதப்பட்ட உரையாடல் மூலம் சித்தரிப்பதாகும். நாடகங்கள் மேடையில், திரைப்படம் அல்லது வானொலியில் நிகழ்த்தப்படலாம். நாடகங்களை எழுதுபவர்கள் நாடகாசிரியர் என அறியப்படுவார். மேலும் அவற்றின் படைப்பாளிகள் "நாடக எழுத்தாளர்கள்" அல்லது "நாடக கலைஞர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

தமிழ் நாடக உலகில் நாடக மூவர் என்று அழைக்கப் பெறுபவர்கள்:

- சங்கரதாஸ் சுவாமிகள்
- பம்மல் சம்பந்தமுதலியார்
- பரிதிமாற் கலைஞர்.

கூத்தும் நாடகமும் :

நாடகம், கூத்து ஆகிய இரு சொற்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய சொற்களாகும். ஆனால், இரண்டும் ஒன்றல்ல. நாடகத்துக்கும் கூத்துக்கும் இடையே சிறிதளவு வேறுபாடு உண்டு. சதிராட்டம் அல்லது நாட்டியம், நாடகம் ஆகிய இரண்டும் இணைந்தது கூத்து. சதிராட்டத்தில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டது நாடகம்.

ஒரு தனிப் பாட்டுக்கோ, ஒரு சிறு நிகழ்ச்சிக்கோ அபிநயம் பிடிப்பது நாட்டியம்; ஒரு கதையை மையப்படுத்தி வேடமிட்டு ஆடுவது நாடகம். இந்த இரண்டையும் கூத்து என்னும் பொதுப்பெயரால் பண்டைத் தமிழர் வழங்கி வந்தனர். கூத்து என்னும் சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன. கூத்து இலக்கிய உலகில் நாடகம் Drama எனப் பெயர் பெற்று வந்தது.

“ஆண் உள்ளம், பெண் உள்ளம் அற உள்ளம், மற உள்ளம், இன்புள்ளம், அன்புள்ளம், அளிவுள்ளம், அழகுள்ளம், தாயுள்ளம், சேயுள்ளம், பாசவுள்ளம், பாழுள்ளம், வாகை உள்ளம், வஞ்சனை உள்ளம் அத்தகைய உள்ளங்களெல்லாம் நாட்டில் ஒவ்வொரு நிகழ்ச்சியை உணர்த்துவதால் இஃது நாட்டைச் சார்வதால் நாடகம் என்று பெயர் வந்தது. அதனடிப்படையிலும் பாடலும் சேர்ந்து நிகழ்வதால் நாடகம் என்று வந்திருக்கலாம்.” என சமயமுரசு. சோ. சண்முகம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

கூத்துக்கலை முன்பு, நிகழ்ச்சியை ஆள் மூலம் நடித்துக் காட்டாமல் இசையால் பாடப்பெற்றன. இதனை மூவர் அல்லது ஐவர் அமர்ந்து பாடுவர். ஒருவர் பாடிக் கதையைக் கூறி ஏனையோர் இயைந்து பாடுவார்கள். இதையே வடநாட்டில் வியாக்கியானம், பிரசங்கம், உபநியாசம் என்று கூறுவர். பாண்டவர் கதை, இராமாயணக் கதை, மாரியம்மன் கதை இவற்றைக் கூத்துக்கலை மரபில் பாடினர். இவற்றின் பின்பு இவற்றுடன் நடிப்புக் கலந்து உடல் அசைவுகள் சேர்ந்து கூத்தாக மாறியது. முதன் முதலில் மன்னனின் பிறந்த நாள் அல்லது வெற்றியடைந்த நாள் அல்லது விழா நாள் இவற்றில் கூத்தாடினார்கள். மன்னன் வெற்றியடைந்த பிறகு கொற்றவையை வணங்கி, துடி கொட்டி மகிழ்ச்சியில் ஆடினார்கள்.

நாடக வளர்ச்சியின் முதல் நிலை:

தெருக்கூத்து

ஊரின் பொதுவிடத்தில் கோயில் | குளத்தின் அருகில் மரத்தடி

தீபக்கோலை ஒளியாகக் கொண்டு, மேனிமேல் பாத்திரத்திற்கேற்ற வண்ணம் பூசிக்கொண்டு துவியைத் திரைச்சிலையாக இருவர் கையால் பிடித்துக்கொண்டு, துடி (பம்பை) தாளம், முழவு இவற்றை இசைக்கருவியாகக் கொண்டு பின்பு ஊதுகுழல் சேர்த்து அங்க அசைவுகளைக் காட்டி இக்கூத்து நடைபெற்று வந்தது. இக்காலத்தில் எல்லாப் பக்கமும் சுற்றிச் சுற்றி வந்து ஆடும் வட்டரங்கு இருந்தது.

இரண்டாம்நிலை:

இதன்பிறகு களம் அமைத்தார்கள். களத்திற்கு உயரம், நீளம், அளவுகளை அமைத்துக் களம் உருவாக்கி, காற்றின் ஒளி விளக்குக் கொண்டு நிழல் விழாதபடி அமைத்து, தூண் அமைத்து, அங்க அசைவுகளைக் காட்டி நடித்து வந்தார்கள். இக்காலத்தில் தான் அணிகள், மேகலை, கடி சூத்திரம் இவைகளை அணிந்து நடித்தார்கள். இக்காலத்தில் இசைக்கருவி, யாழ், வீணை முதலியன பயன்படுத்தப்பட்டன. பொதுவாக இவ்வளர்ச்சி சிலப்பதிகாரம் எழுந்த காலத்தில் தோன்றியிருக்கலாம். சான்று தூண் அமைப்பு, கள அமைப்பு, மாதவி மேகலை அணிந்து நாட்டியம் அரங்கேறுதல், மாதவி யாழ் வாசித்தல், கள அளவு விதிமுறைகள் இவைகள் கூறப்பட்டுள்ளன.

மூன்றாவதுநிலை:

பிறகு எல்லா இசைக்கருவிகளும் பயன்படுத்தப்பட்டன. பாடுவோரும் ஆடுவோரும் ஒருவரே நிகழ்த்துதல், பலவகையான வண்ணம், அணி, மணி முடி, ஆடை ஆகியனவும் ஆண் உறுப்பு, பொன்னுறுப்பு ஆகியனவும் பயன்படுத்தப்பட்டன. நடிப்போர் மீது வண்ண ஒளி விழும்படி செய்தல் (Focus Light) முதலியன நாடகத்துடன் சேர்ந்து நாடகத்தைச் சிறக்கச் செய்தன.

நான்காம்நிலை:

நாடகம் நீண்டிருந்தால் எல்லோராலும் மனதை ஒருமுகப்படுத்திக் கவனம் செலுத்த இயலாத காரணத்தால் ஓரங்க நாடகம் தோன்றியது. இதில் ஒரே காட்சி அமையும் கிளைக்கதை இருக்காது. எதிர் இன்ப உணர்ச்சியோ அல்லது துன்ப உணர்ச்சியோ தோன்றும். இன்பம் (Comedy) அல்லது துன்பமாக (Treagdy) முடியும். குறுகிய காலத்தில் முடியும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

இன்றையநாடகங்கள்:

ஓரங்க நாடகம் தவிர ஏனைய நாடகத்தில் கிளைக்கதை உறுப்பினர் காட்சிகள் பல உண்டு. உரு ஒன்றாகவே இருக்கும் மர்மம் (Suspence) இருக்கும். இந்நாடகம் கண்டுகளிப்பவர்க்கு விருப்பூட்டுவனவாக இருத்தல் வேண்டும்.

1. ஓரங்க நாடகம்
   i. இன்பியல் நாடகம்
   ii. துன்பியல் நாடகம்
   iii. நகைச்சுவை நாடகம்
2. தற்காலநாடகம்(சமுதாய நாடகம்)
   - வரலாற்று நாடகம்
   - சீர்திருத்த நாடகம்
   - கவிதை நாடகம்
   - பக்திநாடகம்(அ)புராணநாடகம்.
   - எள்ளல்நாடகம்

நடிக்கப்பெறுவது நாடகம், தனிப்பாடல்கள், சிறுசிறு நிகழ்ச்சிகள், முழுக்கதைகள் ஆகியவற்றை நீண்ட நேரம் ஆடியும், பாடியும், நடித்தும் காட்டுவது நாடகம். ஆடல், கூத்து இரண்டையும் நாடகம் என்றே கூறலாம். இசை நாடகங்களாகத் தமிழகத்தில் பள்ளு, குறவஞ்சி, குளுவம், நாட்டார் கூத்து அல்லது நாட்டார் நாடகம் ஆகிய நான்கும் முதன்மையாகக் கருதத்தக்கவை எனலாம். தனிமனித வாழ்வின் பகுதியைத் தொடர்புபடுத்தி நீண்ட நேரம் நடிக்கும் நாடகமும் சேர்ந்து அவற்றுடன் நாட்டுப்புறக்கலை நாடகங்களை ஐந்தாகப் பகுக்கலாம்.

பள்ளுநாடகம்:

பதினாறாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோற்றம் கண்ட சிற்றிலக்கிய நாடக வடிவம் பள்ளு நாடகமாகும். சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் உழவர் வாழ்க்கைச் சித்திரிப்புப்பாடல்கள் போல, பல இலக்கியங்களிலும் உழவர் பாடல்கள் காணக் கிடைக்கின்றன. உழவுத் தொழிலுக்கும் அன்றாட வாழ்க்கை முறைமைக்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதால் உருவாகும் இலக்கியங்களிலும் அது பிரதிபலிப்பது இயல்பானது. அவ்வகையிலேயே உழவர்களையும், உழவுத் தொழிலையும் முக்கியப்படுத்திய நாடக இலக்கியமாகப் ‘பள்ளு’ தோன்றிய பதினாறாம் நூற்றாண்டிலிருந்து பள்ளு நாடகம் தமிழ் மக்களால் நடிக்கப் பெற்றது. பயிர்த்தொழில் செய்து வாழும் பள்ளர், பள்ளியரைப் பாத்திரங்களாகக் கொண்டு உழவர், உழவு அவர்தம் வாழ்க்கை முறைகளை நடித்துக் காட்டப்பெறும் நாடகம் இதுவாகும்.

குறவஞ்சிநாடகம்:

குறவஞ்சி நாடகம் என்பது, பாட்டுடைத் தலைவன் ஒருத்தி மீது காதல் கொண்டு அவளை அடையத் தவிக்கும் நிலையில், குறவர் குலத்தைச் சார்ந்த பெண் ஒருத்தி அத்தலைவிக்குக் குறி கூறிப் பரிசில் பெறும் செய்திகளைக் கூறுவதாக அமைந்த நாடகம். குறவஞ்சி நாடகத்தின் சிறப்புகள்: குறவஞ்சி நாடகம், சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. குறவஞ்சி நாடகம், மக்களுக்குத் தேவையான சந்தப்பாடல்களும், நாடகக் கூறுகளும் கொண்டு தோன்றி வளர்ந்தது. குறவஞ்சி நாடகம், அன்று முதல் இன்று வரை மக்கள் மனத்தைக் கவர்ந்த நாடக இலக்கியமாக விளங்குகிறது. குற்றாலநாதர் உலா

http://Creativecommons.org//license/by/4.0/.

வருகின்றபோது வசந்தவல்லி என்னும் பெண் அவர்மீது காதல் கொள்கிறாள். குற்றால நாதராகிய சிவபெருமானின் பெருமைகளைக் கூறும் வகையில் அமைந்துள்ள செய்யுள் நாடகம். குறவஞ்சி நாடகத்தின் வகைகள்: திருக்குற்றாலக் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி, துரோபதை குறவஞ்சி. 17,18,19 - ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் மக்களால் இந்நாடகம் விரும்பி காணப்பட்டது. மலையிடங்களில் வாழும் குறவர் குல மக்கள் குறிப்பாகக் குறத்தியின் வளர்ச்சியாக நடிக்க உருவாக்கப்பட்ட நாடகமிது. இனிய காட்சிகள், சுவையான பாடல்கள் எளிய ஆடல்களாக மக்கள்முன் நடித்துக்காட்டப்படும் நாடகம் இது.

மேடை நாடகங்கள் :

கதை ஒன்றை அரங்கில் நடித்து, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி போன்ற கலைகளின் ஒன்றிணைப்பால் படைத்துக் காட்டுவதே மேடை நாடகம். நாடகங்களை எழுதுபவர்கள் நாடகாசிரியர் என அழைக்கப்படுகிறார்கள்.

நாடகங்களின் வகைகள்:

- மரபு வழி நாடகங்கள்
- நவீன நாடகங்கள்
- தொடர் நாடகங்கள்.

நாடகங்களின் அமைப்பு:

- நாடகங்களில், செயல், காட்சி, முகவர், நிறுவனம், நோக்கம் ஆகியவை முக்கிய கூறுகள்.
- நாடகங்களில், யார், என்ன, எப்போது, எங்கே, ஏன், எப்படி ஆகியவை அடிப்படை கூறுகள்.

சங்க காலத்தில் பொதுவியற் கூத்துக்கள் நடைபெற்றன. பதினேழாம் நூற்றாண்டுக் கால நாடக்கக்கலை மக்களின் கலையாக வளர்ச்சி பெற்றது. பள்ளு, குறவஞ்சி, நொண்டி போன்ற நாடகங்கள் தோன்றின. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் 'தெருக்கூத்து' என்ற நாடக வடிவம் தோற்றம் பெற்றது.

நிறைவுரை :

நாடகமும் கூத்தும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்து நிற்கின்றது. இன்றைய அளவில் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டு நடிக்கப்படும் நாடகங்களை விட படிக்கப்படும் நாடகங்களை நிரம்ப உள்ளன. கிராமங்களில் கூத்து அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்து வருகின்றது. இலங்கை போன்ற நாடுகளில் நாடகத்தையும் கூத்தினையும் சமஅளவில் கலந்த கலவையாக்கி மேடைகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.

துணைமை நின்றவை :

1. https://thoguppukal.blogspot.com/2011/06/blog-post_693.html
2. https://www.tamilvu.org/courses/degree/p203/p2031/html/p2031112.htm
3. https://ramasamywritings.blogspot.com/2009/06/blog-post_9007.html
4. https://pranavjournals.com/tamil/wp-content/uploads/53-%E0%AE%95%E0%AF%82%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D-

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – IV VOLUME - 1
மார்ச்சு-2025 E-ISSN : 2584 - 1238

36. சங்க இலக்கியத்தில் தொழில்கள்

முனைவர் கு. பத்ம பிரியா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
எம்.ஒ.பி. வைணவ மகளிர் கல்லூரி,
நுங்கம்பாக்கம், சென்னை - 600034.
அலைப்பேசி:8838796289 - மின்னஞ்சல்:padmapriyagopu@gmail.com
DOI 10.5281/zenodo.15073747.

Abstract :

Occupation is a major part of human life and a source of livelihood. The profession has been a focus of hard work for the advancement of the profession. Thus, the purpose of this article is to examine the occupations performed by the people of the Sangam period through Sangam literature.

Key Words : Sangam Literature - Profession - Occupation

முன்னுரை:

மனித வாழ்வின் பெரும் அங்கமாகவும், வாழ்வாதாரமாகவும் விளங்கவது தொழிலேயாகும்.அத்தொழில் அச்சமுதாயம் முன்னேற்றத்திற்கு கடுமையாக உழைப்பதில் கண்ணும் கருத்துமாய் விளங்கியுள்ளனர்.அவ்வகையில் சங்க இலக்கியங்களின் வழி சங்ககால மக்கள் செய்த தொழில்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியத்தில் தொழில்கள்:

தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் அக்கால மக்களின் தொழில்கள் குறித்து பதிவுகள் காணப்படுகின்றது.

“ஆயர்வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வருஉம் கிழவரும் உளரே “ (தொல்.பொருள்.16)

ஆயர் எனும் மாடுவளர்க்கும் தொழில் செய்வோர் பற்றியும், வேட்டுவர் எனும் வேட்டைத்தொழில் செய்வோர் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும்

“ஏனோர் மருங்கினும் எண்ணுங்காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே“ (தொல்.பொருள்.அகத்.24)

இந்நூற்பாவின் மூலம் மற்ற திணைத் தொழில்கள் பற்றியும் குறிப்பிடப்படுகின்றன.உழவர், உழத்தியர் என்று உழவுத்தொழில் மருதநிலத்தின் கண்ணும், வேட்டை மற்றும் காட்டுப் பொருள்களாகிய மரங்கள், மருத்துவகுணம் கொண்ட செடிகள், தேன் சேகரித்தல் போன்ற தொழில்கள் குறிஞ்சி நிலத்தின் கண்ணும், மற்றும் மீன்பிடித்தல், உப்பு தயாரித்தல் போன்ற தொழில்கள் நெய்தல் நிலத்தின் கண்ணும் செய்யப்பட்ட தொழில்கள் குறித்து அறியமுடிகின்றது.

“அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினுங்
கடிவரை இல புறத் தென்மனார் புலவர்“ (தொல்.பொருள்.அகத்.25)

என்ற நூற்பா அடிகளில் அடித்தொழில் செய்வோர் பற்றியும் குற்றேவல் செய்வோர் பற்றியும் சொல்படுகிறது.ஏவல் மரபின் என்ற அகத்திணையியல் 26 நூற்பாவில் ஏவுகின்ற மரபுடைய வேளிர் இருந்துள்ளார்கள் என்ற செய்தியைப் பெறமுடிகின்றது.

“ஓதல் பகையே தூது இவை பிரிவே“(தொல்.பொருள். அகத்.26)

http://Creativecommons.org//license/by/4.0/.

இங்கு கற்றல் பற்றிக் கூறகின்றபொழுது கற்பிக்கும் ஆசரியர் தொழிலும், பகையே எனும்பொழுது தூது செல்லும் இன்றைய தகவல் பரிமாற்றம் போன்ற தொழில்கள் இருந்தன என்றும் பெறப்படுகின்றன.

சங்க இலக்கியத்தில் தொழில்கள்:

சங்க இலக்கியத்தில் பல தொழில்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் உடல் உழைப்பு சார்ந்த தொழிலகளை எடுத்துக்கொண்டு அவற்றைப் பெருந்தொழில்கள்,துணைசார்தொழில்கள் குறித்து சங்க பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

ஐந்திணை சார் தொழில்கள், நெசவுத்தொழில்கள், கட்டடத்தொழில் போன்ற தொழில்கள் மக்களால் பரவலாகச் செய்யப்பட்டன.பெருபான்மையான மக்கள் செய்து வந்த இத்தொழில்களைப் பெருந்தொழில் என்று அழைத்தனர்.

வேட்டைத்தொழில்:

குறிஞ்சி நிலத்தில் உள்ள முதன்மையான தொழிலே வேட்டைத் தொழில். சங்க இலக்கியங்களில் பெரும்பாலான நூல்களில் வேட்டைத் தொழில்களுக்கான சான்றுகள் உள்ளன. பன்றியை வேட்டையாடுதல், முள்ளம் பன்றியைப் பிடிக்க வேட்டை நாயுடன் சென்று வேட்டையாடியுள்ளனர். மேலும்,தினைப்புனத்தில் தினைக்கதிர்கள் நன்கு விளைந்து முற்றிய காலங்களில் பன்றிகள் இரவுப்பொழுதில் வந்து அத்தினைக் கதிர்களை மேய்ந்து அழிக்கும், அதனைத் தடுப்பதற்காக வேட்டுவர் தினைப்புனங்களில் பன்றிகள் வரும் பாதையில் பெரிய கற்பொறிகளை அமைத்து வைத்திருப்பார்கள். தினைப்புனத்தை மேய வரும் பன்றிகள் அக்கற்பொறிகளில் அகப்பட்டுக் கொள்ளும், அப்போது, தினைப்புனம் காத்திருந்த எயினர் விரைந்து வந்து அப்பன்றியைக் குத்திக்கொல்வர். இக்கற்பொறிகள் அடார் என்று வழங்கப்பட்டன.

“**விளைபுனநிழத்தலிற்கேழலஞ்சிப்**
புழைதொறும்மாட்டியஇருங்கலரும்பொறி யுடையஆறே” **-மலைபடுகடாம்** (193-95)

என்று, தினைப்புனங் காத்த எயினர், பன்றிகள் தினைக்கதிரை உண்ண வரும் பாதைகளில் கற்பொறிகளை அமைத்து வைத்த செய்தியை மலைபடுகடாம் (193-95) கூறுகிறது. எயினர் வேட்டையாடிக் கொன்ற விலங்குகளில் உடும்பும் ஒன்றாகும்.உடும்புகளை எயினர் விரும்பி வேட்டையாடினர்.உடும்பின்தசை சத்துமிக்கது என்று மக்கள் கருதுகின்றனர்.அதன் தசை, உண்பாரது உடலில் முழுமையாகச் சேரும் என்பது மக்களின் நீண்டகால நம்பிக்கை ஆகும்.இதுபற்றி ‘கால் கோழி, அரை ஆடு, முக்கால் காடை, முழுஉடும்பு” என்று ஒரு சொலவம்மக்களிடையே வழங்கிவருகிறது.வேட்டைப்பிரியர்கள் இன்றும் உடும்புகளை விரும்பி வேட்டையாடுகின்றனர்.ஊருக்கு அண்மையில் இருந்த மடுக்கரையில் இருந்து உடும்புகளை எயினச்சிறார் பிடித்து வந்த செய்தியைப் புறநானூறு முதலிய நூல்கள் கூறுகின்றன.

“ஊர்,அருமிளையதுவே மனைவியும்
வேட்டைச்சிறாஅர் சேட்புலம் படராது
படுமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
விழுக்கு நிணம்பெய்த தயிர்க்கண் விதவை

http://Creativecommons.org//license/by/4.0/.

யாணர்நல்லவை பாணரொடொராங்கு
வருவிருந்தயரும் விருப்பினள்"-(புறநானூறு 326)

உடும்பைப் போலவே முயலும் ஒரு சிறிய விலங்கு தான் .மக்கள் இன்றும் அதனை விரும்பி வேட்டையாடுகின்றனர். பண்டைநாள் போலவே இன்றும் உணவுக்காகவே முயல் வேட்டையாடப்படுகிறது. முயல் ஒரு சாதுவானஆபத்தில்லாத விலங்கு.அதை வேட்டையாடுவதும் எளிது. எனவே எயினர் முயலை மிகுதியாக வேட்டையாடினர். வேட்டுவர் குடிசைகளில் முயற்கறி முக்கிய உணவாக இருந்தது. அங்கு எல்லாநாட்களிலும் எல்லாநேரங்களிலும்முயற்கறி உண்ணக் கிடைத்தது.வேட்டுவர் முயல்வேட்டையாடியது குறித்துச் சங்கஇலக்கியங்கள் விரிவாகவே பேசுகின்றன.

"படலைமுன்றிற்சிறுதினையுணங்கல்
புறவுமிதலுமறவுமுண்கெனப்
பெய்தற்கெல்லின்றுபொழுதேயதனால்
முயல்சுட்டவாயினும்தருவேம்புகுதந்
தீங்கிருந்தீமோமுதுவாய்ப்பாண" - புறநானூறு 319

என்று புறநானூறு கூறுகிறது.

ஆநிரைகளை மேய்த்தல்:

முல்லை நிலத்தில் உள்ள மக்கள் ஆநிரைகளை வளர்த்தலை தொழிலாகச் செய்து வந்தள்ளனர். இதனை,

"மழை விளையாடும் குன்று சேர் சிறுகுடிக்
கறவை கன்றுவயிற் படரப் புறவில்" (குறுந்.108)

என்ற குறுந்தொகைப் பாடல் ஆநிரைகளை மேய்த்தலைக் குறிக்கிறது.

உழவுத்தொழில்:

மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத உழவுத் தொழிலைக் குறித்து சங்கப்புலவர்கள் முதல் இன்றைய புலவர்கள் வரை எடுத்தியம்பி வந்துள்ளனர்.உழவுத்தொழிலைச் செய்பவர்கள் உழவர்கள். இவர்கள் மருது நிலத்தைச் சார்ந்தவர்கள் என்பதனை,

"பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளான்" (அகம். 126:11)

என்ற அகநானூறு நெல்மிக்க ஊரை உடையவர்கள் என்று பறைசாற்றுகிறது.

"கண்படை பெறாது தண்புலர் விடியல்
கருங்கண் வராஅல் பெருந்தடி மிளிர்வையொடு
புகர்வை அரிசிப் பொம்மற் பெருஞ்சோறு
...
அடுநரோடுநீ சேறி யாயின்" (நற்.60:5-8)

உழவர்கள் தங்கள் நிலங்களைப் பண்பட்ட நிலமாக மாற்றினர். பெருமளவில் விளைச்சலைத் தரக்கூடிய நிலம் என்பதற்க அங்குள்ள நெற்கதிர்கள் முற்றிய நிலையில் வளைந்து நிற்கம் காட்சியை நற்றிணைப் பாடல் சிறப்பாக எடுத்தியம்புகிறது.பரந்துப்பட்ட நிலத்தை உழுது நீரைப்பாய்ச்சி பயிர் விளைச்சலை உண்டாக்கக் கூடியதாக

http://Creativecommons.org//license/by/4.0/.

அமைந்திருப்பது நன்செய் உழவாகும்.நன்செய் உழவைப் பற்றி புறநானூறும், பட்டினப்பாலையும் எடுத்துரைத்துள்ளன.வன்புலுமாகிய முல்லை நிலத்தில் வரகு விளைந்து நின்றது என்று புறநானூறு எடுத்துரைக்கின்றது. எருதுபூட்டி உழுது, வெள்ளை வரகும், கொள்ளும், பயிராக்கி உழவு செய்தனர் என்று புறநானூறு (384) வாயிலாக அறியலாம்.

நெசவுத் தொழில்:

மானிடச் சமுதாயத்திற்கு வேளாண் தொழில் இன்றியமையாததாகும்.அவற்றுடன் நெசவு, தச்சு உள்ளிட்ட ஏனைய தொழில்களும் இன்றியமையாத தேவையைக் கொண்டுள்ளன.விலங்குகளைப் போலன்றி உடலை மறைத்தற்குரிய உடையினை அணிந்து, மானத்துடன் வாழும்முறை மக்கள் வாழ்க்கையின் சிறப்பியல்பாகும்.இதனால் நெசவுத் தொழிலின் தேவையை உணரமுடியும்.நாகரிகம் வளராத மிகப் பழங்காலத்தே மக்கள் தழை, இலை ஆடைகளையும், மரப்பட்டைகளையும், மான், புலி முதலியவற்றின் தோலினையும் உடுத்தியுள்ளனர்.நாளடைவில் அந்நிலை மாறியதும் மக்கள் தங்கள் நுண்ணறிவின் திறத்தால் பருத்தியின் பஞ்சினை நூலாக நூற்று, ஆடையாக நெய்து அணியத் தொடங்கினர்.

மனிதர்களின் உடை தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப வேறுபட்டு அமைந்துள்ளது. குளிர் அதிகமாகவுள்ள மேல்நாட்டினரின் உடை உடம்பை இறுகத் தழுவிக் கொள்கின்ற வகையிலும், வெப்பம் அதிகமாகவுள்ள தமிழகப் பகுதிகளில் இறுக்கமில்லாத ஆடைகளும் பயன்படுத்தப்படுகின்றன.உலகம் முழுவதும் காணப்படுகின்ற உடைகள் காலநிலைக்கும், நாகரிகப்பண்பாட்டுக்கும் ஏற்ப அமைந்துள்ளன.சங்க இலக்கியத்திற்கு முன்தோன்றிய இலக்கண நூலான தொல்காப்பியத்தில் ஆடையைப் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.இதிலிருந்து நெசவுத்தொழிலின் தொன்மையை அறியமுடிகிறது.

> ***“கூழை விரித்தல் காதொன்று களைதல்***
> ***ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலொடு***
> ***கெழீஇய நான்கே இரண்டென மொழிப” (தொல்.நூ.427)***

நெசவுத்தொழிலின் உற்பத்திக்கு மூலப்பொருள் பருத்தியாகும்.ஆடை உருவாக்கத்திற்குரிய மூலப்பொருட்கள் மூன்று நிலைகளில் அமைகின்றன.தாவர, விலங்குகளிடமிருந்து ஆடை தயாரிப்புக்கான மூலப்பொருட்கள் பெறப்படுகின்றன.அறிவியல் வளர்ச்சியால் செயற்கை இழைகளைக் கொண்டும் ஆடைகள் தயாரிக்கப்படுகின்றன.

நெசவுப்பெண்டிர்

சங்க இலக்கியத்தில் நெசவுத்தொழில் செய்பவராகப் பெண்கள் காணப்படுகின்றனர். கணவனை இழந்த கைம்பெண் தன் பிழைப்பிற்காக நூல்நூற்றசெய்தி குறிஞ்சித்திணைப் பாடலில் காணப்படுகின்றது. இதிலிருந்து கணவனை இழந்தபெண்கள் நூல்நூற்று வாழ்க்கை நடத்திவந்துள்ளனர் என்பதைஅறிய முடிகிறது.சங்கஇலக்கியங்களில் நெசவுப்பெண்டிரைக் குறிக்க பருத்திப்பெண்டிர், ஆளிற்பெண்டிர் போன்ற சொற்கள் வழங்கப்பட்டுள்ளன.

http://Creativecommons.org//license/by/4.0/.

"ஆளிற்பெண்டிர்தாளிற்செய்த
நுணங்குநுண்பனுவல்போல" (நற். 353; 1 - 2)
"பருத்திப்பெண்டின்பனுவல்அன்ன"(புறம். 125; 1)

சங்ககால மக்கள் பருத்திப்பஞ்சை அதனுடைய கொட்டையிலிருந்து பிரித்தெடுக்க வில்லினைப் பயன்படுத்தியுள்ளனர். பின்னர், பருத்திக்கொட்டையை நீக்கித் தூய்மை செய்யும் போது பஞ்சின் புறத்தோலினையும் எஞ்சிநிற்கும் கொட்டையினையும், தூசுகளையும் நீக்குவதற்காக நன்றாகப் புடைத்த செய்தியும் காணப்படுகின்றது.

"வழிதுளிபொழிந்தஇன்குரல்எழிலி
எ.:குறுபஞ்சிற்றாகி" (நற். 247; 3 - 4)
"சிறையும்செற்றையும்புடையுருள்எழுந்த
பருத்திப்பெண்டின்சிறுதீவிளக்கத்து"(புறம். 326; 4 - 5)

பருத்திப்பெண்டிர்இரவுநேரங்களிலும்நூல்நூற்றுள்ளனர்.பருத்திப்பெண்டிரின்ஏழ்மைநிலைநூற்புத்தொழிலால்மாற்றம்பெறவில்லைஎன்பதைப்புறப்பாடல்கூறுகின்றது.

"தொன்றுதாமுடுத்தஅம்பகைத்தெரியல்
சிறுவெள்ளாம்பல்அல்லியுண்ணும்
கழிகலமகளிர்போல" (புறம். 280; 12 - 13)

இரும்புத்தொழில்

நாடோடிகளாகக் காடுகளில் வாழ்ந்த மக்கள் விலங்குகளை வேட்டையாடுவதற்குக் கற்களினால் செய்யப்பட்ட கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.நாகரிகம் வளர வளர உழவுத்தொழில் செய்ய முற்பட்டனர்.உழவுத்தொழில் செய்வதற்கு ஏதுவாக ஆற்றங்கரைப் பகுதிகளில் குடியேறிய மக்கள், கற்களினால் செய்யப்பட்ட கருவிகள் உழவுத்தொழிலுக்கு அதிகப் பயனைத் தராது என்பதை அறிந்தனர்.அதன் விளைவாக இரும்பின் பயனைக் கண்டு அதிலிருந்து பல்வேறு இரும்புப் பொருள்களைச் செய்து வந்துள்ளனர்.இரும்புத்தொழிலுக்கு மிகவும் இன்றியமையாதது உலைக்களமாகும்.இரும்பைக் காய்ச்சி, அடித்து பொருட்கள் செய்வதற்கு உலைக்களம் பயன்படுகிறது.உலைக்களம், துருத்தி, உலைமூக்கு, குறடு, கரி போன்றவை பற்றிய செய்திகள் குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணப்படுகின்றன.அறிவியல் வளர்ச்சி பெறாத தொன்மையான காலத்தில் தமிழர்கள் இரும்புத் தாதுக்களைச் சேகரித்துச் சிறிய களிமண் உலையில் தோல் துருத்தியின் உதவியால் இரும்பை உருக்கி வந்திருப்பதை இலக்கியங்களின் வழியாக அறியமுடிகின்றது. உலைக்களம் பொதுவாகப் பூமிக்கு அடியில் அமைக்கப்படுகின்றது. இரும்புத் தாதுக்களை உருக்கி எடுப்பதற்காகவும், பின் உருக்கி எடுத்த கட்டிகளை வேண்டிய கருவிகளாகவோ, பொருட்களாகவோ செய்யவும், அக்கட்டிகளை உலையில் சூடாக்கவும் கொல்லுலைகள் பயன்படுகின்றன.கொல்லுலையில் உள்ள தீ அதிக வெப்பத்துடன் காணப்படுகிறது. இரும்பு வேலை செய்யும் கொல்லனின் உலை வெம்மை மிக்கதாகக் காணப்படுகின்றதென நற்றிணைப் பாடல் கூறுகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

“இரும்புசெய்கொல்லன்வெவ்வுலைத்தெளித்த” (நற். 133; 9)

“................ .... கொல்லன்

உலையூதுந்தீயேபோல்உள்கனலும்கொல்லோ” (நாலடி. 298; 2-3)

அணிகலத்தொழில்

திணை அடிப்படையில் வாழ்ந்த சங்க கால மக்கள் தேவையான உணவுப் பொருட்களைப் பயிர்செய்து, உணவுண்டு வாழ்ந்து வந்துள்ளனர்.மேலும் இலை, தழை முதலியவற்றை ஆடையாகவும் அணிந்துள்ளனர்.கடற்கரையில் கிடைத்த கிளிஞ்சல்கள், கடலில் கிடைத்த முத்து, பவளம், சங்கு முதலியவற்றை அணிகளாகப் பயன்படுத்தியுள்ளனர்.அடுத்த நிலையாக வெள்ளி, பொன் போன்ற உலோகத்தாலான அணிகளைச் செய்து வந்துள்ளனர்.கல் இழைத்த பொன் அணிகளைச் செய்யத் தொடங்கி, படிப்படியாக அணிகலத் தொழிலில் தமிழர்கள் சிறப்புற்று விளங்கத் தொடங்கினர்.அணிகலன்கள் செய்தல், பல வகை அணிகள், அணிகலன்களின் தரமறிதல் போன்ற செய்திகள் குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணப்படுகின்றன.சங்க காலத்தில் பொன், இரும்பு முதலியவற்றால் பொருள் செய்வோர் கம்மியர் எனவும், கொல்லர் எனவும் அழைக்கப்பட்டனர்.பொற்கொல்லர்கள் அணிகலன்கள் செய்வதற்கு ‘அரம்’ என்ற கருவியைப் பயன்படுத்தியுள்ளனர்.ஒளியுடைய வளையலையும், அகன்ற தொடியினையும் கூர்மையான அரத்தால் அராவிச் செய்த குறிப்பு காணப்படுகின்றது.முத்து, மாணிக்கம், பொன் போன்றவற்றால் செய்த அணிகலன்களில் குறை இருந்தால் அதைத்திருத்தியும் அமைத்துள்ளனர் என்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன.இதிலிருந்து முத்து, மாணிக்கம், பொன் போன்றவற்றால் அணிசெய்யும் திறம் பெற்ற கொல்லர்கள் சங்க காலத்தில் இருந்ததை அறிய முடிகிறது.

“வாளரம்பொருதகோள்நேர்எல்வளை

அகன்தொடிசெறித்தமுன்கை” (நற். 77; 9-10)

“முத்தினும்மணியினும்பொன்னினும்அத்துணை

நேர்வரும்குறையகலம்கெடின்புணரும்” (குறிஞ். 13 -14)

“இரும்செய்கொல்லெனத்தோன்றும்”

(அகம். 72; 6)

ஓவியத்தொழில்

சங்க கால மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தமையால் விலங்குகள், பறவைகள், மரங்கள் மற்றும் ஏனைய உயிரினங்களின் உருவங்களை ஓவியங்களாக வரைந்துள்ளனர்.ஓவியத்தின் தொடக்கமாகக் கோடுகளை வரைந்து, பின்னர் இக்கோடுகளை இணைத்து முழு ஓவியத்தையும் வரைந்துள்ளனர்.அழகிய வீடுகளுக்கு ஓவியங்கள் உவமையாகக் கூறப்பட்டுள்ளன.மேலும் வீடுகளிலும், அரண்மனைச் சுவர்களிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

“ஓவத்தன்ன வினைபுனை நல்லில்” (அகம். 98; 11)

“நெடுமண் இஞ்சி நீள்நகர் வரைப்பின்

ஓவுறழ் நெடுஞ்சுவர் நாள்பல எழுதி”(பதிற். 68; 16-17)

http://Creativecommons.org//license/by/4.0/.

சங்க கால மக்கள் உடல்களில் ஓவியங்களை எழுதி மகிழ்ந்துள்ளனர்.இவ்வாறு உடலில் ஓவியங்களை எழுதுதல் 'தொய்யில் எழுதுதல்' என்றழைக்கப்படுகின்றது.மகளிர் மார்புகளிலும் தோள்களிலும் தொய்யில் எழுதியதைக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் கூறுகின்றன.கரும்பின் உருவத்தைத் தொய்யிலாக வரைந்த செய்தி காணப்படுகின்றது. குருவியின் ஓவியத்தை அரிப்பறையில் தீட்டியுள்ளனர்.

"உருத்தெழு வனமுலை ஒளிபெற எழுதிய
தொய்யில் காப்போர் அறிதலும் அறியார்"(குறுந். 276; 3-4)
"கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே" (நற். 39; 11)
"சிறுதோட் கோத்த செவ் அரிப்பறையின்
கண்ணகத்து எழுதிய குரீஇப் போல"(நற். 58; 2-3)

மடலேறுகின்ற ஆடவன், துணியில் தாம் விரும்பிய பெண்ணின் ஓவியத்தை வரைந்துள்ளான்.ஓவியம் வரைபவர்கள் 'கண்ணுள் வினைஞர்' என்றழைக்கப்பட்டனர்.

"நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கின்
கண்ணுள் வினைஞரும் பிறரும் கூடி"(மதுரை. அடி. 517-518)
"புனையா ஓவியம் கடுப்ப புனைவுஇல்
தளிர் ஏர்மேனி தாய சுணங்கின்"(நெடு. அடி. 147-148)

புனையா ஓவியம், புனைந்த ஓவியம் என ஓவியம் இருவகையாகக் கொள்ளப்பட்டன.

தொகுப்புரை

சங்ககால மக்கள் வேட்டைத் தொழில், ஆநிரை மேய்த்தல் , உழவுத்தொழில், நெசவுத்தொழில், இரும்புத் தொழில், அணிகலத்தொழில், ஓவியத்தொழில், இசைக்கருவிகள் செய்தல் போன்ற பல தொழில்களில் செய்து தன் குடும்பம் முன்னேறவும் தான் சார்ந்த சமுதாயம் முன்னேறவும் காரணமாக இருந்தமையை சங்க இலக்கியப் பாடல்களின் மூலமாக நன்கு அறிந்து கொள்ளமுடிகின்றது.

துணைநூற்பட்டியல்:

1. சுப்பிரமணியன்.ச.வே., தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசக பதிப்பகம்,
1. சென்னை, எட்டாம் பதிப்ப, 2006
2. நாகராசன்.வி.முனைவர்.,(உரை), குறுந்தொகை (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை - 98.
3. பாலசுப்பிரமணியன். கு.வெ.முனைவர்., (உரை), நற்றிணை (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர்.2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை - 98.
4. பாலசுப்பிரமணியன். கு.வெ.முனைவர்., (உரை), புறநானூறு (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர்.2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை - 98.
5. பாலசுப்பிரமணியன். கு.வெ.முனைவர்., (உரை), கலித்தொகை (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர்.2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை - 98.

http://Creativecommons.org//license/by/4.0/.

37. புறநானூற்றுப் பாடல்களில் நிலவியல் வரைபட உருவாக்கம்

முனைவர் சு.வினோத்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

DOI 10.5281/zenodo.15073769.

Abstract :

Each Sangam song is a map of the land. Later, Europeans created maps to travel by sea and find lands. As a follow-up effort, they created accurate geographical maps in their colonial countries through the land surveying system. However, Tamil poets have plotted each song they composed as a geographical map even two thousand years ago. With the help of those literary geographical maps, we can travel in that land even today. In this way, this article studies the creation of a geographical map of the Tamil region as featured in the Purananuru songs.

Key Words : Sangam literature - Purananuuru - Geographical - Tamil Poets

சங்கப் பாடல் ஒவ்வொன்றும் நிலம் குறித்த வரைபடமாகத் திகழ்கிறது. ஐரோப்பியர்கள் கடல்வழியாகப் பயணிப்பதற்கும் நிலங்களைக் கண்டடைவதற்கும் பின்னாளில் வரைபடம் உருவாக்கினர். அதன் தொடர் முயற்சியாக தமது காலனி நாடுகளில் நில அளவை முறை வழியாகத் துல்லியமான நிலவியல் வரைபடங்களை உருவாக்கினர். ஆயின் தமிழ்ப் புலவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தாம் இயற்றிய பாடல் ஒவ்வொன்றையும் நிலவியல் வரைபடமாகத் தீட்டியுள்ளனர். அவ்விலக்கிய நிலவியல் வரைபடங்களின் உதவியுடன் அந்நிலத்தில் இன்றும் பயணிக்க முடியும். அவ்வகையில் புறநானூற்றுப் பாடல்களில் இடம்பெற்றுள்ள திணை சார் தமிழ் நிலவியல் வரைபட உருவாக்கம் குறித்து இக்கட்டுரை ஆய்கிறது.

புறநானூறும் ஐந்திணையும்

தமிழகத்தின் நிலவியல் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து தொடங்கி கிழக்கு அல்லது மேற்கில் நீண்டு கடலில் முடிவதைக் காணலாம். மேலும், வடக்கே வேங்கட மலையில் இருந்து தொடங்கி தெற்கு நோக்கி நீண்டு கடலில் சென்று முடிவடையக் காணலாம்.

"வட வேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து" (தொல் - சிறப்புப் பாயிரம்)

என்பது தொல்காப்பிய சிறப்புப் பாயிரத்தில் பனம்பாரனர் கூறும் தமிழகத்தின் நில எல்லை ஆகும்.

மலையில் தொடங்கி கடலில் முடிவடையும் நிலப்பகுதியை தமிழர்கள் முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று வரிசைப்படுத்தி பெயரிட்டு உரைத்துள்ளனர். குறிஞ்சி முல்லையின் முறை திரிபு பாலை ஆகும். ஒருவர் மலையில் இருந்து இறங்கி கடல் நோக்கி மேற்கொள்ளும் தமிழ்நிலப் பயணத்தில் இந்நிலவியல் மாற்றங்களைக் காண்பார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

அக இலக்கியங்களைத் தொகுத்த புலவர்கள் தரும் திணை சார்ந்த குறிப்புகள் அப்பாடலோடு தொடர்புடைய நிலங்களை அடையாளப்படுத்துகின்றன. அகத்திணைப் பொருளை உணர்ந்து அனுபவிப்பதற்கு துணை செய்யும் வகையில் இப்பெயரிடலை மேற்கொண்டுள்ளனர். அதில் ஏற்பட்ட சிக்கலைத் திணை மயக்கம் என்றும் சுட்டியுள்ளளர். அகப்பாடல்கள் ஐவகை நிலம் சார் வாழ்வியலை வெளிப்படையாக உணர்த்துகின்றன. புறப்பாடல்களில் வெட்சி, கரந்தை, வஞ்சி போன்ற பேர் குறித்து வழங்கப்படும் திணைப் பெயரிடல் காரணமாகப் ஐவகை நிலப் பெயர்கள் குறிப்பாக இடம்பெற்றுள்ளன.

“தென் குமரி வட பெருங்கல்
குண குட கடலா எல்லை
குன்று மலை காடு நாடு
ஒன்று பட்டு வழிமொழிய” (புறம் 17 : 1 - 4)

என்ற பாடல் அடிகளில் குறுங்கோழியூர் கிழார் குறுநில மன்னர்களை அடக்கி ஆண்ட யானைக் கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையின் ஆட்சிக்கு உட்பட்ட நில எல்லையைக் குறிப்பிடுகின்றார். இதில் வட எல்லை இமயம் வரை விரித்துரைக்கப்பட்டுள்ளது. இச்சேர நாட்டின் எல்லைக்கு உட்பட்டு இருந்த தொண்டி நகரத்தை,

“குலை இறைஞ்சிய கோட் தாழை
அகல் வயல் மலை வேலி
நிலவு மணல் வியன் கானல்
தெண் கழிமிசைத் தீப்பூவின்
தண் தொண்டி” (புறம் 17 : 9 - 13)

என்று குறிப்பிடுகிறார். தாம் நடந்து கடந்த நிலவியலைக் கவிதை வடிவில் ஓர் வரைபடமாகப் புலவர் தீட்டியுள்ளார் .

சேரன் நிலமும் புதிய வருவாயும்

மகாபாரதப் போரில் பெருஞ்சோறு வழங்கியவனாகக் குறிப்பிடப்படும் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனின் நிலத்தைப் பாடும் முரஞ்சியூர் முடிநாகராயர் “மண் திணிந்த நிலன்” என்று பாடலைத் தொடங்கி,

“நின் கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின்
வெண் தலைப் புணரிக் குட கடற் குளிக்கும்
யாணர் வைப்பின் நல் நாட்டுப் பொருந” (புறம் 2 : 9 - 11)

என்று சேரநாட்டின் ஊர்களைப் பற்றிப் பாடுகிறார். இதில், கிழக்குக் கடலில் உதயமாகும் சூரியன் சேர நாட்டின் மேற்குக் கடலில் மறைவதைக் குறிப்பிடுகிறார். இவ்விரு திசைகளுக்கும் இடையே புதிய வருவாயை உடைய ஊர்கள் பல உள்ளன என்கிறார்.

பாரியும் பறம்பு மலையும்

குறுநில மன்னர்களாகிய பேகன், அதியமான், ஓரி, ஆய், பாரி, காரி, நள்ளி ஆகிய வள்ளல்கள் எழுவரும் மலை நிலத்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். குறிஞ்சி நிலம் தமிழ் வாழ்வின் ஆதிநிலமாக விளங்கியமையை,

http://Creativecommons.org//license/by/4.0/.

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு
முன் தோன்றிய மூத்தகுடி" (புறப்பொருள் வெண்பாமாலை - **கரந்தை** 13)

என்ற அடிகள் குறிப்பாக உணர்த்துகின்றன. அத்தகைய குறிஞ்சி நிலத்தைத் தனது ஆட்சிக்கு உட்பட்ட இடமாகக் கொண்ட இக்குறுநில மன்னர்கள் இந்நிலத்தின் பூர்வகுடிகளாக இருக்கக் கூடும். இம்மன்னர்களை அடக்கியும் அவர்தம் நிலங்களை அடைந்தும் பேரரசர்கள் தோற்றம் பெற்றுள்ளனர்.

பாரியின் பறம்பு நிலத்தைக் கபிலர் கவிதையில் வரைபடமாக்கியதன் வழியாகவே மூவேந்தர்கள் பாரியை நெருங்கியிருக்க வேண்டும். கபிலர் கவிதையில் தீட்டிய நிலவியலின் அறிதல் வழியாகவே மூவேந்தர்கள் பாரியை வென்றிருக்கக் கூடும். இக்கருத்துப் பின்புலத்திலேயே மனோஜ் குரூர் மலையாளத்தில் எழுதிய 'நிலம் பூத்து மலர்ந்த நாள்' புதினம் அமைந்துள்ளது. அந்நூல் ஒருபடி மேலே சென்று கபிலரே பாரியின் இறப்புக்கு மூவேந்தர்களுக்கான வழிகாட்டுதலைச் செய்து பாரியின் இறப்புக்குக் காரணமாகியுள்ளார் என்கிறது.

"முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நல்நாடு" (**புறம்** 110 : 4)
"உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே
ஒன்றே சிறியிலை வெதிரின் நெல் விளையும்மே
இரண்டே தீம் சுளைப் பலவின் பழம் ஊழ்க்கும்மே
மூன்றே கொழுங்கொடி வள்ளிக்கிழங்கு வீழ்க்கும்மே
நான்கே அணிநில ஓரி பாய்தலின் மீது அழிந்து
திணி நெடுங் குன்றம் தேன் சொரியும்மே" (**புறம்** 109 : 3 - 8)

என்பதைப் பறம்பு மலையின் நிலவியல் காட்சிப் பதிவுகளாகக் கொள்ளலாம். பாரியின் மலையில் இருந்த முந்நூறு ஊர்கள், அவை தானமாக வழங்கப்பட்ட செய்தி, பறம்புமலையில் உள்ள நன்கு வகை வளங்கள் எனப் பெருமையை உரைக்கும் கவிதைச் சித்திரமே மூவேந்தர்கள் பாரியை நெருங்குவதற்குக் காரணமாக இருந்திருக்கக் கூடும்.

குறுநில மன்னரும் குறிஞ்சி நிலமும்

கடையெழு வள்ளல்கள் உள்ளிட்ட குறுநில மன்னர்கள் யாவரும் மலைநிலத் தலைவர்களாகவே இருந்துள்ளனர். பாரிக்குப் பறம்புமலை போல் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மலை உரிமையாக இருந்துள்ளது. அவ்வரசர்களைப் பாடிய புலவர்கள் அவ்வரசர்களின் மலைகளையும் பாடியுள்ளனர்.

"குன்றும் மலையும் பலபின் ஒழிய
வந்தனென்" (**புறம்** 208 : 1 - 2)
"பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீம்கனி" (**புறம்** 91 : 8 - 9)
"உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்
அடைமல்கு குளவியொடு கமழும் சாரல்" (**புறம்** 90 : 1 - 2)

என்ற அடிகளில் சுட்டப்பெறும் மலை அதியமானின் குதிரைமலையாக இருக்கக் கூடும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

“குணில்பாய் முரசின் இரங்கும் அருவி
நளிஇரும் சிலம்பின் சீறூர்” (புறம் 143 : 9 - 10)

என்று பேகனின் பொதினி மலை குறித்து கபிலர் குறிப்பிடுகின்றார். இத்தகைய நிலவியல் குறித்த வருணனை அரசனோடு தொடர்புடைய இருப்பிடம் குறித்ததாக மட்டும் அல்லாமல் ஒரு நிலவியல் வரைபடத் தன்மையதாக அமைந்திருக்கக் காணலாம்.

ஆற்றுப்படையும் நிலவியல் வரைவும்

பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள ஐந்து ஆற்றுப்படை நூல்கள் தமிழக நிலவியல் குறித்த பெருவரைபடங்கள் ஆகும். புறநானூற்றில் இடம்பெற்றுள்ள ஆற்றுப்படை துறையில் அமைந்த பாடல்கள் வரைபடத்தின் காட்சித் துண்டுகள் ஆகும்.

“மார்கழி மலர்ந்த நெய்த லானும்
கள்நா றும்மே கானல்அம் தொண்டி
அஃதுஎம் ஊரே அவன் எம் இறைவன்” (புறம் 48 : 3 - 5)

என்ற பாடல் அடிகளில் புலவர் பொய்கையார் கோக்கோதை மார்பனின் ஊரான தொண்டியைப் மற்றொரு புலவருக்குக் கவிதையில் வரைந்து காட்டுகிறார். அதன்வழி அவ்வூரை நோக்கி அவரை ஆற்றுப்படுத்துகிறார்.

முடிவுரை

சங்கப் பாடல்களில் பலவும் நிலவியல் வரைபடங்களாகத் திகழ்கின்றன. நிலவில் எல்லைகளை அளந்தறிந்து வரைபடங்கள் உருவாக்கப்படும் காலத்திற்கு முன்புவரை நிலவியலைக் காட்சிப்படுத்தி வழிகாட்டும் செயலைச் செய்து வந்துள்ளன. அரசர்கள் பகைவர்களின் நிலம் குறித்து அறியும் வேட்கை காரணமாகப் புலவர்களைப் பெருவிருப்போடு அழைத்து உபசரித்து அவர்களின் பாடல்களைக் கேட்டுள்ளனர் என்று எண்ணத் தோன்றுகிறது.

துணை நூல்கள்

1. சொல்லாக்கியன் (உ.ஆ), தொல்காப்பியம் பொருளும் விளக்கமும், சொல்லாக்கியம் வெளியீடு, சென்னை, 2018.
2. புலியூர்க்கேசிகன் (உ.ஆ), புறப்பொருள் வெண்பாமாலை, பாரி நிலையம், சென்னை, 1963.
3. சாலமன் பாப்பையா (உ.ஆ), புறநானூறு புதிய வரிசை வகை, கவிதா பதிப்பகம், சென்னை, 2019.
4. மனோஜ் குரூர், நிலம்பூத்து மலர்ந்த நாள், வம்சி பதிப்பகம், திருவண்ணாமலை, 2016.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – IV VOLUME - 1
மார்ச்சு-2025 E-ISSN : 2584 - 1238

38. சங்க இலக்கியம் காட்டும் முருகவழிபாட்டின் தொல் மரபுகள்

சி. வசந்தி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி,
பேரூர், கோவை-641010

DOI 10.5281/zenodo.15073846.

: Abstract

When examining the meaning of the word worship in literature, the phrases 'worship the deity' and 'worship the day of worship' found in the Tolkappiyam are given the meaning of 'vanakam'. The phrase 'Vallari niye', which comes under the preposition 'Vallari niye', comes under the preposition 'Vallari niye', comes under the preposition 'Vallari niye'. U.V.Sami Nathar gives the meaning of 'going' to the 'worship' found under the preposition 'Vallari niye'. From the above, it can be seen that 'worship' is given in the meanings of 'principle', 'reform', 'going', 'following', and 'worshiping'.

Key Words : Tholkappiyam - Sangam Literature - God Murugan - Tradition

முன்னுரை

சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழ்ச்சமுதாயத்தின் வாழ்வியல் மரபை எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடி. வரலாற்றுப் பெட்டகம். சங்க காலம் முதலே முருகன் பற்றிய செய்திகள் இலக்கியங்களில் பரவலாக இடம் பெற்றுள்ளன. தமிழில் மூவாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த முழு முதற் இலக்கண நூலான தொல்காப்பியத்தில்.

"சேயோன் மேய மைவரை உலகம்" (தொல்.அகம்-5)

என்னும் நூற்பாவானது முருகனைச்**"சேயோன்"** என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளது. இதனையே முருகப்பெருமான் பற்றிய வரலாற்றுச் செய்தியில் முதற்பதிவாகக் கொள்ளலாம். தொல்காப்பியர் காலத்தில் குறிஞ்சி நில தெய்வமாக இருந்த சேயோன் இன்று நிலங்கடந்து அனைத்துலக மக்களும் போற்றி வழிபடும் பெருங்கடவுளாக மாறியிருப்பதை,

"நயத்தகு மரபின் வியத்ததகு குமர!". (பரி 9:82)

என்னும் பரிபாடல் வரி எடுத்துக்காட்டுகிறது.இத்தகு சிறப்படைய முருக வழிபாட்டின் தொல்மரபைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

வழிபாடு பெயர்க்காரணம்

வழிபடு என்ற வினைச்சொல்லேவழிபாடு என காலப்போக்கில் பெயராக மாறியிருக்கின்றது. மேலும் **"படு"** என்னும் துணை வினையே **"பாடு"**என முதல்நிலைத்திரிந்த தொழிற்பெயராகத் திரிந்துள்ளது.வழிபாடு என்னும் சொல்லுக்கு சென்னை பல்கலைக்கழகத்தமிழ்பேரகராதி'வழியிற் செல்லுகை', பின்பற்றுகை, வணக்கம்,பூசனை, என்றும், செந்தமிழ் அகராதி வணக்கம் என்றும், தற்கால தமிழ் அகராதி வணக்கம், கோட்பாடு என்றும், பிங்கல நிகண்டு பூசனை, என்றும், கழகத் தமிழகராதி வணக்கம்,வழியிற்செல்லுகை, பின்பற்றுகை. பூசனை.வழக்கம், சமயக் கோட்பாடுஎன்றும் பொருள்களைப் பகிருகின்றன.

http://Creativecommons.org//license/by/4.0/.

இலக்கியத்திலும் வழிபாடு என்ற சொல்லிற்கு உரிய பொருள் பற்றி ஆராயும் பொழுது தொல்காப்பியத்தில் வருகின்ற 'வழிபடு தெய்வம்', வழிபடுகிழமை வழிபாடு மறுத்தல் என்ற சொற்றொடர்களுக்கு வணக்கம் என்ற பொருளே வழங்கப்படுகிறது. வழிபடுவோரை "வல்லறி நீயே"என்றபுறநானூற்றுஅடியில் வரும் சொற்றொடர் வணங்குதல் என்ற பொருளிலேயே வருகிறது."**வழிபடல் சூழ்ந்திசின்அவருடை நாட்டே**"என்ற குறுந்தொகை அடியில் வரும் வழிபடல்என்பதற்கு **செல்லுதல்** என்ற பொருளை உ.வே.சாமிநாதர் குறிப்பிடுகின்றார். மேற்கண்டவற்றுள்இருந்து வழிபாடு என்பதற்குக் கோட்பாடு, சீர்திருத்தல், செல்லுதல், பின்பற்றுதல்,வணங்குதல் என்ற பொருள்களில் வழங்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

<u>தொல்வழிபாட்டு முறைகள்</u>

முழு முதல் இலக்கண நூலான தொல்காப்பியம்

1. **இயற்கை வழிபாடு**
2. **நடுகல் வழிபாடு**
3. **திணை தெய்வ வழிபாடு**

என்னும் மூன்று வழிபாட்டு முறைகளையே எடுத்துக்காட்டுகிறது. இதற்குப் பின் தோன்றிய சங்க இலக்கியங்களை ஆராய்ந்து நோக்குமிடத்து,

1. சூர் தெய்வம் [அச்சம் தருவது]
2. அணங்கு [துன்பம் தருவது / தீண்டி வருத்தும் தெய்வம்]
3. இயற்கை வழிபாடு
4. தாய்த் தெய்வ வழிபாடு
5. திணை தெய்வ வழிபாடு
6. முன்னோர் வழிபாடு
7. குலதெய்வ வழிபாடு
8. பத்தினி தெய்வ வழிபாடு
9. பிறதெய்வ வழிபாடு என ஒன்பது நிலைகளால் பகுத்துக் காண முடிகிறது.

<u>தொல்காப்பியர் காட்டும் தொல் வழிபாடு</u>

கொடிநிலை. கந்தழி, வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலான மூன்றும்
கடவுள் வாழ்த்தோடு கண்ணிய வருமே
(தொல்.புறத்திணை:27)

என்ற நூற்பாவின் மூலம் தொல்காப்பியர் முருகனை கந்தழி எனச் சுட்டுகிறார். மேலும் இவர் கூறும் கொடிநிலை, கந்தழி.வள்ளிஎன்ற மூன்றும் முருகவழிபாட்டுடன் ஒப்பிட்டுபின்வரும்நிலைகளில்காணலாம்.

<u>கொடி நிலை வழிபாடு</u>

கொடிநிலை வழிபாடேதொன்மையான வழிபாடாகும்.வெற்றியும் மிடுக்கும் உடையவர்கள் கொடிகட்டிக். கொள்வார்கள் என்பதற்கேற்ப முருகனும் சேவல் கொடியினை கொண்டவனாக விளங்குகின்றான். முருகன் என்றால் அழகு, இளமை, முருக்கை

http://Creativecommons.org//license/by/4.0/.

உடையவன் என்று பொருள் கொண்டாலும் சங்க இலக்கியத்தில் வீரமிக்கவனாக. சீற்றமுடையவனாக, வலிமை உடையவனாக,போர்க்கடவுளாக காட்டப்படுகிறான். எனவே வீரத்தின் மிக்கது சேவல். ஆகவே வீரமூர்த்தியாக விளங்கும் முருகன் வீரப்பறவையாகியசேவலைக் கொடியாக உடையவன் என்பதனை,

“சேவலங்கொடியோன்காப்ப” (குறு.கட.வாழ்:5)

என்ற குறுந்தொகைப் பாடல் வரிவிளக்குகிறது.

<u>கந்தழி</u>

கந்தழி என்பது கந்து+ அழிஎனப் பிரிந்து பற்றுக்கோட்டினை அழிப்பது எனப்பொருள்படும். தமிழ்க்கடவுளான கந்தனின் வழிபாட்டு மரபில் கந்தழியும் இடம்பெறுவதால் தொல்காப்பியர் முருகனையேகந்தழிஎனக் குறித்துக் காட்டியுள்ளார். ஆனால் உரையாசிரியர் நச்சுனார்க்கினியர் கந்தழி என்பது. “ஒரு பற்றுக்கோடின்றி அதுவாகி தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள்” என்று கூறியுள்ளார். கந்து என்பது நாட்பட்ட மரத்தின் அடிப்பகுதி ஆகும்.மேலும்“நடப்பட்ட ஒரு மரக்கட்டை கந்து என வழிபடப்பெற்றது. ஏனெனில் கட்டையில் தெய்வம் இருப்பதாக மக்கள் நம்பியதால் அது கடவுளாகவே கருதப்பட்டது” என்றுந.சுப்பிரமணியன்அவர்கள் சங்ககால வாழ்வியல் (ப.எண்:422) என்னும் தமது நூலில் கூறியுள்ளார். கந்து வழிபாடு என்பது கந்தனுக்கே ஆதியாக இருந்த ஒன்று. இயற்கையாக வளர்ந்திருக்கும் கடம்ப மரத்தினை முருகனாக எண்ணி வழிபடும் வழக்கமும் சங்க காலத்தில் இருந்துள்ளது என்பதை,

“............. **நீ இவ்வரை மருங்கில்**
கடம்பு அமர் அணி நிலை பகர்ந்தேம்
உடங்கு அமர் ஆயமொடுஏத்தினம்தொழுதே” (பரி19:103-105)

.என்ற பரிபாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

தெய்வம் வாழும் பருத்த அடி மரத்தையுடைய வேப்பமரம் என்பதனை,

“**தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்**” (அகம்-309)

என்றும்,

“கடவுள்மரத்தமுத்திரைக்குடம்பை”
என்றும்(அகம்-270)
“கடவுள்முதுமரத்துஉடன்உறைபழகிய” (நற்-83)

ஆகிய சங்க இலக்கிய வரிகள் கந்து எனப்படும் மரவழிபாடு சங்க காலத்தில் விரவியிருந்ததை அறிய முடிகிறது.

கந்துடைப் பொதியில் வழிபாடு

கந்து வழிபாடே கந்துடைப் பொதியில் வழிபாடாகப் பரிமாணம் பெற்றுள்ளது. ஊர்தோறும் அமைந்த பொது-இல் எனப்படும் அம்பலத்தின் மேடையில் தெய்வம் உறையும் தறியாகியத் தூணொன்று நாட்டப்பட்டிருக்கும். நீராடித் தூய்மையுடையரான மகளிர் பலரும் மன்றத்தை மெழுகித் தூய்மை செய்து அந்தியில் அணையா விளக்கெனும் நந்தாவிளக்கேற்றி மிகுந்த மணம் கொண்ட நறுமலர்களைத் தூவி இறைவனை வழிபட்டனர். போரில் வெல்லும் மன்னர்கள் பகை நாட்டு மன்னர்களின் மனையோராகிய

http://Creativecommons.org//license/by/4.0/.

மகளிரைச் சிறைபிடித்து வந்து இவ்விடத்தில் வைத்தனர். இவர்களே வம்பமகளிர் எனப்பட்டனர். இச்செய்தியை நச்சினார்க்கினியர் தமது உரையில் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

இதனை,

" கொண்டிமகளிர்உண்டுறைமூழ்கி
அந்திமாட்டியநந்தாவிளக்கின்
மலரணிமெழுக்கம்ஏறிப்பலர்தொழ
வம்பலர்சேக்கும்கந்துடைப்பொதியில்" (ப.பாலை-246-249)

என்னும் பட்டினப்பாலை செய்யுள் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

வள்ளிநிலை

வீட்டின்பம் வழங்கும் வள்ளன் தன்மையுடைய கடவுள்நிலையே வள்ளி எனப்படும். வள்ளிநிலை என்பது ஈதல் அறத்தைக் குறிக்கிறது. வள்ளல் தன்மையுடைய முருகன் வள்ளியை மணம் புரிந்து மலைநிலத்தின் கடவுளாக விளங்குகின்றான்.

வெறியாடல் வழிபாடு

முருக வழிபாட்டில் இன்றியமையாத இடம்பெற்றிருப்பதே வெறியாடல் வழிபாடு. சங்க இலக்கியங்களில் துணங்கை மற்றும் குரவைகூத்துகளுக்கு மேலாகச் சிறப்பிக்கப்படும் கூத்து வெறியாட்டு ஆகும். சங்க இலக்கியங்களில் வெறியாடல் பற்றியக் குறிப்புகள் விரவிக் காணப்படுகின்றன. வெறிபாடுவதற்கென்றே புலவர்கள் இருந்துள்ளனர். காமக்கண்ணியார் என்ற புலவர் வெறியாட்டுப் பாடுவதில் வல்லவர். எனவே, இவர் வெறிபாடிய காமக்கண்ணியார் என்றே சிறப்பிக்கப்பட்டார். காதல்நோய் உற்ற தலைவியின் மேனி பசலை உற்றதற்குப் புறத்திணையியலின் வழிபாட்டு முறையாக இருப்பது வெறியாட்டயர்தல் ஆகும். இதனைத்

தொல்காப்பியர்,
வெறியறிசிறப்பின்வெவ்வாய்வேலன்
வெறியாட்டயர்ந்தகாந்தளும் (தொல்:புறம்5)

என்ற தனது நூற்பாவின் மூலம் உணர்த்துகிறார். மேலும், காந்தள் என்பது பெண்களின் மீது கொற்றவை வந்து ஆடும் நிலையைக் குறிக்கின்றது.பாவை ஒன்றில் பொறி இணைத்துவிட்டால் அது எவ்வாறு தானே இயங்கி ஆடுமோ அவ்வாறு வெறியாட்டு ஆடினர் என்பதனை,

"வெறிஅயர்வியன்களம்பொறப்பவல்லோன்
பொறிஅமைபாவையின்தூங்கல்" (அகம் -98:17-19)

என்ற அகநானூற்றுப் பகுதி எடுத்துக்காட்டுகிறது.

வெறியாட்டு நிகழும் காரணம்

தலைவனைப் பிரிந்து துயருற்று உடல்மெலிந்து வாடும் மகளின் துயரினைக் கண்ட அன்னை அவளுக்கு அணங்கால் அந்நோய் வந்தது என எண்ணுவாள். உண்மையினை அறிந்து கூறுவதற்கு வேலனை அழைத்து வெறியாடச் செய்வாள். வேலன்களம் அமைத்துக் கண்ணிசூடி வெறியாடி உண்மை உரைப்பான். இவ்வெறியாடலுக்குக் காந்தன்கூத்து என்ற

http://Creativecommons.org//license/by/4.0/.

வேறு பெயருமுண்டு. முருகனைச் சாந்தி செய்து பூசிப்பதற்கும் வெறியாடுவதற்கும் பயன்படும் இடத்திற்குக் களம் என்று பெயர். வேலன்களம் அமைக்கும் இடத்தைப் பற்றித் திருமுருகாற்றுப்படை,

"வேலன்றைஇயவெறியயர்களனும்
காடும்காவுங்கவின்பெருதுருத்தியும்
யாருங்குளனும்வேறுபலவைப்புஞ்
சதுக்கமுஞ்சந்தியும்புதுப்புங்கடம்பும்
மன்றமும்பொதியிலும்கந்துடைநிலையினுங்" **(முருகு:222-226)**

என்ற பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகிறது.

முடிவுரை

காலத்தால் முற்பட்ட இலக்கண நூலான தொல்காப்பியம் முதல் சங்க இலக்கியங்கள் வரை பண்டையத் தமிழ் மக்களின் தொன்மையான வழிபாட்டு மரபைப் பற்றியும், அம்மரபு எவ்வாறு பரிமாற்றம் அடைந்து முருக வழிபாடாக மாறியது என்பதைப் பற்றிய ஆய்வுநோக்கத்தை இக்கட்டுரை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. மேலும், திணைதெய்வ வழிபாடு தான் காலப்போக்கில் அறுவகை சமயவழிபாடாக மாறியுள்ளதையும் காண்கின்றோம். இதன் மூலம் ஒவ்வொரு வழிபாட்டிற்கும், சடங்குகளுக்கும் அடிப்படையாக இருப்பது நமது தொன்மையான மரபுகளின் விதைகளே என்றால் அதுமிகையாகாது.

துணைநூற் பட்டியல்

1. தொல்காப்பியம்-பொருளதிகாரம்,இளம்பூரணம்-முல்லைநிலையம்,தி.நகர்,சென்னை.
2. சங்கஇலக்கியம்,எட்டுத்தொகை முழுவதும் தெளிவுரை, அறிஞர்.ச.வே.சுப்பிரமணியன்-மணிவாசகர் பதிப்பகம்,சென்னை.
3. சங்கஇலக்கியம், பத்துப்பாட்டு முழுவதும் தெளிவுரை, அறிஞர்.ச.வே.சுப்பிரமணியன்-மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
4. முருகன் அல்லது அழகு, திரு.வி.க மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
5. காலந்தோறும் தமிழர் கலைகள், பேரா.முனைவர்.எ.ப்.பாக்யமேரி, பூவேந்தன் பதிப்பகம்,மயிலாப்பூர்,சென்னை.
6. பட்டினப்பாலை ஆராய்ச்சி,இரா.இராகவைய்யங்கார்

http://Creativecommons.org//license/by/4.0/.

39. மூதின் முல்லையும் பண்டைய மகளிர் செயலும் - ஓர் அறப் பார்வை

அ.ரூபாதேவி,
உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை,
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி
DOI 10.5281/zenodo.15073866.

Abstract :

The women who appeared in the world of forgetfulness were fearless. Their entire nature was filled with forgetfulness and the desire to send men to war. Poets loved to sing about the thoughts and actions that emerged as a result of their forgetfulness. In it, the flower of wisdom blossomed in the field of external things.
Key Words : Muthin mullai - Poets - Ancient Literature - Thoughts

'மூதின் முல்லை' என்பது மூதில் + முல்லை எனப் பிரித்து பொருள் கொள்ள முடியும். மூதில் என்பது, மூது + இல் எனப் பிரித்து பொருள் கொள்ளும் போது "பழைய மறக்குடி" எனப் பொருள்படும். மூதின் முல்லை என்பது "மறக்குடிபாள் பிறந்த ஆமார்க்கேயன்றி அக்குடியிலுள்ள மகளிர்க்கும் மறமுண்டாதலைச் சிறப்பித்துக் கூறும் புறத்துறை" எனச் சென்னை பேரகராதி கூறுகிறது.

மறம்

மறம் என்னும் சொல்லுக்கு, "சினம், பாவம், பிணக்கு, கூற்று, வலி, வீரம், சண்டை" ஆகிய ஏழுவகை பொருள்களைக் கூறுகிறது பிங்கல நிகண்டு.

மறவன்

மறவன் என்பது "மறக்குடியான், வீரன்" என்று இரண்டிற்கும் மேற்பட்ட பொருளில் பொருள் கொள்ள முடியும். சங்க இலக்கியத்தில் ஆர்வமிகுதி பெற்று மறவர் என்ற சொல் கையாளப்படுகிறது. சங்க இலக்கியத்தில் மறவர்களை பாலை நில மறவர், மறக்குடி மறவர், போர் மறவர், எனப் பிரித்துக் கூறுவது உண்டு.

மறக்குடி

மறக்குடி என்பது வீரக்குலம் என்பதைக் குறிக்கும். சங்க இலக்கியத்தின் மறக்குடி என்பது முதுகுடி, தொல்குடி என்ற சொற்களால் குறிக்கப்பட்டுள்ளது. மறக்குடியில் பிறந்த ஆடவர் மறக்குடி மறவர் என்றழைப்பது போல மறக்குடியில் பிறந்த வீரக்குறப் பெண்களின் வீரத்தைக் கூறுவது இத்துறையாகும். இதனை,

> **"அடல்வே லாடவர்க் கன்றியு மவ்வில்**
> **மடவரன் மகளிருக்கு மறமிகுந்தன்று"** (பு.பொ.வெ.21)

என புறப்பொருள் வெண்பா மாலைக் கூறுகிறது.

மூதின் மகளிர்

மறக்குலத்தில் தோன்றிய மகளிர் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களாக இருந்தனர். மறப்பணியும், ஆடவரைப் போருக்கு அளிப்பும் வேட்கையும் அவர் நஞ்கம் முழுதும் நிறைந்திருந்தன. இவரது மறப்பண்பின் விளைவாகத் தோன்றும்

http://Creativecommons.org//license/by/4.0/.

எண்ணங்களையும், செயல்களையும் புலவர்கள் விரும்பிப் பாடினர். அதில் புறப்பொருள் துறையில் மூதின் முல்லையாக மலர்ந்தது.

புறநானூற்றில் மூதின் முல்லை

புறநானூற்றின் மூதின் முலைல்லைப்பாக்களின் எண்ணிக்கையில் வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. உ.வே.சா. தம் பதிப்பின் பின்னுரையால் இத்துறையமைந்த பாடல்களாக 279, 288, 306, 308, 312 ஆகிய ஐந்து பாடல்களையே குறித்துள்ளார். ஆனால் இவர் பெண்களை மறக்குடி பெண் என்றழைப்பார்.மறக்குடிப் பெண்ணை மூதின் மகளிர் எனச் சொல்லுகின்றார்.

மறக்குடியில் பிறந்த ஆடவரேயன்றி பெண்களும் மிக்க வீரம் நிறைந்தவர்களாகத் திகழ்ந்தனர். இக்குடியில் பிறந்த மகளிர் "மூதின் மகளிர்" என்றழைக்கப்பட்டனர்.
மூதில் மகளிர் என்ற சொல் புறநானூற்றில்,

"கெடுக சிந்தை கடிதவ டுணிவே
மூதின் மகளி ராத ற்குமே" (புறம்-279)
என்ற ஒக்கூர் மாசாத்தியாரின் பாடலிலும்,
மூதில் பெண்டிர் என்ற சொல் புறநானூற்றில்,
"மூதில் பெண்டிர் கசிந்தழ நாணிக்
கூற்றுக் கண்ணோ வெருவரு பறந்தலை" (19)

என்ற பாடலிலும் பயின்றுள்ளதைக் காண முடிகிறது.

மூதின் முல்லைப் பாடல்கள்

புறநானூற்றில் மூதின் முல்லைத் துறையில் அமைந்த பாடல்கள் சில உள்ளன.

1. ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள் - 3
2. ஆண்பாற் புலவர்களின் பெயர்கள் - 9
3. பெண்பாற் புலவர்களின் பெயர்கள் -3
4. ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள் - 327, 328, 333

ஆகிய பாடல்கள் ஆசிரியர் பெயர் இன்றி அமைந்த பால்களாகும். இப்பாடல்கள் சீறூர் தலைவனின் இயல்பினை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன. இங்கு ஆண்மகன் பாட்டுடைத் தலைவனாக இருக்கின்றான். மறக்குடிப் பெண்ணின் வீரம் இங்குப் பேசப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்பாற் புலவர்கள் பாடிய பாடல்கள்

ஒன்பது பாடல்கள் ஆண்பாற் புலவர்களால் பாடப்பட்டு இருக்கின்றது.

1. **கழாத் தலையார் - 288**
2. **கோவுர்க் கிழார் - 308**
3. **தங்கால் பொற்கொல்லனார் - 326**
4. **மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் - 329**
5. **மதுரைக் கணக்காயனார் - 330**
6. **உறையுர் முதுக்கூத்தனார் - 331**
7. **விரியுர் நக்கனார் - 332**

http://Creativecommons.org//license/by/4.0/.

8. **மதுரைத் தமிழ்க் கூத்தனார் - 334**
9. **மாங்குடிக்கிழார் - 335**

பெண்பாற்புலவர்கள் பாடல்கள்

பெண்பாற் புலவர்கள் பாடிய மூதின் முல்லைப் பாடல்கள் மூன்றாகும். அவையாவன,

1. **ஒக்கூர் மாசாத்தியார் - 279**
2. **அள்ளூர் நன்முல்லையார் - 306**
3. **பொன் முடியார் - 312**

கருத்து வேறுபாடு

புறநானுஸற்றின் மூதின்முல்லைப்பாக்களின் எண்ணிக்கையில் வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. உ.வே.சா. அவருடைய பதிப்பின் பின்னுரையில் இத்துறையில் அமைந்த பாடல்களாக 279, 288, 306, 308, 312 ஆகிய ஐந்து பாடல்களையே குறித்துள்ளார். ஆனால் பதிப்பிலேயே பாடல்களின் அடிக்குறிப்பு, திணை, துறைப் பகுதிகளில் 326 முதல் 335 வரையுள்ள பாடல்கள் முதின்முல்லையாகக் கணக்கிடப்பட்டுள்ளன. சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை 326 முதல் 335 வரையுள்ள பாடல்கள் மூதின் முல்லையாகவே கணக்கிட்டுள்ளது. சு.சீனிவாசன் 288 -வது பாடலைத் தவிர்த்துப் பிற பாடல்கள் அனைத்திலும் உடன்படுவார். அனைவரும் உடன்படும் 279, 306, 308, 312 ஆகிய பாடல்களின் உள்ளடக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது.

1. 279 - பாடல் தந்தையையும், கணவரையும் முதல்நாள் போரில் மரணத்திற்குக் கொடுத்தவர்கள் இப்போது நிகழும் போருக்கு தனது சிறு மகனை அனுப்பும் மூதின்மகளைக் காட்டுகிறது.
2. 306 - பாடல் பெண்ணொருத்தி நடுகல்லைத் தொழுது தான் விருந்து பெற வேண்டுமென்று அரசனை பகைபெறல் வேண்டுகிறாள்.
3. 308 - பாடல் யானையைக் கொன்று விரப்புண்பட்டு இறந்த கணவரின் போர்த்திறம் பற்றி பெண்ணொருத்தி கூறுகின்றாள்.
4. 312 - பாடல் களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடன் என மகனின் போர்க்கடமையைத் தாய் கூறுகின்றாள்.

இரண்டு பாடல்களும் பெண்களின் வீரத்தன்மையைக் கூறுவதில் ஒன்றுபடுவதைக் காண முடிகின்றது. மூதின்முல்லை இலக்கணத்தில் கண்ட பெண்களின் வீரமே, இலக்கிய மூதின் முல்லையிலும் காணப்படுகிறது. ஒருப் பாடலில் காணப் பெறினும், "விருந்து பெறுக யான்" எனக் கடவுளிடம் வேண்டுதலால் பெண்ணின் விருந்து வேட்கையும் இத்துறைக் கருத்தாக ஏற்கப்படுகிறது. ஆதலால் பெண்களின் உணர்வும், கடமை உணர்வும் விருந்து வேட்கையும் மூதின் முல்லைக் கருத்தாகும்.

இந்நான்கு பாடல்களில் இரண்டு பாடல்கள் தாய் நிலையில் வீரமும், இரண்டு பாடல்கள் மனைவி நிலையில் வீரமும் காட்டுவனவாக அமைந்துள்ளது. மூதின் முல்லை பாடல்கள் தாய், மனைவி என்ற ஒரே திறத்தால் வரையறை செய்யப்படாது. பொதுவாக பெண்கள் என்ற பாடுபொருள் உடையதால் அமைந்துவரும். மேற்கூறிய நான்கு பாடல்களில் மூன்று பாடல்கள் பெண்பாற்புலவர்களின் பாடல்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

http://Creativecommons.org//license/by/4.0/.

வேறுபாட்டிற்கான காரணம்

327, 328, 329, 330, 332, 335 ஆகிய ஆறு பாடல்களில் பெண்களைப்பற்றிய குறிப்பு இல்லை. காரணம் பாடியோர் ஆண்பாற்புலவர்கள்(329, 330, 332, 335). ஆண்பாற்புலவர்கள் பெண் நிலைமையில் நின்று பாடலை பாடும்போதுங் கூட ஆண் தலைமைக் கொண்ட பாடலையே பாடியுள்ளனர். இதனால் சிலர் இப்பாடல்களை மூதின் முல்லைத் துறையில் சேர்க்க மாட்டார்கள் எனச் சிவ குருநாதன் வாகைத் திணை என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

“இற்பொலி மகடூஉப் போலச் சிற்சில
வரிசையின் அளிக்கவும் வல்லன்” **(புறம்-331)**

என உறையூர் முது கூத்தனாரின் பாடலில் பெண்பற்றியக் குறிப்பு காணப்பட்டாலும் அது உவமையாக வந்துள்ளமையைானும் மூதின் முல்லையாகாது எனக் கூறுவர்.

326, 333, 334 ஆகிய மூன்று பாடல்களிலும் பெண்கள் விருந்தோம்பும் பண்பு பேசப்படுகிறது. மூதின்துல்லைத் துறையில் விருந்தோம்புதல் பண்பும் அடங்குவதால் மேற்கூறப்பட்ட மூன்று பால்களை மூதின்முல்லை என்று ஏற்றுக்கொண்டாலும் அந்த மூன்று பாடல்களிலும்,

“பாசில் மன்னுங் குருசில கொண்டதுவே” **(புறம்- 333)**
“அண்ணல் யானை யணிந்த
பொன்செ யோயை பொரும்பரி சிலனே” **(புறம்-326)**
“பரிசில் பரிசிலர்க் கீய
உரவுவேற் காளையு ங்கைதூ வானே” **(புறம்-334)**

எனத் தலைவனின் கொடைத்தன்மை பேசப்படுவதால் இப்பாடல்களை மூதின்முல்லை எனக் கூறமுடியாது எனவும் 288-வது பாடல் தும்பைத்திணைக்குரிய பாடல் என்பதால் வாகைத்திணைக்குரிய மூதின் முல்லை துறையோடு ஒத்துவரவில்லை எனவும் சிவகுருநாதன் வாகைத்திணை என்ற நூலில் கூறியுள்ளார்.

இவ்வாறு மூதின்முல்லைப் பாடல்கள் பல கருத்து வேறுபாடுகளைக் கொண்டதாக உள்ளன. இருப்பினும் பெண்பாற்புலவர்களின் பாடல்கள் பெண்ணைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு தாய்மை, நடுகல் வழிபாடு,
விருந்தோம்பல் போன்ற இல்லறக் கடமைக்கு முக்கியத்துவம் அளிப்பதால் இயல்பாகவே இத்துறையில் அவர்களுடைய பாடல்கள் இடம்பெற்றன.

துணைநூற்பட்டியல்

1. புறநானூறு - ஔவை சு.துரைச்சாமிப் பிள்ளை (உ.ஆ),திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,சென்னை.
2. புறப்பொருள்வெண்பா மாலை, ஐயனாரிதனார், பொ.வே.சோமசுந்தரனார், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,சென்னை.
3. வாகைத் திணை, சிவகுருநாதன்,கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை.
4. புறநானூறு மூலமும் பழைய உரையும்,உ.வே.சாமிநாதையர் (ப.ஆ) டாக்டர்.உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.

40. கலித்தொகையும் தமிழர் பண்பாடும்

வி.மோனிகா யாழினி,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்உயராய்வுமையம்
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,
பசுமலை, மதுரை - 625004.

DOI 10.5281/zenodo.15073895.

Abstract :

The literatures that emerged in their respective languages reflect the culture of ancient societies. Those literatures were formed according to the time and place. The poets who created them have expressed the inner feelings, civilization and culture of the society in which they lived through literature. Each piece of literature is designed to reflect the state of the country at the time it emerged and the lifestyles and customs of the people. The purpose of this article is to examine the excellence of the Kalithogai, one of the eight Sangam literatures, which is praised as such a special classical literature, its uniqueness, the number of songs, the poets who sang it, the composition method, the method of composition, etc. and the culture of the Tamil people through these.

Key Words : Sangam literature - Kalithogai - Ancient society

பண்டைய சமுதாயத்தின் பண்பாட்டின் அந்தந்த மொழிகளில் தோன்றிய இலக்கியங்கள் உணர்த்துகின்றன. அந்த இலக்கியங்கள் கால, இடச்சூழலுக்கு ஏற்ப உருவாயின. இதனைப் படைத்த புலவர்கள் தாம் வாழ்ந்த சமூகத்தின் உள்ளத்து உணர்வுகளையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும் இலக்கியத்தின் வாயிலாக வெளிப்படுத்தி உள்ளனர். ஒவ்வோர் இலக்கியமும் அது தோன்றிய காலத்தில் நாட்டின் நிலையையும் மக்களின் வாழ்வியல் முறைகளையும் பழக்கவழக்கங்களையும் எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த செவ்வியல் இலக்கியம் என்று போற்றப்படும் சங்கஇலக்கியமான எட்டுத்தொகையில் ஒன்றான கலித்தொகையின் சிறப்பையும், அதன் தனித்தன்மை, பாடல்களின் எண்ணிக்கை, பாடிய புலவர்கள், தொகுப்புமுறை, திணைவைப்புமுறை முதலானவற்றையும் இவற்றின் மூலம் தமிழ்மக்களின் பண்பாட்டையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

எட்டுத்தொகையில்கலித்தொகைபெறும்இடம்

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்கள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. இவற்றில் எட்டுத்தொகை நூல்கள் தன்மையாலும், அளவாலும், பொருளாலும், பாவகையாலும் தனித்துவம் பெறுகின்றன. இத்தகைய எட்டுதொகை நூல்களில் ஒன்றான கலித்தொகை பிற நூல்களைக் காட்டிலும் தொகுப்புமுறை, பாடுபொருள், பாவகை, சொல்லாட்சி, பாண்டிய மன்னர்களின் சிறப்பு, மக்களின் பண்பாடு, வாழ்க்கைமுறை, நாடகப்பாங்கு, உரையாடல் போக்குப் போன்றவற்றால் வேறுபட்டு அமைகிறது.

கலித்தொகைப் பாடல்கள் பா, திணை, அடி, எண்ணிக்கை போன்றவற்றின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன. எட்டுத்தொகை நூல்களுள் இந்நூல் மட்டுமே பா வகையில் வேறுபட்டுக் கலிப்பாவால் எழுதப்பட்டுள்ளது. இப்பாவகையானது நீண்ட

http://Creativecommons.org//license/by/4.0/.

உரையாடல் முறைக்கு ஏற்புடையதாக அமைந்துள்ளது. அதனால் இந்நுலில் நாடகப்பாங்கில் பெரும்பாலான பாடல்கள் காணப்படுகின்றன. இது இந்நூலுக்குரிய தனித்தன்மையாகும்.

கலித்தொகையின்சிறப்பு

கலித்தொகையின் சிறப்பைக் கொண்டு முதற்காலப்புலவர் இதனைக் "கற்றறிந்தோர் ஏத்தும்கலி" என்று புகழ்ந்து கூறினர். பிற்காலப்புலவர் ஒருவர்,

"திருத்தகு மாமுனி சிந்தாமணி கம்பன்
விருத்தக் கவிவளமும் வேண்டோம் - திருக்குறளோ
கொங்குசேள் மாக்கதையோ கொள்ளோம், நனி ஆர்வேம்
பொங்குகலி இன்பப்பொருள்"

என்ற பாடல் கலித்தொகையின் இன்பச்சிறப்பைப் பறைசாற்றுகின்றது. ஏனைத் தொகைநூல்கள் அடைந்த சில சிதைவுகளைக் கலித்தொகை மூலம், உரை இரண்டிலும் ஒரு சிறிதும் அடையாது பல சுவடிகள் வடிவாய்க் காணும்படியிருந்தது என்றும், "இந்நிலைமையால் இது கற்றறிந்தோர் போற்றும் கலியாக உள்ளது" என்று கருதப்படுகின்றது என்று இ.வை. அனந்தராமையர் குறிப்பிடுகிறார்.

பண்பாடு - அறிமுகம்

உலகில் மக்கள் இனம் தோற்றம் பெற்று இன்றுவரை வளர்ந்து வந்துள்ள வளர்ச்சிநிலைக்கு அடிப்படையாக அமைவது பண்பாடு ஆகும். மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது பண்பாடு ஆகும். இப்பண்பாடு நிலத்தின் தன்மைக்கும், காலத்திற்கும் ஏற்றவாறு வேறுபடுகின்றது. இது உலகம் முழுவதும் உருவாகி வருகின்றது. ஒரு நாட்டின் பெருமைக்கும் சிறப்புக்கும் காரணம் அங்குவாழும் மக்களின் பண்பாடு ஆகும்.

தமிழர்பண்பாடு

தமிழரின் பண்பாடு என்பது மிகவும் பழமைவாய்ந்தது. இதனைப் பழந்தமிழ் இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. மனித இனத்தின் உயர்ந்த பண்புகளால் அமைவது பண்பாடு ஆகும். மனிதன் நற்பண்புகளோடு இருப்பதற்குப் பண்பாடே காரணமாகின்றது. மக்களின் பழைய வரலாற்றில் ஒவ்வொரு காலத்திலும் அவர்கள் இயற்றிக் கொண்ட கருவிகள், அவர்கள் வாழ்ந்த சமுதாயத்தின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியவற்றை வெளிப்படுத்துவது பண்பாடு ஆகும்.

"தமிழர் பண்பாடு என்றால் தமிழ் மக்களுக்கே உரிய திருத்திய மனப்பான்மை என்று பொருள்பட வேண்டும். தமிழ் மொழியிலேயும் தமிழ் இலக்கியங்களிலேயும்

இத்தனிப்பட்ட திருந்திய மனப்பான்மை தெளிவாகவும் சிறப்பாகவும் விளங்குவதாகும்".

என்று எஸ். வையாபுரிபிள்ளை குறிப்பிடுகிறார்.

ஈகைப்பண்பு

தமிழ் மக்களின் தலையாய பண்புகளுள் முதன்மையானது ஈகைப்பண்பு. தமிழர்களின் ஈகைக்குணத்தைப் பற்றிக் கூறும் கபிலர்,

http://Creativecommons.org//license/by/4.0/.

"இடும்பையால்
இன்மைஉரைத்தார்க்குஅதுநிறைக்கல்ஆற்றாக்கால்
தன்மைதுறப்பான்மலை" (கலி.43. 25- 27)

என்று கூறுகின்றார். அதாவது தலைவனிடம் வறுமையால் வாடுகின்ற வறியவர்கள் வந்தால் அவர்களின் வறுமையைப் போக்கி, அவரல்களை நிறைவடையச் செய்வான். அவ்வாறு செய்யவில்லை எனில் தன் உடலையே துறப்பான் என்று கூறுவதன் மூலம் தமிழர்களின் ஈகைப் பண்பாட்டின் தன்மையை அறியமுடிகிறது.

விருந்தோம்பல் மரபு

தமிழர்களின் மிகச் சிறந்த பண்புகளுள் போற்றுதற்குரியது விருந்தோம்பல் பண்பாகும். இல்லறத்தின் சிறப்பாகவும் விருந்தோம்பல் கூறப்படுகிறது. மேலும்,

"மன்னவன் புறந்தர வருவிருந்துஓம்பி" (கலி.8.21)

என்னும் பாடல்வழி மன்னவனின் நல்லாட்சியில் தான் விருந்தினரைப் பேண முடியும் என்பதை அறிய முடிகிறது. தமிழர்களின் கடனாகக் கருதப்பட்ட விருந்தோம்பலின் சிறப்பினைக் கூறுமிடத்து, இளவேனில் துதாக வந்ததால் அதனையும் அழைத்து அதற்கு விருந்தானவற்றைச் செய்வோம் வா! எனத் தோழிக் கூறுவதாக அமைந்த பாடல் விளங்குகின்றது.

"தன்அருவிநறுமுல்லைப்
போதுஅரக்கொள்ளும்கமழ்குரற்குஎன்னும்
தூதுவந்தன்றே, தோழி!
துயர்அறுகிழவியோடு, இயர்ந்தீகம்விருந்தே"(கலி.32 .16 -19)

ஊடல் தீர்க்கும் வாயில்களுள் விருந்தினர் வருகையும் ஒன்றாகும். பரத்தையிடம் சென்று மீண்ட தலைவன், தலைவியின் ஊடலைத் தீர்க்க விருந்துடன் வந்தான் என்பதை,

"விருந்துஎதிர்கோடலின்மறப்பல்"(கலி.75.17)

என வரும் பாடல்வரிகளின் மூலம் அறியமுடிகிறது. விருந்தோம்பலின் சிறப்பினைப் பல்வேறு இலக்கியங்கள் காட்டகின்றன.

திருமணமுறை

பண்டைத் தமிழ்மக்களிடையே அவர்தம் வாழ்க்கையில் நிகழ்ந்தனவாகிய பழக்கவழக்கங்கள், ஒழுக்கங்கள் பற்றி சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது. அவ்வகையில் மக்களின் வாழ்க்கை அகம், புறம் என்று இருவகையாகப் பிரிக்கப்பட்டுப் பாடும்முறையைக் கலித்தொகையில் காணமுடிகிறது.

நல்ல நாள் பார்த்தல்

நல்ல நிகழ்ச்சி நடத்தவதற்கு நல்ல நாள், நல்ல நேரம் பார்க்கும் பழக்கம் தமிழகத்தில் பண்டைக்காலம் முதல் இருந்து வருகின்றது. பெண் கேட்டுத் தலைவன் வீட்டார் வரும்போது முகூர்த்தநாளைக் குறிப்பதில் வல்லவனான காலக் கணியனையும், சான்றோரையும், உறவினரையும் அழைத்து வந்தனர். இதனை,

"நெறிஅறிசெறிகுறிபுரிதிரிபுஅறியாஅறிவனைமுந்துறீஇ
தகைமிகுதொகைவகைஅறியும்சான்றவர்இனமாக

http://Creativecommons.org//license/by/4.0/.

வேய்புரைமென்தோட்பசலையும், அம்பலும்
மாயப்புணர்ச்சியும், எல்லாம்உடன்நீங்க
சேஉயர்வெற்பனும்வந்தனன்" (கலி.39.46-50)

என்ற பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. மேலும்,புதுமணல் பரப்பி வீட்டை அழகுப்படுத்தும் முறையினை,

"தருமணல்தாழப்பெய்து, இல்பூவல்ஊட்டி,
எருமைப்பெடையோடுஎமர்ஈங்குஅயரும்
பெருமணம்எல்லாம்தனித்தேஒழிய" (கலி.114.12-14)

என்ற பாடல்வழியும், மேலும் தீவலம் வருவதை,

"காதல்கொள்வதுவைநாள்,கலிங்கத்துள்ஒடுங்கிய
மாதர்கொள்மான்நோக்கின்மடந்தைதன்துணையாக
ஓதுடைஅந்தணன்எரிவலம்செய்வான்போல்" (கலி.69. 3-5)

போன்ற பாடல் வரிகளின் வழி அந்தணர்கள் " அக்கினிச் சாட்சியாக மணம்புரிந்து கொண்டனர் என்பதையும், அந்தணப் பெண்கள், திருமணக் காலத்தில், ஆடையினால் முகத்தை மூடியிருந்தனர் என்பதையும் அறியமுடிகிறது. இது அந்தணர் திருமண முறையாகும்.

ஏறுதழுவுதல்

ஏறுதழுவுதல் சங்ககால மக்களின் வீரவிளையாட்டுகளுள் ஒன்று. சங்கஇலக்கியப் பாடல்கள் காதலையும், வீரத்தையும் இருகண்களாகப் போற்றிப் பாப்பட்டுள்ளன. சங்க இலக்கிய அகப்பாடலான கலித்தொகையில் "முல்லைக்கலி" பாடலில் மட்டுமே ஏறுதழுவுதல் காணப்படுகின்றது. குடிமக்கள் காப்பியமான "சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவைப்பகுதியில் ஏறுதழுவுதல் காணப்படுகின்றது. ஏறுதழுவுதல் இன்று "ஜல்லிக்கட்டு" எனும் பெயரில் அழைக்கப்படுகின்றது. இவ்வேறுதழுவுதல் தமிழ் மக்களின் வீரத்தை வெளிப்படுத்தும் வீரவிளையாட்டாகத் திகழ்கிறது. இதனை உணர்த்தும் வகையில்,

"கொல்ஏறுசாடஇருற்தார்க்கு, எம்பல்இருங்
கூந்தல்அணைகொடுப்பேம், யாம்" (கலி.101.41-42)

என்ற வரிகளும்

"சாற்றுள்பெடைஅன்னார்கண்பூத்து, நோக்கம்வாய்எல்லாம்
மிடைபெறின், நேராத்தகைத்து" (கலி.102. 15- 16)

என்ற அடிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆயர் இளைஞர்களின் வீரத்தைப் பறைசாற்றும் விதமாகத் தழுவுதல் காணப்படுகின்றது. ஏற்றை அடக்கியவனுக்கு மணம்முடித்துக் கொடுக்கும் பழக்கம் பண்டைக்காலத் திருமணமுறையாகும். ஏறு தழுவும் வழக்கத்தை இன்றும் மக்களிடம் காணமுடிகிறது.

திருவிழாக்கள்

திருவிழாக் கொண்டாடுதல் அக்காலத் தமிழ் மக்களிடம் மரபாக இருந்துள்ளமையை அறியமுடிகிறது. தலைவன் பொருள்ஈட்டச் செல்லுகின்றான். அப்பொழுது அவனைத்

http://Creativecommons.org//license/by/4.0/.

தடுக்க நினைத்த தோழி தலைவனிடம் திருவிழா நடத்த அடுத்தநாள் பொழிவற்று இருக்கும் இடத்தினைப் போலத் தலைவி தனிமை கொண்டு இருப்பதாகக் கூறுகிறாள்.

“கலலெனக்கவின்பெற்றவிழவுஆற்றுப்படுத்தபின்,
புல்லென்றகளம்போலப்புலம்புகொண்டு, அமைவாளோ?” (கலி.5.10-11)

என்ற வரியின் மூலமும் மேலும்,

“ சாலத்துஒல்கியகண்ணர்உயர்சீத்தி
ஆல்அமர்செல்வன்அணிசால்மகன்விழாக்
கால்கோள்என்றுஊக்கி, கதுமெனநோக்கி” (கலி.83.13- 15)

ஆலமர் செல்வனின் மகனாகிய குமரப்பெருமானின் விழா “கால்கோள்” அமைத்துத் தொடங்கியதை அறிய முடிகிறத. அக்கால மக்கள் திருவிழா தெடங்குவதற்கு முன்பு கால்கோள் நட்டுவிழாத் தொடங்குவதை மரபாகக் கொண்டுள்ளதை இதன்மூலம் அறிய முடிகிறது.

தைநீராடல்

தைந்நீராடல் என்பது பண்டைத்தமிழர் தம் பண்பாட்டுத் தொடர்புடையது. தைந்நீராடல் சங்ககாலப் பெண்களின் வழக்கமாக இருந்திருக்கின்றது. தலைவன், நீ தைத்திங்களில் நீராடித் தவத்தில் எல்லாப் பயனும் பெற்றாய் இருப்பினும் எனக்கு ஓர் உதவியும் செய்யவில்லை என்று தலைவியிடம் கூறுகிறாள். இதனை,

“வைஎயிற்றுவர்நாப்பண், வகைஅணிப்பொலிந்து, நீ
தையில்நீர்ஆடியதவம்தலைப்படுவோயோ?” (கலி.59. 12-13)

என்னும் அடிகளின் வழி தைந்நீராடி நோம்பிருக்கும் பழக்கம் பண்டைய காலத்திலேயே தமிழர்களிடம் இருந்துள்ளதைக் காணமுடிகிறது.

முடிவுரை

தமிழர்களின் ஈகைப்பண்பாட்டினைப் பல இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. தமிழரின் வாழ்வோடு இணைந்த அறமாக இது விளங்கியுள்ளது. திருமணம் போன்ற நல்லநிகழ்ச்சிகளை நடத்தும் போது நல்லநாள் பார்த்தல் மரபாகக் கருதப்படுகிறது. இவைப் போன்ற பழக்கவழக்கங்கள் சங்ககால மக்களின் வாழ்வில் கடைபிடிக்கப்பட்டதைக் கலித்தொகையின் வழி அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. விசுவநாதன்.அ., (2004). கலித்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
2. இராசமாணிக்கனார்.மா.,1983). தமிழர் நாகரிகமும் பண்பாடும், பாரி நிலையம், சென்னை.
3. முத்துலக்குமி.வே.,(2000).பண்பாட்டுச் சிந்தனைகள், அனிதா பதிப்பகம், திருச்சி.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – IV VOLUME - 1
மார்ச்சு-2025 E-ISSN : 2584 - 1238

41. கவிஞர் நந்தன் கனகராஜின் "மலைச்சி" புலப்படுத்தும் மரபு நீட்சி

முனைவர் ப. கணேஷ்வரி
கௌரவவிரிவுரையாளர், தமிழ்த்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவில்லிபுத்தூர்,
pganeswari89@gmail.com - 9500803567
DOI 10.5281/zenodo.15073934.

Abstract :

Nandankanagaraj is a notable poet among modern Tamil poets. He hails from Rajapalayam, Virudhunagar district. He is the Rajapalayam branch president and state in-charge of the Tamil Nadu Progressive Writers and Artists Association. He started his writing career after 2010. It is noteworthy that in 2020, his book Akalathil Karayum Kakkai won the Pudukkottai District Book Festival Award. The poetry collection "Mezhinagarumthadam" published in 2022 won the Creative Group Award. He continues to write in tabloids and popular magazines. He completed a diploma in Weaving Technology from Taramani Government College, Chennai. He is currently working as a consultant in a life insurance company. He writes not only poetry but also short stories. Poet Nandankanagaraj is also one of the prominent writers who can speak about the people of the land. His poem "Malaichi" was published in 2024. This article discusses how 'Malaichi' stands tall as a restorer of the cultural relics and traditional life of the people of the land.

Key Words : Moderan Literature - poem - modern poet - Nandankanagaraj

முன்னுரை:

நவீனத் தமிழ்க் கவிஞர்களில் குறிப்பிடத்தகுந்த கவிஞராக நந்தன்கனகராஜ் இடம்பெற்றிருக்கிறார். விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தைச் சார்ந்தவர். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் இராஜபாளையம் கிளைத்தலைவராகவும், மாநிலப் பொறுப்பு வகிப்பராகவும் திகழ்கிறார். 2010-க்குப் பிறகு தன்னுடைய எழுத்துப் பணியைத் தொடங்கியவர். 2020- ஆம் ஆண்டில் இவர் எழுதிய அக்காலத்தில் கரையும் காக்கை புதுக்கோட்டை மாவட்டப் புத்தகத் திருவிழா விருதைப் பெற்றுது என்பது குறிப்பிடத்தகுந்தது. 2022-இல் வெளியான "மேழிநகரும்தடம்" என்னும் கவிதைத்தொகுப்பு படைப்புக்குழும விருதைப் பெற்றுள்ளது. தொடர்ந்து சிறுபத்திரிகைகளிலும் வெகுஜன இதழ்களிலும் எழுதி வருகிறார். சென்னை தரமணி அரசுக்கல்லூரியில் நெசவுத்தொழில் நுட்பபட்டயப் படிப்பை முடித்தவர். தற்போது ஆயுள்காப்பீட்டு நிறுவனத்தில் ஆலோசகராகப் பணியாற்றி வருகிறார். கவிதை மட்டுமல்லாது சிறுகதையும் எழுதி வருகிறார். மண் சார்ந்த மனிதர்களைப் பேசக் கூடிய கரிசல் எழுத்தாளர்களுள் கவிஞர் நந்தன்கனகராஜும் குறிப்பிடத்தகுந்தவர். "மலைச்சி" என்னும் கவிதை 2024-இல் வெளியானது. மண்சார்ந்த மக்களின் பண்பாட்டு எச்சங்களையும், மரபார்ந்த வாழ்க்கையினையும் மீட்டெடுப்பவளாய் 'மலைச்சி' நிமிர்ந்து நிற்கிறார் என்பதை இக்கட்டுரை பேசுபொருளாய்க் கொண்டுள்ளது.

நிலம் சார்ந்த வாழ்வியல்:

சங்கக் கவிதைகளைப் போலவே மலைச்சியின் பெரும்பாலான கவிதைகள் நிலத்தை ஊடுருவி மனிதகுல வரலாற்றைப் பேசுகின்றனவாய் அமைந்திருக்கின்றன. இந்த நிலம் எல்லாவற்றையும் ஆக்கித் தருவதைப் போலவே எல்லாவற்றையும் தனக்குள் புதைந்து ஜீரணித்தும் கொள்கிறது. கதை என்னும் தலைப்பிலான கவிதை,

http://Creativecommons.org//license/by/4.0/.

"உலகம்
மண்ணாகத்தரித்துக்கிடந்த
கனவின்கதையை
முதுகிழவிசொல்லிக்கொண்டிருந்தாள்
அவளிடம்
பாகப்பிரிவினையில்
திருப்திகிட்டாதஒருத்தி
மண்ணள்ளித்தூற்றிப்போனகதையொன்றைச்
சொன்னேன்
மண்
சதாரணம்" **(மலைச்சிப.26)**

நிலவுடைமைச் சமுதாயத்தைச் சாடுவதாய்த் தெரிகிறது. இந்த உலகத்தை நிலமுடையவர்கள், நிலமற்றவர்கள் என இரு வழிப்பட்டதைக் கவிஞர் உணர்த்துகிறார். இந்த உலகம் இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்குமான வாழ்வியல் போராட்டத்தில்; நீள்கிறது. அதைக் கவிஞர் "மண் என்பது சதாரணம்" என்று குறிப்பிடுவதிலிருந்து உணர முடிகிறது. தாய் வழிச் சமூகத்தில் பெண் தான் முதன்மை. அனைத்தையும் ஆக்கும் மாபெரும் சக்தியாகிறாள். நிலம் எப்படிக் காலங்காலமாகப் பெண்ணாகப் பார்க்கப்பட்டு வந்ததோ அதையே கவிஞரும் கையிலெடுக்கிறார். நிலமும் பெண்ணும் ஒன்றாகக் பார்க்கப்பட்ட கட்டமைப்பிற்குள் கவிதைக்குள் வயலினைக் காட்சிபடுத்தியிருப்பதைப்,

"பூவிழுந்தகண்களிலிருந்து
பசுஞ்சித்திரங்கள்விரிகின்றன………
இப்போதுஅவள்பேர்சொல்லிமருந்து
தோன்றும்போதெல்லாம்
நடுங்கும்குரலில்பாடஆரம்பிப்பாள்
எங்கிருந்தோ
இசைந்தும்இணைந்தும்ஒருகுரல்வரும்
அவள்வயலி
பச்சைவயலி" (மலைச்சி -31)

என்னும் கவிதை விவரிக்கிறது. மண்சார்ந்த மருத்துவத்தை, வயல் வெளியை, உழவின் மேன்மையைப் பச்சை வயலின் வழி உணர்த்தி விடுகிறார். மேலும், "கொழிஞ்சிகள் வழிவிட்ட நிலம்" ."இந்தப்புத்தகம்". "கரைஅகன்றநீர்". "உறவு" "ஆழாக்குமழை" ஆகிய தலைப்பினைக் கவிதைகளில் நிலம், நீர், பறவை, பொழுது, மழை, மலை, மரம், வெயில், கிணறு, பாறை எனக் கிராமியம் கலந்த மண்வாசனையை எழுப்பி விடுகிறார் கவிஞர்.

"யார் அந்த மலைச்சி"

கவிதைத்தொகுதியில் பல்வேறு இடங்களில் பெண் குறியீடாக்கப்பட்டிருக்கிறாள். வளர்ந்துவிட்ட தொழில்நுட்ப யுகத்தில் நாம் மறந்து விட்ட மண்சார்ந்த பண்பாட்டு விழுமியம் தான் மலைச்சி.

http://Creativecommons.org//license/by/4.0/.

"தன்முதுகு போன்ற மலையை
நிமிர்த்த மாட்டாமல்
கைகள் தூக்கி வணங்குவாள்
ஊரில்
எல்லோரும் கூனி என்பார்கள்
நான் மலைச்சி என்பாள்
சொன்னவர்கள்
போய்க் கொண்டிருக்கிறார்கள்
அவள் நிற்கிறாள்"(மலைச்சி.ப. 27)

இந்தக் கவிதைப் புத்தகத்தின் தலைப்பிலான கவிதை. மலையில் வாழும் ஒரு பெண், முதுபெண், கூனல் விழுந்த பெண், பாரதி கண்ட புதுமைப் பெண் இப்படிப் பல்வேறு தளத்தில் பெண்களைச் சிந்திக்கத் தூண்டுகிறது இந்தக் கவிதை.அதற்கான சொல்லாடல்களைக் கவிஞர் திறம்படக் கையாண்டிருக்கிறார்.

இயற்கையுடன் இயைந்திருக்கும் பெண் உடலின் மர்மத்தினை,

"அவிழ்ந்தஆடையைஇறுக்கியபடி
நகரத்தெருக்களில்
சொல்லிக்கொண்டுஓடுகிறாய்
ஆதிவாசியொருத்திகரைகடப்பதாக"

என்கிற சுகிர்தராணியின் 'கைப்பற்றி என் கனவு கேள்;' என்னும் கவிதைத் தொகுதியிலுள்ள கவிதை உணர்த்துகிறது. இருவேறுபட்ட பார்வைத் தளத்தில் பெண் தன்னைக் கட்டுக்குளிருந்து வெளிப்படுத்தும் அபாரமான சொல்லாடலைக் கவிஞர் கச்சிதமாகத் தேர்ந்திருக்கிறார்.

கவிஞர் நந்தன்கனகராஜின் முழுபடைப்புகளிலும் கிழவிகள் பின்தொடர்ந்தே வருகிறார்கள். இவர்கள் வெறும் கிழவிகள் அல்லர். பால்ய காலத்தில் கவிஞரின் வாழ்வியலை மீட்டுருவாக்கம் செய்ய வந்த தேவதைகள். இதில் திண்ணைக் கிழவிகள் தரும் பண்பாட்டுக் கூறுகள் ஏராளம். சமீபத்தில் எஸ்.மானகா எழுதி தினமலர் வாரமலரில் வெளியான "திண்னைக் கிழவி சிறுகதையை அப்படியே கவிதை வரிகளில் பார்ப்பதைப் போலே இருக்கிறது.

திண்ணைக் கிழவிகளிடம் ஏராளம் ஏராளம் சொற்சூட்சமங்கள் புதைந்து கிடக்கும். திண்ணைகள் இழந்த வீடுகளில் நகரங்களில் கிழவிகளைத் தும்மல்கள் வழி மீட்டுத் தருகிறார்.

"உதவித்தொகைக்கு
ரேகைவைத்து
தலைஇழுவும்மையில்
அழிந்தரேகைகளை
மாதமொருமுறைமீட்டிப்பார்ப்பாள்
தும்மல்சத்தத்திற்கு

http://Creativecommons.org//license/by/4.0/.

நூறுஇருநூறுஎன
சத்தம்செய்யும்அவளிடம்
நாள்; என்பது
புலர்வுக்குகவித்துவிழுவதற்குமான
இடைஓட்டமாகஇருப்பதில்லை”(மலைச்சிப.22)

இன்று தும்மல்கள் விழும் போது கூட நூறு இருநூறு சொல்ல ஆளரவமற்றுப் போன நிலையாமைத் தத்துவத்தையும் நறுக்கித் தெரிக்கிறார்.

கவித்துவச் சொல்லாடல்கள்:

நீர் தான் …… மீன்….. தான்….. என்றாலும் அதைப் புதுமையுடன் படைத்துக் காட்டும் கவிஞரின் சொல்லாடல்கள் புதிதாகவே இருக்கிறது.

“தொலைதூரத்துப்பயணத்தில்
பக்கத்துஇருக்கை
காலியாகவேவருகிறது
ஒவ்வொருஇறங்குகிறார்கள்
நான்இறங்கவேண்டும்
காலிஇருக்கைஉட்காந்திருக்கிறது”(மலைச்சி - 35)

என்ற கவிதையில் ஏதுமற்ற வெளியையும் உயிர்ப்பித்திருப்பதைக் காட்டுகிறது.

“தொலைவில்இல்லாமல்
பாதைஇருக்கிறது
அருகில்இல்லாமல்
இருக்கிறேன்”(மலைச்சி -34)

என்கிற கவிதை குழப்பம் நிறைந்த வாழ்வியல் சூழலை முரணான சொற்களால் விவரிக்கிறது. இக்கவிதைத் தொகுதியில் 19 இடங்களில் ‘பாதை’ என்கிற சொல் கையாளப்படுகிறது. ஒவ்வொரு பாதையும் தனித்துவமானவை.

வாழ்க்கையை இலயித்துக் கிடக்கும் கவிதையாக “கற்கண்டே” கவிதை அமைந்து விடுகிறது. வாழ்வை வாழ்ந்து கிடப்பதற்கும், துயரினைக் கடந்து நிற்பதற்கும் இடையிலான பண்பாட்டுக் கிளர்ச்சி மிகுந்த கவிதைகள் தான் மலைச்சி.

“பகலை
இரவை
பாசிமாலையின்
ஒவ்வொருஉருண்டைகளிலும்வைத்திருந்து
நிதானமாகநகர்த்திக்கொள்வேன்
சின்னஞ்சிறியஊரின்மீது
மிகப்பெரியவரைபடம்
எனதுஅந்தி”(மலைச்சி - 79)

http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற கவிதை அனைவருக்குமான வாழ்விடத்தினையும் வரைபடமாக்கி விடுகிறது. கவிஞரின் தேர்ந்த சொல்லாடல்கள் வாசகர்களுக்குத் தருகிற அனுபவம் ஏராளம். பலவிதமான காட்சிப் படிமங்களை ஏற்படுத்தி மரபினூடே நீட்சியமையச் செய்து விடுகிறது.

முடிவுரை

வேறு எந்தவித மேற்கோள்களையும் தேர்ந்து கொள்ளாது "மலைச்சியை" மட்டும் கட்டுரைக்கான முதன்மைத் தராவாகக் கொள்ளப் பெற்றுஎழுதப்பட்டுள்ளது. 55 சின்னஞ்சிறு கவிதைகளில் கவிஞர் தன் மண்சார்ந்த, மக்களை, கருப்பொருட்கள் என்று சொல்லப்படுகிற நிலம் சார்ந்த அனைத்தையும் சங்கக் கவிதைகள் போலே அடக்கி விவரிக்கிறார். பழமையை மீட்டெடுப்போம் என்ற உயரிய நோக்கத்தில் மலைச்சி மலையென நிமிர்ந்து நிற்கிறது. கவித்துவமான சொல்லாடல்களில் கவிஞர் சட்டென வாசகர் மனதில் இடம்பிடித்து விடுகிறார்.தமிழ் இலக்கிய உலகில் நல்ல பல கவி, ஆளுமைகளுக்கிடையில் சமீபத்திய தனது எழுத்துக்களால் இலக்கிய உலகிலும் இணைய உலகிலும் நீங்கா இடம்பிடித்து வரும் கவிஞர் நந்தன்கனகராஜின் கவிதைகள் சிட்டுக்குருவிகளாய் மெல்லிய அரசியலோடு சிறகடிக்கிறது.

துணைமை செய்த நூல் & பக்கங்கள் :

1. நந்தன்கனகராஜ், மலைச்சி,தமிழ்வெளி பதிப்பகம்,
2. https://www.commonfolks.in/books/d/malaichchi
3. https://bookday.in/poems-by-nandan-kanakaraj/

http://Creativecommons.org//license/by/4.0/.